

## "குறுந்தட்டாக விளங்குபவர்"

பண்டையோர் உரைத்த தண்டமிழ் உரைகளை இளமையிலேயே பதிவு செய்துகொண்ட **'குறுந்தட்டாக விளங்குபவர்' பண்டிதவித்துவான் தி.வே.கோபாலையர்.** எக்காரணத்தாலாவது இந் நூல்களில் ஒன்றை இழக்க நேரின் கவலைப்பட வேண்டியதில்லை. இவர்தம் உள்ளப்பதிவிலிருந்து அதனை மீண்டும் உருவாக்கிக் கொள்ளலாம்.

அரியதென்று கருதும் நல்ல பதிப்புப் பணிகளை எளியதென்று ஏற்று, மடிதற்றுத் தாமே முன் வந்து செய்யும் தமிழ்மண் பதிப்பக உரிமையாளர், 'தமிழ்மொழிக் காவலர்' **கோ.இளவழகன்** இதனை அழகுறப் பதிப்பித்து வழங்குகிறார். இவ்வரிய செயலால், இன்பத்தமிழ் இருக்குமளவும் இளவழகன் புகழும் இருக்கும் என்பது உறுதி.

– முனைவர் இரா. திருமுருகன்

தமிழ்மண்

15

தமிழ் இலக்கணப் பேரகராதி - பொருள்-யாப்பு - 2

# தமிழ் இலக்கணப் பேரகராதி

## பொருள்

### யாப்பு

### 2

### விருத்தம் வண்ணம்

பண்டித வித்துவான்

**தி. வே. கோபாலையர்**

தமிழ்மண்

# தமிழ் இலக்கணப் பேரகராதி

## பொருள் – யாப்பு – 2

ஆசிரியர்
பண்டித வித்துவான் **தி.வே. கோபாலையர்**

*புதுச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வுப் பள்ளிக்காக உருவாக்கப்பட்டது*

*வெளியீடு:* **தமிழ்மண்**

# Tamiḻ Ilakkaṇap Pērakarāti

(A Tamil Grammatical Encyclopaedia)

## Poruḷ - Yāppu - 2

by T.V. Gopal Iyer
Pandit of the Pondicherry Centre of the École Française
d'Extrême-Orient (French School of Asian Studies)

Published by the Tamiḻ Maṇ Pathippakam, Chennai 2005.

Pages: 32+304 = 336
Price: 315
Paper Pack Rs. 250/- Hard Bound Rs. 350/-

# முன்னுரை

*1979ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் தமிழ் இலக்கணப் பேரகராதி ஒன்றனைத் தொகுத்து உருவாக்கும் பணியில் புதுச் சேரியில் உள்ள தொலைக் கீழைப் பிரஞ்சு ஆராய்ச்சிப் பள்ளியில் அமர்த்தப்பட்டேன். இடையிடையே பணிக்கப்பட்ட ஏனைய பணி களுக்கு இடையிலும் அகராதிப் பணியைத் தொடர்ந்து 1995இல் ஓரளவு அதனை நிறைவு செய்தேன். இப் பணியில் எனக்கு உதவி செய்ய அமர்த்தப்பட்ட நாராயணசாமி ஐயர், குமாரசாமிப் பிள்ளை, அப்பாசாமி முதலியோர் பணியிலிருந்து இடையிடையே விடுவிக்கப் பட இப்பணியில் எனக்கு இறுதிவரை என் இளவல் கங்காதரனே உதவும் நிலை ஏற்பட்டது. இப்பணிக்குத் தொல்காப்பியத்தின் பழைய உரைகள் முதல் அண்மையில் வெளிவந்த பாவலரேறு பாலசுந்தரனாரின் தென்மொழி இலக்கணம் முடிய உள்ள பல நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சென்ற நூற்றாண்டினவாக வேங்கடராசுலு ரெட்டியாரின் எழுத்ததிகார ஆராய்ச்சி, இலக்கணக் கட்டுரைகள், சுப்பிரமணிய சாத்திரியாரின் எழுத்ததிகாரச் சொல் லதிகாரச் குறிப்புக்கள், பாலசுந்தரனாரின் தொல்காப்பிய ஆராய்ச்சி காண்டிகையுரை போன்ற சில நூல்களே மேற்கோள்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. சென்ற நூற்றாண்டில் வெளிவந்த இலக்கணம் பற்றிய கட்டுரைகள் பல இருப்பினும் அவையெல்லாம் இவ்வகராதி யில் இடம் பெறவில்லை.*

*இவ்வகராதி பல தொகுதிகளாகப் பல தலைப்புப் பற்றிப் பிரித்துக் கூறப்பட்டிருத்தலின், எல்லா இலக்கண வகைகளுக்கும் பொதுவான சொற்கள் எங்கு இடம் பெற்றுள்ளன என்பதனை அறிதலில் சிறு சிக்கல் ஏற்படும். எடுத்துக்காட்டாக 'வழக்கு' என்ற சொல் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் முதற்கண் வருவதால் அச்சொல் பாயிரம் பற்றிய பகுதியில் விளக்கப்பட்டிருக்கும். தலைப்புக் களின் அகராதி அமைக்கப்பட்டபின் அத்தகைய சொற்களின் இருப்பிடம் அறிதல் எளிதாகும்.*

*இவ்வகராதிப் பணியில் இறுதி மெய்ப்புத் திருத்துதல் முதலிய வற்றில் என் இளவல் கங்காதரனே முழுமையாக ஈடுபட்ட போதி லும், என் தம்பி திருத்துவதற்கு முன்னரே மெய்ப்புக்கள் திருத்தத்தில் ஈடுபட்டுச் செயற்பட்ட சான்றோர் அனைவரையும் நன்றியொடு நோக்குகின்றேன். 17 தொகுதிகளாக அமையும் இந்த நூலினை*

அமைப்பதற்கு எனக்கு என் தம்பி வலக்கையாக உதவுவது போலவே, இந்நூலைப் பதிப்பிக்கும் இளவழகனாருக்கு உதவிய பதிப்பக உதவியாளர்கள் செல்வன் செ. சரவணன், செல்வன் இ. இனியன், செல்வன் மு. கலையரசன், அரங்க. குமரேசன், வே. தனசேகரன், மு.நா. இராமசுப்பிரமணிய இராசா, நா. வெங்கடேசன், இல. தர்மராசு ஆகியோர் இந்நூல் செம்மையாக வெளிவரப் பெரிதும் முயன்றுள்ள செயலைப் போற்றுகிறேன். இவர்கள் நோய்நொடி இன்றிப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

இந்நூலை வெளியிட உதவிய எங்கள் தொலைக் கீழைப் பிரஞ்சு ஆராய்ச்சிப்பள்ளி நிறுவனத்தாருக்கு நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

தொகுதிகள் 17 : எழுத்து - 2, சொல் - 4 , பொருள் - 11 (அகம் - 4, புறம் - 1, அணி - 2, யாப்பு - 2, பாட்டியல், பாயிரம், மரபியல் - 1, மெய்ப்பாடு, நாடகம், அளவை, நியாயம் ஏனைய - 1)

**தி.வே. கோபாலையர்**

# முகவுரை

பொருளதிகார அகரவரிசை அகம், புறம், அணி, யாப்பு, பாட்டியலும் பாயிரமும் மரபியலும், மெய்ப்பாடு நாடகம் அளவை நியாயம் வழு மலைவு அமைதி ஏனைய - என்ற தலைப்புக்களில் அமைக்கப்பட்டுள்ளது. அஃது அகம் 4 தொகுதி, புறம் ஒரு தொகுதி, பொதுவணி, பொருளணி, சொல்லணிகள் 2 தொகுதி, பாவும் பாவினமும், சந்தவிருத்தம், சந்தப்பாடல் முதலியன 2 தொகுதி, பாட்டியலும் மரபியலும் பாயிரமும் ஒரு தொகுதி, மெய்ப்பாடு முதலியன ஒரு தொகுதி ஆகப் பதினொரு தொகுதிகளாக வெளி வருகிறது.

மக்கள் நிகழ்த்தும் காதல் இல்லற ஒழுக்கம் அகம் எனவும், ஏனைய அறம் பொருள் பற்றிய செய்திகள் புறம் எனவும் கூறப்படும். தமிழ்ச் சான்றோர்கள் காதல் இல்லறவாழ்க்கை பற்றிய பாடல்களை இப்படித்தான் பாடவேண்டும் என்று செய்யுள் இயற்றுதலாகிய புலனெறி வழக்கத்திற்கு உலகியல் வழக்கொடு கற்பனையைக் கலந்து வரையறையுடைய இலக்கியக் கோட்பாடுகளை விரிவாக வகுத் துள்ளனர். இஃது இல்லது எனப்படாது உலகியலேயாம் என்பர் பேராசிரியர். உலகியலில் யாதானும் ஒரோவழி ஒருசாரார்மாட்டு நிகழும் ஒழுக்கத்தினை எல்லோருக்கும் பொதுவாக்கி இடனும் காலமும் வரையறுத்துக் கூறும் புலனெறி வழக்கம் என்று அதனை விளக்குவர் நச்சினார்க்கினியர். இலக்கணவிளக்க ஆசிரியர் நச்சி னார்க்கினியர் கூறியதையே தாமும் எடுத்து மொழிவர். உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையுமாகக் கூறும் புலனெறிவழக்கம் பற்றி அகப்பொருட்கோட்பாடு அமைக்கப்பட்டது என்பது பரிமேலழகர் இளம்பூரணர் என்பவர் கருத்தாகும். இல்லோன் தலைவனாகக் கூறப்படுவது என்பார் சேனாவரையர். இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்டது அகப்பொருட் கோட்பாடு என்பது இறையனார் அகப்பொருள் உரை கூறும் செய்தியாகும். எவ்வாற்றானும் அகப்பொருட் கோட்பாடுகளை முறையே பின்பற்றிச் செய்யுள் இயற்றல் தமிழிற்கே உரிய சிறப்புச் செய்தியாகும்.

இவ்வகப்பொருள் தொடர்பாக அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ளன. ஏனைய மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் என்பனவற்றிலும் அகப்பொருள் பற்றிய செய்திகள் கலந்துள்ளன. புறப்பொருளிலுள்ள ஒவ்வொரு திணையும் இன்ன அகத்திணைக்குப் புறம் என்று சுட்டப்பட்டுள்ளது. எனவே அகப்பொருள் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுதும் பரவலாகப் பேசப்படுகிறது.

தொல்காப்பியத்தை அடுத்து அவிநயம் என்றதொரு முழுநூல் நிலவியிருக்கலாம் என்ற செய்தியை நன்னூலுக்கு மயிலைநாதர் இயற்றிய உரை வாயிலாகவே அறிகிறோம். இன்று வழக்காற்றில் இருக்கும் 60 நூற்பாக்களை உடைய இறையனார் அகப்பொருள் என்ற நூல் கி.பி. 5, 6ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இன்று நாம் காணும் இறையனார் அகப்பொருள் உரை ஒன்பதாம் நூற்றாண்டில் இன்று நாம் காணும் உருவைப் பெற்றிருக்கலாம். பெரும்பொருள் விளக்கம் என்ற நூலின் எடுத்துக்காட்டுப் பாடல்கள் சில நச்சினார்க்கினியரால் அவருடைய புறத்திணை உரையுள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஒப்பும் பெருந்திணைப்பாற்படும் கந்தருவமா மாறு பெரும்பொருளான் உணர்க (சீவக 187 உரை) என்ற நச்சினார்க்கினியர் கூற்றையும், பெரும்பொருளகத்து அகப்பொருள் இலக்கணங்கள் பல்வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளன என்ற இலக்கணவிளக்க உரைப்பகுதியையும் (பொ.226) நோக்கி அகப்பொருள் புறப்பொருள்களை விளக்கக் கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் பெரும்பொருள் விளக்கம் என்ற பெருநூல் தோன்றியிருக்கலாம் என்று கருத இடம் இருப்பினும், அந்நூலோ அதன் பகுதிகளோ இன்று நமக்குக் கிட்டவில்லை. இறையனார் அகப்பொருளை அடுத்து இன்று நமக்குக் கிட்டியுள்ளது 'தமிழ்நெறி விளக்கம்' என்ற நூலின் அகப்பொருட் செய்திகள் பலவற்றைக் குறிப்பிடும் பகுதியே. அதனை ஒட்டித் தோன்றியதாகக் கருதப்படும் களவியற் காரிகை என்ற நூலின் பழுதுபட்டன போக எஞ்சியுள்ள சிறுபகுதி நமக்குக் கிட்டியுள்ளது. இவற்றை அடுத்து 12 அல்லது 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய அகப்பொருள் விளக்கம் எனப்படும் நம்பி அகப்பொருள் என்ற நூலே அகப்பொருள் பற்றிப் பரவலாகக் கற்கப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாறன் அகப்பொருள் என்ற நூல் பெரிதும் பயிலப்படவில்லை. இலக்கண விளக்கம் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பி அகப்பொருள் என்ற நூல்களை இணைத்துத்தான் அகத்திணையியலை அமைத்துள்ளது. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் என்ற நூல்களிலும் அகத்

*திணை தனியே கூறப்படுகிறது. நிகண்டுகளில் கருப்பொருள்கள் விரிக்கப்பட்டுள்ளன. 11ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழிய நூல் உரையில் அகப்பொருள் பற்றிய பல நூற்பாக்கள் மேற் கோளாக இடம் பெறுகின்றன. பக்தி நூல்களிலும் பல அகப் புறப் பாடல்கள் உள்ளன. தொல்காப்பியம் முதலிய நூல்களையும் அவற்றின் உரைகளையும், இலக்கியங்களையும் உட்கொண்டு அகத்திணைப்பகுதி வரையப்பட்டுள்ளது.*

**தி.வே. கோபாலையர்**

EVA WILDEN
École Française d'Extrême-Orient
Pondicherry centre
16&19 Dumas Street,
Pondicherry.
Aug. 2005

# Introduction

Tamil grammar and poetics are old and venerable disciplines interwoven into a complex system the beginnings of which are lost in legend. What is fact, however, is that we are looking back on a textual tradition representing the thought of almost two millennia: a continuous discourse on Tamil language and literature, but also a dispute with other systems of knowledge, most notably the Sanskrit grammatical and poetological traditions. To give a rough chronology, for the first millennium, we have one great treatise encompassing the whole field and developing the basic structure that is taken up, with some modifications and extensions, by the whole later tradition. This is the famous *Tolkāppiyam*, consisting of three parts, two of them devoted to two different aspects of grammar, which has been ever since split into two sections, namely *Eḻuttu* (phonology) and *Col* (morphology and syntax), while the third part treats of *Poruḷ* (poetics). It is followed by a small work specialising in a particular field of poetics, namely that of Akam (love poetry), called the *Iṟaiyaṉār Akapporuḷ*.

The second millennium, probably a time of socio-cultural upheaval, sets in with a voluminous commentary tradition not only for the treatises that had been written so far, but also for wide parts of the older literature. In fact our understanding of the meaning of the older texts is basically indebted to these commentaries. Nevertheless, there is a parallel development of new treatises in all sub-disciplines, mirroring the confrontation with the change of language, the arising of new literary forms and the massive impact of North-Indian, i.e. Sanskritic modes of thinking and writing in the Tamilian South. To mention just a few of the most important titles, among the inclusive texts – comprising, just as the *Tolkāppiyam*, the whole range of the field – there are the heavily Sanskritised *Vīracōḻiyam* of the 11th century, and the Tamil-conservative *Ilakkaṇa Viḷakkam* of the 17th century. Both of them extend the original structure of three sections, dealing with *Eḻuttu* (phonology), *Col* (morphology and syntax), and *Poruḷ* (poetics), by

another two subsumed under *Poruḷ*, namely *Yāppu* (metrics) and *Aṇi* (figures of speech). Among the influential treatises devoted exclusively to grammar we may list the *Naṉṉūl* (12th century), the standard book on Tamil grammar after the *Tolkāppiyam*, and the *Pirayōka Vivēkam* (17th century), again very Sanskritic. Poetics, for its part, seems to have been an even more fruitful domain, creating a number of branches with various specia-lisations. The first independent text on metrics is the *Yāpparuṅ-kalakkārikai* (10th century); the most notable exponent of systematic Akam poetics is the *Nampi Akapporuḷ* (12th century), while the Puṟam genre (heroic poetry) is represented by the *Puṟapporuḷveṇpā-mālai* (9th century).

The encyclopaedia presented here is an attempt to render accessible this wealth of materials to specialists and also to non-specialists. The vast topology and terminology of Tamil grammar and poetics are represented by key terms which are explained with reference to the corresponding *sūtras* in the treatises and additional explication from the various commentaries. The whole work comprises 17 volumes, structured in the traditional way into the three sections *Eḻuttu* (phonology), *Col* (morphology and syntax) and *Poruḷ* (poetics), where 2 volumes fall on *Eḻuttu*, 4 on *Col*, and 11 on the various sub-disciplines subsumed under poetics: 2 for *Yāppu* (metrics), 2 for *Aṇi* (figures of speech), 4 for *Akam* (love topics), 1 for *Puṟam* (heroic topics), 1 for *Pāṭṭiyal* (literary genres), *Pāyiram* (prefaces) and *Marapiyal* (word usage), and finally 1 for *Meyppāṭu* (physical manifestation), *Nāṭakam* (drama), *Aḷavai* (valid means of knowledge), *Āṉantakkuṟṟam* (collocations to be avoided), *Niyāyam* (logic) and *Vaḻuvamaiti* (poetic licence). The last of these volumes contains a bibliography.

This sort of work of synthesis has long been a desideratum of research: it gives erudite references to a vast range of technical Tamil texts which are, for the most part, not well understood today. Some of the texts are hard to come by – unless in the editions of the author of this encyclopaedia (on whom more below) – most of them are not translated into any other language, general introductions into the field are few, and even fewer are written in languages more easily accessible to the general reader (like English or French). There has been more than one project comparable in range in recent years, most promi-

nently the *Encyclopaedia of Tamil literature* of the Institute of Asian Studies, Chennai (in English language), but sadly this opus has not yet seen more than 3 volumes, the last one already nine years old and reaching only the letter "*ai*". All the more reason for scholars interested in Tamil language and literature to be grateful to the author of the present work, the venerable T.V. Gopal Iyer, with his 80 years one of the last living exponents of a great tradition of exegesis.

Space permits here no more than a brief account of the highlights of a long and in many respects exemplary career of a Tamil savant in the 20th century. As well as following a traditional path of education, the worldly marks of which are his two titles Vidvan and Panditam conferred by the University of Madras and the Maturai Tamil Cankam respectively (in 1945 and 1953), Gopal Iyer also acquired the "modern" university degrees of Bachelor of Oriental Language and Bachelor of Oriental Language with Honours at the University of Madras (1951 and 1958). From 1965-1978 he taught in Rajah's College, Thiruvaiyaru, in which period he already took up his activity of editing works of Classical Tamil, especially theoretical texts. The most important publications from that phase are the *Ilakkaṇa Viḷakkam* in 8 volumes (published in Thanjavur by the Sarasvati Mahal from 1971-1974), the *Ilakkaṇak Kottu* (Sarasvati Mahal 1973) and the *Pirayoka Vivekam* (Sarasvati Mahal 1973).

Ever since 1978, Mr. Gopal Iyer's sphere of activity has shifted to Pondicherry, where he has been (and still is) employed as a research scholar by the École Française d'Extrême-Orient (EFEO) – i.e., the French School of Asian Studies –, a research institution financed by the French government which has 17 research centres spread across Asia, the westernmost of which is that in Pondicherry, and which has the mission of studying Asian (and notably Indian) languages, cultures and religions. In this environment, designed as a meeting place for international research, the enormous preparatory work for this encyclopedia has been accomplished. Part of the voluminous editorial output of Mr. Gopal Iyer during the last 27 years has appeared in a series co-published by the EFEO and the IFP (the French Institute of Pondicherry, another research Institution of the French government in whose premises T.V. Gopal Iyer worked for several

years), such as a 3-volume edition of the *Tēvāram*, his major contribution to devotional Tamil literature (1984f., 1991), and the *Māraṉ Akapporuḷ* (2005). A number of further publications deserve mention, since they concern fundamental texts of the Tamil grammatical and poetological tradition upon which the encyclopaedia is based. Last year he published a 14-volume edition of the complete *Tolkāppiyam* with all the commentaries (through Thiru. G. Ela-vazhagan of Tamizh Mann Pathippagam, Chennai - 17) and this year editions of the *Vīracōḷiyam* and the *Māṟaṉ Alaṅkāram*.

The EFEO is extremely happy that it has been able to contribute its share to this publication of vital importance for the exploration of Tamil literary history, which will be a monument to a most extraordinary man, who has been teacher and adviser, nay, a living encyclopaedia, to so many students of Tamil language, Indian and Western.

A final brief note of thanks to three individuals who were important in bringing this large work to the light of day. The first is Mr. T.V. Gopal Iyer's younger brother, Mr. T.S. Gangadharan, then of the French Institute of Pondicherry and now of the Pondi-cherry Centre of the EFEO, who wrote the work out in a fair hand. The second is Dr. Jean-Luc Chevillard, who, years later, had the encyclopeadia digitally photographed when in its yet more voluminous hand-written state and so by his timely intervention prevented the loss of some of its parts. The third is the publisher, Mr. Ela-vazhagan, of the Thamizh Mann Pathippagam, who had the vision to see the value of this work and took on the task of setting it in type, a labour which took a year and a half and involved five sets of proofs.

ஈவா வில்டன்
**பிரஞ்சு இந்திய ஆய்வுப் பள்ளி**
புதுச்சேரி மையம்

16&19 டுமாஸ் தெரு
பாண்டிச்சேரி,
ஆகஸ்டு 2005.

# அறிமுகவுரை

*தமிழ் இலக்கணம் மிகு தொன்மை வாய்ந்தது; பெரு மதிப்பிற் குரியது; தன் கூறுபாடுகள் பிணைந்து நுட்பமான பேரமைப்பாக உருவாகியுள்ள இவற்றின் தொடக்கக் காலம் எளிதில் வரையறுக்க முடியாத பழங்காலமாகும். தமிழ் மொழி பற்றியும் இலக்கியம் பற்றியும் 2000 ஆண்டுகளாக இடையறாது தொடர்ந்து வந்துள்ள சிந்தனைகளை நாம் இன்று நமக்குக் கிட்டியுள்ள நூல்களிலிருந்து காண்கிறோம். அச்சிந்தனைகள் பிறமொழிகளின் (குறிப்பாக வட மொழியின்) இலக்கண இலக்கியங்களோடு உறழ்ந்து வந்துள்ளதை யும் காண்கிறோம். தோராயமாகச் சொன்னால் முதல் ஆயிரம் ஆண்டுகளில் தமிழிலக்கியத்திற்கு முழுமையான அடிப்படையாக அமைந்துள்ள ஒரே பெரும் பேரிலக்கணம் தொல்காப்பியம் ஆகும். (அஃது அவ்வப்பொழுது சிற்சில மாற்றங்களுடனும் விரிவாக்கங் களுடனும் அவ்வாயிரம் ஆண்டுக்கால இலக்கியத்துக்குமே அடிப் படையாக அமைந்தது.) அந்த ஒரே இலக்கணம்தான் புகழ்மிகு தொல்காப்பியம். அஃது மூன்று அதிகாரங்கள் கொண்டது: எழுத்து* (Phonology) *சொல்* (Morphology and Syntax) *பொருள்* (Poetics). *சில காலம் கழித்துப் பொருள்இலக்கணத்தின் ஒரு பகுதியான அகம் பற்றி இறையனார் அகப்பொருள் என்னும் சிறுநூல் ஒன்று தோன்றியது.*

*கி.பி. 1000-க்குப் பின்னர் தமிழகத்தில் சமுதாய - கலாசார மாற்றங்கள் விரைவுபெற்றன. அக்காலகட்டத்தில் தோன்றியதே விரிவாக உரையெழுதும் முறையாகும். இலக்கண நூல்களுக்கு மட்டு மன்றி, பழைய தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலனவற்றுக்கும் இவ்வாறு உரைகள் தோன்றின. அப்பழநூல்களின் பொருளைத் தெரிந்துகொள்ளப் பெருமளவுக்கு அவ்வுரைகளையே நாம் சார்ந் துள்ளோம். எனினும் அக்காலகட்டத்தில் தமிழ் இலக்கணத்தின் உட்பிரிவுகள் பற்றிப் புது நூல்களும் தோன்றலாயின. மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள், புதிய செய்யுள் வடிவங்களின் தோற்றம், தமிழின்மீது வடநாட்டு அஃதாவது சமற்கிருதம் சார்ந்த சிந்தனை எழுத்து ஆகியவற்றின் தாக்கம் இவற்றைக் காட்டுவனவாக அப்புது நூல்கள் தோன்றின. முதன்மையான சிலவற்றைக் காண்போம். தொல் காப்பியம் போல் எழுத்து, சொல், பொருள் மூன்றையும் பற்றி*

எழுதப்பட்டவை வீரசோழியமும் (மிகுந்த சமற்கிருதச் சார்புடையது; 11ஆம் நூற்றாண்டு) இலக்கண விளக்கமும் (தமிழ் இலக்கணத் தொல் மரபுகளைக் கடைப்பிடித்தது; 17ஆம் நூற்றாண்டு) ஆகும். இந்நூல்கள் பொருளை யாப்பு (Metrics) அணி (Figures of Speech) என்று மேலும் இரு பிரிவுகளாக ஆக்கியுள்ளன. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் வகுத்தனவற்றுள் மிகுதியும் பயிலப்பட்டவை 12ஆம் நூற்றாண்டு நன்னூலும் (தொல்காப்பியத்துக்குப் பின் தமிழுக்கு இலக்கணம் என்றாலே நன்னூல் தான் என்பதே நிலைமை) 17 ஆம் நூற்றாண்டுப் பிரயோக விவேகமும் (மிகுதியும் சமற்கிருதச் சார்புடையது) ஆகும். பொருளின் பிரிவுகள் பற்றியும் உட் பிரிவுகள் பற்றியும் எழுந்த புது இலக்கணங்கள் மிகப்பல. யாப்பு பற்றித் தனியாக எழுந்த முதல் இலக்கணம் யாப்பருங்கலக் காரிகை (10ஆம் நூற்றாண்டு); அகம் பற்றி விரிவாக எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க நூல் நம்பி அகப்பொருள் (12ஆம் நூற்றாண்டு); புறம் பற்றியது புறப்பொருள் வெண்பாமாலை (9ஆம் நூற்றாண்டு).

இந்த தமிழ் இலக்கணப் பேரகராதி மேற்சொன்ன இலக்கணச் செல்வங்களைத் தமிழ் வல்லுநர்களுக்கும் பிறருக்கும் - ஒரு சேரத் தொகுத்துத் தரும் சிறந்த நூல். தமிழ் இலக் கணத்தின் (பொருளியல் உட்பட) மிக விரிந்த பரப்பில் கண்ட அனைத்து முக்கியமான தலைப்பு ஒவ்வொன்றும் அகர வரிசைப்படி, உரிய நூற்பாக்களும், பல்வேறு உரைகாரர்கள் கூற்றுக்களும் தரப்பட்டுத் தெளிவாக விளக்கப்படுகின்றது. எழுத்துக்கு 2, சொல்லுக்கு 4, பொருளுக்கு 11 ஆக 17 தொகுதிகள் கொண்டது இவ் வகராதி. (பொருள் பற்றிய 11 தொகுதிகளின் வகைப்பாடு: அகம் - 4, புறம் - 1, யாப்பு - 2; அணி - 2; பாட்டியல், பாயிரம், மரபியல் - 1; மெய்ப்பாடு, நாடகம், அளவை, ஆனந்தக் குற்றம், நியாயம், வழுவமைதி ஆகியவை - 1, என்பனவாகும்) இறுதித் தொகுதில் கருவி நூற்பட்டியலும் உள்ளது.

பொருள்களைத் தெள்ளிதின் உணர்ந்து முறைப்படி விளக்கும் இத்தகைய பேரகராதியின் இன்றியமையாத் தேவை நெடுநாளாக ஆய்வுலகத்தால் உணரப்பட்டுவந்ததாகும். மிக விரிந்த இவ் விலக் கண நூல்களும் உரைகளும் திட்ப நுட்பமான நடையிலமைந்தவை யாகையால் இன்று எளிதில் படித்துணரத்தக்கவை அல்ல. அவற்றில் காணத்தகும் இலக்கணச் செல்வங்களுக் கெல்லாம் புலமை சான்ற விளக்கங்களை இங்குக் காணலாம்.

இவ்விலக்கண நூல்கள், உரைகளிற் சிலவற்றின் அச்சுப்படிகள் கூட எளிதில் கிட்டுவதில்லை (கிட்டினும் அவையும் இவ்வகராதி யாசிரியர் அச்சிட்டவையாகவே இருக்கும்; அவரைப் பற்றி மேலும் சில பின்னர்). அவ்வரிய இலக்கண நூல்கள் பிறமொழிகளில் பெயர்க்கப்படாதவை; இவற்றைப் பற்றிய பொதுவான விளக்க

*நூல்களும் சிலவே - அதுவும் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழி களில் வந்துள்ளவை ஒன்றிரண்டேயாகும். அண்மைக் காலங்களில் இவை போன்ற விரிவான நூல்கள் வெளியிடும் திட்டங்கள் சில வற்றுள் சென்னை ஆசியவியல் நிறுவனம் ஆங்கிலத்தில் வெளியிடத் தொடங்கிய "தமிழ் இலக்கியக் களஞ்சியமும்" ஒன்று. அக்களஞ்சி யத்தில் மூன்று மடலங்களே (ஐ முடிய) வெளிவந்த நிலையில், கடந்த ஒன்பதாண்டுகளாகப் பணி முட்டுப்பட்டு நிற்கிறது என்பது நினைக்கத்தக்கது. இந்நிலையில் தமிழ் இலக்கண நூல்களிலும் உரைகளிலும் ஊறிய பேரறிஞர்களில் இன்று நம்மோடு உள்ள மிகச் சிலரில் ஒருவரான, 80 வயது நிறைந்த வணக்கத்துக்குரிய தி.வே. கோபாலையரின் படைப்பான இப் பேரகராதி தமிழ் இலக்கண, இலக்கிய அறிஞர்கள் அவர்பால் நன்றி பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.*

*இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களில் பல்வகையிலும் போற்றத்தக்கவருள் ஒருவரான இவ்வாசிரியரின் நெடிய தமிழ்ப்பணி குறித்து மிகச் சிறிய அளவிலேயே ஈண்டுக் கூற இயலும். பாரம்-பரியமான தமிழ்ப் புலமை மரபில் அவர் பெற்ற தகுதிகள் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் (1945); மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதம் (1953) ஆகியவை; அத்தோடு "நவீன"ப் பல்கலைக் கழகப் பட்டங் களாகச் சென்னைப் பல்கலை கழகத்தில் 1951இல் பி.ஓ.எல் பட்டமும், 1958இல் பி.ஓ.எல் (ஆனர்சு) பட்டமும் பெற்றுள்ளார். 1965 - 1978இல் அவர் திருவையாறு அரசர் கல்லூரியில் ஆசிரியப்பணி ஆற்றினார். அப்பொழுதே பதிப்புப் பணியை, குறிப்பாக பழந்தமிழ் இலக்கண உரை நூல்களைப் பதிப்பிக்கும் பணியைத் தொடங்கினார். அக்கால கட்டத்தில் அவர் பதிப்பித்தவை இலக்கண விளக்கம் 8 தொகுதிகள் (தஞ்சை சரசுவதி மகால் 1971-74), இலக்கணக் கொத்து (தஞ்சை சரசுவதி மகால் 1973), பிரயோக விவேகம் (தஞ்சை சரசுவதி மகால் 1973) ஆகியவையாம்.*

*1978இலிருந்து திரு கோபாலையர் அவர்களுடைய அறி வாற்றலைப் பிரெஞ்சு இந்திய ஆய்வுப் பள்ளி* (École Française d'Extrême-Orient ) *பயன்படுத்தி வருகிறது. அவர் இன்று ஆய்வுப் பணி செய்யும் அந்நிறுவனம் பிரான்சு நாட்டு அரசு நிதி உதவியுடன் நடைபெறுகிறது. அவ் வமைப்பிற்கு ஆசிய நாடுகளில் மொத்தம் 17 ஆய்வுமையங்கள் உள்ளன. பாண்டிச்சேரி மையம் உட்பட. இவை ஆசிய (குறிப்பாக) இந்திய மொழிகள், பண்பாடுகள், சமயங்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்கின்றன. பன்னாட்டு ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து அறிவுப் பணி செய்யும் இச் சூழல் கொண்ட பாண்டிச்சேரி மையத்தில்தான் இவ்விலக்கணக் களஞ்சியம் தொகுக்கும் மாபெரும் பணி நடந்தது. கடந்த 27 ஆண்டுகளில் திரு கோபாலையர் படைத்த பற்பல நூல்களையும் பாண்டிச்சேரியி லுள்ள பிரெஞ்சு இந்திய ஆய்வுப் பள்ளியும், பிரான்சு நாட்டு அரசின்*

*மற்றொரு கீழைக் கலை ஆய்வு நிறுவனமான பிரெஞ்சு நிறுவனமும் (French Institute) வெளியிட்டுள்ளன. அவ்வாறு வெளியான அவர் நூல்களில் குறிப்பிடத்தக்கவை தமிழ்ப் பக்தி இலக்கியம் சார்ந்த தேவாரம் (3 தொகுதிகள் 1984 முதல் 1991 வரை), மாறன் அகப் பொருள் (2005) ஆகியவை. இப்பேரகராதிக்கு அடிப்படையாக அமைந்தவையும் கோபாலையர் பதிப்பித்தவையுமான வேறு சில நூல்களையும் குறிப்பிட்டாகவேண்டும்; அவை (திரு. கோ. இளவழகன், தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 17 மூலமாக) அவர் 2004இல் பதிப்பித்த தொல்காப்பியமும் (உரைகளுடன் 14 தொகுதிகள்) 2005இல் அவர் பதிப்பித்துள்ள வீரசோழியமும் மாறன் அலங்காரமும் ஆகும்.*

*தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றை ஆய்வு செய்திட இன்றி யமையாத கருவி இப் பேரகராதி. இந்திய மற்றும் மேல்நாட்டுத் தமிழ் ஆய்வாளர்கள் பலருக்கு ஆசானாகவும் அறிவுரையாள ராகவும், ஏன் நடமாடும் கலைக்களஞ்சியமாகவும் அமைந்த அபூர்வ மான ஓர் அறிஞரின் மாபெருஞ் சாதனையாக அமைவதும் இது. எனவே இந்நூல் வெளியீட்டில் தானும் பங்கு பெற்று உதவிட வாய்ப்புப் பெற்றது குறித்துப் பிரெஞ்சு இந்திய ஆய்வுப் பள்ளி மகிழ்கிறது.*

*இறுதியாக இம்மாபெரும் பணி வெற்றிகரமாக நடைபெறப் பெரும்பங்கு ஆற்றிய மூவருக்கு நன்றி கூறியாக வேண்டும். முதலா மவர் திரு கோபாலையரின் இளவல் திரு கங்காதரன் அவர்கள். அவர் முன்னர்ப் பிரெஞ்சு நிறுவனத்தில் பணி செய்தவர். இப்பொழுது* ***பி.இ.ஆ.ப.*** *பாண்டிச்சேரி மையத்தில் அவர் ஆய்வறிஞர், பணியில் உள்ளார். நூல் முழுவதையும் தம் கைப்பட அழகாக எழுதியவர் அவர். இரண்டாமவர் டாக்டர் ழான்-லுக்-செவியர்; கையெழுத்துப் பிரதி முழுவதையும் டிஜிடல் நிழற்படமாக எடுத்து எப்பகுதியும் சிதிலமாகி அழிந்து விடாதபடி பார்த்துக் கொண்டவர். மூன்றாமவர் திரு கோ. இளவழகன். அவர் இந்நூலின் சிறப்பையும் பயனையும் உணர்ந்து அதை வெளியிட முன்வந்தவர். இப் பெருநூலைச் செம்மை யாகக் கணினியில் தட்டச்சு செய்து அச்சுக்கு அணியமாக்கவும், மெய்ப்புக்களை ஐந்து முறை கவனமாகத் திருத்தவும் ஆக ஒன்றரை ஆண்டுகள் அவரும் அவரைச் சார்ந்தவர்களும் உழைத்துள்ளனர்.*

**தமிழ் வாழ்க!**

தலைமாமணியெனத் தமிழிலக்கணப் பேரகராதியை
வரைந்தருளிய கலைமாமணி,

# பண்டிதவித்துவான் தி.வே. கோபாலையர்

அவர்களை வாழ்த்தி வழங்கும்

## "பாராட்டுரை"

அன்பும் அருளும் அறிவும் திருவும்
இன்பமும் எழிலும் மன்னிய உருவாய்ச்
சொல்லொடு பொருள்போல் எல்லும் ஒளியும்
புல்லிய வடிவென அம்மை யப்பனாய்ச்
செந்தமிழ் மயமாய்த் திகழும் சீர்சால்
பொன்மலை மேவிய புரிசடைக் கடவுள்
நான்மறை நவிலும் நயன்மிகு நாவால்
சிந்தை சிலிர்க்கத் தென்றல் உலாவச்
சந்தனம் மணக்கும் தண்ணிய அருவிசூர்
பொதியத் தமர்ந்து புவியெலாம் போற்ற
மதிநலம் வளர்க்கும் மாண்பமை முத்தமிழ்
நிதிவளம் நல்கும் நிகரிலா மாதவன்
அகத்தியற் கருளிய தகவமை இலக்கண
மிகப்பெருங் கலையைச் சகத்தவர் உணர
பல்காப் பியந்தெளி தொல்காப் பியன்முதல்
ஒல்காப் புலமை ஒண்டமிழ் நூலோர்
இயம்பிய இலக்கணப் பனுவல் யாவையும்
உளந்தெரிந் துரைசெய் **இளம்பூ ரணர்**முதல்
**சேனா வரையர், தெய்வச் சிலையார்,**
ஆனாப் புலமைப் **பேரா சிரியர்**
உச்சிமேற் புலவர்கொள் **நச்சினார்க் கினியர்**

விச்சை மிக்க**நக் கீர னா**ரொடு
**சிவஞான முனிவர், சுவாமி நாதனார்**
யாப்ப ருங்கல விருத்தி முதலாய
உரைவழி யாவையும் புரையறக் கற்றறிந்து,
அரியவை யாவையும் சிந்தையிற் றெளிந்து
கற்றதை மறவாப் பெற்றியொடு திகழும்
அருந்திறற் புலவன், பெரும்பே ராசான்,
விருந்தென வடமொழி பயின்றறி திறலோன்,
ஆங்கிலப் புலமைசீர் தாங்கிடும் ஆசான்,
சங்க இலக்கியச் சால்பொடு இரட்டைக்
காப்பிய நுணுக்கமும் சிந்தா மணியினைத்
தேர்ந்தறிந் துவந்துரை விரிக்கும் செம்மல்,
தேங்கமழ் அமிழ்தென மாணவர் செவிகொளப்
பாடம் பயிற்றும் பண்பமை ஆசான்
திருமுறை, திவ்வியப் பிரபந்த அருள்வளம்
நிறைமொழி யாவும் நெஞ்சம் இனிக்க
உருச்செய் துவக்கும் ஒளிர்தமிழ்ப் பாவலன்,
புராண இதிகாசப் புலமையும் நுட்பம்
விராவிய **கம்பன்** கவிதையும் பிறபிற
சிற்றிலக் கியக்கடல் திளைத்தநற் கல்விமான்,
**ஆளுடைப் பிள்ளையும் அரசும் நம்பியும்**
தாளுறச் சூழ்ந்து தலையுறப் பணிந்து
தெய்வத் தமிழாற் புனைந்த**தே வாரம்**
மெய்யணிந் துவக்கும் ஐயா றன்திகழ்
காவிரித் தாயின் கரைமிசை யொளிசெய்
**திருவையா ற**தனிற் செந்தமிழ்த் தாயின்
உள்ளம் உவப்ப உதித்த தனயன்,
அந்தணர் குலத்தில் வந்தநற் சான்றோன்
குணத்தால் உயர்ந்த **கோபா லையன்,**
அன்பும், அடக்கமும், நண்பமை செயலும்,
இன்சொலும், எளிமையும், இயல்போ டமைந்தொளிர்
போதகா சிரியன், புதியன புனையும்
ஆய்வறி வாளன், அரும்பெறற் கட்டுரை

தரும்எழுத் தாளன், மூவர்தே வாரச்
சொல்வளம் இசைவளம் மல்கிடும் ஞானம்,
மலர்ந்திடும் கற்பனை, வண்ணனை உள்ளம்
கலந்திடும் பக்திக் கவிநயம் யாவையும்
உலகுணர்ந் துய்ய உரைவிரித் தியம்பிய
பலகலை யுணர்ந்த பண்டிதன் இலக்கணக்
கடல்படிந் தெல்லை நிலைகண் டெழுந்த
ஆசான், தன்பே ருழைப்பினால் இலக்கணக்
கலைச்சொல் யாவையும் கவினுறத் தொகுத்துப்
பொருள்நிலை விளங்க அகர நிரல்பட
இலக்கணப் பேரக ராதியை வரைந்து
பேரா சிரியர்,ஆய் வாளர், மாணவர்
யாவரும் பயன்பெறக் காவியம் போலத்
தமிழ்த்தாய்க் கணியாத் தகவுற வழங்கும்
**பண்டித தி.வே. கோபா லையர்**
வண்டமிழ் போல வளமெலாம் மேவி
மண்டலம் புகழப் பல்லாண்டு பல்லாண்டு
வாழ்கெனப் போற்றி வாழ்த்துதும் உவந்தென்.

*தஞ்சாவூர்*
*22.08.2005* பாவலரேறு ச. பாலசுந்தரனார்

# "கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரோ"

*முதுபெரும் புலவர் இலக்கணக் கடல் உயர்திருவாளர்* **தி.வே. கோபாலனார்**, *தமிழ்வளக் கொடையாக, அரும்பதிப்புப் பெருந்தகை* **கோ. இளவழகனார்** *வழங்கும்,* **'தமிழ் இலக்கணப் பேரகராதி'** *மடலங்கள் பதினேழனையும் ஒருங்கே கண்டதும்,*

*"காரே! நேரே தான்,*
*வாரியுண்டு; வாரிமொண்டு வாரியுண்டு, வானிருண்டு*
*பேரி கொண்டு நீதிரண்டு பெய்"*

*என்னும், வான்மழைப் பாட்டின் 'தேன்பிழி'வென எனக்கு அவை இன்ப மூட்டின.*

**கோபாலனார்** *மூளைக் கூர்ப்பும்,*

**இளவழகனார்** *பதிப்பு ஈர்ப்பும்,*

*ஒருங்கே வயப்படுத்திய இன்பத்தில்,*

*'அன்னை வாழ்க', 'அயராத் தொண்டர்களும் வாழ்க'*

*என என்னுள் வாழ்த்தினேன்.*

**கோபாலனார்** *நினைவின் ஏந்தல்; இலக்கணமா இலக்கியமா, நூலோடு உரையும் நெஞ்சக் களனில் வரப்படுத்தி வைப்பாக வைத்துக் காக்கும்* **கருவூல வாழ்வர்.**

*கற்றது ஒன்றையும் கைவிடாக் '***கருமி***'யெனக் கவர்ந்து கொண்ட தமிழ்வளத்தை, என்றும் எங்கும் எவர்க்கும் '***தருமி***' என வாரி வழங்கும்* **வள்ளியர்**. *அவர்தம்* **இவ்வகராதிக் கொடை, தமிழுலகு காலத்தால் பெற்ற கவின் பரிசிலாம்!**

**என்னை யறியாதே எனக்கொரு பெருமிதம்; ஏக்கழுத்தம்;** *"இத்தகு பாரிய இலக்கணத் தொகுதிகளை இம்மொழி ஒன்றை யன்றி, எம்மொழிதான் பெறக்கூடும்?" என்னும் எண்ணத்தின் விளைவே அஃதாம்!*

*அம்மம்ம!*

| | | |
|---|---|---|
| **எழுத்து** | - | *இரண்டு மடலங்கள்* |
| **சொல்** | - | *நான்கு மடலங்கள்* |

இவ் ஆறு மடலங்களைத் தானே மற்றை மற்றை மொழிகள் பெறக்கூடும்! பொருளிலக்கணம் என்பதொன்று கொள்ளா மொழிகள், எப்படித் தமிழைப் போல் பொருள் இலக்கண மடலங்களைப் பெற வாய்க்கும்?

**பொருளி**லக்கண மடலங்கள், எழுத்து, சொல் மடலங் களைப் போன்ற எண்ணிக்கையினவோ?

| | | |
|---|---|---|
| அகப்பொருள் | - | நான்கு மடலங்கள். |
| புறப்பொருள் | - | ஒரு மடலம் |
| யாப்பு | - | இரண்டு மடலங்கள் |
| அணி | - | இரண்டு மடலங்கள் |
| மெய்ப்பாடு முதலன | - | ஒரு மடலம் |
| பாட்டியல் முதலன | - | ஒரு மடலம் |

ஆகப் **பதினொரு மடலங்கள்**. மொத்தமாகக் கூடுதல் **17 மடலங்கள்.**

மொழி ஆர்வலர்க்குப் '**பெருமிதம்**' உண்டாகுமா? உண்டாகாதா?

இப்பெருமிதத்தூடேயே ஓர் '**ஏக்கம்**':

அரிய ஆய்வுக் குறிப்புகள் வழங்கித் தெளிவுறுத்த வல்ல ஆசிரியர், அவற்றை **அரிதாக** மேற்கொண்டதை அன்றிப் **பெரிதாக** அல்லது **முற்றாக** மேற்கொண்டிலரே என்பதே அவ்வேக்கம்.

எ-டு:

'அகர முதல் னகர இறுவாய்' என்பன இளம்பூரணருக்கு அன்மொழித் தொகை; நச்சினார்க்கினியருக்கு எழுவாய்த் தொடர்கள் - என்று காட்டும் தொகையாசிரியர்,

"அகரத்தை முதலாகவும் னகரத்தை இறுதியாகவும் உடைய என்று பொருள் செய்யின் அகரமுதல் - னகர இறுவாய் என்பன இரண்டாம் வேற்றுமைத் தொகை" என்று தம் தெளிவை இயைக்கிறார் (எழுத்து 1:22)

நன்னூலார் அளபெடையைச் சார்பெழுத்தாக எண்ணினார். ஆசிரியர் தொல்காப்பியனார் அளபெடையை உயிரெழுத்துள் அடக்கிக் கொண்டார் என்பதைச் **சிவஞான முனிவர்** சூத்திர விருத்தி கொண்டு தெளிவிக்கிறார் தொகையாசிரியர். (எழுத்து 1:44)

"மகரக் குறுக்கம் மேலால் பெறும் புள்ளியொடு உள்ளும் புள்ளி பெறும் என்ற உரையாசிரியர் கருத்து மிகத் தெள்ளிது. 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' (தொ.எ. 14) என்ற நூற்பாவிற்கு உண்மையுரை காண உதவுகிறது" என்று தெளிவிக்கிறார் தொகை யாசிரியர். (எழுத்து 2: 263)

‘**வேண்டா கூறி வேண்டியது முடித்தல்**’, என்னும் தலைப்பில், “தேவையற்றது போன்ற ஒரு செய்தியைக் கூறி அதனால், நூற்பாக்களில் கூறப்படாத மற்றோர் இன்றியமையாத செய்தியைப் பெறப்பட வைத்தல்” என்று விளக்கும் தொகையாசிரியர், நுண் மாண் நுழைபுலம் கற்பவர் தெளிவுக்கு நல்வழி காட்டுகின்றது. (எழுத்து 2:265)

ஆனால், இத்தகையவை பெரிதும் இடம் பெறாமல் ‘**தொகை யளவொடு**’ நின்று விடுகின்றது என்பதே அவ்வேக்கம். தொகை யாவது, தொகுப்பு.

‘குற்றியலுகரம் **ஒற்று ஈறே**’ என்பதோர் ஆய்வு என்றால்,

‘குற்றியலுகரம் **உயிர் ஈறே**’ என்பதோர் ஆய்வு ஆதல் காட்டப்படவேண்டும் அல்லவோ! எது செவ்விது என்பதைத் தெளிவித்தல் இன்றேனும், தெளிவிக்கக் கருவிதந்தது ஆகும் அன்றோ! இவ்வாறு, பின்னாய்வாளர் எண்ணற்றோர் ஆய்வுகள் கொள்ளப்படாமை மட்டுமன்று; **தள்ளப்படுதல் மிகத் தெளி வாகின்றது**.

தொகையாசிரியரால் சுட்டப்படும் **அரசஞ்சண்முகனார்** (பாட்டியல் 15) ஆய்வு எத்தகையது எனின், ‘நடுநிலை பிறழாமல் ஆராய்ந்து எழுதுவதில் வல்லுநர்’ எனத் தொகையாசிரியராலேயே பாராட்டப்படும் தகையதாம். அச்சண்முகனார், ‘**பிரமாணம் ஆகாத நூல்கள்**’ என்பதையும் பதிவு செய்கிறார் தொகையாசிரியர். அது,

“**சின்னூல்**(நேமிநாதம்), **நன்னூல், வீரசோழியம், இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கண விளக்கம்** முதலாகப் பல, தொல்காப்பியத்தின் வழிப்படச் செய்யப்படினும் ஆசிரியனது கருத்துணராமல் **மரபு நிலை திரியச் செய்யப்பட்டமையான் பிரமாணமாகாத நூல்கள் ஆம்.** (பிரமாணம் நூல்நெறிக்குச் சான்றாக - எடுத்துக் காட்டாகத் திகழும் வாய்மையாகிய தகுதி; நியாய அளவைகளால் உறுதிப்பாடு) இவ்வாறு குறிப்பர் அரசஞ்சண்முகனார் (பா.வி. பக். 104-105)” என்கிறார் (பாட். 142) என்பது.

தொகையாசிரியர், இச் சான்றைப் பொன்னே போலப் போற்றியிருப்பின், அதன் பெருஞ்சிறப்பு எப்படி இருந்திருக்கும்? தன் பெயருக்கு ஏற்பத் ‘**தமிழ் இலக்கணப் பேரகராதி’ என்பதற்குத் தானே தன்னிகரிலாத் தலைமை கொண்டிருக்கும்!**

இப்பிரமாணமாகா நூல்களைத் தள்ளியிருப்பின் இப்பாரிய நிலை இருக்குமோ எனின், அவ்வெண்ணம் பிழைபட்ட எண்ண மாம்!

‘**தொடர்நிலைச் செய்யுள்வகைப் பெயர்**’ என்னும் தலைப்பில் கூறப்படும் அளவுகோல் தானா இன்றும் உள்ளது? சதுரகராதியும்

*பிரபந்த மரபியலும் கூறுவன 96 மட்டுமே. மற்றை நூல்களால் அறிவன அதற்கும் உட்பட்டனவே. ஆனால், சிற்றிலக்கிய விரிவாக்கப் பரப்பு எத்தனை? 381 வகையென்பதை எம்,* ***'இலக்கிய வகைமை அகராதி'****யில் காணலாம். அவற்றின் மேலும் இதுகால் விரிந் துள்ளன.* ***பொருளதிகார ஆய்வோ,*** *வெள்ளப் பெருக்காகி உள்ளது.* ***கால்டுவெலார், ஞானப் பிரகாச அடிகளார், பாவாணர்*** *அன்னவர்கள் ஆய்வு தமிழிலக்கண ஆய்வுகள் அல்ல எனத் தள்ளப் பட்டு விடாவே! அவற்றை நோக்கினால்,* ***வேண்டாச் சேர்ப்புகளை விலக்கி, வேண்டும் சேர்ப்புகளை இணைத்துக் கொண்டால் இன்னும் பதின் மடலங்கள் மிகும் என்பதை, நினைவின் ஏந்தல் - சோர்வறியாச் சுடர் - கோபாலனார் கொள்வாரே எனின்,*** *இத்தமிழ் இலக்கணப்பேரகராதி* ***ஒத்ததோர் அகராதி இன்றாம்*** *என மலைமேல் ஏறி முழக்கமிடலாம் அல்லவோ!*

*இத்தொகையாசிரியப் பெருமகனாரை அல்லார் ஒருவர், இப்பெருங் கடப்பாட்டை மேற்கொண்டு இத்தகு பணி செய்தல் அரிது! அவர்தம்* ***முழுதுறு ஒப்படைப்பின் பேறு*** *அது. அன்றியும், தம்மைப் போலவே தம்* ***உடன்பிறப்பு****களையும் அழுந்திப் பயிலவும் ஆர்வக் கடனாற்றவும் பயிற்றி இருக்கும்* ***பயிற்றுதற்பேறு****; தமிழ் வாழ்வாகிய அவரைத் தாங்குதலே தம் பிறவிப் பேறு எனக்கொண்டு நயத்தகு* ***துணையாயும் குடும்பமாகியும்*** *நிற்பார்* ***கெழுதகைப் பேறு;*** *இன்னவெல்லாம், இத் தமிழ்ப் பெருங்கொடைக்கு ஊற்றுக் கண்கள் அன்னவாம்.*

*இங்குச் சுட்டப்பட்டவை, தமிழ்க் காதலால், தமிழர் பண் பாட்டுக் காதலால் சுட்டப்பட்டவை என்பதைக் கற்பார் உணரின், இத்தொகுதிகளைத் தத்தம்* ***குடிமை வைப்பாகக்*** *கொள்ளக் கடமைப்பட்டவராம். ஆய்வுக்கு இப்படியொரு கருவி எளிதில் வாய்க்குமா? ஆய்வுக்கு எல்லை உண்டா? 'அறிதோ றறியாமை' காணும் ஆய்வுக்கு, "மனிதர்காள் இங்கேவம்; கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ" என்று* ***அப்பரடிகள்*** *தமிழ்க்கோயில் வாயில் முன் நின்று அழைத்து வழிகாட்டுவது போல, அயராத் தொண் டர்கள்* ***தி.வே. கோபாலனாரும்****,* ***கோ. இளவழகனாரும்*** *இத் தொகையைக் கைகோத்து நின்று கனிவொடு வழங்குகின்றனர்! நாம் பேறெனப் பெற்றுப் பயன் கொள்வோமாக!*

*தமிழ்த்தொண்டன்,*

**இரா. இளங்குமரன்**

## 'குறுந்தட்டாக' விளங்குபவர்

## பண்டிதவித்துவான் தி.வே. கோபாலையர்

புதுவைக்கு வருகின்றவர்கள் இங்கே இரண்டு கடல்களைப் பார்க்கலாம். ஒன்று உவர்க்கடல்; மற்றொன்று **தி.வே. கோபாலையர்** என்னும் நூற்கடல். 'தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்துப் பொன்கொழித்து, மணிவரன்றி, மாணிக்கத்தொடு வயிரம் உந்தி வந்து, சல சலவென இழிதரும் அணிகிளர் அருவி' போன்ற இவரது பொழிவினை ஒரு முறை கேட்கும் எவரும் வியந்து, இவர் ஒரு நூற்கடல்தாம்' என்பதை எளிதினில் ஏற்றுக்கொள்வர்.

'அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும் தோற்றமும்' கொண்ட மலையனைய மாண்பின் அறிவினராகிய **தி.வே. கோபாலையர்** கற்றோர்தமக்கு வரம்பாகிய தகைமையர். தண்டமிழின் மேலாந்தரமான இலக்கிய இலக்கணங்களையும், அவற்றுக்குப் பண்டையோர் உரைத்த தண்டமிழ் உரைகளையும் இளமையிலேயே பதிவு செய்துகொண்ட **குறுந்தட்டாக விளங்குபவர்** இப் பெருந்தகை. எக்காரணத்தாலாவது இந்நூல்களில் ஒன்றை இழக்க நேரின் கவலைப்பட வேண்டியதில்லை; இவர்தம் உள்ளப் பதிவிலிருந்து அதனை மீண்டும் உருவாக்கிக் கொள்ளலாம்.

உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினியராக வாழ்ந்து வரும் இவரை, 22-01-1925இல் ஈன்று தமிழுலகுக்கு ஈத்த நன்றிக் குரியோர் வேங்கடராம ஐயரும், இலக்குமியம்மாளுமாவர்.

1945இல் வித்துவான் தேர்வும், 1953இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதத் தேர்வும், 1958இல் சிறப்புநிலைக் கீழ்க்கலை இளைஞர் (B.O.L. Hons.) தேர்வும் எழுதி, இவை யாவற்றிலும் முதலிடங்களைப் பெற்று, அவற்றிற்குரிய முதற் பரிசுகளையும் பொற்பதக்கங்களையும் எஞ்சாமல் எய்தியவர் இவர்.

மதிநுட்பம் நூலோடு உடைய இவர்க்குத் தமிழகத்தின் பலவிடங்களில் சான்றோர்களால் மதித்தளிக்கப்பெற்ற சிறப்புப் பட்டங்கள்: 'நூற்கடல்' 'சிந்தாமணிக் களஞ்சியம்' 'கலைமாமணி' 'அறிஞர் திலகம்' 'செந்தமிழ்க் கலாநிதி' 'நவீன நச்சினார்க்கினியர்' 'தொல்காப்பியச் செம்மல்' முதலியன.

"திருவையாற்றுப் புலவர் கல்லூரியில், தி.வே. கோபாலைய ரிடம் தமிழ் பயின்ற மாணாக்கன் நான்!" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் இற்றைப் புலவர் பலர்.

'குட்டித் தொல்காப்பியம்' எனப்படும் இலக்கண விளக்கம் நூலுக்கு இவர் எழுதியுள்ள விரிவான விளக்கக் குறிப்புரையைத் 'தமிழிலக்கண நூல்களின் ஒப்பியல் உரை' எனலாம். இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம் ஆகிய திட்ட நுட்பஞ் செறிந்த இலக்கண நூல்களில் உள்ள 'தெளியாத மறை நிலங்கள்' பலவற்றை அவற்றுக்கு இவர் எழுதிய விளக்கக் குறிப்புரை தெளிவிக்கும். ஒரு சான்று:

'பால்போலும் மொழி' சொல்லினுள் விரி; அணியினுள் தொகை, - இது சாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்துரை. (நூற்பா 6-3) 'பால்போலும் மொழி என்பதில் உவம உருபு விரிந்திருத்தலின் உவம விரி என்பது சொல்லதிகாரச் செய்தி. இனிய என்னும் பொதுத் தன்மை தொக்கிருத்தலின் 'பால்போலும் மொழி' என்பது தொகையுவமை என்பது அணியிலக்கணச் செய்தி - இது கோபாலையரின் விளக்கம். இந்நூல்கள் இத்தகைய குறிப்புரை யின்றேல் தெளியப்படாமலே நின்றிருக்கும். இத்தகைய அரிய உரைவிளக்கத்துடன் இந்நூல்களைப் பதிப்பித்தளிக்கும் பணியைத் தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம் இவரைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டது.

'செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகர்க்குப்' புகழ் சேர்த்த பாரதியார், பாவேந்தர் முதலிய புகழ்மணிகளின் வரிசையில் இன்று கோபாலையர் விண்ணுயர் தோற்றத்துடன் விளங்குகிறார். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், பரிமேலழகர், சிவஞான முனிவர், காரிரத்தினக் கவிராயர் முதலிய புலவர் மரபினோர் புகழை யெல்லாம் தம் புகழ் ஆக்கிக்கொண்ட இப்புலவர் பெருந்தகையைப் புதுவைப் புலவருலகம் போற்றி 'நூற்கடல்' என்ற சிறப்புப் பட்டமளித்துப் பொன்போற் பொதிந்து கொண்டது.

இருபத்தாறாண்டுகளுக்கு மேலாக இவர் புதுவைப் பிரஞ்சுக் கலை நிறுவனத்தில் (École Française) தமிழாய்வுப் பிரிவின் தலைமைப் பொறுப்பினை மேற்கொண்டு அரிய நூல்கள் பலவற்றை ஆய்வுச் செம்பதிப்புகளாக வெளியிட்டு வருகிறார்.

பாரதியாரின் தலைசிறந்த படைப்புகளுக்கு வாய்ப்பாக இருந்த புதுவைமண், கோபாலையரின் புகழை என்றும் நின்று நிலவச் செய்யும் உயர் பதிப்புகள் பல உருவாவதற்கும் வாய்த்த இடமாக இலங்குகிறது.

தேவாரப் பதிப்புகள், வீரசோழிய உரையின் விரிவான விளக்கம், திருமங்கைமன்னனின் அருளிச் செயல்களுக்குப் பெரிய வாச்சான்பிள்ளை மணிபவள நடையில் எழுதிய உரைக்குத் தெளிவான தமிழாக்கம், மாறனலங்காரப் பழையவுரை விளக்கம், மாறனகப் பொருள், திருப்பதிக்கோவை ஆகியவற்றுக்குப் புதிய உரை

விளக்கம் இவை புதுவையில் பூத்த புலமை மலர் களாகும்.

கடந்த பன்னீராண்டுகளாகப் புதுவையிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் '**தெளிதமிழ்**' என்னும் தமிழ் வளர்ச்சித் திங்க ளிதழில், இவர்தம் படைப்பினை ஏந்தி வாராத இதழே இல்லை. அதில் 'இலை மறை கனிகள்' என்னும் தலைப்பில், தமிழிலக்கண இலக்கிய நூல்களிலும் உரைகளிலும் இலை மறை கனிகளாக மறைந்திருக்கும் அரிய செய்திகளைத் திரட்டிக் கட்டுரைகளாகத் தந்து வருகிறார். ஒரு சான்று:

தமிழில் அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயராய் அது, அஃது என்ற இரு வேறு சொற்கள் உள்ளன. அது என்பது அஃது என்பதன் திரிபு அன்று. 'அது' என்பதன் பன்மை 'அவை'; 'அஃது' என்பதன் பன்மை 'அவ்' - என்று விளக்குகிறது 18-10-1994 தெளிதமிழ் இதழில் வெளியான இவர்தம் கட்டுரை.

தமிழ்கூறு நல்லுலகெங்கும் பெரும்புலவர்கள் பலர், இக் கட்டுரைத் தொடரை ஆர்வத்துடன் ஊன்றிப் படித்து உவந்து வருகின்றனர்.

அலான் தனியேலு (Aland Danielou) என்னும் மேனாட்டறிஞரின் மணிமேகலை ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிக்குத் துணை செய்ததும், சேனாவரையத்தின் பிரஞ்சு மொழியாக்கத்திற்குத் துணை நின்றதும் இவர்தம் ஆங்கில அறிவுக்குச் சான்று பகரும்.

'தொல்காப்பியப் பழைய உரைகளின் செம்பதிப்பு', 'கல் வெட்டுக்களில் நாயன்மார்கள் பற்றிய அருஞ் செய்திகள்' ஆகியன இனி வெளிவர இருக்கும் இவர்தம் நூல்களில் குறிப்பிடத்தக்கவை.

இவர்தம் பணிகளில் மிகமிகப் பயன் விளைக்கும் அரிய பெரிய பணி இந்த '**தமிழ் இலக்கணப் பேரகராதி**'. தமிழிலக் கணம் கற்போருக்கும், இலக்கண ஆய்வாளர்களுக்கும் **கை விளக்காகப்** பயன்படக்கூடிய இவ் வகரவரிசை இருபத்தைந்து ஆண்டுக் கால பேருழைப்பால் எழுதி முடிக்கப்பெற்றது. எப்போது வெளிவருமோ என்று தமிழறிஞர் உலகம் எதிர்பார்த்திருந்தது.

மற்றவர் அரியதென்று கருதும் நல்ல பதிப்புப் பணிகளை எளியதென்று ஏற்று, மடிதற்றுத் தாமே முன்வந்து செய்யும் **தமிழ்மண் பதிப்பக** உரிமையாளர், 'தமிழ்மொழிக் காவலர்' கோ. இளவழகன் இதனை அழகுறப் பதிப்பித்து வழங்குகிறார். இவ்வரிய செயலால், இன்பத்தமிழ் இருக்குமளவும் இளவழகன் புகழும் இருக்கும் என்பது உறுதி.

அன்பன்,
**இரா. திருமுருகன்.**

## 'ஈரத்தமிழில் ஆழங்கால் பட்டவர்'
## பண்டித வித்துவான் தி.வே. கோபாலையர்

உலகப் பொதுமறையை அருளிய திருவள்ளுவப் பெருந்தகையார் பெரியார் யார் என்பதற்கு ஓர் இலக்கணம் வகுக்கின்றார். மனிதமேம்பாட்டுக்குரியதான, செய்வதற்கு அரியதான செயலை யார் புரிகின்றார்களோ அவர்களே பெரியவர் என்கின்றார்.

காலங்கள்தோறும் பல்வேறு துறைகளில் மனிதமேம்பாட்டுக்காகப் பலர் செயற்கரிய செயல்களைச் செய்துள்ளார்கள். அந்த வரிசையில் தமிழ் இலக்கணப் பேரகராதி என்னும் இந்நூலை தி.வே.கோபாலையரும், இந்த நூலை வெளியிட்ட தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் இளவழகனாரும் அடங்குவர்.

தமிழ்மண் இளவழகனார் தமிழுக்கும், தமிழருக்கும் தொண்டு புரியும் அரிய பெரிய நூல்களை இன்பம் விழையான் வினை விழைவான் தன்கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூணாக நின்று வெளியிடுபவர்.

கருணாமிருதசாகரம், பாவாணர் அருளிய நூல்கள், தொல்காப்பிய உரைக்கொத்து முதலிய அரிய நூல்களை வெளியிட்டவர். அந்த வரிசையில் தமிழ் இலக்கணப் பேரகராதி என்னும் இந்த நூலினையும் துணிச்சலொடு தமிழ்கூறு நல் உலகிற்கும் தமிழ் பரவிய பல நல்உலகிற்கும் அதியமான் நெடுமான் அஞ்சி ஔவைக்கு நெல்லிக்கனியை ஈந்தது போல் ஈந்துள்ளார்.

தமிழ் இலக்கணப் பேரகராதியை அளித்த கோபாலையரோ தமிழ்க்கடல், கல்விக்கடல், நூற்கடல், செந்தமிழ்க் கலாநிதி, கலைமாமணி, அறிஞர் திலகம், தொல்காப்பியச் செம்மல், இலக்கண மாமணி, சைவ நன்மணி, சாத்திய வல்லப, வைணவப் பேரொளி இன்னும் இவை போன்ற பல்வேறு பட்டங்களைப் பிறர் உவந்து கொடுக்கத் தற்பெருமை ஏதுமின்றிப் பெற்று எளிமையாக வாழ்ந்து வருபவர்.

திருப்பெரும்புதூர் வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள் இராமானுசரின் ஆயிரமாவது ஆண்டுத் தொடக்கவிழாவின்போது வாழும் நஞ்சீயர் என்று இவரைப் போற்றினார். அப்படி வாழும் நஞ்சீயரைப் போல வாழ்ந்து வருபவர் இவர்.

திருவையாற்றில் திருமிகு. வேங்கடராமையர், லட்சுமி அம்மையார் இணையருக்குத் திருமகனாக 22.1.1925 அன்று

திருப்பிறப்புற்ற - 26.3.1948 அன்று ருக்மணி அம்மையாரைத் திருமணம் புரிந்து கொண்ட இப்பெருந்தகையார் தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் வல்லவர்.

தமிழின் பல்வேறு சமய இலக்கியங்களில் ஈடுபாடு மிக்க பெரும் புலமையாளர்.ஆழ்வார்களின் ஈரத்தமிழில் ஆழங்கால் பட்டவர். அருளிச் செயல்களுள் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை உயிராய்ப் போற்றி இராமபிரானையே பரம்பொருளாகக் கொண்டு வாழ்ந்து வருபவர்.அறிஞர் புருடோத்தம நாயுடுவின் மாணவர். பேரறிஞர் வெங்கடராஜூலு ரெட்டியாரிடம் பல ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றவர்.

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் ஒருசமயம் இல்லாமற் போய் விட்டாலும் கோபாலையர் ஒருவர் இருந்தாலே போதும், அவற்றை மீட்டுக் கொண்டுவந்துவிடலாம். அந்த அளவிற்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தம் நினைவில் வைத்திருப்பவர்.

கம்பராமாயணம் என்றால் எந்த எந்தப் பதிப்பில் எந்த எந்தப் பாடபேதங்கள் உள்ளன என்று எழுத்தெண்ணிக் கூறுபவர். சங்க இலக்கியங்கள் முதலாகத் தற்கால இலக்கியங்கள் வரை எல்லாம் இவரின் நினைவுக் கட்டுப்பாட்டுள் செறிந்து கிடக்கும்.

சிந்தாமணி, இராமாயணம் தொடர்பான நூல்களை இயற்றி யவர். இலக்கணவிளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, வீரசோழியம், மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம் போன்ற நூல்களைப் பதிப்பித்தவர்.

தற்போது 17 தொகுதிகளில் இலக்கணப் பேரகராதி என்னும் இந்நூலைத் தந்துள்ளார். திருமங்கையாழ்வாரின் பெரிய திரு மொழிக்கான பழைய உரைகளின் தமிழாக்க நூல்களும் விரைவில் வெளிவர இருக்கின்றன.

இவர் திண்டிவனத்தில் அடியேனால் நிகழ்த்தப்பட்ட நல்லியக் கோடன் விழாவில் நாலாயிரம் ஒரு நவரசக் களஞ்சியம் என்னும் பொருள் பற்றிப் பேசும்போது ஒன்பான் சுவைகளையும் அவற்றின் உட்பிரிவுகளையும் உட்பிரிவுகளுக்கு இலக்கண உரையாசிரியர்கள் எந்த எந்த விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள் என்பதையும் கூறி, ஆழ்வார்களின் அருளிச்செயல்களில்இருந்து எடுத்துக்காட்டு களைத் தந்து எல்லோரும் புரிந்துகொள்ளும்படியாக உரையாற்றி யதைக் கேட்டவர்கள் இன்றும் மறக்க மாட்டார்கள். அத்தகைய இலக்கணப் புலமையாளர்.

ஒருமுறை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொல்காப்பியர் கூறும் சந்தி இலக்கணங்களைப் பற்றி உரையாற்றும்போதில் சந்தி இலக்கண விதிகளுக்கு எல்லாம் தொல்காப்பியர் அருளிய சூத்திரங் களையே எடுத்துக்காட்டாகக் கூறிப் புலமையுடையோர் அனை வரையும் வியக்கவைத்தவர். இவர்க்கு இத்தகைய பெரியார் இந்த நூலைத் தொகுத்தளித்திருப்பது ஓர் அரிய செயலே இல்லை. இவர்க்கு

உற்றதுணையாய் உதவுபவர் இவருடைய இளவல் அறிஞர் கங்காதரன் ஆவார்.

ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்தது போல் இவர் இந்த நூலைத் தமிழ்உலகிற்குக் கொணர்ந்து தந்துள்ளார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்கள் காலந்தோறும் எப்படி மொழியாலும் கருத்தாலும் வளர்ந்துள்ளன என்பதை இந்நூலின் மூலம் அறிய முடிகிறது.

ஒரு தேன்கூட்டில் பல மலர்களின் தேன்கள் கலந்திருப்பது போல் இந்தப் பேரகராதியில் பல தமிழ்இலக்கண நூல்ஆசிரியர்களின் வரையறைகளும் பல உரையாசிரியர்களின் உரை வளங்களும் கலந்துள்ளன.

அறிஞர் திலகம் கோபாலையர் எப்படி எளிமையானவ ராகவும், ஆழமான புலமை உடையவராகவும், பழக இனியவராகவும் இருக்கிறாரோ, அப்படியே ‘நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு’ என்னும் திருக்குறளின் கருத்துக்கேற்ப இந்நூலும் நம்மிடம் பழகுகின்றது.

இந்த நூல் பேரகராதியாக உள்ளதால் இலக்கணம் கண்டு அஞ்சும் மாணவர்களும் தமிழ் ஆர்வலர்களும் பொதுமக்களும் அகராதிப் பொருளை அறிவது போல் எளிதாகத் தமிழ் இலக்கணத்தை அறிந்து கொள்ள முடியுமாறு உள்ளது.

இந்நூல் தொல்காப்பியர் காலத்திலிருந்து இந்த நாள்வரை உள்ள தமிழ் உலகிற்குக் கிடைத்த புதுமையான முதன்மையான முழுமையான நூலாகும்.

ஒரு பல்கலைக்கழகம் சாதிக்க வேண்டிய பணியைப் பிரெஞ்சு ஆராய்ச்சிப் பள்ளி சாதித்துள்ளது. பலர் முயன்று செய்ய வேண்டிய பணியை தி.வே.கோபாலையரே செய்து முடித்துள்ளார். ஒரு பல்கலைகழகமோ ஒரு பெரிய ஆய்வு நிறுவனமோ செய்ய வேண்டிய பணியைத் தமிழ்மண் பதிப்பகம் ஆர்வத்தால் எளிதாகச் செய்துள்ளது. தமிழர்களின் தவப்பயனே இப்படியாய்த் தமிழ் மண்ணில் முகிழ்த்துள்ளது.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் தமிழ் வழங்கும் அனைத்து இடங்களிலும் திருக்குறளுக்கு அடுத்தபடியாக நூலகங்களில் இடம்பெற வேண்டிய தமிழ்நூல் இந்நூல் என்பதில் ஐயம் இல்லை.

இந்த நூலை வெளியிட்ட தமிழ்மண் பதிப்பக இளவழக னார்க்கு நமது வெற்றி வாழ்த்துக்கள். இந்த நூலை அளித்தருளிய அறிஞர்திலகம் நம்முடைய இலக்கண மாமணி கோபாலையருக்குத் தலையல்லால் கைம்மாறில்லை என்னும் படியான தமிழ் வணக்கங்கள். வாழ்க தமிழ். வளர்க தமிழ்ப்பண்பாடு. வெல்க மனிதநேயம்.

அடியேன்.

முனைவர் ‘வைணவம்’ **பார்த்தசாரதி**

**‘மாந்தக் கணினி’**

## பண்டிதவித்துவான் தி.வே. கோபாலையர்

நாம் சங்கப் புலவர்களைப் பார்த்திலோம்! இடைக் காலப் புலவர்களையும் உரை வல்லுநர்களையும் பார்த்திலோம்! ஆனால் அவர்களை யெல்லாம் நம் காலத்தில் பார்த்திட விரும்புவோமாயின் அவர்களின் உருவாக வாழ்ந்துகொண்டிருக்கும் நூற்கடல் தி. வே. கோபாலையர் அவர்களைக் காணலே சாலும்.

சாதி, மத, வயது வேறுபாடின்றித் தம்மை அணுகும் யாரே யாயினும் அயர்வுறாது மாற்றம் கொள்ளாது அவர்தம் ஐயங்கட்குத் தெளிவேற்படுத்தலும் வினாக்கட்கு விடையளித்தலுமான சீரிய தமிழ்ப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகிறார்.

எந்த நூலில், எந்தப் பக்கத்தில், எந்தப் பாகியில், எந்த வரியில் உள்ளது எனத் தெளிந்த உணர்வுடன் எந்தச் சொல்லையும் கருத்தையும் சுட்டிக் காட்டும் வியக்கத்தக்க **மாந்தக் கணினியாக** விளங்குகிறார்.

சங்கப் புலவரும் இடைக் காலப் புலவரும் உரை வல்லுநரும் கையாண்ட மொழி முதலெழுத்து, மொழியிறுதி எழுத்து, புணர்ச்சி நெறிகள், பிற மொழிச் சொற்களையும் எழுத்துக்களையும் நீக்கல் ஆகிய தமிழ் இலக்கண மரபுகளைப் பொன்னே போல் போற்றிப் பயன்படுத்தி வரும் பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

அப்பெருமகனார் வாழுங்காலத்தில் வாழ்தலும், அவரிடத்து உரையாடி மகிழ்தலும், ஏற்படும் ஐயங்கட்கு அவரின் சொல்லரிய விளக்கங்களைக் கேட்டுத் தெளிதலுமாகிய அரிய பேற்றினை நான் எனது வாழ்நாளில் பெற்றுள்ளேன்.

அவரின் பரந்த இலக்கிய நூலறிவும் தெளிந்த இலக்கண அறிவும் தமிழர்க்கும் உலகுக்கும் மேலும் பயன்படுதல் வேண்டும்.

அவர் மேற்கொண்டுள்ள எளிய வாழ்வு, சம நோக்கு, இனிய பேச்சு, எல்லார்க்கும் பயன்படல் வேண்டும் என்னும் பெரும்பண்பு ஆகியவை கற்றாரை ஈர்க்கும் தன்மையன.

நூற்கடலார் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிடல் வேண்டும் என எனது உள்ளம் நிறைந்த விழைவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

**இறைவிழியன்**

# பதிப்புரை

தமிழர் வாழ்வியல் இலக்கணத்தை வரையறுத்துக் கூறும் ஒல்காப்புகழ் தொல்காப்பியத்திற்குப் பழந்தமிழ்ச் சான்றோர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அனைத்து உரைகளையும் தொகுத்து தொல்காப்பிய நூல் பதிப்பில் இதுவரை எவரும் கண்டிராத வகையில் ஒரேவீச்சில் எம் பதிப்பகம் வெளியிட்டதை தமிழுலகம் நன்கு அறியும்.

தொல்காப்பிய நூல்பதிப்புப் பணிக்கு அல்லும் பகலும் துணை யிருந்து உழைத்தவர் **பண்டிதவித்துவான் தி.வே.கோபாலையர்** ஆவார். இந்நூல் பதிப்புகளுக்கு இவரே பதிப்பாசிரியராக இருந்து எம் தமிழ்ப் பணிக்குப் பெருமை சேர்த்தவர். கூரறிவும், பெரும் புலமையும், நினைவாற்றலும் மிக்க இப்பெருந்தகை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தம் பேருழைப்பால் தொகுத்த தமிழ் இலக் கணத்திற்கான சொல் மூலங்களை **'தமிழ் இலக்கணப் பேரகராதி'** எனும் பெரும்படைப்பாக 17 தொகுதிகளை உள்ளடக்கி 'தமிழ் இலக்கண'க் கொடையாக தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளார்.

தமிழ் இலக்கண நூல் பதிப்பு வரலாற்றில் தமிழ் இலக்கணத் திற்கென ஒரே நேரத்தில் **எழுத்து, சொல், பொருள்** (அகம், புறம், அணி, யாப்பு, பாட்டியல், பாயிரம், மரபியல், மெய்ப்பாடு, நாடகம், அளவை நியாயம்) எனும் வரிசையில் பேரகராதி வெளிவருவது இதுவே முதல் முறையாகும்.

***அகராதி*** என்பது ஒரு சொல்லுக்கு விளக்கம் தருவது. **பேரகராதி** என்பது ஒரு சொல்லுக்கு விளக்கமும், மேற்கோளும் சுட்டுவது. **களஞ்சியம்** என்பது ஒரு சொல்லுக்குப் பல்பொருள் விளக்கம் காட்டுவது.

உங்கள் கைகளில் தவழும் இத் தமிழ் இலக்கணப் பேரகராதித் தொகுதிகள் தமிழுக்குக் கருவூலமாய் அமைவதாகும். தமிழிலக்கணப் பெரும் பரப்பை விரிவு செய்யும் இப் பெட்டகத்தை வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம். தமிழ் ஆய்வை மேற்கொள்வார்க்கு வைரச் சுரங்கமாகவும், தமிழ் ஆர்வலர்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக் காகவும் இந்நூல் தொகுதிகள் வருகிறது.

தொன்மையும், முன்மையும், தாய்மையும், தூய்மையும், மென்மையும், மேன்மையும், பழமையும், புதுமையும், இளமையும்,

முதுமையும் மிக்கமொழி நம் தமிழ்மொழி. திரவிடமொழிகளுக்குத் தாய்மொழி நம் தமிழ்மொழி. இந்தியப் பெருமொழிகளுக்கு மூலமொழி நம் தமிழ்மொழி. உலக மொழிகளுக்கு மூத்த மொழி நம் தமிழ்மொழி. இந்தியப் பேரரசால் **செம்மொழி** என அறிவிக்கப் பட்டுள்ள இந் நேரத்தில், '**தமிழ் இலக்கணப் பேரகராதி**'யை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழ் இலக்கணச் சுரங்கத்தைத் தந்துள்ள பண்டித வித்துவான் தி.வே. கோபாலையருடன் உடனிருந்து உழைத்தவர் அவர் இளவல் தி.வே. கங்காதரன் ஆவார். இப் பொற்குவியல் பொலிவோடு வெளி வருவதற்கு தம் முழுப் பொழுதையும் செலவிட்டவர் இவர். இரவென்றும், பகலென்றும் பாராது உழைத்த இப் பெருமக்க ளுக்கும், பேரகராதியின் அருமை பெருமைகளை மதிப்பீடு அளித்து பெருமை சேர்த்த புதுச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத் துக்கும், தமிழ்ச் சான்றோர்க்கும் எம் நன்றி.

**பதிப்பாளர்**

## நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்


| | | |
|---|---|---|
| நூல் வடிவமைப்பு | : | செ. சரவணன் |
| மேலட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சுக்கோர்ப்பு | : | கீர்த்தி கிராபிக்ஸ் பட்டு,<br>கீதா, சங்கீதா, பிரியா,<br>பத்மநாபன், சே. குப்புசாமி,<br>மு. கலையரசன் |
| மெய்ப்பு | : | தி.வே. கோபாலையர்<br>தி.வே. கங்காதரனார் |

---

| | | |
|---|---|---|
| உதவி | : | அ. மதிவாணன்<br>கி. குணத்தொகையன்<br>அரங்க. குமரேசன்<br>வே. தனசேகரன்<br>நா. வெங்கடேசன்<br>மு.ந. இராமசுப்ரமணிய இராசா<br>இல. தர்மராசு |

---

*அச்சு*

| | | |
|---|---|---|
| எதிர்மம் (Negative) | : | பிராஸஸ் இந்தியா, சென்னை |
| அச்சு மற்றும் கட்டமைப்பு | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை |

---

இவர்களுக்கு எம் நன்றி . . .

# ωπύч 2

**தனிக்குறில் நேரசையாகும் இடங்கள்--**

*தனக்குறிலானது தற்சுட்டு, ஏவல், குறிப்பு, சுட்டு, வினா என்ற ஐந்தும் தவிர ஏனைய இடங்களில் நேரசையாக வாராது.*

எ-டு : *'அ.ஆ, இழந்தானென் றெண்ணப் படும்'* (நாலடி. 9)

*அ ஆ - அந்தோ என்னும் பொருளது. ஈண்டுக் குறிப்பின்கண் தனிக்குறில் மொழி முதற்கண் நின்று விட்டிசைத்து நேரசை யாயிற்று. ஆகவே, அ ஆ- நேர் நேர் என்க.*

எ-டு : *'நொஅலையல் நின்ஆட்டை நீ'*

*நொ என, ஏவற்கண் தனிக்குறில் மொழிமுதற்கண் விட்டிசைத்து நேரசையாயிற்று. நொஅலையல்- நேர் நிரைநேர் (நொ - நோவ - வருந்த; அலையல், நின் ஆட்டை- நினது ஆட்டினைத் துன்புறுத்தாதே.)*

எ-டு : *'அ உ அறியா அறிவில் இடைமகனே'*

*அஉ - எழுத்துக்களைச் சுட்டியமையின் தற்சுட்டாய் இரண்டு குற்றுயிர்களும் விட்டிசைத்து நேர்நேர் ஆயின.*

எ-டு : *'அ அவனும் இ இவனும் உ உவனும் கூடியக்கால்*
*எ எவனை வெல்லார் இகல்'*

***அ*** *அவன், இ இவன், உ உவன் - சுட்டு*

***எ*** *எவன் - வினா.*

*அ அவனும் முதலிய நான்கும், சுட்டு வினா இடைச்சொற் களாகிய குற்றுயிரெழுத்துக்கள் விட்டிசைத்தலின் நேர்நிரை நேர் ஆம்.*

இவை விட்டிசைப்பின்அல்லது மற்றொன்றனோடு இயைந்து இனியவாய் நடப்பின் முதற்கண் நேரசை ஆகா..

'யரல வழள இடையினமாம் ஏனை'

'து மருந்து தூயனவே கொண்டு'

*'யரல வழள' என்பன தற்சுட்டின்கண்ணும் விட்டிசையாமை யின் யரல - நிரைநேர்; வழள - நிரைநேர் என்க. துமருந்து - து ஏவல் ஆயின போதும் விட்டிசையாமையின் துமருந்து - நிரை நேர் நேர் என்க. (து - உண்)*

*'அஇ உஎஒ இவைகுறிய மற்றை*
*ஏழ்நெட் டெழுத்தா நேரப் படுமே'*

'உஎஒ' -விட்டிசைத்துத் தற்சுட்டின்கண் இடையிலும் இறுதியிலும் தனிக்குறில்கள் நேரசையாயின.(யா. க. 7 உரை)

**தனிக்குறில் விட்டிசைக்கும் இடங்கள் –**

தன்னைத்தானே சுட்டிக்கொள்ளுமிடம் - ஏவற்பொருள் - குறிப்புப்பொருள் - என்ற இம்மூவிடத்தும் தனிக்குறில் விட்டிசைத்து நேரசையாம். (தென். யாப். 14)

எ-டு :

'அஉ அறியா அறிவில் இடைமகனே' - தற்சுட்டு

'நொஅலையில் நின்ஆட்டை நீ' - 'நோவ' என்னும் வினையெச்சம் முதல் குறுகி 'நொ' என நின்று 'அலையல்' என்னும் ஏவல்பொருட்டாய வியங்கோளைக் கொண்டு முடிந்தது.

'அஆ, இழந்தானென்(று) எண்ணப் படும்' (நாலடி. 9) - அஆ - அவலத்தைக் காட்டும் குறிப்பின்கண் வந்த இடைச்சொல். (யா. கா. 39 உரை)

**தனிச்சீர் –**

நேரிசை வெண்பா கலிவெண்பா இவற்றில் இரண்டாம் அடியின் இறுதியில் எதுகை பெற்றுவரும் சீர். இன்னிசை வெண்பாவில் முதல் மூன்றடிகளும் ஒருவிகற்பமாய் ஓரடி எதுகை பெற்றுவர, மூன்றாம் அடியின் இறுதிச் சீரும் ஒத்த எதுகை பெற்றுத் தனிச்சீராக வருதலும் உண்டு; மூன்று விகற்ப இன்னிசை வெண்பாவில், இரண்டாமடியின் இறுதிச் சீர் தனிச்சீராதலுமாம். ஒரூஉ எதுகை பெற்று வருவது வேறு ; தனிச்சீர் வேறு எனப்படும். தனிச்சீர் முன்னருள்ள அடியின் முதற்சீரோடும் ஒத்த எதுகை பெறுவது; ஒரூஉ எதுகை அவ்வோரடிக்கண்ணேயே வருவது.

**தனிச்சொல் (1) –**

கலிப்பாவினுள் உறுப்பாக வரும் சொல்.

அகநிலை ஒத்தாழிசையின் தனிச்சொல், தாழிசைக்குப் பின்னும் சுரிதகத்திற்கு முன்னும் பெரும்பாலும் 'ஆங்கு' என்ற அசைச்சொல்லாக வரும்; 'எனவாங்கு' என்றாற் போன்ற தனிச்சொற்கள் பொருள் பெற்றும் வரும்.

ஆங்கு என்னும் அசைச்சொல் பயிலும் எனவே, அல்லாதன வாகிய எனவாங்கு, என இவன், எனநின், அதனால், எனநீ, எனநம், அவனை, என்றுநின் - என்றாற் போல்வன பொருள்

பெற வருதல் பெற்றாம். 'ஆங்கு' என்பது 'ஆங்க' எனவும் வரும். 'ஆங்கு' என்பது ஏழனுருபாய்ப் பொருள் உணர்த்திற் றேல், யாண்டும் பொருள் உணர்த்துதல் வேண்டும்; அங்ஙனம் நில்லாமையின் அசைநிலை ஆயிற்று.

(தொ. செய். 135 நச்.)

தனிச்சொல் தாழிசை முன்னரும் சிறுபான்மை வரும்.

(131 இள.)

தாழிசைதோறும் தனிச்சொல் வரவும் பெறும். (128 இள.)

எ-டு : கலி. 118, 120, 130, 148

**தனிச்சொல்(2) –**

இஃது அடிமுதற்கண் பொருள் பெற நிற்பது. இதனைக் கூன் எனவும் வழங்குவர். நான்கு பாவினும் அடிமுதற்கண் சீர் கூனாய் வரப்பெறும். எனினும், வஞ்சியடியின் முதற்கண் கூனாய் வருவதும், உகர ஈறாகிய நேரீற்றியற்சீர் கூனாய் வருவதும் சிறப்புடையன. வஞ்சியடியின் இடையும் இறுதியும் அசை கூனாய் வருவதன்றிச் சீர் கூனாய் வாராது. ஆண்டு உகர ஈறாகிய நேரீற்றியற்சீர் அருகிக் கூனாய் வரவும் பெறும். அச்சீர், அல்லாத பாவின் அடிமுதற்கண் அருகியல்லது கூனாய் வாராது. கொச்சகக்கலியுள் ஓரடி கூனாய் வருமா யினும் சிறப்பில்லை. வெண்பா ஆசிரியம் கலி இவற்றின் அடியில் இடையும் இறுதியும் கூன் வரப்பெறாது.

எ-டு : வஞ்சி: 'அடி, அதர்சேர்தலின் அகம்சிவந்தன'

'மா, எறிபதத்தான் இடம்காட்ட' (புறநா. 4)- முதற்கண் அசை கூன்ஆக வந்தது.

'வேந்து, வேல்வாங்கிப் பிடித்துருத்தலின்'
தெருவு, தேரோடத் தேய்ந்தகன்றன'

- உகர ஈற்று நேர்ஈற்று இயற்சீர் கூன்ஆக வந்தது.

'கலங்கழாலின் துறை கலக்குற்றன'- இடையில் அசை கூன்ஆக வந்தது.

'மாவழங்கலின் மயக்குற்றன வழி'- கடையில் அசை கூன்ஆக வந்தது.

ஆசிரியம்:

'வடாஅது, பனிபடு நெடுவரை வடக்கும் தெனாஅது'- அடிமுதற்கண் உகர ஈறாகிய நேரீற்றியற்சீர் கூன் ஆயிற்று.

வெண்பா:

*'உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவணமாப் பூதன்'- அடிமுதற்கண் சீர் கூனாக வந்தது.*

கலி:

*'உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்' அடிமுதற்கண் சீர் கூனாக வந்தது.*

*'சிறுகுடி யீரே சிறுகுடி யீரே' (சிலப் 24 : 11) கொச்சகக் கலியுள் ஓரடியே கூனாக வந்தது.* *(யா. க. 94)*

**தனிச்சொல் : பெயர்க்காரணம் –**

*ஒரு சொல்லாய்ப் பொருள் நிரம்பித் தனியே நிற்றலின் தனிச்சொல் என்பது காரணக் குறியாம்.* *(யா. க. 82)*

**தனிநிலை அளபெடை –**

*சீருக்கு முன்னும் பின்னும் வேறு எழுத்தின்றி ஒரோவோ ரெழுத்தே நின்று அளபெடுப்பது.*

*எ-டு : 'ஏஎ வழங்கும் சிலையாய் ! இரவரல்*
*மாஅ வழங்கும் வரை !'* *(யா. க. 41 உரை)*

**தனிப்பாதச் செய்யுள் –**

*செய்யுள் மூவகைப்படுவதன்கண் ஒன்று; ('அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என) ஓரடியால் நடக்கும் பாடல்.*
*(வீ. சோ. 181 உரை)*

**தனியசை –**

*ஓரசையாகத் தனித்து வருவது. அது வெண்பாவின் இறுதிக்கண் நாள், மலர் என்னும் வாய்பாட்டால் வருவதும், வஞ்சியடி முதல் நடு இறுதிக்கண் அசை கூனாக வருவதும் போலாம்.*

**தாஅ வண்ணம் –**

பொழிப்பும் ஒரூஉவுமாக எதுகை சீர்களில் இடையிட்டு வரத் தொடுப்பது

எ-டு : *'உலக முவப்ப வலனேர்பு திரிதரு'* முருகு.

'உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை' *(ஐங். மிகைப். 2)*
*(தொ. செய். 215 பேரா.)*

**தாண்டக அடி –**

இருபத்தாறுக்கு மேற்பட்ட எழுத்துக்களான் இயன்ற அடி
*(யா. வி. பக். 476)*

**தாப்பிசைப் பொருள்கோள் –**

*ஊஞ்சல்கயிறு நடுஇடத்தினின்று இருபுறமும் செல்வது போல, செய்யுள் நடுவிலுள்ள சொல்லே முன்னும் பின்னும் பொருள் கொள்ளச் சென்று அமையும் பொருள்கோள் இது.*

எ-டு : *'உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண*
*அண்ணாத்தல் செய்யா தளறு'* *(குறள் 255)*

*இதன்கண், ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை, ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு என, நடுநின்ற 'ஊன்' என்ற சொல்லே இருமருங்கும் சென்று இயைந்து பொருள் தந்தவாறு.* *(யா. க. 95 உரை)*

**தாய பனுவல் –**

*அறம் பொருள் இன்பம் மூன்றற்கும் இலக்கணம் கூறுவன போன்றும், இடையிடையே அன்றாயும் தாவிச் செல்வது. இலக்கணம் கூறலின், பனுவல்; இலக்கியமாதலின் 'தாய' என்றார். தாவுதல் - இடையிடுதல்.* *(தொ. செய். 235 நச்.)*

**தாவு வண்ணம் –**

*தாஅ வண்ணம்; தாவு வண்ணமாவது இடையிட்டு வந்த எதுகைத்தாவது. 'தாஅ வண்ணம்' காண்க.* *(வீ. சோ. 142)*

**தாழம்படுதல் –**

*ஓசை தாழ்ந்து வருதல்.* *(யா.க. 56 உரை)*

**தாழிசை –**

*ஒருபுடையான் தத்தம் பாவினங்களோடு ஒத்தலானும், அடிகள் ஒத்துத் தாழம்பட்டு இசைத்தலானும், ஒத்த பொருள்மேல் பெரும்பான்மையும் மூன்றாய்த் தாழ்ந்து இசைத்தலானும் தாழிசை என்பது காரணக்குறி*

*(யா. க. 56 உரை)*

**தாழிசை அளவு –**

*இதன் சிறுமை இரண்டடி; பெருமை நான்கடி, தரவளவிற்குச் சுருங்கியும், சிறுபான்மை சமமாயும் தாழிசை வரும்.*

*(யா. க. 82 உரை)*

**தாழிசை இன்றித் தரவு பெறுதல் –**

*தாழிசையின்றித் தரவு மாத்திரம் வருதல்.*

*தரவு ஓசை பெறுவது பொதுவாய் நின்ற கொச்சக ஒருபோகு என்னும் செய்யுள். அது தாழிசையொடு கூடிய தரவு இலக்கணத்தில் திரிந்து வரும். தரவினைத் தவிர ஏனைய உறுப்*

புக்கள் விலக்குண்டு தரவு தனித்துவரும். அது தொடர்நிலைச் செய்யுளாய் வரும் தேவபாணியும், தரவிணைக் கொச்சகமாய் வருவனவும் ஆம். தாழிசை முதலிய இன்றி வருதலின், தரவு 4, 6, 8 என்ற அடிகளை உடைத்தாய் வரல் வேண்டும் என்ற வரையறை யின்று.

தரவு தனித்து வருதலேயன்றித் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருதலும், பெரும்பான்மை தரவிணையாய் வருதலும் கொள்ளப்படும். அவை தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்ற தரவுகொச்சகம், தரவிணைக் கொச்சகம் எனக் கூறப்படும். இவை தாழம்பட்ட ஓசையின்றி வருதலின் தாழிசை எனப்படாமல் தரவு எனப்பட்டன.

எ-டு : *'பூணாக என்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
*யானார்வம் செய்யும் இறை;*

*'எனவாங்குப் பாடி இறைஞ்சுவோர்க் கெல்லாம்*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
*நினையா தொழியற்க நெஞ்சு"*

இது தரவிணைக் கொச்சகம்.

தொடர்நிலைச் செய்யுளின் முதற்கண் நின்ற தேவபாணி தன் பொருளொடு தான் முடியும் தனித் தரவுகொச்சகம்.

எ-டு : *'மூவா முதலா உலகம்மொரு மூன்றும் ஏத்தத்*
*தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி*
*ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வன் என்ப*
*தேவாதி தேவன் அவன்சேவடி சேர்தும் அன்றே'*சீவக. கடவுள்.)

இனி, தேவபாணி அல்லாது வரும் தரவுகொச்சகங்கள் யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய தரவுகொச் சகங்களாம். (தொ. செய். 149 நச்.)

**தாழிசைக்குறள் -**

இது குறட்டாழிசை எனவும்படும். இது குறள்வெண்பாவின் இனங்களுள் ஒன்று. இரண்டடிகளான் அமையும் இக் குறட்டாழிசை மூவகைப்படும்.

1. விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி வெண் செந்துறை போலச் சமமான ஈரடிகளான் அமைவது.

எ-டு : *'திடுதிம் எனநின் றுமுழா அதிரப்*
*படிதம் பயில்கூத் தருமார்த் தனரே!'*

2. இரண்டடியாய் அமைந்து ஈற்றடி சிலசீர்கள் குறைந்து வருவது.

எ-டு : *'நண்ணு வார்வினை நைய நாடொறும் நற்ற வர்க்கர சாய ஞானநற்*
*கண்ணினான் அடியே அடைவார்கள் கற்றவரே'*

இதன் முதலடி எண்சீர்த்து; இரண்டாமடி நாற்சீர்த்து.

3. தளை வழுவி வரும் குறள்வெண்பா.

எ-டு : *'வண்டார் இருங்கூந்தல் வரிவளைக்கை வாணுதலாள்*
*பண்டையள் அல்லள் படி!'*

முதலடி இரண்டாம் மூன்றாம் சீர்களிடை கலித்தளை தட்டு வந்தமையான், குறள் வெண்பா ஆகாது குறட்டாழிசை ஆயிற்று.

இவை இரண்டடியாய்த் தாழ்ந்து இசைத்தலானும், ஒழுகல் ஓசையினும் செப்பலோசையினும் வழுவித் தாழ்ந்த ஓசைய வாகலானும், விழுப்பமில்லாத பொருளைச் சொல்லுத லானும், தாழிசைக் குறள் எனவும் குறட்டாழிசை எனவும் பெயர் பெற்றன. குறட்டாழிசை ஏழுதளையானும் கூறுபடும். இவை சிறப்புடைய தளை, சிறப்பில்லாத தளை என்று பாகுபடுத்தப்படவே, தளை பற்றிக் குறட்டாழிசை 14 வகைப்படும். (யா. க. 64, 65 உரை)

**தாழிசை: பெயர்க்காரணம் –**

ஒத்த ஒரு பொருள் முடிவினால் ஒத்த தாழ்ச்சியால் இசைத்த லானும், தரவின் குறைந்து இசைத்தலானும் ஒத்தாழிசை எனவும் தாழிசை எனவும்படும். (யா. க. 82 உரை)

**திரிகோட்ட வேணி –**

இடையீடில்லாத நிலத்தினை 'ஒருபோகு' என்ப ஆதலின், அஃது ஒப்பினான் ஆகிய பெயர். 'ஒருபோகு' என்பதனைத் 'திரிகோட்டவேணி' என்பது போலக் கொள்க (பேரா. உரை). திரிந்த கொம்பு போன்ற வேணியை உடையவள் என்று, வேணி வேணியை யுடையவளைக் குறித்தாற்போல, போகிய தனையுடையதை உணர்த்துமாறு போகு என்பது வந்தது. (வேணி - கூந்தல்) (தொ. செய். 148 பேரா.)

**திரிபாதி –**

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்துவரும் பத்தியக்கவி. இதற்கு வீரசோழிய உரைகாரர் எடுத்துக்காட்டு உரைத்திலர்.

பின்வரும் ஆசிரியத் தாழிசை (யா. க. 75 உரை) எடுத்துக் காட்டாதல் தகும்.

எ-டு : *'வானுற நிமிர்ந்தனை; வையகம் அளந்தனை;*
*பான்மதி விடுத்தனை; பல்லுயிர் ஓம்பினை;*
*நீனிற வண்ண! நின் நிரைகழல் தொழுதனம்.'* (வீ. சோ. 127)

**திரிபாதிப் போலி –**

மூன்றடியாய்த் தம்முள் அளவு ஒத்து வாராத பத்தியக்கவி. (உரையுள் இச்செய்தி குறிக்கப்படாவிடினும், 'குறட்போலி' போன்றவற்றது உரை நோக்கி இவ்வாறு கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டும் மூன்றடியாய் ஈற்றடி இரண்டும் சீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை (யா. க. 67 உரை) காட்டப்படுகிறது. வீரசோழிய உரை இதற்கும் உதாரணம் காட்டிற்றிலது.

எ-டு : *'தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னாம்*
*ஆளியைக் கண்டஞ்சி ஆனைதன் கோடிரண்டும்*
*பீலிபோற் சாய்ந்துவிடும் பிளிற்றி யாங்கே.'* (வீ. சோ. 127)

**திலதக் கலித்துறை –**

கட்டளைக் கலித்துறை வகை இரண்டனுள் ஒன்று; ஏனையது கோவைக் கலித்துறையாம்.

நேரசை முன்வரின் பதினாறு எழுத்தாயும் நிரையசை முன்வரின் பதினேழு எழுத்தாயும் முடியும் அடிகள் நாலாய்ச் சீர் இருபதினால் வருவது திலதம் என்னும் பெயராலே வழங்கும்.

(அடிதோறும் முதற்சீர் நான்கும் வெண்டளை பிறழாது, இறுதிச் சீரொன்றும் விளங்காயாக வரப்பெறுதல் வேண்டும் என்னும் இலக்கணம் 'கட்டளைக் கலித்துறை' என்னும் தலைப்பிற் காண்க.)

கோவைக் கலித்துறை ஈற்றடிச் சீர்கள் வகையுளியாக அமைதலும், திலதக் கலித்துறை ஈற்றடிச் சீர்கள் வகையுளி இன்றி அமைதலும் தம்முள் வேறுபாடு என்னும் பழையவுரை.

*'நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே'* (தஞ்சை. கோ. 2)

*'தேர்முந்து பேரல்குல் மாதே அஃது திலதமன்றே'* (வீ. சோ. 128)

(அஃது : ஆய்தம் அலகு பெற்றது.)

இவையிரண்டும் முறையே கோவை திலதக் கலித்துறைகளின் ஈற்றடிகள்; முறையே வகையுளியுடைமை இன்மைகளைக் காண்க. (வீ. சோ. 128)

**திலதப் போலி** –

*திலதக் கலித்துறைக்கண், ஒரோவடியில் ஒன்றாதல் இரண் டாதல் எழுத்து மிக்கும் குறைந்தும் வருவது திலதப் போலி யாம்.*

எ-டு : *'எனவே தனமென் றிராசேந்திர சிங்கனொ டின்றணைந்த*
*கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழுமமைந்*
*தனவே யெனவவன் றானுதித் தன்றே தொடங்கியென்று*
*நனவே புணர்திரு வின்களிக் கேதுகொ னல்லனவே'.*

*இதனுள், முதலடிக்கண் ஒரெழுத்து மிக்கு வந்தவாறு. 'இராசேந்த்ர' என்னாது 'இராசேந்திர' என்றமையின் ஒரெழுத்து மிக்குக் கனிச்சீர் விரவியவாறு காண்க.* ['இரா சேந்த்ர' *எனக் கொள்ளின் விரவியலாய் (-வடவெழுத்து விரவியது) அது போலியாகாமையும் உணரப்படும்.*]

*(வீ. சோ. 128)*

**திலதம்** –

*திலதக் கலித்துறையே 'திலதம்' என வழங்கும். திலதம் ஆமாறு 'திலதக் கலித்துறை' என்னும் தலைப்பிற்காண்க.*

*(வீ. சோ. 128)*

**துகள்** –

*படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்னுமிவற்றை அரசன் பாதுகாவாமை (யாகிய குற்றம்).(தொல். செய். 128 நச்.)*

**துகளொடும் பொருளொடும் புணர்தல்** –

*அரசன் தனக்குரிய அரசியலில் தப்பிய நிலையைக் கூறும் கூற்றோடும், அவ்வறம் பொருள் இன்பம் பயக்கக் கூறும் கூற்றோடும் ஒரு செய்யுள் கூடிவருதல். (தொ. செய். 128 நச்.)*

**துள்ளலோசை** –

*ஒழுகு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல்; 'கன்று துள்ளிற்று' என்றாற் போலக் கொள்க.(தொ. செய். 79 இள.)*

*முரற்கைப் படுமாற்றான் துள்ளச் சொல்லும் ஓசை.*

*(83 நச்., பேரா.)*

*வழக்கின்கண் பெரும்பாலும் இல்லாததாய்ச் செய்யுட்கண் துள்ளச் சொல்லும் ஓசை கலிப்பாவிற் குரிய துள்ளல் ஓசையாம்.*

**துள்ளலோசையின் வகைகள் –**

**1. ஏந்திசைத் துள்ளல்**

*கலித்தளையான் அமையும் செய்யுளின் ஓசை.*

எ-டு : *'முருகவிழ்தா மரைமலர்மேல் முடியிமையோர் புடைவரவே*
*வருசினனார் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்*
*இருவினைபோய் விழமுறியா எதிரியகா தியை எறியா*
*நிருமலராய் அருவினராய் நிலவுவர்சோ தியினிடையே.'*

**2. அகவல் துள்ளல்**

*கலித்தளையொடு வெண்சீர் வெண்டளையும் கலந்தமையும் செய்யுளின் ஓசை.*

எ-டு : *'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி*
*முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்*
*எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையும் மதியம் போல்*
*மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந்த தொளித்ததே'.*

**3. பிரிந்திசைத் துள்ளல்**

*கலித்தளையோடு ஏனைய தளைகளும் கலந்து அமையும் ஓசையையுடைய கலிப்பாவினது ஓசை.*

எ-டு : *'மணிகிளர் நெடுமுடி மாயவனும் தம்முனும் போன்(று)*
*அணிகிளர் நெடுங்கடலும் கானலும் தோன்றுமால்*
*நுரைநிவந் தவையன்ன நொப்பறைய சிறையன்னம்*
*இரைநயந் திறைகூரும் ஏமஞ்சால் துறைவகேள்.'*

*இப்பாடல் நிரையொன்று ஆசிரியத்தளையும் இயற்சீர் வெண்டளையும், கலித்தளையும், வெண்சீர் வெண்டளையும், கலந்தமையின் பிரிந்திசைத் துள்ளல் ஓசைத்தாயிற்று.*

*கலித்தாழிசைகள் ஈரடியினவாயவழிப் பெரும்பான்மையும் பிரிந்திசைத் துள்ளல் ஓசை பெறுவனவாம்.*

எ-டு : *'தொன்மைக்கண் வினைசெய்யார் துப்புரவின் இரங்குவார்*
*பன்மைக்கண் உள்ளந்தேர் பயமின்றிக் கழிவாரோ'*

*என வரும். (யா. க. 78 உரை)*

**துறை (1) –**

*ஒரு புடையால் தத்தம் பாவிற்குத் துறை போன்று நெறிப்பாடு உடைத்தாய்க் கிடத்தலானும், எல்லாத் துறைமேலும் இனிது நடத்தலானும், துறையும் (ஏனைய தாழிசை, விருத்தம் போலக்) காரணப்பெயராம். (யா. க. 56 உரை)*

**துறை (2) –**

*ஐவகை நிலத்திற்கும் உரியர் எனப்பட்ட மக்களும் மாவும் பறவையும் வரையறுக்கப்பட்ட வரையறை கடந்து, சான்றோர் சுவைபடல் கருதிச் செய்யுள் புனைதலும் உண்டு. (அவை) தத்தம் திணையொடு வாரா ஆயினும், எத்திணை கருதிச் செய்யப்பட்டனவோ அத்திணைப் பொருளாகக் கொள்ளத்தக்கன என்று வரையறுத்துக் கூறும் அகப்பாட்டு உறுப்புத் துறை எனப்படும்.*

*ஞாழல்பூவைச் சூடிய நெய்தல்நிலத் தலைவியை ஊரிடத்துச் சோலையாகிய மருதநிலத்துக் கண்டான் போலக் கூறிக் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தல் உரிப்பொருளான் முடித்த கலிப்பாடல் (56) குறிஞ்சித் திணையின்பாற்படுதல் இத்துறை என்ற உறுப்பான் நிகழும் செயலாம்.(தொ. பொ. 521 பேரா.)*

*உரைப்போரும் கேட்போரும் இன்றி, செய்யுள் செய்யும் புலவனே கவிக்கூற்றாக உரைப்பனவும் துறை என்ற செய்யுள் உறுப்பின்பாற்படும் என்ப. (ந. அ. 234; இ. வி. 583)*

*துறை என்ற இவ்வுறுப்பின்றியும் செய்யுள் நிகழும்.*

**துறை (3) –**

*ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணம் ஆயினவற்றையெல்லாம் அவற்றின் காரியமாகிய அச்செயற்கண் செறித்தல். எடுத்துக் காட்டாக, படையியங்கு அரவம் என்பதன்கண், நிரை கோடல் குறித்த மன்னன் படைத் தலைவரைத் தருக என்ற லும், அவர் வருதலும், அவர் வந்துழி இன்னது செய்க என்றலும், அவர் வேந்தற்கு உரைத்தலும், அவர் படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும், அதனைக் கண்டோர் கூறலும், அவர் பகைப்புலக் கேட்டிற்கு இரங்கி வருந்துதலும், நாள் கோடலும், அவர் கொற்றவைக்குப் பரவுக்கடன் பூண்டலும் என்ற காரணங்கள் அடங்கும்.*

*(இ. வி. 603)*

*மக்களும் மாவும் சென்று நீருண்ணும் துறைபோலப் பல வகைப்பட்ட பொருள்களும் ஒருவகைப்பட்டு இயங்குதலா கும் மார்க்கம் 'துறை' எனப்பட்டது. (தொ. பொ. 56 நச்.)*

*ஒவ்வொரு துறையிலும் உட்பிரிவுகள் பல இருத்தலும் கூடும். (நச்.)*

*ஒரு செய்யுளுள் பல துறை ஒருங்குவரினும் ஒரு துறையின் பாற்படுதல் கொள்க. (நச்.)*

**துறை என்னும் பெயர்க் காரணம் –**

*பரந்துப்பட்டதொரு நீர்நிலையுள் எவ்வழிப்புகினும் நீரை அடையலாம் எனினும், சில இடங்களை வகுத்துக்கொண்டு அவற்றைத் துறை எனக் கூறி அவ்வழிப்புக்கு நீரைக்கொள் வது போல, பரந்துபட்ட புறஒழுகலாற்றினைச் சில கூறு படுத்து அவற்றின் வாயிலாகப் புலப்படச் செய்தலான் துறை என்றார். செய்யுளுறுப்பாகக் கூறப்படும் துறை வேறு, இது வேறு. (தொ. புறத். 1 ச. பால)*

**'தூக்கியல் வகையே ஆங்கு' –**

*தூக்கு என்னும் செய்யுள்உறுப்பு நடக்கும் இடவகை (-முன்) சொல்லப்பட்ட ஆசிரியம் வெண்பா கலிவஞ்சி என்ற நான்கு பாவும் ஆம். (தொ. செய். 87 பேரா.)*

**தூக்கு –**

1. *செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயில் தூக்கு, நிவப்புத் தூக்கு, கழால் தூக்கு, நெடுந்தூக்கு என எழுவகைப்படும் தாளவகை. (சிலப். 14 : 150 உரை)*
2. *தாளத்தில் இரண்டு மாத்திரைக்காலம். (சிலப். 3 - 16 உரை)*

**தூக்கு என்னும் செய்யுள் உறுப்பு –**

*நிறுக்கப்படும் பொன் வெள்ளி முதலியவற்றின் கட்டிகளைக் கழஞ்சு தொடி துலாம் எனத் துலாக்கோலால் தூக்கி அளப்பது போல, அடிவரையறையுடையவாய்ப் பரந்த பாக்களை அடிகளால் துணித்துத் தூக்கி ஓசை வேறுபாடு உணர்த்தும் செய்யுள் உறுப்புத் தூக்கு எனப்பட்டது. படவே, தூக்கு என்பது ஓசை பற்றிப் பாக்களை இன்ன பா என வரையறை செய்யும் செய்யுள்உறுப்பாம்.*

*தூக்கு என்பது நிறுத்தல், அளத்தல், பாடுதல் என்னும் பொருள்களைக் கொள்ளும். பா என்று பரந்துபட்டுச் செல்லும் ஓசையை இத்துணை அடி என்று விதந்து கூறுபாடு அறிய உதவுவது தூக்கு.*

*இருசீர் முதல் ஐந்துசீர்காறும் பரந்துபட்ட அகவல்ஓசையை, 'பெரியகட் பெறினே' எனச் சொற்சீரடியாகவும், 'யாம் பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே' என அளவடியாகவும், 'நரந்தம் நாறும் தன்கையால்' எனச் சிந்தடியாகவும், தூக்குத் துணித்தவாறு காண்க. இங்ஙனம் தூக்கின்று என,*

*'நரந்தம் நாறும் தன்கையாற் புலவு*
*நாறும் என்தலை தைவரு மன்னே'* (புறநா. 235)

*என இரண்டு நாற்சீரடிகளாகத் துணிப்பின், அகவலோசை பிறவாது.*

*'உள்ளார் கொல்லோ தோழி*
*முள்ளுடை அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்'*
(ஐங். மிகைப். 2)

*என அடி எதுகையாய்ச் சிந்தடியும் நெடிலடியுமாகக் கொள்ள நின்றதனை, இத்தூக்கு என்னும் உறுப்பு, அகவல்ஓசைக்கு ஏற்றற்போல,*

*'உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை*
*அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்'*

*என அறுத்து இரண்டு அளவடி ஆக்கியது.*

*தூக்கு இல்லையேல் ஆசிரியத்துள் மயங்கி வரும் வஞ்சி யடிகளைப் பகுத்துக் காண்டல் இயலாது.*
*(தொல். செய். 87 நச்., பேரா.)*

*தூக்கு - இறுதி (இள.)*

**தூங்கல் வண்ணம் –**

*தூங்கல் ஓசையுடைத்தாய் வரும் வண்ணம்; அது வஞ்சிபோல் அற்றுச் செல்லுதல்.*

எ-டு : *'யானுடத் தானுணர்த்த யானுணரா விட்டபின்*
*தானுட யானுணர்த்தத் தானுணரான் - தேனூனும்'*,(முத்தொள். 47)
(தொ. செய். 230 நச்.)

**தூங்க லோசை –**

*வழக்கின்கண் நிகழாது, செய்யுட்கண் அடியிறுதியில் தூங்காது (-ஓசை அறுபடாமல்) சீர்தோறும் ஓசை குறைந்து வரும் தூங்கலோசை வஞ்சிப்பாவிற்கு உரியதாம்.*
*(தொ. செய். 84 நச்.)*

*தூங்கல் - சீர்தோறும் ஓசை அறுதல். (80 இள.)*

**தூங்கிசை –**

*செய்யுட்குரிய நால்வகை ஓசையுள் ஒன்று.* (L)

**தூங்கிசை அகவல் –**

*நிரையொன்று ஆசிரியத் தளையான் வரும் அகவல்.*

எ-டு : *'அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய*
*மணிதிக ழவிரொளி வரதனைப்*

*பணிபவர் பவநனி பரிசறுப் பவரே!'* (யா. க. 69 உரை)

**தூங்கிசைச் செப்பல் –**

*இயற்சீர் வெண்டளையான் வரும் வெண்பாவின் ஓசை.*

எ-டு : *'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
*வாலெயி றூறிய நீர்'.* (கு. 1121)

*இப்பாடல் முழுதும் இயற்சீர் வெண்டளையே வந்தமையின், இதன்கண் தூங்கிசைச் செப்பலோசை வந்தது.*

*இயற்சீரே வந்து வெண்டளை தட்பத் தூங்கிசைச் செப்பல் பிறக்கும் என்ப. (யா. க. 57 உரை)*

**தூங்கிசைத் துள்ளல் –**

*கலிப்பாவிற்கு உரிய ஓசைவகை; கலித்தளையால் வரும் அடிகளில் இவ்வோசை பிறக்கும். 'துள்ளலோசையின் வகைகள்' காண்க.*

**தூங்கிசை வண்ணம் இருபது –**

*குறில் அகவல் தூங்கிசைவண்ணம், நெடில் அகவல் தூங்கிசை வண்ணம், வலி அகவல் தூங்கிசைவண்ணம், மெலி அகவல் தூங்கிசை வண்ணம், இடை அகவல் தூங்கிசைவண்ணம் - என அகவல் தூங்கிசைவண்ணம் ஐந்து. (ஆசிரியங்களும் பாவைப்பாட்டும் போல்வன இவ்வண்ணத்திற்கு எடுத்துக் காட்டாம்.)*

*குறில் ஒழுகல் தூங்கிசைவண்ணம், நெடில் ஒழுகல் தூங்கிசைவண்ணம், வலி ஒழுகல் தூங்கிசைவண்ணம், மெலி ஒழுகல் தூங்கிசைவண்ணம், இடை ஒழுகல் தூங்கிசை வண்ணம் - என ஒழுகல் தூங்கிசைவண்ணம் ஐந்து. (வஞ்சியும் வஞ்சிப்பாவினமும் இவ்வண்ணத்திற்கு எடுத்துக்காட்டாம்.)*

*குறில் வல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடில் வல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலி வல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலி வல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடை வல்லிசைத் தூங்கிசை வண்ணம் - என வல்லினத் தூங்கிசைவண்ணம் ஐந்து.*

எ-டு : *'பூவி னார்பொழிற் பிண்டியின்கீழ்ப்*
*பொருவரு திருநகர்ப் பொன்னெயிலுள்*
*மாவி னார்நலம் நோக்கினல்லார்*
*பலர்ப ணிந்துவந் தடிவணங்கி'*

*என இன்ன வண்ணத்தன எல்லாம் வல்லிசைத் தூங்கல் வண்ணத்தன.*

குறில் மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடில் மெல் லிசைத் தூங்கிசைவண்ணம், வலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், மெலி மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடை மெல்லிசைத் தூங்கிசை வண்ணம் என மெல்லிசைத் தூங்கிசைவண்ணம் ஐந்து.

எ-டு : *'தேனி னார்மலர்ப் பிண்டியி னீழல் தேவரேத்த*
*வானி னார்குடை யானடி நாளும் வணங்குதுமே'*

இவ்வாறாக ஐவகைப்படுதலின், தூங்கிசைவண்ணம் இருபது ஆமாறு. *(யா. வி. பக். 411, 412, 416 உரை)*

**தேமா –**

நேர் நேர் என ஈரசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 7)*

**தேமாங்கனி –**

நேர் நேர் நிரை என மூவசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 7)*

**தேமாங்காய் –**

நேர் நேர் நேர் என மூவசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 7)*

**தேமாந்தண்ணிழல் –**

நேர் நேர் நேர் நிரை என நாலசையாலமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 8)*

**தேமாந்தண்பூ –**

நேர் நேர் நேர் நேர் என நாலசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 8)*

**தேமாநறுநிழல் –**

நேர் நேர் நிரை நிரை என நாலசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 8)*

**தேமாநறும்பூ –**

நேர் நேர் நிரை நேர் என நாலசையால் அமைந்த சீரினைக் குறிக்கும் வாய்பாடு. *(யா. கா. 8)*

**தேவபாணி –**

தேவரைப் புகழ்ந்து கூறும் தமிழ்ப்பாடல் வகை.

**தேவபாணி யாப்பும் பொருளும் வேறுபடுதல் –**

*'வெண்பலிச் சாந்தம் முழுமெய்யும் மெய்பூசி.*
*உண்பலிக் கூரூர் திரிவது மேலிட்டுக்*
*கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்*
*எண்பலித் தாலிவள் யாதுவாய் வாளே.'*

இது தெய்வத்தின்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்க மாகிய பாடாண்திணைக் கைக்கிளை யாதலின் பொருள் வேறுபட்டது.

'கன்று குணிலா' முதலிய சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் அந்நிலத்திற்குரிய அவர்தெய்வத்தைப் பாடும் பாடல்கள்; அந்நிலத்திற்குரிய அவர்தெய்வத்தைப் பரவுதலின் தேவபாணியே அன்றி, புறத்திணைக் கைக்கிளைப் பாடல்கள் அல்ல. (தொ. செய்.149 நச்)

**தேவபாணியின் இருவகை –**

வண்ணக ஒத்தாழிசை எனவும், ஒரு போகு எனவும் தேவபாணி இருவகைப்படும். ஒரு போகுக்கு ஒத்தாழிசை எனப் பெயர் கூறப்படாது என்பது; அதன்கண் தாழிசை பெய்து பாடுதலும் கூடாது. தொல்காப்பியனார் ஒருபோகு தாழிசை யுறுப்புப் பெறும் என்று கூறிற்றிலர். ஒரு போகு சிறுபான்மையே பாடப்பெறும். (தொ. செய். 139 நச்.)

**தேவர்ப் பராவும் ஒத்தாழிசை –**

இஃது ஒத்தாழிசையின் இருவகைகளுள் ஒன்று. இஃது அகநிலை ஒத்தாழிசை ஆகாது. வாழ்த்தியல் நால்வகைக் கலிக்கண்ணும் வருமேனும், அவை தேவபாணி ஆகா. பாடற்கண் தெய்வவாழ்த்து படர்க்கையாகியவழி அது புறநிலை வாழ்த்தேயாம். பாட்டுடைத் தலைவனைக் கூட்டிக் கூறினும் கூட்டாவிடினும், தேவபாணி முன்னிலைக் கண்ண தேயாம். தெய்வம் தானே மனிதவடிவில் ஆவேசமுற்று, "நின்னைப் புரப்பேன்" என்று கூறும் உலகவழக்கு புலனெறி வழக்கிற்கு ஏலாது. கலிப்பா புலனெறி வழக்கேயன்றிச் சிறு பான்மை கடவுளைப் பராவும் பொருளானும் வரும்.
(தொ. செய். 138 நச்.)

**தொகுத்தல் விகாரம் –**

அறுவகைச் செய்யுள் விகாரங்களுள் ஒன்று. செய்யுட்கண் ஓசையும் தளையும் கருதி, விரிக்கப்பட வேண்டிய உருபு முதலாயின தொகுக்கப்படுதல்.

எ-டு : *'வேண்டார் வணக்கி விறல்மதில் தான்கோடல்*
*வேண்டுமாம் வேண்டார் மகன்.'*

'வேண்டாரை வணக்கி' என உயர்திணைக்கண் இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்தே வரற்பாலது, செய்யுளமைப்புக் கருதி 'வேண்டார் வணக்கி' என உருபு இடையே தொகுக் கப்பட்டவாறு. பகாப்பதமாம் ஒரு மொழிக்கண் இடையே ஓரெழுத்துக் குன்றல் இடைக்குறையின் பாற்படும்.

(யா. வி. 394 பக்)

**தொகைநிலை விரி –**

தொகைநிலையும் விரியுமாகக் கூறிய (ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என்ற) நான்கு பா. (தொ. செய்.120 நச்.)

**தொடை –**

எழுத்து சொல் பொருள் இவை மூன்றையும் பொருந்தி வரிசைப்பட அமைந்த இயல்பினவாகி, அடியோடு அடி பொருந்தித் தொடுக்கும்போது அமைவன தொடைகளாகும். (தொடைக்கு எல்லா எழுத்தும் கொள்ளப்படும்.)

(யா. கா. 33 உரை மேற்.)

**தொடை ஓத்து –**

யாப்பருங்கலத்துள் உறுப்பியற்கண் ஆறாவதாகிய உட்பிரிவு; 21 நூற்பாக்களையுடையது. மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்னும் தொடை ஐந்தனையும், இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று அடி எனும் எட்டு விகற்பங்களொடும் விளக்கி, செந்தொடை இரட்டைத் தொடை அந்தாதித்தொடை என மூன்றனையும் அடுத்து விளக்கிச் செல்வது இவ்வோத்து.

**தொடைகளின் எண்ணிக்கை (1) –**

நான்கு பாக்களுக்கும் 51 நிலங்கள் உள. அவற்றின விரிவு 625 அடி. ஒவ்வோரடியும் 22 தொடைபெறும். தொடை இரண்டடிகளைக் கொண்டு காணப்படினும் ஓரடியின் கண்ணேயே கொள்ளப்படுதலின் 625 x 22 = 13750-இல், ஓரடிக்குரிய 51 நிலங்களைக் களைய, 13699 ஆம். இவற்றை விகற்பங்களொடு கணக்கிடத் தொடையெண்ணிக்கை வரம்பின்றி ஓடும். (யா. க. 49 உரை).

**தொடைகளின் எண்ணிக்கை (2) –**

தொல்காப்பியனார் தொடைகளின் எண்ணிக்கையை நேராகக் கூறாமல், 'ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு,

தொண்டுதலை யிட்ட பத்துக் குறை எழுநூற், றொன்ப தென்ப உணர்ந்திசி னோரே' என்றார். எழுநூறு ஒன்றும் - இளம்பூரணது பாடம்.

விளக்கம் வருமாறு :

ஐயீராயிரம் - பத்தாயிரம் - 10000

ஆறைஞ்ஞூறு - மூவாயிரம் - 3000

தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூறு ஒன்றும் - றொன்பது - அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது என்பது பொருந்தும். 9 + (700-10)

பத்துக்குறை எழுநூற்றொன்பது - 699; ஆக, 13699. தொண்டு தலையிடவே, 699+9 = 708; ஆக, 13708 என்றலும் ஒன்று. (709-10) +9.

இளம்பூரணர் 13699 என்பர்; பேராசிரியர் 13708 என்பர். பத்துக்குறை எழுநூற்றொன்பது - 699; தொண்டு தலையிட்ட என்பது ஒன்பதால் பெருக்கிய என்றவாறு; எனவே, 699 x 9 = 6291 எனக் கொண்டு; 13000 + 6291 = 19291 என்று கணக்கிடுவர், நச்சினார்க்கினியர்.

இக்கணக்கீடுகளால் வரையறுக்கப்படும் தொடைகளுக்கு எடுத்துக்காட்டுக்கள் இக்காலத்தில் இல்லை. இளம்பூரணர் நேராகக் கணக்கிடவும், பிற உரையாசிரியர் இருவரும் தம்புலமைநலம் தோன்ற வலிந்து பலவாறாகக் கணக்கிடுவர்.

**(1) இளம்பூரணர் விளக்கம்**

**மோனை**

மொழி முதலாகிய உயிர் 12. இப்பன்னிரண்டு உயிர்களுள் ஒவ்வொன்றற்கும் அது நீங்கலான 11 எழுத்தும் கிளையாம். ஆகவே, ஒவ்வோருயிர்க்கும் கிளையெழுத்துப் பதினொன்று உள ஆதலின் அவற்றை உறழ, 12 x 11 = 132. கதநபம என்னும் மெய்களை உயிர் பன்னிரண்டோடும் உறழ, 12 x 5 = 60. அவற்றைக் கிளையெழுத்தோடு உறழ, 60 x 11 = 660. சகரத்தின் முதலெழுத்து அ ஐ ஔ நீங்கலாகவுள்ள ஒன்பதனைக் கிளையெழுத்து எட்டோடும் உறழ, 9 x 8 = 72. வகரத்தின் முதலெழுத்து உ ஊ ஒ ஓ நீங்கலாக வுள்ள எட்டனைக் கிளை யெழுத்து ஏழோடும் உறழ, 8 x 7 = 56. யகரத்தின் முத லெழுத்து ஒன்றே. ஞகரத்தின் முதலெழுத்து அ எ ஒ என்னு மூன்றனைக் கிளையெழுத்து இரண்டனோடு உறழ, 3 x 2 = 6.

இவ்வகையான் முதலெழுத்து 12 + 60 + 9 + 8 + 1 + 3 = 93. அவற்றைக் கிளையெழுத்தோடு உறழக் கிளையெழுத்து 132 +

*660 + 72 + 56 + 6 = 926. முதலெழுத்து 93; கிளையெழுத்து 926; ஆக, மோனைத் தொடை 1019 ஆம்.*

**எதுகை**

*உயிரெழுத்து மொழியிடையே வாராது. உயிர்மெய் யெழுத்து 216 - இல் ஙகர வருக்கம் பன்னிரண்டும் ஒழிய எஞ்சி யன 204. இவற்றைக் கிளையெழுத்துப் பன்னிரண்டுடன் உறழ 204 x 12 = 2448. இவற்றோடு மெய் 18; ஆய்தம் 1; குற்றுகரம் 6. இவற்றைக் கூட்ட எதுகையின் கூடுதல் 2473 ஆம்.*

**முரண்**

*முரண்தொடை சொல் முரண், பொருள் முரண் என 2.*

**இயைபு**

*மொழியிறுதியில் வாராத உயிர்மெய்யெழுத்துக்கள் வருமாறு : ஙகர வருக்க உயிர்மெய்கள் 12, உ ஊ எ ஏ ஒ ஓ ஔ என்ற உயிரெழுத்துக்களால் ஏறப்படாத மெய்கள் முறையே 1, 1, 17, 1, 16, 1, 15 ஆக 52. ஆதலின் எஞ்சிய உயிர்மெய்யெழுத் துக்கள் [216 - (12 + 52)] 152, ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற மெய்யெழுத்துகள் 11, குற்றியலுகர ஈறு 6 - ஆக, இவ்வாற்றான் இயைபுத்தொடை 169 என்க. [இளம்பூரண ருரையுள் 182 என (அடிகளாசிரியர் பதிப்பில்) காணப்படு கிறது.]*

**அளபெடை**

*மொழி முதலாகும் உயிரளபெடை 7; க த ந ப ம எனும் உயிரளபெடை 7 x 5 = 35; சகர அளபெடை 5; வகர அளபெடை 5; ஞகர யகர அளபெடை 2; ஆக இவை 54. இவற்றுள் உயிரளபெடை தனிநிலையாம் 7 நீங்க, ஏனைய 47 ஐயும் முதனிலை இடைநிலை இறுதிநிலை என உறழ, 47 x 3 = 141 உயிரளபெடையாம். ஒற்றுக்களுள், வல்லெழுத்து ஆறும் ரகர ழகரங்களும் ஒழிந்த ஏனைய பத்தும் ஆய்தமும் அளபெடுக்க, ஒற்றளபெடை 11. இவ்வகையால் அளபெடைத் தொடை 7 + 141 + 11 = 159 ஆம்.*

*இவ்வாற்றான் மோனை முதலிய ஐந்தொடைகளின் கூடுதல் 1019 + 2473 + 2 + 169 + 159 = 3822 ஆம். அடிகளாசிரியர் பதிப்பில் 3835 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதுவே கொள்வோம்.*

**பொழிப்புத் தொடையில் கிளையெழுத்து வாராது**

*ஆதலின் மோனைப் பொழிப்பு 93; எதுகைப் பொழிப்பு 229 (65 + 18 + 146 எனக் காண்க). முரண் பொழிப்பு 2, இயைபு*

*பொழிப்பு 182, ஒற்றளபெடை பொழிப்பாக வாராமையின், உயிரளபெடைப் பொழிப்பு 148. இவையெல்லாம் கூட்ட, 93 + 229 + 2 + 182 + 148 = 654 ஆம்.*

**ஒரூஉத் தொடையும் மேற்கண்ட வகையான் 654 ஆம்.செந்தொடை**

*மொழிமுதலாகிய எழுத்து 93. மற்றை அடியிலும் அவை ஒத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின், அவற்றை ஒழித்து எஞ்சிய எழுத்து 92. இவற்றை உறழ 93 x 92 = 8556 ஆம்.*

*ஆகவே, இவ்வகையான் தொடை விகற்பம் 3835 + 654 + 654 + 8556 = 13669 ஆம். (தொ. செய். 97 இள.)*

**(2) பேராசிரியர் விளக்கம்**

*பேராசிரியருக்குத் தொடைகள் 32 + 1 = 33 ஆம். அவற்று எண்ணிக்கை வருமாறு :*

*(1) மோனைத்தொடை - 566; (2) தலையாகு எதுகை - 566; (3) அடி எதுகை 566; (4) எழுத்தடி இயைபு 566; (5) சொல்லடி இயைபு - 566; இவற்றது கூடுதல் : 2830. (6) வழிமோனை - 549; (7) வருக்க மோனை - 549; (8) உயிரெதுகை - 549 (9) சொல் முரண் - 549 (10) பொருள் முரண் 549; (11) சொல்லும் பொருளும் சொல்லொடு முரண் - 549; (12) சொல்லும் பொருளும் பொருளொடு முரண் - 549; (13) சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரண் - 549; இவற்றது கூடுதல்; 4392. (14) மூன்றாமெழுத்தொன் றெதுகை - 479; (15) வருக்க எதுகை - 443; (16) நெடில் மோனை 270; (17) மெல்லின எதுகை 270; (18) இடையின எதுகை - 270; (19) ஆசெதுகை - 270; (20) வல்லின எதுகை - 218; இவற்றது கூடுதல் : 2220 (21) உயிரளபெடை - 333; (22) ஒற்றளபெடை - 45; இவற்றது கூடுதல் : 378 (23,24) பொழிப்பு, கிளைப்பொழிப்பு - 551; (25,26) முற்று, கிளை முற்று - 913; (27) ஒரூஉ - 528; (28) கிளை ஒரூஉ - 530; இவற்றது கூடுதல் : 2522. (29) அசை அந்தாதி - 325; (30) சீர் அந்தாதி - 164; (31) எழுத்து விட்டிசை - 164; (32) குறிப்பு விட்டிசை - 164; (33) செந்தொடை - 549; இவற்றது கூடுதல் : 1366.*

*இவ்வெல்லாவற்றையும் கூட்ட, 13708 ஆம்.*
*(தொ. செய். 101 பேரா.).*

**(3) நச்சினார்க்கினியர் விளக்கம்**

*(1-5) மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் ஐந்து தொடையான மூன்று பாவிற்கும் வரும் தொகை - 2830*

*(6-15) ஐவகை முரண், வருக்க மோனை, வருக்க எதுகை, வழி மோனை, உயிரெதுகை, செந்தொடை என்னும் இவற்றான் வரும் தொகை 5490.*

*(16) மூன்றாமெழுத்தொன்று எதுகை - 479. (17-20) மெல்லின எதுகை, இடையின எதுகை, ஆசெதுகை, நெடில்மோனை என்னும் இவற்றால் வரும் தொகை - 1097.*

*(21) வல்லின எதுகை - 218*

*(22) உயிரளபெடை - 333*

*(23) ஒற்றளபெடை - 45*

*(24) அசை அந்தாதி, சீர்அந்தாதி - 272, 164.*

*(25) எழுத்து விட்டிசை, குறிப்பு விட்டிசை - 164, 164.*

*ஆக, 25 தொடையான் பெற்ற தொகை 11256 ஆம்; இவை ஈரடித்தொடை.*

*இனி ஓரடித்தொடை ஏழு; அவை வருமாறு :*

*(1) அகவற்பொழிப்பு - 578; (2) வெண்பாப் பொழிப்பு - 441; (3) கலிப்பொழிப்பு - 60; (4) முற்றெதுகை - 153; (5) வருக்க முற்றெதுகை - 395; (6) ஒரூஉ எதுகை - 449; (7) வருக்க ஒரூஉ எதுகை - 237; ஆக, இவற்றின் கூடுதல் 2513; (இவ் வெண்ணிக்கை ஆராயற்பாலது.) இவற்றுள் நீக்கப்படுவன - 79; எஞ்சிய, ஓரடித்தொடைகளின் கூடுதல் - 2434.*

*இவ்வாற்றால், 25 ஈரடித்தொடை 7 ஓரடித்தொடை என்னும் இவற்றின் கூடுதல் 11256 + 2434 = 13690.*

*ஆசிடை எதுகை வேறுபாடு, இரண்டடி எதுகை, செந் தொடை வேறுபாடு, இரட்டை, அந்தாதி வேறுபாடு, இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, கடை யிணை, கடைக்கூழை, இடைப்புணர் என்னுமிவற்றின் தொகை - 5601.*

*இவ்விருதிறமும் கூட்ட, 13690 + 5601 = 19291 ஆம் (இத் தொடைக் கணக்கினை அறிவதனால் பயன் சிறப்பாக யாதும் இன்று). (தொ. செய். 101 நச்.)*

**தொடை 13,700 ஆமாறு –**

*அடிவகைத்தொடைகள் பதினாறும் (5 அடி வகைத் தொடைகள் சீர்வகைத் தொடைகள் காண்க) வழுவிலவாய் அமைந்த 625 அடிகளில் வரும். இவற்றை உறழ 10,000 தொடைகள் வருமாறு காண்க.*

*சீர்வகைத் தொடைகள் ஐம்பதனைப் பதினேழ் நிலத்தவாய் வழுவின்றி வரும் அடிகளில் பயின்று வருதற்குரிய 74 சீர்க ளோடும் உறழ (50 x 74) 3,700 தொடைகளாம்.*

*பதினேழ் நிலத்தும் பயின்று வரும் 74 சீர்களாவன :*

*உரியசைச்சீர் - 2*

*இயற்சீர் - 10*

*ஆசிரியவுரிச்சீர் - 6*

*வெண்சீர் - 4*

*வஞ்சியுரிச்சீர் - 52 (தொ. செய். 101 ச. பால.)*

**தொடைகளுள் சிறந்தது –**

*தொடைகளுள் எதுகைத்தொடையே சிறந்ததாம். ஆகவே, பொழிப்பு முதலிய விகற்பங்களை எதுகைத் தொடைக்கே நூற்பாவில் கூறி, ஏனைய தொடைகளுக்கு அருத்தாபத்தி யால் கொள்ள வைத்தார் தொல்காப்பியனார்.*

*(தொ. செய். 98 நச்.)*

**'தொடைநிலை வகையே ஆங்கு' –**

*சீர்வகை அடியின் தொடைப்பகுதி வரையறைப்படா எனினும், அவை செய்யுட்கண் நிற்கும் நிலைமை முற்கூறிய கட்டளை போல் நின்று தொடை கொள்ளப்பெறுதல். தொ. செய். 103 நச்.) ஆங்கு - அவ்விரண்டு; வரையறையுடையனவும், இல்லனவும் (103 பேரா.)*

*ஆங்கு - மேற்சொல்லப்பட்ட பாகுபாடு; எழுத்தானும் சொல்லானும் பொருளானும் வேறுபடுதல். (99 இள.)*

**தொடைப்பகுதி எண்ணில ஆதல் –**

*மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்பன வற்றின்கண், இணை கூழை முற்று மேற்கதுவாய் கீழ்க் கதுவாய் கடை கடையிணை கடைக்கூழை இடைப்புணர் என வேறுபடுத்து உறழவும், எழுத்தந்தாதி அசையந்தாதி சீரந்தாதி அடியந்தாதி எனவும், உயிர்மோனை உயிரெதுகை நெடில் மோனை நெடிலெதுகை வருக்கமோனை வருக்கஎதுகை இனமோனை இனஎதுகை ஆசெதுகை மூன்றாமெழுத் தொன்றெதுகை இடையிட்டெதுகை எனவும் இவ்வாறு வருவனவற்றையும் எழுத்து வேறுபாட்டினால் உறழவும், நிரல்நிறைப்பொருள்கோள் வகையானும் உறழவும், தொடைகள் வரம்பிலவாகி விரியும்.(தொல். செய். 98 இள.).*

625 வகைப்பட்ட அடிகளுள் ஒன்றை நிறுத்தி, அதனோடு 624 ஐயும் கூட்டியும், அதனோடு சீர்வகை அடிகளையும் விகற்பத் தொடைகளையும் கூட்டியும் தொடுக்கத் தொடைப்பகுதிகள் எண்ணிலடங்கா. (102 நச்.)

**தொடை பல விரவின் பெயர் வழங்குமாறு** –

ஒரு செய்யுட்கண் தொடை பல விரவி வரினும், முதலில் வந்த தொடையான் பெயரிடப்படும் என்பர் யாப்பருங்கல ஆசிரியர்; அவிநயனார், காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார், பல்காயனார், நத்தத்தனார் முதலியோர் கருத்தும் இதுவே.

எ-டு : *'தாமரை புரையும் காமர் சேவடி* - பொழிப்பெதுகை
*பவளத் தன்ன மேனித் திகழொளி'.*

*குன்றி யேய்க்கும் உடுக்கை குன்றின்* - ஒரூஉ எதுகை

*நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்* - பொழிப்பெதுகை,

ஒரூஉ மோனை

*சேவலங் கொடியோன் காப்ப*

*ஏம வைகல் எய்தின்றால் உலகே'* - பொழிப்பு மோனை.

இப்பாடற்கண் இவ்வாறு தொடைபல வந்தன வாயினும், முதலில் வந்த தொடையான் பெயர்கொடுத்து, இதனைப் பொழிப்பெதுகைச் செய்யுள் என்று வழங்குக என்பது.

**தொடைபற்றிய யாப்பருங்கல விருத்தி குறிப்பிடுமாறு** –

நான்கு பாக்களுக்கும் 51 நிலங்கள் உள. அவற்றின் விரிவு 625 அடி. ஒவ்வோரடியும் 22 தொடை பெறும். தொடை இரண்டடிகளைக் கொண்டு காணப்படினும் ஒரே அடியில் கொள்ளப்படுதலின் 625 x 22 = 13750 இல் ஓரடிக்குரிய நிலங்கள் 51 ஐக் களைய தொடை 13699 ஆகும். (யா. க. 49 உரை)

**தொடைமுரண்** –

முரண்தொடை 'செம்மை பசுமை' - தொடை முரண்
(சீவக. 2 நச்.)

**தொடையின் தொகை** –

மோனை எதுகை முரண் இயைபு அளபெடை செந்தொடை இரட்டைத்தொடை அந்தாதித்தொடை எனத் தொடையின் தொகை எட்டாம். (யா. க. சிறப்புப். உரை)

**தொடைவகை –**

*தலையாகுமோனை, இடையாகு மோனை, கடையாகு மோனை - 3*

*தலையாகுஎதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை - 3*

*சொல்முரண், பொருள் முரண், சொற்பொருள் முரண், மோனை முரண், எதுகை முரண், செம்முரண் - 6.*

*மோனைஇயைபு, எதுகைஇயைபு, முரண்இயைபு, அளபெடைஇயைபு, மயக்கு இயைபு, செவ்வியைபு - 6*

*மோனை அளபெடை, எதுகை அளபெடை, முரண் அளபெடை, இயைபு அளபெடை, மயக்கு அளபெடை, செவ்வளபெடை - 6*

*இயற்செந்தொடை, மருட்செந்தொடை - 2*

*ஒருபொருளிரட்டை, இருபொருளிரட்டை, பல பொருளிரட்டை, இரு முற்றிரட்டை - 4.*

*எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடிஅந்தாதி, மயக்கந்தாதி, இடையிட்டந்தாதி - 6*

*என்றிவ்வாறு தொடைவகைகள் 36 ஆம்.*

*(யா.க.சிறப்புப். உரை)*

**தொடைவிகற்பக் குறள் வெண்பா –**

இனவெழுத்தால் இணைமோனை முதலிய தொடைவிகற்பம் பெற்றுவரும் குறள் வெண்பா.

எ-டு : *‘அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு’* (கு. 1081)

முதலடி இனவெழுத்தால் இணைமோனை பெற்றது.

*(யா. க. 59 உரை)*

**தொடை விகற்பங்கள் –**

*ஓரடிக்குள் அமைந்த சீர்களிடையே இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்ற எழுவகை விகற்பங்களும் நாற்சீர் அடிகளுள் வரும்.*

*இவ்வேழு விகற்பங்களையும், ஈரடிகளிடையே அமையும் அடி என்பதனையும், மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்ற ஐந்தனோடும் உறழ (5+(7 x 5)) அடி மோனை முதலாக நாற்பது தொடைவிகற்பங்கள் வரும். அவற்றோடு அந்தாதி,*

இரட்டை, செந்தொடை என்பன வற்றையும் கூட்டத் தொடைவிகற்பம் நாற்பத்துமூன்று ஆகும். (யா. க. 34. உரை)

**தொடை விரி --**

அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்ற இவ்வெட்டனையும் மோனை - எதுகை - முரண் - இயைபு - அளபெடை - என்ற ஐந்தனோடும் உறழ வரும் நாற்பது தொடையும்

கடை, கடையிணை, பின், கடைக் கூழை, இடைப்புணர் என்ற ஐந்தனையும், மோனை முதலாய ஐந்தனோடும் உறழ வரும் இருபத்தைந்து தொடையும்.

அசை, சீர், இசை, முற்று விரளச்செந்தொடை நான்கும்,

குறை நிறை முற்று என்பனவற்றை, ஒன்று பல என்பவற்றொடு முரண வரும் இரட்டைத்தொடை ஆறும்.

எழுத்து, அசை, சீர், அடி, மயக்கு, இடையீடு என்ற ஆறனை யும், மண்டிலம் செந்நடை என்பவற்றொடு முரண வரும் அந்தாதித் தொடை பன்னிரண்டும் ஆகத் தொடைவிரி 87 ஆம். (யா. க. சிறப்புப். உரை)

தொல்காப்பியம் பற்றிய தொடைவிரிச் செய்தியைத் 'தொடை களின் எண்ணிக்கை' எனும் தலைப்பினுட் காண்க. (யா. க. சிறப்புப். உரை)

**தொல்காப்பியம் வகுக்கும் தொடை வகை --**

மோனை எதுகை முரண் இயைபு என்ற நான்கும் சிறப்பான தொடைகள்; உயிரளபெடை ஐந்தாவது தொடை; ஒற்றள பெடை ஆறாவது தொடை.

வந்த சீரே நாற்கால் வரத் தொடுக்கும் இரட்டைத்தொடை யும், நிரல்நிறைத்தொடையும், செந்தொடையும் அடுத்துக் கொள்ளப்படும். செந்தொடை ஓரடிக்கண்ணே வரினும் ஈரடியை இணைத்துக் கண்டாலன்றிச் செந்தொடை என்பதை உணர்த்தல் இயலாது.

ஓரடிக்கண்ணே வரும் பொழிப்பு ஒரூஉ என்பனவும் தொல்காப்பியத்திற் சுட்டப்பட்டுள்ளன.

வந்த அசை சீர் முழுதும் மீண்டும் வரும் வழிமோனை, முற்றெதுகை, கிளைமுற்றெதுகை, இருவகை அந்தாதி, இருவகை விட்டிசை, இணை கூழை மேற்கதுவாய் கீழ்க்கது வாய் முதலிய விகற்பங்கள் - உரையாசிரியர்களால் கொள்ளப்பட்டுள்ளன. (தொ. செய். 89-91 நச்.)

**தொல்காப்பியனார் தளை என்பதனைச் செய்யுளுறுப்பாகக் கொள்ளாமை –**

*இடைக்காலத்தார் செய்யுளுறுப்பாகக் கொண்ட தளையினைத் தொல்காப்பியர் உறுப்பாகக் கொள்ளாமைக்குக் காரணம் தளை என்பது சொற்புணர்ச்சி போலச் சீரினது தொழிலேயன்றி வேறோர் உறுப்பினை உண்டாக்குதல் இல்லை ஆகலானும், தளையை உறுப்பாகக் கொள்ளின் சீரான் அடி வகுப்பது பயனில் செயலாம் ஆகலானும் என்க.*

*(தொ. செய். 1 ச.பால)*

**தொன்மை –**

*அம்மை முதலாய வனப்பு எட்டனுள் ஒன்று; உரை விரவிப் பழமையாகிய கதை பொருளாகச் செய்யப்படுவனயாவும் தொன்மையாம். அவை பெருந்தேவனார் செய்த பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன. சிலப்பதிகாரமும் தொன்மையின் பாற்படும். (தொ. செய். 237 நச். )*

**'தொன்று' என்பதே "தொண்டு" எனப் பிழைபடவந்தமை –**

*பத்து என்னும் எண்ணிற்குத் தொன்மையாயது ஒன்பது என்பதனைக் குறிக்க ஆசிரியர் 'தொன்று' என்று கூறியுள்ளார். இதன் உரிச்சொற்பகுதி 'தொல்' என்பது.*

*'தொன்று தொட்டு என்பது' என்பது தொண்டுதொட்டு எனப் பேச்சுவழக்கில் திரிந்த பிழைவழக்கை ஆராயாமல் நோக்கித் 'தொண்டு' என்பதற்குப் பழையது, முந்தியது எனத் தவறாகப் பொருள்கொண்டனர் போலும். அன்றி, 'தொன்று' என்பதனடியாகப் பிறந்து திரிந்த தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றுள், தொண்- தொள் - என்பவை முதனிலையாக நிற்றலை நோக்கி, அதுவே உண்மை எனவும் கருதியிருக்கலாம், அவை தொல்நூறு (தொன்னூறு), தொல் + ஆயிரம் = தொல்லாயிரம் என்பவற்றைத் திரித்து அமைத்துக்கொண்டவையே. (தொ. செய் 101 ச. பால.)*

**தோல் –**

*வனப்பியல் எட்டனுள் ஒன்று; இழுமென்னும் ஓசையையுடைய மெல்லென்ற சொல்லானே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் விழுமிய பொருள் பயப்பச் செய்யினும், ஆசிரியப் பாட்டான் ஒரு கதைமேல் தொடுப்பினும் தோல் என்று கூறுவர், தொன்னெறியை அறிந்த புலவர்.*

*தோல் கொச்சகத்தானும் அகவலானும் செய்யப்படும் இருவகைத்து. கொச்சகத்தால் செய்யப்படும் பொருட்டொடர்*

*சிந்தாமணி முதலியன; ஆசிரியப்பாவான் அடிநிமிர்ந்து வந்தன தேசிகப்பா முதலியன. (தொ. செய். 238 நச்.)*

**தோன்றுவது கிளந்த துணிவு –**

*ஒன்று கூற அச்சொற்றொடர் கொண்டு மற்றொருபொருள் தோன்றும் துணிவுடையதாகக் கூறுதல். ('பிசி' வகை இரண்டனுள் ஒன்று) 'பிசி' காண்க.(தொ. செய். 176 பேரா.)*

# ந

**நலிதல் ஓசை –**

*எடுத்தல்ஓசைக்கும் படுத்தல்ஓசைக்கும் இடைநிகர்த்ததாகிய ஓசை.*

*'நடந்தனன் ' என்னும் வினைச் சொற்கண், 'நட' எனும் பகுதி எடுத்தல் ஓசையானும், 'அன்' எனும் விகுதி படுத்தல் ஓசை யானும் கூறப்படும். இடைப்பட்ட இடைநிலை சாரியை என்பன நலிதல் ஓசைப்படக் கூறப்படும். ஆய்தம் இத்தகைய நலிந்த ஓசையுடையது ஆதலின், ஆய்தம் பயின்று வரும் ஓசை 'நலிபு வண்ணம்' எனப்பட்டது. (நன். 88)*

**நலிபு வண்ணம் –**

*ஆய்தம் பயின்றுவரும் சந்தம்.*

எ–டு : *'ஙஃகான் றஃகான் நான்க னுருபிற்கு' (தொ.எழுத். 123 நச்)*
(தொ. செய். 223 பேரா.)

**நலிவு –**

*ஆய்த எழுத்து. இது பயின்று வரும் வண்ணம் நலிவு வண்ணமாம். (தொ. செய். 223 பேரா)*

**நால்வகைச்சீரும் செய்யுளுள் நிற்கும் முறை –**

*இயற்சீரும் உரிச்சீரும் விரவியும் வரும். இயற்சீரும் உரிச்சீரும் வேறுவேறாகியும் வரும். பொதுச்சீர் அருகிவரும். அசைச்சீர் வெண்பா ஈற்றில் வரும்; ஏனைய பாக்களில் அருகிவரும். நிரையீறாகிய நாலசைப் பொதுச்சீர் வஞ்சியிலேயே வரும். வஞ்சியுரிச்சீராகிய கனிச்சீர் வெண்பாவினுள் வரப்பெறா. நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவுள்ளும் வஞ்சிப்பாவின் இறுதியிலும் வரப்பெறா. நேர் ஈறாகிய நாலசைச்சீர் எட்டும் ஆசிரியப்பாவில் அருகி வரும். கருவிளங்கனி கூவிளங்கனி என்ற சீர்கள் வஞ்சிக்கே பெரும்பான்மையும் உரிய.*

*(யா. க. 15 உரை)*

*எ-டு:*

1. *இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு*
*நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.* (க. 1091)

குறள்வெண்பாவினுள் இயற்சீரும் உரிச்சீரும் விரவின.

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்*
*செறியெயிற் றரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோ நீ அறியும் பூவே.* (குறுந். 2)

இவ்வாசிரியத்துள் இயற்சீரும் உரிச்சீரும் விரவின.

*'போது சாந்தம் பொற்ப ஏந்தி'*

இவ்வாசிரிய அடியுள் இயற்சீர் வந்தது.

2. *'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்'* (கு. 397)

இவ்வெண்பா அடியுள் வெள்ளைஉரிச்சீரே வந்தது.

3. *'அல, ரி, நா, று துவர்வாய் அமர்ந்த நோக்கின்'* - புளிமாந்தண்பூ.

*'செந், து, சிதை, ய உழுத செங்குரல் சிறுதினை'* - தேமாநறும்பூ.

இவ்வாசிரிய அடிகளுள் நாலசைச்சீர் அருகி வந்தது.

*'நற்றாள் தொழாஅ* ***ரெனின்'*** - *நிரை* (குறள் 2)

*'வாலெயி றூறிய* ***நீர்'*** - *நேர்* (குறள் 1121)

அசைச்சீர் வெண்பா ஈற்றில் வந்தது.

***'கை*** *விரிந்தன காந்தளும் பூஞ்சுனை'* - நேர்

*'குர வணங்கிலை மாவொடு சூழ்கரை'* - நிரை

அசைச்சீர் இரண்டும் பாவினத்துள் அருகி வந்தன.

5. *'விரிகுயிற்பெடை மெலிவினை'*

*'பூந்தாமரைப் போதலமர'*

கருவிளங்கனி கூவிளங்கனிச்சீர்கள் வஞ்சியிலேயே வந்தன.

வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; கலியுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும். வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் அருகி ஓரடியுள் கண்ணுற்று நிற்கவும் பெறும். அல்லனவற்றுள் பெரும்பான்மையும் ஓரடியுள் ஒன்றன்றி வாரா; இரண்டு வரினும் இயற்சீராயின இடையிட்டு வரும். ஓரசைச் சீர் பெரும்பான்மை வெண்பாவின் இறுதிக்கண்ணும், அம்போதரங்க உறுப்பின்கண்ணும் வரும். உரிச்சீரானே

ஆசிரியம் பயின்று வாரா. இயற்சீரானே வஞ்சியும் கலியும் பயின்று வாரா.

1. 'நின், று, நின், றுளம் நினை, பு, நினை, வொடு'
'செலச், செல, வூ, ரலர் செவி, சுடச், சுட, முகிழ்'

- வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் இரண்டு ஓரடிக்கண் வந்தன.

2. 'திரைந், து, திரைந், து திரைவரத், திரள்,முத்தம் கரைவாங்கி'

- கலியடியுள் குற்றுகரம் வந்தவழி நாலசைச்சீர் அருகி வந்தது.

3. 'கொண், ட, ஞெண், ட மணற்குன்றில் பண்ணையாயம் குடிகெழுவவும்'

- கலியடியுள் நாலசைச்சீர் இடையிட்டு வந்தது.

**நால்வகைப் பாக்களின் ஓசை –**

ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என்னும் நால்வகைப் பாக்களின் ஓசை முறையே அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்பனவாம்.

அகவுதல் அழைத்தல்; வலித்தும் மெலித்தும் நெகிழ்ந்தும் கூறப்பெறும் ஓசையை அகவல் என்ப.

செப்பல் - விடுத்தல் ஆதலின், அழைத்தலுக்கு மறுதலை யாயிற்று. செப்பலாகிய விடை வினாவை உள்ளடக்கியதாக லின் இவ் வோசை வினாவும் செப்பும் போல் எடுத்தலும் படுத்தலுமாக வரும் என்க.

துள்ளுதலாவது தாவுதல்; முரன்று வருமோசை ஈண்டுத் துள்ளல் எனப்பட்டது. துள்ளுதல் எனினும் கலித்தல் எனினும் ஒக்கும்.

தூங்கலாவது நெகிழ்ந்து நிற்றல். இஃது இக்காலத்தே தொங்குதல் என வழங்குகிறது. வஞ்சிப்பா ஆசிரியத்தின் கிளையாதலின் அகவலோசை சிறிது நீண்டு நெகிழின், அது வஞ்சிக்குரிய தூங்கலோசை ஆகின்றமை புலனாகும்.

(தொ. செய். 81-84 ச. பால.)

**நாலசைச்சீர் –**

பொதுச்சீர் காண்க.

**நாலசைச்சீர் பற்றி முன்னோர் கருத்து –**

தொல்காப்பியனார் நாலசைச்சீர்களைக் கொண்டாரல்லர். பிற்காலத்தவர் நாலசைச்சீர்களுக்குக் காட்டிய உதார ணங்கள் யாவும் ஈரசைச்சீர் இரண்டாவதற்கு அமைவுடை யனவாகவே உள்ளன.

*'அங்கண்வானத் தமரர சரும்'* என்ற குறளடி

*'அங்கண் வானத் தமரரசரும்'* என்ற சிந்தடி ஆதற்குப் பெரிதும் இயைபுடையது.

இங்ஙனமே அப்பாட்டுள் ஏனைய குறளடிகளையும்

> *'வெங்களி யானை வேல்வேந்தரும்*
> *வடிவார் கூந்தல் மங்கையரும்*
> *கடிமலர் ஏந்திக் கதழ்ந்திறைஞ்சச்*
> *சிங்கம் சுமந்த மணியணிமிசைக்*
> *கொங்கிவர் அசோகின் குளிர்நிழற்கீழ்*
> *செழுநீர் பவளத் திரள்காம்பின்*
> *முழுமதி புரையும் முக்குடைநிழல்*
> *வெங்கண் வினைப்பகை விளிவெய்தப்*
> *பொன்புனை நெடுமதில் புடைவளைப்ப*
> *அனந்த சதுட்டய மவையெய்த*
> *நனந்தலை உலகுடை நவைநீங்க*
> *மந்த மாருதம் மருங்கசைப்ப*
> *அந்தர துந்துபி நின்றியம்ப*
> *இலங்கு சாமரை எழுந்தலமர*
> *நலங்கிளர் பூமழை நனிசொரிதர'*

என முச்சீரடிகளாகக் கொள்ள, நாலசைச்சீர் கொள்ள வேண்டிய தேவை யின்றாம்.

யாப்பருங்கலம் கூறும் நாலசைச்சீர்களை வேண்டாது கணக்கிடுவதற்கு அதன் உரையாசிரியர் ஏழு நயங்களைக் குறிப்பிடுகிறார்.

**1. 'குற்றியலுகரத்தை ஒற்றாக்குதல்**

'குண், டு, நீ, டு, நீர் குவளைத்தண்சுனை' - ஐயசைச்சீர்

'கொன், று, கோ, டு, நீ, டு குருதிமாறவும்' - ஆறசைச்சீர் என்னும் வஞ்சியடிகளில், ஐயசைச்சீரும் ஆறசைச்சீரும் ஆவான் செல்லும் சீர்களின் குற்றுகரங்களை ஒற்றாக்கின், அவை மூவசைச் சீரே யாகும்.

**2. கூன் வகுத்தல்**

> *'**அடியதர்சேர்தலின்** அகஞ்சிவந்தன' - நாலசைச்சீர்*
>
> *'**மண்கொண்டகுழி** குவளைபூக்கும்' - நாலசைச்சீர்*
>
> *'மாவழங்கலின் **மயக்குற்றனவழி** - நாலசைச்சீர்*

இவ்வடிகளில் வந்துள்ள நாலசைச்சீர்களில் அடி, குழி வழி என்பனவற்றை முதல் இடை கடைகளில் கூனாகக் கொள்ளின்,

*'அடி அதர்சேர்தலின் அகஞ்சிவந்தன'*

*'மண்கொண்ட குழி குவளைபூக்கும்'*

*'மாவழங்கலின் மயக்குற்றன வழி'*

என்று அமையும் இவ்வடிகளில் நாலசைச்சீர் இன்றாகும்.

**3. சிந்தடி யாக்குதல்**

*'அங்கண்வானத் தமரரசரும்'* - நாலசைச்சீர் என்ற குறளடியை

*'அங்கண் வானத் தமரரசரும்'*

எனச் சிந்தடியாக்க, நாலசைச்சீர் இன்றாம்.

**4. நெடிலடி யாக்குதல்**

*'சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே'* (புறநா. 235)

*'கண்டல் வண்டல் கழிபிணங்கிக் கருநீல மதுவிம்மவும்'* என நெடிலடியாக்கின், நாலசைச்சீர் இன்றாம்.

**5. வகையுளி கூறுதல்**

'பா, டு, நர்க், கும் ஆ, டு, நர்க், கும் பண்டுத்தாம் கண்டவர்க் கும்' என்னும் அடியின் முதல் இரு நாலசைச்சீர்களையும்

' பா டுநர்க் கும் ஆ டுநர்க் கும் பண்டுத்தாம் கண் டவர்க் கும்' என்று வகையுளி ஆக்கின், ஆண்டு, நாலசைச்சீர் இன்றாம்.

**6. அசைச்சீர் கொள்ளுதல்**

*'இருநெடுஞ் செஞ்சுட ரெஃகமொன் றேந்தி யிர, வின், வந், த*
*அருநெடுங் காதற்கன் றேதரற் பாலதல் லா, து, விட், டால்,*
*கருநெடு மால்கட லேந்திய கோன்கயல் சூ, டு, நெற், றிப்*
*பெருநெடுங் குன்றம் விலையோ கருதிலெம் பெண், கொடிக், கே.'*

என்றமைந்த கட்டளைக் கலித்துறையின் ஐந்தாம் சீரினை இருசீர்கள் ஆக்கி இப்பாடலை அறுசீர் விருத்த மாக்கின் நாலசைச்சீரினை நீக்கிவிடலாம். அப்பொழுது ஈற்றடியின் இறுதிச்சீர் 'பெண் கொடிக்கே' என்ற இருசீராகும்; பெண் என்பது அசைச்சீராம்.

**7. அளபெடையை அழித்தல்**

*'தாஅய்த்தாஅய்ச் செல்லும் தளர்நடைப் புன்சிறார்*
*போஒய்ப்போஒய்ப் பூசல் இடச்செய்து - போஒய்ப் போஒய்ப்'*

இவ்வெண்பாவில் நாலசைச்சீர்களில் ஓர் அளபெடையை அழித்துவிடின் மூவசைச்சீராகி விடும். தாய்த் தா அய் - நேர்நேர்நேர்.

இவ்வேழ் வகைகளைப் பின்பற்றினால், பாக்களில் நாலசைச் சீர் இல்லாமலேயே அலகிடலாம். இங்ஙனம் பின்பற்றுதல்

*நுண்ணுணர்வினோர்க்கன்றி இயலாது என்று கருதிப்போலும் காக்கைபாடினியார் முதலிய ஆசிரியர் நாலசைச்சீர் கொண்டனர். (யா. வி. பக். 430-443)*

**நாலசைச்சீர் வாராமல் காக்கும் வழிகள் –**

*குற்றுகரம் ஒற்றாக்குதல் - 'குன்று கோடு நீடு குருதிபாயவும்'*

*கூன்வகுத்தல் - 'அடி அதர்சேர்தலின் அகஞ்சிவந்தன'*

*சிந்தடியாக்குதல் - 'அங்கண் வானத் தமரரசரும்'*

*நெடிலடியாக்குதல் - 'சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே'*

*வகையுளி கூறுதல் - 'பா டுநர்க் கும் ஆ டுநர்க் கும் பண்டுத்தாம் கண்டவர்க் கும்'*

*அசைச்சீர் கொள்ளுதல் - 'இருநெடுஞ் செஞ்சுடர் எஃகமொன் றேந்தி இர வின்வந்த'*

*அளபெடை அழித்தல் - 'போஒய்ப்போஒய்ப் பூசலிடச் செய்து'*

*இவ்வேழ் நயங்களாலும் நாலசைச்சீர் வாராதவாறு செய்யலாம். விளக்கம் 'நாலசைச்சீர் பற்றிய முன்னோர் கருத்து'ள் காண்க. (யா. க. 95 உரை)*

**நாலசைச்சீரின் தேவை –**

*நாலசைச்சீர் வேண்டாமலேயே செய்யுளை நடத்தும் உபாயங்கள் ஏழு உள. அவற்றைப் பின்பற்றி உரைப்பின், நுண்ணுணர்வினார்க்கன்றி அறிய ஒண்ணாது ஆகலானும், காக்கைபாடினியார் முதலிய ஒருசார் ஆசிரியர் நாலசைச்சீர் கொண்டார் ஆகலானும், யாப்பருங்கல நூலுள்ளும் நாலசைச்சீர் கூறப்பட்டன. (யா. வி. பக். 443)*

**நாலெழுத்துச்சீர் ஒன்பது –**

*கணவிரி, காருருமு, பெருநாணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய், நாணுத்தளை, உரறுபுலி என்ற ஒன்பதாம்.*

*இவை நிரை நிரை, நேர் நிரைபு, நிரைநேர்பு, நிரைபுநேர், நிரை நிரைபு, நேர்நிரைநேர், நிரைநேர்நேர், நேர்புநிரை, நிரைபு நிரை என்பன. முற்றியலுகரம் எண்ணப்பட்டன.*

*(தொ. செய். 41. நச்)*

**நாள் –**

*வெண்பாவின் ஈற்றடி இறுதியில் ஓரசைச்சீராக வரும் வாய்பாடு.*

எ-டு : *'நிலமிசை நீடுவாழ் வார்'* (யா. கா. 7.)

**நாற்சீரடிக்கே அடிவரையறை –**

*தொடை கொள்ளுதற்குச் சிறந்த நாற்சீரடிகளுக்கே 625 என்று அடிவரையறை செய்யப்பட்டது. அவற்றுள்ளும் தொடை கொள்ளுங்கால் அகவற்கு நாற்பத்தொன்றும், வெள்ளைக்குப் பதினெட்டும் ஆக 59 அடிகளுக்குத் தளை வழுப்படுதலின் அவை களைந்து எஞ்சிய அடியே கொள்ளப் படும். தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் சிறப்புடைய நாற்சீர்அடிகளுள் கட்டளை அடிகளைக்கொண்டே செய்யுள் செய்தலின் அவற்றிற்கே வரையறை கூறப்பட்டது. பின் கடைச்சங்கத்தார்க்கு அஃது அரிது ஆகலின், அவர்கள் சீர்வகை அடி பயிலச் செய்யுள் செய்தனர். இக்காலத்தார் அளவடியால் செய்யுள் செய்திலர் எனக் கொண்டு, குறளடி சிந்தடி நெடிலடி கழிநெடிலடி என்ற நால்வகை அடிகளுக் கும் வரையறை கூறப் புகின் அது வரம்பின்றி ஓடும்.*

*(தொ. செய். 51 நச்.)*

**நாற்சீரடியின் சிறப்பு –**

*பாட்டு, நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்புமொழி என எழுவகைப்படும் செய்யுளுள், அடி வரையறையுடைய பாட்டுக்களே முதற்கண் கூறப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் அகவல், வெண்பா, கலி என்பன நாற்சீரடிகளாலேயே அமைதலின் நாற்சீரடியின் சிறப்புப் புலப்படும்.*

*(தொ. செய். 35 நச்.)*

**நாற்சொல் இயல் –**

*பெயர் வினை இடை உரி அல்லது இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்ற நாற்சொல்லினையும் உலகத்தார் வழங்குகின்ற வழக்கு வடிவு. (பேரா.)*

*பெயர் வினை இடை உரி என்பன இயற்சொல்லின் பாகு பாடாகலின் நாற்சொல் இயற்சொல் முதலிய நான்கே. (நச்)*

*(தொ. செய். 80)*

**நாற்பத்து நான்கு சீர்கள் பதினெட்டாதல் –**

*கட்டளை ஆசிரியத்திற்குரிய சீர்கள் - 14, கட்டளை வெண்பா விற்குரிய சீர்கள் - 16, கட்டளைக் கலிப்பாவிற்குரிய சீர்கள் -14 ஆக இந்நாற்பத்து நான்கும் இயற்சீர் -10, ஆசிரிய உரிச்சீர் -2, வெண்சீர் - 4, அசைச்சீர் - 2 ஆக 18 சீர்களை வரையறுத்துக் கூறியனவே. (தொ. செய். 28 நச்.)*

**நாற்பெயர் எல்லையகம் –**

*வடவேங்கடம் தென்குமரி கிழக்கும் மேற்கும் கடல் என்ற எல்லைக்குட்பட்ட தமிழ்நாடு. (பேரா)*

*மலைமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம் என்னும் நான்கு பெயரையுடைய தமிழ்நாடு. (நச்.) (தொ. செய். 79)*

**நான்கு விகற்ப இன்னிசை வெண்பா –**

எ-டு : *‘கடற்குட்டம் போழ்வார் கலவர் படைக்குட்டம்*
*பாய்மா உடையான் உடைக்கிற்கும் தோமில்*
*தவக்குட்டம் தானுடையான், நீந்தும் அவைக்குட்டம்*
*கற்றான் கடந்து விடும்.’* (நான்மணிக். 16)

*இப்பாடல் (இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெறாது, முதல் மூன்றடிகளிலும் ஒரூஉத்தொடை பெற்று) நான்கு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.*
*(யா. க. 61 உரை)*

**நிகிர்தம் –**

*பிசி, நிகிர்தம் என்பன ஒரு பொருட் கிளவி. ‘பிசி’ காண்க.*
*(இ. வி. பாட். 144 உரை)*

**நிரல் நிறை, இரட்டை – இத்தொடைகளை இறுதிக்கண் வைத்தமை –**

*நிரனிறை ஓரடியினின்று மற்றோரடிக்கண்ணும் விரவுதலானும், இரட்டைத் தொடையானது மோனை எதுகை இயைபு என்றற்கும் ஏற்ப நிற்றலானும், இவற்றின் சிறப் பின்மை தோன்ற இவற்றை இறுதிக்கண் கூறினார்.*
*(தொ. செய். 91 ச.பால.)*

**நிரைபு நிரைபு நிரை –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறு வழங்கு சுரம், உருமு வழங்கு சுரம், உருமு விரவு சுரம் எனக் கொள்ளப் படும். (குற்றுகர முற்றுகர வேறுபாட்டால் வாய்பாடு மூன்றாயின.) (தொ. செய். 20 நச்.)*

**நிரல்நிறைத் தொடை விகற்பங்கள் –**

*அடிநிரல்நிறையும் இணை-பொழிப்பு-ஒரூஉ-கூழை-மேற்கதுவாய்-கீழ்க்கதுவாய்-முற்று-நிரல்நிறைகளும் ஆம். (இவை அளவடிக்கண் நிகழ்வன)*

*ஈரடிகளின் தொடக்கத்தில் நிரல்நிறைப் பொருள்கோள் அமைதல் அடிநிரல்நிறையாம்.*

எ-டு : *முலைகலிங்கம் மூரி நிலமா மகட்கு*
*மலைபரவை மாரிமென் கூந்தல்.*

*(முலை மலையாம்; கலிங்கம் பரவையாம் - என்க)*

*அடியின் முதல் இருசீர்களிலும் நிரல்நிறை அமைதல் இணை நிரல்நிறை யாம்.*

எ-டு : *நண்ணினர் பகைவரென் றிவர்க்கு நாடொறும்*
*தண்ணியன் வெய்யன் நம் தானை வேந்தனே.*

*(நண்ணினர்க்குத் தண்ணியன், பகைவர்க்கு வெய்யன்- என்க)*

*1, 3 ஆம் சீர்களில் நிரல்நிறை அமைதல் பொழிப்பு நிரல்நிறை யாம்.*

எ-டு : *புருவமும் பூணார் புணர்முலையும் கூறின்*
*வரிசிலையும் மாண்பமைந்த கோங்கும்.*

*(புருவம் வரிசிலை போலும், புணர்முலை கோங்கு போலும்- என்க)*

*1, 4, ஆம் சீர்களில் நிரல்நிறை அமைதல் ஒரூஉ நிரல்நிறையாம்.*

எ-டு : *புரிகுழலும் பூணார் முலையாள் திருமுகமும்*
*கொன்றையும் குன்றாது ஒளிசிறக்கும் திங்களும்*

*(புரிகுழல் கொன்றை போலும், திருமுகம் திங்கள் போலும்- என்க)*

*முதல் மூன்று சீர்களிலும் நிரல்நிறை அமைதல் கூழை நிரல்நிறையாம்.*

எ-டு : *கண்ணும் புருவமும் மென்தோளும் இம்மூன்றும்*
*வள்ளிதழும் வில்லும் விறல்வேயும் வெல்கிற்கும்*

*(கண் இதழை வெல்லும், புருவம் வில்லை வெல்லும், தோள் வேயை வெல்லும் என்க.)*

*1, 3, 4 ஆம் சீர்களில் நிரல்நிறை அமைதல் மேற்கதுவாய் நிரல் நிறையாம்.*

எ-டு : *பல்லும் பணிமொழியாள் வாயும் பணைமுலையும்*
*முல்லையும் முந்நீர்ப் பவளமும் கோங்கரும்பும்*

*(பல் முல்லையரும்பு போலும், வாய் பவளம் போலும், முலை கோங்கரும்பு போலும் என்க)*

*1, 2, 4ஆம் சீர்களில் நிரல்நிறை அமைதல் கீழ்க்கதுவாய் நிரல் நிறையாம்.*

எ-டு : *பொறையன் செழியன் பூந்தார் வளவன்*
*கொல்லி கொற்கை நல்லிசைக் குடந்தைப்*

*பாவை முத்தம் பல்லிதழ்க் குவளை*
*மாயோள் முறுவல் மழைப்பெருங் கண்ணே*

*(சேரனது கொல்லிப்பாவை போன்ற மாயோட்கு, செழியனது கொற்கை முத்துப் போன்றன பற்கள்; சோழனது குடந்தையிற் பூத்த குவளை போன்ற கண்கள்- என்க.)*

*நான்கு சீர்களிலும் நிரல்நிறை அமைதல் முற்று நிரல் நிறையாம்.*

எ-டு : *அடல்வேல் அயில்நோக்கி! நின்முகம் கண்டே*
*உடலும் உடைந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்*
*கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்*
*தடமதியம் ஆமென்று தாம்.*

*(பெண்ணே! நின்முகம் கண்டு மதியம் என்று கருதி, கடல் உடலும்; கனையிருள் உடைந்தோடும்; ஆம்பல் முறையே மலரும்; பாம்பு பார்க்கும் - என்க) (யா.வி. பக். 386-388)*

**நிரல்நிறைப் பொருள்கோள் –**

*யாப்பருங்கல விருத்தி சுட்டும் ஒன்பது வகைப் பொருள் கோளுள் ஒன்று. பொருள்கோள்-செய்யுட்கண் சொற்கள் அமைப்பில் பொருள் கொள்ளும்வகை. (யா. க. 95 உரை.)*

**நிரல்நிறை வகை –**

*பெயர் நிரல்நிறை, எழுத்து நிரல்நிறை, வினை நிரல்நிறை, முறை நிரல்நிறை, எதிர்நிரல்நிறை (-உவமையும் பொருளும் முறை மாறி வருவது) என்பன. தனித்தனியே காண்க.*
*(யா. க. 95 உரை.)*

**நிரைஅசை –**

*குறிலிணைந்தோ அவை ஒற்றடுத்தோ, குறில்நெடில் இணைந்தோ அவை ஒற்றடுத்தோ வரும் அசை.*

எ-டு : *வெறி, நிறம்; சுறா, விளாம். (யா.க. 8)*

*இனி, நிரையசையே ஓரசைச் சீராக வெண்பா இறுதியில் நிற்பின் அது மலர் எனும் வாய்பாடு பெறும்.*

எ-டு : *'நற்றாள் தொழாஅ ரெனின்.'*

**நிரைஅசை ஆகாதன –**

*நெடில் இரண்டு இணைந்தும், நெடிலும் குறிலும் இணைந்தும் நிரையசை ஆகா. (யா. க. 8 உரை)*

**நிரைஅசைக் கலித்துறை –**

*நிரையசையில் தொடங்கும் கட்டளைக் கலித்துறை. இதற்கு ஓரடிக்கு ஒற்று ஒழித்து உயிரும் உயிர்மெய்யுமாகிய எழுத்துப்*

*பதினேழாம். (ஆய்தம் அலகு பெறாமையே பெரும்பான்மை; சிறுபான்மை பெற்று வரின் அதுவும் எழுத்தெண்ணப்படும்) நிரைஅசையின் மறுபெயர் இணையசை என்பது.*

*(யா. க. 5 உரை)*

**நிரை ஒன்று ஆசிரியத்தளை –**

*நிரையீற்று இயற்சீர்முன் நிரைமுதல் இயற்சீர்வந்து ஒன்றும் தளை. தளைகள் ஏழனுள் ஒன்று. பெரும்பான்மையும் ஆசிரியப் பாவிற்கு உரியது. நிரைமுதல் பிற சீர் வந்தொன் றின், அது சிறப்பில்லாததாம்.* *(யா. கா. 10)*

**நிரை நிரை –**

*அகவற்பாவிற்குரிய ஈரசைச்சீர்களுள் ஒன்று. இதற்கு வாய்பாடு கருவிளம், கணவிரி, துலைமுகம் என்பன. மலர்மழை, இனிமொழி, வலம்புரி, வரிவளை எனவும் கூறுப.*

*(தொ. செய். 13 பேரா., யா. க. 11 உரை)*

**நிரைநிரைநிரை –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு கருவிளங்கனி, புலிவருசுரம் என்பன; புலிபடுசுரம், திருவுறைபதி, சுறமறி துறை, புணரிளமுலை எனவும் கூறுப.*

*(தொ. செய். 20 நச்.; யா.க. 12 உரை)*

**நிரைநிரைநிரைபு –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புலிவருகடறு, புலிவருகுரவு என்பன. (முன்னது குற்றுகர ஈறு; பின்னது முற்றுகர ஈறு. பின் வருவனவற்றுள்ளும் ஏற்றவிடத்தே கொள்க.)* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைநேர் –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு கருவிளங்காய், புலிவருவாய் என்பன.* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைநேர்பு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புலிவருகாடு, புலிவருகாவு என்பன.* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைபு –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று இதன் வாய்பாடு மழகளிறு நரையுருமு என்பன.* *(தொ. செய். 16 நச்.)*

**நிரைநிரைபுநிரை –**

*மூவகைச் சீர்களில் ஒன்று. இதன் வாய்பாடு புலிவழங்குசுரம், புலிவிரவுசுரம் எனக்கொள்க. (தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைபுநிரைபு –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிவழங்கு கடறு, புலி மருவு குரவு என்பன; புலிமருவுகடறு, புலி வழங்குகுரவு என்பனவும் கொள்ளப்படும். (தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைபுநேர் –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிவழங்குவாய், புலி விரவு வாய் என்பன. (தொ. செய். 20 நச்.)*

**நிரைநிரைபு நேர்பு –**

*மூவகைச் சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிவழங்குகாடு, புலிமருவுகாவு என்பன. புலி வரவு காடு, புலி வழங்கு காவு என்பனவும் கொள்ளப்படும். (தொ. செய். 20 நச்.)*

**நிரைநேர் –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புளிமா, தலைவாய் என்பன; மலர்பூ, எழினி, அரிமா எனவும் கூறுப. (தொ. செய். 13 பேரா., யா.க. 11 உரை)*

**நிரைநேர்நிரை –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புளிமாங்கனி, புலிசேர்சுரம் கெழூஉமணி என்பன (மூன்றாவது நடுவே அளபெடுத்து வரின் வருவது) புலிவாழ்சுரம், திருவாழ்பதி, சுறவாழ்துறை எனவும் கூறுப. (தொ. செய். 20 நச்.; யா.க. 12 உரை)*

**நிரைநேர் நிரைபு –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு, புலிசேர்கடறு, புலிசேர்குரவு என்பன. (தொ. செய். 20 நச்)*

**நிரை நேர் நேர் –**

*மூவகைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புளிமாங்காய், புலிசேர்வாய் என்பன. விரிபூமா, பொருளாக்கும், வடமேற்கு, வளைமென்தோள் எனவும் கூறுப. (தொ. செய். 20 நச்.) (யா.க. 12 உரை)*

**நிரைநேர்நேர்பு –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிசேர்காடு, புலிசேர்காவு என்பன. (முதலாவது குற்றுகர ஈறு; இரண்டா*

*வது முற்றுகர ஈறு. வருவனவற்றுள்ளும் ஏற்றவிடத்தே கொள்க)* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநேர்பு –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு கடியாறு, பெருநாணு என்பன.* *(தொ. செய். 16 நச்.)*

**நிரைநேர்புநிரை –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிபோகுசுரம், புலிமேவுசுரம் என்பன.* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநேர்பு நிரைபு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிபோகுகடறு, புலிமேவு குரவு என்பன. புலிமேவுகடறு, புலிபோகு குரவு - என்பனவும் கொள்ளப்படும் (முதலாவது குற்றுகர ஈறு; இரண்டாவது முற்றுகர ஈறு. பின் வருவனவற்றுள்ளும் ஏற்றவிடத்தே கொள்க.)* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைநேர்புநேர் –**

*மூவகைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு புலிபோகு வாய், புலிமேவு வாய் என்பன.* *(தொ. செய். 20 நச்.)*

**நிரை நேர்பு நேர்பு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு புலிபோகு காடு, புலிமேவு காவு என்பன. புலிபோகு காவு, புலிமேவு காடு - என்பனவும் கொள்ளப்படும்.* *(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு –**

*இவ்வசைச்சீர்க்குரிய வாய்பாடு வரகு, இரவு என்பன.*
*(தொ. செய். 4. நச்.)*

**நிரைபு அசை –**

*குற்றியலுகரத்தாலாவது முற்றியலுகரத்தாலாவது தொடரப் படும் நிரையசை. எ-டு : விரகு, விரவு.*

*இந்நிரைபுஅசை நிரைநேராய் அடங்கும்.* *(யா. க. 5 உரை)*

**நிரைபு ஈற்று மூவசைச்சீர் பதினாறு – வாய்பாடு –**

*1. நேர் நேர் நிரைபு - மாசேர்கடறு*

*2. நேர் நிரை நிரைபு - மாவரு கடறு*

*3. நேர் நேர்பு நிரைபு - மாபோகு கடறு*

*4. நேர் நிரைபு நிரைபு - மா வழங்கு கடறு*

*5. நிரை நேர் நிரைபு - புலி சேர் கடறு*
*6. நிரை நிரை நிரைபு - புலி வரு கடறு*
*7. நிரை நேர்பு நிரைபு - புலி போகு கடறு*
*8. நிரை நிரைபு நிரைபு - புலி வழங்கு கடறு*
*9. நேர்பு நேர் நிரைபு - பாம்பு சேர் கடறு*
*10. நேர்பு நிரை நிரைபு - பாம்பு வரு கடறு*
*11. நேர்பு நேர்பு நிரைபு - பாம்பு போகு கடறு*
*12. நேர்பு நிரைபு நிரைபு - பாம்பு வழங்கு கடறு*
*13. நிரைபு நேர் நிரைபு - களிறு சேர் கடறு*
*14. நிரைபு நிரை நிரைபு - களிறு வரு கடறு*
*15. நிரைபு நேர்பு நிரைபு - களிறு போகு கடறு*
*16. நிரைபு நிரைபு நிரைபு - களிறு வழங்கு கடறு*
*(தொ. செய். 20 நச்)*

**நிரைபு ஈற்று வஞ்சி உரிச்சீர்க்கு எடுத்துக்காட்டு –**

*சீற்றம்மிகுபு செல்சினம்சிறந்து*
*கூற்றொத்துவிரைபு கோள்குறித்துமுயன்று*
*புலிப்போத்துலவு பொலங்கொடியெடுத்துப்*
*புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து*
*வேம்புமீதணிபு போந்துபடத்தொடுத்து*
*வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச்சுரும்புகிளர்பு*
*களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்து*
*சொரிந்துதூங்குகடாத்து விரைந்துமலைந்துதொலைத்து*

*குறளடியெட்டிலும் அவை பதினாறும் முறையே வந்தவாறு காண்க.*

*('நிரைபு ஈற்று மூவசைச்சீர் பதினாறு' காண்க)*
*(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரை –**

*ஈரசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு குளிறுபுலி, விரவு கொடி என்பன. (முதலாவது குற்றியலுகரம்; இரண்டாவது முற்றியலுகரம். வருவனவற்றுக்கும் ஏற்றவிடத்தே கொள்க.*
*(தொ. செய். 14 நச்.)*

**நிரைபுநிரைநிரை –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறுவருசுரம், உருமு வரு சுரம் என்பன. (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரை நிரைபு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறு வரு கடறு, உருமு வரு குரவு என்பன. (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரை நேர் –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறுவருவாய், உருமு வருவாய் என்பன. (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரை நேர்பு –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறு வருகாடு, உருமு வரு காவு என்பன. களிறுவருகாவு, உருமு வருகாடு என்பனவும் கொள்க. (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரைபு –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு தடவு மருது என்பது. (வேறு காட்டப்பெற்றிலது. வழங்குகளிறு, விரவு குரவு என முறையே குற்றுகர முற்றுகர ஈறுகட்குக் கொள்ள லாம்) (தொ. செய். 13 நச்.)*

**நிரைபு நிரைபு நிரை –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறு வழங்கு சுரம், உருமு வழங்கு சுரம், உருமு விரவு சுரம் எனக் கொள்ளப் படும். (குற்றுகர முற்றுகர வேறுபாட்டான் வாய்பாடுகள் மூன்றாயின...) (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரைபு நிரைபு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறு வழங்கு கடறு, உருமுமருவுகுரவு என்பன. (உகர வேறுபாட்டான் பிறவும் வாய்பாடு கொள்க.) (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நிரைபு நேர் –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறுவழங்கு வாய், உருமுவிரவுவாய் என்பன. (தொ. செய். 20 நச்) (பிறவும் கொள்க.)*

**நிரைபு நிரைபு நேர்பு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுவழங்கு காடு, உருமுமருவு காவு என்பன. (விறவும் கொள்க.) (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர் –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று இதன்வாய்பாடு களிற்றுத்தாள், முழவுத்தோள்; குளத்துநீர், விரவு சீர் என்பன. (முன்னவை இடையே ஒற்று மிக்கன; பின்னவை இயல்பாக முடிந்தன)*
*(தொ. செய். 15 நச்.)*

**நிரைபு நேர் நிரை –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுசேர்சுரம், உருமுச்சேர்சுரம் என்பன. (தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர் நிரைபு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு களிறுசேர்கடறு, உருமுச்சேர்குரவு என்பன. (பிறவும் கொள்க.)*
*(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர்நேர் –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுசேர்வாய், உருமுச்சேர்வாய் என்பன. (தொ. செய் 20 நச்.)*

**நிரைபு நேர் நேர்பு –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறு சேர்காடு, உருமுச்சேர்காவு என்பன. (பிறவும் கொள்க.)*
*(தொ.செய். 20 நச்.)*

**நிரைபு நேர்பு –**

*ஈரசைச்சீர்களுள் ஒன்று. இதன்வாய்பாடு வரகுசோறு என்பது. (விரவுசோறு, பெருகுநாணு, விரவுநாணு என்பன வும் குற்றுகர முற்றுகர வாய்பாடுகளுக்கு ஏற்பக் கொள்ள லாம்.) (தொ. செய். 13 நச்.)*

**நிரைபுநேர்பு நிரை –**

*மூவசைச் சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுபோகு சுரம், உருமுமேவுசுரம் என்பன. (பிறவும் கொள்க.)*
*(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர்பு நிரைபு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுபோகு கடறு, உருமுமேவுகுரவு என்பன. (பிறவும் கொள்க.)*
*(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர்பு நேர் –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுபோகு வாய், உருமுமேவுவாய் என்பன. (பிறவும் கொள்க.)*

*(தொ. செய். 20 நச்.)*

**நிரைபு நேர்பு நேர்பு –**

*மூவசைச்சீர்களுள் ஒன்று. இதன் வாய்பாடு களிறுபோகு காடு, உருமுமேவுகாவு என்பன. (பிறவும் கொள்க.)*

*(தொ. செய். 20 நச்.)*

**நிரையீற்று மூவசைச்சீர் பதினாறு – வாய்பாடு –**

| | |
|---|---|
| 1. நேர்நேர்நிரை | *மா சேர் சுரம்* |
| 2. நேர்நிரைநிரை | *மா வரு சுரம்* |
| 3. நேர்நேர்புநிரை | *மா போகு சுரம்* |
| 4. நேர்நிரைபுநிரை | *மா வழங்கு சுரம்* |
| 5. நிரைநேர்நிரை | *புலி சேர் சுரம்* |
| 6. நிரைநிரைநிரை | *புலி வரு சுரம்* |
| 7. நிரைநேர்புநிரை | *புலி போகு சுரம்* |
| 8. நிரைநிரைபுநிரை | *புலி வழங்கு சுரம்* |
| 9. நேர்புநேர்நிரை | *பாம்பு சேர் சுரம்* |
| 10. நேர்புநிரைநிரை | *பாம்பு வரு சுரம்* |
| 11. நேர்பு நேர்பு நிரை | *பாம்பு போகு சுரம்* |
| 12. நேர்புநிரைபுநிரை | *பாம்பு வழங்கு சுரம்* |
| 13. நிரைபுநேர்நிரை | *களிறு சேர் சுரம்* |
| 14. நிரைநிரைநிரை | *களிறு வரு சுரம்* |
| 15. நிரைபு நேர்பு நிரை | *களிறு போகு சுரம்* |
| 16. நிரைபு நிரைபு நிரை | *களிறு வழங்கு சுரம்.* |

*(தொ. செய். 20 நச்.)*

**நிரையீற்று வஞ்சிஉரிச்சீர் எடுத்துக்காட்டு –**

*'தண்டண்டலைத் தாதுறைத்தலின்*
*வண்டோட்டுவயல் வாய்புகைபுகரந்*
*தயலாலையி னறைக்கடிகையின்*
*வழிபோகுவர மறித்துருபுகிளர்ந்*
*தோங்குசென்னிலை வாங்குகதிர்தரீஇப்*
*போதுதூங்குசிலை மீதுபுகுந்துபுகுந்*
*தொடுங்குசெய்தொழில் வழங்குகிளிக்குழாம்*

*திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகொளும்*
*நன்னர் நன்னா டென்னா குங்கொல்?'*

*குறளடியெட்டிலும் அச்சீர் பதினாறும் முறையே வந்தவாறு காண்க. (தொ. செய். 21 நச்.)*

**நிலைக்குரி மரபு –**

*ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபு; அஃதாவது ஆசிரியப்பாவொடு மயங்கி அதற்குரிமை பூண்டு நிற்கும் மரபு. இயற்சீர் வெண்டளையான் நடக்கும் அடிக்கு இம்மரபு உண்டு என்பது. (தொ. செய். 62 நச்)*

**நிலைமண்டில ஆசிரியப்பா –**

*நேரிசை இணைக்குறள் என்னும் ஆசிரியப்பாப் போலாது, எல்லா அடிகளும் சமமான நாற்சீர்அடிகளாக அமையும் ஆசிரியப்பா வகை. 'என்' எனும் அசைச்சொல்லால் முடிதல் இதற்குச் சிறப்பு.*

*நூற்பா நிலைமண்டிலமும் பிறவும், ஏ ஓ ஈ ஆ ஐ என்ற ஐந்து உயிரேயன்றிப் பிற உயிரும் இசைவன எல்லாம் வரப்பெறும்.*

*எ-டு: மணிமேகலை, சிலப்பதிகாரம், உதயணன்காதை, கலியாண(ன்) கதை என்பவற்றின் ஆசிரியப்பாக்கள் 'என்' அசையால் இற்றனவாம். (யா. க. 74 உரை)*

*கொடுப்போ ரின்றியும் கரண முண்டே*
*புணர்ந்துடன் போகிய காலை யான*

*இஃது அகரத்தான் இற்ற நூற்பா நிலைமண்டிலஅகவல்.*

**நிலைமண்டில ஆசிரியப்பாவின் இனம் –**

*நிலைவிருத்தம் நிலைமண்டிலஆசிரியப்பாவிற்கு இனம் என்றும், (தனித்தும் ஒருபொருள்மேல் மூன்று அடுக்கியும் வரும்) ஆசிரியத் தாழிசை நிலைமண்டிலஆசிரியப்பாவிற்கு இனம் என்றும் வேண்டுவாருமுளர். (வீ. சோ. 122 உரை)*

**நிலைமண்டிலம் –**

*நிலைமண்டில ஆசிரியப்பா காண்க. (இ. வி. 134)*

**நிலைவிருத்தம் –**

*நாற்சீர் நாலடியான் வரும் கலிவிருத்தத்துள், அடிதோறும் பொருள் முற்றுப் பெற்று வருவது மண்டில விருத்தம்; ஏனையது நிலைவிருத்தம் ஆகும். (வீ. சோ. 123 உரை)*

**நிலை வெளிவிருத்தம் –**

எ-டு : *'சேயரி நாட்டமும் செவ்வாயும் அல்குலுமோ-அம்மானாய்!*
*ஆய்மலரும் தொண்டையும் ஆழியந் திண்டேரும்-அம்மானாய்!*
*மாயிருந் தானை மயிடன் தலையின்மேல் - அம்மானாய்!*
*பாயின சீறடிப் பாவை பகவதிக்கே - அம்மானாய்!*

*இஃது அடிதோறும் பொருள் முடியாது தொடர்ந்து வந்த மையின், நிலை வெளிவிருத்த மாயிற்று. (அளவடிக்குப் புறத்தே ஒரு சீரே அடிதோறும் வந்தமையின் வெளிவிருத்த மாயிற்று)* *(யா. க. 68 உரை)*

*வெஞ்சமன் அஞ்ச வேலொ டெதிர்ந்தால்- நமரங்காள்!*
*அஞ்சல் எனும்சொல் ஆர்சொல வல்லார்- நமரங்காள்!*
*மஞ்சிவர் இஞ்சி மன்றம் இறைஞ்சீர் - நமரங்காள்!*
*நஞ்சம் அயின்றவர் நல்குவர் மாதோ - நமரங்காள்!'*

*என்னும் சிதம்பரச்செய்யுட்கோவைப் பாடலும் (40) அது.*

**நிழற்சீர் எட்டு –**

*நாலசையாலாகிய பொதுச்சீர் பதினாறனுள், நிரையிறுதி எட்டும் நிழற்சீராம். மூவசைச்சீர் எட்டன் இறுதிக் கண்ணும் நிரையசையினைக் கொணர்ந்து கூட்ட, இவை அமையும். நிரையீற்றுப் பொதுச்சீராம் இவை கனிச்சீர்போலக் கொள்ளப்படும், தளை கொள்ளுமிடத்து.*

| **சீர்** | **வாய்பாடு** |
|---|---|
| *நேர் நேர் நேர் நிரை* | *தேமாந்தண்ணிழல்* |
| *நிரை நேர் நேர் நிரை* | *புளிமாந்தண்ணிழல்* |
| *நிரை நிரை நேர் நிரை* | *கருவிளந்தண்ணிழல்* |
| *நேர் நிரை நேர் நிரை* | *கூவிளந் தண்ணிழல்* |
| *நேர் நேர் நிரை நிரை* | *தேமா நறுநிழல்* |
| *நிரை நேர் நிரை நிரை* | *புளிமா நறு நிழல்* |
| *நிரை நிரை நிரை நிரை* | *கருவிள நறு நிழல்* |
| *நேர் நிரை நிரை நிரை* | *கூவிள நறு நிழல்* |

*(யா. க. 13.உரை)*

**நிறைமொழி –**

*சொல்லிய சொல்லின் பொருளை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் சொல். (பயத்தல்-பயன்கொடுத்தல்)*
*(தொ. செய். 178 பேரா.)*

**நிறையீற்று ஒரு பொருள் இரட்டை –**

அடுக்கிவரும் நான்கு சீர்களும் ஓரெழுத்தும் குறையாது அமைதல்.

எ-டு : *'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ'.*

நான்கு சீர்களும் குறையாது அமைந்த இவ்வடியில், 'பாடுவேனோ' என்ற சொல் ஒரு பொருளையே தந்தவாறு.

*(யா. க. 53 உரை)*

**நிறையீற்றுப் பல பொருள் இரட்டை –**

பலவாறு பொருள் பெற்று நான்காக அடுக்கிவரும் சொற்கள் ஈற்றில் குறையின்றி இயல்வது.

எ-டு : *ஓடையே ஓடையே ஓடையே ஓடையே*

ஓடைக்கொடி, மலைவழி, நெற்றிப்பட்டம், நீரோடை எனப் பொருள் வேறுபட வந்தவாறு; ஈறு குறையாமல் வந்தவாறும் காண்க. *(யா. க. 53 உரை)*

**நிறையெண்நிரல் நிறை –**

முன் நிறுவிய பொருள்களுக்குப் பொருத்தமான பொருள் களைப் பின்னர் நிறுவி அமைப்பது.

எ-டு : *சாந்தும் தண்டழை யும்சுர மங்கையர்க்(கு)*
*ஏந்தி நின்றன இம்மலை ஆரமே;*
*வாய்ந்த பூம்படை யும்மலர்க் கண்ணியும்*
*ஏந்து சாகைய இம்மலை ஆரமே.*

இதனுள் இரண்டு பொருள்களை நிறுவிப் பின்னும் இரண்டு பொருள்களை நிறுவியமை நிறைஎண் நிரல்நிறை.

*(யா. க. 95 உரை.)*

**நீட்டல் விகாரம் –**

செய்யுட்கண் தொடை நயம் கருதிக் குறில் நெடிலாக நீட்டப் படுதல்.

எ-டு : *'பாசிழை ஆகம் பசப்பித்தான் பைந்தொடியை*
*மாசேனன் என்று மனங்கொளீஇ'*

இதனுள், 'பச்சிழை' எனற்பாலது அடியெதுகை நோக்கிப் 'பாசிழை' எனக் குறில் நெடிலாய் விகாரப்பட்டது.

*(யா. க. 95 உரை)*

**நுந்தை : அலகிடுமாறு –**

நுந்தை என்ற சொற்கண் உள்ள மொழிமுதற் குற்றியலுகரம் குற்றெழுத்துப் போல் அலகு பெறவே, நேர்பு அசையாகாது, நேர் நேர் அசையாகவே கொள்ளப்பெறும். (தொ.செய். 5. நச்.)

**நுவன்று அறைதல் –**

*கூறித் துணித்தல். அறைதல்-துணித்தல், 'அறைக் கரும்பு' (பொருந. 193) என்புழிப் போல. கொச்சக ஒருபோகுக்குக் கூறப்பட்ட இலக்கணங்களுள் 'தரவின்றாகித் தாழிசைபெறு தல்' என்ற ஒன்றனைத் துணித்து நீக்கி ஏனைய எல்லாம் அகநிலைக் கொச்சகக் கலிக்குக் கொள்ளுதல்.*

*(தொ. செய். 155 நச்.)*

**நூற்பா –**

*சூத்திரம்; பெரும்பான்மையும் இஃது ஆசிரிய யாப்பிற்று; சிறுபான்மை வெண்பாவானும் கட்டளைக் கலித்துறையா னும் ஆசிரிய விருத்தத்தானும் அமையும். சொற்சீரடியானும் நூற்பா அமையும். 'நூற்பா அமைப்பு'க் காண்க.*

**நூற்பா அகவல் –**

*நூற்பா இயலும் அகவற்பா. இவ்வகவல் நிலைமண்டில ஆசிரியமாகவே பெரும்பான்மையும் நிகழும். ஏகார ஈற்றா னன்றிச் சிறுபான்மை 'வழக்கத் தான' 'அதன்பால என்மனார்' என அகரம் ரகரம் முதலிய ஈற்றான் முடிதலும் உண்டு. இவ்வகவல், தொல்காப்பியப் பாயிரம் போல, இடையே சொற்சீரடி பயின்று வரவும் பெறும். இஃது இலக்கணம் அமைத்தற்குரிய அகவல் வகை (திவா. பக். 232)*

**நூற்பா அமைப்பு –**

*குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என்ற ஐவகை யடியானும், வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி மருட்பா பரிபாடல் என அடிவரையறை உளவாம் பாட்டினானும், நூல் உரை பிசி முதுமொழி மந்திரம் குறிப்புமொழி என அடிவரையறை இலவாம் பாட்டினானும், பா இன்றி ஒழுக லாறுடைய பல சொற்றொடரானும், கற்றோர் காட்டப்பட்ட பாட்டு நூல் உரை பிசி முதுமொழி மந்திரம் குறிப்புமொழி என எழுநிலத்து எழுந்த செய்யுள்நடைத்தாயும், அவற்றுள் பாட்டிற்குக் கூறிய பொருளொடும் கூடிக் குற்றமற்ற ஓசை செறியப்பட்டுப் புலவரான் மதிக்கும்படிக்கு, தலைமை சான்ற பன்னிரண்டு எழுத்து எனலாய நாற்சீரடியின் மிகுந்தும் குறைந்தும் வரும் பண்ணத்தியாகிய பாவினத்தோடும், நூல்கள் பயின்றுவரும் என்றவாறு. (நூல்-இலக்கணம்)*

*எனவே, நூலுட் பயிலும் சூத்திர அமைப்பு ஈண்டுக் கூறினார்.*

*'நூற்பா' எனவே, அஃது ஐவகையடியானும் அமைதலும், பெரும்பான்மையும் ஆசிரியம் வெண்பாவான் அமைதலும்,*

*சிறுபான்மை அடிவரையறை யிலதாய் அமைதலும், எழுநிலத்தெழுந்த செய்யுள்நடைத்தாய் அமைதலும், பா என்றற் கேற்ற ஓசைத்தாய் அமைதலும், நாற்சீரடியின் மிக்கும் குறைந்தும் வரும் பாவினத்துள் ஒன்றாய் அமைதலும் இலக்கணம் என்பது பெறப்படும். (மா.அ. 26).*

*'அரியே ஐம்மை' (தொ.சொ. 356) முதலாகச் சொற்சீரடியான் வருதலும் கொள்ளப்பெறும். 'துவன்று நிறை வாகும் ' (தொ.சொ. 332) என்பதும் அது. இவை முறையே குறளடி யானும் சிந்தடியானும் வந்தன; 'நிறை': அசைச்சீராகக் கொள்க. இவை தொல்காப்பிய உரியியல் நூற்பாக்கள்.*

**நெடில் எதுகை –**

*முதலெழுத்துக்கள் அளவொத்து நிற்ப, இரண்டாமெழுத் துக்கள் அடிதோறும் ஒன்றி வாராவிடினும், இரண்டா மெழுத்தாகிய உயிர்மெய்யில் மெய்மேல் ஏறிய உயிர்கள் நெடிலாக இருக்கும் எதுகை.*

எ-டு : *ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் ஒருசாரார்*
*கூகூ என்றே கூவிளி கொண்டார் ஒருசாரார்*
*மாமா என்றே மாய்ந்தனர் நீந்தார் ஒருசாரார்,*
*ஏதீர் நாகீர் என்செய்தும் என்றார் ஒருசாரார்.*

*இதன்கண் அடிதோறும் இரண்டாமெழுத்துக்கள் உயிர் மெய் நெடில்களாக அமைந்துள்ளமையின், நெடில் எதுகை யாம். (யா. க. 37)*

**நெடில் மிக்கு வருதல் –**

ஒரு செய்யுட்கண் நெட்டெழுத்தே மிக்கு வருதல்.

எ-டு : *'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'* (குறள் 127)

இதன்கண், இறுதிச்சீர் இரண்டொழிய ஏனை ஐந்து சீரிலும் நெட்டெழுத்தே மிகுதியும் பயின்றவாறு காண்க.

*(யா. க. 2 உரை)*

**நெடில்மோனை –**

முதலெழுத்து அடிதோறும் வெவ்வேறாயினும் அவை உயிர் நெட்டெழுத்தாக இருப்பின், அவ்வியைபு பற்றி நிகழ்வது.

எ-டு : ***ஆ**ர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்*
***ஓ**தலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.* (முதுமொழிக். 1)

ஆ, ஓ என்னும் இம் முதலெழுத்துக்கள் நெடிலாதல் ஒற்றுமை பற்றி, இது நெடில்மோனை யாயிற்று. *(யா. க. 37)*

**நெடிலடி –**

*1. ஐஞ்சீரான் வருமடி (யா.கா. 12) 2. இனித் தொல்காப்பிய னார் நாற்சீரடிதன்னையே பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழ் எழுத்து வரை உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்ப.*
*(தொ. செய். 39 பேரா.)*

*எ-டு :*

1. *'மூவா முதலா உலகம்மொரு மூன்று மேத்த'* (சீவக. 1 )
2. *'அணிநடை யசைஇய அரியமை சிலம்பின்'* (15 எழுத்து)
*'மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுதல்'* (16 எழுத்து)
*'ஒளிநில வயங்கிழை உருவுடை மகளிரொடு'* (17 எழுத்து)

*(எழுத்து எண்ணுமிடத்தே உயிரும் உயிர்மெய்யும் மாத்திரமே எண்ணப்படும்).*

**நெடுஞ்சீர் வண்ணம் –**

*நெட்டெழுத்துப் பயின்று வரும் சந்தம்.*

எ-டு : *'மாவா ராதே மாவா ராதே'*

*நெட்டுயிர் மடக்காக வரும் மிறைக்கவியும் அது.*

எ-டு : *நீரூர் பானா யாறே காடே*
*நீலூர் காயாப் பூவீ யாதே*
*யூரூர் பாகா தேரே*
*பீரூர் தோளாள் சீறூ ராளே*

*ஈ , ஊ, ஆ, ஏ என்னும் நெட்டுயிர் நான்கும் மடக்கி வந்தவாறு.*
*(தொ. செய். 220 நச்)*

**நெடுந்தூக்கு –**

*தூக்கு ஏழனுள் எழுசீர் கொண்டது. (சிலப். 3 : 16 அரும்.)*(L)

**நெடுவெண்பாட்டு –**

*ஏழு அடிமுதல் பன்னீரடிவரை நிகழும் வெண்பா. மூன்றடிப் பேரெல்லையுடைய குறுவெண்பாட்டினும், ஆறடிப் பேரெல்லையுடைய அளவியல் வெண்பாட்டினும் இது நெடிதாயிற்று. நான்கடி முதல் நிகழினும் ஒரோவழி நெடுவெண்பாட்டாம். (கலித்தொகையுள் (104) நச். உரையுள் காண்க.)* *(தொ. செய். 158 நச். உரை)*

**நெறி பெற்று வருதல் –**

*வழக்கப்பட்டு நடத்தல்; வழக்குப் பெற்று நடத்தல்.*
*(தொ. செய். 64)*

**'நேர்' அசைச்சீர் –**

நேர் என்னும் ஓரசைச் சீர்க்குரிய வாய்பாடு 'நாள்' என்பது. வெண்பாவின் ஈற்றிலேயே இது வாய்பாடு பெறும்.

எ-டு : *'நிலமிசை நீடுவாழ் வார்'* (குறள். 3) (யா. கா. 7)

**'நேர்' என்பதன் சொற்பொருள் –**

நேர் என்ற சொற்குப் பொருள் பல. அச்சொல்,

1. *'நேர்ந்தார், அரண்பல கடந்த அடுபோர்ச் செழிய'* என மாறாதற்கண்ணும்.
2. *'நேர்பொருள் நிறுத்தனன்', 'நேர்இன மணியை நிரல்பட வைத்தாங்கு'* (நன். 15) என ஒத்தற்கண்ணும்,
3. *'நேர்அசை'* என தனிமைக்கண்ணும்
4. *'நேரே நல்லன நேரே செல்வன'* என மிகுதிக்கண்ணும்,
5. *'நேர்நூல், நேர்ஆடை'* என நுட்பத்தின்கண்ணும்,
6. *'நாற்சீர் கொண்டது நேரடி'* எனச் சமனாதற்கண்ணும்,
7. *'நெட்டெழுத்தா நேரப்படும்,* என உடன்படுதற்கண்ணும்
8. *'நேர்போகி'* எனப் பாதிக்கண்ணும்
9. *'நேர்பட்ட இரண்டு படையும்'* எனத் தலைப்பாட்டின் கண்ணும்
10. *'நேராமல் காப்பது கல்வி,'நேரா நோன்பு,' 'நேரா நெஞ்சத் தான் நட்டான் அல்லன்'* என நிலைப்பாட்டின்கண்ணும்
11. *உப்பு நேர்ந்தார், புளிநேர்ந்தார்* எனக் கொடையின்கண்ணும்,
12. *'நேரிழை மகளிர்'* எனப் பொருத்தத்தின்கண்ணும் வரும்.

*(யா. க. 58 உரை)*

**நேர் ஒன்று ஆசிரியத்தளை –**

நேர்ஈற்று இயற்சீர் நின்று வரும்சீர் முதல்அசையொடு நேராக ஒன்றும் தளை.

எ-டு: 'உள்ளார் (1) கொல்லோ (2) தோழி (3) முள்ளுடை'

இவ்வடிக்கண் வரும் மூன்றுதளையும் நேர்ஒன்றாசிரியத் தளையாம். (யா. கா. 10)

**நேர்நிரை : வாய்பாடு –**

இவ்வியற்சீர்க்குரிய வாய்பாடு கூவிளம். (யா. கா. 7)

பாதிரி, வாய்த்தலை எனப் பல கூறுப. (தொ. செய். 13 நச்.)

**நேர் நிரை நிரை: வாய்பாடு –**

இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு கூவிளங்கனி (யா.கா.7), மாவரு சுரம் (தொ.செய். 20 நச்) என்பன.

**நேர்நிரை நிரைபு: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவரு கடறு, மாவரு குரவு (தொ. செய். 57 நச்) என்பன. ஒன்று குற்றுகர ஈறு, ஏனை யது முற்றுகர ஈறு. பின் வருவனவற்றுள்ளும் ஏற்றவிடத்தே கொள்க.*

**நேர்நிரை நேர்: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு கூவிளங்காய் (யா. கா. 7), மாவருவாய் (தொ. செய். 20 நச்) என்பன.*

**நேர் நிரை நேர்பு: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவருகாடு, மாவருகாவு (தொ. செய். 57) என்பன.*

**நேர் நிரைபு: வாய்பாடு –**

*இவ்வீரசைச் சீர்க்குரிய வாய்பாடு பூ மருது, காருருமு என்பன. (தொல்.செய். 16). இவை 'பாதிரி' போல, வருஞ்சீரொடு தளை கொள்ளும்.*

**நேர் நிரைபு நிரை: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவழங்குசுரம், மாவிரவு சுரம் என்பன (தொ. செய். 57)*

**நேர் நிரைபு நிரைபு: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவழங்கு கடறு, மாமருவு குரவு என்பன. மாமருவு கடறு, மாவழங்கு குரவு என்பனவும் கொள்க. இவ் வாய்பாட்டு வேறுபாடு ஏற்புழிஎல்லாம் கொள்க.*

**நேர் நிரைபு நேர் : வாய்பாடு –**

*இம் மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவழங்குவாய், மாவிரவு வாய் என்பன. (தொ. பொ. 57)*

**நேர் நிரைபு நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்குரிய வாய்பாடு மாவழங்குகாடு, மாமருவு காவு என்பன (தொ. செய். 57)*

**நேர்நிலை வஞ்சி –**

*சமநிலைவஞ்சி; அஃது இருசீரான் வரும்.(தொ.செய். 42 நச்.)*

எ-டு : *'ஓங்குதலை வியன்பரப்பின் . . . . .* (மதுரைக். 1-9)

**நேர்நேர் வாய்பாடு –**

*இவ்வியற்சீர்க்கு வாய்பாடு தேமா என்பது. (யா. கா. 7)*

**நேர் நேர் நிரை : வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர்க்கு வாய்பாடு தேமாங்கனி. (யா. கா. 7), மாசேர்சுரம் (தொ.செய். 20 நச்) என்பன: தூஉமணி என்பதும் ஒன்று (யா. கா. 26 உரை.)*

**நேர் நேர் நிரைபு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு மா சேர் கடறு, மா சேர் குரவு என்பன. இவற்றுள் முதலாவது குற்றுகர ஈறு, ஏனையது முற்றுகர ஈறு. பின் வருவனவற்றுள்ளும் ஏற்றவாறு கொள்க. (தொ. செய். 57 நச்).*

**நேர் நேர் நேர் : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு தேமாங்காய் (யா.கா. 7), மாசேர்வாய் (தொ. செய். 20 நச்.) என்பன.*

**நேர் நேர் நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு மாசேர்காடு. மாசேர்காவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர் நேர்பு : வாய்பாடு –**

*இவ்வீரசைச் சீர்க்கு வாய்பாடு போரேறு, நன்னாணு என்ப. (இவை 'பாதிரி' போல நின்று, வருஞ்சீரொடு தட்கும்) (தொ. செய். 16 நச்.)*

**நேர் நேர்பு நிரை : வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர்க்கு வாய்பாடு மாபோகு சுரம், மாமேவு சுரம் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர் நேர்பு நிரைபு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு மாபோகு கடறு, மாமேவு குரவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர் நேர்பு நேர் : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு மாபோகுவாய், மாமேவுவாய் என்பன (தொ. செய். 57 நச்.)*

**நேர் நேர்பு நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு மாபோகு காடு, மா மேவு காவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு அசை –**

*குற்றுகரமுற்றுகரங்களோடு இயைந்து வரும் நேரசை.*

எ-டு: வண்டு, நாகு, காம்பு; மின்னு, நாணு, தீர்வு.
(தொ. செய்.4 நச்.)

இதனை நேர் நேர் எனக் கொள்ப, பிற்காலத்தார்
(யா. க. 5 உரை)

**நேர்பு ஈற்று மூவசைச்சீர் பதினாறு –**

1. நேர் நேர் நேர்பு - மா சேர் காடு, மா சேர் காவு
2. நேர் நிரை நேர்பு - மா வரு காடு, மா வரு காவு
3. நேர் நேர்பு நேர்பு - மா போகு காடு, மா மேவு காவு
4. நேர் நிரைபு நேர்பு - மா வழங்கு காடு, மா மருவு காவு
5. நிரை நேர் நேர்பு - புலி சேர் காடு, புலி சேர் காவு
6. நிரை நிரை நேர்பு - புலி வரு காடு, புலி வரு காவு
7. நிரை நேர்பு நேர்பு - புலி போகு காடு, புலி மேவு காவு
8. நிரை நிரைபு நேர்பு - புலி வழங்கு காடு, புலி மருவு காவு
9. நேர்பு நேர் நேர்பு - பாம்பு சேர் காடு, மின்னுச் சேர் காவு
10. நேர்பு நிரை நேர்பு - பாம்பு வரு காடு, மின்னு வரு காவு
11. நேர்பு நேர்பு நேர்பு - பாம்பு போகு காடு, மின்னு மேவு காவு
12. நேர்பு நிரைபு நேர்பு - பாம்பு வழங்கு காடு, மின்னு விரவு காவு
13. நிரைபு நேர் நேர்பு - களிறு சேர் காடு, அரவு சேர் காவு
14. நிரைபு நிரை நேர்பு - களிறு வரு காடு, அரவு வரு காவு
15. நிரைபு நேர்பு நேர்பு - களிறு போகு காடு, அரவு மேவு காவு
16. நிரைபு நிரைபு நேர்பு - களிறு வழங்கு காடு, அரவு விரவு காவு (தொ. செய். 20, 57 நச்.)

**நேர்புஈற்று வஞ்சி உரிச்சீர்க்கு எடுத்துக்காட்டு –**

வான் பொய் யாது தீம் பெயல் பெய்து
மால் யாறு போந்து கால் சுரந்து பாய்ந்து
சுரை பொய் யாது நிரை வளம் சான்று
வரை யாது தந்து பலாப் பழுத்து வீழ்ந்து
பாம்பு கொள் ளாது வீங்கு சுடர் நீண்டு
வித்து நாறு வாய்த்து முத்துக் கரும்பு பூத்து
வரம்பு கொள் ளாது நிரம்பு பெருங் கூட்டு
விரும்பு நீங்கு மஞ்சு துயின்று பெயர்ந்து போந்து

என அப்பதினாறும் முறையே வந்தவாறு.
(தொல். செய். 20 நச்)

**நேர்பு என்ற அசைச்சீர் வாய்பாடு –**

*வண்டு, மின்னு முதலியனவாம். (தொ. செய். 4. நச்)*

**நேர்பு நிரை : வாய்பாடு –**

*இவ்வீரசைச் சீர்க்கு வாய்பாடு நீடு கொடி, நாணுத்தளை என்பன. இவை 'பாதிரி' போல, வரும் சீரொடு தட்கும். (தொ. செய். 14 நச்)*

**நேர்பு நிரை நிரை : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு பாம்பு வரு சுரம், மின்னு வரு சுரம் என்பன (தொ. செய். 57 நச்) இவற்றுள் முதலாவது குற்றுகர ஈறு, ஏனையது முற்றுகர ஈறு. பின் வருவனவற்றுள்ளும் ஏற்ற இடத்துக் கொள்க.*

**நேர்பு நிரை நிரைபு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு பாம்பு வரு கடறு, மின்னு வரு குரவு என்பன. (தொ. செய். 57 நச்)*

**நேர்பு நிரைநேர் : வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர்க்கு வாய்பாடு பாம்பு வரு வாய், மின்னு வரு வாய் என்பன (தொ. செய். 57 நச்)*

**நேர்பு நிரை நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு பாம்பு வரு காடு, மின்னு வரு காடு, மின்னு வரு காவு என்பன. (தொ.செய். 57 நச்)*

**நேர்பு நிரைபு : வாய்பாடு –**

*இவ்வீரசைச் சீர்க்கு வாய்பாடு, பாறு குருகு என்பது. (தொ. செய்.13 நச்) (முற்றுகர ஈறு காட்டடப்பட்டிலது. 'பேணு நிலவு' என்று கொள்ளலாம்).*

**நேர்பு நிரைபு அசைகளின் தேவை –**

*குற்றுகரம் புள்ளி பெற்று நின்றும், புள்ளி பெற்ற ஒற்றுப் போன்று ஒருங்கு நில்லாது, தன்னான் ஊரப்பட்ட மெய்யும் தானும் அரை மாத்திரைத்தாய் நிற்பினும் அகன்று இசைத்தலின், ஒற்று என்றலும் ஆகாது; ஒரு மாத்திரை பெற்ற உயிர் போல அகன்று இசையாமையின், உயிரென வேறோர் அலகு கொடுத்தலும் ஆகாது. இதனைச் செயற்பாலது வேறோர் அசைக்கு உறுப்பு ஆக்குதல் நோக்கி, நேர்பசை நிரைபசை என்பன தொல்காப்பியனாரான் கொள்ளப்பட்டன.*

ஒரு மாத்திரை பெற்ற முற்றுகரமும், 'வண்டு வண்டு வண்டு வண்டு' என்புழிப் பிறந்த அகவலோசை 'மின்னு மின்னு மின்னு மின்னு' என்புழியும் பெறப்படலானும், வெண்பா வின் ஈற்றடி 'வண்டு' எனக் குற்றுகர ஈற்றான் நின்றுழியும், 'கோலு' என முற்றுகர ஈற்றான் நின்றுழியும் ஒத்த ஓசையவாம் ஆகலானும், நேர்பசை நிரைபசைகளாயிற்று.

பின்னர் வந்த யாப்புஆசிரியர்கள் குற்றியலுகரம் அலகு பெறும் எனக் கொண்டாரேனும், அவர்க்கும் அலகு பெறா எனக்கொள்ள வேண்டிய இடமும் இருப்பதாற்றான், தேமா புளிமா என்ற வாய்பாடுகள் இருப்பவும், காசு பிறப்பு எனக் குற்றுகர ஈறாக வேறு வாய்பாடுகளும் கொள்ள வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது. (தொ. செய். 4. நச்.)

(தொல்காப்பியனார் தனிச்சொல்லின் இறுதியில் வரும் குற்றியலுகரம் அல்வழி வேற்றுமைப்பொருளில் தொடரில் வரும்போது முற்றியலுகர மாகும் (தொ. எ. 408 நச்.) என்று கூறியதனான், செய்யுளில் குற்றியலுகரங்கள் யாவும் முற்றியலுகரங்கள் போலாதலின், இருவகை உகரங்களுக்கும் ஒரே விதி கூறியுள்ளமை குறித்துணரத்தக்கது.)

"நேரசையொடு பின்னும் ஒரு நேரசை கூடியதே நேர்பு அசையாகவும், நிரையசையோடு பின்னும் ஒரு நேரசை கூடியதே நிரைபுஅசையாகவும் வருதலின், நேரசை நிரை யசைகள் மாத்திரமே அமையும்; நேர்பு நிரைபு அசைகள் இன்றியமை யாதன அல்ல" என்ப ஒரு சாரார். அன்னோர் நேரசையொடு பின்னும் ஒரு நேரசை கூடியதே நிரையசை ஆகலின் நேரசை ஒன்றே அமையும், நிரையசையென ஒன்று தேவையின்று என மறுக்க வாய்ப்பிருத்தலையும் நோக்குதல் வேண்டும்.

நேரசை ஒன்றே அமைவதாகப் பின்னும் நிரையசை நேர்பசை நிரைபசைகளைக் கொண்ட காரணம் பின் வருமாறு:

வடமொழியைப் போலக் குறில் நெடில் என்ற எழுத்துக் களையே சிறப்பாகக் கருதுவதாயின் நேரசை ஒன்றுமே அமையும். தமிழ் மொழியில் சொற்களுக்குச் சிறப்புத் தந்து எண்ணினமையின், இந்நான்கு அசைகளும் இன்றியமையா தவை ஆயின. தமிழில் யாதேனும் ஒரு பொருளைத் தருவதொரு சொல்லே அசையாகும் என்ற மரபு (பண்டு) கொள்ளப்பட்டது.

'அடி' என்ற சொல்லில் 'அ' மாத்திரம் ஒரு பொருளை உணர்த்துதல் இன்றி, 'டி' என்ற எழுத்தொடு கூடியே ஒரு

பொருளை உணர்த்துகிறது. ஆதலின் இவ்வீரெழுத்துக் களையும் தனித்தனியே பிரித்து இரண்டு அசைகளாகக் கோடல் முறையன்று.

அவ்வாறே, காது (- செவி) என்ற சொல்லிலுள்ள 'கா' என்ற எழுத்திற்கு ஈண்டுத் தனியாகப் பொருள் இன்மையானும், அது 'து' என்ற எழுத்தொடு சேர்ந்து நின்றே அப்பொருளை உணர்த்துதலானும் அவ்வீரெழுத்துக்களையும் தனித்தனி யாகப் பிரித்து இரண்டு அசைகளாகக் கொள்வதும் தக்கதன்று. இவ்வாறே ஓங், கு; வர, கு; குரங், கு எனப்பிரித்து அசைகோடலும் அமைதியன்று.

பல எழுத்துக்கள் கூடி ஒரு பொருளை உணர்த்துமிடத்து அவ்வெழுத்துக்களைத் தனித்தனியாகப் பிரித்துக் கூறுதல் அமைதியன்று என்ற பண்டையோர் மரபை உட்கொண்டு, நேரசையோடு, நிரை, நேர்பு, நிரைபு என்ற அசைகளும் கொள்ளப்பட்டன.

ஆயின், உவரி கவலை முதலிய மூவெழுத்துச் சொற்கள் இரண்டு அசைகளாகவே கொள்ளப்படுகின்றன எனின், அவற்றின் வேர்ச்சொற்களாகிய உவர் கவல் என்பனவற்றின் சிதைவாகிய உவ கவ எனப் பகுத்து அசைகோடலும் பொருந்துவதேயாம்.

யானை, ஞாயிறு, திங்கள் - இவற்றை யா, னை; ஞா, யிறு; திங்;கள் - என்று பிரிப்பதனால், ஒரு காலத்தே யா, ஞா, திங் என்பனவும் தனிப்பொருள் உடையனவாய் இருந்திருத்தல் வேண்டும் என்றே கருதல் வேண்டும். (அசை: இலக். கட்.).

பொருள் பயந்து நிற்கும் அசைகளே சிறப்பசை எனவும், அங்ஙனம் நில்லாத அசைகள் சிறப்பில் அசை எனவும் யாப்பருங்கல. உரையாசிரியர் குறிக்கிறார். (யா. க. 8)

எ-டு : பறவை, தோல்வி, - பற, தோல் - சிறப்பசை.
மாலை, ஞாயிறு - மா, ஞா - சிறப்பில்லாஅசை.

இவ்வாற்றால் நேர்பு நிரைபு அசைகளது இன்றியமையாமை உணரப்படும்.

**நேர்பு நிரைபு காணும் முறை –**

நேர்பு, நிரைபு அசைகள் வருமொழி வல்லெழுத்து வரு மிடத்தே வல்லொற்றொடு தோன்றி நிற்கவும்பெறும்.

எ-டு : 'சேற்றுக்கால் நீலம்' – குற்றுகரம் – நேர்பசை ஒற்றடுத்து வந்தது.
'நாணுத் தளையாக' (அகநா. 29) – முற்றுகரம் – நேர்பசை ஒற்றடுத்து வந்தது.

*'நெருப்புச்சினம் தணிந்த' (புறநா. 125) - குற்றுகரம் - நிரைபசை ஒற்றடுத்து வந்தது.*
*'கனவுக்கொல் நீ கண்டது' (கலி. 90) - முற்றுகரம் - நிரைபசை ஒற்றடுத்து வந்தது.*

எனவே, நடக்கும் உண்ணும் போல்வன புளிமா தேமா ஆவதல்லது நிரைபசை நேர்பசை ஆகா என்பது.

ஒற்று அடாது வருதலே பெரும்பான்மை.

*எ-டு : 'பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' (குறள். 5) - குற்றுகரம்*
*'புனைமலர்த் தாரகலம் புல்லு' - முற்றுகரம்.*

நேர்பு அசை ஒற்றடாது வந்தது.

*'பகவன் முதற்றே உலகு (குறள் 1) - குற்றுகரம்*
*'நாணுத்தாள் வீழ்த்த கதவு' (குறள் 1251) - முற்றுகரம்.*
*நிரைபு அசை ஒற்றடாது வந்தது. (தொ. செய். 10 நச்.)*

**நேர்பு நிரைபு நிரை: வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு வழங்கு சுரம், மின்னு விரவு சுரம் என்பன. (தொ. செய். 57. நச்.) முதலது குற்றுகர ஈறு, ஏனையது முற்றுகர ஈறு. பின்வருவனவற்றுள்ளும் ஏற்ற விடத்துக் கொள்க. (பாம்பு விரவுசுரம், மின்னு வழங்கு சுரம் என்பனவும் கொள்க.)*

**நேர்பு நிரைபு நிரைபு: வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு வழங்கு கடறு, மின்னு விரவு குரவு என்பன. (தொ. செய். 57. நச்.)*

**நேர்பு நிரைபு நேர்: வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு வழங்கு வாய், மின்னு விரவு வாய் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நிரைபு நேர்பு: வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர் வாய்பாடு பாம்பு வழங்கு காடு, மின்னு விரவு காவு என்பன. (தொ. செய். 57 நச்..)*

**நேர்பு நேர் : வாய்பாடு –**

*இவ்வீரசைச்சீர் வாய்பாடு போது பூ, மேவு சீர், சேற்றுக்கால், வேணுக்கோல் முதலாயின. (தொ. செய். 15 நச்.)*

**நேர்பு நேர் நிரை: – வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு சேர் சுரம், மின்னுச் சேர் சுரம் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர் நிரைபு : வாய்பாடு –**

*இம் மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு சேர் கடறு, மின்னுச் சேர் குரவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர் நேர் : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர் வாய்பாடு பாம்பு சேர் வாய், மின்னுச் சேர் வாய் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர் நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு சேர் காடு, மின்னுச் சேர் காவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர்பு : வாய்பாடு –**

*இவ்வீரசைச்சீர் வாய்பாடு வீடுபேறு என்பது. (தொ. செய். 13 நச்.)*

*(முற்றுகர ஈறு காட்டடப்பட்டிலது. 'மேவு காவு' எனக் கொள்க.)*

**நேர்பு நேர்பு நிரை: வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு போகு சுரம், மின்னுமேவு சுரம் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர்பு நிரைபு : வாய்பாடு –**

*இம்மூவசைச்சீர் வாய்பாடு பாம்பு போகு கடறு, மின்னு மேவு குரவு என்பன. (தொ.செய். 57 நச்.)*

**நேர்பு நேர்பு நேர் : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர் வாய்பாடு பாம்பு போகு வாய், மின்னு மேவு வாய் என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேர்பு நேர்பு நேர்பு : வாய்பாடு –**

*இம்மூவசைச் சீர்க்கு வாய்பாடு பாம்பு போகு காடு, மின்னு மேவு காவு என்பன. (தொ. செய். 57 நச்.)*

**நேரசை –**

*இரண்டெழுத்தான் ஆகாது ஓரெழுத்தான் ஆதல் நேரிது ஆதலின், நேரிய அசை நேரசை ஆயிற்று. இஃது ஆட்சியும் குணமும் காரணமாகப் பெற்ற பெயர். அது தனிக்குறிலும் தனிநெடிலும் ஒற்றடுத்த குறிலும் ஒற்றடுத்த நெடிலும் என நால்வகைத்து.*

எ-டு : உள், ளார்; தோ, ழி- ஒற்றடுத்த குறிலும், ஒற்றடுத்த நெடிலும், தனி நெடிலும், தனிக்குறிலுமெனக் காண்க. *(தொ. செய். 3 நச்.)*

ஐகார ஔகாரக் குறுக்கங்களும் நேரசையாம். *(யா. க. 6 உரை)*

**நேரசைக் கலித்துறை –**

நேரசையில் தொடங்கும் கட்டளைக் கலித்துறை. இதற்கு ஓரடிக்கு எழுத்து, ஒற்று ஒழித்து உயிரும் உயிர்மெய்யுமாகிய பதினாறாம். (ஆய்தம் அலகு பெறாமையே பெரும்பான்மை; அவ்விடத்து ஆய்தமும் ஒழித்து எழுத்தெண்ணப்படும்.)

எ-டு : *'கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிகண் ணார்நிழற்கீழ்'*

எனத்தொடங்கும் சிறப்புப் பாயிரம். *(யா. கா. 1)*

'கட்டளைக் கலித்துறை' காண்க.

**நேரசையின் மறுபெயர் –**

தனியசை என்பது. *(யா. க. 5 உரை)*

**நேரடி –**

சமநிலை அடி; அஃதாவது 4, 6, 8 என இரட்டைப்படை எண்ணுடைய அடி. தரவு நாற்சீரடியான் வருதல் முன்னரே உணர்த்தப்பட்டமையின், நேரடி என்பதற்கு அளவடி என்று பொருள் கொள்வதை விடுத்து, சமநிலை யாதலன்றி வியனிலையாக வாராத அடி என்றே பொருள் கொள்ள வேண்டும். *(தொ. செய். 141 நச்.)*

**நேரிசை –**

'நேரிசை வெண்பா' காண்க. *(இ. வி. 729)*

**நேரிசை ஆசிரியத்தின் இனம் –**

ஓரடி குறைந்து வரும் ஆசிரியத்துறை நேரிசைத்துறை எனவும் படும். இது நேரிசை ஆசிரியத்தின் இனமாம்.

எ-டு : *கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருவிராயின்*
*அரையிருள் யாமத் தடுபுலியே றும்மஞ்சி அகன்றுபோக*
*நரையுரும் ஏறுநுங்கை வேலஞ்ச நும்மை*
*வரையர மங்கையர் வவ்வுதல் அஞ்சுதும் வாரலையே*

இஃது ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை. *(வீ. சோ. 122)*

**நேரிசை ஆசிரியப்பா –**

ஈற்றடியின் மேலையடி முச்சீரான் அமைய, இறுதிச்சீர் உயிர் மெய்யெழுத்தான் முடியும் ஆசிரியப்பாவகை. இது பெரும்பான்மையும் ஏகாரத்தான் முடியும்.

எ-டு : *நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினு மாரன வின்றே சாரற்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே* (குறுந். 3)

இஃது ஈற்றயலடி முச்சீராக வந்தமையின், நேரிசையாசிரியப் பாவாம்; ஏனைய அடியெல்லாம் அளவடியாதலும் காண்க. (யா. க. 71)

**நேரிசை ஆசிரியம் –**

ஈரடிக்கு ஓரடியெதுகையாக, இரட்டைப்பட அடியெண்ணை உடையதாகியும், ஈற்றடிக்கு முதலடிக்கண் ஈரசை (-ஒரு சீர்) குறைவாகியும் வரும் அகவற்பா. (அறுவகை. யாப்பு. 4, 5, 6)

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா –**

தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்ற அளவிற்பட்ட நான்கு உறுப்புக்களை யுடையதாய், உடன்பட்ட ஒலியின தாய், நுண்பொருள்மேல் சொல்லப்படுவதாய், கலிப்பாவி னுள் புகழுடைத்தாதல் பற்றி இப்பெயர்த்தாயிற்று. (யா. க. 80 உரை)

முதலில் எடுத்தலோசையான் அமையும் தரவு என்ற உறுப் பினைப் பெற்று, அடுத்துத் தாழ்ந்த ஓசையவாய்த் தரவினை ஒத்தும் தரவினைவிடச் சுருங்கியும் வரும் அடிகளையுடைய தாழிசை மூன்று அடுக்கப்பெற்று, அடுத்துத் தனிச்சொல் பெற்று, இறுதியில் நலிதல் ஒலியையுடையதாய்த் தரவினை ஒத்தோ அதனிற் சிறிது சுருங்கியோ அருகிச் சிறிது மிக்கோ வரும் அடிகளையுடைய ஆசிரியச் சுரிதகத்தாலோ வெள்ளைச் சுரிதகத்தாலோ அகப்பொருள் பற்றியதாய் அமைவது நேரிசை ஒத்தாழிசைக்கலியின் அமைப்பு. (யா. க. 82 உரை)

**நேரிசை ஒத்தாழிசையின் இனம் –**

இது கலித்தாழிசை ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவது. 'கலித்தாழிசை' காண்க. (வீ. சோ. 123 உரை)

**நேரிசைச் சிந்தியல் வெண்பா –**

மூன்றடியால், நேரிசைவெண்பாவைப் போல வருவன; இவை ஒரு விகற்பத்தாலும் இருவிகற்பத்தாலும் வரும்.

எ-டு : *'அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து*
*சிறந்தார்க்குச் செவ்வன் உரைக்கும் - சிறந்தார்*
*சிறந்தமை ஆராய்ந்து கொண்டு.'*

இஃது ஒரு விகற்பம்.

*'நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு*
*சுற்றும்வண் டார்க்கப் புடைத்தாளே - பொற்றேரான்*
*பாலைநல் வாயின் மகள்.'*

*இஃது இரு விகற்பம். (யா. க. 59 உரை)*

**நேரிசைத் துறை -**

*ஆசிரியத்துறை என்னும் இனத்துள் ஓரடி குறைந்து வருவது. 'நேரிசை ஆசிரியத்தின் இனம்' காண்க. (வீ. சோ. 122 உரை)*

**நேரிசை மண்டில ஆசிரியப்பா -**

*நேரிசை, இணைக்குறள், நிலைமண்டிலம் என்னும் ஆசிரியங்கள் முதலும் இறுதியும் ஒன்றிவந்தால் அவற்றை நேரிசை மண்டில ஆசிரியம், இணைக்குறள் மண்டில ஆசிரியம், நிலைமண்டில மண்டில ஆசிரியம் என வழங்குப.*

எ-டு : *முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே*
*மலையன் ஒள்வேற் கண்ணி*
*முலையும் வாரா முதுக்குறைந் தனளே.*

*இது நேரிசை மண்டில ஆசிரியம். (யா. க. 73 உரை)*

**நேரிசை முதலியன காரணக்குறி ஆதல் -**

*மிக்க புகழும் சொல்லும் ஓசையும் உடைத்தாதலின் நேரிசை என்றும், இணைந்து குறைந்த அடியுடைத்தாதலின் இணைக்குறள் என்றும், எல்லா அடியும் முதல் நடு இறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் ஒத்துவருதலின் அடி மறி மண்டிலம் என்றும், ஒரு பெற்றியே நின்று எல்லா அடியும் ஒத்து நடத்தலின் நிலைமண்டிலம் என்றும் காரணம் பற்றிப் பெயரிடப் பட்டன. (யா. க. 70 உரை)*

**நேரிசை வெண்பா இலக்கணம் -**

*நான்கடியாய், முதல் மூவடியும் நாற்சீரினவாய், ஈற்றடி முச்சீர்த்தாய், இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் தட்டு, இரண்டாமடியின் இறுதிச்சீர் முதற் சீரோடு ஒத்த எதுகை பெற்ற தனிச்சீராய், ஒரு விகற்பத்தாலும் இரு விகற்பத்தாலும் வரும் வெண்பாவகை. இரண்டாமடி ஒரூஉத் தொடையாகவும் மேற்கதுவாய்த் தொடையாகவும் கீழ்க்கதுவாய்த் தொடையாகவும் முற்றுத் தொடையாகவும் எதுகை அமையும்.*

*இதன் முதலிரண்டடிகளும் மோனையும் எதுகையும் ஒருசார் முரணும் அளபெடையும் என்னும் இந்நான்கு தொடை*

யானுமல்லது, செந்தொடையானும் இயைபுத் தொடை யானும் வாரா.

இந்நேரிசை வெண்பா இரண்டு குறட்பாவின் இணைப்பாய், நடுவில் தொடைக்கேற்ற தனிச்சொல்லான் அடி நிரம்பி, முதற்குறட்பா மோனை எதுகை முரண் அளபெடை என்னும் நான்கு தொடைகளுள் ஒன்றாய் அமைய, இரண்டு குறட் பாவும் ஒத்த விகற்பத்தானும் ஒவ்வா விகற்பத்தானும் வரும். முதற் குறட்பாவின் இறுதிச்சீர் தனிச்சொல்லோடு இணை வதற்கு இடையே ஓரசையோ ஈரசையோ, ஒற்றுமைப்படாத உலோகங்களைப் பற்றாசு இட்டு ஒற்றுமைப்படுத்து வது போல, ஆசாக வரும். இவை ஓராசிடையிட்டதும் ஈராசிடை யிட்டதும் ஆகிய இரு குறள் நேரிசை வெண்பாவாம்.

(யா. க. 60 உரை)

**நேரிசை வெண்பா : காரணக்குறி –**

முன்னும் பின்னும் ஒவ்வாததாய் மறுதலைப்பட்ட விகற்பத் தான் (முதலீரடி ஒரு விகற்பம், பின்னீரடி ஒரு விகற்பம்) சொல்லுவர் ஆகலானும், ஒத்த ஒரு விகற்பத்தான் இசைத்த லானும், தனிச்சொல் உடைமையானும், மிக்க புகழிற்று ஆகலானும், நுண்ணிய பொருள்மேல் சொல்லப்படலானும், அளவிற்பட்ட நான்கடியான் சொல்லப்படலானும், புலவ ரான் உடன்பட்ட ஓசையும் சொல்லும் புகழும் உடைய தாகலானும், குறட்பா இரண்டான் அமையும் இந்நேரிசை வெண்பா முதற்குறளொடு தனிச்சொல் இடையே ஒன்றும் இரண்டும் அசை கூட்டி இசைக்கப்படுதலானும், தலைப் பட்ட சொல்லும் பொருளும் உடைத்தாகலானும், புகழ் வேண்டும் ஒருவர்க்குத் தாய்ப்பாட்டாய் (- உரிமையுடைய பாடலாய்)க் கொடைக்கடம் பூண்பித்துப் போய்ப் பாடுடைத்தாய் (- எங்கும் பரவிப் பொருத்தமாய்)க் கிடத்த லானும் 'நேரிசை வெண்பா' காரணம் பற்றிய பெயர்.

நேர் என்ற சொற்குரிய பன்னிரு பொருளும், இசை என்ற சொற்குரிய மூன்று பொருளும் நேரிசை வெண்பாவில் பொருத்தி விளக்கப்பட்டுள்ளன. (யா. க. 58 உரை)

**நேரிசை வெண்பா வகை –**

1. இரு விகற்ப நேரிசை வெண்பா, 2. ஒரு விகற்ப நேரிசை வெண்பா, 3. இரு விகற்ப ஓராசிடை நேரிசை வெண்பா, 4. ஒரு விகற்ப ஓராசிடை நேரிசை வெண்பா, 5. இரு விகற்ப ஈராசிடை நேரிசை வெண்பா, 6. ஒரு விகற்ப ஈராசிடை நேரிசை

வெண்பா, 7, 8, இரண்டாமடி மேல் கீழ்க்கதுவாய் எதுகைத் தொடை பெற்ற நேரிசை வெண்பா, 9. இரண்டாமடி முற்றெதுகைத் தொடை பெற்ற நேரிசை வெண்பா. 10. இரண்டாமடி அளபெடைத் தொடை பெற்ற நேரிசை வெண்பா, 11. இரண்டாமடி மோனைத் தொடைபெற்ற நேரிசை வெண்பா, 12.இரண்டாமடி முரண் தொடை பெற்ற நேரிசை வெண்பா, 13. இரண்டாமடி ஒரூஉ எதுகைத் தொடை பெற்ற நேரிசை வெண்பா என்று நேரிசை வெண்பா பல வகைப் படும். (யா. க. 60 உரை)

**நேரிசை வெண்பாவின் இனம் –**

நான்கடி விருத்தம் தனிச்சொல்லுடைத்தாக வருவது.

(வீ. சோ. 121 உரை)

**நேரீற்று மூவசைச்சீர் பதினாறு –**

1. நேர் நேர் நேர் - மா சேர் வாய்
2. நேர் நிரை நேர் - மா வரு வாய்
3. நேர் நேர்பு நேர் - மா போகு வாய்
4. நேர் நிரைபு நேர் - மா வழங்கு வாய்
5. நிரை நேர் நேர் - புலி சேர் வாய்
6. நிரை நிரை நேர் - புலி வரு வாய்
7. நிரை நேர்பு நேர் - புலி போகு வாய்
8. நிரை நிரைபு நேர் - புலி வழங்கு வாய்
9. நேர்பு நேர் நேர் - பாம்பு சேர் வாய்
10. நேர்பு நிரை நேர் - பாம்பு வரு வாய்
11. நேர்பு நேர்பு நேர் - பாம்பு போகு வாய்
12. நேர்பு நிரைபு நேர் - பாம்பு வழங்கு வாய்
13. நிரைபு நேர் நேர் - களிறு சேர் வாய்
14. நிரைபு நிரை நேர் - களிறு வரு வாய்
15. நிரைபு நேர்பு நேர் - களிறு போகு வாய்
16. நிரைபு நிரைபு நேர் - களிறு வழங்கு வாய்

(தொ. செய். 20 நச்)

**நேரீற்று வஞ்சி உரிச்சீர் எடுத்துக்காட்டு –**

நேரீற்று மூவசைச்சீர் பதினாறில், வெண்பாவுரிச்சீர் 4 நீங்கலாக வஞ்சியுரிச்சீர் பன்னிரண்டாம்.

'மேற்கோட்டுநீர் 3 கீழ்ப்பரந்துதன் 4
விழுக்கோட்டுமெய் 7 வியல்விசும்புதோய்ந் 8

*தோங்குமுன்னர்க்9 காம்புகிழியப் 10*
*பாய்ந்துசென்றுசென்11 றாங்குநலிபுநின் 12*
*றெதிர்ந்துமீண்டாங்13 கதிர்த்துக்கரைகொன் 14*
*றலங்குகோட்டுமுத்15 திலங்குநிலவுச்செய்16 . . . . . மூதூர். . . . '*

என்ற பாடலடிகளில் வஞ்சியுரிச்சீர் பன்னிரண்டும் வந்த வாறு. எண்ணிடப்படாத 1, 2, 5, 6 என்பன வெண்பாவுரிச் சீராம். ஆகவே 3, 4 முதலிய பன்னிரண்டனையும் நேர் நேர்பு நேர், நேர் நிரைபு நேர், நிரை நேர்பு நேர், நிரை நிரைபு நேர் முதலாகக் கண்டு கொள்க. (முன் தலைப்புள் வாய்பாடு காண்க.) (தொ. செய். 20 நச்.)

**நோக்கு என்னும் செய்யுள் உறுப்பு (1) –**

யாதானும் ஒன்றைத் தொடுக்குங்காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. அஃது ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்கப்படும். அஃது ஒரு நோக்காகவும், பல நோக்காகவும், இடையிட்ட நோக்காகவும் வரும்.

எ-டு : *அறுசுவை உண்டி அமர்ந்(து) இல்லாள் ஊட்ட*
*மறுசிகை நீக்கி உண்டாரும் - வறியராய்ச்*
*சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனின்; செல்வமொன்(று)*
*உண்டாக வைக்கற்பாற் றன்று.* (நாலடி 1)

இது செல்வ நிலையாமை கூறல் என்ற ஒரே நோக்காக வந்தது.

எ-டு : *அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;*
*பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;*
*வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்*
*பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.* (நாலடி. 172)

இது நல்வாழ்க்கைக் குரிய பல நெறிகளையும் கூறும் பல நோக்காக வந்தது.

எ-டு : *உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)*
*ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி*
*உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்*
*செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை*
*மறுவில் கற்பின் வாணுதல் கணவன்* (முருகு. 1-6)

என்ற அடிகளில் ஒளி என்பது அதன் அயற் கிடந்த தாளை நோக்காது கணவனை நோக்குதலின், இடையிட்டு நோக் கிற்று. (ஒளியையுடைய கணவன் என்க) (தொ. செய். 100 இள.)

செய்யுள் உலகத்தார்வழக்குப் போல நால்வகைச் சொற்க ளானும் யாக்கப்படும் எனவே, உலகவழக்குப் பேச்சுப் போல வெள்ளைமை கலந்து நில்லாது, செய்யுளடிகள் முழுமையும் ஒருசேர நோக்கிப் பயன் கொள்ளுமாறு ஒரு பொதுக் கருத்தினை உட்கொண்டு அமையுமாறு செய்தலே 'நோக்கு' என்னும் செய்யுளுறுப்பாம்.

எ-டு : *'முல்லை வைந்நுனை'* (அகநா. 4)

என்ற பாடலில் கூறப்படும் செய்திகள் யாவும், தோழி தலைவியது ஆற்றாமை கண்டு வற்புறுத்துதற்கு ஏதுவாயின செய்திகளாக இருப்பனவே என்பதனைக் குறித்து உணர்த்திய வாறு காண்க. (தொ. செய். 104 நச்.)

**நோக்கு என்னும் செய்யுளுறுப்பு (2) –**

யாப்பமைந்த செய்யுளின்கண் அமையும் ஓசையளவும்- ஓசையைப் பயக்கும் எழுத்தும் - அவற்றாலாம் அசையும் - இசையறுதி செய்யும் சீரும் - அடியும் - ஆகிய கருவியுறுப்புக் கள் யாவும், அச் செய்யுளைக் கேட்போர் செவியின்பமுறுத லோடு அதன் பொருளையும் பயனையும் மீண்டும் மீண்டும் கருதி இன்புறுதற்கு உரியவாகச் செய்யும் காரணம் 'நோக்கு' எனக் கொள்ளப்படும்.

கருதக்கருத ஒருகாலைக்கொருகால் பொருள் நுணுகிச் செல்வதற் கேற்றவாறு அவ்வுறுப்புக்கள் அமையும் அடிப் படையைக் காரணம் என்றார்.

மாத்திரை முதலியன அடியுள் அடங்குமேனும், அவை ஒவ் வொன்றும் நோக்குதற்குக் காரணமாக அமைதல் வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். செய்யுள் முழுதும் இந்நோக்கு எனும் உறுப்பு அமைந்துநிற்றல் வேண்டும்.

(தொ. செய். 104 ச. பால.)

## ப

**பஃறொடை வெண்பா –**

நான்கடியின் மிக்க பலவடியான் வரும் வெண்பா. இது நேரிசைவெண்பாவாகவும் இன்னிசைவெண்பாவாகவும் வரும்; ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வரும்; அவ்வாறு வருமிடத்தே முறையே ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா, ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா எனப் பெயர் பெறும். (யா. க. 62 உரை)

*பஃறொடை வெண்பா 5 அடிமுதல் 12 அடிகாறும் வருமென்பர் ஒரு சாரார்; 7 அடிமுதல் 12 அடிமுடிய வரும் என்பர் மற்றொரு சாரார். தொல்காப்பியனார் இதனை நெடுவெண்பாட்டு என்பர். (தொ. பொ. செய். 118 பேரா)*

*பஃறொடை வெண்பா 7 அடிமுதல் 16 அடிகாறும் வரும் எனவும், பல அடியானும் வரும் எனவும் கூறும் ஆசிரியரும் உளர்.*

**பஃறொடைவெண்பா : காரணக்குறி –**

*பல தொடையானும் தொடுக்கப்படுதலின் பஃறொடை வெண்பா என்பது காரணப்பெயர். (யா. க. 58 உரை)*

**பஃறொடை வெண்பாவின் இனம் –**

*நான்கடியின் மிக்கு வரும் வெண்டுறை.*

எ-டு : *வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்*
*உறவுற வரும்வழி உரைப்பன உரைப்பன்மன்*
*செறிவுறு தகையினர் சிறந்தனர் இவர்நமக்(கு)*
*அறிவுறு தொழிலரென் றல்லன சொல்லன்மின்*
*பிறபிற நிகழ்வன பின்.*

*இஃது ஐந்தடியாய் ஈற்றடி ஒரு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை; பஃறொடை வெண்பாவிற்கு இனமெனத் தகும்.*

**பகைத்தொடை –**

*1. முரண்தொடை 2. மாறுபட்டவற்றின் சேர்க்கை.* (L)

**படலம் –**

*ஒருபொருள் நெறியின்றிப் பலவேறு வகைப்பட்ட பொருளெல்லாவற்றிற்கும் வேறுவேறு இலக்கணம் கூறக் கருதியவற்றொடு பொருந்திப் பொதுவகையாகத் தொடர்ந்து கூறப்படுவது. அஃதாவது ஒருநெறிப்படாமல் விரவிய பொருள்கட்கெல்லாம் பொதுவாக மொழிவது. படலமாவது அதிகாரம் ஆம். (தொ. செய். 171 நச்)*

*வேற்றுமையுடைய பல பொருள்களால் தோற்றம் உடைத்தாகத் தொடர வைப்பது. (யா. வி. பாயிரம் உரை)*

**பண்ணத்தி –**

*பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி ஆயிற்று; ஆகவே இசைப்பாடல் என்பது. (பண்ணத்தியாவது பாவினம்.)*
*(தொ. செய். 173 இள.)*

*பண்ணத்தி என்னும் பாவகை அடிவரையறையுடைய தெனினும் ஆசிரியம் முதலிய பாட்டுக்களைப் போலல்லா மல் இசைத்தமிழ் மரபில் தோன்றி இயற்றமிழ்ப் பகுதியாக வழங்குவது.*

*அறுவகைப் பாக்களுக்கும் உரியதாக, அவற்றிடைக் கலந்த அற முதலாய மும்முதற்பொருளையும் அகமும் புறமும் ஆகிய திணைப்பொருளையும் தனக்குப் பொருளாகக் கொண்டு, அகவல் முதலாய பாட்டினைப்போல் யாப் பமைதி உடையதாய் வருவது பண்ணத்தியாம்.*

*இது பண்ணொடும் இசையொடும் கூடி யாழொடும் முழவொடும் பொருந்த வரின், இசைத்தமிழ்ப் பகுதியாம்; இசையின்றிப் பண்ணளவாய் ஓசை பெற்றுவரின் இயற் றமிழ்ப் பகுதியாம்; அஃதாவது பண்ணினை அகத்தே உடையது (பண்+அகத்து+இ) என்பது இதன் பொருள். நாட்டுப்பாடல் என இக்காலத்து வழங்கும் பாடல்கள் இப்பண்ணத்திவழி வந்தனவாம். பள்ளு முதலாய சிற்றிலக் கியங்கள் இதன்வழித் தோன்றியன எனலாம்.*

*(தொ. செய். 179 ச. பால.)*

**பண்ணத்திச் செய்யுள் –**

*பழம்பாட்டில் சொல்லப்பட்ட பொருளே தனக்குப் பொரு ளாகப் பாட்டும் உரையும் போலப் பண்ணத்தி செய்யப்படும்.*

*மெய்வழக்கு அல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃது எழுத்துப்பயிற்சி யில்லாத புறஉறுப்புப் பொருள் களைப் பண்ணத்தி என்ற பெயரால் கூறப்பட்டது. அவை யாவன நாடகச் செய்யுள் ஆகிய பாட்டுமடையும் வஞ்சிப் பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலாயின. அவை நோக்கு முதலாயின உறுப்பு இன்மையின் பாட்டு எனப்படா. பண்ணத்தி பெரும்பாலும் செவிலிக்கு உரித்து; உரையிடை யிட்ட பாட்டு (என்னும் பண்ணத்திவகை) கூத்திற்கே உரித்து.*

*பண்ணத்திக்கு மேலளவு பெரும்பான்மையும் 12 அடியே; சிறுபான்மை அவ்வெல்லையைக் கடந்தும் வரும்; 6 அடியின் குறைந்து வாராது; நெடுவெண்பாட்டாகி நிகழும்.*

*(தொ. செய் 180 - 183 பேரா)*

*இனி, இளம்பூரணர் உரைப்பது வருமாறு: (173 - 175)*

*பண்ணைத் தோற்றுவிக்கும் இசைப்பாடல்கள் பண்ணத்தி எனப்படும். இப்பண்ணைத்தோற்றுவிக்கும் செய்யுள்கள் பாட்டுக்களின் இயல்பையுடையனவாம். அவையாவன*

*சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படு வன. பண்ணத்தி பிசிச் செய்யுளை ஒத்து இரண்டடியானும் வரும். (173)*

எ-டு : *கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை*
*என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.*

*இது பிசியோடு ஒத்த அளவிற்றாகிப் பாலையாழ் என்னும் பண்ணிற்கு இலக்கணப்பாட்டாகி வருதலின் பண்ணத்தி எனப்பட்டது. (174).*

**பண்ணத்தி எனினும் பா இனம் எனினும் ஒக்கும் –**

*நாற்சீரடியின் மிக்கு வரும் பாட்டுப் பன்னிரண்டும் நாற்சீரடி யின் வேறுபட்டு வருதலும் கொள்ளப்படும் என்பது. எனவே, இருசீரடி முதலாக எல்லா அடியானும் மூன்றடிச் சிறுமை யாகப் பாவினங்கள் பயிலும். பன்னிரண்டாவன: ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என்ற நால்வகைப் பாவினும் அமைந்த தாழிசைதுறை விருத்தங்களாம். அவை ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம்; வஞ்சித்தாழிசை, வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம்; வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்; கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்பன.*

*ஆசிரியத் தாழிசை மூன்றடி ஒத்துவருவது சிறுபான்மை. ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருதலும் கொள்ளப்படும்.*

எ-டு : *'கன்று குணிலா' முதலாய மூன்று பாடல். (சிலப். ஆய்ச்சியர் குரவை.)*

*வஞ்சித்தாழிசை - குறளடி நான்கனான் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது.*

*வெண்டாழிசை - மூன்றடியான் வந்து வெண்பாவே போல முடிவது. சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன வெள்ளொத்தாழிசை எனப்படும்.*

*கலித்தாழிசை - அடிவரையறையின்றி ஒத்து வந்து ஈற்றடி சில சீர் மிக்கும் குறைந்தும் வருவது. இவை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரினும் ஈற்றடி மிக்கு வருதலின் கொச்சக ஒரு போகு எனப்படா.*

*இனி, ஆசிரியத்துறையாவது நான்கடியாய் இடையிடை சீர் குறைந்து வருவது.*

*வஞ்சித்துறை - குறளடி நான்கனான் தனித்து வருவது.*

*வெண்டுறை மூன்றடிச் சிறுமையாக, ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்து வருவது.*

*கலித்துறை - நெடிலடி நான்கனான் வருவது. அஃதாவது ஐஞ்சீரடி நான்கான் வருவனவும், பதினாறும் பதினேழும் எழுத்துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம்.*

*ஆசிரிய விருத்தம் - அறுசீரடி முதலாக மிக்க அடியான் நான்கடியும் ஒத்து வருவது.*

*வஞ்சிவிருத்தம் - முச்சீரடி நான்காய் வருவது.*

*வெளிவிருத்தம் - நான்கடியானும் மூன்றடியானும் அடிதோறும் தனிச்சொல் பெற்று வருவது.*

*கலிவிருத்தம் - நாற்சீரடி நான்கனான் வருவது.*

*இவையெல்லாம் உரையிற்கோடல் என்பதனானும், பிற நூல் முடிந்தது தானுடன்படுதல் என்பதனானும் கொள்ளப்படும்.*
*(தொ. செய். 175 இள.)*

**பத்தியம் –**

*பாதங்களால் நடைபெறுவது; பாவும் பாவினமும் ஆம்.*
*(வீ. சோ. 112 உரை)*

**பத்தியம் ஏழ்வகைப்படுமாறு –**

*குறள், சிந்து, திரிபாதி, வெண்பா, திலதம், விருத்தம், சவலை என்பன. இவை மிக்கும் குறைந்தும் வருவன இவற்றுப் போலியாம். (வீ. சோ. 126)*

**பத்து இயற்சீரும் வந்த பாடல் –**

எ-டு : *குருகுவெண் டாளி கோடுபுய்த் துண்டென*
*மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது*
*மருள்பிடி திரிதருஞ் சாரல்*
*அருளா னாகுதல் ஆயிழை கொடிதே*

*என்பது இதன்கண், நிரைபுநேர், நேர்நேர், நேர்புநேர், நேர்நிரை; நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரைநிரைபு, நேர்நேர்பு; நிரைநிரை, நிரைநிரை நேர்நேர்; நிரைநேர், நேர்நிரை, நேர்நிரை, நிரைநேர் என்ற சீர்கள் வந்துள்ளன.*

*நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை, நேர்நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரைநிரைபு, நிரைபுநேர், நேர்புநேர் என்ற பத்து இயற்சீர்களும் இவற்றிடையே காணப்படும்.*
*(யா.வி. பக். 449, 450).*

**பதினைந்து வகை அடிகள் –**

*குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் என்பனவற்றை இயலடி, உரியடி, பொதுவடி என்பனவற்றான் உறழ அடிகள் பதினைந்து வகைப்படும். (யா. க. 25 உரை)*

**பயன் (2) –**

*இன்ன செயலால் இன்னது நிகழும் என்று தொகுத்துச் சொல்லப்படும் பொருள் பயனாகும். ஒவ்வொரு பாட்டிற்கும் பயன் உண்டு. பயன் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்று.*

*(தொ. பொ. 515 பேரா.)*

**பரந்த மொழியான் நிகழும் தோல் –**

*தொன்மைத் தன்மையுடையது தோல் எனும் வனப்பாம். பரந்த மொழியாவது அறிவுடையோரானும் அருளாளர்களானும் பல கால் பேசப்பட்டுப் பயிலும் சொற்கள். அவற்றைப் 'பெருமொழி' என்பது வழக்கு.*

*தொன்றுதொட்டு வந்தும் என்றும் புதிதாகவே இருப்பது தோல். இவ்வகைத் தோலுக்கு எடுத்துக்காட்டு திருமுருகாற்றுப்படை. (தொ. செய். 237 ச.பால.)*

**பரிபாட்டு –**

*தாவிச் செல்லும் இசையினையுடைய பாட்டு. அஃதாவது செப்பலும் துள்ளலுமின்றி இடைநிகர்த்ததாய்த் தாவியும் தத்தியும் செல்லும் ஓசை. இது பெரும்பான்மையும் பண்ணொடு பொருந்துமாறு யாக்கப்படுதலின் 'பரிபா' என்னாமல் 'பரிபாட்டு' எனப்பட்டது. (தொ. செய். 121 ச. பால.)*

**பரிபாடல் –**

*பரிந்து வரும் பா; பரிபாட்டு எனவும்படும். இது கலியுறுப்புப் போலாது நான்குபாவானும் வந்து பல அடியாக நிகழும். இது வெண்பா உறுப்பான் வருதலேயன்றி, பா நான்கனுள் இன்ன பா என்றறியப்படும் நிலையினதன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றலுமுண்டு.*

*'மண்ணார்ந் திசைக்கும்' என்ற பரிபாடல் வெண்யாப்பு.*

*'ஆயிரம் விரித்த' என்ற பரிபாடல் வெண்பா உறுப்பாக. ஆசிரியத் தளையும் விரவித் துள்ளலோசைப் படவும் கூறப்படுதலின், பரிபாடல் எல்லாப் பாவுக்கும் பொதுவாய் நிற்கும் எனப்பட்டது.*

*பரிபாடலான் கூறப்படும் கடவுள்வாழ்த்தும் மலைவிளையாட்டும் புனல் விளையாட்டும் பிறவும் எல்லாம் காமம் கண்ணியே வரும். (தொ. செய். 120, 121 நச்.)*

**பரிபாடல் உறுப்புக்கள் –**

*சிறப்பில்லாதது என்று பொருள்படும் கொச்சக உறுப்பு, குறிலிணை பயின்ற அடிகளான் ஆகிய அராகம், சுரிதகம்,*

தரவு என்பனவற்றொடு நான்கு பாவையும் தனக்கு உறுப் பாகக் கொண்டு காமப்பொருள் கருதிப் பரிபாடல் நிகழும்.

பரிபாடலில் கொச்சக உறுப்புப் பயில வருதலின் அதனை முற்கூறி, அராகம் முதற்கண் வாராமையின் அதனை இடை வைத்து, சுரிதகம் எஞ்ஞான்றும் இறுதியிலேயே வருதலின் அதனை அதன்பின் கூறினார். எருத்து இன்றியும் பரிபாடல் வருமாதலின், எருத்து இறுதிக்கண் கூறப்பட்டது. (எருத்து - தரவையடுத்து, இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமை யாக வருவதோர் உறுப்பு) (தொ. செய். 117 இள.)

பரிபாடலில் ஆசிரியம் முதலிய நான்கு பாவும் விரவி வரும். அராகம் இன்றி வருதலும், கொச்சகம் ஈற்றடி குறைந்து வருதலும், அவ்வழி அசை சீராகி இறுதலும், கலிப்பாவிற்குக் கூறியவாறு ஆசிரியச்சுரிதகமும் வெள்ளைச் சுரிதகமும் வருதலும், அடுத்த அடியொடு தொடர்ந்த சொற்சீரடி வருதலும், முடுகியலொடு விரவித் தொடர்ந்து ஒன்றாகிய வெண்பா அடி வருதலும் காணப்படும். (தொ. செய். 121 நச்.)

**பரிபாடலுக்கு அடிவரையறை -**

பரிபாடலுக்கு உறுப்பாகிய வெண்பாவும் பொதுப்பாக்களும் ஆகியவற்றின் அடிகளின் கூடுதல் நானூறடியைக் கடந்து உயராமலும் இருபத்தைந்து அடிக்குக் கீழ்ச் சுருங்காமலும் அமைதல் வேண்டும். (தொ. செய். 162. நச்.)

**பரிபாடலும் கலிப்பாவும் -**

பரிபாடலைக் கலியுள் அடக்கலாம் என்பார் சிலர். கலியும் பரிபாடலும் எனத் தனித்தனிப் பாடலாக ஓதப்படலானும், உறுப்புக்களில் வேறுபாடுடைமையானும், இரண்டும் வெவ்வே றெனவேபடும். அராகஉறுப்பு இல்லாத முடுகிய லடி பரிபாடலுக்கு உண்டு. பரிபாடலைக் கலியுள் அடக்கின், எல்லாக் கலியுள்ளும் அராக உறுப்பு இல்லாத முடுகியலடி விரவி வரலாம் என்ற நிலை ஏற்பட்டு விடும்.

(தொ. செய். 130 பேரா.)

**பலபொருள் இரட்டை -**

நாற்சீரடி முழுதும் ஒருசீரே பொருள் வேறுபாட்டொடு நான்குமுறை அடுக்கி வருவது.

எ-டு: *'ஓடையே ஓடையே ஓடையே ஓடையே'*

'ஓடை' என்ற ஒரு சொல்லே நாற்சீரிலும் முறையே நீர்நிலை, ஒருமரம், யானையின் நெற்றிப்பட்டம், கிலுகிலுப்பை என நான்கு வேறுபட்ட பொருளில் வந்தவாறு. (யா. க. 51 உரை)

**பலவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா –**

*மூன்றடியாய் இரண்டாமடியின் ஈற்றில் தனிச்சொல்லின்றி அடியெதுகைத் தொடையமையாமலும், முன்னிரண்டடி இறுதிச் சீரில் ஒரூஉ எதுகை பெற்றுவைத்தும் அடியெதுகைத் தொடையமையாமலும் இன்னிசை வெண்பாவே போல வரும் வெண்பா.*

எ-டு : *'முல்லை முறுவலித்துக் காட்டின; மெல்லவே*
*சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற: போயினார்*
*திண்டேர் வரவுரைக்கும் கார்.*

*மூன்றடிகளும் அடியெதுகை பெறாது மூன்று விகற்பமாய் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன்கண் முன்னிரண்டடிகளும் ஒரூஉஎதுகைத்தொடை பெற்று வந்தவாறு.*
*(யா. வி. 59 உரை)*

**பலவிகற்ப இன்னிசைவெண்பா –**

*நேரிசைவெண்பாவின் இலக்கணத்தின் வேறுபட்டு வரும் இன்னிசைவெண்பா வகைகளுள் ஒன்று.*

எ-டு : *தலைக்கண் தலைஐந்தும் காணேன் கடைக்கணேல்*
*என்னா இருவரும் ஈங்கில்லை- பொன்னோடை*
*ஆழியாய் நன்மை அறிந்தேன் அலைகடல்சூழ்*
*ஏழியான் இக்கிடந்த ஏறு.*

*இஃது இரண்டாமடி இறுதியில் தனிச்சொல் (ஒரூஉத் தொடை) பெற்று இரண்டுக்கு மேற்பட்ட (மூன்று) விகற்பம் பெற்று வந்த இன்னிசை வெண்பா.* *(யா. க. 61 உரை)*

**பலவிகற்பக் குறள் வெண்பா –**

*அடியெதுகையின்றி மோனைவிகற்பங்கள் பெற்று வரும் குறள்வெண்பா.*

எ-டு : *உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)*
*அச்சாணி அன்னார் உடைத்து* (குறள் 667)

*இதன்கண் அடியெதுகை இன்று; முதலடியில் ஒரூஉ மோனை வந்தது; இரண்டாமடியிலும் முதலிருசீர்க்கண் மோனை வந்தது.* *(யா. க. 59 உரை)*

**பலவிகற்பப் பஃறொடை வெண்பா –**

*பலவாகிய அடியெதுகைத் தொடை நிகழுமாறு வரும் வெண்பா; நான்கற்கு மேற்பட்ட அடிகளால் நிகழும் வெண்பா பஃறொடை வெண்பாவாம். இதற்குப் பெருமை எல்லை பன்னிரண்டடி. தொல்காப்பியனார் 'நெடு வெண் பாட்டு' என்பர்.*

எ-டு : *பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்*
*என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்*
*பொன்னோடை நன்றென்றாள் நல்லளே-பொன்னோடைக்கு*
*யானைநன் றென்றாளும் அந்நிலையள்-யானை*
*எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்*
*திருத்தார்நன் றென்றேன் தியேன்.*

இதன்கண், முதல் மூன்றடிகளும் ஓரெதுகை; ஈற்றடியிரண் டும் ஓரெதுகை; நான்காமடி எதுகை பெறாது வந்தது. ஆகவே, மூன்றுவிகற்பத்தால் இப்பஃறொடைவெண்பா வந்தவாறு. *(யா. வி. 62 உரை)*

**பழிகரப்பு அங்கதம் –**

வசைப்பொருளினை வெளிப்படையாகக் கூறாமல் மறைவாகக் குறிப்பிடும் பாடல்.

எ-டு : *'தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்*
*உண்ணா ராகுப நீர்வேட் டோரே'* (புறநா. 204)

என்றவழி, "நின் செல்வம் கடல்போலப் பெரிதேனும் பிறர்க்கு இனிதாய் நுகரப்படாது" என வசையைக் கரந்து கூறியது போல்வன. (தொ. செய். 126 நச்).

இது பழிகரப்புச் செவியுறை அங்கதம், பழிகரப்பு அங்கதம் என இருவகைப்படும் (128). இவ்வங்கதம் வசைப்பொருளொடும் அதனால் பிறந்த நகைப் பொருளொடும் வரும். (129).

**பழிகரப்புச் செவியுறை அங்கதம் –**

அரசன் தனக்குரிய அரசியலில் தப்பிய நிலையைக் கூறும் கூற்றொடும், அவ்வறம் பொருள் இன்பம் பயக்கக் கூறும் கூற்றொடும் ஒரு செய்யுள் செய்தியை மறைவாகக் கூறி புலப்படுத்துவது.

எ-டு : *'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி'* (புறநா. 47)

இஃது அரசனுக்கு வருகின்ற துகளினை வெளிப்படையாகப் புலப்படுத்தல் இன்றிச் செய்யுள் செய்து, தமது சொல்லைக் கேட்டு அரசன் தவறு செய்ய அஞ்சினான் என்னும் பொருளை நிறுத்துதலால் பழிகரப்புப் செவியுறை அங்கதமாயிற்று. (தொ. செய். 12 நச்.)

**பற்றாசு –**

பொற்கொல்லர் நகைகளுக்கு இடும் உலோகத்துகள். இவை ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படுத்துதற்கு அவற்றினிடையே இடப்பெற்று உருக்கப்படுவன. அது போல,

முதற் குறட்பாவின் இறுதிச் சீர் இரண்டாமடியின் தனிச்சீராம் நான்காம் சீரோடு இணையாத நிலையில் அதனை இணைப்பதற்கு இடையே ஓரசையோ ஈரசையோ கூட்டி அம் மூன்றாம் சீரோடு இணைத்து நான்காம் சீரோடு தளை கொள்வர். மூன்றாம் சீரையும் நான்காம் சீரையும் இணைப்பதற்கு இடையே கூட்டப்படும் அசையே ஆசு எனப்படும்.

இதுபோலவே, சீர் அமைப்புக்குப் பயன்பட்டு அடி எதுகை காணும்போது கணக்கிடப்படாமல் விடப்படும் எழுத்துக் களாகிய ய் ர் ல் ழ் என்பனவும் 'ஆசு' என்று சொல்லப்படும். (யா. க. 60 உரை)

**பனுவல் இயல்பு –**

'அறுவகையிலக்கணம்' என்ற நூற்கண் நாலாம் பகுதியாகிய யாப்பிலக்கணத்துள் பனுவலியல்பு சொல்லப்பட்டுள்ளது.

நூல், பிரபந்தம், புராணம், காவியம் என்பன பனுவலின் வகைகள். இவற்றுள் நூல் ஆண்; பிரபந்தம் பெண்; ஏனை யவை அலி எனப்படும். பனுவல் உணர்த்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்பன முறையே மாதா பிதா குரு தெய்வம் என்பவர்களை ஒக்கும். நூல் எனும் வகையுள் இலக்கணம், இலக்கியம், சோதிடம், நீதி, மருத்துவம், சிற்பம் முதலிய திறமெல்லாம் சொல்லப்படும். பிரபந்தமாவது தெய்வம், அரசன், வள்ளல், சுவை நுகர் நன்மக்கள் ஆகியோரைத் துதிப்பது. புராணமும் காவியமும், மலை நதி நகர் நாடுகளின் வளங்கள், தெய்வச்செயல், வேந்தனது போர், அவன் செங்கோன்மை, சான்றோர் தன்மை போல்வன பலவற்றையும் வருணிப்பன. பாயிரம் பனுவலுக்குத் திலகமாவது. ஆசிரியன் கூறும் பொதுப்பாயிரம், தெய்வக் காப்பு, கொள்ளுமவர் செயல், பனுவலியற்றக் காரணம், பனுவற்பயன் என்பன வற்றையும் இயைந்த பிறவற்றையும் உணர்த்துவது. சிறப்புப் பாயிரம், பனுவலைச் செய்தோன் பெயர், சேர்ந்த அரங்கு, அதன் புகழ் முதலாயவற்றை உணர்த்துவது. பாயிரத்தினும் பனுவல் தொடக்கத்தேயுள்ள கடவுள் வாழ்த்து நூறுமடங்கு சிறந்தது. தெய்வ வணக்கம் செயப்படுபொருள் என்னும் இவற்றைச் சொல்லவாவது பாயிரம் வேண்டும்.

நூற்கு மெய்ப்பொருள் கொலை புலை மறுத்தல்; பிரபந்தத் திற்கு மெய்ப்பொருள் கொற்றமும், பெருங்கொடையும்; புராணம் காவியங்கட்கு மெய்ப்பொருள் கடவுள், தொண்டர் என்பர் உணர்ந்தோர். (நூல் முதலியவற்றில் கொலை புலை

*மறுத்தல் முதலியன வற்புறுத்தப்படும் பொரு ளாக இடம் பெற வேண்டும் என்பது கருத்து).*

*நூல்களின் பகுதிகட்கு அதிகாரம், இயல்பு, உருவகம் முதலாகப் பெயரிட்டுள்ளனர் புலவர். தசாங்கம், பவனி, தூது இவை முதலாகப் பிரபந்தத்தின் பிரிவு பல. காவியம் புராணம் இவற்றின் பிரிவு காண்டம், சருக்கம், படலம், கதி முதலியன. பிரபந்த வகை 96 என்ப; எனினும் இலகரி முதலாக நொண்டி ஈறாகிய வேறு பல விதமும் விளங்குகின்றன. பனுவலுக்கு உரிய பெயரை ஆக்கியோன் இடுதலே சிறப்பு.*

*இனி, யாப்பு இயல்பு சிலவும் பனுவல்இயலுள் கூறத்தகும்.*

*சுத்தம் பொலிந்து தோம் அற ஒழுகுதலின், வெண்பா அந்தணப்பெண் போலும். கட்டும் காவலும் போல் அளவு அமைதலின் கட்டளைக்கலித்துறை அரசர்பெண் போலும். வெண்டளை பிறழாது மேம்பட வரும் கலிப்பாவும் அந்தணப் பெண் போலும். விருத்தம் பலவும் தாழிசையும் வணிகச்சாதி யாம். மூன்றசைச்சீர் வரும் கொச்சகக் கலிப்பாவுக்கு இணை வேளாண்சாதியாம். பதம், சிந்து ஆதிய பாடல்கள் பாணப்பெண் ஆம். வண்ணம் சிதையாத தூநலவண்ணப் பாடல்கள் கற்புடைப் பெண் ஆம். எதுகைமோனைகளும் அளவும் இன்றி வேற்றுச்சீர் வேற்றடிகள் பல விரவிப் சொல் பொருள் முதலிய பலவற்றாலும் பிழைபடு பாடல்கள் பீடழி மகள் ஆம்.*

**பனுவலின் மெய்ப்பொருள் –**

*'பனுவலியல்பு' காண்க. (மூன்றாம் பத்தி)*

**பா –**

*சேட்புலத்திருந்து சொல்லும் பொருளும் புலனாகாத வகையில் ஒருவன் கூறியவழியும், இஃது இன்ன செய்யுள் என்றறிவதற்கு ஏதுவாகிப் பரந்துபடச் செய்வதோர் ஓசைத்தொகுதி.*
*(தொ. செய். 1. பேரா., நச்.)*

**பாஅ வண்ணம் –**

*சொற்சீரடி உடைத்தாய் நூற்பாவினுள் பயின்று வரும் வண்ணம். அகவலுள் இத்துணைப் பயிலாது.*

எ-டு : *'வடவேங்கடம் தென்குமரி'* (தொ.பாயிரம்)

*'எழுத்தெனப் படுப*
*அகரமுதல்*
*னகர இறுவாய் முப்பஃ தென்ப'* (தொ. எ. 1)
*'பெரியகட் பெறினே'* (புறநா. 235) (தொ. செய். 214 பேரா)

**பா என்னும் செய்யுள் உறுப்பு –**

*இது செய்யுளின் இனறியமையாத 26 உறுப்புக்களுள் ஒன்று. அஃதாவது சேட்புலத்திருந்து சொல்லும் பொருளும் புலனாகாதவாறு ஒருவன் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாய்ப் பரந்துபட்டுச் செய்வதோர் ஓசைத் தொகுதி; இவ்வோசை வேறுபாடுகளால் பாக்கள் பல வகைப்பட்டன. (தொ. செய். 1 நச்.)*

*இப்பா என்னும் உறுப்பு, தூக்கு என்று செய்யுளடிகளை அறுத்து இசைக்கும் உறுப்பின் தொடர்ச்சியாம். ஓரோர் செய்யுட்கண் ஒரே பாவும் வரும்; சிலபாக்கள் விரவியும் வரும். (தொ. செய். 105 நச்.)*

**பாக்களின் அடிச்சிறுமை –**

*வெண்பா, கலி, வஞ்சி. 2 அடி; அகவல்: 1 அடி. (சாமி. 154)*

**பாக்கள் முதலியவற்றின் இராகம் –**

*வெண்பாவிற்குரிய இராகம் சங்கராபரணம். அகவல், தாழிசை இவற்றுக்குத் தோடி, கலிக்குப் பந்துவராளி, கலித்துறைக்குப் பைரவி, விருத்தத்துக்கு மத்தியமாவதி - காம்போதி - கலியாணி - முதலிய பல, உலாவுக்கு சௌராட்டிரம், தோடையத்துக்குச் சௌராட்டிரம்-நாட்டை-என்பன, மங்களத்துக்கு மங்கள கௌசிகம், பிள்ளைக்கவிக்குக் கேதாரகௌளம், பரணிக்குக் கண்டாரவம் என இராகங்கள் சொல்லப்படுகின்றன.*

*இனிக் குணம் பற்றிய இராகத்துள், இரக்கத்துக்கு ஆகிரி, பியாகடை, நீலாம்புரி, புன்னாகவராளி, கண்டாரவம் என்பன; துக்கத்துக்கு ஆகிரி முதலிய இரக்க ராகங்களோடு வராளி; மகிழ்ச்சிக்குத் தந்நியாசி, சாவேரி, காம்போதி என்பன; யுத்தத்துக்கு நாட்டை என இராகம் சொல்லப்படும்.*

*இனிக் காலம் பற்றிய இராகத்துள், வசந்த காலத்துக்குக் காம்போதி, அசாவேரி தந்நியாசி என்பன; மாலைக்குக் கலியாணி, காபி, கன்னடம், காம்போதி என்பன; யாமத்துக்கு ஆகிரி; விடியலுக்குப் பூபாளம், நாட்டை, இராமகலி, தேசாட்சரி, இந்தோளம் என்பன; உச்சிக்குச் சாரங்கம், தேசாட்சரி என இராகம் சொல்லப்படும்.*

*எக்காலத்திற்கும் இயையும் இராகங்கள் ஆகிரி, இந்தோளம், சாரங்கம், இராமகலி, பூபாளம் என்னும் இவை நீங்க லானவை எல்லாம் என்க. (தொகை. பக். 35)*

**பாக்களின் அடிச்சிறுமை பெருமைகள் –**

*வெண்பாவிற்குச் சிறுமை ஈரடி; ஆசிரியப்பாவிற்குச் சிறுமை மூன்றடி; கலிப்பாவிற்குச் சிறுமை நான்கடி: வஞ்சிப்பா விற்குச் சிறுமை மூன்றடி.*

*வஞ்சிப்பாவிற்கு ஈரடிச் சிறுமையும் ஆசிரியச் சுரிதகத்திற்கு ஈரடிச் சிறுமையும் ஆம் எனக் கொண்டார் மயேச்சுரர்.*

*(யா. கா. 14 உரை)*

*இனி, வெண்பாவின் பெருமை ஏழடி; ஆசிரியப் பாவின் பெருமை ஆயிரம் அடி; வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, அங்கதம், கலிப்பா - இவற்றிற்குப் பெருமையின் எல்லை உரைப்போர் குறிப்பே என்றார் நத்தத்தனார்.*

*(யா. க. 32 உரை)*

*பாக்களின் அடிப்பெருமை உரைப்போர் குறிப்பே என்றா, காக்கைபாடினியாரும் அவிநயனாரும்.* *(யா. வி. பக். 132)*

*ஆசிரியப்பாவின் அடியின் பேரெல்லை. ஆயிரம்; வஞ்சிப்பா வின் அடியின் பேரெல்லை ஆயிரம்; வெண்பா, அங்கதம் இவற்றின் அடியின் பேரெல்லை பன்னிரண்டு; கலிவெண்பா, கைக்கிளை, செவியுறை, வாயுறை புறநிலை என்பன வற்றிற்கு மேலெல்லை இல்லை என்றார். தொல்காப்பியனார்.*

*(செய். 157, 108, 158, 159, 160 நச்.)*

*வெண்பாவிற்கு உயர் எல்லை ஏழடி; அதற்கு மேலும் வரலாம். ஆசிரியப்பா அடியின் பெருமைக்கு எல்லை ஆயிரம் என்றார் சங்கயாப்புடையாரும் பல்காயனாரும்.*

*(யா. வி. பக். 133.)*

*ஆசிரியம் வஞ்சி இவற்றின் அடிப்பெருமை ஆயிரம் என்ப; கலி நீங்கலாக ஏனைய பாக்களுக்குப் பொருள் முடியும் அளவு அடிகள் மிக்கு வரலாம்; கலிப்பா, தன் உறுப்புக்களுக்குக் கூறிய அடிப்பெருமையைக் கடவாமல் வருதல் வேண்டும்; கொச்சகக்கலியுள் வரும் தாழிசைகளுக்கு எண்ணிக்கை வரையறை இல்லை என்றார் மயேச்சுரனார்.(யா. வி.பக். 133.)*

*ஆசிரியம் ஆயிரம் அடியாகிய பேரெல்லை யுடையது; வெண்பாவின் அடிப்பெருமை பன்னிரண்டு; வஞ்சியின் பேரெல்லைக்குரிய அடிவரையறை இல்லை என்றார் பரிமாணனார்.*

*யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் பாக்களின் அடிகளுக்குப் பேரெல்லை பாடுவோர் கருத்தின் அளவே என்னும்.* *(யா. க. 32 உரை, யா. கா. 14.)*

எனவே, பாக்களின் அடிகளுக்குச் சிற்றெல்லை கூறுவதில் இலக்கண ஆசிரியர் யாவரும் ஒருபடித்தான கருத்துக் கொண்டுள்ளது போல அடிப்பெருமை கூறற்கண் ஒருபடித் தான கருத்துக் கொண்டிலர் என்பது தெளிவு.

**பாக்களின் ஓசைகள் –**

வெண்பாவின் ஓசை செப்பல்; ஆசிரியப்பாவின் ஓசை அகவல்; மருட்பாவின் ஓசை இவ்விரண்டும் விரவியது; கலிப்பாவின் ஓசை துள்ளல்; வஞ்சிப்பாவின் ஓசை தூங்கல்; பரிபாடலின் ஓசை, அதன்கண் அமைந்த ஆசிரியம் வெண்பா கலி வஞ்சி என்ற நால்வகைப் பாக்களின் ஓசைகளே.

செப்பலும் அகவலும் மருட்பாவின்கண் இடையீடின்றிக் கலந்தாற்போலத் துள்ளலும் தூங்கலும் யாண்டும் கலந்து வாரா.

எனவே, பிற்காலத்து ஆசிரியர்கள் இனம் என்று கொண்டு இவ்வோசைகளைச் கலத்தல் தொல்காப்பியனார்க்கு உடன் பாடன்று. இசைக்குப் பண்ணும் திறமும் பகுத்தாற்போல இயற்குப் பாவும் இனமும் பகுக்கப்படவில்லை.

(தொ. செய். 81-86 நச்.)

**பாக்களின் தொகை விரி –**

அடிப்படைப் பாக்கள் ஆசிரியம் வெண்பா என இரண்டே ஆசிரிய விகற்பமாகி அகவலோசையில் தூங்கலோசை விரிந் தடங்கும். ஒழிந்த வெண்பா விகற்பமாகிச் செப்பலோசையில் துள்ளலோசை விரிந்தடங்கும்.

*'வீடுபேறு மிக விழைந்து, நீடுநினைந்து நெடிதிருந்து'*

நேர்புநேர்பு நிரைநிரைபு நேர்புநிரைபு நிரைநிரைபு என ஆசிரியச்சீரான் வஞ்சித்தூக்குப் பிறந்தது.

*'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்'* (குறள் 377)

தேமாங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய் என வெண்சீர் வெண்டளை முழுதுமாக வரும் வெள்ளடிக்கண் கலிக்குரிய துள்ளலோசை பிறந்தது.

ஆசிரியமும் வெண்பாவும் இயல்பான பாக்கள். ஏனைய இரண்டும் விகாரம் என்பது உணரப்படும். ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா இவற்றில் அருகிவரும் துள்ளிய கலி யோசை ஒருவகையான் வெண்பா நடைத்தே ஆம்.

(தொ. செய். 107, 108 நச்.)

**பாசி நீக்கம் –**

பாசி முறையாக நீங்குவது போல, அடிதோறும் பொருள் முற்றுப்பெற்று நிற்பதொரு பொருள்கோள். இதனைப் பிற இலக்கண நூலார் யாற்றுநீர்ப் பொருள்கோள் என்ப. (L)

எ-டு : *'சென்றார் வருவது நன்கறிந் தேன்; செருச் செந் நிலத்தை*
*வென்றான் பகைபோல் மெலியல்; மடந்தை! உம் வெற்பெடுத்து*
*நின்றான் அளந்த நிலமும் குளிர்ந் தது; நீள்புயலால்*
*பொன்தான் மலர்ந்து பொலங் கொன்றை தாமும் பொலிந்தனவே'.*

(பாண்டிக். 318)

இதனுள் 'நன்கறிந்தேன்' எனவும், 'மடந்தை! மெலியல்' எனவும் 'நிலமும் குளிர்ந்தது' எனவும் 'கொன்றை தாமும் பொலிந் தன' எனவும் அடிதோறும் ஒரு கருத்து முற்ற வினைச்சொல் முற்றி நின்றவாறு, பாசிநீக்கு ஆம். (இறை. அ. 56 உரை)

**பாட்டாங்குக் கிளத்தல் –**

பாட்டினைப் போலக் கூறுதல்.

ஓசையை ஒழித்துச் சீரும் தளையும் அடியும் படக் கூறின் 'பாட்டாங்கு' ஆகாது என்பது. அடியும் தொடையும் பெற வந்தனவாயினும், நூற்செய்யுளாகவோ உரைச்செய்யு ளாகவோ கொள்ளப்படும்.

தொல்காப்பிய நூற்பா ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணம் உடைத்தாயினும் ஓசையின்மையின் ஆசிரியம் எனப்படாது நூலின் பாற்படும். (தொ. செய். 82 இள)

**பாட்டாங்குக் கிளவார் –**

ஆங்கு என்றது முதல்நூலாகிய அகத்தியத்தினை.

(தொ. செய். 86 நச்.)

பாட்டினைப் போலக் கூறார்; பாட்டாங்குக் கூறுதலாவது ஓசை ஒழித்துச் சீரும் தளையும் அடியும்படக் கூறுதல். அவ்வாறுபடக் கூறுதலால் பாட்டாங்கு ஆகாது என்பதும், அடியும் தொடையும் பெற வந்தனவாயினும் நூலின்பாலோ உரையின்பாலோ படும் என்பதும் கொள்ளப்படும். ஆங்கு: உவமஉருபு. (தொ. செய். 82 இள.)

பாட்டின்கண் வேறு இலக்கணம் கூறப்படாது. நான்கு பாவினையும் நோக்கி, 'ஆங்கு' என்றான்.

(தொ. செய். 86 பேரா)

**பாட்டாவது –**

பாட்டு என்பதனுள் பாவும் அடங்கும். பாட்டாவது, அறம் முதலாகிய மும்முதற்பொருளைப் பயனாகக் கொண்டு,

அகமும் புறமுமாகிய பொருளைத் தழுவி, மாத்திரை முதலாகிய செய்யுளுறுப்புக்களுள் வேண்டுவன பெற்று நிகழும் ஆசிரியம் - வெண்பா- கலி - வஞ்சி - மருட்பா - பரிபாடல் - என்னும் அறுவகையினதாகும்.
(தொ. செய். 79 ச. பால.)

**பாட்டின் அடிவரையறை –**

ஆசிரியப்பாவிற்குச் சிற்றெல்லை 3 அடி ; பேரெல்லை 1000 அடி. வெண்பாவிற்குச் சிறுமை குறுவெண்பாட்டு எனும் ஏழு சீராகிய இரண்டடி; பெருமை 12 அடி. பரிபாடற்குச் சிறுமை 25 அடி; பெருமை 400 அடி.(தொ. செய். 157, 158, 162 பேரா.)

ஆசிரியத்திற்கு ஓரடியும், வெண்பாவிற்கு இரண்டடியும், வஞ்சிக்கு மூன்றடியும், கலிக்கு நான்கடியும் சிற்றெல்லையாகக் கூறும் **அவிநயம்.** (யா. வி. பக். 132)

வெண்பாவிற்குச் சிறுமை 2 அடி; அகவற்பா வஞ்சிப்பாக்கட் குச் சிறுமை 3 அடி; கலிப்பாவிற்குச் சிறுமை 4 அடி; பெருமை இம்மூன்று பாவிற்கும் வரையறையில்லை என்று கூறுவன யாப்பருங்கலமும் (32) யாப்பருங்கலக் காரிகையும் (14). முத்து வீரியமும், சிதம்பரப்பாட்டியலும் இம்முத்திறப்பாக்களுக் கும் சிறுமை இவற்றையே சொல்லி, இவற்றுக்குப் பெருமை வரையறை யின்று எனக் கூறும்.(மு.வீ. யாப்பு. 19-23; சித. பாட். 5)

அகவலுக்குச் சிறுமை ஓரடி; வெண்பா, வஞ்சி, கலி இவற்றுக் குச் சிறுமை இரண்டடி எனச் சாமிநாதம் கூறும். (154)

**பாட்டின் இலக்கணம் –**

யாப்புறச் செய் பாட்டென்பது பைந்தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கும் யாப்பிலக்கணங்கள் அமையச் செய்யப் பட்டுப் பா என்னும் உறுப்புக் காரணமாக மிகுந்தொலிக்கும் இயல்பினை யுடையது.

பாட்டு, நூல், உரை, பிசி, மந்திரம், முதுசொல், குறிப்புரை எனப்பட்ட செய்யுள் ஏழனுள்ளும் பா உறுப்பாக இசைக் கப்படுவது பாட்டு ஒன்றே. இப் பா என்பது யாதெனின், தொலைவில் நின்று ஒருவன் ஒருபாட்டை ஓதும்போது, அந்தப் பாட்டின் எழுத்தும் சொல்லும் தெளிவாக விளங்க வில்லை யாயினும், அவ்வோ சையைக் கொண்டே அஃது இன்ன வகைப் பாட்டு என்று இனம் கண்டறிய இயலும்; அவ்வாறு மிக்கொலிக்கும் ஓசையே பா என்பது. இஃது உறுப்பான் வந்த பெயர்; பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை என்பது இதன் பொருள். (இ. வி. பாட். 2 )

**பாட்டின் வகை –**

*பா உறுப்பான் எழுந்தொலிக்கும் பாட்டின்வகையாவன ஆசுகவி, மதுரகவி, சித்திர கவி, அகலக்கவி என்பன.*

*(இ. வி. பாட்.3)*

**பாட்டு –**

*1. பா உறுப்புத் தோன்ற யாக்கப்படும் செய்யுள். 2. பாடப் படும் கீதம். 3. கீர்த்தனை.* (L)

*பாட்டாகிய செய்யுள் அடிவரையறை உடையது. ஏனைய உரை, நூல், முதலிய செய்யுள்களுக்கு அடிவரையறை இல்லை. (தொ. பொ. 476, 477 பேரா.)*

**பாதிரி: இதனுள் அடங்குவன –**

*போது பூ - நேர்புநேர்; போரேறு - நேர்நேர்பு; பூமருது - நேர்நிரைபு என இம்மூன்றும் நேர்நிரையாகிய பாதிரியுள் அடங்கும். (தொ. செய். 15, 16 நச்.)*

**பா – தொகை, வகை, விரி –**

*வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்று பாவின் தொகை ஐந்தாகும்.*

*குறள், சிந்து, நேரிசை, இன்னிசை, பஃறொடை என வெண்பா வகை 6; நேரிசை, இணைக்குறள், நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம் என ஆசிரியப்பா வகை 4; நேரிசை ஒத்தாழிசை, அம்போதரங்க ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசை, வெண்கலிப்பா, தரவுகொச்சகம், தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம் எனக் கலிப்பா வகை 9; குறளடி, சிந்தடி என வஞ்சிப்பா வகை 2; புறநிலை, வாயுறை, செவியுறை, கைக்கிளை என மருட்பா வகை 4; இவ்வாறாகப் பாவின் வகை 25 ஆம்.*

*குறள் வெண்பா, விகற்பக்குறள் வெண்பா;*

*நேரிசைச்சிந்தியல் ஒரு விகற்பம், இருவிகற்பம்;*

*இன்னிசைச் சிந்தியல், ஒரு விகற்பம், பலவிகற்பம்;*

*ஒரு விகற்ப, இருவிகற்ப நேரிசை வெண்பா, ஒருவிகற்ப, பல விகற்ப இன்னிசை வெண்பா;*

*ஒத்த விகற்ப, ஒவ்வா விகற்பப் பஃறொடைவெண்பா;*

*நேரிசை முதலிய நான்கு ஆசிரியப்பாவினையும் இன்னியல் விரவியல் என்னும் இரண்டானும் முரண எட்டாக வரும் ஆசிரியப்பா;*

*வெள்ளைச் சுரிதக, அகவற் சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா; அளவியல், அளவழி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா; அளவியல், அளவழி வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா;*

*கலிவெண்பா, வெண்கலிப்பா; இயல் சுரிதகத் தரவு கொச்சகக் கலிப்பா, இயல் சுரிதகத் தரவிணைக் கொச்சகக் கலிப்பா; குறை, சிஃறாழிசை, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா; இயல், அயல், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா;*

*இயல், விரவியல் குறளடி வஞ்சிப்பா; இயல் விரவியல் சிந்தடி வஞ்சிப்பா;*

*சமநிலை, வியநிலை என்னுமிரண்டனோடும் வாயுறை முதலிய நால்வகை மருட்பாக்களையும் உறழ வரும் எட்டு மருட்பா;- என இவை பாவின் விரியாம்.*

*(யா.க.பாயிரம். உரை)*

**பா நிலை வகை –**

*பாவி நின்ற நிலைவகை; பலவாறு விரித்துரைக்கப்பட்ட நிலைகளையுடைய கொச்சகக் கலிப்பாவின் வகைகள்.*

*(தொ. செய். 155)*

**பாரதம் –**

*பழையதாய் நிகழ்ந்த செய்தியைக் குறிப்பிடும் (தொன்மை என்ற) தொடர்நிலைச் செய்யுளுக்குப் பாரதம் எடுத்துக் காட்டு. (யா. வி. பக். 399)*

**பாவகை –**

*வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா எனப் பா ஐவகைப்படும். வெண்பா முதற்கண் வந்து ஆசிரியமாய் இறும் மருட்பா ஏனைய நான்கு பாக்களைப் போலச் சிறப்பு இன்று. (யா. க. 55)*

**பாவகை: ஒரு சாரார் கூற்று –**

*ஒருசார் யாப்பிலக்கண நூலார், குறளும், சிந்தும், திரிபாதி யும், வெண்பாவும், திலதமும், விருத்தமும், சவலையும், குறட்போலி சிந்துப்போலி முதலாக இவ்வேழனது போலி யும் எனப் பாவகை பதினான்காம் என்பர். அவற்றுள், குறள், சிந்து, வெண்பா, விருத்தம் என்னும் நான்கும் எல்லா ஆசிரி யர்க்கும் ஒப்ப முடிந்த இலக்கணத்தனவாம். (வீரசோழிய நூலார் இரண்டடிப்பாடல் சீர் ஒத்து முடிவதனையே சிந்து என்பர்.) அடிமூன்றாய்ச் சீர் ஒத்து முடியும் பாடல் திரிபாதி எனவும்,*

*கட்டளைக்கலித்துறைப் பாடலே திலதம் எனவும், குறள் முதலான ஆறும் சீர் தளை வழுவி வருதல் சவலை எனவும், குறள் முதலான ஏழும் தம் சீர் அசை அடி இவற்றில் சுருங்கி வருவன அவ்வவற்றுப் போலி எனவும் கூறுப.*

*(தென். இயற். 41, 42)*

**பாவகை நான்கு –**

*ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனப் பாவகை நான்கு. ஆசிரிய நடைத்து வஞ்சி ஆகலானும், வெண்பா நடைத்துக் கலி ஆகலானும், ஆசிரியம் வெண்பா என்ற அடிப்படைப் பாடல்களை அடுத்து அமைந்த வஞ்சியும் கலியும் சிறப்பில என்று நீக்கத்தக்கன அல்ல என்று கோடற்கு ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்று பாவகை நான்கும் முறைப் படுத்துக் கூறப்பட்டன. (தொ. செய். 105 நச்)*

**பாவண்ணம் –**

*நூற்பாவுக்குரிய சந்தம் (தொ. பொ. 526 பேரா.)*

**பாவிற்குரிய பொருண்மை –**

*நான்கு பாக்களும் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று முதற்பொருள்களையும் விளக்கிக் கூறுதற்கு உரியன. மூன்று முதற்பொருள் எனவே, அவற்றின் துணைப்பொருள்களாகிய அறத்தினது நிலையின்மையும், பொருளினது நிலையின்மை யும், இன்பத்தினது நிலையின்மையும் அடங்கும். உலகியல் பொருள் மூன்றனையும் இவையெனக் கூறி, அவற்றை விடுக்கு மாறும் கூறவே, வீடும் ஓராற்றான் கூறப்பட்டதாம். அது கூறுதற்குரிய செய்யுளும் கொச்சகமாம்.(தொ. செய். 106 நச்.)*

**பாவின் தொகை –**

*வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என ஐந்தாம். (யா. க. பாயிரம் உரை)*

**பாவின் மறுபெயர்கள் –**

*தூக்கு, யாப்பு, செய்யுள், கவி, பாட்டு, கவிதை (திவா. பக். 233) என்பன. 'தொடர்பு' என்பதும் கொள்க.*

**பாவின் வகை –**

*குறள், சிந்து, இன்னிசை, நேரிசை, பஃறொடை என வெண்பா வகை 6; (சிந்து, நேரிசை இன்னிசை என இருவகைத்து. நேரிசை, இணைக்குறள், நிலைமண்டிலம், அடிமறி மண்டி லம் என ஆசிரியவகை 4; நேரிசை ஒத்தாழிசை, அம்போ தரங்க*

*ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசை, வெண் கலிப்பா, தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம், எனக் கலிப்பா வகை 9; குறளடி, சிந்தடி என வஞ்சிப்பா வகை 2; புறநிலை, வாயுறை, செவியுறை, கைக்கிளை என மருட்பா வகை 4; இவ்வாறாகப் பாவின் வகை 25 ஆம்.*

*(யா. க. பாயிரம். உரை)*

**பாவினங்களின் பெயர் –**

*வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்ற பாக்கள் நான்கற்கும் தாழிசை, துறை, விருத்தம், என்ற இனங்கள் அமைய, அவை வெண்டாழிசை வெண்டுறை வெளிவிருத்தம் எனவும், ஆசிரியத் தாழிசை ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் எனவும், கலித்தாழிசை கலித்துறை, கலிவிருத்தம் எனவும், வஞ்சித் தாழிசை வஞ்சித்துறை வஞ்சிவிருத்தம் எனவும் பன்னிரண் டாம். இவற்றொடு குறள் வெண்பாவின் இனமாகிய குறட் டாழிசையும், வெண் செந்துறையும் கொள்ளப்படும். பண் ணுக்குத் திறம் இல்லை; அதுபோலவே மருட்பாவிற்கு இனம் இல்லை என்ப. காக்கைபாடினியார், அவிநயனார், மயேச்சுரர் முதலாயினோர் கருத்தும் இதுவே.(யா.க. 56 உரை)*

**பாவினங்களுக்குரிய அடிகள் –**

*பாஇனங்கள் குறளடி முதலிய எல்லா அடியானும் வரப் பெறும். வஞ்சித்துறை குறளடியானும், வஞ்சி விருத்தம் சிந்தடியானும், கலிவிருத்தம் முதலியன அளவடியானும், கலிநிலைத்துறை நெடிலடியானும், ஆசிரியவிருத்தமும் ஆசிரியத்துறையும் சிறப்புடைய கழிநெடிலடியானும் சிறப்பில்லாத கழிநெடிலடியானும் வரப்பெறும். (யா.க. 28)*

**பாவினத்துள் தளை மயக்கம் –**

*பாக்களைப் போலவே, பாஇனங்களுள்ளும் தம்தளையொடு பிற தளைகள் மயங்கி வருதலுண்டு. பாக்களைவிடப் பாவினங்களுள் தளைமயக்கம் மிகுதி. (யா. க. 22 உரை)*

**பாவினத்தொகை –**

*தாழிசை, துறை, விருத்தம் எனப் பாவினம் மூன்றாம்.*

*(யா. வி. பாயிரம் உரை)*

**பாவினம் –**

*தொல்காப்பியனாரால் உரைக்கப்பெற்ற கொச்சகவகையும், பின்னூலார் (வீரசோழிய நூலார் முதலியோர்) கூறிய*

*(குறட்போலி, சிந்துப்போலி, திரிபாதிப்போலி முதலான) போலிவகையும், வடமொழிச் சந்தம் வடமொழி விருத்தங்கள் என இவை தம்முள் விரவி, விருந்து என்னும் வனப்பு வகையால், அடி தொடை யாப்பு நயமுறும் வண்ணம் என இசைக்கப்படும் திறத்தவாய் எழுந்த பாடல்களும் பாவினம் எனப்படும். அவை தாழிசையும் துறையும் விருத்தமுமாய் வெண்பா முதல் நாற்பாவொடும் முரணப் பன்னிரண்டாம்.*

*(தென். இயற். 50 51)*

**பாவின வகை –**

*தாழிசை துறை விருத்தம் என்ற மூன்றனையும், வெண்பா, ஆசிரியம் கலி வஞ்சி என்ற நான்கனோடும் உறழப் பன்னிரண்டாம். (யா. க. பாயிர உரை)*

**பாவின விரி –**

*வெண்செந்துறை, குறட்டாழிசை, வெள்ளொத்தாழிசை, வெண்டாழிசை, ஓரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை, வெளிநிலை விருத்தம், வெளி மண்டில விருத்தம் என வெண்பா இனம் எட்டும்;*

*ஆசிரிய ஒத்தாழிசை, ஆசிரியத்தாழிசை, ஆசிரிய நேர்த்துறை, ஆசிரிய இணைக்குறட்டுறை, ஆசிரிய நிலை விருத்தம், ஆசிரிய மண்டில விருத்தம் என ஆசிரியப்பா இனம் ஆறும்;*

*கலி ஒத்தாழிசை, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், கலி நிலைத்துறை, கலி மண்டிலத்துறை, கட்டளைக் கலித்துறை, கலிநிலை விருத்தம், கலி மண்டில விருத்தம் எனக் கலிப்பா இனம் ஒன்பதும்;*

*வஞ்சி நிலைத்தாழிசை, வஞ்சி மண்டிலத்தாழிசை, வஞ்சி நிலைத்துறை, வஞ்சி மண்டிலத்துறை, வஞ்சி நிலைவிருத்தம், வஞ்சி மண்டிலவிருத்தம் என வஞ்சிப்பா இனம் ஆறும்;*

*ஆக பாவினங்களின் விரி இருபத்தொன்பதாம்.*

*(யா. க. பாயிரம் உரை)*

**பாவும் பாட்டும் –**

*பா என்னும் உறுப்பும் அவ்வுறுப்பான் அமைந்த உறுப்பியாகிய பாட்டும் ஒற்றுமைப்பட நிற்றலின், பா என்னும் உறுப்பின் பெயரானே அப்பாட்டும் பெயர் பெறும்.*

*அஃதாவது ஆசிரியம் என்னும் உறுப்பு அமைந்த பாட்டு ஆசிரியப்பா என்றும், வஞ்சி என்னும் உறுப்பு அமைந்த*

பாட்டு வஞ்சிப்பா என்றும், கலி என்னும் உறுப்பு அமைந்த பாட்டு கலிப்பா என்றும் வழங்குதல் தொல்லோர் மரபு.

பா என்னும் பலபொருள் ஒரு சொல் ஓசையினையும், ஆகுபெயரால் பாட்டினையும் குறித்து வரும்.

(தொ. செய். 105 ச. பால)

**பாவு வண்ணம் –**

செய்யுட்கண் நிகழும் வண்ணங்கள் இருபதனுள் ஒன்று. இவ்வண்ணம் நூற்பாப் பயில வருவது. (வீ. சோ. 142 உரை)

**பிசி –**

அடிவரையறையின்றி வரும் இலக்கணத்தன ஆறனுள் ஒன்று. ஒப்புமையொடு பொருந்தி வரும் உவமைப்பொருளானும், ஒன்று சொல்ல ஒன்று தோன்றுதல் துணிந்த சொல்லானும் என இருவகை பற்றிப் பிசி நிகழ்வது.

எ-டு : *'பிறை கவ்வி மலை நடக்கும்'* என்பது யானையைக் குறித்தல்-ஒப்பொடு புணர்ந்த உவமம்.

*'நீராடான் பார்ப்பான் நிறம்செய்யான் நீராடின்*
*ஊராடும் நாட்டிற்காக் கை.'*

இது நெருப்பு என்பதனைக் குறித்தல் தோன்றுவது கிளந்த துணிவு. (தொ. செய். 176 நச்.)

**பிண்டப் புறனடை –**

*'மூன்றுறுப் படக்கிய பிண்டத்திற்குப் புறனடை; அது 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே'* (நன். 462) என்றாற் போல்வது.

**பிண்டம் –**

சூத்திரம், ஓத்து, படலம் என்னும் மூன்றுறுப்பினையும் அடக்கிய முழுமை நூல் பிண்டம் எனப்படும்.

(தொ.செய். 168 பேரா.)

**பிராசம் –**

எதுகை. அது காண்க.

**பிரிந்திசை –**

செய்யுளோசை வகை. (L)

**பிரிந்திசைக்குறள் –**

அம்போதரங்கம் எனினும், பிரிந்திசைக்குறள் எனினும் ஒக்கும். (யா. கா. 31 உரை)

*அம்போதரங்கத்தினைப் பிரிந்திசைக்குறளடி என்னும் வீரசோழிய உரை* *(கா. 117)*

**பிரிந்திசைத் துள்ளல் –**

*கலித்தளையோடு ஏனைய தளைகளும் கலந்து அமையும் ஓசையையுடைய கலிப்பாவினது ஓசை.*

*எ-டு : 'மணிகிளர் நெடுமுடி மாயவனும் தம்முனும்போன் (று)*
*அணிகிளர் நெடுங்கடலும் கானலும் தோன்றுமால்*
*நுரைநிவந் தவையன்ன நொப்பறைய சிறையன்னம்*
*இரைநயந் திறைகூரும் ஏமஞ்சேர் துறைவகேள்.'*

*இப்பாடல் பகுதியில் நிரை ஒன்று ஆசிரியத்தளையும், இயற்சீர் வெண்டளையும், கலித்தளையும், வெண்சீர் வெண் டளையும் கலந்தமைந்தமையின் பிரிந்திசைத்துள்ள லோசைத் தாயிற்று.*

*கலித்தாழிசைகள் ஈரடிய ஆயின விடத்தே பெரும்பான் மையும் பிரிந்திசைத்துள்ளல் ஓசை பெறுவனவாம்.*

*எ-டு : 'தொன்மைக்கண் வினைசெய்யார் துப்புரவின் இரங்குவார்*
*பன்மைக்கண் உள்ளந்தேர் பயமின்றிக் கழிவாரோ'*

(யா. க. 78 உரை)

**பிரிந்திசைத் தூங்கல் –**

*வஞ்சித்தளைகளும் பிற தளைகளும் விரவிவரும் ஓசை.*

எ-டு : *'தொடியுடைய தோள்மணந்தனன்.*
*கடிகாவிற் பூச்சூடினன்.*
*நறைகமழும் சாந்தநீவினன்*
*செற்றோரை வழிதபுத்தனன்.*
*வேந்துடை அவையகத்*
*தோங்குபுகழ் தோற்றினன்.*
*வருபடை எதிர்தாங்கினன்'* (புறநா. 239)

*இவ்வடிகளில் ஒன்றிய வஞ்சித்தளை ஒன்றாத வஞ்சித்தளை என்னும் இவற்றொடு, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்று ஆசிரியத்தளை,இயற்சீர் வெண்டளை என்பனவும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் தூங்கலோசை வந்தவாறு.* *(யா. க. 90 உரை)*

**பிரிந்திசை வண்ணம் இருபது –**

*குறில் அகவல் பிரிந்திசை வண்ணம், நெடில் அகவல் பிரிந் திசை வண்ணம், வலி அகவல் பிரிந்திசை வண்ணம், மெலி அகவல் பிரிந்திசை வண்ணம், இடை அகவல் பிரிந்திசை வண்ணம் - என அகவல் பிரிந்திசை வண்ணம் 5.*

*எ-டு : 'முன்றில் நின்ற முடமுதிர் பெண்ணைமேல்*
*அன்றில் காணுமை ஆற்ற வினவுதும்*
*தொன்று காலம் தொடர்ந்துட னாடினான்*
*சென்று ழிச்செலும் செந்நெறி யாதென.'*

இது குறில் அகவல் பிரிந்திகை வண்ணம்.

குறில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம், நெடில் ஒழுகல் பிரிந் திசை வண்ணம், வலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம், மெலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம், இடை ஒழுகல் பிரிந்திசை வண்ணம் என ஒழுகல் பிரிந்திசை வண்ணம் 5.

*எ-டு : 'அறிவல் அறிவல் அமுதே அமுதே*
*எறிவெண் டிரைமீ திகலிற் றறிவல்*
*இறுகல் இறுகல் இதுகேள் இதுகேள்*
*பெறுவல் பெறுவல் பிழைப்பொன் றுபெறாய்'*

இது குறில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம்.

குறில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலி வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை வல்லிசைப் பிரிந்திசை வண்ணம் என வல்லிசைப் பிரிந்திசை வண்ணம் 5.

எ-டு : *துடித்த டித்தி மிழ்தரு துளங்கு வெள்ள ரு(வ்)விநீர்*
*தொடுத்தெ டுத்த மாலைபோல் தொடர்ந்து தோன்றும் தூய்மைசால்*
*அடுத்த டுத்து ரைபுக அசைவில் சீரு ருச்சந்தம்*
*மடுத்த டுத்து வைகலும் மறத்த லின்றி வாழ்த்துவாம்.*

இது குறில்வல்லிசைப் பிரிந்திசை வண்ணம்.

குறில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் மெல் லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் என மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் 5.

எ-டு : *களியுந்தி வீழ்ந்த கதிர்ச்செய்ய வெய்யோன்*
*ஒளியுந்த நீண்டகுடை ஒருவனல் கானேல்*
*நிலமுந்தி யோடும் வளைமுல்லை மெல்ல*
*நகுமுந்தி யாகின்ற தாவியா தாங்கொலோ.*

இது குறில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம்.

இவ்வாறு வரும் வண்ணம் இருபதும் பெருங்குதிரைப் பாய்தல் போலவும், ஒன்று கொட்டியும் இரண்டு கொட்டி யும் முதலாக உடையறுத்துக் கொட்டுப் போலவும் வரும்.

*(யா. க. 85 உரை)*

**பிரேளிகை –**

*விடுக்கும் பிதிர்; விடுகதை.*

*ஒருவர் ஒருபொருள் குறித்துப் பிதிர்போல் வினவ, மற்றவர் விடையிறுக்கச் செய்யும் வினாவிக்கவி என்று இது வழங்கப்படுகிறது.*

எ-டு : *'நீராடான் பார்ப்பான் நிறம் செய்யான் நீராடின்*
*ஊராடு நாட்டிற்காக் கை'*

*தண்ணீரில் குளிக்கமாட்டான்; பார்க்கப்படுபவன்; செந்நிறத் தான்; நீராடினால் காக்கை போலாகிவிடுவான் - என்ற விடுகதை நெருப்பைக் குறிக்கிறது.*

*இதனைத் தொல்காப்பியம் 'பிசி' என்னும். 'வினாவிக்கவி' வகைகளுள் ஒன்று என்று வீரசோழியம் உரை கூறும்.*

*(வீ. சோ. 182)*

**பிற்கட்டு –**

*பாட்டின் இறுதியில் உள்ள (இயைபுத்தொடை போல்வ தொரு), நல்லோசை அமைதி; 'பிற்கட்டும் முன்முரணும் பின்முரணும்' (விறலிவிடு கண்ணி. 493)* (L)

**பின் அளபெடை –**

*அளவடிக்கண் இரண்டாம் நான்காம் சீர்கள் அளபெடுத்து வருவது.*

எ-டு : *'செய்கையும் **வழாஅள்** தெய்வமும் **தொழாஅள்**'*

*என வரும்.* *(யா.க. 39 உரை)*

**பின் இயைபு –**

*அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்கள் இறுதி ஒத்து வரத் தொடுப்பது.*

எ-டு : *'தொய்யி**லும்** பொன்னே சாய**லும்** மயிலே'* (யா. க. 39 உரை)

**பின் எதுகை –**

*அளவடிக்கண் இரண்டாம் நான்காம் சீர்களில் எதுகை ஒன்றி வருவது.*

எ-டு : *'மலர்புரை வ**டி**க்கண் வாங்கமைத் தொ**டி**த்தோள்'*

*(யா. க. 39 உரை)*

**பின்முடுகு வெண்பா –**

*பின்னிரண்டடிகள் முடுகிச் செல்லும் வெண்பா வகை.*

எ-டு : *'தேரோடும் வீதியெலாம் செங்கயலும் சங்கினமும்*
*நீரோ டுலாவிவரும் நெல்லையே - காரோடும்*
*கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்தர் அந்தரத்தர்*
*கந்தரத்தர் அந்தரத்தர் காப்பு.'*

இப்பாடலின் பின் ஈரடியும் குற்றெழுத்துப் பயின்று முடுகிய லாகிய விரைவுடன் அமைந்தவாறு காணப்படும்.

**பின்முரண் –**

அளவடிக்கண் இரண்டாம் நான்காம் சீர்கள் மறுதலைப் படத் தொடுப்பது.

எ-டு : *'கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து'* (யா. க. 39 உரை)

**பின்மோனை –**

அளவடிக்கண் இரண்டாம் நான்காம்சீர்கள் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது.

எ-டு : *'மைம்மலர் நெடுங்கண் வாங்கமை நெடுந்தோள்'* (யா. க. 39 உரை)

**புராணகவி –**

பழம்புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்கள். இவர்கள் இயற்றிய ஆசிரியப்பா கலிப்பா ஆகியவற்றில் இடை யிடையே ஐஞ்சீர் அடிகளும் வந்தமையின், ஆசிரியப்பா கலிப்பா இவற்றில் ஐஞ்சீரடிகள் இடையிடையே வருதலும் மரபாயிற்று. புராண கவிஞரால் பாடப்படும் புராண கவி (- பழம் பாடல்) களில் மிக்கும் குறைந்தும் வருவன ஒருபுடை ஒப்புமை நோக்கிப் பாக்களுள்ளும் இனங்களுள்ளும் அடக்கிக் கொள்ளப்படும். (யா. வி. பக். 368)

**புலன் (1) –**

1. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. இவை ஐம்பொறிகட்கும் விடயமாவன. (L)

2. சேரிமொழியால் (-பாடி மாற்றங்களாலே) செவ்விதாகக் கூறப்பட்டு, ஆராய்ந்து காண வேண்டாமல் பொருள் தானே தோன்றச் செய்வது; எண்வகை வனப்பினுள் ஒன்று.

(தொ. செய். 241 நச்.)

**புலனெறிக்குச் சிறந்த பாக்கள் –**

கலிப்பாவும், பரிபாடலுமே புலனெறி வழக்கிற்குச் சிறந்த பாக்கள். வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறனிலை வாழ்த்து, கைக்கிளை என்ற பொருண்மைக்கண் மருட்பா சிறந்து வரும்.

*கலிப்பா ஐந்திணைப் பொருளாய புலனெறிவழக்கில் காமமும், கைக்கிளை பெருந்திணையாகிய உலகியலேபற்றிய புலனெறி வழக்கில் காமமும் பற்றி வரும். பரிபாடல் தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வரும். (தொ. பொ. 53 நச்.)*

**புளிமா –**

*'நிரை நேர்' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 7)*

**புளிமாங்கனி –**

*'நிரை நேர் நிரை' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 7)*

**புளிமாங்காய் –**

*'நிரை நேர் நேர்' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 7)*

**புளிமாந் தண்ணிழல் –**

*'நிரை நேர் நேர் நிரை' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா.8)*

**புளிமாந்தண்பூ –**

*'நிரை நேர் நேர் நேர்' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 8)*

**புளிமாநறுநிழல் –**

*'நிரை நேர் நிரை நிரை' என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 8)*

**புளிமாநறும்பூ –**

*நிரை நேர் நிரை நேர் என்னும் சீர்க்குரிய வாய்பாடு. (யா. கா. 8)*

**புறநிலை, வாயுறை, அவையடுக்கு, செவியறிவுறூஉ என்ற முறை வைப்பு –**

*தெய்வத்தொடு பட்டமையின் புறநிலை வாழ்த்தினை முதற்கண் கூறி, முன்னிலைப்படுத்திக் கூறுதற்கு உரிமை யுடைய காரணத்தான் வாயுறை வாழ்த்தை அதன்பின் கூறி, வரையறையின்மையின் அதன்பின் அவையடக்கியலைக் கூறி, முன்னிலைக்கண் வருமேனும் இன்ன குணத்தினையுடையை ஆவாய் எனப் புகழ்பட வாழ்த்திப் பிற்கூறுதல் வேறுபாடுடை மையின் அதன்பின் செவியறிவுறூஉக் கூறினார். (தொ. செய். 111 நச்.)*

**புறநிலை வாழ்த்து (1) –**

*எடுத்துக்கொண்ட காரியம் நன்கு நிறை வேறுதற்கு உதவும் தெய்வத்தைப் படர்க்கையாகப் புறத்தே நிறுத்தி, அத்தெய்வத் தான் பயன் பெற வேண்டிநிற்கும் ஒருவனை முன்னிலை யாக்கிக் கூறுதலின் புறநிலைவாழ்த்து எனப்பட்டது. "நீ வழிபடும் குலதெய்வம் நின்னைப் புறத்தே நின்று காப்ப இல்லறத்தாற் பொலிந்த செல்வத்தோடே, நீ பெறும் புதல்வரும் அவர் பெறும் புதல்வரும் சிறப்பு எய்த, எல்லீரும் நீடு வாழ்வீர்!" என்று, தெய்வத்தைப் புறத்தே நிறுத்தி வாழ்த்தும் வாழ்த்து இது.*

எ-டு : *'அறிதுயில் அரவணை அமர்ந்தோன் காப்ப*
*அருட்கடம் பூண்ட அகலாச் செல்வமொடு*
*நீயும் நின் புதல்வரும் சிறந்து*
*வாழிய பெரும! பூழியர் கோவே!'*

*இப்புறநிலை வாழ்த்திற்கு மருட்பாவே சிறந்தது. இஃது ஆசிரியத்தானும் வெண்பாவானும் பாடப்படுதலுமாம். இவ்வாழ்த்துப் பகுதியுள் அடங்கும் வாயுறை வாழ்த்துக்கும், அவையடக்கியல் செவியறிவுறூஉ என்பனவற்றிற்கும் இப்பாடல்களே சிறந்தவை. இப்புறநிலைவாழ்த்து முதலிய வாழ்த்துவகை நான்கற்கும் கலியும் வஞ்சியும் பரிபாடலும் ஏற்றவை அல்ல. (தொ. செய். 110 நச்.)*

*கலிப்பாவில் வாழ்த்துக் கூறுங்கால் கடவுள் முன்னிலையாக வரும். (பேரா.)*

**புறநிலை வாழ்த்து (2) –**

*இது மக்கள் பாடாண் துறையாதலின், தெய்வம் சிறந்ததே னும் அதனைப் படர்க்கையாக்கிப் பாட்டுடைத் தலைவனை முன்னிலையாக்கி வாழ்த்தும் வாழ்த்து.*

*இதுவும் தலைவன் குறிப்பின்றித் தெய்வத்தான் அவனை வாழ்விக்கும் ஆற்றுலுடையார்கண்ணது ஆதலின், கைக் கிளைப் புறனாயிற்று.*

*இது புறப்பொருள் வெண்பாமாலையுள் பாடாண்படலத்து 38 ஆம் துறை. (தொ. செய். 98 நச்.)*

**புறநிலை வாழ்த்து மருட்பா –**

*'புறநிலை வாழ்த்து' (1) ஈற்றுப் பத்தியுள் காண்க.*

**புறப்பாட்டு வண்ணம் –**

*ஈற்றயலடி முடிந்தது போன்று முடியாது வருவது.*

எ-டு : *'இன்னா வைகல் வாரா முன்னே*
*செய்ந்நீ முன்னிய வினையே*
*முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே'* (புறநா. 363)

'முன்னிய வினையே' என ஏகாரம் மிக்கமையான் முடிந்தது போலக் காட்டி, (அடுத்த அடியில் செய்தி தொடர்தலின்) முடியாதாயிற்று.

இவ்வண்ணம் வீ. சோ. 142 உரையிலும் குறிக்கப்பட்டுள்ளது.

(தொ. செய். 225 பேரா.)

**புனல்யாற்றுப் பொருள் கோள் –**

அடிதோறும் பொருள் அற்று மீளாது செல்லும் பொருள் கோள்.

எ-டு : *'அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்;*
*விலைப்பாலில் கொண்டூன் மிசைதலும் குற்றம்;*
*சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்;*
*கொலைப்பாலும் குற்றமே ஆம்.'* (நான்மணிக். 100)

இப்பாடலில் பொருள் அடிதோறும் தனித்தனியே முடிந்தவாறு. (யா. க. 95 உரை)

இனி, தொடக்கம் முதல் இறுதிவரை மடங்காமல் சொல் கிடந்தவாறே நேராகப் பாடல் பொருள் கொள்ளப்படுவதும் இது.

எ-டு : *'சொல், அருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்*
*மெல்லவே கருஇருந்து, ஈன்று, மேல்அலார்*
*செல்வமே போல்தலை நிறுவித், தேர்ந்த நூல்*
*கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'* (சீவக. 53)

சொல் (- நெற்பயிர்கள்), கரு இருந்து ஈன்று தலை நிறுவி இறைஞ்சிக் காய்த்தன என எழுவாய் முறையே எச்சங்கள் தொடர வினைமுற்றுக்கொண்டு முடிந்தமையால், இப் பொருள்கோள் இப்பாட்டில் பயின்றது. (நன். 412)

**பூட்டுவில் பொருள்கோள் –**

வில்லின் இருதலையிலும் நாண் பூட்டிப் பயன் கோடல் போலப் பாடலின் முதற்சீரையும் ஈற்றுச் சீரையும் இயைத்துப் பொருள் கொள்வதொரு பொருள்கோள்.

எ-டு : *'திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்*
*இறந்து படின்பெரிதாம் ஏதம் - உறந்தையர்கோன்*
*தண்ணார மார்பின் தமிழர் பெருமானைக்*
*கண்ணாரக் காணக் கதவு.'*

'கதவு திறந்திடுமின்' எனக் கூட்டிப் பொருள் கொள்ளப் பட்டவாறு. (யா. க. 95 உரை)

**பூதத்தார் பாடல் –**

ஆரிடப் போலிக்கு எடுத்துக் காட்டாகச் சுட்டப்படுவது.

> "கறைப்பல் பெருமோட்டுக் காடு கிழவோட்(கு)
> அரைத்திருந்த சாந்துதொட்(டு) அப்பேய்
> மறைக்குமா காணாது மற்றைத்தன் கையைக்
> குறைக்குமாம் கூர்ங்கத்தி கொண்டு"

இது பூதத்தாரும் காரைக்காற் பேயாரும் பாடியது. இவ் வெண்பாவுள் இரண்டாமடி குறைந்து வந்து, ஆரிடப் போலியாதலின் அமைந்தது. (யா. வி. பக். 371)

**பெய்துரை –**

1. இடைப் பெய்து உரைப்பது; அஃதாவது சொற்களைப் பொருட் கியையச் சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் புலப்பட வருவித்துரைத்தல். 2 பாயிரம் (பிங். 2031)

**பெயர் நிரல்நிறை –**

பெயர்களை (உபமான உபமேயங்களைக் குறிப்பன முதலாக வருவன) ஒரு வரிசைப்பட நிறுத்தி, அவ்வரிசை பிறழாது பொருள் கொள்ள வருவதொரு பொருள்கோள்.

எ-டு : *'மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்'*

இவ்வடியுள், முதல் மூன்று பெயர்களும் உபமானம், பின் னின்ற மூன்று பெயர்களும் உபமேயம். இவை மதி போன்ற முகம், பவளம் போன்ற வாய், முத்துப் போன்ற முறுவல் (- பற்கள்) என்று முறையே வரிசைப்படப் பொருள் கொள்ளப் பட்டவாறு. (யா. வி 95 உரை)

**பெருநூல் –**

சூத்திரத்தான் இயன்ற நூல், ஓத்தினான் இயன்ற நூல், படலத்தான் இயன்ற நூல், பிண்டத்தான் இயன்ற நூல் என நூலினை நால்வகைத்தாகக் கூறுதலே தொல்காப்பியனார் கருத்து. ஒரு சாரார் அதற்கு மாறாகச் சிறுநூல், பெருநூல், இடைநூல் எனக் கூறுப. சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் என்னும் நான்குறுப்பினையும் உடையது பெருநூல் என்பது அவர் கருத்து. (பா. வி. பக். 111)

**பேரெண் –**

அம்போதரங்க உறுப்புவகை; நாற்சீரடி இரண்டாய் நிகழ்வது. (யா. கா. 31 உரை)

**பேரெல்லை –**

*செய்யுளின் அடிப்பெருமைக்கு அமைந்த வரையறை; பெருமை எனவும்படும் (அவ்வாறே சிற்றெல்லை சிறுமை எனவும்படும்.)*

**பேரெல்லை வரையறை இல்லாத பாட்டுக்களும் அவற்றின் சிற்றெல்லையும் –**

*கலிவெண்பாட்டு, கைக்கிளை, செவியறிவுறூஉ, வாயுறை, புறநிலை என்னும் இவ்வைந்தும் பேரெல்லை வரையறை யில்லாத பாட்டுக்கள். இவற்றின் சிற்றெல்லை வரையறைப் படும் என உய்த்துணர வைத்தார். அஃதாவது கலிவெண்பாட் டிற்குப் பத்தடி, ஏனையவற்றிற்கு நான்கடி என்றவாறு.*

*(தொ. செய். 159 ச. பால.)*

**பேரெல்லை வெண்பா –**

*எட்டடியால் நிகழும் வெண்பா. (யாழ். அக.)*

*'நெடுவெண்பாட்டே முந்நாலடித்தே' என்று வெண்பா விற்குத் தொல்காப்பியனார் 12 அடி பேரெல்லை கூறுவர்.*

*(தொ. செய். 158 நச்.)*

**பொது அடி –**

*இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் ஆகிய நாலசைச்சீர், ஓரசைச் சீர் ஆகியவற்றான் வழங்கும் அடி. (யா. க. 25)*

**பொதுச்சீர் –**

*நாலசையாலாகிய சீர். இச்சீர், நேர்இறுதி எட்டும் நிரையிறுதி எட்டும் எனப் பதினாறாம். மூவசைச்சீர் எட்டனோடும் இறுதியில் நேரசையைக் கூட்ட, நேரீற்றுப் பொதுச்சீர் 8 ஆம்; அவ்வாறே மூவசைச்சீர் எட்டன் இறுதியிலும் நிரையசை யைக் கூட்ட, நிரையீற்றுப் பொதுச்சீர் 8 ஆம்.*

| | | | |
|---|---|---|---|
| *நேர் நேர் நேர் நேர்* | - | *தேமாந்தண்பூ* | |
| *நிரை நேர் நேர் நேர்* | - | *புளிமாந்தண்பூ* | *இவை நேர் ஈறு* |
| *நிரை நிரை நேர் நேர்* | - | *கருவிளந்தண்பூ* | *எட்டும், காய்ச்சீர் போலவே தளை கொள்ளப்படும்.* |
| *நேர் நிரை நேர் நேர்* | - | *கூவிளந்தண்பூ* | |
| *நேர் நேர் நிரை நேர்* | - | *தேமாநறும்பூ* | |

நிரை நேர் நிரை நேர் - புளிமாநறும்பூ
நிரை நிரை நிரை நேர்- கருவிளநறும்பூ
நேர் நிரை நிரை நேர் - கூவிளநறும்பூ

நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை - புளிமாந்தண்ணிழல்
நிரை நிரை நேர் நிரை- கருவிளந்தண்ணிழல்
நேர் நிரை நேர்நிரை - கூவிளந்தண்ணிழல்

இவை நிரை ஈறு எட்டும், கனிச்சீர் போலவே தளை கொள்ளப் படும்

நேர் நேர் நிரை நிரை - தேமாநறுநிழல்
நிரை நேர் நிரை நிரை- புளிமாநறுநிழல்
நேர் நிரை நிரை நிரை- கூவிளநறுநிழல்
நிரை நிரை நிரை நிரை- கருவிளநறுநிழல்

எ-டு : முதற்சீர்களின் வாய்பாடு

| | | |
|---|---|---|
| *அங், கண், வா னத்* | *தமரரசரும்* | - தேமாந் தண்பூ |
| *வெங், களி, யா, னை* | *வேல்வேந்தரும்* | - கூவிளந் தண்பூ |
| *வடி, வார், கூந், தல்* | *மங்கையரும்* | - புளிமாந் தண்பூ |
| *கடி, மல, ரேந், திக்* | *கதழ்ந்திறைஞ்சச்* | - கருவிளந் தண்பூ |
| *சிங், கஞ், சுமந், த* | *பொங்கணைமிசைக்* | - தேமா நறும்பூ |
| *கொங்,கிவ,ரசோ,கின்* | *கொழுநிழற் கீழ்ச்* | - கூவிளநறும்பூ |
| *செழு, நீர்ப், பவ, ளத்* | *திரள்காம்பின்* | - புளிமாநறும்பூ |
| *முழு, மதி, புரை, யும்* | *முக்குடைநிழல்* | - கருவிளநறும்பூ |
| *வெங், கண், வினைப், பகை* | *விளிவெய்தப்* | - தேமாநறுநிழல் |
| *பொன், புனை, நெடு மதில்* | *புடைவளைப்ப* | - கூவிளநறுநிழல் |
| *அறந், த, சதுட், டயம்* | *அவையெய்த* | - புளிமாநறுநிழல் |
| *நனந்,தலை,யுல,குடை* | *நவைநீங்க* | -கருவிளநறுநிழல் |
| *மந், த, மா, ருதம்* | *மருங்கசைப்ப* | - தேமாந் தண்ணிழல் |
| *இலங், கு, சா, மரை* | *எழுந்தலமர* | - புளிமாந் தண்ணிழல் |

*இனிதிருந்து,*
*அருள்நெறி நடாத்திய ஆதிதன்*
*திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே.*

சிறப்பில்லாத சீர் ஆதலின் பொதுச்சீர் எனப்பட்டன.

இவற்றுக்கெனத் தனியே தளைகோடல் இல்லை. தளை கொள்ளுங் கால், பூச்சீர்கள் காய்ச்சீர்கள் போலவும், நிழற் சீர்கள் கனிச்சீர்கள் போலவும் கருதித் தளை கொள்ளப்படும்.
(யா. க. 13, 21 உரை)

**பொதுச்சீர்த் தளைகள் –**

தளை வழங்குமிடத்தே நேர் ஈற்று நாலசைப் பொதுச்சீரை வெண்பா உரிச்சீராகிய காய்ச்சீர் போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை என்றும் ஒன்றாதது கலித்தளை என்றும் கொள்ளப்படும்.

அதுபோலவே நிரையீற்று நாலசைப் பொதுச்சீரை வஞ்சி உரிச்சீராகிய கனிச்சீர் போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசை யோடு ஒன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை என்று கொள்ளப்படும்.

*எ-டு : 'வெங், களி, யா, னை வேல்வேந்தரும்' வெண்சீர் வெண்டளை. 'கடி, மல, ரேந், திக் கதழ்ந்திறைஞ்ச' - கலித்தளை. 'மந், த, மா, ருதம் மருங்கசைப்ப' - ஒன்றிய வஞ்சித்தளை. 'அந், தர, துந், துபி நின்றியம்ப' - ஒன்றாத வஞ்சித்தளை.*

(யா. க. 21 உரை; யா.கா. 8)

**பொதுவான இயற்சீர் –**

இயற்சீர் எனப் பொதுவாகக் குறிப்பிட்டால், இயலசை மயக்கமாகிய தேமா, கருவிளம், கூவிளம், புளிமா என்ற நான்கு சீர்களே கொள்ளப்படும். (தொ. செய். 19 நச்.)

**பொதுவான உரிச்சீர் –**

பொதுவாக உரிச்சீர் என்று குறிப்பிட்டால், உரியசை மயக்கமாகிய வீடு பேறு, இரவுக் கலித்து, பாறு குருகு, வரகு சோறு (வாய்பாடு : நேர்பு நேர்பு, நிரைபு நிரைபு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு) என்ற நான்கு சீர்களே கொள்ளப்படும்.
(தொ. செய். 19 நச்.)

**பொதுவான உரைநடை நான்கு –**

1. ஒரு பாட்டின் இடையிடையே கொண்டு நிற்கும் கருத்தினான் வருவன; அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன.

*2. பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருள் எழுதுவன போல்வன.*

*3. பொருள் முறைமையின்றிப் பொய்யாகத் தொடர்ந்து கூறுவன; அவை ஓர் யானையும் குதிரையும் தம்முள் நட்பாடி இன்னவிடத்துச் சென்று இன்னவாறு செய்தன என்று, அவற்றுக்கு இயையாப் பொருள்பட்டதொரு தொடர்நிலையாய் ஒருவனிடம் ஒருவன் கற்றுத் தொன்று தொட்டு வருவன.*

*4. பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கு ஏதுவாகும் தொடர்நிலை; அவை சிறுகுரீஇ உரையும், தந்திர வாக்கியமும் போல்வன.*

*இவை நான்குமாம் என்பது (தொ. செய். 173 நச்.)*

**பொருள்கோள் ஒன்பது -**

*நிரல் நிறை, சுண்ணம், அடிமறிமொழிமாற்று, அடி மொழி மாற்று, பூட்டுவில், புனல்யாறு, அளைமறிபாப்பு, தாப்பிசை, கொண்டுகூட்டு என்பன. (யா. வி. 95 உரை)*

**பொருள்கோள் விரி இருபது -**

*நிரல்நிறை, சுண்ணம், அடிமறி மொழிமாற்று, அடிமொழி மாற்று என்ற நான்கனையும் பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு என்ற ஐந்தானும் உறழப் பொருள்கோள் இருபதாம். ஆதித்தீவகம், மத்திமத்தீவகம், அந்தத் தீவகம், சிங்க நோக்கு, தேரைப் பாய்த்து, பாசி நீக்கம், ஒரு சிறை நிலை என்ற பொருள் கோள்களும் இவற்றுள் அடங்கும். (வீ. சோ. 96 உரை)*

**பொருள் முரண் -**

*மாறுபாடுடைய பொருளைச் சொல்லுவது.*

எ-டு : *‘**இரும்பின்** அன்ன கருங்கோட்டுப் புன்னை*
***பொன்னின்** அன்ன நுண்தாது உறைக்கும்’*

*இவ்வடிகளில், இரும்பும், பொன்னும் மாறுபாடுடையவை யாதலின், பொருள் முரண் வந்தவாறு.(தொ. செய். 91 இள.)*

**பொருள் முரண் தொடை -**

*பொருளொடு பொருள் முரணத் தொடுப்பது.*

எ-டு : *‘தீ மேய் திறல்வரை நுழைஇப் பரிமலிந்து*
***நீர்**நசை பெறாஅ நெடுநல் யானை’*

தீ என்ற பொருட்கு நீர் என்ற பொருள் மறுதலைப்பட்டதாகலின், இவ்வடிகளில் முதற்சீர்களில் (பொருளொடு) பொருள் முரண்தொடை வந்தவாறு. (யா. க. 38 உரை)

**பொருள் வகை (1) –**

இன்பம் துன்பம் புணர்தல் பிரிதல் ஒழுக்கம் எனப்பட்ட செய்திகளைத் தனிப்பட்ட முறையில் ஒரு திணைக்குரிய ஆக்காது எல்லாத் திணைகளுக்கும் பொதுவாகச் செய்யுள் அமைப்பது; இது செய்யுளுறுப்புக்களுள் ஒன்று.

"தலைவியை நாடிச் சென்ற என் நெஞ்சம் எனக்கு முன் அவளை எய்தித் தழுவி மகிழ்ந்ததோ?" (அகநா. 9) என்ற தலைவனது எண்ணம் பாலைப்பாட்டினுள் வந்ததாயினும், இச்செய்தி முல்லை முதலாயினவற்றுக்கும் பொதுவாம் என்பது.

இவ்வுறுப்பின்றியும், செய்யுள் நிகழும்.

(தொ. செய். 208 பேரா., நச்.)

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பெற்ற அவ்வொழுகலாறுகள் இழுக்குறும் முறைமை யின்றி அகமும் புறமுமாகிய எல்லாத் திணைக்கும் ஓதப்பெற்ற மரபினான், 'இவ்வொழுக்கம் இத்திணைக்கே உரியது' என்று வலிந்து கூற இயலாமல், பொதுவாகவே நிற்றல் 'பொருள்வகை' எனப்படும்.

இன்பம் - களவின்கண் இயற்கைப் புணர்ச்சி முதலியவற்றான் வரும் இன்பம்.

இடும்பை - ஒருவழித் தணத்தல், வருந்தொழிற்கு அருமை, வரைபொருட் பிரிவு முதலியவற்றான் வரும் துன்பம்.

புணர்வு - கற்பின்கண் இல்வாழ்க்கை, ஊடலுணர்தல் முதலியவற்றைப் பொருந்தி வரும் பிரிவில்லா உடனுறைவு.

பிரிவு - ஓதல், பகை முதலியவற்றான் நிகழும் பிரிவு.

ஒழுக்கம் - விருந்தோம்பல், அறப்புறங்காவல் முதலிய ஒழுக்கம்.

புறத்திணையுள் வெட்சி முதலியவற்றான் இன்பமும் இடும்பையும், பாடாணும் வாகையும் பற்றி நிகழும் ஒழுக்கமும் என இவையும் ஈண்டு அடங்கும். (தொ. செய். 207 ச. பால.)

**பொருள் வகை (2) –**

அகப்பாட்டுறுப்புப் பன்னிரண்டனுள் ஒன்று. மேலைச் செய்தியே கொள்க. (இது பொருள்கோள்களைச் சுட்டிய தாக உரைத்தாரும் உளர்.) (ந. அ. 211)

**பொருள் வகை (3) –**

*பொருளானது அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்று நான்கு வகைப்படும். மேலும் அப்பொருள்தான், அளப்பான், அளவை, அளக்கப்படுபொருள் என்று மூவகைப்படும் என்பாருமுளர். (வீ. சோ. காரிகை எண். 86)*

**பொருள்வகை, துறை: இவ்வுறுப்புக்களிடை வேறுபாடு –**

*பொருள்வகை என்னும் உறுப்பு அமையுங்கால், அது திணைப்பொருளை மயக்கும் அளவிற்கு நிகழ்தலாகாது.*

*துறை என்னும் உறுப்பு அமையுங்கால், அது 'பொருள் நிகழ்ச்சியால் இதன் உரிப்பொருள் இது' என உய்த்துணரும் வண்ணம் மரபிற் பிறழாமல் வரும்.(தொ. செய். 208 ச. பால)*

**பொருளிசை அந்தாதி –**

*ஓசை வகையால் வாராது பொருளால் வரும் அந்தாதித் தொடை.*

*எ-டு : அந்தாதித் தொடையில் முதற்பாடல்,*

*'பரிவதில் ஈசனைப் பாடி*
*விரிவது மேவ லுறுவீர்*
*பிரிவகை யின்றிநன் னீர்தூய்*
*புரிவ தும்புகை பூவே'*

*என்று முடிகிறது. அடுத்த பாடல் 'மதுவார் தண்ணந் துழாயான்' எனத் தொடங்குவது பொருளிசை அந்தாதியா தல் காண்க. (திருவாய். 1-6-2) (ஜீயர் அரும்பதவுரை)*

*இனி, பூ என்பது முதலாகுபெயராய்த் தன்னுள் இருக்கும் மதுவினை யுணர்த்த அம் 'மது' என்பதனையே அடுத்த பாடலின் தொடக்க அசையாகக் கொண்ட இப்பாடல் ஆகு பெயர்அந்தாதி என்பது மாறனலங்கார உரையாசிரியர் கருத்தாம் (மா.அ. 70) 'ஆகுபெயர் அந்தாதி' காண்க.*

**பொருளும் பொருளும் முரணிய கட்டளை ஈர் அடி –**

எ-டு : ***'நெருப்பின்*** *அன்ன சூட்டுச் சேவல்*
***நீர்****சேர் கானத்து நெடுமணல் கிளைப்ப'*

*நெருப்பு, நீர் எனப் பொருள்கள் இக்கட்டளையடிகளில் முரணின. (தொ. செய். 95 நச்.)*

**பொருளும் பொருளும் முரணிய கட்டளை அடியும் சீர்வகை அடியும் –**

எ-டு : ***'நீரோ*** *ரன்ன சாயல்*
***தீயோ*** *ரன்னஎன் உரனவித் தன்றே'* (குறுந். 95)

*நீர், தீ என, இவ்விருவகை அடிகளில், பொருள்கள் முரணின. (முதலடி கட்டளையடி; ஏனையது சீர்வகையடி.)*

*(தொ. செய். 94 நச்.)*

**பொருளொடு பொருள் முரண் தொடை –**

*முரண்தொடையின் ஐவகையுள் ஒன்று; 'பொருளும் பொருளும் முரணிய கட்டளை ஈரடி,' 'பொருளும் பொருளும் முரணிய கட்டளை அடியும் சீர்வகை அடியும் காண்க.*

*(தொ. செய். 95 நச்.)*

**பொழிப்பாதி ஐந்து –**

*பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, இரட்டைத் தொடை, நிரல் நிறைத் தொடை என்பன.* *(யா. க. 49 உரை)*

**பொழிப்பு அளபெடைத்தொடை –**

*நாற்சீர்களையுடைய அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்களில் அளபெடை வரத்தொடுப்பது.*

எ-டு : ***'சுறாஅக்*** *கொட்கும்* ***அறாஅ*** *இருங்கழி'* *(யா. க. 43 உரை)*

**பொழிப்பு இயைபுத்தொடை –**

*நாற்சீர்களையுடைய அளவடிக்கண் இரண்டாம் நான்காம் சீர்கள் ஈற்றெழுத்தோ அசையோ ஒன்றிவரத் தொடுப்பது.*

எ-டு : *'பெருங்கண் கய**லே** சீறியாழ் சொல்**லே**'* (யா. க. 43 உரை)

**பொழிப்பு எதுகைத் தொடை –**

*அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்களில் எதுகை வரத் தொடுப்பது.*

எ-டு : *'ப**ல்**கால் வந்து மெ**ல்**லக் கூறி'*

**பொழிப்புத் தொடை –**

*அளவடிகளில் முதற்சீரும் மூன்றாம் சீரும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்ற விகற்பத் தொடை பெற்று வருதலாகிய சீரிடை அமைந்த தொடை. இவற்றுள் இயைபுத் தொடை ஈற்றுச் சீரே முதற்சீராகக் கொண்டு வருதலின், இரண்டாம் நான்காம் சீர்கள் இயைபுபடத் தொடுப்பது பொழிப்பியைபுத் தொடையாம்.*

*(யா. க. 43 உரை)*

**பொழிப்பு நிரல் நிறை –**

*அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்களில் நிரல்நிறை அமைதல்.*

எ-டு : *'புருவமும் பூணார் புணர்முலையும் கூறின்*
*வரிசிலையும் மாண்பமைந்த கோங்கும்............'*

*புருவம் வரிசிலை, புணர்முலை கோங்கு என, பொருளும் உவமமும் இவ்வீரடிகளிலும் முதலாம் மூன்றாம் சீர்களில் முறையே வந்தவாறு. (யா. க. 95 உரை) (பக். 387)*

**பொழிப்பு முரண்தொடை –**

*அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்களைச் சொல்லானும் பொருளானும் மறுதலைப் படத் தொடுப்பது.*

எ-டு : *'**ஓங்கு** மலைத் தொடுத்த **தாழ்ந்தில**ங்கு அருவி'*

*ஓங்கு, தாழ்ந்து - எனப் பொருளால் மறுதலைப்படத் தொடுத்தவாறு. (யா. க. 43 உரை)*

**பொழிப்பு மோனை –**

*அளவடிக்கண் முதலாம் மூன்றாம் சீர்கள் முதலெழுத் தொன்றி வரத்தொடுப்பது.*

எ-டு : *'**க**ணங்கொள் வண்டினம் **க**வர்வன மொய்ப்ப'* (யா. க. 43 உரை)

**போக்கியல் வகை –**

*போக்கினது இலக்கணப்பகுதி. (போக்கு - சுரிதகம் )*

*(தொ. செய். 136 நச்.)*

**போக்கு –**

*செய்யுள் பிறிதொன்றனை அவாவாமல் கடைபோகச் செய்தலின், சுரிதகம் 'போக்கு' எனப்பட்டது.*

*(தொ. செய். 136 நச்.)*

**போக்கு இன்றாதல் –**

*சுரிதகம் இன்றி முடிதல். (இஃது உறழ்கலியின் இலக்கணம்)*

*(தொ. செய். 156 நச்.)*

**போலிவகை ஐகாரம் செய்யுளில் பயன்படுமாறு –**

எ-டு : *'அம்பொ **ரய்**ந்து **டய்**ய காம **னய்**ய னென்ன'* (சீவக. 1997)

*ஐகாரம் போலிவகையால் **அய்** என நின்றது.*

*(தொ. செய். 18 ச. பால.)*

## ம

**மக்களின் முப்பத்திரண்டு உறுப்புக்கள் --**

*முப்பத்திரண்டு உறுப்பொடு புணர்ந்தது மக்கட் சட்டம். அவ்வுறுப்புக்கள் குழல், நெற்றி, புருவம், கண், காது, மூக்கு, இதழ், பல், நாக்கு, முகம், கழுத்து, தோள், முன்னங்கை, உள்ளங்கை, கைவிரல், கைவிரல் நகம், கொங்கை (மார்பு கொங்கைக்கண் அடங்கும் என்பது) வயிறு, வயிற்றின் மயிரொழுங்கு, வயிற்று மடிப்பு, இடை, கொப்பூழ், குறி, துடை, முழங்கால், கணைக்கால், புறங்கால், காற்பரடு, குதிகால், கால்விரல், கால்விரல் நகம், அடி என்பன. (திருவரங்கக் கலம்பகம் பா. 56) (யா.க. 1 உரை)*

**மகரக் குறுக்கம் --**

*தனிமொழியில் லகர ளகரங்கள் திரிந்த னகர ணகரங்களின் முன்னும், தொடர்மொழியில் வருமொழி வகர முதலெழுத்தின் முன் நிலைமொழி ஈறாக நிற்குமிடத்தும், மகரம் தன் அரைமாத்திரையின் குறுகிக் கால்மாத்திரை அளவிற்றாய் ஒலிக்கும். செய்யுட் குறுப்பாம் எழுத்துக்களுள் இதுவும் ஒன்று.*

*போன்ம், மருண்ம், வரும் வளவன் - என வரும்*

*இம்மகரக்குறுக்கம் பாட்டுடைத் தலைவன் பெயரை ஒட்டி வரின் வழுவாம் (மாபுராணம்). (யா. க. 2 உரை)*

**மடக்கியல் --**

*சுரிதகத்திற்கு ஒரு பெயர். (யா. க. 31 உரை)*

**மண்டல அசையந்தாதி --**

*பாடல் முதலடியின் முதலசையும் ஈற்றடியின் ஈற்றசையும் ஒன்றாக வரத் தொடுப்பது. அடிதோறும் அசை அந்தாதித் தொடை நிகழப்பெறும்.*

எ-டு : *'பேதுற விகந்த பெருந்தண் காவிரி*
*விரிதிரை தந்த வெறிகமழ் வாசம்*
*சந்தனக் குழம்பு முலைமிசைத் தடவிய*
*வியனறுங் கோதைக்கு மெல்லிதால் நுசுப்பே.'*

*இதன்கண், முதலடி முதலசையும் ஈற்றடி இறுதியசையும் மண்டலித்து வர, அடிதோறும் (ஈற்றசை) அந்தாதியாக வந்தவாறு காண்க. (யா. க. 52 உரை)*

**மண்டல அடி அந்தாதி –**

*பாடலின் முதலடியே ஈற்றடியாகவும் அமையின், அப்பாட லின் தொடை (இடையடிகளும் அந்தாதித்தொடை பட நிகழ்தல் வேண்டும்.) மண்டல அடி அந்தாதியாம்.*

*(யா. க. 52 உரை)*

எ-டு : *வாழியர் நெடிதே வாழியர் நெடிதே*
*தேயம் போற்றுறத் தோன்றி நேயம்*
*அம்புகழ்ச் சான்றோர் நன்பலர் வாழி*
*வாழியர் நெடிதே வாழியர் நெடிதே.* (புனையப்பட்டது)

**மண்டல அந்தாதி –**

*இறுதியடியின் இறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வரத் தொடுப்பது, மண்டல எழுத்தந்தாதி முதலாக இது பலவகைப்படும். (யா. க. 52 உரை)*

**மண்டல இடையிட்ட அந்தாதி –**

*சிறு பிரபந்தங்களில், முதற்பாடலின் முதலசை ஈற்றுப் பாடலின் ஈற்றின்கண் வர, இடையிலுள்ள பாடல்களும் அந்தாதியாய் அமையத் தொடுப்பது. (யா. க. 52 உரை)*

*நால்வர் நான்மணிமாலை 'பூவான் மலிமணிநீர்' என்று தொடங்குகிறது. அதன் நாற்பதாம் பாடலாகிய இறுதிப் பாடல் 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்று முடிகிறது. இடையே 38 பாடல்கள் இடையிட, முதற்பாட லின் முதலெழுத்தும் ஈற்றுப் பாடலின் ஈற்றுச் சீரிலுள்ள (-பூவே) அசையெழுத்தும் (-பூ) ஒன்றி வந்துள்ளமை காண்க.*

**மண்டல எழுத்தந்தாதி –**

*பாடலின் அடிதோறும் எழுத்துஅந்தாதி நிகழ, முதலடியின் முதலெழுத்தும் ஈற்றடியின் ஈற்றெழுத்தும் ஒன்றிவரத் தொடுப்பது.*

எ-டு : *'வேங்கையஞ் சாரல் ஓங்கிய மாதவி*
*விரிமலர்ப் பொதும்பர் மெல்லியல் முகமதி*
*திருந்திய சிந்தையைத் திறைகொண் டதுவே'*(யா. க. 52 உரை)

**மண்டலச் சீரந்தாதி –**

*பாடல் முதலடியின் முதற்சீரே ஈற்றடியின் இறுதிச் சீராகவும் அமையத் தொடுப்பது. (இடையடிகள் அந்தாதியால் தொடர வேண்டும்.)*

எ-டு : *'கண்ணே பசலை பாய்ந்த; ஒண்ணுதல்*
*நுதல்வணம் பீர்பூத் தன்றே; உதவுறும்*

*உறுநல் லுண்டியும் ஒய்ந்தனள்; பெறுதுயில்*
*இல்லா நாள்பல; ஆயமும் ஒல்லாள்;*
*ஆளுறும் பிணிஎன், ஆயிழைக் கண்ணே?'* (புனையப்பட்டது)

**மண்டல மயக்கந்தாதி –**

*ஒரே பாடலில் முதலும் ஈறும் மண்டலிப்பதனோடு இடையிடையே எழுத்து அசை சீர் அடி என்பன அந்தாதித்து வரத்தொடுப்பது. (யா.க. 52 உரை)*

*'உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி*
*மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை*
*முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்*
*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்*
*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை*
*அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து*
*துன்னிய மாந்தரஃ தென்ப*
*பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே'*

*இப்பாடற்கண், 'மதி' என்ற அசையும், 'முக்குடை' என்ற சீரும், 'ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்' என்ற அடியும், து - ப என்ற எழுத்துக்களும் அந்தாதித்து வர, உலகே என்ற ஈற்றுச்சீர் அந்தாதியாய் முதற்சீராகவும் அமைய, எல்லா வகை அந்தாதிகளும் மயங்கிய மண்டல அந்தாதி ஆதலின், இப் பாடலில் மண்டல மயக்கந்தாதித்தொடை வந்தவாறு.*

**மண்டலித்தல் –**

*இறுதிப் பாட்டினது ஈற்றடி இறுதிஎழுத்து - அசை-சீர் - என்பவற்றுள் ஒன்று முதற்பாட்டினது முதலடி முதல் எழுத்து - அசை - சீர் - என்பவற்றுள் ஒன்றாக வருமாறு இசைத்தல்.*

**மண்டில ஆசிரியம் –**

*எல்லா அடியும் நாற்சீரடியாகவே வரும் ஆசிரியத்தினை நிலைமண்டிலம் எனவும், அடிமறிமண்டிலம் எனவும் பெயரிட்டு வழங்குப. நின்றவாறு நிற்றலும், அடிமறித்துக் கொள்ளினும் பொருள் திரியாது நிற்றலும் உடையன அவை என்பது அவர் கருத்து. அடிமறித்தல் பொருள்கோளுள் ஒன்று. அடிமறிப் பொருள்கோளால் செய்யுள் வேறுபட்டு வேறுபெயர் கொள்ள வேண்டும்; ஆதலின் மண்டில ஆசிரியம் என்ற பெயரே ஏற்றது. (தொ. செய். 117 பேரா.)*

**மண்டிலக் கலித்துறை –**

*நெடிலடி நான்காய் வரும் கலித்துறை வகையுள் ஒன்று. ஈரசைச் சீர்களால் மாத்திரம் நிகழ்வது மண்டிலக் கலித்துறை எனப்படுகிறது.*

எ-டு : *'நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொருள் நான்கும்*
*புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்*
*தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வறாச் சுற்றம்*
*இன்மை மேவுவார் யாவரும் இன்பமொன் றெய்தார்.'*

*ஈரசைச் சீர்களால் நிகழும் ஆசிரியத்தளையும் இயற்சீர் வெண்டளையுமே இதன்கண் பயின்று வருமாறு காண்க.*

*(வீ. சோ 123 உரை)*

**மண்டிலக் கலி விருத்தம் –**

*நாற்சீரடி நான்காய் வரும் கலிவிருத்த வகையுள் ஒன்று; அடிதோறும் (அடுத்த அடியை நோக்காது) பொருள் பெற்று நிகழ்வது.* *(வீ. சோ. 123 உரை)*

எ-டு : *'இந்திரர்கள் ஏத்துமடி ஈண்டுயிர்கள் ஓம்புமடி;*
*வெந்திறல் ஞாயிற் றெழில் வீவிலொளி வெல்லுமடி;*
*மந்திரத்தின் ஓதுமடி மாதுயரம் தீர்க்கு மடி;*
*அந்தரத்தின் ஆயவிதழ்த் தாமரையின் அங்கணடி'*

*(யா. வி. பக். 351)*

**மண்டிலம் –**

*எல்லா அடியும் நாற்சீரடியான் யாத்து வருவன; 'மண்டில யாப்பும்' அது. (எவ்வடியும் யாண்டும் நிற்கப்பெறும்.)*

எ-டு : *'மாறாக் காதலர் மலைமறந் தனரே*
*ஆறாக் கட்பனி வரலா னாவே*
*வேறா மென்தோள் வளைநெகி ழும்மே*
*கூறாய் தோழியான் வாழு மாறே!'* (தொ. செய். 115 பேரா.)

**மண்டிலமாவது –**

*மண்டிலம் என்பது வட்டம். அஃது எல்லா அடிகளும் சீரானும் அளவானும் ஒத்துவரும் கலியுறுப்பாகிய செய்யுட் பகுதியைக் குறித்து நின்றது. மண்டிலம் நான்கடிகளாக வருவது சிறப்புடைத்து; மிக்கு வரினும் இழுக்காது.*

*(தொ. செய். 115 ச. பால)*

**மண்டில யாப்பு –**

*'மண்டிலம்' காண்க.* *(தொ. செய். 115 பேரா.)*

**மண்டில விருத்தம் --**

*'மண்டிலக் கலி விருத்தம்' காண்க. (வீ. சோ. 123 உரை)*

**மந்திரச் செய்யுள் --**

*அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை விளைத்தேவிடும் நிறைந்த மொழியினையுடைய குரவர்கள், தாம் அனுபவத்தால் அறிந்த பொருளைப் பிறர்க்கு உணர்த்த லாகாமையால், அவர்க்குப் பயன்படுதல் கருதி, ஆணை யாலே, மறைந்த பொருளை அடங்கக் கூறப்பட்ட செய்யுள். மந்திரங்கள் உபதேச வாயிலாக அறியப்படுதலின் மந்திரம் வல்லார்வாய்க் கேட்டுணரப்படும். (இ. வி. பாட். 146)*

**மந்திர நூல் --**

*இந்நூலிலுள்ள பாடலடிகள் அவற்றின் மரபைக் கடந்து மிக்கும் குறைந்தும் வரினும், அவை ஆரிடப் போலியாய் அவ்வப்பா, பாவினங்களில் அடக்கிக் கொள்ளப்படும்.*
*(யா. வி. பக். 371)*

**மந்திரம் --**

*'மந்திரச் செய்யுள்' காண்க. (தொ. செய். 178 பேரா.)*

**மந்திரமாகிய மறை மொழி --**

*அகத்து உறுப்பு நான்கனுள் மந்திரம் என்பது சித்தத்தின் செயற்பாடு. அஃது அகத்து எழு வளியிசையான் குற்றமற நாடின், அகச்செவிக்குப் புலனாக அமைந்து நிகழும் நுண்மொழி.*

*நிறைமொழியாளர் அவற்றை மெய்தெரி வளியிசையான் புறச்செவிக்குப் புலனாக அருளுதலான் அவை மறைமொழி எனப்பட்டன. (தொ. செய். 175 ச. பால.)*

**மந்திரமும் குறிப்பும் ஆவன --**

*'பாட்டுரை நூலே' என்னும் சூத்திரத்துள் (செய். 79) வாய் மொழி என்றும் அங்கதம் என்றும் கூறப்பட்டவை, ஈண்டு முறையே மந்திரம் என்றும் (மேற்கோளினை இடைவைத்துக் கூறும்) குறிப்பு என்றும் சொல்லப்பட்டன.*

*வாய்மொழியை மந்திரமாகக் கூறாமல் வாயுறையாகக் கூறினும், அங்கதத்தைக் குறிப்புமொழியாற் கூறாமல் செம்பொருளாகவும் மொழிகரப்பாகவும் கூறினும் அடி வரையறையுற்ற பாட்டாக நிகழும். அவை அடிவரையறை*

யின்றி மறைமொழி கிளந்தும் கூற்றிடைவைத்தும் வரின், முறையே மந்திரம் எனவும் குறிப்பு எனவும் பெயர் பெறும்.
(தொ. செய். 164 ச. பால)

**மயக்க அளபெடைத் தொடை –**

மோனை எதுகை முரண் முதலிய தொடைகள் தன்னிடைக் கலக்க, அடிதோறும் முதற்சீர் அளபெழுந்து வருமாறு.

எ-டு : *'வாஅங் குதிரை வயமான் நடை லிப்பத்*
*தேஎர் இவர்ந்து திகழ்வின் பொருள்முற்றி*
*நோஒ இலரா உடைமையின் நோக்கரிய*
*நேஎ நின்பால் நிகழ்நெஞ் செதிர்கொண்ட*
*ஓஒநம் காதலர் மேஎய தீதின்மை*
*ஈஇ திவண்வந்த இன்கால் நுவன்றிசைக்கும்;*
*தூஉ மொழிகாத்த தோன்றல் பழிப்பிலரால்;*
*வாஅ! வரவவர் வாய்த்தனர் வாய்மையர்;*
*பூஉப் பொலிந்தன்று வேங்கை; புகழ்மதியும்*
*ஊஉர் கொளக்காண்டி உற்று.'* (புனையப்பட்டது.)

இதன்கண், அடிதோறும் முதற்சீர் அளபெடைத் தொடை பயின்றது; அடிதோறும் சீர்மோனையும் வந்தது; நான் காமடியில் மூன்றாம் நான்காம் சீர்கள் முரண்; ஐந்தாமடியில் பொழிப்பளபெடை; ஆறாமடியில் இரண்டாம் நான்காம் சீர்கள் எதுகை; ஏழாமடியிலும் அது; எட்டாமடியில் முற்று மோனை பயின்றது; இரண்டு மூன்று நான்காம் சீர்கள் இயைபு.

இவ்வாற்றால், இப்பாடற்கண் மயக்க அளபெடைத் தொடை பயின்றவாறு. (யா. க. 41 உரை)

**மயக்க நிரல்நிறை –**

உவமமாகிய சொற்களையும் உபமேயமாகிய பொருள்களை யும் (முடிக்கப்படுவன, முடிப்பன ஆகிய சொற்களை) முறைமாற்றி நிறுத்தி ஏற்றபடி பொருள் கொள்வது எதிர் நிரல்நிறைப் பொருள்கோள். மயக்க நிரல்நிறைப் பொருள் கோள் அன்னதன்று. சொல்லும் பொருளும் என்ற முறை யாகவோ, பொருளும் சொல்லும் என்ற முறையாகவோ நிறுத்தாமல் இரண்டு திறமும் விரவநிறுத்திப் பொருள் கொள்வது இது.

எ-டு : 'கண்ண் கருவிளை' என்று தொடங்கும் பாடல்.

இதன்கண், முறையே பொருளும் உவமமும், உவமமும் பொருளும், உவமமும் பொருளும், பொருளும் உவமமும்,

*உவமமும் பொருளுமென இவ்வைந்து திறமும் மயங்க நிறுத்தப்பட்டவாறு காண்க. பொருளுரைக்குமிடத்து, இவளுடைய கண்கள் கருவிளைமலர் போலும், கூரிய பற்கள் முல்லைமுகை போலும், பொலிவு பெற்ற சுணங்கு பொன் போலும், திறந்த வாய் இலவம்பூப் போலும், நுண்ணிடை மின்னுப் போலும் என, மயக்குத் தீரப் பொருள்களும் உவமங்களும் இயைக்கப்பட்டவாறு காண்க.(யா.வி.பக். 383)*

*'விலங்கொடு மக்கள்' (குறள் 410) என்பதும் அது.*

*(பரிமே. உரை)*

**மயக்கு அந்தாதி –**

*மண்டல மயக்கந்தாதி, செந்நடை மயக்கந்தாதி என இரு வகைப்படுவது; இடையேயுள்ள அடிகளில் (எழுத்தும் அசையும் சீரும்) அந்தாதி விரவுமாறு நிகழ்தலின், மயக்கு அந்தாதி என்னும் பெயர்த்தாயிற்று. அவ்வத்தலைப்புள் காண்க.*

*(யா. க. 52 உரை)*

**மயக்கு இயைபுத் தொடை –**

*இயைபுத் தொடை ஏனைய தொடைகளோடு இணைந்து வருவது.*

எ-டு : *'ஓங்குவரை அமன்ற வேங்கைநறு மலரும்*
*ஊர்கெழு நெய்தல் வார்கெழு மலரும்*
*உராஅங் கடற்றிரை விராஅம் மலரும்*
*வேறுபட மிலைச்சிய நாறிருங் குஞ்சி*
*ஏந்தல் பொய்க்குவன் எனவே*
*பூந்தண் உண்கண் புலம்பா னாவே.'*

*இதன்கண் அடி இயைபுத்தொடையொடு, பொழிப் பெதுகையும், பொழிப்பளபெடைத் தொடையும், அடி யெதுகையும், பொழிப்பு மோனையும் அமைந்திருத்தலின் இது மயக்கு இயைபுத் தொடை ஆயிற்று. (முதல் மூன்றடிகளில் அடி இயைபு; முதல் நான்கடிகளில் பொழிப்பெதுகை; மூன்றாமடியில் பொழிப்பளபெடை; இறுதி யிரண்டடிகளிலும் அடி யெதுகை; ஈற்றடியில் பொழிப்பு மோனை.)(யா. க. 40 உரை)*

**மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா இனம் –**

*கலித்துறையும், தனிக் கலித்தாழிசையும், ஒத்தும் ஒவ்வாதும் வரும் கலிவிருத்தமும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் இனமாம். (வீ. சோ. 123 உரை)*

**மயங்கிசைக் கொச்சகம் –**

*கலிக்கு ஓதப்பட்ட உறுப்பெல்லாம் குறைவின்றிக் கலியது தன்மை பெற்ற உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும், வண்ணமும் அடியும் தொடையும் மயங்கியும், அராக அடி அந்தாதித் தொடை தொடுத்தும், அத்தொடை பலவாய் வந்தும், கலிக்கண் வாரா என்ற நேரீற்றியற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீரும் வந்தும், ஐஞ்சீரடி வந்தும், முச்சீராலும் இருசீராலும் அம்போதரங்க உறுப்புப் பெற்றும், இவ்வாறு ஒத்தாழிசைக்கலிகளோடு ஒவ்வாது வருவன எல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.*

*(யா. க. 86 உரை)*

**மயங்கிசைவண்ணம் இருபது –**

*குறில் அகவல் மயங்கிசைவண்ணம், நெடில் அகவல் மயங் கிசைவண்ணம், வலி அகவல் மயங்கிசை வண்ணம், மெலி அகவல் மயங்கிசைவண்ணம், இடை அகவல் மயங்கிசை வண்ணம் என அகவல் மயங்கிசை வண்ணம் ஐந்து;*

எ-டு : *'வாங்குபு கொள்ள நின்றான் வாரண வாசி மன்னன்*
*தேங்கமழ் ஒலிமென் கூந்தல் தேவினாட் கீன்ற மங்கை*
*ஆங்கவன் அருகல் அல்லாள் அத்தின புரத்து ராசன்*
*வான்புகழ் மங்கை வாகைப் பூநிறம் அன்ன மேனி.'*

*இது குறில் அகவல் மயங்கிசை வண்ணம்.*

*குறில் ஒழுகல் மயங்கிசைவண்ணம், நெடில் ஒழுகல் மயங்கிசைவண்ணம், வலி ஒழுகல் மயங்கிசைவண்ணம், மெலி ஒழுகல் மயங்கிசைவண்ணம், இடைஒழுகல் மயங்கிசை வண்ணம் என ஒழுகல் மயங்கிசைவண்ணம் ஐந்து;*

எ-டு : *'ஆசைப் படுவ அருந்தவம் கல்விஅல் லாப்பிறகள்*
*பேசப் படுவ திலம்இவை யாவை பிறப்பிறப்பாம்.*
*தேசத் தியற்கை தெரிந்துணர் வார்க்குச் சேயிழைமார்*
*பாசப் படுகுழிப் பற்றறுத் தார்வினைப் பற்றறுத்தார்.'*

*இது குறில் ஒழுகல் மயங்கிசை வண்ணம்.*

*குறில் வல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில் வல்லிசை மயங்கிசைவண்ணம், வலி வல்லிசை மயங்கிசைவண்ணம், மெலி வல்லிசை மயங்கிசைவண்ணம், இடை வல்லிசை மயங்கிசை வண்ணம் என வல்லிசை மயங்கிசைவண்ணம் ஐந்து.*

எ-டு : *'தாமத் தூண்களைத் தருக்கொடு முருக்குதல் முரணும்*
*தூமத் தூவகல் எடுத்துக்கொண் டுழையவர் எறியும்*

*வாமத் தோள்களின் வலித்தனன் புடைத்தெடுத் தரற்றும்*
*பேய்மைத் தீத்தொழில் பெருகிய தரசனும் உணர்ந்தான்.'*

இது குறில் வல்லிசை மயங்கிசை வண்ணம்

குறில் மெல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில் மெல்லிசை மயங்கிசைவண்ணம், வலி மெல்லிசை மயங்கிசைவண்ணம் மெலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், இடைமெல்லிசை மயங்கிசைவண்ணம் என மெல்லிசை மயங்கிசைவண்ணம் ஐந்து;

எ-டு : *'உருகா தார்தம் இன்னுயிர்காத் தொழிய லாமோ உணர்ந்தார்க்கு*
*வருகார் போல வளஞ்சுரந்திவ் வையம் காக்கும் வயமாறன்*
*முருகார் ஆர மார்பினான் முரசம் ஆர்ப்ப முல்லைகாள்*
*குருகார் பௌவம் உண்டிருண்ட கொண்டல் என்று குழைந்தீரோ'*

இது குறில் மெல்லிசை மயங்கிசைவண்ணம்.

ஆக மயங்கிசை வண்ணம் இருபதாம். இவை நகரம் இரைந் தாற் போலவும், நாரை இசையும் ஆர்ப்பிசையும் இயமர இசையும் தேரைக் குரலும் போலவும் வரும்.(யா. க. 95 உரை)

**மயங்கி வரும் மோனைஎழுத்துக்கள் –**

ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ - என நெட்டுயிர் ஏழற்கும் ஒத்த குற்றுயிர் இனமாம்.

அ ஆ ஐ ஔ - இவை தம்முள் ஓர் இனம்; இ ஈ எ ஏ இவை தம்முள் ஒத்த ஓர் இனம்; உ ஊ ஒ ஓ - இவை தம்முள் ஒத்த ஓரினம்; இவையெல்லாம் தம்முள் ஒத்த மோனை யெழுத்துக்கள்.

இனி, ஞ ந - தம்முள் ஓரினம்; மவ - தம்முள் ஓரினம்; சத - தம்முள் ஓரினம். இவை அனு (மோனை) எழுத்துக்கள் எனவும் கூறப் பெறும்.

எ-டு : *'அருந்தவர்கட்(கு) ஆதியாய் ஐயம் நீக்கி*
*ஔவியம் தீர்த்(து) அவிரொளிசேர் ஆக்கை எய்தி,*
*(அ,ஆ,ஐ,ஔ)*

*இருந்திரள்கை இனமருப்பின் யானை ஊர்தி*
*ஈரைஞ்னூ(று) எழில்நாட்டத்(து) இமையோன் ஏத்த (இ,ஈ,எ, ஏ)*
*ஒருங்குலகின் நூல்கற்றோர் ஊதை முந்நீர்*
*ஓலிவளர அறம்பகர்ந்த உரவோன் பாதம், (உ, ஊ, ஒ, ஓ)*
*கருங்கயற்கண் காரிகையார் காதல் நீக்கிக்*
*கைதொழுதால் கையகலும் கௌவை தானே.*
*(க, கா, கை கௌ)*

*வண்டிவரும் மலர்வெட்சி மாலை மார்பன்*
*மால்வேண்ட மண்ணளித்த மலிதோள் வள்ளல் (ம,வ)*

*ஞண்டிவரும் தண்படப்பை ஞாழல் மூதூர்*
*நரபதிக்கு வாள்கொடுத்த நகைவேல் நந்தி, (ஞ, ந)*
*தண்டிவரும் தடவரைத்தோட் சயந்தன் வாடச்*
*சதுமுகனைச் சயஞ்செய்த சங்க பாலன் (ச, த)*
*தெண்டிரைவாய்த் திருமகளோ டமிர்தங்' கொண்டான்*
*சீர்பரவச் சென்றகலும் செல்லல் தானே.' (தி, தெ, சி, சீ, செ)*

என இனவெழுத்துக்கள் மோனைத்தொடைக்கண் வந்த வாறு. (யா. க. 53 உரை பக். 206, 207)

**மரபு என்னும் செய்யுள் உறுப்பு –**

யாப்பு என்ற செய்யுளுறுப்பின் வழியே, இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்ற நால்வகைச் சொற்களையும், திணை பால் இடம் பொழுது வினா விடை மரபு என்ற எழுவகை வழுவும் ஏற்படாதவாறு உலகத்தார் அமைக்கும் நெறியே மரபாகும். அஃதாவது இயற்சொல் முதலிய நான்கு சொல்லானும் காலந்தோறும் இடந்தோறும் வழங்கும் வழக்கும் செய்யுளும் தவறாமல் தொடர்படுத்தி முறை பிறழாமல் செய்யுள் செய்ய வேண்டும் என்பது.

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற நான்கு நிலத்தினும் ஓரிடத்துப் பொருளை மற்றோரிடத்தனவாகச் சொல்லுத லும், உலகொடு மலைதலும், சமயங்களொடு மலைதலும், கலையொடு மலைதலும், பிறவும் நாடகவழக்கிற்கே அமையும்.

ஒரு காலத்து வழங்கிய சொற்களும் பொருள்களும் அணிக ளும் கோலமும் முதலியன மற்றொரு காலத்து வழங்காதன வும் உள. ஓரிடத்து நிகழும் பொருள்கள் மற்றோரிடத்து நிகழாதனவும் உள. அக்காலமும் இடமும் பற்றி ஏற்றவாற் றான் செய்யுள் செய்க.

அதோளி, இதோளி, உதோளி, குயின் முதலிய சொற்கள் கடைச்சங்க காலத்தேயே பெரும்பாலும் வழக்கிறந்தன.

*'அட்டா னானே குட்டுவன்'* (பதிற். 47.)
*'உச்சிக் கூப்பிய கையினர்'* (முருகு. 185)

என்றாற் போன்ற சொற்றொடர்கள் கடைச்சங்கத்துக்கு ஆகி, இக்காலத்துக்கு ஆகாவாயின.

*'வரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்*
*பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ'* (புறநா. 90)

*'கீழ்மரத்து யாத்த சேமஅச் சன்ன'* (புறநா. 102)

என்றாற் போலும் உவமப் பொருள்கள் இக்காலத்துக்கு ஆகாவாயின.

*'குண்டலம் ஒருபுடை குலாவி வில்லிட*
*விண்டலர்ந் தொருபுடை தோடு மின்செய'* (சீவக. 1009)

*'வண்காது நிறைத்த பிண்டி யொண்தளிர்*
*நுண்பூண் ஆகம் திளைப்ப'* (முருகு. 31, 32)

*'அம்மலர் அடியும் கையும் அணிகிளர் பவள வாயும்*
*செம்மலர் நுதலும் நாவும் திருந்தொளி உகிரும் அங்கேழ்*
*விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி யிட்டாள்*
*அம்மலர்க் கண்டம் உள்ளிட்(டு) அரிவையைத் தெரிவைதானே'*
(சீவக. 2446)

என்றாற்போலும் அணியும் கோலமும் இக்காலத்துக்கு ஆகா ஆயின.

*'புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி*
*ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்'* (அகநா. 7)

இது பருவத்துக் கேற்ற அணி.

'கொல்வினைப் பொலிந்த' (அகநா. 9) என்ற பாடலில், முல்லையும் குறிஞ்சியும் திரிந்து அமைந்த பாலை நிலத்திற்கு, முல்லைக்கும் குறிஞ்சிக்கும் ஏற்ற கருப்பொருள்களாகிய இருப்பையின் தளிர், பூ, ஆலங்கட்டி மழை, வில், அம்பு, செந்நிலம், குருதி, கொழுப்பு, உரல், உலக்கை, கோட்டான், குதிரை, பசு, கன்று என்பன மரபு பற்றிக் கூறப்பட்டுள.

குடவாயிலைக் குடந்தை எனவும் (அகநா. 60) உறையூரை உறந்தை எனவும் (புறநா. 69) முன்னோர் திரித்து வழங்கி னாற்போல, இக்காலத்தார் களத்தூரரைக் களந்தை எனவும், நாகப்பட்டினத்தை நாகை எனவும், ஆற்றூரை ஆறை எனவும், தஞ்சாவூரைத் தஞ்சை எனவும் வழங்குதலை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

தமிழ்நூற்கண் கூறப்பட்ட மரபினை விடுத்து ஆரியரும் பிறபாடை மாக்களும் பின்பற்றும் மரபினை ஒட்டித் தமிழ்ச் செய்யுள் செய்தலும் மரபன்று என்பது. (தொ.செய். 80 நச்.)

**மருட்செந்தொடை –**

இனஎழுத்துப் பெற்று ஏனைய தொடையும் தொடை விகற்பமும் இன்றி வருவது, மருட்செந்தொடை 'செந் தொடை மருள்' எனவும்படும்.

எ-டு : *'அமிழ்தினும் ஆற்ற இனிதே, தம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்'* (கு. 64)

இதன்கண், இன எழுத்தாகிய அ, ஆ இவற்றால் அமைந்த இணைமோனையன்றிப் பிற வந்திலாமை காண்க.

*(யா. க. 53 உரை பக். 205)*

**மருட்செந்தொடை விகற்பக் குறள் வெண்பா –**

*இனஎழுத்தினால் மோனை அமைய ஏனைய தொடையும் தொடை விகற்பமும் இன்றி வரும் குறள் வெண்பா. ‘மருட் செந்தொடை’ காண்க. அவ்வெடுத்துக்காட்டே அமையும்.*
*(யா. க. 59 உரை)*

**மருட்பா –**

*மருட்பா, தனித்தகுதியுடைய பா அன்று. வெண்பா முதல் வந்து ஆசிரியமாய் முடிவது மருட்பாவாம். வெண்பா அடியும் ஆசிரியஅடியும் சமமாக வருவது சமனிலை மருட்பா; சமமன்றி வருவது வியனிலை மருட்பா. இவற்றைச் சமமருட்பா, வியமருட்பா எனவும் வழங்குவர். கங்கையமுனை களின் சங்கமம் போலவும், சங்கர நாராயணர்களின் சட்டகக் கலவியே போலவும், வெண்பாவும் ஆசிரியமும் விராய்ப், புறநிலை வாயுறை செவியுறை கைக்கிளை என்ற நான்கு பொருள்களின்மேல் யாப்புற்று மருட்சியாகப் பாவி நடக்கும் மருட்பா, இந்நான்கு பொருள்களிலும் சமமருட்பா விய மருட்பா என இருவகையாலும் உறழவே, எட்டாதல் காணப்படும். அவை புறநிலை வாழ்த்துச் சமமருட்பா, புற நிலைவாழ்த்து வியமருட்பா, வாயுறை வாழ்த்துச் சம மருட்பா, வாயுறை வாழ்த்து வியமருட்பா, செவியறிவுறூஉச் சமமருட்பா, செவியறிவுறூஉ வியமருட்பா, கைக்கிளைச் சம மருட்பா, கைக்கிளை வியமருட்பா என வருவன காண்க.*

*கைக்கிளை மருட்பாவில் ஆசிரியப் பகுதி இரண்டே அடியாய், முதலடி முச்சீராய் ஈற்றடி நாற்சீராய் முடிதல் வேண்டும் என்று கடியநன்னியம் கூறுகிறது. வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை இம்மூன்றும் ஈற்றய லடி முச்சீராய் ஈற்றடி நாற்சீராய் எழுசீரானாகிய ஆசிரியப் பாவினாலேயே முடிதல் வேண்டும் என்பது நல்லாறம். [கைக்கிளைப் பொருள்மேல் ஆசிரியம் வருவழி எருத்தடி முச்சீரான் வரப்பெறாது என்பர் கடிய நன்னியனார் (யா. வி. பக். 270) என்று காணப்படுவது பிழையாகும்.]*

*இம்மருட்பா அந்தணனும் அரசகுலக்கன்னியும் மணந் தமைந்த குலம் போல்வது என்ப.* *(யா. க. 55 உரை)*

**மருட்பாக் கைக்கிளை –**

*மருட்பாவாவான் வரும். கைக்கிளை அகப்புறக்கைக் கிளையாம்.*

எ-டு : *'திருநுதல் வேர்அரும்பும் தேங்கோதை வாடும்*
*இருநிலம் சேவடியும் தோயும் - அரிபரந்த*
*போகிதழ் உண்கணும் இமைக்கும்*
*ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே.'*
*(பு. வெ. மா. 14 -3) (தொ. செய். 119 நச்.)*

**மருட்பாவின் ஓசை –**

*மருட்பா, வெண்பா ஆசிரியப்பா என்ற இரண்டு பாக்களின் அடிகளால் அமைக்கப்பட்டதாதலின், அதன்கண் முதலில் செப்பலோசையும் அடுத்து அகவலோசையும் இடையீடின்றி வரும். அதற்கெனத் தனியோசை இன்று.(தொ. செய். 85 நச்.)*

**மறைமொழி –**

*புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடராகிய மந்திரம்; இது சொல்லிய சொல்லின் பொருண்மை எல்லாக் காலத்தும் எல்லாவிடத்தும் குறைவின்றிப் பயன்தருமாறு சொல்லும் ஆற்றலுடையோராகிய 'நிறைமொழி மாந்தர்' தமது ஆணையான் சொல்லியது.*
*(தொ. செய். 178 பேரா.)*

**மன்விருத்தம் –**

*ஆசிரிய விருத்தம். (யாழ். அக.)*

**மா (2) –**

*இயற்சீர் இறுதியிலுள்ள நேரசையைக் குறிக்கும் வாய்பாடு.*
*(யா. கா. 7)*

**மாச்சீர் –**

*நேரசையால் முடியும் தேமா புளிமா என்னும் இரண்டுமாம்.*
*(யா. கா. 7)*

**மாட்டு (1) –**

*கொண்டு வந்து கொளுத்துதல். இது மொழிமாற்றுப் பொருள்கோளன்றிப் புலவர் வேறுசெய்வதொரு செய்கை. இது பல பொருள் தொடராய்ப் பல அடியான் வரும் ஒரு செய்யுட்கண்ணும், பல செய்யுளைப் பலபொருள் தொட ரால் ஒரு கதையாகச் செய்யுமிடத்தும் வரும். இதனைப் பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணி இவற்றுள் (நச்சினார்க் கினியர் உரையில்) பரக்கக் காணலாம். (தொ. செய். 210 நச்.)*

**மாட்டு (2) –**

*பாட்டின் அடிகளுக்குப் பொருள் கொள்ளுங்கால் ஓரடி பல அடிகளைக் கடந்து வரும் அடியொடு பொருந்திப் பொருள் கிடப்பச் செய்தலும், பல அடிகள் கடவாமல் அணுகிப் பொருள் கிடப்பச் செய்தலும் என்ற இருவகையானும் சென்று பொருள் முடியுமாற்றால் செய்யுள் செய்தல் மாட்டு என்னும் செய்யுள் உறுப்பாகும்.*

*இம் மாட்டு என்னும் உறுப்பின்றிச் செய்யுள் ஆற்றொழுக் காகப் பொருள்படுமாறு அமைத்தலும் உண்டு.*

*(தொ. செய். 210, 211 பேரா.)*

**மாட்டும் எச்சமும் இன்றி வருதல் –**

*தொடர்நிலைச் செய்யுள் மாட்டும் எச்சங்களும் நிறுத்த லின்றி அச் செய்யுள் கிடந்தவாறே அமையச் செய்தல்.*

எ-டு : *'வேலினும் வெய்ய கானம்அவன்*
*கோலினும் தண்ணிய தடமென் தோளே'* (பாட் 300, 301)

*கானம் வெய்ய, தோள்தண்ணிய என (வஞ்சி நெடும்பாட் டுள்) அகன்று கிடந்து மாட்டின்றி வந்தது.*

*'யானே, ஈண்டையேனே....'* (குறுந். 54)

*என்னும் பாட்டு (ஐந்தடிகளே உடைமையின்) அணுகி, (யான் ஈண்டையேன், என் நலன் அவணொழிந்தன்று - என) மாட்டின்றி வந்தது.*

*சிந்தாமணியுள், மாட்டு எச்சம் என்னும் இவ்விரண்டுமின்றிச் செய்யுள் கிடந்தவாறே அமைந்த தன்மையை யுடையன வாகிய செய்யுள்கள் நச்சினார்க்கினியர் உரையால் தெளியப் படும்.*

எ-டு : *'காய்மாண்ட தெங்கின்' என்னும் பாடல்.* சீவக. 31

*(தொ. செய். 211 நச்.)*

**மாட்டுவேறு, பொருள்கோள் வேறு ஆதல் –**

*தொடர்நிலைச்செய்யுளுள் இடையே வரும் வண்ணனை களையும் இடைப்பிறவரலாக வருவனவற்றையும் ஓர்ந்து பொருள்தொடர்பைக் காட்டும் சொற்றொடரை ஆங் காங்கே இயைபுபடுத்துவது மாட்டு என்னும் செய்யு ளுறுப்பாம்.*

*சுண்ணம் முதலாய பொருள்கோள் சொற்களைத் துணித்துப் பொருள் பொருந்தக் கூட்டுவது. மாட்டு என்பது புலவரின்*

கருத்துத் தோன்ற இயன்ற பொருளை இணைத்துக் காட்டுவது. (தொ. செய். 209 ச. பால)

**மாத்திரை** –

இயல்பான கண்ணிமைப் பொழுதும், கைந்நொடித்தற் பொழுதும் ஒரு மாத்திரையினது அளவாம்.(யா. க. 2 உரை)

> 'உன்னல் காலே, ஊன்றல் அரையே,
> முறுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்றே'

என்று செயற்கையாகிய கைந்நொடித்தற்கு ஆம் மாத்திரை கூறு செய்யப்படும்.

**மாத்திரை அளவு** –

எழுத்துக்கள் ஒலிக்கும் அளவு; குற்றெழுத்து ஒரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை; குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் மெய்யும் ஓரோஒன்று அரைமாத்திரை; மகரக்குறுக்கம் கால் மாத்திரை; ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்காம். ஆகவே, செய்யுளியலின் மாத்திரைஅளவு மேல் எழுத்ததிகாரத்தில் சொல்லப்பட்டதேயாம்.

இது செய்யுளுறுப்பு இருபத்தாறனுள் முதலாவது.

(தொ. செய். 2 இள.)

**மாத்திரை, எழுத்தியல் முதலியவற்றின் முறைவைப்பு** –

**மாத்திரை** எழுத்தினது குணமாகலானும், அசையும் சீரும் அடியும் தூக்கும் பாவும் வண்ணங்களும் என்ற இன்னோரன்ன எல்லாம் மாத்திரை நிமித்தமாகத் தோன்றுவன ஆகலானும் மாத்திரை முன்னர் வைக்கப்பட்டது.

அம்மாத்திரை என்ற பண்பினையுடைய பண்பியாகிய **எழுத்து** அடுத்து வைக்கப்பட்டது.

அவ்வெழுத்தான் **அசையும்**, அசையான் **சீரும்**, சீரான் அடியும், அவ்வடி பெற்றவழி அதனை ஆக்குமாறு அறியக் கூறும் **யாப்பும்**, அவ்வடிஅகத்தன சொல்லும் பொருளும் ஆகிய **மரபும்** ஆகலான், அம்முறையே அவை வைக்கப் பட்டன.

அவ்வடி இரண்டனைத் தொடுக்குங்கால் அவற்றை ஓரடி என ஒன்றாகவே கொள்ளாதபடி துணிப்பது **தூக்கு** ஆகலான் அது முன்னும், அடிகளில் வைத்துக் காணப்படும் **தொடை** அதன் பின்னும் வைக்கப்பட்டன.

*அவ்வடி இரண்டு தொடுத்தவழியும் கொள்ளப்படும் நோக்கு அதன்பின் வைக்கப்பட்டது.*

*அவ்வடி இரண்டும் பலவும் தொடர்ந்தவழி முழுவதும் கிடைப்பது பா ஆகலான், அஃது அதன்பின் வைக்கப் பட்டது.*

*திணையும், திணைக்கு உறுப்பாகிய ஒழுகலாறும், அவ் வொழுக்கத்தனவாகிய கூற்றும், அதன்பின் கேட்போரும், கேட்கும் இடனும், அதுபோலப் புலப்படாக் காலமும், இவற்றான் பயனும், பயனான் வரும் மெய்ப்பாடும், இவற்றி னெல்லாம் ஒழிந்து நின்ற எச்சமும், அவ்வெச்சத்தொடு கூட்டி உரைக்கப்படும் முன்னமும் அம்முறையானே பின் வைக்கப்பட்டன. அவற்றிற்கும் பொதுவாகிய பொருள் அடுத்து வைக்கப்பெற்றது.*

*அப்பொருட் பிறழ்ச்சியை ஒருப்படுக்கும் துறை அதன்பின் வைக்கப்பட்டது.*

*எச்சமும் மாட்டும் இன்றியும் செய்யுள் வருதல் கூடுமாதலின் துறையின் பின் அவையிரண்டும் வைக்கப்பட்டன.*

*வண்ணம் பாவினது பகுதி உறுப்பாதலின் அஃது அவற்றின் பின் வைக்கப்பட்டது.*

*வனப்பு எட்டும், அவற்றினை ஒவ்வொன்றாக நோக்குங்கால் அவ்வெட்டும் இன்றியும் செய்யுள் அமைதல் கூடுமாதலின் இறுதியில் வைக்கப்பட்டன.*

*இவை இருபத்தாறும் எட்டும் செய்யுள் உறுப்புக்களாம். இவற்றை உயிருடைய பொருள்களின் உறுப்புப் போலக் கூறின், உயிர் வேறு கூறப்படல் வேண்டும். இவ்வுறுப்புக்களை இன்றிச் செய்யுள் என்ற தனிப்பட்ட பொருள் ஒன்றும் இல்லை. எனவே, இவற்றை உயிரில்லாததொரு கலவையின் உறுப்புப் போலக் கொள்ளல் வேண்டும்.(தொ. செய். 1 பேரா.)*

**மாத்திரை முதலா அடி –**

*மாத்திரை முதலிய உறுப்புக்களைக் கொண்ட அடி.*

*(தொ. செய். 104 நச்.)*

**மாத்திரையை அளவு படுத்தாக்கால் வரும் இழுக்கு –**

*குறிலிணை, குறிலிணை ஒற்று, குறில் நெடில், குறில் நெடில் ஒற்று என்ற நான்கும் நிரையசை.*

*'நிரைநேர் நிரைநேர் நிரைநேர் நிரைநேர்' என்ற சீர்களைக் கொண்ட அடி 'வரகு வரகு வரகு வரகு' எனவும் வரும்.*

முதலடி 'வரகு வரகு வரகு வரகு' என்றமைய, இரண்டாமடி 'பனாட்டுப் பனாட்டுப் பனாட்டுப் பனாட்டு' என்று அமை யின், ஈரடியும் சீர்வகையால் ஒத்திருப்பினும், இரண்டாமடி மாத்திரை வகையால் முதலடியைவிட மிகவும் நீண்டுவிடுத லின், அடிகளை அமைக்குமிடத்துச் சீர்களை நோக்குவது போலவே மாத்திரையையும் நோக்காவிடின், ஓரடியோடு அடுத்தஅடி சீர்வகையான் ஒத்தும், மாத்திரை வகையான் சிதைவுபட்டு விடும்.

*'அம்ம வாழி கேளாய் தோழீ'*

என்பதினும், 'அம்ம வாழி கேளாய் தோழி' என இறுதிச் சீரினைக் குறுக்கியவழி இன்னோசைத்தாம். ஆகவே, சீர்களை அமைக்குமிடத்தே மாத்திரையினையும் அளவு படுத்தல் வேண்டும். (தொ. செய். 2 பேரா.)

மாத்திரையானல்லது செய்யுள் வேறுபாடு உணரலாகாமை யின் மாத்திரை செய்யுளுறுப்புக்களில் முதலாவதாகக் கூறப்பட்டது. (நச்.)

**மிகை எண் நிரல்நிறை –**

முன் நிறுவியவற்றைவிட மிக்க எண்ணிக்கையுடைய பொருள் களைப் பின்னர் நிறுவுவது.

எ-டு : *'ஆசை அல்குல் பெரியாரை அருளும் இடையும் சிறியாரைக்*
*கூசும் மொழியும் புருவமுமே குடில மாகி இருப்பாரை*
*வாசக் குழலும் மலர்க்கண்ணும் மனமும் கரிய மடவாரைப்*
*பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மட நெஞ்சே!'*

முன்னடி யிரண்டிலும் இருபொருள்களை எண்ணி மூன்றா மடியில் மூன்று பொருள்களை எண்ணியமை மிகைஎண் நிரல்நிறையாம். (யா. வி. பக். 384 உரை)

**முச்சீரடி கலிப்பாவில் வரப் பெறுதல் –**

முச்சீரடிகளான் இயன்ற முழுக் கலிப்பாடல் வருதலேயன்றி முச்சீரடி ஒன்றோ பலவோ கலிப்பாவின் தொடக்கத்திலோ நடுவிலோ வருதலும் கூடும்.

எ-டு : *'நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக்*
*கார்வரக் கண்டநம் காதலர்*
*தேர்வரக் கண்டில மன்னோ*
*பீர்வரக் கண்டன தோளே.'*

முச்சீரடி பாடல் முழுதும் வந்தவாறு.

முல்லைக்கலி மூன்றாம் பாடலில் அடிகள் 24 - 27 காண்க. முடுகியலான் முதலடியும் மூன்றாம்மடியும் ஒவ்வொன்றும் முச்சீர் பெற்றன.

*குறிஞ்சிக்கலி 3. அடி 43 : 'நின்கண்ணாற் காண்பென்மன் யான்' என இடையே முச்சீரடி வந்தது.*

*குறிஞ்சிக்கலி 15இல் 'செய்தானக் கள்வன் மகன்' எனக் கலிவெண்பாவின் ஈற்றடி முச்சீர் பெற்று வந்தவாறு.*

*(தொல். செய். 70 நச்.)*

*சிந்தடி 7 முதல் 9 வரை எழுத்துக்கள் பெறும்.*

*(தொல். செய். 55 இள.)*

*கலிப்பாட்டின் ஈற்றடியும் ஈற்றயலடியும் ஏழு சீர்கள் பெறும். அஃதாவது கலிப்பாட்டின் இறுதியுறுப்பாகிய சுரிதகம், ஆசிரியம் அல்லது வெண்பாவினால் நிகழ்வதனால், ஆசிரியத்தின் ஈற்றயலடி முச்சீராகவும் ஈற்றடி நாற்சீராகவும் நிகழும்; அன்றி, முச்சீரடி ஈறாகவும் நிகழும்; எப்படி நிகழினும் ஈற்றில் வரும் இரண்டடிகளின் சீர்கள் எண்ணிக்கை ஏழேயாம்.*

*வெள்ளைச் சுரிதகம் மேற்கண்டவாறு முடிதல் சிறப்புடைத்து. மூன்றடியின் குறைந்த வெள்ளைச் சுரிதகம் சிறப்புடைத்தன்று. இரு சீரானும் நாற்சீரானும் ஐஞ்சீரானும் இறும் அடிகள் கொச்சகத்திற்கு உரியன. சிறுபான்மை, கலிப்பாவில் உறுப்பாக வரும் வெண்பாக்களில் ஆசிரியத்தளை நிகழ்தலும் கொள்க.*

*கலி. 11 'இனைநல முடைய கானகம் சென்றோர்' என்ற அடி முதலான இறுதி நான்கடிகளும் ஆசிரியச் சுரிதகம்.*

*கலி. 70 'மெல்லியான் செவிமுதல் மேல்வந்தான் காலை போல்' முதலான இறுதி நான்கடிகளும் வெள்ளைச் சுரிதகம். முதலடிச் சீர்கள் இடையே ஆசிரியத்தளை நிகழ்தல் காண்க.*

*(தொ. பொ. 76, 77, நச்.)*

*இருசீர் முச்சீர் ஐஞ்சீர் அடிகளான் முடியும் கலிப்பாடல்கள் கொச்சகம் எனப்படுவன. அவை ஆசிரியம் அல்லது வெள்ளைச் சுரிதகத்தான் முடிவனபோலச் சிறப்புடையன அல்ல.*

*வெள்ளைச் சுரிதகம் மூன்றடிக்குக் குறைவாக நிகழின் கலிப்பாடல் தனக்குரிய இயல்பான் அமையும் இறுதியைப் பெறாதாகலின், மூன்றடிக்கும் குறையாமையே வெள்ளைச் சுரிதகத்திற்கு இயல்பாம். ஆசிரியச் சுரிதகமும் மூன்றடியின் குறைவாக நிகழாமையே சிறப்பு.*

*எ-டு : கலி. 49-இல் சுரிதகம் மூன்றடியான் வந்தவாறு.*

*(தொ. பொ. 77 பேரா., நச்.)*

**முட்டடி –**

*தூக்குப்பட்டு முடியும் அடி. ('முற்றடி' என்பது சிறந்த பாடம் என்ப.) (தொ. செய். 123 பேரா.)*

**முடியாத் தன்மையின் முடிதல் –**

*தன்னை முடித்தற்குரிய ஈற்றசை ஏகாரத்தான் வாராது, இறுதி இடையடி போன்று நிற்பது. இஃது அகப்பாட்டு வண்ணம் எனப்படும்.*

*எ-டு : கலித்தொகை, கடவுள் வாழ்த்து 'ஆணமில் பொரு ளெமக் கமர்ந்தனை யாடி' என (ஆசிரியச் சுரிதகம்) முடிந்து நிற்பது. (தொ. செய். 224 நச்.)*

**முடுகியல் –**

*வேறு அடிகளொடு கூடிச் செய்யுள் அமைத்தற்கு உதவு வதாய்த் தான் தனித்து நில்லாது பிற அடிகளொடு கூடி வருவது முடுகியலாம்.*

*ஆசிரியத் தளையொடு முடுகிய அடி கலியடி யாகும். ('அராகம் முடுகியல் போலக் குற்றெழுத்துக்கள் தொடர்ந்து வருதலால் நிகழுமேனும், பிறிது ஒன்றனொடு கூட்டி அற்று விடாமல் தானே தனித்து அற்று நிற்பது; அது பரிபாடல் செய்யுள் உறுப்பு என்ப.) (தொ. செய். 67 பேரா. நச்.)*

**முடுகியல் அடி மூன்று –**

*4, 5, 6, சீர்களான் நிகழும் அடிகளில் முடுகியல் நிகழும். (செய். 67 நச்.)*

**முடுகியல் நடத்தல் –**

*முடுகியலின்கண்ணே பயின்று நடத்தல்.*

*எழுசீரான் வரும் அடி முடுகியலில் பயின்று நடக்கும்.*

*(தொ. செய். 65 நச்.)*

**முடுகியல் வண்ணம், முடுகு, முடுகு வண்ணம் –**

*இவை மூன்று பெயரும் ஒரே பொருள. அஃதாவது முடுகியல் தொடுத்த அடியொடு பிற அடி வேறுபடத் தொடர்ந்து ஓடுவது.*

எ-டு : *'நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇ'* (கலி.39)

*என்னும் சுரிதகமும்,*

*'இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க'* (கலி. 104)

*என்பது முதலியனவும் ஆம். (தொ. செய். 67 நச்.)*

*முடுகு வண்ணமாவது அடி இற்றது அறியலாகாததாய், நீண்ட அடியதாய், அராகத்தொடு கூடிவருவது.*

*(வீ. சோ. 142 உரை)*

**முடுகு வெண்பா –**

*சந்த முடுகுடைய வெண்பாவகை ('புளிமா புளிமா' எனப் பெரும்பான்மையும் வருவது.)*

**முதல் இயைபு –**

*அடி இயைபுத்தொடை; அது நோக்குக.*

**முதல் ஈரெழுத்து ஒன்றின் பெயரிடுதல் –**

*முதலெழுத்தும் ஒன்றி இரண்டாம் எழுத்தும் ஒன்றின், முந்துற்ற மோனையால் பெயரிட்டு வழங்கப்படும்.*

எ-டு : *'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை'* (கு. 350)

*இது கூழை மோனை. (தொ. செய். 89 இள.)*

**முதல் எதுகை –**

*அடி எதுகைத் தொடை; அது காண்க.*

**முதல்நிலை அளபெடை –**

*முதல் நின்ற சொல்லின்கண்பின்னும் எழுத்து இருப்ப, முதலெழுத்து அளபெழுதல்.*

எ-டு : *காஅரி கொண்டான் கதச்சோ மதனழித்தான்*
*ஆஅழி ஏந்த லவன்.* (யா. க. 41 உரை)

**முதல் முரண் –**

*அடிமுரண்; அது காண்க.*

**முதல் மோனை –**

*அடிமோனை; அது காண்க.*

**முதற்குறை –**

*செய்யுட்கண் ஒரு பகாப்பதம் தன் முதலெழுத்துத் தொடை நயம் கருதிக் குறைக்கப்பட்டவழியும் தன்பொருளைத் தவறாது புலப்படுத்துவது.*

எ-டு : *'மரைஇதழ் புரையும் அஞ்செஞ் சீறடி'*

*தாமரை எனற்பாலது 'மரை' என முதல் குறைக்கப்பட்ட வாறு. (யா. க. 95 உரை)*

**முதற்சீர் –**

*கருவிளம், கூவிளம், தேமா, புளிமா என்னும் ஈரசைச் சீர் நான்கும் வீரசோழியத்துள் 'முதற்சீர்' எனப்பட்டன.*

*(வீ. சோ. 108)*

**முதற்பா –**

*முற்பா ; அஃதாவது வெண்பா. (பிங். 2079)*

**முதுமொழி (1) –**

எ-டு : *‘உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேயக்*
*கழுதை செவியரிந் தற்றே - வழுதியைக்*
*கண்ட கருங்கண் இருப்பப் பெரும்பணைத்தோள்*
*கொண்டன மன்னோ பசப்பு!’*

*“உழுந்து விளைந்த வயலை ஏதோ ஓர் ஊர்க்கன்று மேய்ந்து விடவே, அது பற்றி அக்கன்றினை அலைக்காமல், கழுதை யொன்றனைச் செவியரிந்துவிட்டாற்போல, வழுதியைக் கண்ட கருங்கண்கள் தாம் பசவாமல் இருப்பவும், அக்காட்சி யோடு இயைபில்லாத பெரும்பணைத் தோள்கள் தாம் பசப்புற்றன” என்று தலைவி கூற்றாக வரும் இப்பாடலுள், ‘ஒன்றன் வினைப்பயனைத் ஒன்று நுகர்ந்தது’ என்பது குறித்த அப்பொருள், இயைபில்லாத தன்மையைச் சொற்றொடர்கள் இனிது விளக்கமாட்டா ஆயினும், முன்னடிகளில் உவமை முகத்தான் கூறிய முதுமொழிக்கண்ணே, அப்பொருளை முடித்தற்கு ஏதுவாகிய ‘இயைபில்லாதிருக்கும் தன்மை’ அமைந்து முடிந்தவாறு காணப்படும்.*

*இதனுள், நுண்மை முதலிய நான்கும் காணப்படும். (2) காண்க. பழமொழி என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல் இவ்விலக் கணம் பற்றிச் செய்ததே. (தொ. செய். 177 நச்.)*

**முதுமொழி (2) –**

*கூர்மையும், சொற் சுருங்கி யிருத்தலும், விழுப்பமும், எளிதில் பொருள் தெரிதலும் என்ற இந்நான்கும் விளங்கித்தோன்றி, அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் ஒன்றை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் வந்ததனை, அப்பொருள் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதிவரும் முதுமொழி என்பர் புலவர். (தொ. பொ. 177 நச்.)*

*எ-டு : முதுமொழி (1)இல் காண்க.*

*‘ஏது நுதலிய முதுமொழி’ என்ற தலைப்பும் காண்க.*

**முப்பான் சீர் –**

*அசை 2, ஈரசை 4, மூவசை 8, நாலசை 16 - ஆக, 30. (சாமி. 153.)*

**மும்மூன்றாம் ஆவி இழிவு –**

*ஒன்பதாம் உயிராகிய ஐகாரக் குறுக்கம்.*

எ-டு : *‘கண்கெண் **டையை**மருட்டும் காண்.’*

*சீர் முதற்கண் இரண்டு ஐகாரம் குறுகிக் குற்றெழுத்துக்களின் நீரவாய் நிரையசையாயின. (யா. க. 9 உரை.)*

**முரண் –**

*முரண்தொடை (தொ. பொ. 407 பேரா.)*

**முரண் அந்தாதி –**

*முதலடியின் இறுதியில் முரண்பட்ட பொருளில் அமைந்த சொல் அடுத்த அடியின் முதலில் அந்தாதித்து வரும் தொடை.*

எ-டு : ***‘சிறுமை** கூர்ந்த யானையின் **பெருமலை***
***பெருமலை** அடுக்கம் சிறுதினைப் புனமே.’*

*பெருமலை என்பது அந்தாதித்து அடிமுரண் தொடைபட அமைந்தவாறு. (யா. க. 52 உரை. பக். 196)*

**முரண்அளபெடைத் தொடை –**

*ஈரடிகளிலும் தொடக்கச் சீரில் முரணான சொற்கள் வந்து அளபெழுவது.*

எ-டு : ***‘சீஇறடி** மாதர் சினத்தினைக் காண்குவல்*
***பேஎ**ரெழில் கண்க ளிடை.’*

*சிறுமை, பெருமை : முரண். (யா. க. 41 உரை. பக். 168)*

**முரண் இயைபு –**

*இயைபுத் தொடை முரண்தொடையோடு இணைந்து வருவது.*

எ-டு : ***‘இருளிற் (கு) எரிவிளக்(கு)** என்றும் **பகையே***
***அருளிற்(கு) அலைவாழ்க்கை** என்றும் **பகையே.’***

*இருள், விளக்கு; அருள், அலைவாழ்க்கை என்பன முரண்; பகையே, பகையே என வருவன இயைபு. இவ்விரண்டும் இணைந்து வந்தவாறு. (யா. க. 40 உரை)*

**முரண் இனக்குறள் வெண்பா –**

*அடி முதலில் முரண்தொடை அமைய வரும் குறள்வெண்பா.*

எ-டு : ***‘இன்பம்** விழையான் வினைவிழையான் தன்கேளிர்*
***துன்பம்** துடைத்தூன்றும் தூண்’* (கு. 615) (யா. க. 59 உரை)

**முரண்தொடை –**

*சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்பட்ட சொற்களைத் தொடுத்தல். (தொ. செய். 95 நச்.)*

**முரண்தொடையின் ஐவகை –**

*1. சொல்லொடு சொல் முரண் :*

எ-டு : *'செந்தொடைப் பகழி வாங்கலின் சினம்சிறந்து*
*கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்'*

செந்தொடை - செய்யதாகிய வண்ணம் இல்லை; நேரிது என்ற பொருளது.

கருங்கை - கருமை என்ற வண்ணம் இல்லை; கொன்று வாழும் கை என்ற பொருளது.

இங்குச் செம்மை, கருமை என்ற நிறப்பண்புகளான் முரணாமல், செம்மை கருமை என்ற சொற்களே முரணு தலின், இத்தொடை சொல்லொடு சொல் முரணும் முரண்தொடையாம்.

*2. பொருளொடு பொருள் முரண் :*

எ-டு : *'**தீ**மேய் திறல்வரை நுழைஇப் பரிமெலிந்து*
***நீர்**நசை பெறாஅ நெடுநல் யானை'*

தீ என்ற பொருளுக்கு நீர் என்ற பொருள் மறுதலைப் பட்டதாகலின், இவை பொருளொடு பொருள் முரணுதல்.

*3. சொல்லும் பொருளும், சொல்லொடு முரணுதல் -*

எ-டு : *'பெருமலைக் குறமகள் பிறிதோர்த்து நடுங்கலின்*
*சிறுமை கூர்ந்த செல்சுடர் மாலையொடு.'*

பெருமை என்ற சொல்லும் உண்டு; மலை என்ற பொருளும் உண்டு. ஆயின், சிறுமை என்ற சொல்லே இரண்டாமடியில் உள்ளது. ஆகவே, பெருமை என்ற சொல்லும் மலை என்ற பொருளும், சிறுமை என்ற சொல்லொடு முரணின.

*4. சொல்லும் பொருளும், பொருளொடு முரணுதல் :*

எ-டு : *'செந்தீ அன்ன சினத்த யானை*
*நீர்நசை பெறாஅக் கானல்*
*தேர்நசைஇ ஓடும் சுரனிறந் தோரே'*

செந்தீ - செம்மையாகிய சொல்லும் உண்டு; தீயாகிய பொருளும் உண்டு.

'நீர் நசைஇ' என்புழி, **நீர்** என்ற பொருளே தீ என்ற பொருளொடு முரணியது. ஆகவே, செந்தீ என்ற சொல்லும் பொருளும், நீர் என்ற பொருளொடு முரணின.

*5. சொல்லும் பொருளும், சொல்லொடும் பொருளொடும் முரணுதல்:*

எ-டு : *'செங்குரல் ஏனல் பைங்கிளி இரிய'*

*செங்குரல் என்புழி 'குரல்' என்ற பொருளும் உண்டு; செம்மையாகிய நிறப்பண்புச்சொல்லும் உண்டு. 'பைங்கிளி' என்புழியும் 'கிளி' என்ற பொருளும் உண்டு; பசுமையாகிய நிறப்பண்புச்சொல்லும் உண்டு. ஆகவே, சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணியவாறு.*

*(யா. க. 38 உரை)*

**முரண்தொடையின் மூவகை –**

*சொல் முரண், பொருள் முரண், சொல்லும் பொருளும் முரண் என்பன. (யா. க. 38 உரை)*

**முரண்தொடை விகற்பங்கள் –**

*இணை முரண், பொழிப்பு முரண், ஒரூஉ முரண், கூழை முரண், மேற்கதுவாய் முரண், கீழ்க்கதுவாய் முரண், முற்று முரண் என்பன.*

எ-டு : ***'சீறடிப் பேரகல்*** *அல்குல் ஒல்குபு*
***சுருங்கிய*** *நுசுப்பிற்* ***பெருகு****வடம் தாங்கிக்*
***குவிந்து****சுணங் கரும்பிய கோதை* ***விரிந்து***
***சிறிய பெரிய நிகர்****மலர்க் கோதைதன்'*
***வெள்வளைத்*** *தோளும்* ***சேயரிக் கருங்கணும்***
***இருக்கையும் நிலையும்*** *ஏந்தெழில்* ***இயக்கமும்***
***துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்தெனை முனியா(து)***
*என்றும் இன்னணம் ஆகுமதி,*
*பொன்திகழ் நெடுவேற் போர்வல் லோயே!'*

*முதலேழடிகளிலும் இணைமுரண் முதலான ஏழும் முறையே வந்தவாறு. இவ்விகற்பம் அளவடிக் கண்ணேயே கொள்ளப் படும் என்பது. (யா. வி. 38 உரை.)*

**முரண் நிரல்நிறை –**

*முரண்பட்ட சொல்லையும் பொருளையும் வரிசையாக அமைத்தல்.*

எ-டு : *'பகல்செய்யும் செஞ்ஞாயிறும்*
*இரவுச் செய்யும் வெண்திங்களும்'* (மதுரைக். 7, 8)

*பகல், இரவு; செம்மை, வெண்மை; ஞாயிறு, திங்கள் என முரண்பட்ட சொல்லும் பொருளும் நிரல்நிறையாக அமைந்தவாறு. (பொருள் என்றது, ஈண்டு முடிக்க வரும் சொல்லை என்க.) (யா. வி. பக். 388)*

**முரற்கை –**

*கலிப்பா. (தொ. செய். 70)*

**முரிநிலை –**

*இயற்றமிழில் தேவபாணியாய் இறுதியிற் பாடும் தரவு.*
*(சிலப். 6 : 35 உரை)*

**முழுவிரளச் செந்தொடை –**

*அசை சீர் இசை இவை அடிதோறும் மாறிவருவது.*

எ-டு : *'பூத்த வேங்கை வியன்சினை ஏறி*
*மயிலினம் அகவும் நாடன்*
*நன்னுதல் கொடிச்சி மனத்தகத் தோனே'* . (யா .க. 50 உரை)

**முற்கட்டு –**

*பாட்டின் தொடக்கத்திலுள்ள எடுப்பு (விறலிவிடு. 493)* (L)

**முற்சீர் –**

*முதற்சீர்.* *(வீ. சோ. 107)*

**முற்பா –**

*நால்வகைப் பாவினுள் முதலாவதாகிய வெண்பா.*
*(சூடா. 29)* (L)

**முற்றடி –**

*தூக்குப்பட்டு முடியும் அடி. 'முட்டடி' என்று பேராசிரிய ரும் இளம்பூரணரும் பாடம் கொள்ப. முட்டடி நாற்சீரடி. (தொ.செய். 119 இள.)* *(தொ. செய். 123 நச்.)*

**முற்றியலுகரம் ஈற்றடி இறுதியில் வருதல் –**

எ-டு : *'இனத்துள்ள தாகும் **அறிவு**'* (கு. 454)
*'இன்னா(து) இனியார்ப் **பிரிவு**'* (கு. 1158)
*'பேரறி வாளர் **துணிவு**'* (ஆசாரக் 19)
*'பாடறியா தானை **இரவு**'*
*'புன்கண் உடைத்தால் **புணர்வு**'* (கு. 1152)
*'அஞ்சொல் மடவார்க் **கருளு**'*
*'புனைமலர்த் தாரகலம் **புல்லு**'*

*அறிவு, பிரிவு, துணிவு, இரவு, புணர்வு, அருளு என்பன நிரைபு அசை; புல்லு என்பது நேர்பு அசை.*

*(இவ்வாறு முற்றியலுகரம் ஈற்றடியிறுதியில் வருதல் தொல் காப்பியனார்க்கு உடன்பாடன்று, பிற்பட்ட வழக்கேயாம்.)*

*(தொ. செய். 9 நச்.)*

**முற்றியலுகரம் உயிர் முதல்மொழி வருமிடத்துக் கெடுதல் –**

*முற்றியலுகரம் பெரும்பான்மையும் நிலைமொழித்தொழில் காரணமாகப் பெற்ற சாரியை உகர ஈறாக வருதலன்றி,*

*இயல்பீற்றுச் சொல்லாக வருதல் அரிதாம். அதனால் அஃது உயிர்முதன்மொழி வந்தியையுங்கால் கெடும் என்பது.*

*(தொ. செய். 4 ச. பால.)*

**முற்றியலுகரம் மொழி சிதைத்துக் கொள்ளப்படாமை –**

*முற்றியலுகரம் நிலைமொழித் தொழிலாகவோ, நிலை மொழி ஈறுகெட நின்ற உகரமாகவோ இருப்பின், உரியசைக் குப் பயன்படுமேயன்றி வருமொழி முதலிலுள்ள முற்றுக ரத்தை நிலைமொழியோடு இணைத்து உரியசை அமைக்கப் பயன்படுத்தல் கூடாது.*

*எ-டு : 'நாணுத் தளை, இரவுத் துயில், விழவுத் தலைக் கொண்ட, சுறவுக் கொடி.'*

*நாண் என்பது உகரம் பெற்று 'நாணு' ஆயிற்று;*

*இரா, விழா, சுறா என்பன இரவு, விழவு, சுறவு என்றாயின.*

*இவை நிலைமொழித் தொழில்.*

*'சுரும்புலவு நறுந்தொடையவள்,' 'கலனளவு நலனளவு' என இவற்றுள், உலவும், அளவும் என்பன உலவு, அளவு என ஈறு கெட்டு முற்றுகர விதியீறாய் நின்றன.*

*இதுவும் நிலைமொழித் தொழில்.*

*நாணுத் தளை - நேர்பு நிரை*

*இரவுத் துயில் - நிரைபு நிரை*

*உலவு கடல் - நிரைபு நிரை*

*சுரும் புலவு - நிரை நிரைபு*

*நாண் + உடை + அரிவை - நாணுடை அரிவை.*

*நாணுடை என்பது நேர்பு நேர் அன்று; நேர் நிரையே யாம்.*

*ஆகவே, வருமொழி உகரத்தை இணைத்து உரியசை ஆக்குதல் கூடாது என்பது.* *(தொ. செய். 9 நச்.)*

*முற்றியலுகரமும் (குற்றியலுகரமும்) வருமொழியைச் சிதைத்து உரியசை கொண்டு நிற்றலில்லை.*

*அஃதாவது நாணுடையரிவை, பரன்முரம்பு, வார்முரசதிரும், வற்றுறு செய்தி, நீள்குருந்து - எனவரும் சீர்களிடத்து வருமொழியைச் சிதைத்து அவற்றின் முதல் நிற்கும் உகரத்தை வாங்கி நாணு டையரிவை, பரன்மு ரம்பு, வார்மு ரசதிரும், வற்று றுசெய்தி, நீள்கு ருந்து - என உரியசை கொள்ளப்படா.*

*(தொ. செய். 9 ச.பால.)*

**முற்று அளபெடை** –

*அளவடிக்கண் நாற்சீரினும் அளபெடை நிகழ்தல்.*

எ-டு : *'குராஅம் விராஅம் பராஅம் உராஅம்'* (யா. க. 48 உரை)

**முற்று இயைபு** –

*அளவடியில் நான்கு சீரிலும் இயைபுத்தொடை வருவது. இறுதி எழுத்தேனும் அசையேனும் சொல்லேனும் சீர்களில் ஒன்றிவரத் தொடுப்பது. இயைபாம்.*

எ-டு : *'கண்**ணும்** புருவ**மும்** மென்தோ**ளும்** இம்மூன்**றும்**'*

*ஈற்றசை உம்மை இயைபுத்தொடையாக நாற்சீரிலும் வந்தவாறு. (யா. க. 48 உரை)*

**முற்று எதுகை** –

*அளவடிக்கண் நான்கு சீரிலும் எதுகை வருவது.*

எ-டு : *'க**ல்**லிவர் மு**ல்**லையும் மெ**ல்**லியலார் ப**ல்**லரும்பும்'*

*(யா. க. 48 உரை)*

**முற்றுத்தொடை** –

*நாற்சீரடியாகிய அளவடிக்கண் நான்கு சீர்களிலும் மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்ற தொடைகளின் விகற்பம் பெற்று வருதலாகிய சீர்இடை யமைந்த தொடை முற்றுத் தொடையாம். முதல் இரு சீரும் ஒருவகையான் முரணிப் பின் கடை இரு சீரும் பிறிதொருவகையான் முரணுதலும் முற்று முரணாம். 'முற்றுமுரண்' காண்க.*

*'முற்று மோனை' முதலியவற்றை அவ்வத்தலைப்புள் காண்க. (யா. க. 48 உரை)*

**முற்று நிரல்நிறை** –

*நாற்சீர்களிலும் நிரல்நிறை அமைய வருவது. முடிக்கும் சொற்களும் முடிக்கப்படும் சொற்களும் முறையான வரிசையால் அமைவது நிரல்நிறையாம்.*

எ-டு : *'அடல்வேல் அயில்நோக்கு நின்முகம் கண்டே*
*உடலும் உடைந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்*
*கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்*
*தடமதியம் ஆமென்று தாம்.'*

*நின்முகம் கண்டு, கடல் உடலும்; கனையிருள் உடைந்தோடும்; ஆம்பல் மலரும்; பாம்பு பார்க்கும் - என நாற்சீர்களிலும் நிரல்நிறை அமைந்தவாறு. (யா. க. 95 உரை)*

**முற்று முடுகு வெண்பா –**

*நான்கடியும் முடுகுச் சந்தமாக வரும் வெண்பா. (காய்ச்சீரான் அன்றி, 'கருவிளம்' மிகவும் பயிலும் வெண்பாவில் இச்சந்தம் நிகழும்.) (சங். அக.)*

**முற்று முரண் –**

*அளவடிக்கண், நாற்சீரிலும் முரண்தொடை யமையப் பாடுவது.*

எ-டு : ***'நெடுந்**தோள் **குறுந்**தொடி **வீங்கு**பிணி **நெகிழ**'*

*(முதலிரு சீர்களும் தனிமுரண்; பின்னிரு சீர்களும் தனி முரண்) (யா. க. 48 உரை)*

**முற்றுமோனை –**

*அளவடிக்கண் நாற்சீரிலும் மோனைத்தொடை யமையப் பாடுவது.*

எ-டு : ***'அ**ணியிழை **அ**மைத்தோள் **அ**ம்பசப்(பு) **அ**டைய'*

*(யா. வி. 48 உரை)*

**முறை நிரல்நிறை –**

*முடிக்கப்படும் சொற்களையும் முடிக்கும் சொற்களையும் வரிசையாக நிறுத்தி அம்முறை பிறழாமல் பொருள் கொள்ளும் பொருள்கோள்.*

*அடிநிரல்நிறையும், இணை பொழிப்பு முதலாய நிரல் நிறையும் அவ்வத் தலைப்புள் காண்க.*

*பொருள்கோடலைக் கருதியவழி இது பொருள்கோள்; செய்யுள் அணிநலம். கருதியவழி அணியாம் என்பது.*

*(யா. க. 95 உரை)*

**முன்னம் –**

*யாதானும் ஓரிடத்து யாதானும் ஒரு மொழி தோன்றி யக்கால், அம்மொழியைச் சொல்லுதற்குரியாரும் கேட்டற் குரியாரும் இன்னார் என்று அறியுமாறு செய்யுளுள் அமைக் கப்பட்ட குறிப்பு.*

*'யார் இவன் எம்கூந்தல் கொள்வான்?' கலி. 89.*

*'என் கூந்தலைத் தீண்டுகின்றவன் யார்?' என்று கூறுபவள் தலைவி; அதனைக் கேட்பான் தலைவன் என்பது முன்னத்தான் அறியப்பட்டவாறு.*

*முன்னம் என்னும் உறுப்பின்றியும் செய்யுள் நிகழும்.*

*(தொ. செய். 207 பேரா.)*

முன்னமாவது இடமும் செவ்வியும் தகுதியும் பற்றிய குறிப்பு. இம்முன்னம் பிழையாமல் தலைவன்தலைவியரொடு செவிலி, தோழி, பாங்கன், பரத்தை முதலியோர் கூற்று நிகழ்த்துவர். (தொ. செய். 194 ச. பால.)

**முன்னுதல் இல் –**

வரப்பெறா, புகா என்பது. (ஆசிரியம் வெண்பா என்னும் இரண்டு பாவிலும் முடுகியலடி மூன்றும் புகா.)

(தொ. செய். 67 பேரா., நச்.)

**மூவகைச் சீர்கள் –**

இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என்பன. இவற்றுள் இயற்சீர் எல்லாச் செய்யுள்களிலும் இயன்று நடத்தலின் சிறப்புடைத் தாதலின் முற்கூறப்பட்டது. உரிச்சீர் எல்லாச் செய்யுட்கண் ணும் வருமெனினும், வெண்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் உரிமை பூண்டு நிற்றலின் இடைக்கண் வைக்கப்பட்டது. பொதுச்சீர் அருகியன்றி வாராமையின் இறுதிக்கண் வைக்கப் பட்டது.

இனி, அவை ஈரசைச்சீர் மூவசைச்சீர் நாலசைச்சீர் என்னும் என்று முறைபற்றி வைக்கப்பட்டன எனினும் ஆம்.

தொல்காப்பியனார் நேர்பசை நிரைபசை கோடலின், நாலசைச் சீர் வேண்டார். காக்கைபாடினியார் முதலாயினார் நேர்பசை நிரைபசை கொள்ளாமையின் நாலசைச்சீர் கொண்டனர். யாப்பருங்கலம், காரிகை என்பன இவ்வகையன. பல்காயனார் முதலாயினோர் நேர்பு நிரைபு அசைகளையும் கொண்டு நாலசைச்சீரும் கொண்டனர்.

நேர்பசை நிரைபசை கோடல் நுண்ணுணர்வினார்க்கல்லது புலனாகாமையின், அவற்றை விடுத்து நாலசைச்சீர் கொள்ளப்பட்டது. (யா. க. 10 உரை.)

**மூவசைச் சீர் –**

நேர் நிரை நேர்பு நிரைபு என்ற நான்கு அசைகளையும் ஒன்றன்கீழ் ஒன்றாக நிறுத்தி, அவற்றின் முன் ஒருகால் நேரசையையும், ஒருகால் நிரையசையையும், ஒருகால் நேர்புஅசையையும் ஒருகால் நிரைபுஅசையையும் தந்து உறழின் 4 x 4 = 16 சீர்களாகும். இவ்வீரசைச்சீர் பதினாறன் இறுதியிலும் நேரசையை நிறுத்தின் நேரீற்று மூவசைச் சீர் 16 ஆகும்; நிரையசையை நிறுத்தின் நிரையீற்று மூவசைச்சீர் 16 ஆகும்; நேர்பசையை நிறுத்தின், நேர்பு ஈற்று மூவசைச்சீர் 16

*ஆகும்; நிரைபசையை நிறுத்தின், நிரைபு ஈற்றுமூவசைச் சீர் 16 ஆகும். இவ்வாற்றான் மூவசைச் சீர் 64 ஆம்.*

*(தொ. செய். 20 நச்.)*

*இனி யாப்பருங்கல (12) விருத்தி உரை வருமாறு.*

*நேரசை நிரையசை என இரண்டசையானும் அமைந்த மூவகைச் சீர்கள் எட்டாம். நேர்நேர், நிரைநேர், நேர்நிரை, நிரைநிரை என்னும் நான்கு இயற்சீர் இறுதியிலும் நேர் அசையையும் நிரையசையையும் முறையே கொணர்ந்து கூட்ட, நேரசையான் முடியும் மூவசைச்சீர் நான்கும், நிரையசையான் முடியும் மூவசைச்சீர் நான்கும் ஆம். நேர் இறுதியான மூவசைச் சீர் நான்கும் பெரும்பான்மையும் வெண்பாவிற்கே உரிமை பூண்டு நிற்றலின் வெண்பா உரிச்சீர் எனப்படும்; நிரை இறுதியான நான்கும் பெரும்பான்மையும் வஞ்சிப்பாவிற்கே உரிமை பூண்டு நிற்றலின் வஞ்சி உரிச்சீர் எனப்படும். இம்மூவசைச்சீர் எட்டும் இருவகைப் பாக்களுக்கும் பெரும்பான்மையும் உரிமை பூண்டு நிற்றலின் உரிச்சீர் எனப்பட்டன.*

**மூவசைச் சீர்கள் அறுபத்து நான்கு –**

*நேர் ஈற்று மூவசைச் சீர் 16, நிரை ஈற்று மூவசைச் சீர் 16, நேர்பு ஈற்று மூவசைச்சீர் 16, நிரைபு ஈற்று மூவசைச் சீர் 16 என 64 ஆமாறு அவ்வத்தலைப்புள் காண்க.*

**மூவசைச்சீர் முழுதொன்று இணையெதுகை அணி –**

எ-டு : *'துடியிடையார் பிடிநடையார் துணைமலையாம் இணைமுலையார்*
*அடிபிடியா மடிபடியா அணைந்தழிசாந் தகலத்தாய்'*

| | |
|---|---|
| துடியிடையார், பிடிநடையார்<br>துணைமலையாம், இணைமுலையார்<br>*அடிபிடியா, மடிபடியா* | இவை மூவசைச்சீர்கள் முழுதும் ஒன்றிவந்த இணையெதுகை வகை *அணி.* |

*(மா. அ. பாடல் 410)*

**மூவெழுத்துச் சீர்கள் –**

*புளிமா, பாதிரி, வலியது,* **மேவுசீர், நன்னாணு,** *பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய், நீடுகொடி என்பன பத்தாம். இவை முறையே நிரைநேர், நேர்நிரை, நிரை நிரை,* **நேர்பு நேர், நேர் நேர்பு,** *நேர் நிரைபு, நிரை நேர்பு, நிரைபு நேர், நேர்*

நேர்நேர் நேர்பு நிரை என்பன. இவற்றுள் முற்றுகரம் எழுத்தாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பத்தொடு நிரைபு என்ற முற்றியலுகர அசைச்சீர் (அரவு) சேர, மூவெழுத்துச் சீர் 11 ஆகும் (குற்றியலுகரம் போலவே முற்றியலுகரமும் கணக்கிடப்படலாகாது என்பர் வேங்கட ராஜுலு ரெட்டியார்). (தொ. செய். 41 நச்.)

**மூன்றடிப்பா –**

மூன்றடியான் இயன்ற ஆசிரியப்பா (ச் சிறுமை), சிந்தியல் வெண்பா என்பன. பிற, பாவினமாய் அடங்கிவிடும் என்பது.

**மூன்றாம் எழுத்து ஒன்று எதுகை –**

இரண்டாமெழுத்து ஒன்றாது, அடிதோறும் மூன்றாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

எ-டு : *'பவழமும் பொன்னும் குவைஇய முத்தின்*
*திகழரும் பீன்றபுன் னை.'*

இவ்வடிகளில் மூன்றாமெழுத்து ஒன்றி வந்தமையும், இரண்டாம் எழுத்து உயிரெதுகையாய் நின்றமையும் காணப்படும். (யா. க. 36 உரை.)

**மெய் மிக்கு வருதல் –**

எ-டு : *'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு'* (கு. 350) (யா. க. 2 உரை)

**மெய்யின் மறுபெயர்கள் –**

ஒற்று, உடம்பு, உறுப்பு என்பன. (யா. க. 2 உரை).

**மெய்யுரை –**

நூலுக்குப் பொருத்தமான உரை. (இறை. அ. 1. உரை.)

**மெய்வசை –**

ஒருவனைப் பற்றி உண்மையாகவே வசை தோன்றப் பாடுவது.

எ-டு : *'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்*
*அவையல்ல நல்ல மரங்கள் - சவை நடுவே*
*நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய*
*மாட்டா தவன்நன் மரம்.'* (மூதுரை. 12)

கல்வியறிவில்லாதவனையும் குறிப்பறியாதவனையும் 'மரம்' என்று பழித்தவாறு. (இ. வி. 753)

**மெய்வாழ்த்து –**

ஒருவனைப் பற்றி உண்மையாகவே வாழ்த்திக் கூறுவது.

எ-டு : *'கார்நறு நீலம் கடிக்கயத்துள் வைகலும்*
*நீர்நிலை நின்ற பயன்கொலோ? - கூர்நுனைவேல்*
*வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியால்*
*கொண்டிருக்கப் பெற்ற குணம்.'*

நீலமலர் தவம்செய்து பாண்டியன் தன்னைச் சூட்டிக்கொள் ளும் வாய்ப்பினைப் பெற்றது என வெளிப்படையாக வாழ்த்தியவாறு. *(இ. வி. 753)*

**மெல்லிசை வண்ணம் –**

மெல்லெழுத்து மிகப் பெற்று வருவது.

எ-டு : *'பொன்னி னன்ன புன்னைநுண் டாது'* (தொ. செய். 217)

இஃது அன்ன நடையும் தண்ணம் பறையும் போலவும், மணல்மேல் நடந்தாற் போலவும் வருவது. *(யா. வி. பக். 415)*

**மெல்லின எதுகை –**

அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்ப, இரண்டா மெழுத்தாகிய மெய் மெல்லினமெய்யாக இருப்பின், அவ்வெதுகை மெல்லின எதுகையாம்.

எ-டு : *'அ**ன்**பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்*
*ந**ண்**பென்னும் நாடாச் சிறப்பு'* (குறள் 74) (யா. க. 37 உரை)

**மெல்லின நடை –**

மெல்லெழுத்து மிகவும் வரச் செய்யுளைத் தொடுப்பது.

எ-டு : *'**நன்னீ**ரை வாழி யனிச்சமே நின்னினு*
*__மென்னீ__ரள் யாம்வீழ் பவள்'.* (கு. 1111)

மெல்லெழுத்தே வரத் தொடுப்பது மிறைக்கவியாம்; இஃது அன்னதன்று. *(யா. வி. பக். 209)*

**மெல்லின மோனை –**

அடிகளின் முதற்கண் வந்த உயிர்மெய்யெழுத்துக்களில் மெய்கள் மெல்லின மெய்களாக இருப்ப, அவற்றின் மேல் ஏறிய உயிர்கள் வெவ்வேறாக இருப்பின் அம்மோனை மெல்லினமோனையாம்.

எ-டு : *'**ஞா**யிறு காயும் வெவ்வறை மருங்கின்*
*__நே__யம் உந்தத் தொடர்ந்தனள் போகி'*

இதனுள் அடி முதற்கண் வந்த எழுத்துக்கள், உயிர்களால் ஊரப்பட்ட மெல்லின மெய்கள் என்ற இயைபு பற்றி, மெல்லின மோனை எனப்பட்டன. *(யா. க. 37 உரை)*

**மெலித்தல் விகாரம் -**

*செய்யுட்கண் தொடைநயம் கருதி வல்லெழுத்து அதன் இனமாகிய மெல்லெழுத்தாகத் திரித்துக் கொள்ளப்படுதல்.*

*எ-டு : '**தண்**டையின் இனக்கிளி கடிவோள்*
*பண்டையள் அல்லள் மான்நோக் கினளே'*

*இதன்கண், 'தட்டை' எனற்பாலது எதுகைத் தொடை நோக்கித்' தண்டை என மெலித்தவாறு. (யா. க. 95 உரை)*

**மென்பா -**

*ஆசிரியப் பாவிற்கு ஒரு பெயர். (யா. வி. பக். 219)*

**மென்மை (2) -**

*எளிதிலே பொருள் தெரிதல். (தொ. செய். 177 நச்.)*

*('எண்மை' என்பது பேராசிரியர் பாடம்)*

**மென்மை மிக்கு வருதல் -**

*எ-டு : 'மணிநீரும் மண்ணு மலையு மணிநிழல்*
*காடு முடைய தரண்'* (கு. 742)

*இதன்கண் மெல்லினம் மெய்யும் உயிர்மெய்யுமாக மிகுதியுற வந்தவாறு. (யா. க. 2 உரை(பக். 32)*

**மேற்கதுவாய்(த் தொடை) -**

*நாற்சீரடிக்கண், இரண்டாம் சீர்க்கண் இன்றி மற்ற எல்லாச் சீர்க்கண்ணும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்ற தொடை விகற்பம் பெற்று வருதலே சீரிடை அமைந்த தொடையாம். இயைபுக்கு ஈற்றுச்சீரையே முதற்சீராகக் கொண்டு கணக்கிடப் பெறும்.*

*எ-டு : '**க**ணைக்கால் நெய்தல் **க**ண்போல் **க**டிமலர்'* - மேற்கதுவாய் மோனை

*'க**ண்**டலங் கைதையொடு வி**ண்**டன மு**ண்**டகம்'* - மேற்கது வாய் எதுகை

*'**வெளி**யவும் வெற்பிடைக் **கரிய**வும் **செய்ய**வும்'* - மேற்கது வாய் முரன்

*'இருங்**கண்** விசும்பின்**கண்** மான்ற முகங்கா**ண்**'* - மேற்கதுவாய் இயைபு

*'**கூஉம்** புடைக்கலம் சு**றாஅ** அ**றாஅ**'* - மேற்கதுவாய் அளபெடை *(யா. க. 46).*

**மேற்கதுவாய் நிரல்நிறை –**

*'நிரல்நிறைத் தொடை விகற்பங்கள்' காண்க.(யா. க. 95 உரை)*

**மேற்கோள் –**

*ஆசிரிய வசனமாகிய எடுத்துக்காட்டு. (நன். 9)*

**மொழிமாற்றுப் பொருள்கோள் –**

*அ. நாற்சீரடி இரண்டிலுள்ள சொற்களைப் பொருள் பொருந்துமாறு அறிந்து பிரித்து இணைத்துப் பொருள் கொள்ளுதல் சுண்ணமொழிமாற்று எனப்படும்.*

எ-டு : *'சுரைஆழ அம்மி மிதப்ப வரைஅனைய*
*யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப'*

*சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து என ஈரடியிலுள்ள சொற்களைப் பொருள் பொருத்தமுறச் சுண்ணம் செய்து கூட்டுதல்.*

*ஆ. யாதோரடியை எடுத்து முதல் நடு இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் மாறாது வருவது அடிமறி மொழிமாற்று எனப்படும்.*

எ-டு : *'மாறாக் காதலர் மலைமறந் தனரே*
*ஆறாகக் கட்பனி வரலா னாவே*
*வேறா மென்தோள் வளைநெகி ழும்மே*
*கூறாய் தோழியான் வாழு மாறே'.*

*ஒவ்வோரடியிலும் கருத்துத் தனித்தனியே முடிந்துமாறுதலானும் ஏகாரத்தான் ஒவ்வோரடியும் முடிதலாலும் இப்பொருள்கோளுக்கு இப்பாடல் ஏற்றவாறு காண்க.*

*இ. இரண்டடி மொழிமாற்று எனவும்பட்டு இரண்டடிகளில் உள்ள சொற்களைப் பிரித்துப் பொருள் பொருத்தமுறக் கூட்டிப் பொருள் செய்வது அடிமொழிமாற்று எனப்படும்.*

எ-டு : *'ஆலத்து மேல குவளை குளத்துள*
*வாலின் நெடிய குரங்கு'.*

*ஆலத்துமேல வாலின் நெடிய குரங்கு, குவளை குளத்துள என இரண்டடியிலும் மொழி மாற்றியவாறு காண்க.*

*(யா. க. 95 உரை)*

**மோனை அளபெடைத் தொடை –**

*சீர்களில் முதலெழுத்து ஒன்றி வந்து அளபெடுப்பது.*

எ-டு : ***அராஅ****வின் மான* ***அயாஅம்****வெங் காமம்*
***அலாஅ****லொன் றுண்டோ, பகை?'* (புனையப்பட்டது)

முதலடிக்கண், முதலாம் மூன்றாம் சீர்கள் முதலெழுத்து ஒன்றி வந்து ஆகாரம் அளபெடுத்து நின்றன; பொழிப்பு மோனை அளபெடை. அடிதோறும் முதற்சீர்கள் முத லெழுத்து ஒன்றிவந்து இரண்டாமெழுத்து ஆகாரம் அளபெழுந்தமையால் அடிமோனை அளபெடையும் அமைந்த வாறு. (யா. க. 41 உரை)

**மோனை இயல்பு –**

அ, ஆ, ஐ, ஔ; இ, ஈ, எ ஏ; உ ஊ ஒ ஓ - இவை தம்முள் ஒத்த மோனை எழுத்துக்கள். இனி இவற்றால் ஊரப்பட்ட மெய்யெழுத்துக்களும் இவ்வாறே கொள்ளப்படும். (க கா கை கௌ; கி, கீ, கெ, கே; கு, கூ, கொ, கோ - முதலாகக் கொள்க.)

இனி உயிர்மெய்யாக வரும் பிற வருக்கமோனையும் (ககரத்துக்குக் கி, கீ, கு, கூ, கெ, கே, கொ, கோ - போல்வன), ஒரு சொல் நடுவே வரும் உயிர்மெய் மோனையும், நிலையிடம் தவறி நிற்பனவும் 'கள்ள மோனை' என்று கடியப்படும்.

தக்க இடத்தே வருமோனை அரசாக நிற்கும் தகுதியுடையது. மோனை நலமில்லாத முத்தமிழ்ப்பாட்டு நாணமில்லா நங்கைக்கு ஒப்பாம். தவறிய மோனை, கலவிக்கு இசைந்த பின்னர் ஊடும் நங்கைக்கு ஒப்பாம். (தவறிய மோனை - ஒத்த மோனையாகாத வருக்க மோனை முதலியன.)

(அறுவகை. மோனை இயல்பு 8 - 11)

**மோனை இயைபுத்தொடை –**

'இயைபுத்தொடை மோனைத் தொடையொடும் கலந்து வருவது.

எ-டு : *'பூந்தண் பொழிலிடை வாரணம்* ***துஞ்சும்***
*பூங்கண் அன்னை இல்லிடைத்* ***துஞ்சும்****'*

அடிமோனைத் தொடையோடு இயைபுத் தொடையும் சேர வந்தவாறு. (யா. க. 40 உரை)

**மோனை இலக்கணம் –**

ஓரடிக்கண்ணும் ஈரடிக்கண்ணும் தொடைகோடல் வேண்டு மாகலின், அடிகளின் முதலெழுத்து ஒரே எழுத்தாக வரத் தொடுக்கும் அடிமோனை ஈரடிகளில் கொள்ளப்படும். சீர்மோனை ஓரடிக்கண் கொள்ளப்படும்.(தொ. செய். 92 நச்.)

**மோனை இணைக் குறள் வெண்பா –**

அடிமோனைத் தொடை அமைய வரும் குறள் வெண்பா.

எ-டு : *'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.* (கு. 267) (யா. க. 59 உரை)

**மோனை எதுகை : கிளை எழுத்து ஐந்து –**

வருக்கமோனை, வருக்க எதுகை, வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை - என்பன. *(தொ. செய். 94 நச்.)*

**மோனை, எதுகை : சொல்லாராய்ச்சி –**

முன்னை என்னும் இயற்சொல் மோனை எனத் திரிந்து இலக்கணக் குறியீட்டுச் சொல்லாயிற்று.

எதிர்கை என்னும் இயற்சொல் திரிக்கப்பெற்று எதுகை என இலக்கணக் குறியீடாக நின்றது. *(தொ. செய். 92, 93 ச. பால.)*

**மோனைத் தொடை விகற்பம் –**

சீர்தோறும் முதற்கண் வந்த எழுத்தே வரின் சீர்மோனையாம். அளவடிக்கண்ணேயே கொள்ளப்படும் இச்சீர்மோனை எழுவகைத்து. அவை இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பன.

எ-டு : *'**அ**ணிமலர் **அ**சோகின் தளிர்நலம் சுவற்றி*
***அ**ரிக்குரற் கிண்கிணி **அ**ரற்றும் சீறடி*
***அ**ம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் **அ**கற்றி*
***அ**கன்ற **அ**ல்குல் **அ**ம்நுண் மருங்குல்*
***அ**ரும்பிய கொங்கை **அ**வ்வளை **அ**மைத்தோள்*
***அ**விர்மதி **அ**னைய திருநுதல் **அ**ரிவை*
***அ**யில்வேல் **அ**னுக்கி **அ**ம்(பு)அலைத்(து) **அ**மர்ந்த*
*கருங்கயல் நெடுங்கண் நோக்கமென்*
*திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே'*

இந்நேரிசையாசிரியப்பாவின் முதலேழடிக் கண்ணும் இணை மோனை முதலிய ஏழும் முறையே வந்தவாறு 'இணை மோனை' முதலியவற்றை அவ்வத்தலைப்புள் காண்க.

*(யா. க. 35 உரை)*

**மோனை முரண் –**

மோனையும் முரணும் கலந்துவரும் தொடை.

எ-டு : *'சொல்லுப சொல்லப் பொறுப்பவே; யாதொன்றும்*
*சொல்லாத சொல்லப் பொறா.'*

இதன்கண், மோனையும் முரணும் அடிமுதற்கண்ணேயே அமைந்தமையால், மோனைமுரணாம்.' *(யா. க. 53 உரை).*

**மோனை வகைகள் –**

*மோனையானது அடி, இணை, பொழிப்பு, ஒருஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என எண்வகைப்படும். இவை நாற்சீரடியாகும் ஆசிரியம், வெண்பா, கலி என்ற மூன்று பாக்களிலும் காணப்படும்.*

*தன்னொடு தான் தொடுத்த கட்டளை அடிமோனை:*

*'**கா**ன மஞ்ஞை ஈன்ற முட்டை*
***கா**த லின்றி வீசு மந்தி'*

*(ஈரடியும் எழுத்தொத்தமை காண்க.)*

*பிறவடி தொடுத்த கட்டளை அடிமோனை:*

*'**கோ**தை மார்பிற் கோதை யானும்*
***கோ**தையைப் புணர்ந்தோர் கோதை யானும்'*

*(ஈரடியும் எழுத்தொவ்வாமை காண்க.)* *(புறநா. 48)*

*இருவகை அடியும் தொடுத்த அடிமோனை:*

*'**யா**ண்டும் காணேன் மாண்டக் கோனை*
***யா**னுமோர் ஆடுகள மகளே என்கை* (குறுந். 31)

*(முதலடி கட்டளை; ஏனையது சீர்வகை)*

*சீர்வகையடியின் அடிமோனை*

*'**க**ண்டற் கானற் குருகினம் ஒலிப்பக்*
***க**ரையா டலவன் அளைவயின் செறிய'* (அகநா. 260)

*கட்டளை இணைமோனை:*

*'**உ**வவுமதி **உ**ருவின் ஓங்கல் வெண்குடை'* (புறநா. 3)

*சீர் வகை இணை மோனை :*

*'**உ**லகம் **உ**வப்ப வலனேர்பு திரிதரு'* (முருகு. 1)

*கட்டளைப் பொழிப்பு மோனை:*

*'**செ**றுநர்த் தேய்த்த **செ**ல்லுறழ் தடக்கை'* (முருகு. 5)

*சீர்வகைப் பொழிப்பு மோனை :*

*'**வெ**யிலுருப் புற்ற **வெ**ம்பரல் கிழிப்ப'* (சிறுபாண். 8)

*கட்டளை ஒரூஉ மோனை:*

*'**வ**டாஅது பனிபடு நெடுவரை **வ**டக்கும்'* (புறநா. 6)

*சீர்வகை ஒரூஉ மோனை:*

***க**ல்லா தவரும் நனிநல்லர் **க**ற்றார்முன்'* (கு. 403)

*கட்டளைக் கூழைமோனை:*

***வா**னம் **வா**ய்த்த **வா**ங்குகதிர் வரகின்'* (முல்லைப். 98)

*சீர்வகைக் கூழைமோனை:*

*‘**ம**டக்கண் **ம**யிலியல் **ம**றலி யாங்கு’* (புறநா. 373)

*கட்டளை மேற்கதுவாய் மோனை:*

*‘**க**ந்திற் பிணிப்பர் **க**ளிற்றைக் **க**தம்தவிர’* (நான்மணி. 10)

*சீர்வகை மேற்கதுவாய் மோனை:*

*‘**கு**ளகரை யாத்த **கு**றுங்கால் **கு**ரம்பை’* (பெரும். 148)

*கட்டளைக் கீழ்க்கதுவாய் மோனை:*

*‘**எ**ல்லை **எ**ம்மொடு கழிப்பி **எ**ல்லுற’* (அகநா. 200)

*சீர்வகைக் கீழ்க்கதுவாய் மோனை:*

***ஒ**ல்லா(து) **ஒ**ல்லும் என்றலும் **ஒ**ல்லுவ(து)’* (புறநா. 196)

*கட்டளை முற்று மோனை:*

*‘**க**ற்க **க**சடறக் **க**ற்பவை **க**ற்றபின்’* (கு. 391)

*சீர்வகை முற்று மோனை:*

*‘**து**ப்பார்க்குத் **து**ப்பாய **து**ப்பாக்கித் **து**ப்பார்க்கு’* (கு. 12)

*(தொ. செய். 92 நச்.)*

## ய

**யாத்த சீர் –**

பொருளைப் பெறத் தொடர்ந்து நிற்கும் சீர் என்பது. அசை பல தொடர்ந்து சீராங்கால், அவ்வசையும், தத்தம் வகையால் பொருள் பெற்று நிற்றலும், அவ்வாறன்றிச் சீர் முழுதும் ஒரு சொல்லாங்கால் அவ் அசை பொருள் பெறாது நிற்றலும் அமையும். தேமா என்ற வாய்பாட்டில் தே - மா - என்ற இரண்டசைகளும் பொருள் பெற்றவை. ‘சாத்தன்’ என்ப தன்கண், சாத் - தன் - என்ற தனித்தனி அசைகள் பொருள் பெறாது, அவை தொடர்ந்து சீராகியவழியே பொருள் பெறும். பொருள் பெறுதலால் அசைக்குச் சிறப்போ பெறாமையால் இழிவோ இல்லை.

‘யாத்த சீர்’ இவ்வகையால், அசையும் தனித்தனியே பொருள் பெறுவனவும், அசைகள் பொருளின்றிச் சீராய் இயைந்த வழியே பொருள் பெறுவனவும் என இருவகைப்படும்.

*(தொ. செய். 1 பேரா.)*

**யதி –**

*1. சீரோசை முடியுமிடம் (தண்டி. 113 உரை). 2. தாளப்பிர மாணம் பத்தனுள் அங்கம் பலவற்றையும் ஒழுங்கு செய்வது (பரத. தாள. 25). 3. மோனை. 4. உரைநடையில் நிறுத்திப் படிக்குமிடம் (யாழ். அக.)* (L)

**யாப்பதிகாரம் என்ற பெயர் –**

*வீரசோழியம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் முதலிய நூல்களில் செய்யுள் பற்றிய பகுதி யாப்பதிகாரம் என்ற பெயர் பெறும்.*

*எழுத்தினும் சொல்லினும் வழக்கிற்கும் செய்யுட்கும் வேண்டுவன விராய்க் கூறி, பொருளதிகாரத்துள் முதல் ஏழு இயல்களான் பெரும்பான்மையும் வழக்கிற்கு வேண்டுவனவே கூறிய தொல்காப்பியனார் செய்யுளியலில் அப்பொருள் பற்றிய செய்யுள் கூறினார். பொருளதிகாரத்து முதல் ஏழு இயல்களும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொது. செய்யுளியல் செய்யுட்கே உரியது. இதனை யாப்பதிகாரமெனப் பெயரிட்டால், செய்யுள் வழக்கல்லாத உலகவழக்குப் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறும் பகுதிக்கு வழக்கதிகாரம் எனப் பெயரிடல் வேண்டும். அங்ஙனம் கூறாமையின், செய்யுள் பற்றிய பகுதியை யாப்பதிகாரம் என்ற தனிப்படலமாகக் கொள்ளாமல், செய்யுளியல் என்ற பெயரால் பொருளதிகாரத்தின் ஒரு பகுதியாகக் கோடலே தொல்காப்பியனார் கருத்தாகும். (தொ. செய். 1 பேரா.)*

**யாப்பருங்கலஉரை கூறும் தொடைகள் –**

*மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, செந்தொடை, இரட்டைத்தொடை, அந்தாதித் தொடை எனத் தொகைவகையான் **8** ஆம்.*

*தலையாகு மோனை, இடையாகு மோனை, கடையாகு மோனை; தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை; சொல் முரண், பொருள் முரண், சொற்பொருள் முரண், மோனை முரண், எதுகை முரண், செம்முரண்; மோனை இயைபு, எதுகை இயைபு, முரண் இயைபு, அளபெடை இயைபு, மயக்க இயைபு, செவ்வியைபு; மோனை அளபெடை, எதுகை அளபெடை, முரண் அளபெடை, மயக்கு அளபெடை, செவ்வளபெடை; இயற்செந்தொடை, மருட் செந்தொடை; ஒரு பொருள் இரட்டை, இருபொருள் இரட்டை, பல பொருள் இரட்டை, இருமுற்று இரட்டை;*

*எழுத்து அந்தாதி, அசை அந்தாதி, சீர் அந்தாதி, அடி அந்தாதி, மயக்க அந்தாதி, இடையீட்டு அந்தாதி - என வகையாகிய நிலையான் **35** ஆம்.*

*(அடி தோறும் முதற்கண் நிகழ்வதாகிய) அடி, இணை - பொழிப்பு - ஒரூஉ - கூழை - மேற்கதுவாய் - கீழ்க்கதுவாய் - முற்று - கடையிணை - பின் - இடைப்புணர் - கடைக்கூழை - என்னும் இவ்விகற்பங்கள், (அடிதோறும் இறுதிக்கண் நிகழ்வதாகிய) கடை என்னும் இத்திறம் பதின்மூன்றனையும் மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்னும் தொடை. ஐந்தனோடும் உறழவே வருவன (13 X 5) = 65; மற்றும் அசை விரளச் செந்தொடை, சீர் விரளச் செந்தொடை, இசை விரளச் செந்தொடை, முற்று விரளச் செந்தொடை; குறையீற்றுப் பலபொருளிரட்டை, நிறையீற்றுப் பலபொருளிரட்டை, ஒரு பொருளிரட்டை, நிறையீற்று ஒரு பொருளிரட்டை, குறையீற்று முற்றிரட்டை, நிறையீற்று முற்றிரட்டை; மண்டில எழுத்தந்தாதி, செந்நடை. எழுத்தந்தாதி, மண்டில அசையந்தாதி, செந்நடை அசையந்தாதி, மண்டிலச் சீரந்தாதி, செந்நடைச் சீரந்தாதி, மண்டில அடியந்தாதி, செந்நடை அடியந்தாதி, மண்டில மயக்கந்தாதி, செந்நடை மயக்கந்தாதி, மண்டில இடையீட்டந்தாதி, செந்நடை இடையீட்டந்தாதி; எனச் செந்தொடையும் இரட்டைத் தொடையும் அந்தாதித் தொடையும் விகற்பித்து வருவன **20**; ஆக விரிவகையான் 85 ஆம். (யா. க. (சிறப்புப் பாயிரம்) உரை)*

**யாப்பருங்கலஉரை நாலசைச் சீரை நீக்கக் கூறும் ஏழு நயங்கள் –**

*'நாலசைச் சீர் வாராமல் காக்கும் வழிகள்' என்ற தலைப்புள் காண்க.*

**யாப்பியல் –**

*பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, முதுசொல், அங்கதம் அல்லது குறிப்புமொழி என்பன பற்றிய செய்திகளை விளக்கிக்கூறும் இலக்கணப் பகுதி. பாட்டு என்பது ஓசையும் அடிவரையறையும் உடையது; ஏனைய செய்யுட்களுக்கு அடிவரையறை இல்லை.*

**யாப்பின் உறுப்புகள் –**

*எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்னும் இவ்வேழுமாம். இவற்றொடு புணர்ந்து யாப்புக் குற்றமின்றி நடைபெறுவது. முப்பத்திரண்டு உறுப்பில் தீர்ந்து மக்கள் சட்டகம் (-உடல்) இல்லாதவாறு போல, இவ்வேழுறுப்பின்*

*தீர்ந்து யாப்பு இல்லையாம். ஆகவே, இவ்வுறுப்புக்களைக் கூறவே, அவற்றது கூட்டமாய் அமைந்த உறுப்பியாகிய யாப்பும் அடங்கும்.* *(யா. க. 1 உரை)*

**யாப்பின் பிறபெயர்கள் –**

*பாட்டு, தூக்கு, செய்யுள், தொடர்பு என்பன.(யா. க. பாயிர உரை)*

**யாப்பினும் பொருளிலும் வேற்றுமையுடைத்து ஆதல் –**

*தரவின்றாகித் தாழிசை பெறுதல், தாழிசை யின்றித் தரவுடைத்தாதல், எண்ணிடையிட்டுச் சின்னம் குன்றுதல், அடக்கியலின்றி அடி நிமிர்ந் தொழுகுதல் என்பன தவிர, ஏனைய வகையில் யாப்பினானும் பொருளினானும் வேற்றுமையுடையதாய் வருதல். அவை வருமாறு.*

*1. இருசீர் முதல் எண்சீர்காறும் வந்த அடி நான்காகி வருதல் :*

எ-டு : *‘நெய்யொடு தீயொக்கச்*
*செய்யானைச் சேர்ந்தார்க்குப்*
*பொய்யாத உள்ளமே*
*மெய்யாதல் வேண்டுமே.’*

*இது குறளடி நான்கான் வந்தது.*

*‘மையணி கண்டனை வானோர்*
*ஐயனை ஆயிரம் பேழ்வாய்ப்*
*பையர வம்பல பூணும்*
*மெய்யனை மேயது வீடே.’*

*இது சிந்தடி நான்கான் வந்தது.*

*‘வென்றான் வினையின் தொகையாய்வி ரிந்து தன்கண்*
*ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னொழி யாது முற்றும்*
*சென்றான் திகழும் சுடர்சூழொளி மூர்த்தி யாகி*
*நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்.’*

*இது நெடிலடி நான்கான் வந்தது. (சூளா. காப்பு.)*

*‘மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாணமுழுது’* (சூளா. துறவு. 64)

*இது கொச்சகம் போல் அடுக்கி வாராது, தாழம்பட்ட ஓசையுடைய தரவு கொச்சகம்.*

*2. அவற்றுள் பிற அடி விராய் வருதல் :*

எ-டு : *‘ஒரு வான்யா றோடுச டாடவிப்*
*பெரு நாகமே பூணும் பெருமான்*
*அரு வானா னாயினு மன்பர்க்*
*குரு வாயினான் உள்ளத்தி னுள்ளே.’*

இது நிரையசைச்சீர் முதற்கண் வந்த அளவடி நான்காய்ப் பிற அடி விராஅயது.

3. பா மயங்கி வருதல் :

எ-டு : *'முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகும் ஏவல்செய*
*மொழிசெய் கோமான்*
*வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் தாக்கரிய*
*வைவேல் பாடிக்*
*கலங்கிநின் றாரெலாம் கருதலா காவணம்*
*இலங்குவா ளிரண்டினால் இருகைவீ சிப்பெயர்ந்*
*தலங்கல்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்*
*பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்*
*விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே.'*

இது தெய்வம் பற்றாது மதங்கியின் ஆடல் பற்றிய புறப் பொருளதாய் அடி ஒவ்வாது பலஅடி வந்து பா மயங்கியது.

*'தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு*
*படந்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர*
*வென்றாடு திருத்தாதை வியந்துகை துடிகொட்ட*
*நின்றாடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே.'*

இது நான்கடியும் ஒத்துப் பா மயங்கி வந்தது.

4. ஈரடியான் வருவனவற்றுள் ஈற்றடிமிக்கும் குறைந்தும் குறையாதும் வந்து இயலசைச் சீர் பெற்று வருதல்:

எ-டு : *'கங்கை சூடிய கபாலிநின் அடியிணை*
*தங்கு நெஞ்சினர் தளர்வுறு பிறவியை நீப்பர்.'*

இஃது ஈரடியாய் ஈற்றடி மிக்கது.

*'புனைமலர்க் கடம்பின் பூந்தார்ச் சேந்த!*
*நினையடி பரவுதும் யாம்.'*

இஃது ஈரடியாய் ஈற்றடி குறைந்தது.

*'கொன்றை வேய்ந்த செல்வன் அடியை*
*என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.'*

இஃது ஈரடியாய் ஈற்றடி குறையாது வந்தது. இவை மூன்றிலும் இயலசைச்சீர் அடிதோறும் வந்தது.

5. ஓசையும் பொருளும் இனிதாகாது வருதல்:

எ-டு : *'அறுவர்க் கறுவரைப் பெற்றும் கவுந்தி*
*மறுவறு பத்தினி போல்வை கினீரே.'*

6. ஈரடிச்செய்யுள் முடிந்து நிற்கவும் ஈற்றடி ஒன்றும் இரண்டும் மிக்கு வருதல் :

எ-டு : *'கொன்றைசேர் சடைமுடியோன் கொந்தழல்போல் மேனியோன்*
*ஒன்றிய யெண்களை ஓவாதே யுள்ளுக;*
*செல்கதி யின்றிச் சிவகதி சேர்வதோர்*
*நல்லறி வெய்துது நாமே.'*

இஃது ஈரடி யிற்றதன்மேல் ஈற்றடியிரண்டு மிக்கு வந்து ஒன்று உட்பட்டது.

7. மூவடியான் வருவனவற்றுள் ஈற்றடி குறைந்தும், முதலடி மிக்கும், இடையடி குறைந்தும், இறுதியடி மிக்கும், மூன்றடியில் குறையாதும் பிறவாறாகவும் வருதல்:

எ-டு : *'நண்பி தென்று தீய சொல்லார்*
*முன்பு நின்று முனிவு செய்யார்*
*அன்பு வேண்டு பவர்.'*

இது மூன்றடியான் வந்து ஈற்றடி குறைந்து அசைச்சீரான் முடிந்தது.

*'தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னாம்*
*யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்*
*பீலிபோற் சாய்ந்து விடும்பிளிற்றி யாங்கே.'*

இது முதலடி மிக்கது.

*'பூண்ட பறையறையப் பூத மருள*
*(நீண்ட சடையா னாடுமே)*
*நீண்ட சடையான் ஆடு மென்ப*
*மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.'*

இஃது இடையடி குறைந்து இறுதியடி மிக்கது; கந்திருவ மார்க்கத்தான் இடை மடக்கி நான்கடியும் ஆம்.

8. இரண்டும் மூன்றும் நான்குமாகிய அடியுள் ஈற்றடி குறைதல்:

எ-டு : 'புனைமலர்......... யாம்' என்பது ஈரடியாய் ஈற்றடி குறைந்தது.

9. ஈற்றடி குறையாதவழி இயலசைச் சீர் அடிதோறும் வருதல்:

'அறுவர்க் கறுவரை ....... னீரே' என்பது ஈரடியாய்க் குறையாது அடிதோறும் இயலசைச் சீர் பெற்றது.

10. மூவடி இற்றபின், ஈற்றடி ஒன்றும் இரண்டும் மிக்குவருதல்:

எ-டு : *'பிறையணிந்த சடைமுடியோன் பிஞ்ஞகன் பெம்மான்*
*கறையணிந்த கண்டத்தான் கையிலங்கு சூலத்*
*திறையணிந்த நெஞ்சினோர்க் கின்றாம் பிறவி;*
*இம்மைப் பிணியும் இயலும் பசியொடு*
*தம்மைத் துறந்திடும் தாவில் புகழுளதாம்.'*

இது மூன்றடி இற்றதன்மேல் இரண்டடி வந்தது.

11. நான்கடியாய் வருவனவற்றுள், முதல் இடை கடையில் குறைந்து வருதல் :

எ-டு : *'சதுர்முக ஒருவ!நின் சரணடைந்தேம்*
*முதிர்மிகு நீருள்நந்து மிவ்வங்க நாவாய்*
*திருவுறு நிலைமைத்தாய்ப் போதெனக் கூறிநிற்பார்*
*அதிர்வன ரிருகையு மாற்றுறக் கூப்பி நிற்பார்.'*

இது நான்கடியாய் முதலடி குறைந்தது.

*'தனுவெழ அரிவையைத் தகுமணம் புணர்ப்பின்*
*முனிவுறு தொழிலினை மூளாள்*
*நனிதவிர்த் திலர்க்கிடு நாடொறு நாடொறும்*
*கனியென இனியள்முன் கலந்தமற் றவர்க்கே'*

இஃது இரண்டாமடி குறைந்தது.

அம் முதல் இடை கடைக்கண்ணே ஓரடியும் ஈரடியும் சீர் மிக்கு வருதல் :

எ-டு : *'வண்டணி கொண்ட மதுமலர்க் கொன்றை யினமாலை*
*கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள்போல்*
*பண்டணி யாகப் பலர்தொழும் கங்கை நீர்வைத்தால்*
*உண்டணி கொண்டநஞ் சுண்பார்க் கமிழ்தா(கு)மே.'*

இது நான்கடியாய், அளவடியிரண்டும் ஐஞ்சீரடி யிரண்டும் வந்தது.

*'கண்டெழப் பாவை தனிக்கரம் பிடிப்பா ராயிற்*
*கொண்டவற் பேணிக் குடிக்கு விளக்காகும்*
*நெண்டொழி நெடுமானை தன்னை நீங்கிப்போய்*
*மற்றொரு குழகன் தன்னையே.'*

இது முதலடி மிக்கது.

*'போதுறு முக்குடைப் பொன்னெயி லொருவன்*
*தாதுறு தாமரை யடியே*
*தாதுறு தாமரை அடியடைந் தாரெனில்*
*தீதுறு தீவினை யிலரே.'*

இது சில அடி குறைந்து இடைமடக்கிப் பிறவாறாயிற்று.

12. நான்கடி இற்றபின், ஈற்றடி ஒன்றும் இரண்டும் மிக்கு வருதல் :

எ-டு : *'வேயே திரள்மென்தோள் வில்லே கொடும்புருவம்*
*வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி*
*நோயே முலைசுமப்ப என்றார்க் கருகிருந்தார்*

*ஏஏ இவளொருத்தி பேடியோ என்றார்*
*எரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ என்றார்.'* (சீவக. 654)

இது நான்கடிச் செய்யுள் இற்றபின் ஈற்றடி ஒன்று மிக்கு வந்தது.

*13. நான்கடி இற்றபின், ஈற்றடி ஒன்று மிக்கு ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருதல் :*

எ-டு : *'மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகையளந்த*
*தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போத்து*
*சோவரணம் போர் மடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த*
*சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே?*
*திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே?'*

*'பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்*
*விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்*
*திருவடியும் கையும் கனிவாயும் செய்ய*
*கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?*
*கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே?'*

*'மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்*
*கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்*
*படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது*
*நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?*
*நாராய ணாஎன்னா நாவென்ன நாவே?'* (சிலப். ஆய்ச்சியர் குரவை.)

*14. பத்து அடுக்கி ஒரு பொருள்மேல் பதிகப் பாட்டாய் வருதல் :*

எ-டு : 'தேவாரம், திவ்விய பிரபந்தம், திருவாசகம் முதலிய வற்றுள் இப்பாடல் காணப்படும். இவற்றுள் ஈரடி மேல் இரண்டடி வைப்பும், நாலடிமேல் ஈரடி வைப்பும் (சம்பந்தர் தேவாரம்), நாலடிமேல் ஓரடி வைப்பும் (அப்பர் தேவாரம், 'மாதர்ப் பிறைக் கண்ணி யானை' என்னும் பதிகம்). ஒருபொருள்மேல் பத்தடுக்கி வந்தவாறு காண்க. (பதினொருபாடல் வருவனவும் கொள்க.)

*15. அளவியலின் வேறுபட்டு வருவது :*

எ-டு : முன்னர்க் காட்டிய பாடல்களுள்ளே காணப்படும்.

*16. ஐந்தடியான் வருவனவற்றுள் ஈற்றடி குறைந்து வருவது :*

எ-டு : *'வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்*
*உறவுற வருவழி உரைப்பன உரைப்பன்மன்*
*செறிவுறு மெழிலினர் சிறந்தவ ரிவர்நமக்(கு)*

*அறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்*
*பிறபிற நிகழ்வன பின்'*

*17.* ஐந்தடி இற்றபின் ஓரடியும் ஈரடியும் மிக்கு வருவது :

எ-டு : *'வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்*
*ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின்!*
*ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டைக்க!*
*பாய்திரை வேலிப் படுபொருள் நீ அறிதி*
*காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?'*

*'கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்*
*ஒள்ளெரி உண்ணுமிவ் வூர்என்ற தொருகுரல்.'* (சிலப். துன்பமாலை)

இஃது ஐந்தடிச் செய்யுள் முடிந்தபின், ஈரடி மிக்கது.

*18.* முச்சீரான் இற்றுச் சிலசீர் மிக்கு வருதல் :

எ-டு : *'கோழியும் கூவின குக்கில் குரல்காட்டும்*
*தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ!*
*ஆழிசூழ் வையத்தெம் அண்ணல் அடியேத்திக்*
*கூழை நனையக் குடைதும் குளிர்புனல்*
*ஊழியு மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்!'*

*19.* ஆறு முதலிய அடிகளான் வருதல் :

எ-டு : பாவைப்பாட்டு எட்டடியான் வருவன.

*20.* கடவுட்பொருள் தொடர்நிலைகளாக வருதல்.

*21.* பலதரவும் தாழிசையுமாகி இடைமிடையச் செய்தல்.

*22.* அடக்கியலின்றி அடிநிமிர்ந்து பின் அடக்கியல் பெற்று வருதல்.

*23.* புறப்பொருளான் வருதல்.

*24.* கந்தருவ மார்க்கத்தான் இடைமடக்கி வருதல் என்னு மிவை போல்வன. (தொ. செய். 149 நச்.)

**யாப்பு -**

பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்க ளாலும், செய்யுளும் உரைநடையும் என இருவகை நடையில் படைக்கப்படும் இலக்கிய வடிவத்தை, இயற்றத்தகு முறை யானே, மாத்திரை - எழுத்து - அசை - சீர் - தளை - அடி - தொடை - நோக்கு - ஓசை - வண்ணம் - என்னும் உறுப்புக்க ளொடு வனப்பும் அமைந்துவரத் தொடுப்பது யாப்பு எனப்படும். (தென். யாப். 1)

**யாப்பு என்ற செய்யுள் உறுப்பு –**

எழுத்து முதலாக அசையும் சீரும் ஒன்றாகத் தொடர்ந்து அமைந்த அடியிலே, தான் குறிப்பிடக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியும் கொண்டு கூட்டிப் பொருள் செய்யாமல், அவ்வப் பொருள் அவ்வவ் அடியிலேயே முற்றுப்பெறுமாறு செய்தல்.

எ-டு : *'நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்*
*சாரச் சார்ந்து தீரத் தீரும்;*
*சாரல் நாடன் கேண்மை*
*சாரச் சாரச் சார்ந்து*
*தீரத் தீரத் தீர்பொல் லாதே.'*

இஃது ஆசிரியம்.

*'துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்*
*பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;*
*அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்;*
*சகடக்கால் போல வரும்.' (நாலடி. 2)*

இது வெண்பா.

*'அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்*
*பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்*
*புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தருமெனப்*
*பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்றநங் காதலர்*
*வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி'. (கலி : 11)*

இது கலிப்பா.

*'வசையில்புகழ் வயங்குவெண்மீன்*
*திசைதிரிந்து தெற்கேகினும்*
*தற்பாடிய தளியுணவின்*
*புட்டேம்பப் புயன்மாறி*
*வான்பொய்ப்பினும் தான்பொய்யா*
*மலைத்தலைஇய கடற்காவிரி'* (பட். 1-6)

இது வஞ்சி.

இவ்வாறு இந்நால்வகைச் செய்யுட்கண் முடியும் துணையும். அடிதோறும் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு காணப்படும்.

இரு சீரானும் முச்சீரானும் குறித்த பொருளை முடிப்பனவும், அங்ஙனம் முடித்த பிறகும் அச்சீரை மேல் வருகின்ற அடியொடு பொருள் முடியச் செய்வனவும், சிறுபான்மை யாப்பினுள் அடங்கும்.

*'மண்டிலமமுங்க, மலைநிறம்கிளர - இருசீர்*
*வண்டினம் மலர் பாய்ந் தூத, மீமிசை - முச்சீர்*
*கண்டற் கானற் குருகின மொலிப்ப' - நாற்சீர்* (அகநா. 260)

என இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானும் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு. (தொ. செய். 78 நச்.)

முச்சீரான் முடிய நாட்டுவன வெண்பாவிற் காணப்படும்.(நச்.)

*'முயற்கோடு சீவி முதுவிசும்பு போழ்ந்தான்'*

என எழுத்தும் அசையும் சீரும் பொருளிலவாகி வருதல் யாப்பெனப்படாது. பொருத்தமில்லா நிரல்நிறையமைப்பும் யாப்பெனப் படாது. (பேரா.)

**யாப்புப்படலம் –**

வீரசோழியத்துள் பொருளதிகாரமாகிய பொருட்பட லத்தை அடுத்த படலம்; ஐந்திலக்கணம் கூறும் நூலுள் இது நான்காவதாக உள்ளது.

**யாப்புறுப்பின் பகுதி –**

குறித்த பொருளை அவ்வவ் வடிக்கண் முடிய நாட்டும் யாப்பு என்ற உறுப்பு, அவ்வுறுப்பை யுடைய செய்யுள்களிடத்தது ஆதலின், அச்செய்யுள்களின் பெயராகிய பாட்டு, நூல், உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பவற் றொடு கலந்து, பாட்டியாப்பு, நூல்யாப்பு, உரையாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல் யாப்பு எனவும் வழங்கப்பட்டு அவ்வச் செய்யுள்களையும் குறிக்கும். இவற்றுள், பாட்டு என்பன அடிவரையறை யுடையன; ஏனையவற்றுக்கு அடிவரையறை இன்று. (தொ. பொ. 79 நச்.)

எனவே, யாப்பு பாட்டுயாப்பு முதலாக எழு வகைப்படும். (75 இள.)

**யாற்றுநீர்ப் பொருள்கோள் –**

அடிதோறும் பொருள் அற்று மீளாது சேர்வது.

எ-டு : *'அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்;*
*விலைப்பாலின் கொண்டூன் மிசைதலும் குற்றம்;*
*சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்;*
*கொலைப்பாலும் குற்றமே யாம்'.* (நான்மணி. 100)

இப்பாடலில் பொருள் அடிதோறும் தனித்தனியே முடிந்தது.

*இனிப் பிற நூலார், தொடக்க முதல் இறுதிவரை நேராக (மடங்காது ஒரு முகமாகவே யாறு ஒழுகுமாறு போல)ப் பொருள் கொள்ளப்படுவதே இப்பொருள்கோள் என வேண்டுவர்.*

எ-டு : *'சொல், அருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்*
*மெல்லவே கருஇருந்(து), ஈன்று மேலலார்*
*செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்*
*கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'* (சீவக. 53)

*நெற்பயிர்கள் (சொல்) கரு இருந்து, ஈன்று, தலை நிறுவி, இறைஞ்சிக் காய்த்தன என மடங்காது ஒரு முகமாகப் பாடல் பொருள்கொள்ளக் கிடந்தவாறு.* *(யா. க. 95 உரை)*

## ல

**லகு –**

*தனிக்குற்றெழுத்து 'லகு' வாகும் இதற்கு ஓர் அலகு. இது ரகர வடிவிற்று. அடியிறுதிக்கண் வரும் தனிக்குறில் ஒருகால் கூறுமாற்றான் 'குரு' வாக ஒலிக்கப்பட்டு ஈரலகும் பெறும்.*
*(யா. வி. பக். 476)*

## வ

**வகுத்தனர் கொள்ளுதல் –**

*ஆராய்ந்து கொள்ளுதல்.* *(தொ. செய். 113 நச்.)*

**வகை நிலைக் கொச்சகம் –**

*கொச்சகம் வகை. (சீவக. 2514 உரை)*

**வகையுளி –**

*அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் வண்ணமும் செய்யுட்கு அழியாத நிலையில், முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி அறிந்து குற்றம் உண்டாகாத வாறு வண்ணம் அறுத்தல்.*

எ-டு : *'நிலமிசை நீடுவாழ் வார்'*

*'பாடுநர்க்கும் ஆடுநர்க்கும் பண்டுதாம் கண்டவர்க்கும்*
*ஊடுநர்க்கும் கூடுநர்க்கும் ஒத்தலால்'*

*'அழலா னாவெங் கண்ணே தெய்யோ'*

'நீடு வாழ்வார்' என்ற சொற்களை 'நீடுவாழ்' எனவும் 'வார்' எனவும் இருசீர்களாகக் கணக்கிடுவதும்,

'பாடு நர்க்கும்' முதலியவற்றை, டுகர நகரங்கள் பிரிந்தொலிப் பினும், பா-டுநர்க்-கும் முதலாகக் கூவிளங்காயாகக் கணக் கிடுவதும்,

'அழல் ஆனா எம் கண்ணே' என்பனவற்றை 'அழலா னாஎம் கண்ணே' எனப்பிரித்து இசை கோடலும் வகையுளியாம்.

ஓசை யடிப்படையில் சீர்களின் அசைகளைப் பிரித்துக் கூட்டுதல் இதற்கு இன்றியமையாதது. பொருள் நோக்காது, இசை பற்றிச் சீர் பிரிக்குமிடத்து வகையுளி நிகழும்; அதுகுற்றமாகாது, தளை கெடாதவாறு காத்தலின்.

(யா. வி. பக். 396)

**வசை, நசை : சொற்பொருள் –**

வசையாவது, வெறுப்பும் சினமும் பற்றி வரும் கடுமொழி, நசையாவது, இயையாதாயினும் பெறல் வேண்டும் என்னும் சிறுவேட்கை. அங்கதச் செய்யுள் இவ்விரண்டொடும் கூடி வரும். (தொ. செய். 129 ச. பால.)

**வஞ்சி அடிவகைகள் –**

வஞ்சி அடிகள் சமநிலை, வியனிலை என இருவகைய. சமநிலை வஞ்சியடி இருசீர்த்தாகும். ஒவ்வொரு சீரும் மூன்று முதல் ஆறு எழுத்தின்காறும் முடியப்பெறும்.

எ-டு : 'கொன்று கோடு நீடு கொலைக் களிறு கடாம்'

3 எழுத்து 6 எழுத்து

மெய்யும் குற்றுகரமும் நீக்கப்படும்.

வியநிலை வஞ்சியடி முச்சீர்த்து ஆகும்; இவ்வஞ்சிக்கண் அருகி ஈரெழுத்துச் சீரும் வரப்பெறும்.

எ-டு : 'நுந்தைகாடு' - இதனுள் நு-டு என்று வந்த இரண்டு குற்றுகரமும் ந் என்ற ஒற்றும் நீக்கிக் கணக்கிட இஃது ஈரெழுத்துச் சீராம்.

சமநிலைவஞ்சி குறளடிவஞ்சி எனவும், வியனிலை வஞ்சி சிந்தடிவஞ்சி எனவும், இவையிரண்டும் கலந்து வருவது மயக்கடிவஞ்சி எனவும் பெயர்பெறும். சிந்தடிவஞ்சி சிறு பான்மையே வரும். சிந்தடி கட்டளை வஞ்சிஅடி அன்று.

(தொ. செய். 45 - 47நச்.)

**வஞ்சிஉரிச்சீர் (1) –**

*மூவகைச் சீர்கள் அறுபத்து நான்கனுள், வெண்பா உரிச்சீர் நான்கும் நீங்கலான அறுபதும் ஆம். (நேர் நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர், நிரை நேர் நேர் என்ற நான்கும் வெண்பா உரிச்சீர்களாம்.) 'மூவசைச்சீர் அறுபத்து நான்கு' தனித் தலைப்பிற் காண்க. (தொ. செய். 20 நச்.)*

**வஞ்சி உரிச்சீர் (2) –**

**சீர்கள் –**

*நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நேர் நிரை நிரை;*

*வாய்பாடுகள்:-*

| | | | |
|---|---|---|---|
| *1. தேமாங்கனி* | *புளிமாங்கனி* | *கருவிளங்கனி* | *கூவிளங்கனி* |
| *2. மாவாழ்சுரம்* | *புலிவாழ்சுரம்* | *புலிபடுசுரம்* | *மாபடுசுரம்* |
| *3. பூவாழ்பதி* | *திருவாழ்பதி* | *திருவுறைபதி* | *பூவுறைபதி* |
| *4. மீன்வாழ்துறை* | *சுறவாழ்துறை* | *சுறமறிதுறை* | *மீன்மறிதுறை* |
| *5. பூண்மென்முலை* | *புணர்மென்முலை* | *புணரிளமுலை* | *பூணணிமுலை* |

*இவ்வைந்து திற வாய்பாடுகளுள், தேமாங்கனி முதலாகிய நான்குமே வழக்கில் மிக்குள்ளன.*

*எ-டு : தேன்தாழ்வன - தேமாங்கனி; இறவீன்பன - புளிமாங் கனி; சுறமறிவன - கருவிளங்கனி; மீன்திரிவன - கூவிளங்கனி. (யா. க. 12 உரை)*

**வஞ்சி உரிச்சீர் வந்து உறழுதல் இல்லா ஆசிரிய அடிகள் –**

*பதினேழ் நிலத்திற்குமுரிய ஆசிரியப்பாவினுள் 4 எழுத்து முதலாக 14 எழுத்தளவும் பெறும் என்ற குறளடி சிந்தடி அளவடிகளின்கண் வஞ்சியுரிச்சீர் வந்து உறழுதல் இல.*

*வஞ்சியுரிச்சீருள் மூன்றெழுத்துச் சீரும் சிறுபான்மை நான்கெழுத்துச் சீரும் மிக அருகியே வரும்.*

*எ-டு : 'விருந்துவரக் கரைந்த **காக்கையது** பலியே'* (குறுந். 210)

*'பனைமருள் **தடக்கையொடு** முத்துப்பட முற்றிய'* (புறநா. 161)

*(தொ. செய். 56 ச. பால.)*

**வஞ்சிஉரிச்சீர் வருமிடம் –**

*வஞ்சியுரிச்சீர் அறுபதும் வஞ்சிப்பாவிலேயே வரும்; ஏனைய ஆசிரியம், கலி, இவற்றுள் அருகி வரும். ஆசிரியஉரிச்சீர் தூங்கல்ஓசையை ஆக்குமாறு போல, வஞ்சியுரிச்சீர்கள்*

*அகவல்ஓசையை ஆக்கா ஆதலின், அவை வஞ்சிப்பாவிற்கே கொள்ளப்பட்டன. (தொ. செய். 21 நச்.)*

**வஞ்சிஓசை வகை -**

*ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் என்பன. மூன்றும் ஆம். (யா. க. 90) (தூங்கல் ஓசையானது வழக்கின்கண் நிகழாது; செய்யுட்கண் அடியிறுதியில் தூங்காது (-ஓசை குறையாது), சீர்தோறும் ஓசை குறைந்து வருவது. இத்தூங்கல்ஓசை வஞ்சிப்பாவிற்கு உரியதாம். (தொ. பொ. 84 நச்.) தூங்குதல் - சீர்தோறும் ஓசை அறுதல்.*

*(தொ. செய். 80 இள.)*

**வஞ்சிக்குரிய நிலம் -**

*4 எழுத்து முதலாக 12 எழுத்து முடிய வரும் குறளடி வஞ்சிப்பாவிற்குரியன; 8 எழுத்து முதலாக 17 எழுத்து முடிய வரும் சிந்தடி வஞ்சிப்பாவிற்குரியன. (எழுத் தெண்ணு கின்றுழி, மெய்யும் குற்றுகரமும் எண்ணப்படா.)*

| **இருசீரடி வஞ்சிப்பா** | | **எடுத்துக்காட்டு** |
|---|---|---|
| *4 எழுத்தடி* | - | *'கல்சேர்ந்து கால்தோன்று'* |
| *5 எழுத்தடி* | - | *'தண்பால் வெண்கல்லின்'* |
| *6 எழுத்தடி* | - | *'கண்டுதெண்டாக் கட்கின்பத்து'* |
| *7 எழுத்தடி* | - | *'காழ்வரக் கதம்பேணா'* |
| *8 எழுத்தடி* | - | *'தாழிரும் பிணர்த்தடக்கை'* |
| *9 எழுத்தடி* | - | *'நிலனெளியத் தொகுபீண்டி'* |
| *10 எழுத்தடி* | - | *'அகன்ஞாலம் நிலைதுளங்கினும்'* |
| *11 எழுத்தடி* | - | *'தாள் களங்கொளக் கழல்பறைந்தன' (புறநா. 4)* |
| *12 எழுத்தடி* | - | *'குருகிரிதலின் கிளிகடியினர்'* |

| **முச்சீரடி வஞ்சிப்பா** | | **எடுத்துக்காட்டு** |
|---|---|---|
| *8 எழுத்தடி* | - | *'வேங்கை வாயில் வியன்குன்றூர்'* |
| *13 எழுத்தடி* | - | *'பயில்படுவினை பத்தியலாற் செப்பி யோன்'* |
| *14 எழுத்தடி* | - | *'பணையெருத்தின் இணையரிமான் அணை யேறி* |
| *15 எழுத்தடி* | - | *'வடிவாலெயிற் றழலுளைய வள்ளுகிர'* |
| *16 எழுத்தடி* | - | *'கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன'* |
| *17 எழுத்தடி* | - | *'மதுவிரவிய மலர்களுலிய வயற்றாமரை'* |

*(யா. வி. பக். 500, 501)*

**வஞ்சிச்சீர் –**

*'வஞ்சி உரிச்சீர்' காண்க.*

*இவற்றை 'நேர் நேர்பு நேர்' என்பதற்கு மா***போகு***வாய் மா***மேவு***வாய் எனக் குற்றியலுகர முற்றியலுகர வேறுபாடு களால் இருநிலைமைப்படுப்பது போல், ஏனையவற்றையும் இருநிலைமைய ஆக்கிக் கொள்ளல் வேண்டும். (பாம்பு - மின்னு; களிறு - அரவு; வழங்கு - விரவு எனக் குற்றியலுகரங் கட்கு முற்றியலுகரம் கொள்ளப்படும்.)*

*மாசேர்* **காடு** *- மாசேர்* **காவு** *-மாசேர்* **கடறு** *- மாசேர்* **குரவு**

*மாவரு* **காடு** *- மாவரு* **காவு** *- மாவரு* **கடறு** *- மாவரு* **குரவு**

*புலிசேர்* **காடு** *- புலிசேர்* **காவு** *- புலிசேர்* **கடறு** *- புலிசேர்* **குரவு**

*புலிவரு* **காடு** *- புலிவரு* **காவு** *புலிவரு* **கடறு** *- புலிவரு* **குரவு**

*இவை நேர்புஈறு நான்காவன.இவை நிரைபுஈறு நான்காவன.*

*(தொ. செய். 57 நச்.)*

**வஞ்சிச்சீர் அறுபதனுள் எட்டு நிலைமையவாகும் 8 சீர்கள்–**

*நேர்புஈறு நான்கும், நிரைபுஈறு நான்கும் ஆம்.*

*'வஞ்சிச்சீர் இருநூற்றிருபத்து நான்கு ஆதல்' காண்க.*

*(தொ. செய். 57 நச்.)*

**வஞ்சிச்சீர் அறுபதனுள் நான்கு நிலைமையவரும் 28 சீர்கள் –**

*'வஞ்சிச்சீர் இருநூற்றிருபத்து நான்கு ஆதல்' காண்க.*

*(தொ. செய். 57 உரை)*

**வஞ்சிச்சீர் ஆசிரியத்துள் வருதல் –**

*கட்டளையல்லாத சீர்வகை ஆசிரியப்பாவில், அறுபது வஞ்சிச்சீருள், நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நேர் நேர் நேர்பு, நிரை நேர் நேர்பு, நேர் நேர் நிரைபு, நிரை நேர் நிரைபு, நேர்பு நேர் நேர், நேர்பு நிரை நேர், நிரைபு நேர் நேர், நிரைபு நிரை நேர் என்ற பத்துச் சீர்களே ஒரோவழி அருகி வரும்.*

*எ-டு :*

*'***மாரியொடு** *மலர்ந்த மாத்தாட் கொன்றை' - நேர் நேர் நிரை*

*'***குறிஞ்சியொடு** *கம்ழும் குன்ற நாடன்' - நிரை நேர், நிரை*

*'***முன்றிலாடு** *மஞ்ஞை மூதிலை கறிக்கும்' - நேர் நேர் நேர்பு*

*‘**அலரிநாறு** துவர்வாய் அமர்த்த நோக்கின்’* - நிரை நேர் நேர்பு

*‘**கண்போல்மலர்ந்து** வண்டு மயங்கு தாமரை’* - நேர் நேர் நிரைபு

*‘**கரடிவழங்கு** குன்று கண்டு போகி’* - நிரை நேர் நிரைபு

*‘**காடுதேரா** உழிதரும் கடுங்கண் யானை’* - நேர்பு நேர் நேர்

*‘**சந்துசிதைய** உழுத செங்குரல் சிறுதினை’* - நேர்பு நிரை நேர்

*‘**மருந்துநாடாத்** திருந்து சிலம்பில் சேக்கும்’* - நிரைபு நேர் நேர்

‘**கடறுகவரா** இழிந்து கான்யாறு வரித்த’ - நிரைபு நிரைபு நேர்

(தொல். செய். 31 நச்.)

**வஞ்சிச்சீர் இருநூற்றிருபத்து நான்கு ஆதல் –**

*நான்கெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் வஞ்சிப் பாவின் அடிகள் வரும். கட்டளை வஞ்சி எனப்படும் குறளடி வஞ்சிப்பாவிற்கே இவ்வரையறை என்பது.*

*அறுபது வஞ்சியுரிச் சீர்களுள்ளும் 24 சீர்கள் இரு நிலைமைய (48). ‘வஞ்சிச்சீர் அறுபதனுள் இரு ....’ காண்க; 28 சீர்கள் ஒரோவொன்று நான்கு நிலைமையுடையன (112); எட்டுச்சீர் ஒரோவொன்று எட்டு நிலைமையன (64). இவ்வாறு கொள்ளவே, உறழ்தல் நிலைமையால் வஞ்சிச் சீர்கள் 224 ஆகும்.*

**நான்கு நிலைப்படும் 28 சீர்களும் வருமாறு :**

*பாம்பு போகுவாய் பாம்பு சேர் சுரம் களிறுசேர் சுரம், மாபோகுகாடு; பாம்பு வழங்குவாய் பாம்பு வரு சுரம், களிறுவருசுரம், மாவழங்குகாடு; களிறு போகுவாய், பாம்பு போகுசுரம்; களிறுபோகுசுரம், புலிபோகுகாடு; களிறுவழங்கு வாய் பாம்பு வழங்கு சுரம், களிறுவழங்குசுரம், புலிவழங்குகாடு, பாம்பு சேர் காடு, மா போகு கடறு, பாம்பு சேர் கடறு; பாம்பு வரு காடு, மா வழங்கு கடறு, பாம்பு வரு கடறு; களிறு சேர் காடு, புலி போகு கடறு, களிறு சேர் கடறு; களிறு வரு காடு, புலி வழங்கு கடறு, களிறு வரு கடறு;*

***பாம்பு போகு வாய்**, **மின்னுப்** போகுவாய், பாம்பு **மேவு** வாய், **மின்னு மன்னு**வாய் - என ஒன்று நான்காக வாய்பாடு பெறுவிக்க.*

*இனி, வழங்கு - விரவு; களிறு - அரவு; சேர்சுரம் - சேர்வது; வருசுரம் - வலியது; களிறு சேர் சுரம் - ஒளிறு ஞாயிறு; அரவு சேர் சுரம் - பரவு ஞாயிறு என வாய்பாடுகள் கொள்வதால், ஒன்று நான்காக, 28 சீர்களும் 112 வாய்பாடாம்.*

*எட்டு நிலைமைப்படும் சீர் எட்டும் நேர்புஈறு 4, நிரைபுஈறு 4 என வரும்.*

*அவை வருமாறு :*

*பாம்பு போகு காடு, பாம்பு போகு கடறு; பாம்பு வழங்கு காடு, பாம்பு வழங்கு கடறு; களிறு போகு காடு களிறு போகு கடறு; களிறு வழங்கு காடு, களிறு வழங்கு கடறு;*

**பாம்பு போகு காடு**, **மின்னு** *போகு காடு; பாம்பு* **மேவு** *காடு,* **மின்னு மின்னு** *காடு, பாம்பு போகு* **காவு**; *பாம்பு* **மேவு காவு, மின்னு** *போகு* **காவு**, **மின்னு மின்னு காவு** *- என ஒன்று எட்டாக வாய்பாடு பெறுவிக்க.*

*இனி, வழங்கு - விரவு; களிறு - அரவு; கடறு - குரவு எனக் குற்றுகரங்கட்கு ஏற்றவாறு முற்றுகரம் கொடுத்து வாய்பாடு சொல்லுவதால், ஒன்று எட்டாக, எட்டுச் சீர்களும் 64 வாய்பாடாம். (தொ. செய். 57 நச்.)*

**வஞ்சித்தளை –**

*நிலைமொழி நிரையீற்றதாகிய கனிச்சீராக நிற்க, வரும்சீர் முதலசை நிரையாயின் அஃது ஒன்றிய வஞ்சித்தளையாகும்; வரும் சீர் முதலசை நேர் ஆயின், அஃது ஒன்றாத வஞ்சித் தளை யாகும். ஒன்றுதல் - நிரை ஒன்றுதல், ஒன்றாமை - நிரை ஒன்றாமை என்று கொள்க.*

*இவற்றுள் வருஞ்சீரும் வஞ்சியுரிச்சீராக இருப்பின், அது சிறப்புடைய வஞ்சித்தளையாம்; வேற்றுச் சீராக இருப்பின் சிறப்பில்லாத வஞ்சித்தளையாம். அவற்றைத் தனித்தனித் தலைப்புள் காண்க. (யா. க. 21 உரை)*

**வஞ்சித்தளைகளுள் சிறப்புடையவும், சிறப்பில்லவும் –**

எ-டு : *'வெண்சாமரை புடை பெயர்தர*
*செந்தாமரை நாண்மலர்மிசை'*

*முதலடிக்கண், கனிமுன்னர்க் கனிச்சீரின் முதல் நிரையசைவர, ஒன்றிய வஞ்சித்தளையாம், இரண்டாமடிக்கண், கனி முன்னர்க் கனிச்சீரின் முதல் நேரசை வர, ஒன்றாத வஞ்சித் தளையாம்; இரண்டு சீரும் கனிச்சீராதலின் இவை சிறப் புடைய வஞ்சித் தளைகள்.*

எ-டு : *'புனல்பொழிவன சுனையெல்லாம்*
*வரைமூடுவ மஞ்செல்லாம்*

*முதலடிக்கண், கனிமுன்னர்க் காய்ச்சீரின் முதல் நிரையசை வர ஒன்றிய வஞ்சித் தளையாம்; இரண்டாமடிக்கண் கனி*

*முன்னர்க் காய்ச்சீரின் முதல் நேரசை வர ஒன்றாத வஞ்சித் தளையாம் வரும்சீர் வேற்றுச் சீராதலின் இவை சிறப்பில்லா வஞ்சித்தளைகள். (யா. க. 21 உரை)*

**வஞ்சித்தளை : பெயர்க் காரணம் –**

*கனிமுன்னர் நிரை வருவது வஞ்சித்தளை என்றல் பொருந் தும்; கனி முன்னர் நேர் வருவதும் வஞ்சித்தளை என்றல் பொருந்துமோ என்றால் பொருந்தும்; எவ்வாறு எனில், நேர்க்கீழ்க் குற்றியலுகரம் வரின் நேர்பு அசையாம் என்பதும், நிரைக்கீழ்க் குற்றியலுகரம் வரின் நிரைபு அசையாம் என்பதும் பொருந்தும்; ஆயின் நேர்க்கீழும் நிரைக்கீழும் முற்றியலுகரம் வரினும் வேற்றுப் பெயர் கொடாது நேர்பசை நிரைபசை என்றே பெயரிட்டவாறு போல, கனிமுன் நிரையன்றிக் கனிமுன் நேர்வரினும் வஞ்சித்தளை என்றே இலக்கணநூலார் கொண்டார் என்பது. (யா. க. 21 உரை)*

**வஞ்சித் தாழிசை–**

*இருசீரடி நான்காய் ஒரு பொருள்மேல் மூன்றாய் அடுக்கியே வருவன. இவை அடி மறித்து வரின் வஞ்சிமண்டிலத் தாழிசை எனவும், அடி மறியாதே வரின் வஞ்சிநிலைத் தாழிசை எனவும் பெயர் பெறும். இவ்விருவகையும் 14 தளையொடு கூட, விரி 28ஆம்.*

*(தன் சீரின் இறுதிநேரசை தன்சீராகவே வருவதன் முதல் நேரசையோடு ஒன்றுவதும் ஒன்றாமையும், தன்சீரின் இறுதி நிரையசை தன் சீராகவே வருவதன் முதல்நிரையசையோடு ஒன்றுவதும் ஒன்றாமையும் ஒருவகை; வேற்றுச்சீராக வருவதன் முதலசையோடு ஒன்றுவதும் ஒன்றாமையும் பிறிதொரு வகை. இவ்வாற்றால் ஏழுதளைகளும் 14 ஆம் என்க.)*

எ–டு : *'இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்
அருஞ்சுரம் இறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.'*

*'மடப்பிடியை மதவேழம்
தடக்கையால் வெயில்மறைக்கும்
இடைச்சுரம் இறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்'*

*'பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயில்மறைக்கும்*

*காடகம் இறந்தார்க்கே,*
*ஓடுமென் மனனேகாண்.'*

*இவை ஒரு பொருள்மேல் மூன்றாய் அடிமறி ஆகாதே வருதலின், வஞ்சி நிலைத்தாழிசையாம். அடிமறியால் வரும் வஞ்சி மண்டிலத் தாழிசை உரிய தலைப்பில் கண்டுகொள்க. (யா. க. 91 உரை)*

**வஞ்சித்துறை –**

*இரு சீரடி நான்காய் ஒருபொருள்மேல் ஒன்றாயே வருவது. இஃது அடிமறித்து வரின் வஞ்சிமண்டிலத் துறை எனவும், அடிமறியாது வரின் வஞ்சி நிலைத்துறை எனவும் பெயர் பெறும். சிறப்புடையனவும் சிறப்பில்லாதவுமாக (ஏழும் ஏழும் என இருவகையால்) வரும் 14 தளைகளோடே இவ்விருவகை வஞ்சித்துறையும் கூட, விரி 28 ஆம். வஞ்சி நிலைத்துறை, வஞ்சிமண்டிலத்துறை தனித்தனியே காண்க.(யா. க. 91 உரை)*

**வஞ்சித்தூக்கு (1) –**

*வஞ்சிப்பாவின் இறுதி. (தொ. செய். 71)*

**வஞ்சித்தூக்கு (2) –**

*வஞ்சி அடி. பரிபாடலில் ஆசிரிய அடிகளிடையே வஞ்சித் தூக்கு நிகழும்.*

எ-டு : *'எரிமலர் சினைஇய கண்ணை பூவை' முதலாக* (பரி. 1 : 6 – 13)

*ஆசிரிய அடிகள் வந்தன; 'நின்னொக்கும் புகழ்நிழலவை' (அடி. 58) என்பது வஞ்சித் தூக்கு. (தொ. செய். 121 பேரா.)*

**வஞ்சித்தூக்குச் செந்தூக்கு இயற்று ஆதல் –**

*வஞ்சித்தூக்கு - வஞ்சி அடி; செந்தூக்கு - ஆசிரிய அடி. வஞ்சிப் பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இறுதி போன்று இறும்; ஆதலின் ஆசிரியப்பாவிற்கு ஓதிய சீரானும் தளையா னும் ஈற்றயலடி முச்சீரான் வருதலும், இடைக்கண் முச்சீரடி பெறுதலும், இடையே ஆசிரியஅடியும் வெள்ளடியும் வருதலும் வஞ்சிப்பாவிற்கு ஏற்றன. வஞ்சிப்பாவிற்குத் தனிச்சொல் வேண்டா.*

*'அரிமயிர்த் திரள்முன்கை' (புறநா. 11) என்னும் வஞ்சிப் பாட்டினுள்,*

*'ஒள்ளழல் புரிந்த தாமரை*
*வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே'*

*என ஈற்றயலடி முச்சீர்த்தாய் ஈற்றடி செந்தூக்கு இயல்பிற்றாய் முடிந்தது.*

'வாள், வலந்தர மறுப்பட்டன' (புறநா. 4) என்ற வஞ்சிப்பாட்டினுள்,

*'எருத்து வவ்விய புலிபோன்றன'*

*'அனையை ஆகன் மாறே'*

என முச்சீரடிகள் இடையே வர,

*'தாயில் தூவாக் குழவி போல*
*ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே'*

என ஈற்றடி மண்டில ஆசிரியத்தான் முடிந்தது.

பட்டினப்பாலை என்னும் வஞ்சி நெடும்பாட்டினுள்,

*'நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்*
*கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை'* (அடி 22, 23)

என ஆசிரியஅடியும் வெண்பாஅடியும் முறையே இடையில் வந்தன. (தொ. செய். 71 நச்.)

**வஞ்சி நிலைத்தாழிசை –**

வஞ்சித்தாழிசை அடிமறியாமல் வருவது. வஞ்சித்தாழிசை நோக்குக.

**வஞ்சி நிலைத்துறை –**

வஞ்சித் துறை அடிமறியாமல் வருவது.

எ-டு : *'மார்வுற அணிந்தாலும்*
*மார்வுறாய் மணிவடமே*
*தோளுறச் செறித்தாலும்*
*தோளுறாய் கிளர்வளையே'*

**வஞ்சி நிலை விருத்தம் –**

வஞ்சி விருத்தம் அடிமறியாமல் வருவது.

எ-டு : *'துன்ப முற்ற வர்க்கலால்*
*இன்ப மில்லை யாதலால்*
*அன்ப மற்று யானுனைத்*
*துன்பத் தாற்றொ டக்கினேன்.'* (சீவக. 579) (யா. க. 91, 92 உரை)

**வஞ்சி நெடும்பாட்டு –**

பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டுள் ஒன்பதாம் பாட்டு, 301 அடிகளையுடைய இதன்கண் வஞ்சியடிகள் ஆசிரிய அடியினும் மிகுதியாக வந்துள்ளன. ஆதலின், இப் பெயர்த்தாயிற்று.

**வஞ்சிப்பா (1) – ஆறுவகை**

*இரண்டு கனிச்சீர்களையுடைய அடிகளையுடையதாய், ஆசிரியப்பாவிற்போல மோனைஎதுகைத் தொடைகள் பயில, ஈரசையுடைய தனிச்சொல் பெற்று, பின் வருமடிகள் ஆசிரியப்பாவால் முடியப்பெறுவது வஞ்சிப்பாவாம். தனிச்சீர் (முதலிய சில) நீங்கினும் வஞ்சிப்பா எனும் பெயர்க்கு இழுக்கு இன்று. ஆசிரியப்பா அடியைவிட வஞ்சிப்பாஅடி எண்ணிக்கை குறைதலின், 'குறளடி வஞ்சிப்பா' என்னும் பெயரிட்டுச் சிலர் கூறுவாருமுளர்.*

**வஞ்சிப்பா (2) –**

*இஃது இருசீரடியானும் முச்சீரடியானும் வரும். இவ் விரண்டடிகளைத் தவிர, ஏனைய அளவடி நெடிலடி கழி நெடிலடிகளை வஞ்சித்து வருதலானும், புறநிலை வாயுறை அவையடக்கியல் செவியறிவுறூஉ கைக்கிளை என்றிப் பொருள்களை வஞ்சித்து வருதலானும், வஞ்சிக் கொடி போல் நேர்ந்து நிற்றலானும், தூங்கல்ஓசைத்தாய்ச் சீர்தோறும் ஓசை தாழ்தலானும், வஞ்சி என்னும் திறமே போல வனப்பும் ஓர்ப்பும் உடைத்தாகலானும், 'வஞ்சிப்பா' என்பதும் காரணக்குறி. இதனை வேளாள வருணத்தது என்ப. தூங்கல் ஓசையுடைத்தாய், இருசீரடியானும் முச்சீரடியானும் வரும் வஞ்சிப்பா தனிச்சொல்லொடு புணர்ந்து ஆசிரியச் சுரிதகத் தால் முடியும். (யா. க. 55 உரை)*

**வஞ்சிப்பாட்டின் அளவு –**

*ஆசிரிய நடைத்தே வஞ்சியாதலின், வஞ்சிப்பாவின் பெருக் கத்துக்கு எல்லை ஆயிரம் அடி; சுருக்கத்துக்கு எல்லை மூன்று அடி. (தொ. செய். 157 நச்.)*

**வஞ்சிப்பாட்டு (1) –**

*ஒருவகை நாடகச் செய்யுள். எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப. நாடகச் செய்யுளாகிய வஞ்சிப்பாட்டு என்பதும் பண்ணத்தியாம் என்பது. (தொ. செய். 180 பேரா.)*

**வஞ்சிப்பாட்டு (2) –**

*1. ஓடப்பாட்டு (நாஞ்சில்நாட்டு வழக்கு)*

*2. ஒரு நாடக நூல் (தொ. பொ. 492 பேரா.)* (L)

**வஞ்சிப்பா வகை விரி –**

*குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என்பன இரண்டும் ஒரு வகையாம்; இன்னியல் வஞ்சிப்பா, விரவியல் வஞ்சிப்பா என்பன இரண்டும் ஒருவகையாம்.*

*குறளடி வஞ்சி, சிந்தடி வஞ்சி என்பன வஞ்சிப்பாவின் தொகை.*

*இன்னியல் குறளடிவஞ்சி, விரவியல் குறளடி வஞ்சி, இன்னியல் சிந்தடி வஞ்சி, விரவியல் சிந்தடி வஞ்சி என வஞ்சிப்பாவின் வகை நான்கு.*

*இவற்றை ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் என மூன்று ஓசையானும் உறழ (4 x 3) பன்னிரண்டாம். அவற்றைச் சிறப்புடைய ஏழுதளை, சிறப்பில்லா ஏழு தளை ஆகப் பதினான்கு தளைகளானும் உறழ, (12 x 14) நூற்றறுபத்தெட்டு விரியாம். (யா. க. 90 உரை)*

**வஞ்சிப்பாவில் இயற்சீர் –**

*எல்லா ஆசிரியரும், வஞ்சியுள் முதல் இடை கடை என மூவிடத்தும் நிரையீற்றியற்சீர் மிக்கு வரும்; நேரீற்றியற்சீர் முதலும் இடையும் அருகி வரப்பெறும் என்ப. பல்காயனார்; நேரீற்றியற்சீர் வஞ்சியடியின் இறுதியும் அருகி வரப்பெறும் என்றார். (யா. வி. பக். 435)*

**வஞ்சிப்பாவில் பிறபா அடிகள் மயங்குமாறு –**

*குறளடி வஞ்சிப்பாவின் இடையே, சிந்தடி மயங்கி வருவனவும் உள. ஆசிரியஅடி மிகுதியாக விரவிவரும்; கலியடியும் வெள்ளடியும் அருகி விரவி வரும்.*

எ-டு : *'குருகு நாரையொடு கொட்பானா*
*விரிதிரைநீர் வியன்கழனி*
*மறுகெழீஇய மலிசும்மை.'*

*எனச் சிந்தடியும் குறளடியும் வஞ்சிப்பாவில் மயங்கின.*

*அகத்திணை பற்றிய வஞ்சிப்பாவில் ஆசிரியஅடி வந்து மயங்குதல் சிறப்பின்று என்ப. 'பட்டினப்பாலை' என்னும் வஞ்சி நெடும்பாட்டினுள்,*

*'நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்' (அடி. 22) என்றித் தொடக்கத்தன ஆசிரியஅடி.*

*'வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மிலைந்தும்' என்பது கலியடி. (அடி. 64, 65)*

'கோழி யெறிந்த கொடுங்கால் கனங்குழை' (அடி. 23) என்பது வெள்ளடி. (யா. க. 31 உரை)

**வஞ்சிப்பாவில் வரும் சீர்கள் -**

கட்டளை யல்லா வஞ்சிப்பாவின்கண், அஃதாவது சீர்நிலை வஞ்சிப்பாவின்கண் ஈரசைச்சீர் 16, மூவசைச்சீர் 64 ஆகிய 80 சீர்களும் வருதற்குரிமையுடையன.

எ-டு : 'வசையில்புகழ் வயங்குவெண்மீன்' - மூவசைச்சீரில் நிரை முன் நிரை. 'திசைதிரிந்து தெற்கேகினும்' - இயற்சீரின்முன் (நிரை நிரைபு) வஞ்சிச்சீரின் நேரசை

'தற்பாடிய தளியுணவின்' - வஞ்சிச்சீரின் முன் வெண்சீரின் நிரையசை; 'புட்டேம்பப் புயன்மாறி' - வெண்சீரின்முன் வெண் சீரின் நிரையசை; 'புள்ளும்துயின்று புலம்புகூர்ந்து' - நேர் நிரைபு என்ற ஆசிரிய உரிச்சீரின் முன் நிரைபு நேர்பு என்ற ஆசிரிய உரிச்சீர்.

இவ்வாறு வந்து தூங்கல் பிறக்கும். (தொ. செய். 22 நச்.)

**வஞ்சிப்பாவிற்குரிய அடிகள் -**

'நான்கெழுத்து முதலாகப் பதினான்கெழுத்து அளவும் வஞ்சிப்பாவின் அடிகள் வருவன கட்டளைவஞ்சி எனப்படும். குறளடி வஞ்சிப்பாவிற்கே இவ்வரையறை உண்டு.

60 வஞ்சி உரிச்சீர்களுள்ளும் 24 சீர்கள் குற்றுகரம் முற்றுகரம் என்பனவற்றால் இருவகை நிலைமைய; 28 சீர்கள் ஒரோ வொன்று நான்கு நிலைமைய; 8 சீர்கள் ஒரோஒன்று எட்டு நிலைமைய. அவ்வாறு கொள்ளவே, 24 x 2 = 48; 28 x 4 = 112; 8 x 8 = 64; 48 + 112 + 64 = 224. உறழும் நிலைமையான் வஞ்சிச்சீர்கள் 224 ஆகும் என்பது.

இவ்வஞ்சிச்சீர்கள் 224-இல், அடி உறழாதன 43 அவற்றை, வஞ்சியடிகள் உறழாத சீர்கள் நாற்பத்து மூன்று என்ற தலைப்புள் காண்க. வஞ்சியடியுள் ஒவ்வொரு முதற்சீர்க்கும் 3 முதல் 6 எழுத்து முடிய நான்கு நிலைமைகள் உரிமை யுடையனவாக, எஞ்சிய வஞ்சிச்சீர்களாகிய (224 - 43) 181 சீர்களையும் அந்நான்கால் உறழ, (181 x 4=) 724 வஞ்சியடி களாம். (தொ. செய். 57 நச்., பேரா.)

**வஞ்சிப்பாவின் அடிகள் வருமாறு -**

'வஞ்சிப்பாவிற்குரிய அடிகள்' காண்க.

**வஞ்சிப்பாவின் நிலங்கள் –**

*இருசீரடி வஞ்சிக்கு 4 முதல் 12 எழுத்துமுடிய நிலைக்களம் கூறினமையின், அதன் நிலம் 9 ஆகும். முச்சீரடி வஞ்சிக்கு மற்றுமோர் எழுத்து எல்லை மிகுமாதலின் அதற்கு நிலம் 10 ஆம். (யா. க. 90 உரை. பக். 358)*

**வஞ்சிப்பாவும் ஆசிரியச் சுரிதகமும் –**

வஞ்சிப்பாவும் அதன் ஆசிரியச் சுரிதகமும் ஈரடியானும் வரும் என்று மயேச்சுரர் முதலானோர் கருதுப.

எ-டு : *'சுற்றுநீர்ச் சூழ்கிடங்கின்*
*பொற்றாமரைப் பூம்படப்பைத்*
*தெண்ணீர்,*
*நல்வய லூரன் கேண்மை*
*அல்லிருங் கூந்தற் கலரா னாவே.'*

**வஞ்சிப்பாவும் மருட்பாவும் –**

வஞ்சிப்பா இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெற்றுப் பின்பு தனிச்சொல் பெற்று முடியும். வெண்பா முன்னடி களில் நிகழப் பின்னடிகளில் ஆசிரியத்தால் இறுவது மருட்பா.
*(வீ. சோ. 119)*

**வஞ்சி மண்டிலத்தாழிசை –**

வஞ்சித்தாழிசை அடிமறித்து வருவது.

*எ-டு : நாடுமின் நறுந்தில்லை;*
*வீடுமின் வெவ்வினைகள்;*
*சூடுமின் துணைமன்றம்;*
*ஆடுமெம் அரசன்அரன்!*

*ஏத்துமின் இருந்தில்லை;*
*நீத்திடும் நீள்வினைகள்;*
*சீர்த்திடும் திருமன்றம்.*
*மூர்த்தியெம் கூத்தன்காண்;*

*படர்செயும் பதித்தில்லை;*
*விடல்செயும் மேல்வினைகள்;*
*சுடர்செய்யும் தூமன்றம்,*
*நடம்செயும் நம்மிறைகாண்!* (புனையப்பட்டது). (யா. க. 91 உரை)

**வஞ்சிமண்டிலத்துறை –**

வஞ்சித்துறை அடிமறித்து வருவது.

*'முல்லைவாய் முறுவலித்தன;*
*கொல்லைவாய்க் குருந்தீன்றன;*

*மல்லல்வான் மழைமுழங்கின;*
*செல்வன்தேர் வரவுண்டாம்.'*

**வஞ்சி மண்டில விருத்தம் -**

வஞ்சி விருத்தம் அடிமறித்து வருவது.

எ-டு : *'சொல்லல் ஓம்புமின் தோம்)நனி;*
*செல்லல் ஓம்புமின் தீநெறி;*
*கல்லல் ஓம்புமின் கைதவம்;*
*மல்லல் ஞாலத்து மாந்தர்காள்!'* (யா. க. 92 உரை)

**வஞ்சியடிகள் உறழாத சீர்கள் நாற்பத்துமூன்று -**

*எட்டு நிலைமை எய்துவனவற்றில் அரவு விரவு குரவு - என்ற 9 எழுத்துச்சீர் - 1*

*நான்கு நிலைமை எய்துவனவற்றில் அரவு விரவு சுரம், புலிவிரவு குரவு, அரவு வருகுரவு - என்ற 8 எழுத்துச் சீர் - 3*

*எட்டு நிலைமை எய்துவனவற்றில் அரவு விரவு காவு, மின்னு விரவு குரவு, அரவு மேவு குரவு, அரவு விரவு கடறு, அரவு வழங்கு குரவு, களிறு விரவு குரவு - என்ற 8 எழுத்துச் சீர் - 6.*

*இரண்டு நிலைமை எய்துவனவற்றில் புலி விரவு சுரம், புலி வரு குரவு - என 7 எழுத்துச்சீர் - 2.*

*நான்கு நிலைமை எய்துவனவற்றில் அரவு விரவு வாய், மின்னு விரவு சுரம், அரவு வரு சுரம், அரவு மேவு சுரம், அரவு வழங்கு சுரம், களிறு விரவு சுரம், புலிவிரவு காவு, அரவு வருகாவு, மாவிரவு குரவு, புலிமேவு குரவு, புலிவிரவு கடறு, புலிவழங்கு குரவு, மின்னு வரு குரவு, அரவு மேவு கடறு, அரவு வரு கடறு, களிறு வரு குரவு - என 7 எழுத்துச்சீர் - 16.*

*எட்டு நிலைமை எய்துவனவற்றில் மின்னு விரவு காவு, அரவு மேவு காவு, அரவு விரவு காடு, அரவு வழங்கு காவு, களிறு விரவு காடு, மின்னு மேவு கடறு, மின்னு விரவு கடறு, மின்னு வழங்கு குரவு. பாம்பு விரவு குரவு, அரவு மேவு கடறு, அரவு போகு குரவு, களிறு மேவு குரவு, அரவு வழங்கு கடறு, களிறு விரவு கடறு, களிறு வழங்கு குரவு - என 7 எழுத்துச்சீர் - 15*

*இவ்வாற்றால் ஒன்பதெழுத்துச் சீர் 1, எட்டெழுத்துச்சீர் 9, ஏழெழுத்துச்சீர் 33; ஆக 43 சீர்கள் வஞ்சியடிக்கண் நிகழாதன.*

*(தொ. செய். 57 நச்.)*

**வஞ்சியடியுள் தளைமயக்கம் -**

வஞ்சியடியுள் வெண்டளையே வருதலும், ஆசிரியத்தளையே வருதலும், கலித்தளையே வருதலும்; முச்சீரடி வஞ்சியுள் தன்

தளையும் வெண்டளையும் வருதலும், ஆசிரியத் தளையும் தன் தளையும் வருதலும், கலித்தளையும் தன்தளையும் வருதலும், வெண்டளையும் ஆசிரியத்தளையும் வருதலும், வெண்டளையும் கலித்தளையும் வருதலும், கலித்தளையும் ஆசிரியத்தளையும் வருதலும் - என்று இவ்வாறாகப் பொது வகையாற் கூறிய சிறப்புத்தளையும் ஏனைய சிறப்பில் தளையும் வந்து மயங்கும்.

எ-டு : *'பூம்பொழிற்[1] றண்கானல்[2]*
*புனல்பொழி[3] தண்படப்பை[4]*
*வீநாறு[5] பூங்காஞ்சிக்[6]*
*கானாறு[7] கோட்டெருமைக்[8]*
*குழக்கன்று[9] பிழைத்தோடிக்[10]*
*காய்த்துறுப[11] பெருஞ்செந்நெல்[12]*
*தேய்த்துழக்கு[13] மதுநோனார்*
*எனவாங்குத்*
*தீங்கழை வாங்கி விலங்கும்*
*பூம்புனல் ஊர புலம்பா னாளே.'*

இக்குறளடி வஞ்சிப்பாவினுள், இயற்சீர் வெண்டளை, கலித்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, வெண்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை வெண்சீர் வெண்டளை, கலித்தளை, வெண்சீர் கலித்தளை என்றிவ்வாறு தன் தளைகளும் பிறதளைகளும் விரவி வந்தவாறு. (யா. க. 22 உரை)

**வஞ்சியில் அசை கூன் ஆதல் –**

வஞ்சியடிக்கண் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நான்கு அசைகளும் அடியின் முதல் இடை இறுதி என்ற மூன்றிடத்தும் கூனாய் வரும்; சிறுபான்மை சீர் கூனாய் வரும்.

எ-டு : *'வாள், வலந்தர மறுப்பட்டன'* (புறநா. 4) – நேர்

*'அடி, அதர்சேர்தலின் அகஞ்சிவந்தன'* – நிரை

*'வண்டு, மலர்தேர்ந்து வரிபாடின'* – நேர்பு

*'களிறு, கதவெறியாச் சிவந்துராஅய்'* (புறநா. 4) – நிரைபு

இவை அடிமுதற்கண் வந்த கூன்.

கலங்கழாலின், **துறை** கலக்குற்றன' - இடையில் கூன் வந்தது.

*'மாவழங்கலின் மயக்குற்றன,* ***வழி'*** -இறுதியில் கூன் வந்தது. 'தேரோடத் துகள்கெழுமின, **தெருவு**'- இறுதியில் நிரைபு அசை கூனாயிற்று.

*'**அவரே**, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை,*
*வாடா வள்ளியங் காடிறந் தோரே'* (குறுந். 216)

*முதலில் சீர் கூனாயிற்று. (தொ. செய். 48 நச். பேரா.)*

**வஞ்சிவிருத்தத்துள் பிறதளை –**

எ-டு : *'பீழை செய்து பெற்றனென்*
*வாழி என்று மாக்கடல்*
*ஆழ்வித் திட்ட அம்பியைத்*
*தோழர்ச் சுட்டிக் காட்டினான்'* (சீவக. 580)

*என வஞ்சி விருத்தத்துள் நேரொன்றாசிரியத்தளை 2, இயற்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை 2, இயற்சீர் வெண் டளை, நேரொன்றாசிரியத்தளை 2, இயற்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத் தளை 2 - எனப் பிறதளைகளே மயங்கி வந்தவாறு. (யா. க. 22 உரை)*

**வஞ்சி விருத்தம் –**

*முச்சீரடி நான்காய் ஒரே விகற்பமாய் வருவது. இஃது அடிமறியாதே வருவது வஞ்சிநிலை விருத்தம்; அடிமறித்து வருவது வஞ்சி மண்டில விருத்தம். இவ்விருவகையும் சிறப் புடையனவும் இல்லனவுமாகிய 14 தளைகளோடும் கூட, விரி 28ஆம். வஞ்சிநிலை விருத்தம், வஞ்சி மண்டில விருத்தம் - காண்க. (யா. க. 92)*

**வடமொழி எழுத்துச் சீர்முறை தமிழுக்குப் பொருந்தாமை –**

***வடமொழியைப்*** *போலக் குறில் நெடில் என்ற எழுத்துக் களையே* ***சிறப்பாகக்*** *கருதுவதாயின், நேரசை ஒன்றுமே அமையும்.* ***தமிழ்மொழியில் சொற்களுக்குச் சிறப்புத்தந்து*** *எண்ணினமையின், நேர் நிரை நேர்பு நிரைபு என்ற இந்நான்கு அசைகளும் இன்றியமையாதனவாயின. தமிழில் யாதேனும் ஒரு பொருளைத் தருவதொரு சொல்லே அசை யாகும் என்ற மரபு கொள்ளப்பட்டது.*

**வடமொழி விருத்தம் –**

*நான்கடி அளவொத்து நடப்பது விருத்தமாம்; எழுத்தும் சீரும் மிகுந்தாலும் குறைந்தாலும் விருத்தப்போலியாம் என்ப வடநூலார். (தென். இயற். 69)*

**வண்ணக ஒத்தாழிசை –**

*தேவரது விழுப்பமும் வேந்தரது புகழும் வண்ணித்து வருதலானும், தரவு தாழிசை முதலியவற்றில் வாராநின்ற ஒலியில் திரிந்து வேறொரு வண்ணமாகிய முடுகியல்*

*வண்ணத்தான் அமைந்த அராக அடிகளை உடையதாகலானும், (தரவு - தாழிசை - அராகம் - அம்போதரங்கம் - தனிச் சொல் - சுரிதகம் - என்னும் ஆறு உறுப்புக்களையும் கொண்டு வரும்) இக்கலிப்பா வண்ணக ஒத்தாழிசை எனப்பட்டது. (வண்ணித்தல் - வருணித்தல்). (யா. க. 80 உரை)*

**வண்ணக ஒத்தாழிசை உறுப்புக்கள் –**

*வண்ணக ஒத்தாழிசை தரவு தாழிசை எண் சுரிதகம் என்ற நான்கு சிறப்பு உறுப்புக்களையுடையது; சிறுபான்மை தனிச் சொல்லும் சுரிதகத்தின்முன் கொள்ளப்படும்.*

*தரவினால் தெய்வத்தை முன்னிலையாக நிறுத்தித் தாழிசையால் தெய்வத்தை வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகமாயிற்று. ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினும், வண்ணித்தற்குச் சிறந்த உறுப்புத் தாழிசையேயாம். ஆகவே, அகநிலை ஒத்தாழிசையுள் தாழிசை வண்ணித்து வாரா என்பது.*

*எண்ணுறுப்பு நீர்த்திரை போலச் சுருங்கிவருதலின், எண்ணுறுப்பு உடைய கலியை அம்போதரங்க ஒத்தாழிசை எனவும், அராக உறுப்பு உடைய கலியை வண்ணக ஒத்தாழிசை எனவும் பின்னுளோர் கூறுவது தொல்காப்பிய னார்க்கு உடன்பாடன்று. (தொ. செய். 140 நச்.)*

*சொல்லப்பட்ட உறுப்புக்கள், தனிச்சொல் வருவழி, இடையொழியாமல் வருதல் வேண்டும்; தனிச்சொல் இன்றி எண்ணிடையிட்டவழி 'ஒரு போகு' எனப் பெயர் பெறும். (140 இள.)*

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா –**

*தரவு முதலிய ஆறுறுப்பும் குறைவின்றி வரும் கலிப்பா.*

எ-டு : *'விளங்குமணிப் பசும்பொன்னின்'* (யா. வி. பக். 314)

*இஃது ஆறடித்தரவு, 4 அடித்தாழிசை மூன்று, ஏழுசீர் அராகம் நான்கு, நாற்சீர் ஈரடி அம்போதரங்கம் இரண்டு, நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் நான்கு, முச்சீர் ஓரடி அம்போ தரங்கம் எட்டு, இருசீர் ஓரடி அம்போதரங்கம் பதினாறு, தனிச்சொல், ஆறடிச் சுரிதகம் என ஆறுறுப்புக்களையும் முறையே பெற்று வந்தது.*

*இனி, அராக அடி எண்சீரான் எட்டாய், ஏனைய உறுப்புக் குறையாதே வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலியும் உண்டு.*

எ-டு : *'தெரிவில்லா வினைகெடுத்து'* (யா. வி. பக். 316)

*இஃது ஆறடித்தரவு, 4 அடித் தாழிசை மூன்று, இரு விகற்பங் களால் வந்த எண்சீர் அராகம் எட்டடி, பேரெண் இரண்டு, இடையெண் நான்கு, சிற்றெண் எட்டு, அளவெண் பதினாறு, தனிச்சொல், ஆறடிச்சுரிதகம் என ஆறுறுப்புக்களையும் முறையே பெற்று வந்தது. (யா. க. 84 உரை)*

**வண்ணகத்தின் அடக்கியல் வாரம் –**

*முன்னர்ப்பலவகையாற் புகழ்ந்த தெய்வத்தை ஒரு பெயர் அடக்கி நிற்றலின் அடக்கியல் என்றும், தெய்வத்தையன்றி மக்களைப் புகழ்ந்த அடியும் வருதலின் வாரம் என்றும் கூறப்படும் வண்ணகத்தின் சுரிதகம் 8, 6, 4 அடிகளாகத் தரவினை ஒத்து வரும். (தொ. செய். 144 நச்.)*

**வண்ணகத்தின் எடுத்துக்காட்டு –**

*1. ‘மணிவிளங்கு திருமார்பின்’ என்ற வண்ணகம், 8 அடித் தரவு, 4 அடித் தாழிசை மூன்று, தலையெண் இரண்டு, இடையெண் நான்கு, கடையெண் எட்டு, சின்னம் பதினாறு, தனிச்சொல், 8 அடிச் சுரிதகம் இவற்றையுடையது.*

*2. ‘பலியுருவிற் கேலாத’ என்ற வண்ணகம் 8 அடித்தரவு, 4 அடித்தாழிசை மூன்று, தலையெண் இரண்டு, இடையெண் நான்கு, கடையெண் எட்டு, (சின்னம் இல்லை) தனிச்சொல், 8 அடிச் சுரிதகம் இவற்றையுடையது.*

*3. ‘ஆயிரம் கதிராழி’ என்ற வண்ணகம், 8 அடித்தரவு, 4 அடித்தாழிசை மூன்று, இருசீர் நான்கு, ஒருசீர் எட்டு, தனிச்சொல், 8 அடிச் சுரிதகம் இவற்றையுடையது.*

*4. ‘உறை பதியின்’ என்ற வண்ணகம், 6 அடித்தரவு, 3 அடித்தாழிசை மூன்று, ஒரு சீர்ச்சின்னம் 16, தனிச்சொல், 6 அடிச் சுரிதகம் இவற்றையுடையது.*

*5. ‘கெடலரு மாமுனிவர்’ என்ற வண்ணகம், 6 அடித்தரவு, 4 அடித்தாழிசை மூன்று, தலையெண் இரண்டு, இடையெண் நான்கு, கடையெண் நான்கு, சின்னம் எட்டு, தனிச்சொல், 6 அடிச் சுரிதகம் இவற்றையுடையது.*

*பின்னுள்ளோர் இருசீரடியை முச்சீரடியாக்கியும், ஒரு சீரடியை இரு சீரடியாக்கியும் காட்டுவது பொருந்தாது. (தொ. செய். 146 நச்.)*

*இனி, யாப்பருங்கல விருத்தியுள் (சூ. 84) காணப்படுமாறு;*

எ-டு : *‘விளங்குமணிப் பசும்பொன்னின்’ -*

*6 அடித்தரவு, 4 அடித்தாழிசை மூன்று, எழுசீர் அராகம் நான்கு, நாற்சீர் ஈரடி அம்போதரங்கம் இரண்டு, நாற்சீர் ஓரடி*

அம்போதரங்கம் நான்கு, முச்சீர் ஓரடி அம்போதரங்கம் எட்டு, இருசீர் ஓரடி அம்போதரங்கம் பதினாறு, தனிச்சொல், 6 அடிச் சுரிதகம் இவற்றை உடைய, ஆறு உறுப்பும் குறை வின்றி வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

**2. 'தெரிவில்லா வினைகெடுத்து' –**

6 அடித்தரவு, 4 அடித் தாழிசை மூன்று, எண் சீர் அராகம் இருவிகற்பங்களால் 8 அடி, பேரெண் இரண்டு, சிற்றெண் நான்கு, இடையெண் எட்டு, அளவெண் பதினாறு, தனிச் சொல், 6 அடிச்சுரிதகம் இவற்றை உடையதாய், வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. (பக். 314 - 319)

**வண்ணகத்தின் எண் உறுப்பு –**

எண்ணுறுப்பு வண்ணக ஒத்தாழிசையில் தாழிசையின் பின்னர்த் தனிச்சொல்லுக்கு முன்னர்ப் பெருகிய வழி முறையால் சுருங்கி வரப்பெறும்.

ஈரடி சுருங்கி ஓரடி, ஓரடி சுருங்கி இருசீரடி, இரு சீரடி சுருங்கி ஒரு சீரடி என வழிமுறையே வரும். ஒன்றுக்கு ஒன்று பாகமே (-பாதியே) சுருங்கும்.

'நாற்சீர் கொண்ட(து) அடியெனப் படுமே' (செய். 32) என்றலின், அளவடியே கொள்ளப்படும். இருசீரான் இயைந் தன இரண்டு இணைந்து அளவடி ஆதற்கேற்பத் தொடை கொண்டு சுவடுபட நிற்றலானும், ஒரு சீரான் வருவனவும் நான்கு இணைந்து அளவடி ஆதற்கேற்பத் தொடை கொண்டு சுவடுபட நிற்றலானும், அவையும் அளவடிக்கண் அடங்கின.

சுருக்கம் பாதிப்பாதியாக வருதலின், அவற்றின் எண்ணிக் கையும் இவ்விரு மடங்காகும்.

இருசீர் வருவன குறளடி என அடிக்கண் அடங்கும். ஆதலின் ஒரு சீரே சின்னம் எனப்படும். அளவடியிற் சுருங்கிய இரு சீரையும் சின்னம் என்பாருமுளர்; ஒரு சீரினை அளவெண் என்றும் கூறுப.

நாற்சீரடி இரண்டு, நாற்சீரடி ஒன்று, இருசீரடி என்பன முறையே தலையெண் இடையெண் கடையெண் எனவும், பேரெண் சிற்றெண் இடையெண் எனவும் கூறப்படும்.

இரு சீரடியை முச்சீரடியாக்கியும் ஒரு சீரடியை இரு சீரடியாக்கியும் அலகு கொள்ளின், அதற்கு அசையும் சீரும் இசையொடு சேரா என்பது. (தொ. செய். 145 நச்.)

*வண்ணகத்தில் சின்னம் என்னும் ஒரு சீரடி மாத்திரம் வர, ஏனைய தலையெண் இடையெண் கடையெண் வாராதொழிதலும், அவை வரச் சின்னம் மாத்திரம் வாராதொழிதலும் சுவைபயக்கும். தலையெண் 2, இடையெண் 4, கடையெண் 8 சின்னம் 16 என்ற அமைப்பில், கடையெண் நான்காகவும் சின்னம் எட்டாகவும் சுருங்கிவருதலுமுண்டு.*

*மூவகை எண்ணும் சின்னமும் பெற்றுவருதல் வண்ணக ஒத்தாழிசைக்குப் பெருஞ்சிறப்பாகும். (146 நச்.)*

*எண் : இரண்டயான் வருவன இரண்டும், ஓரடியான் வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிற நூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறை இல. (139 இள.)*

*சின்னம் - தனிச்சொல். 140 இள.*

**வண்ணகத்தின் தரவு –**

*இதன் தரவுக்குத் தலையளவு 8 அடி, இடையளவு 6 அடி, கடையளவு 4 அடி. தரவு அடிகள் சமநிலை யாவதன்றி வியனிலையான் வாரா. (சமநிலை - இரட்டைப்படைஎண்; வியநிலை - ஒற்றைப் படை எண்) (தொ. செய். 141 நச்.)*

**வண்ணகத்தின் தாழிசை –**

*வண்ணக ஒத்தாழிசையின் தாழிசை பொருளும் அளவும் தம்முள் ஒத்து மூன்றாய்வரும். ஆகவே, அகநிலை ஒத்தாழிசைக்கண் தாழிசை சிறுபான்மை பொருள் ஒவ்வாதும் வரும்.*

*எ-டு : 'கல்லெனக் கவின்பெற்ற' (கலி. 5) என்பதன் தாழிசைகள்.*

*இக்கலிப்பாவகையின் தாழிசை தரவை ஒவ்வாது அதனைவிடச் சுருங்கியே வரும். 8 அடித்தரவின் பாகமாகிய 4 அடியும், 6 அடித்தரவின் பாகமாகிய 3 அடியுமே இதன் சிறுமைபெருமைக்கு எல்லை. 4 அடித்தரவின் பாகமாகிய 2 அடியைத் தாழிசைக்குச் சிறுமையாகக் கொள்ளின், ஈரடிஎண்கள் தாழிசையை அடுத்து வருதலின், தாழிசைக்கும் எண்ணுக்கும் வேறுபாடு புலனாகாமல் போய்விடும். ஆதலின், இத்தாழிசைக்கு ஈரடிச் சிறுமைகூடாது; ஐந்தடிப் பெருமையும் கூடாது, நான்கடித் தரவும் உண்டு ஆதலின் என்பது. (தொ. செய். 142, 143 நச்.)*

**வண்ணகம் –**

*வண்ணகம் - அராகம்; அது காண்க.*

**வண்ணகம் பற்றி ஒரு சாரார் கருத்து -**

*தலையளவு அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு ஓதப்பட்ட தரவும் தாழிசையும் பெற்ற அடியளவு பெற்று, தாழிசைப் பின்னர்த் தனிநிலை பெற்றும், அதன் பின் அராகஅடி நான்கு முதலாக எட்டு ஈறாக, நாற்சீர் முதலாகப் பதின்மூன்றுசீர் ஈறாக, இடை அந்தாதித்து இத்துணைச் சீராலும் அராகஅடி பெற்று, அம்போதரங்கத்துக்கு ஓதப் பட்ட அராக அடியின்றிக் குறிலிணை பயின்ற அடி பெற்று, அடுக்கிசை அராகம் முடுகியல் என்ற மூன்று பெயரும் பெற்று, தேவரது விழுப்பமும் வேந்தரது புகழும் வண்ணித்து வருதலின் வண்ணகம் எனப்படும்; இடை அந்தாதித்தொடை யாலும் வரப்பெறும்", என்பது ஒருசாரார் (மயேச்சுரனார்) கருத்து.*

*எ-டு : 'கல்லின்மேல் நாறிய'* (யா. வி. பக். 319)

*எ-டு : 'சிலம்பொலிக்கும் இணையடியும்'* (யா. வி. பக். 322)

*இதன்கண், தரவு 6 அடி, 4 அடித்தாழிசை மூன்று, தனிச் சொல், 4 சீர் முதல் 13 சீர்காறும் பத்து அராகஅடிகள் (8 சீரடி வந்திலது), பேரெண் இரண்டு குறள்வெண்பா, சிற்றெண் நாற்சீரடி நான்கு, தனிச்சொல், 6 அடிச் சுரிதகம் என்பன முறையே உறுப்புக்களாக வந்தன. (அராக அடி எட்டு வாராது பத்து வந்தமை மிக அருகியதொன்றே.)*

*இம்முறை மயேச்சுரனார், அகத்தியம் செயிற்றியம் செயன் முறை ஆகிய நூல்களைப் பின்பற்றிக் கூறியதாம்.*

*(யா. க. 84 உரை)*

**வண்ணங்கள், சீர் - தொடை - எழுத்து - ஓசை - சொல் - இவைபற்றி வருவன -**

*பாஅவண்ணம் சீரைப்பற்றித் தோன்றும்.*

*தாஅவண்ணம், அளபெடை வண்ணம், ஒரூஉ வண்ணம் இவை தொடையைப் பற்றித் தோன்றும்.*

*வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், நெடுஞ்சீர்வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபுவண்ணம் - இவை எழுத்தைப் பற்றித் தோன்றும்.*

*அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், தூங்கல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் - இவை ஓசையைப் பற்றித் தோன்றும். எண்ணு*

வண்ணம், அகைப்பு வண்ணம், ஏந்தல் வண்ணம் - இவை சொல்லைப் பற்றித் தோன்றும்.(தொ. செய். 213 - 232 ச. பால.)

**வண்ணங்களால் பெயரிடல் –**

நூறுவண்ணமும் தம்முள் மயங்கி வரினும், மிக்கதனால் பெயர்கொடுத்து வழங்கப்படும். (யா. வி. பக். 415)

**வண்ணங்களின் விரி நூறு –**

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம். பிரிந்திசை வண்ணம் மயங்கிசை வண்ணம் என்ற இவ்வைந்தினையும்.

அகவல் வண்ணம், ஒழுகிசை வண்ணம் வல்லிசை வண்ணம் மெல்லிசைவண்ணம் என்ற இந்நான்கினையும்,

குற்றெழுத்துவண்ணம் நெட்டெழுத்துவண்ணம் வல்லெழுத்து வண்ணம் மெல்லெழுத்துவண்ணம் இடையெழுத்து வண்ணம் என்ற இவ்வைந்தனையும் கூட்டி உறழ, (5 x 4 x 5 =) நூறு வண்ணங்களாகும்.

தூங்கிசை வண்ணம் இருபது, ஏந்திசைவண்ணம் இருபது, அடுக்கிசைவண்ணம் இருபது, பிரிந்திசைவண்ணம் இருபது, மயங்கிசை வண்ணம்இருபது. இவற்றை அவ்வத் தலைப்பிற் காண்க. (யா. க. 95 உரை)

**வண்ணம் இருபது –**

பாஅவண்ணம், தாஅவண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப் பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்பன. (தொ. செய். 213 பேரா.)

**'வண்புகழ் மூவர் கண்பொழில் வரைப்பு' –**

கொடையாற் பெற்ற புகழினையுடைய சேரசோழ பாண்டியருடைய குளிர்ச்சியையுடைய நாவலம் பொழிலுள் தமக்கு வரைந்துகொண்ட வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லைக் குட்பட்ட நிலம். (தொ. செய். 79 நச்.)

**வணிகர்க்கு எண்ணிலமாவன –**

கலிப்பாவிற்கு நிலம் அடிதோறும் 13 முதல் 20 எழுத்து முடிய உள்ள எட்டு நிலம் ஆம். (யா. வி. பக். 346 உரை மேற்.)

**வருக்க எதுகை –**

*இரண்டாம் எழுத்தாகிய மெய் அடிகள்தோறும் ஒன்றிவர, அம்மெய்ம்மேல் ஏறிய உயிர் வெவ்வேறாக வரத் தொடுப்பது.*

*எ-டு : 'நீ**டி**ணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்*
*பா**டு**ம்வண் டஞ்சி யகலும் பருவத்து'*

*இவ்வடிகளில் இரண்டாமெழுத்தாக டகரமெய் ஒன்றிவர, அம்மெய்ம் மேலேறிய உயிர்கள் முறையே இகரமும் உகரமு மாக வேறுபட வந்தன. (யா. க. 37 உரை)*

**வருக்க எழுத்து –**

*தானல்லாத ஏனைய உயிரெழுத்துக்கள் ஏறப்பெற்று வரும் உயிர்மெய் தான் ஏறிய அவ்வுயிர்மெய்க்கு வருக்க எழுத்தாம். டகரத்திற்கு டா, டி, டீ முதலிய பதினொன்றும் மெய்வருக்க எழுத்தாம் என்பது; இனி, உயிர் பன்னிரண்டனுள் ஒன்றற்கு ஏனைய பதினொன்றும் உயிர்வருக்க எழுத்தாம்.*
*(யா. க. 43 உரை)*

**வருக்க மோனை –**

*மெய்யெழுத்துக்கள்மேலேறிய உயிர்வருக்கம் அடிதோறும் அமையின், (அடி) வருக்க மோனையாம். அஃதாவது மெய்யெழுத்து ஒன்றிவர, அதன் மேலேறிவரும் உயிர் வேறுபடவருதல்.*

*எ-டு : 'பகலே, **ப**ல்பூங் கானல் கிள்ளை ஓப்பியும்*
***பா**சிலைக் குளவியொடு கூதளம் விரைஇ...............'*

*இப்பாடற்கண், பகர வருக்கமோனை (ப-பௌ) அடிதோறும் வந்தவாறு. (யா. க. 37 உரை)*

**வரையறைப்படும் வாழ்த்து வேறுபாடு –**

*இது புறநிலை வாழ்த்து. இது வாழ்த்தின்பாற்படும். "நீ வழிபடும் குலதெய்வம். நின்னைப் புறத்தே நின்று காப்ப, இல்லறத்தாற் பொலிந்த செல்வத்தோடே நீ பெறும் புதல்வரும் அவர் பெறும் புதல்வரும் சிறப்பு எய்த, எல்லீரும் நீடு வாழ்வீர்!" என்று தெய்வத்தைப் புறத்தே நிறுத்தி வாழ்த்தும் வாழ்த்து இது.*

*எடுத்துக்கொண்ட காரியம் நன்கு நிறைவேறுவதற்கு உதவும் தெய்வத்தைப் படர்க்கையாகப் புறத்தே நிறுத்தி, அத் தெய்வத்தால் பயன் பெற வேண்டி நிற்கும் ஒருவனை முன்னிலையாக்கிக் கூறுதலின் இது புறநிலை வாழ்த் தாயிற்று.*

எ-டு : *'அறிதுயில் அரவணை அமர்ந்தோன் காப்ப*
*அருட்கடம் பூண்ட அகலாச் செல்வமொடு*
*நீயுநின் புதல்வரும் சிறந்து*
*வாழிய பெரும! பூழியர் கோவே!'*

இப்புறநிலை வாழ்த்திற்கு மருட்பாவே சிறந்தது. இஃது ஆசிரியத்தாலும் வெண்பாவாலும் பாடப்படலாம். இவ் வாழ்த்துப்பகுதியுள் அடங்கும் வாயுறை வாழ்த்து, அவை யடக்கியல், செவியறிவுறூஉ என்பனவற்றிற்கும் இப்பாடல் களே சிறந்தவை; கலியும் வஞ்சியும் பரிபாடலும் ஏற்றவை அல்ல. (தொல். செய். 110 நச்.)

கலிப்பாவில் வாழ்த்துக் கூறுங்கால் கடவுள் முன்னிலையாக வரும். (பேரா.)

**வல்லிசை வண்ணம் -**

வல்லெழுத்துப்பயின்று வரும் வண்ணம். எ-டு: *'முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்'. (பட். 218)*

*'முட்டாட் டாமரைத் துஞ்சி'* (முருகு. 73.) (தொ. செய். 216 பேரா.)

இவ்வண்ணம் தோற்கயிறும் இரும்பும் திரித்தாற் போலவும், கல்மேல் கல் உருட்டினாற் போலவும் வருவது.(யா. வி. பக். 415)

**வல்லின எதுகை -**

அடிதோறும் முதலெழுத்து அளவொத்திருப்ப, இரண்டா மெழுத்தாகிய மெய் வல்லினமெய்யாக இருக்கும் எதுகை.

*எ-டு : 'தக்கார் தகவில ரென்ப தவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்!* (குறள். 114.) (யா. க. 37.உரை)

**வல்லின நடை -**

வல்லெழுத்து மிக்கு வரும் நடை வழுவாது செய்யுளைத் தொடுப்பது.

எ-டு : *'நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு'* (குறள். 1082) (யா. க. 53 உரை; பக் 208)

**வல்லின மோனை -**

அடிகளின் முதற்கண் வந்த உயிர்மெய்யெழுத்துக்களின் மெய்கள் வல்லின மெய்களாக இருப்ப, அவற்றின் மேல் ஏறிய உயிர்கள் வெவ் வேறாக இருப்பின் நிகழும் மோனை.

எ-டு : *'கயலேர் உண்கண் கலுழ நாளும்*
*சுடர் புரை திருநுதல் பசலை பாய'*

இதனுள் க,சு என அடிமுதற்கண் நிற்றலின்(அடி)வல்லின மோனை வந்தவாறு. *(யா. க. 37 உரை.)*

**வலித்தல் விகாரம் –**

*செய்யுட்கண் தொடை நயம் கருதி மெல்லெழுத்தை அதற்கினமாய வல்லெழுத்தாகத் திரித்துக் கோடல்.*

எ-டு : *குறுத்தாட் பூதம் சுமந்த*
*அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே'*

*குறுந்தாள் எனற்பாலது அடியெதுகை (வல்லின எதுகை) நோக்கிக் 'குறுத்தாள்' என விகாரப்பட்டமை வலித்தல் விகாரமாம். (யா. க. 95)*

**வழக்கில் உள்ள ஓசைகள் –**

*அகவலோசை, செப்பலோசை - என்ற இரண்டும் ஆம்.*
*(தொ. செய். 82 நச்.)*

**வழி எதுகை –**

*அடிக்கண் அடுத்தடுத்து வரும் எதுகை. இது நாற்சீரடி அல்லாதவழியே கொள்ளப்படுவது. வட நூலார் இதனை 'அனுப்பிராசம்' என்ப.*

எ-டு : *'கொ**ங்**கு த**ங்**கு கோதை ஓதி மாத ரோ**டு** கூ**டு** நீடு மோடை நெற்றி'*
*'ம**ண்**டலம் ப**ண்**டுண்ட தி**ண்**டோள் வரகுணன் தொ**ண்**டியின்வாய்'*

*இவ்வாறு நாற்சீரடியல்லாத நெடிலடி முதலிய ஏனை யடிக்கண் வரும் சீரெதுகை வழியெதுகையாம். முதலெடுத் துக்காட்டில் இருவகை எதுகை (ங், டு) வந்தன.*
*(யா. க. 532 உரை)*

**வழிமுரண் (1) –**

*நாற்சீரடி அல்லாத நெடிலடி முதலிய அடிக்கண் வரும் சீர்முரண். இது பலவாக வருதல் சிறப்பு.*

எ-டு : *'**செய்ய**வாய்ப் **பசும்**பொன் ஓலைச் **சீறடிப் பரவை** யல்குல்'*
(சூளா. 673)

*இவ்வறுசீரடிக்கண், செம்மை - பசுமை; சிறுமை - பரப்பு என முரண் பட்ட சொற்கள் பலவாக வந்தமை வழிமுரணாம்.*
*(யா.க. 53 உரை)*

**வழிமோனை –**

*பாடலடிகளில் மோனை சீர் இடையிட்டும் இடையிடாதும் வரத் தொடுப்பது. அதனால் இப்பாடல் சொல்லின்பம் பயிலும்.*

*எ-டு : '**மு**ன்னைத்தம் சிற்றில் **மு**ழங்கு கடலோதம் **மூ**ழ்கிப் போக*
***அ**ன்னைக் குரைப்பன் **அ**றிவாய் கடலேயென்(று) **அ**லறிப் பேரும்*

*தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம் தயங்கு கானல்*
*புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே*
*எம்மூர்.'*

இப்பாடல் மோனை இடையிட்டு வரத் தொடுக்கப்பட்டது. (தண்டி. மேற். 19 உரை)

**வழிமோனையின் பாற்படுவது -**

'வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்' - (நாலடி - 39) என முதலிருசீரும் ஒன்றாக வருதல் எதுகையுள் அடக்கப் படாது, வழிமோனைப் பாற்படும், முதற்கண் வருவது மோனையே ஆதலின். (தொ. செய். 93 நச்.)

**வழிமோனை, வழியெதுகை**

அளவடிக்கண்ணேயே (நாற்சீரடிக்கண்ணேயே) இணை, பொழிப்பு முதலாய தொடை விகற்பம் சொல்லப்படும். நாற்சீர் இகந்த பலசீரான் நிகழும் அடிக்கண் பயிலும் மோனை எதுகைகள் வழிமோனை வழியெதுகை யெனப்படும். முரண் முதலான பிறதொடையும் கொள்க.

*'துனிவருநீர் துடைப்பவளாத் துவள்கின்றேன் துணைவிழிசேர்*
*துயிலை நீக்கி'*
(தண்டி. பக். 17)

*'மண்டலம் பண்டுண்ட திண்டோள் வரகுணன் தொண்டி யின்வாய்*
(யா. வி. பக். 207)

**வழியசை**

தன்னொடு பின்னும் அசை வந்துசேர்தற்கு உரியதாய் நிற்பது. ஒழியசை போலத் தனிஅசையாய் நில்லாது, பின்னும் சில அசையொடு புணர்ந்து வருதலின் வழியசை எனப்பட்டது. 'என' என்பது 'எனவாங்கு' எனவும், 'ஆங்கு' என்பது 'ஆங் கொருசார்' எனவும் வருதல் போல்வன இதற்கு எடுத்துக் காட்டாவன.

இவ்வுறுப்புக் கலிப்பாவுள் தனிச்சொல்லாய் வரும். (தொ. செய். 123. நச்.)

**வழியசைபுணர்த்தல் -**

ஒரு சீரின்கண்ணே பிறிதொரு சீர் வரத் தொடுக்காமல் ஓரசை வரத் தொடுத்தல் (தொ. செய். 119 இள.)

**வழுநேரும் எழுபது வகைமையாவன -**

இயலசைச்சீர் 2, உரியசைச்சீர் 2. இயற்சீர் 10, ஆசிரியஉரிச்சீர் வெண்சீர் 4, வஞ்சிச்சீர் 60 ஆகிய 84 சீர்களுள் இயலசைச்சீர்

*இரண்டும் நாற்சீரடிக்கண் சீராக நிரம்பாமையின் அவை களையப்பெறும்.*

*வெண்சீர் நான்கும் தளை கொள்ளுமிடத்து நிரையசை இயல்பினவாம் ஆதலின் அவை இயற்சீர்பாற்பட்டு அடங் கும். அசைச்சீர் தளைகொள்ளுமிடத்து இயற்சீர் போலக் கொள்ளப்படுமேனும், அவை முற்றுகர குற்றுகரங்களான் வேறுபடுதலின், இயற்சீருள் அடங்காது வேறாகக் கொள்ளப் படும்.*

*வஞ்சியுரிச்சீர் அறுபதனுள் ஐந்தெழுத்தின் மிக்குவருவன நிரையீற்றுள் நான்கும் நேர்ஈற்றுள் நான்கும் ஆக எட்டாம். ஆகவே அவை நீக்கப்படும்.*

*எஞ்சியவை 70 சீர்களாம்.*

*இந்த 70 சீர்களும் ஆசிரியம் வெண்பா கலி ஆகிய பாக்களுக்கு உரியவை. நின்ற சீரும் வருஞ் சீருமாய்ப் புணர்ந்து தளை கொள்ளுமிடத்தே, ஒரு பாவிற்குரிய அடியுள் ஏனைப்பாக்க ளின் ஓசை புகுமாயின், வழுவாம் அவ்வாறு 70 வகைச் சீர்க ளான் நேரும் வழு 70 வகைமையாகும்.(தொ. செ. 50. சி. பால)*

**வன்பா –**

*வெண்பாவிற்கு ஒரு பெயர். பாடுதல் அருமைகுறித்து வந்தது. (யா. வி. பக். 219)*

**வனப்பு (1) –**

*அஃதாவது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதொரு செய்யுள் அழகு. இவ்வனப்பு அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டாம். (தொ. பொ. 547 பேரா.)*

**வாக்கிய பேதம் –**

*சூத்திரத்தில் புகலாகாத ஒரு குற்றம். 'ஒருபொருள் நுதலிய சூத்திரத்தானும்' (தொ. பொ. 480 பேரா.) என்ப ஆதலின், சூத்திரம் ஒரு செய்தியையே கருதி விதித்தலன்றி இரண்டு முதலிய பலவற்றைக் கருதி விதிப்பின் இக்குற்றம் புகும் என்பது.*

**வாய்மொழி –**

*மந்திரம். (தொ. செய். 79 நச்.)*

**வாயுறை முதலிய மூன்றாவன –**

*அவையாவன வாயுறை, அவையடக்கியல், செவியுறை என்பன.*

வாயுறை - மெய்ப்பொருள் நிறைவு.

அவை அடக்கியல் - பணிந்த மொழியான் அவையோரைத் தன்நோக்கிற்குள் அடக்கும் இயல்பு.

செவியுறை - கேட்போர் உளங்கொள்ளுமாறு அவர் செவி கொளக் கூறுதல். (தொ. செய். 112 - 114 ச. பால.)

**வாயுறை மொழி –**

'வாயுறை வாழ்த்து'க் காண்க.

**வாயுறை வாழ்த்து – (1)**

மருந்து போன்ற வாழ்த்துச் செய்தி கூறும் பாடாண்துறை; முற்பருவத்துக் கைத்துப் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும் போல வெய்யவாகிய இன்சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கும் எனக் கருதிப் பாதுகாத்துக் கூறுவதனால் உண்மையாக அறிவுறுத்துவது. வாயுறை- வாய் மொழியாகிய மருந்து; மருந்து போலுதலின், மருந்து எனப்பட்டது.

எ-டு : "இந்நிலவுலகினைத் தாமே ஆண்ட காவலர் கடல் அலைகள் சேர்க்கும் மணலினும் பலர். அன்னோர், பிறர் தம் நாடு கொள்ள, நன்காடே தம் பதியாக மாய்ந்து போயினர். மன்னவ! கேள். உடம்பொடு நிலைத்த உயிரும் இல்லை. உயிரைக் கவர்ந்து செல்ல வல்ல மடங்கல் இருத்தல் ஒருதலை. முதுகாட்டில் பிரேதத்துக்கு உப்பில்லா அவிப்புழுக்கலை நிலத்தி லிட்டு ஈயும் அக்கொடிய நாள் வாராமுன்னே, இவ் வுலகினைத் துறந்து முற்பட்டதாகிய தவமாகிய அறவினையைச் செய்க" என்னும் அறிவுரை. (புறநா. 363) (தொ. செய். 112 நச்.)

இவ்வாயுறைவாழ்த்தினை ஒரு தலைவன் வேண்டானாயினும் அவற்கு உறுதி பயத்தலைச் சான்றோர் வேண்டி வாய்மொழி மருங்கினான் அவனை வாழ்ச்சிப்படுத்தலின், இதுவும் கைக்கிளைப் புறனாகிய பாடாண் ஆயிற்று. இப்பாடற்கு வெண்பா, ஆசிரியம், மருட்பா என்பனவே உரியன.

(தொ. பொ. 90 நச்.)

**வாயுறை வாழ்த்து (2) –**

"யாம் கூறும் சொற்கள் கேட்டதற்குக் கடுமையானவையாயி னும், அவற்றை ஏற்று அந்நெறி யொழுகின், தொடர்ந்த

*நற்பயனே விளைவன" என்று சான்றோர் கூறும் உபதேசம் பற்றிய பாடாண் துறை.* *(பு. வெ. மா. 9: 32)*

**வாயுறை வாழ்த்து மருட்பா–**

*வாயுறை வாழ்த்து வெண்பாவானும் ஆசிரியத்தானும் இவையிரண்டும் கலந்த மருட்பாவானும் பாடப்பெறலாம். கலி வஞ்சிப் பாக்கள் இதற்குரியன அல்ல.*

எ–டு : *'பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்:*
*சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து*
*நிலமுறையின் ஆண்ட நிகரில்லார் மாட்டும்*
*சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா;*
*இலங்கும் எறிபடையும், ஆற்றலும், அன்பும்,*
*கலந்ததம் கல்வியும், தோற்றமும், ஏனைப்*
*பொலன்செய் புனைகலனோ(டு), இவ்ஆற னாலும்*
*விலங்கிவரும் கூற்றை விலக்கலும் ஆகா(து); –*
*அனைத்தாதல் நீயிரும் காண்டிர் நினைத்தக்க*
*கூறிய எம்மொழி பிழையாது;*
*தேறிநீர் ஒழுகின் சென்றுபயன் தருமே!*

*வாயுறை வாழ்த்து மருட்பாவால் வந்தவாறு.(யா. வி. பக். 312)*

**வார்த்திகம் –**

*சூத்திரக் கருத்தை விளக்கவல்ல ஒருவகை எளிய உரை.*

**வாரம் –**

*1. சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைய இசைப்பாடல்.* *(சிலப். 3-67 அரும்.*

*2. அம்போதரங்க ஒருபோகு கலிப்பாவினுள் ஓர் உறுப்பு; தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண் என்னும் உறுப்புக்களிற் கூறிய பொருளை அடக்குமியல்பிற்றாகலின் 'அடக்கியல் வாரம்' எனப்படும்.* *(தொ. பொ. 464 பேரா.)*

*சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் என்னும் ஒக்கும்.*
*(வீ. சோ. 117 உரை)*

**வாழ்த்தியல் வகை –**

*மும்முதற்பொருட்கண் அறமாவது வாழ்த்துதற் பொருட்கும் உரியது ஆதலின், அந்நிலையில் வாழ்த்துதல் நான்கு பாவிற்கும் உரித்தாகும்.*

*'வகை' என்றதனால், கடவுள் வாழ்த்தே யன்றி, முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்னும்*

அறுமுறை வாழ்த்து வருதலே பெரும்பான்மை என்பதும், கடவுளரை வாழ்த்துங்கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலும் என இருவகையான் வாழ்த்து வரும் என்பதும், வாழ்த்து முன்னிலையாகவும் படர்க்கையாகவும் வரும் என்பதும் கொள்ளப்பட்டன.

எ-டு : *'மாநிலம் சேவடி யாகத் தூநீர்.....*
*இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய*
*வேத முதல்வன் என்ப*
*தீதற விளங்கிய திகிரி யோனே!* (நற். கடவுள்)

இது தனக்குப் பயன்பட வாழ்த்தியது.

*'நீல மேனி வாலிழை யாகத் (து)*
*ஒருவன் இருதாள் நிழற்கீழ்*
*மூவகை உலகும் முகிழ்த்தன முறையே!'* (ஐங். கடவுள்.)

இஃது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது. இவை ஆசிரியப்பா.

*'முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னா;*
*பொற்பனை வெள்ளையை உள்ளார் எழிலின்னா;*
*சக்கரத் தானை மறப்பின்னா; ஆங்கின்னா*
*சத்தியாள் தாள்தொழா தார்க்கு'* (இன்னா நாற்பது கடவுள்.)

இஃது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது; வெண்பா.

*'ஆறறி அந்தணர்க்(கு) அருமறை பல பகர்ந்து'*

எனத் தொடங்கும் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துக் கலிப்பாவான் அமைந்தது.

*'உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து'* (குறள் 24)

இது முனிவரை வாழ்த்தியது; குறள் வெண்பா.

*'ஆயிர வெள்ள ஊழி*
*வாழி யாத! வாழிய பலவே!'* (பதிற். 63)

இஃது அரசனை வாழ்த்தியது; ஆசிரியப்பா.

*'விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புற் றலைகாண்(பு) அரிது'* (குறள் 16)

இது மழையை வாழ்த்தியது; குறள் வெண்பா.

இவை அறுமுறை வாழ்த்தாம்.

*'அங்கண் வானத் தமரரசரும்*
*வெங்களி யானை வேல்வேந்தரும்....'* (யா. வி. மேற்.)

இவ்வஞ்சிப்பா பின்னுள்ளோர் கூறிய கடவுள்வாழ்த்து.

இவை இயற்கையான வாழ்த்து. புறநிலை வாழ்த்து முதலியன இயற்கை வகையானன்றி வாழ்த்தியல்பால் சார்த்தப்படுவன.
(தொ. செய். 109 நச்.)

'வகை' என்றது தேவரை வாழ்த்தலும், முனிவரை வாழ்த்தலும், ஏனையோரை வாழ்த்தலும் ஆம். (105. இள.)

பாடாண்திணையின் பகுதியாகக் கூறப்பெற்ற கடவுள் வாழ்த்து முதலாக ஓம்படை யீறாகக் கூறப்பெற்றவை யாவும் வாழ்த்தினது பாகுபாடே ஆதலின், 'வாழ்த்தியல் வகை' எனப்பட்டன. இஃது ஆசிரியம் முதலிய நான்கு பாக்களுக்கும் உரியது. (தொ. செய். 109 ச.பால.)

**விகற்பக்குறள் வெண்பா** –

அ)செந்தொடையாலும், ஆ)தொடை விகற்பத்தாலும் வரும் குறள் வெண்பா. அஃதாவது அடியெதுகை யின்றி வருவது; இருவிகற்பம் எனினும் ஆம்.

எ-டு : அ) *'அறிஞர் இயம்பிய உள்ளத்தும் வைக்குமே*
*நன்னுதல் நோக்கோர் வளம்'* (செந்தொடை)

இஃது அடியெதுகை யின்றிச் செந்தொடையால் வந்தது.

ஆ) *'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு'* (விகற்பத்தொடை)

இது முதலடி இணைமோனை பெற்று வந்தது.
இரண்டாமடியுள் முதலிருசீரும் மோனை. (யா. க. 59 உரை)

**விகற்பம் இல்லாத் தொடைகள்** –

செந்தொடை, இரட்டைத் தொடை, அந்தாதித் தொடை என்பன இணை பொழிப்பு ஒரூஉ முதலிய விகற்பமில்லாத தொடைகளாம். (யா. க. 49)

**விகற்ப மயக்கம்** –

வரன்முறையின்றிப் பல தொடைகள் வரின், விகற்ப மயக்கம் என்று பெயரிடப் பெறும்.

எ-டு : *வேரல் வேலி வேர்க்கோட் பலவின்*
*சாரல் நாட செவ்வியை ஆகுமதி*
*யாரஃ தறிந்திசி னோரே சாரல்*
*சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்*
*உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'* (குறுந். 18)

முதல் மூன்றடிக்கண் அடியெதுகையே யன்றி, முதலடிக்கண் கூழை மோனையும், மூன்றாமடிக்கண் ஒரூஉ எதுகையும்,

ஈற்றயலடிக்கண் இணைமுரணும் கடையிணை எதுகையும், ஈற்றடிக்கண் பின் முரணும் எனப் பல தொடை விகற்பங்களும் விரவி வந்தவாறு. (யா. க. 53 உரை)

**விட்டிசைமோனை –**

ஒவ்வோரடியிலும் முதலெழுத்துக் குறிலாக இருந்து விட்டிசைப்பது. விட்டிசைத்தலாவது அடுத்த எழுத்தொடு தொடராமல் பிரிந்திசைத்தல்.

எ-டு : *'அஉ அறியா அறிவில் இடைமகனே*
*நொ, அலையல் நின் ஆட்டை நீ'*

அ, நொ என்னும் முதலெழுத்துக்கள் அளவொத்து விட்டிசைத்தமையால் விட்டிசை மோனை ஆயிற்று.
(யா. க. 37 உரை.)

**விட்டிசை வல்லொற்று எதுகை –**

ஈரடிகளில் முதலடி முதற்குறில் வல்லொற்றொடு கூடி அடுத்த அடி முதற்குறில் வல்லொற்று அடுத்தாற் போன்று விட்டிசைத்து வரும் தொடை.

எ-டு : *பற்றிப் பலகாலும் பால்முலை உண்ணாமை*
*நொ, அலையல் நின்ஆட்டை நீ'*

முதலடிக்கண் முதற்குறில் வல்லொற்றடுத்து விட்டிசைத்து நேரசையானாற்போல, இரண்டாமடிக்கண் தனிக்குறில் விட்டிசைத்து ஓரலகு பெற்றமையால் இவ்வெதுகையாம்.
(யா. க. 53 உரை)

**வியனிலை மருட்பா –**

வெண்பா அடியும் ஆசிரிய அடியும் தம்முள் ஒவ்வாது வரும் மருட்பா வகை. (வியனிலை, வியநிலை என இருவகையாகவும் எழுதுப.)

எ-டு : *'தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை*
*முன்றில் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்*
*குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப, என்றும்*
*தீரா நண்பின் தேவர்*
*சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே!'*

இப்புறநிலை வாழ்த்து மருட்பாவில், முன் மூன்றடிகளும் வெண்பாவடி; பின்னிரண்டடிகளும் ஆசிரியவடி யாதலின் இது வியனிலை மருட்பாவாம். (யா. கா. 36 உரை)

**வியனிலை வஞ்சி –**

சிந்தடி வஞ்சிப்பா இவ்வாறு பெயர் பெறும்.
(தொ. செய். 47 நச்.)

**விரவியல் ஆசிரியப்பா –**

வேற்றுப்பாவின் அடிகள் விரவிய ஆசிரியப்பா.

எ-டு : *'எறும்பி யளையின் குறும்பல் சுனைய*
*உலைக்கல் அன்ன பாறை ஏறிக்*
*கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்*
*கவலைத் தென்பஅவர் தேர்சென்ற வாறே;*
*அதுமற் றவலம் கொள்ளாது.*
*நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.'* (குறுந். 12)

இப்பாடலின் முதலடி வெண்பாவடி ஆதலின் இது விரவியல் ஆசிரியப்பா ஆயிற்று. (யா. க. 70 உரை)

**விரவியல் வஞ்சிப்பா –**

வஞ்சிப்பா வேற்றடி விரவி வருவது. (வேற்றடி விரவாமல் வருவது இன்னியல் வஞ்சிப்பாவாம்.)

எ-டு : பட்டினப்பாலை என்னும் வஞ்சி நெடும்பாட்டு ஆசிரியஅடிவிரவி வந்த ஏந்திசைத் தூங்கல் விரவியல் குறளடி வஞ்சிப்பா. (யா. க. 90 உரை)

**விரவு உறுப்புடைய கலிவெண்பா –**

விரவுறுப்புடைய கலிவெண்பா தரவிற்கும் போக்கிற்கும் இடையில் உள்ள பாட்டாகப் பயின்றும், இடையிடையே ஐஞ்சீரடியும் அறுசீரடியும் பெற்றும், வெண்பா எனப்பட்ட உறுப்பின் இயற்கை சிதையாமல் உட்பொருள் ஒன்றனை அடக்கி வாராது நேரே பொருள் புலப்படத் தோன்றும்; தனிச்சொல் பெற்று வெள்ளைச் சுரிதகமோ அகவல் சுரிதகமோ பெற்று முடியும். வெள்ளைச் சுரிதகமும் ஒரோவழித் தரவினைப் போல, 'கோதை பரிபாடக் காண்கும்' (கலி. 80) என்றாற்போல அசைச்சீரான் இறாது இயற்சீரானும் இறும்.

சுரிதகம் போல இடையே வரும் பாட்டும் முச்சீரான் இறாது, சிறுபான்மை,

*'கரந்தாங்கே இன்னாநோய் செய்யுமற் றிஃதோ*
*பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு'* (கலி. 141)

என்றாற் போல நாற்சீரான் இறுதலும் உண்டு.

ஐந்துசீர் பெறுதலும் ஆறுசீர் பெறுதலும், பெரும்பாலும் தரவு சுரிதகம் இவற்றின்கண்ண அன்றி, இடையிலுள்ள பாட்டின்கண்ணேயே நிகழும். அடுக்கும் சீர் பாட்டின் முதலிலேயோ இறுதியிலேயோ வரும்.

எ-டு : *'சான்றவிர் வாழியோ சான்றவிர்'* (கலி. 139)

என்ற பாடல் தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து ஆசிரியச் சுரிதகத்தான் இற்ற கலிவெண்பாட்டு.

*'கண்டவிர் எல்லாம் கதுமென வந்தாங்கே'* (கலி. 140)

என்பதன்கண்,

*'என்னானும், பாடெனின் பாடவும் வல்லேன் சிறிதாங்கே'* என ஐஞ்சீர் பாட்டின்கண் வந்தது.

*'காரரப் பெய்த'* (கலி. 109) என்னும் முல்லைக்கலியுள்,

*'இவடான், வருந்தநோய் செய்திறப்பி னல்லால் மருந்தல்லள்'* எனச் சுரிதகத்தின்கண்ணும் ஐஞ்சீர் வந்தது.

*'அரிதினில் தோன்றிய யாக்கை புரிபுதாம்'* (கலி. 141) என்ற நெய்தற்கலியுள்.

*'வாழி சான்றீர், பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை'* எனவும்,

*'அம்ம சான்றீர், கரந்தாங்கே இன்னாநோய் செய்யுமற் றிஃதோ'* எனவும், அறுசீர் அடுக்கிய பாட்டுக்கள் வந்தன.

இவற்றை முதற்பாட்டின் ஈற்றடியொடு கூட்டின்,

'மன்றம் படர்வித் தவள் வாழி சான்றீர்' எனவும்,

இன்னா இடும்பை செய்தாள் அம்ம சான்றீர் எனவும், ஐஞ்சீரடி அடுக்கிய பாட்டுக்களாம்.

சொற்சீரடியே ஐஞ்சீரும் அறுசீருமாய் அடுக்கின.

இதற்கு நேர்ந்த சொற்சீரடி, ஒத்தாழிசைக்கும் தனித்து வரும் கலிவெண்பாவிற்கும் வாரா.

தரவுக்கும் சுரிதகத்துக்கும் இடையே வருவன. தாழம்பட்ட ஓசை இன்மையின் தாழிசை எனவும், துள்ள லோசை சிறிதும் இன்மையின் கொச்சகம் எனவும் கூறப்படாமல், வெண்பாட் டாகவே வருதலின் 'பாட்டு' எனப்பட்டன. இவற்றை வெள்ளைக்கொச்சகம் என்றும் கூறலாம்.

(தொ. செய். 154 நச்.)

**விராஅய் வருதல் –**

விரவி வருதல். கலந்து வருதல் என்பர் பேராசிரியர்.

ஐவகை அடியும் ஆசிரியத்துள் வருங்கால், ஆசிரியவுரிச்சீரும் இயற்சீருமாய் ஆசிரியத்தளையாயே வருதலன்றி, பிறசீர் களும் தளைகளும் விரவி வரினும் அவை நீக்கும் நிலைமை இல)

*அவற்றை இசையொடு சேர்த்தி அகவலோசையாற் கூறிக் கொள்க.* *(தொ. செய். 53 ச. பால.)*

**விரித்தல் விகாரம் –**

*செய்யுளுள் அசையை மிகுத்தல் கருதிச் சாரியை முதலியன இரு சொற்களின் இடையே மிடைய அச்சொற்கள் விரிக்கப்படுதல்.*

எ-டு : *'தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்*
*வண்ணம் கடைப்பிடியா தார்'*

*'தண் துறைவர்' எனற்பாலது சீரமைப்பு நோக்கித் 'தண்ணந் துறைவர்' என 'அம்' சாரியை விரிக்கப்பட்டவாறு.*

**விரிமுரண் –**

*பண்டு வழங்கிய ஒருவகை இசைப்பா என்று சிகண்டியார் வரைந்த இசைநுணுக்கம் கூறும்.* *(சிலப். 6 : 35 உரை)*

**விருத்தகந்தி –**

*எதுகை மோனை முதலிய தொடைநலம் திகழ வரும் செய்யுள் நடையிலமைந்த வசனம்.* *(இலக். அக.)* (L)

**விருத்தக் கலித்துறை –**

*கலித்துறைப்பா வகை. இக் கலித்துறை 'காப்பியக் கலித்துறை' எனவும் கூறப்படும். (வீ.சோ. 123 உரை) 'மூவா முதலா' முதலாக வரும் நெடிலடிப் பாடல்களை விருத்தக் கலித்துறை என்று கூறுதல் பொருந்தாது, 'கொச்சகம்' என்றே கூறல் வேண்டும் என்று விளக்கும் நச்சினார்க்கினியரது உரைப் பகுதியுள் இவ் யாப்புப் பெயர் சுட்டப்பட்டுள்ளது.*
*(சீவக. 1 நச்.)*

**விருத்தம் (1) –**

*தம்மில் ஒத்த அடி நான்காய் வரும் செய்யுள். குண்டலகேசி முதலிய காப்பியம் எல்லாம் விருத்தமாம்.(வீ.சோ. 129 உரை)*

**விருத்தம் (2) –**

*ஒரு புடையான் தத்தம் பாவினோடு ஒத்த ஒழுக்கத்தானும், எல்லா அடியும் ஒத்து நடத்தலானும், புராணம் முதலாகிய விருத்தம் உரைத்தலானும் 'விருத்தம்' என்பது காரணப் பெயர்.*

*இவை ஒருபுடை ஒப்புமை வரலாற்று முறைமையால் பெயர் பெற்றன. காக்கைபாடினியார், விருத்தம் துறை தாழிசை என்ற*

முறையே குறிப்பிட்டார். சிறுகாக்கைபாடினியார் முதலாயி னோர், தாழிசை துறை விருத்தம் எனக் குறிப்பிட்டனர். (யா. க. 56 உரை)

**விருந்து –**

வனப்பெட்டனுள் ஐந்தாவது; புதிதாகத் தொடுக்கப்படும் தொடர்நிலைச்செய்யுளின் மேற்று; தோல் போலப் பழையதும் புதியதுமாகிய கதைமேலதன்றி, இது புதிதாகப் படைத்துத் தொடர்நிலை செய்வது. முத்தொள்ளாயிரமும், பின்னுள்ளார் பாட்டியல் மரபிற் கூறிய கலம்பகச்செய்யுள் முதலியவற்றைப் பாடுதலும் விருந்து என்னும் வனப்பு வகையாம். (தொ. செய். 239 பேரா.)

விருந்தாவது, தமிழகத்தில், யாப்பின்வழியதாகி வாராமல். புதுவதாகப் புனைந்து கூறும் யாப்பின்மேற்று ஆகும்.

அது பொதுவியற் கூத்தினுள் படைத்துமொழியாகவும் பொருளொடு புணர்ந்த நகைமொழியாகவும் அவ்வப்போது புனைந்து கூறும் செய்யுளாம்.

அஃது இக்காலத்து வழங்கும் ஆசுகவியும் இலாவணியும் போன்றது என்க. (தொ. செய். 238 ச. பால.)

**விளச்சீர் –**

நேர்நிரை நிரைநிரை என நிரையசையால் முடியும் இயற்சீர் இரண்டும். (யா. கா. 7)

**விளம் –**

இயற்சீரின் இறுதியாக நிற்கும் நிரையசைக்குரிய வாய்பாடு.

**விற்பூட்டுப் பொருள்கோள் –**

பூட்டுவில் பொருள்கோள் - காண்க.

**வெண்கலிப்பா –**

கலித்தளை தட்டுக் கலியோசை தழுவி ஈற்றடி வெண்பாவைப் போல முச்சீரான் முடிவது கலிவெண்பா (வெண்கலிப்பா எனினும், கலிவெண்பா எனினும் ஒக்கும்.) (யா. வி. பக். 325)

ஈற்றடி கலியோசை கொண்டு, வேற்றுத்தளை தட்டு, முச் சீரான் இறுவனவும் வெண்கலிப்பா எனப்படும்; பெரும் பான்மையும் ஈற்றடி வெள்ளோசை கொண்டும் கொள்ளா தும் முச்சீரடியால் இறுவதே கொள்ளப்படும்.

இது சிறப்புடைக் கலித்தளையானும், உரிச்சீர் வெண்டளை யானும், சிறப்பில்லாத ஆசிரியத் தளையானும், சிறப்பில்லாத

வஞ்சித் தளையானும் வரும். வெண்பா ஒழித்து அல்லாத செய்யுட்களுள் வேற்றுத்தளை விரவும் எனினும், அவையும் தம் தளையால் வருவதே சிறப்புடையதாம். *(யா. க. 85 உரை)*

ஒரு சாரார் செப்பலோசையில் சிறிதும் வழுவாது வருவன கலிவெண்பா எனவும், சிறிது வழுவிவருவன வெண்கலிப்பா என்றும் கூறுவர். *(யா. கா. 32 உரை)*

எ-டு : *'பண்கொண்ட வரிவண்டு'* - சிறப்புடைக் கலித்தளை *(யா. வி. பக். 325)*

*'நாகிளம்பூம் பிண்டிக்கீழ்'*- உரிச்சீர் வெண்டளை. *(யா. வி. பக். 325)*

*'ஏர்மலர் நறுங் கோதை'* - ஆசிரிய நிரைத்தளை. *(யா. வி. பக். 326)*

*'முழங்குகுரல் முரசியம்ப'* - சிறப்பில்லாத வஞ்சித்தளை. *(யா. வி. பக். 326)*

**வெண்கலிப்பா, கலிவெண்பா –**

ஒரு பொருளையே நுதலிவரும் பல அடிகளாலும் சில அடிகளாலும், வெண்பாநடை பெற்று, கலித்தளை பயில, ஒன்று விட்டு அடிதோறும் ஒரூஉஎதுகை அமைந்தும்,

இனி, வெண்டளை வழுவாமல் அமைய அகப்பொருள் பற்றியும், என இவ்விருதிறத்தானும் நிகழ்ந்து ஈற்றடி வெண்பா இயலால் முச்சீரடியாக முடியப் பெறுவது வெண்கலிப்பாவாம். அது கலிவெண்பா எனவும்படும். *(தென். இயற். 29)*

**வெண்கலியும் கலிவெண்பாவும் –**

ஆசிரியத் தளையானும் தன் தளையானும் இயன்று ஈற்றடி வெண்பாவே போல சிந்தடியால் முடிவது வெண்கலிப்பா.

எ-டு : *'ஏர்மலர் நறுங்கோதை எருத்தலைப்ப இறைஞ்சித்தன்*
*வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்திய என்*
*தார்வரை அகன்மார்பன் தனிமையை அறியுங் கொல்*
*சீர்மலி கொடியிடை சிறந்து.'* (யா. கா. 32 உரை)

வெண்தளை தட்டு வெள்ளோசை தழுவி ஒரு பொருள்மேல் வந்து, ஈற்றடி வெண்பாப் போல முடிவது கலிவெண்பா.

எ-டு : *'சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்'*
*(குறிஞ்சிக்கலி. 15) என்னும் பாடல்.* (யா. கா. 32 உரை)

வெண்கலிப்பா அளவடியாய், ஈற்றடி அசையால் முடியும் முச்சீரடியாய்ப் பலதளையும் தொடையும் விரவி வருவது.

*கலிவெண்பா வெண்டளையே பெற்று ஈற்றடி முச்சீராக வருவது. (தொ. வி. 235)*

**வெண்கூ வெண்பா –**

*நேரிசை வெண்பா இப்பெயர் பெறும் என்பர் ஒரு சாரார். (யா. க. 57 உரை)*

**வெண்கவி –**

*1. வெண்பா. 2. பொருளாழ மற்ற கவிதை.* (L)

**வெண்சீர் –**

*வெண்பா வுரிச்சீர் (இ. வி. 718)*

**வெண்சீர் ஆசிரியத்துள் வருதல் –**

*விரவியல் ஆசிரியப் பாவில், வெண்சீர் வந்து விரவப்பெறும்.*

*'அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்*
*பூசல் வாயா புலம்புமனைக் கலங்கி*
*ஏதில் மாக்களும் நோவர், தோழி!*
*என்றும் நோவா ரில்லை,*
*தண்கடற் சேர்ப்பன் உண்ட என் நலக்கே'*

*இவ்வாசிரியப்பாவுள் முதலடி வெண்பா அடி; 'அரவின் வாய்' என்பது காய்ச்சீராகிய வெண்சீர்.*
*(யா. க. 29 உரை; யா. கா. 41 உரை)*

**வெண்சீர் ஈற்றசை –**

*வெண்சீர்கள் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்றவழி, அவ்வெண்சீர்களுள் ஈற்று நின்ற சீரின் முதற்கண்வந்த நேரசை. (தொ. செய். 29 நச்.)*

**'வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்று' ஆதல் –**

*ஒரு கலியடியுள் நான்கு சீர்களும் வெண்சீர்களாக இருப்ப, முதல் மூன்று சீர் நிரைமுதல் சீர்களாக அமைய, நான்காம்சீர் நேர் முதலாக அமைந்தாலும், முதல் மூன்று சீர்களும் நிரை முதலாக வந்து கலித்தளை ஆயவாறு போலக் கலியோசையே கொள்ளப்பெறும்.*

எ-டு : *'அடிதாங்கும் அளவன்றி அனலன்ன வெம்மையால்'* (கலி. 11)

*என்ற கலியடியில், ஈற்றுச்சீரில் முதலில் வந்த நேரசை நிரை யசை போலத் துள்ளளோசை கோடலின் கலித்தளையா யிற்று.*

*'பண்டரங்கம் ஆடுங்கால் பணையெழில் அணைமென்றோள்'*
(கலி. கடவுள்.)

*'அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்'* (கலி. 11)

*என்ற அடிகளில், வெண்சீர் இறுதி நிரை முதல் இயற்சீர் தட்டலின் துள்ளலோசை சிறவாதாயிற்று.(தொ.செய். 29 நச்.)*

*'வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்று' என்பதற்கு இளம்பூரணர் உரைக்கும் நேரிய பொருள் பின்வருமாறு :*

*தேமா, புளிமா என்ற நேரீற்றியற்சீர் முன் வருஞ்சீரின் முதலி லுள்ள நேரசை ஒன்றுவது நேரொன்றாசிரியத்தளை. வெண் சீர்களும் நேரீற்றுச்சீர்களே; வருஞ்சீரின் முதலிலுள்ள நேரசை அவற்றோடு ஒன்றும். நேர்முன் நேர் வருதலின் நேரொன்றாசிரியத்தளைதான் என்று கருதுவார்க்கு, வெண்சீரின் ஈற்றிலுள்ள நேரசையை நிரையசை போலக் கொண்டு, நிரைமுன் நேர்வருவது வெண்டளை என்று கொள்வதுபோல, இதனையும் வெண்டளை என்று கொள்ளுக என்பது. (28 இள.)*

**வெண்சீர்முன் நேர்வருதல் ஒன்றுதல் ஆகாமை** –

*தளைகோடற்கண் வெண்சீர் ஈற்றசை நிரையசை இயல்பினது ஆதலின், நேர்முதலாகிய சீர்வரின், நிரைமுன் நேர்வந்த ஒன்றாத் தன்மையதாகவே கருதப்படும். (தொ. செய். 58 ச. பால)*

**வெண்சீர் வெண்டளை** –

*வெண்பாவுரிச்சீர் முன் நேர் வந்து ஒன்றும் தளை; வெண்பா வுரிச்சீரின் நேர்வந்து ஒன்றுவது சிறப்புடைய வெண்சீர் வெண்டளை எனவும், பிறசீரின் நேர்வந்து ஒன்றுவது சிறப்பில்லா வெண்சீர் வெண்டளை எனவும் கொள்ளப் படும். (யா. கா. 10 உரை)*

**வெண்செந்துறை** –

*குறள்வெண்பாவின் ஓர் இனம்; தம்முள் ஒத்து வந்த இரண் டடிகள் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைய னவாய் வந்து வெண்செந்துறை என்று பெயர் பெறும்; ஒவ்வோரடியும் நாற்சீர் முதல் பலசீர்களானும் வரும்.*

எ-டு : *'கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை*
*என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே!'*

*இது நாற்சீரடி இரண்டான் ஆகியது.*

*'நன்றி யாங்கள் சொன்னக்கால் நாளும் நாளும் நல்லுயிர்கள் கொன்று*
*தின்னு மாந்தர்கள் குடிலம் செய்து கொள்ளாரே'*

*இஃது அறுசீரடி இரண்டான் ஆகியது.*

*இது செந்துறை வெள்ளை எனவும் பெயர்பெறும். (யா. க. 63)*

**வெண்டளை –**

வெண்பாவிற்குரிய இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமாம். மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது இயற்சீர்வெண்டளையாம்; காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளையாம். (யா. க. 18 உரை)

**வெண்டளையின் இருவகை –**

'வெண்டளை' காண்க. வெண்பா உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை யாம். இயற்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாம்.

வெண்பா உரிச்சீர் நின்று வரும் சீரும் வெண்பா உரிச்சீராக வர ஒன்றுவது சிறப்புடையது; வரும்சீர் பிற சீராக வர ஒன்றுவது சிறப்பில்லாதது. இயற்சீர் நின்று வரும் சீரும் இயற் சீராக வர ஒன்றாதது சிறப்புடையது; வரும் சீர் பிறசீராக வர ஒன்றாதது சிறப்பில்லாதது. (யா. க. 18)

**வெண்டளை விரவுதல் –**

வெண்பாவொடும் கலிப்பாவொடும் கலத்தல். ஈண்டுத் தளை என்றது அப்பாக்களை. வெண்டளையெனவே இரண்டு வெண்டளையும் அடங்கலின், அவற்றுள் வெண்சீர் வெண் டளையான் வரும் சீர்வகைவெண்பாவும் சீர்வகைக் கலியும் அடங்கின. (தொ. செய். 63 நச்.)

**வெண்டாழிசை –**

வெண்டளையே வரல் வேண்டும் என்ற வரையறையின்றி வெண்டளையொடு வேற்றுத்தளையும் விரவி, அடி மூன்றாய், அடிதோறும் நாற்சீராய் ஈற்றடி முச்சீராய், ஒரு பொருள்மேல் தனித்து ஒன்றாகவும் இரண்டும் பலவும் இணைந்தும், வெவ்வேறு பொருள் பற்றி அடுக்கியும் வருவன ஈரடிமுக்கால் எனப்படும் சிந்தியல் வெண்பாவின் இனமாகிய வெண்டாழிசையாம்.

எ-டு : *'போதார் நறும்பிண்டிப் பொன்னார் மணியனையான்*
*தாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்*
*தீதார் வினைகெடுப்பார் சிறந்து.'*

இது வெள்ளோசை தழுவாது வேற்றுத்தளை விரவி முதற்கண் வெண்டளை தட்டு வந்த வெண்டாழிசை.

*'நண்பி தென்று தீய சொல்லார்*
*முன்பு நின்று முனிவ செய்யார்*
*அன்பு வேண்டு பவர்.'*

*இஃது ஆசிரியத் தளையான் வந்த வெண்டாழிசை. வெண் டாழிசை கலித்தளையானும், வஞ்சித்தளையானும் வருவன உள. (யா. க. 66 உரை)*

**வெண்டாழிசைக்கும் வெள்ளொத்தாழிசைக்குமிடையே உள்ள வேறுபாடு –**

*வெண்டாழிசை சிந்தியல் வெண்பாப்போல நாற்சீரடியிரண் டும் முச்சீர்த்தாய இறுதியடி ஒன்றும் உடையதாயினும், பல தளைகளும் விரவித் தனித்தும் ஒரு பொருள்மேல் பலவாக அடுக்கியும் வரும். வெள்ளொத்தாழிசை தனித்து வாராது ஒரு பொருள்மேல் மூன்றாக அடுக்கி வந்த சிந்தியல் வெண் பாக்களாம். நாற்சீரடி இரண்டு முன்வர முச்சீரடி ஈற்றடியாக வருதலொன்று தவிர, பிறஎல்லாம் இவற்றிடையே வேறுபாடுகளாம்.*

*வெண்டாழிசை வெள்ளொத்தாழிசை என்ற இரண்டனை யும் ஒன்றாகக் கொள்வர் காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவிநயனார் முதலானோர். (யா. க. 66 உரை)*

**வெண்டுறை –**

*வெண்பாவின் இனங்களுள் ஒன்று. மூன்றடிமுதல் ஏழடி காறும் இதற்கு எல்லை உண்டு. கடைக்கண் ஓரடியிலும் பல அடியிலும் ஒரு சீரும் இருசீரும் பலசீரும் குறைந்து வரும். எல்லா அடிகளும் ஒரே ஓசையாய் வருவதும் உண்டு; முதல் சில அடிகள் ஓரோசையாகவும், ஏனைய அடிகள் வேறோர் ஓசையாகவும் வருதலுமுண்டு. பாடல் முழுதும் ஓரோசை யாக வருவது ஓரொலி வெண்டுறையாம்; வெவ்வேறோசை யாக வருவது வேற்றொலி வெண்டுறையாம். தளை வரையறை இல்லை. மூன்றடி வெண்டுறை சிந்தியல் வெண்பாவின் இனம்; நான்கடி வெண்டுறை இன்னிசைவெண்பாவின் இனம்; 5, 6, 7 அடி வெண்டுறைகள் பஃறொடைவெண்பா வின் இனம். வகைகளைத் தனித்தனியே காண்க.*

*(யா. க. 67 உரை)*

**வெண்டுறையுள் பிறதளை –**

எ-டு : *'முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகும் ஏவல்செய*
*முறைசெய் கோமான்*

*வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் தாக்கரிய வைவேல்பாடி'*

*இவ்வெண்டுறை யடிகளுள், வெண்சீர் வெண்டளை, கலித்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை,*

*நேரொன்றா சிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, வெண்சீர் வெண் டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை எனத் தன் தளையொடு பிற தளைகளும் வந்தவாறு.*

*(யா. க. 22 உரை)*

**வெண்பா – (1)**

*ஈற்றில் நேர்வரும் மூவசைச்சீர்களாகிய காய்ச்சீர் நான்கும், ஈரசைச்சீர் நான்கும், ஓரசைச்சீர் இரண்டும் வெண்பாவிற் குரியனவாம். வெண்பா ஈற்றில் ஓரசைச் சீரே வரும்; பிற வாரா. காய்ச்சீராகிய மூவசைச் சீரினையும் நிரை ஈறாகிய ஈரசைச் சீரினையும் அடுத்து நேர்வரும்: நேர் ஈறாகிய ஈரசைச்சீரினை யடுத்து நிரை வரும்: இவை வெண்பாவிற் குரிய தளை நிலை. நேரசைச் சீராகிய நாள் வாய்பாட்டாலும் நிரையசைச் சீராகிய மலர் வாய்பாட்டாலும் முடித்த வெண்பாக்கள் உத்தமப் பகுதியாம்; ஏனைய காசு, பிறப்பு என ஈரசை வாய்பாட்டால் முடித்த வெண்பாக்கள் உத்தமம் அல்லாப் பகுதியாம்; இந்நுட்பம் உணர்ந்த பாவலன் நூற்று வருள் ஒருவனே. முதலடி நாற்சீரால் அமைத்து அடுத்த அடி ஓரெதுகையில் முச்சீரால் அமைத்து முதற்சீரும் மூன்றாம் சீரும் மோனையில் அமையப் பாடுவது குறள் வெண்பாவாம். இரண்டுகுறள் வெண்பாக்கள் (தனிச்சீர் பெறாமல்) அணைவது சவலைவெண்பா - என்றனர் ஒரு சாரார். சவலை வெண்பாவின் முதற்குறள் ஈற்றில் அவ்வடி யெதுகையமைய தனிச் சீரொன்று (நான்காம் சீராக) இயையின், அது நேரிசை வெண்பாவாம். முதல் மூன்றடிகளும் நந்நாற்சீரினவாகவும், ஈற்றடி முச்சீரினதாகவும் வருவது இன்னிசை வெண்பாவாம். நேரிசை வெண்பாக்களை நிறைய அடுக்கி இடையே (நான்காம் சீராகத்) தனிச் சொல்லைப் பொருத்தி இயற்றுதல் பஃறொடை வெண்பாவாம்; இதனைக் கலிவெண்பா என்பாரும் உளர். இன்னும் சிலவகை வெண்பா உளவேனும், அவையெல்லாம் இக்கூறிய ஐந்தனுள்ளும் அடங்கும். தளை பிழைபடாமல் பொருட் செறிவொடு திகழும் வெண்பா மோனை எதுகைகள் பிறழ்ந்தாலும், தவிர்ந்தாலும், தக்கோர் அவற்றிற்கு இசைவு காட்டினும், அவை இனிமை குன்றி விடும். குறில் தனித்து வரும் அசைச்சீர் வெண்பாவின் இறுதி யிலன்றிப் பிறவிடத்து வாராத் தன்மையையும், குற்றிய லிகரத்தைக் கொள்ளலும் தள்ளலுமாதிய தன்மையையும் அறிபவர் யாம் சொன்ன முறையால் வெண்பா இயற்றுவர்;*

*அசைச்சீர் இடையே வர ஒருகாலும் வெண்பாப் புனையார். வெண்பா இயற்கை இன்னும் பல உள. ஈறறடிக்கண் சிறப்பாக அமையும் அம்மோனையியல்பால், வெண்பா, தண்ணுமைக் கருவி பல வாத்தியங்களிடையே தயங்குமாறு போல, பாக்களிடையே சிறந்து திகழவல்லது.*

*(அறுவகை யாப்பு 13 - 24)*

**வெண்பா – (2)**

*நான்கடியாய்ப் பதினைந்து சீராய் நடுவு தனிச்சொல் வருவது வெண்பாவாம். (வீ. சோ. 127)*

**வெண்பா, அகவல், கலிப்பா அடிகள் –**

*வெண்பாவும் ஆசிரியமும் கலியும் நாற்சீரடியாகிய அளவடியால் நடைபெறும். கலியுள் அம்போதரங்க உறுப்புச்சில இருசீரடியானும் முச்சீரடியானும் வரும். அராக உறுப்பு நாற்சீரின் மிக்கும் வரும்.*

*வெண்பாவின் ஈற்றடியும், ஆசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரும். இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும் பலவும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரும். ஆசிரிய விருத்தமும் கலித்துறையும் ஒழித்து மூன்று பாவினமும் பெரும்பான்மையும் நாற்சீரடியான்வரும்.*

*ஒருசார் ஆசிரியஅடியும் கலியடியும் ஐஞ்சீரான் அருகி வருவனவும் உள. (யா. க. 27 உரை)*

**வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்ற முறை –**

*வெண்பா பிறதளையொடு மயங்காமையானும், மிக்கும் குறைந்தும் வாராத அடியான் வருதலானும், அந்தணர் நீர்மைத்து என முற்கூறினார். அதன்பின் அந்நிகர்த்தாய்ப் பிற தளையும் வந்து இனிய ஓசையுடைத்தாய்ப் பரந்து வருதலின் அரசத் தன்மைத்து என்றதனான், ஆசிரியப்பாக் கூறினார், அதன்பின், அந் நிகர்த்தாகிச் சிறுபான்மை வேற்றுத்தளை விரவின் வணிக நீர்மைத்தெனக் கலிப்பாக் கூறினார். அதன்பின் வஞ்சிப்பா அளவடியான் வருதலின்றிக் குறளடியும் சிந்தடியும் வந்து பலதளையும் விரவுதலின் வேளாண் மாந்தர் இயல்பிற்றென வஞ்சிப்பாக் கூறினார்.*

*(தொ. செய். 101 இள.)*

*யா. க. 55 உரை வருமாறு :*

*நாற்சீரடியால் நடைபெறுதலும் வேற்றுப்பாவினால் இறாமையும் எல்லாப்பொருள்மேலும் சொல்லப்படுதலும்*

என்றிவற்றால் ஆசிரியத்தோடு ஒத்திருத்தலும், உயர்ந்த ஓசைத்து ஆகலும், அந்தணர் வருணத்ததாகலும், வேற்றுத் தளையும் வேற்றுப்பாவும் விரவாமையும் என்னும் மிகுதிக் குணமுடைமை நோக்கி வெண்பா ஆசிரியத்தின்முன் வைக்கப்பட்டது.

அளவடியான் நடைபெறுதலும் தனது நடையால் தான் இனிது இறுதலும் எல்லாப் பொருள்களையும் தன்கண்ணே அடக்கலும் ஒருவாத பொருளிற்றாகலும் ஆகிய ஒருபுடையான் வெண்பாவோடு ஒத்தலும், அகவிய ஓசைத்தாகலும், அரசர் குலத்தினதாகலும், வேற்றுத்தளையும் அடியும் விரவி வருதலும் என்னும் வேறுபாடுடைமையும் நோக்கி ஆசிரியப்பா வெண்பாவின் பின் வைக்கப்பட்டது

அளவடியான் நடைபெறுதலும் அயலடியும் அயற்றளையும் விரவி வருதலும் ஆகிய இவ்வாற்றான் ஆசிரியத்தோடு ஒத்தலும், அயற்பாவினால் இறுதலும், புறநிலைவாழ்த்து முதலிய பொருள்கள்மேற் செல்லாமையும், வணிகர் குலத்தினதாகலும், துள்ளலோசைத்தாகலும் நோக்கிக் கலிப்பா ஆசிரியத்தின் பின் வைக்கப்பட்டது.

புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கள்மேல் புகாமையும் அயல்தளையும் அயலடியும் விரவி வருதலும் அயற்பாவினால் இறுதலும் என்றிவற்றால் கலிப்பாவினோடு ஒத்தலும், நாற்சீரடியால் வாராமையும், வேளாளர் குலத்தினதாகலும், தூங்கலோசைத்தாகலும் அகப்பொருள்மேல் அருகியன்றி வாராமையும் உடைமை நோக்கிக் கலிப்பாவின்பின் வஞ்சிப்பா வைக்கப்பட்டது.

**வெண்பா ஆறுவகை –**

குறள், சிந்து, இன்னிசை, நேரிசை, சவலை, பஃறொடை என வெண்பா ஆறு வகைப்படும். ஈரடியுடையது குறள்; இரு குறள் கொண்டது சவலை; இருகுறளும் இடையே தனிச் சொல்லும் பெறுவது நேரிசை; நாலடியும் விகற்பநடை பெற்று வருவது இன்னிசை; நேரிசை இன்னிசை போல மூவடியால் வருவது சிந்து; நாலடியின் மிக்கு வருவது பஃறொடையாம்.(தொ. வி. 222)

**வெண்பா இயல் –**

வேற்று வண்ணம் விரவாது தூய்மை பெற்ற வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளும் சிறப்புடைத்து. அவ்வாறே வேற்றுத்தளையும் அடியும் விரவாது தூய்மை

*பெற்று எல்லாப் பாவினுள்ளும் சிறப்புடைத்தாதலின் வெள்ளை என்பது, திருவே போல்வாளைத் 'திரு' என்றாற் போலக் காரணம் பற்றி வந்த பெயராம். இதனைப் பாடுதல் அருமை நோக்கி வன்பா என்றும் கூறுவர். இது வேதியர் வருணத்தை ஒத்தது என்ப. இதன் ஓசை செப்பலோசையாம்.*

*(யா. க. 55 உரை)*

**வெண்பா இனங்களின் தொகை வகை விரி –**

*வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்ற மூன்றும் தொகை. வெள்ளொத்தாழிசை, வெண்டாழிசை, ஒரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை, அடிமறி மண்டில வெளிவிருத்தம், நிலைவெளிவிருத்தம் என்ற ஆறும் வகை.*

*இவற்றுள் வெள்ளொத்தாழிசைக்கண், சிறப்புடைய வெண்சீர் வெண்டளை, சிறப்பில்லாத வெண்சீர் வெண்டளை, சிறப் புடைய இயற்சீர் வெண்டளை, சிறப்பில்லாத இயற்சீர் வெண் டளை என்ற நான்கு தளைகளே வரும்.*

*ஏனைய வெண்டாழிசை முதலிய ஐந்தன்கண்ணும் சிறப்புடைய நேரொன்றாசிரியத்தளை, சிறப்பில்லாத நேரொன்றா சிரியத்தளை முதலாகச் சிறப்புடையன சிறப் பில்லன என இரு கூறுபட்ட ஏழுதளைகளும் பதினான்காக வரவே, அவற்றொடு வெண்டாழிசை முதலிய ஐந்தனையும் உறழ, அவை எழுபது எனக் கூறுபடும். வெள்ளொத் தாழி சையின் கூறு நான்கனையும் கூட்ட, வெண்பாஇனங்களின் விரி தளைகளையொட்டி 74 ஆகக் கூறுபடும்.(யா. க. 68 உரை)*

**வெண்பா உரிச்சீர் –**

*இயலசையானாகிய இயற்சீர் இறுதிக்கண் நேரசை வந்து நிற்பின் நேர்நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர், நிரை நேர் நேர் என்ற நான்கு வெண்பா உரிச்சீர்கள் தோன்றும். இவை முறையே தேமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், புளிமாங்காய் என வாய்பாடு பெறும். (தொ. செய். 19 நச்.)*

*இனி, யா.க. 12 உரையுட் கண்டது வருமாறு :*

**சீர்கள் – வாய்பாடுகள்**

*நேர் நேர் நேர் - தேமாங்காய், பூவாமா, பொன்னாக்கும், தென்மேற்கு, வேய்மென்தோள்.*

*நிரை நேர் நேர் - புளிமாங்காய், விரிபூமா, பொருளாக்கும், வடமேற்கு, வளைமென்தோள்.*

*நிரை நிரை நேர் - கருவிளங்காய், நறுவடிமா, பொருள் பெருக்கும், வடகிழக்கு, வளைகெழுதோள்.*

*நேர் நிரை நேர் - கூவிளங்காய், பூவிரிமா, பொன்பெருக்கும் , தென்கிழக்கு, வேய்கெழுதோள்.*

*இவ்வெண்பா உரிச்சீர் காய்ச்சீர் எனவும் படும்.*

**வெண்பா ஐந்து வகை –**

*குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்பன.*

*(யா. கா. 24, 25)*

**வெண்பாப் போலி –**

*1) நடுவு தனிச்சொல் இன்றி மூன்றாமடி குறைந்தும், 2) முதலடியும் மூன்றாமடியும் குறைந்து, ஏனையடிகள் நீண்டு, மேலிரண்டடியும் ஓரெதுகையாயும் கீழிரண்டடியும் ஓரெ துகையாயும், 3) தனிச்சொல் இன்றியும், பதினைந்து சீரும் பதினான்கு சீரும் பெற்று வெண்டளை பிறழாமல் ஈற்றுச்சீர் நாண் மலர் காசு பிறப்பு எனும் வாய்பாடு பிழையாது நான்கடியால் வருவன எல்லாம் வெண்பாப் போலியாம்.*

எ-டு : *‘வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை;*
*அளந்தன போகம் அவரவ ராற்றான்;*
*விளங்காய் திரட்டினா ரில்லை;*
*களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்’* (நாலடி. 103)

2) *‘கடற்குட்டம் போழ்வர் கலவர்*
*படைக்குட்டம் பாய்மா வுடையான் உடைக்கிற்கும் தோமில்*
*தவக்குட்டம் தன்னுடையா னீந்தும்*
*அவைக்குட்டம் கற்றான் கடந்து விடும்.’* (நான்மணிக். 16)

*இவையிரண்டும் 15 சீர்கள் உடையன.*

3) *‘கறைப்பற் பெருமோட்டுக் காடுகிழ வோட்கொத்*
*தறைத்திருந்த சாந்துகொண் டப்பேய்*
*மறைக்குமாம் காணாது வன்பேய்தான் கையைக்*
*குறைக்குமாம் கூன்கத்தி கொண்டு.’*

*இது 14 சீர்கள் உடையது.* *(வீ. சோ. 127 உரை)*

**வெண்பா யாப்பின –**

*நெடுவெண்பாட்டு குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் என்பன வெண்பா என்னும் உறுப்பான் யாக்கப்படுவன.*

*‘முன்னைய நான்கும்’ (தொ.பொ. 53 நச்.) என்ற அகத்திணை யியற் கைக்கிளையும், ‘கடவுளும் வரையார்’ (தொ.பொ.83) என்ற*

*உம்மையால் கொண்ட புறத்திணையியற் கைக்கிளையும் போல்வன வெண்பா யாப்பான் வரும்.*

*காமஞ் சாலா இளமையோள்வயின் கைக்கிளையும் (தொ. பொ. 50 நச்.), 'கைக்கிளை வகையோடு' (தொ.பொ. 90) என்ற கைக்கிளையும், கடவுட் கைக்கிளை அல்லாக் கைக்கிளையும் வெண்பா யாப்பான் வாரா. (செய். 118 நச்.)*

*நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள், நான்கடியான் வரும் சமநிலை வெண்பாக்கள் என்பன எல்லாம் ஓசையான் ஒக்குமாயினும், அளவானும் தொடையானும் பொருளானும், இனத்தானும் வேறுபடுத்திக் கூறப்பட்டன.*

*நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு என்பன அளவு பற்றிய பெயர். கைக்கிளை என்பதும், அங்கதம் என்பதும் பொருளா னாகிய பெயர். இவை ஓரினம். பரிபாட்டாவது பரிந்து பாடும் பாட்டு; அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பலவெண்பாவுமாகிப் பல உறுப்புக்களொடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது; இவை தொடையான் வேறுபட்டன. (தொடையாவது ஈண்டு அடியெதுகை.)*

*இவை போல்வன எனவே, அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடாத நான்கடி வெண்பாக்களாகிய சமநிலை வெண்பாக்களும் கொள்ளப்படும்.(செய். 114 இள.)*

**வெண்பா விருத்தம் –**

*வெளிவிருத்தம்; வெண்பா இனங்களுள் ஒன்று.*

*இது மூன்றடியானும் நான்கடியானும் வரும். ஒரே சீர் தனிச்சீராய் நான்கு சீர்களுக்கும் புறம்பாய் அடிதோறும் ஐந்தாம் சீராக வரும். எனவே, வெளிவிருத்தத்தின் எல்லா அடிகளும் சமமான ஐஞ்சீரடிகளே. இதற்கு வெண்டளையே வருதல் வேண்டும் என்ற நியதி இல்லை. அடிதோறும் பொருள் முடிந்துவிடின், அஃது அடிமறி மண்டில வெளி விருத்தம் எனப்படும். அடிதோறும் பொருள் முடியாதன நிலைவெளிவிருத்தம் எனப்படும். மூன்றடி வெளிவிருத்தம் சிந்தியல்வெண்பாவின் இனம். நான்கடி வெளிவிருத்தம் தனிச்சொல்லுடைமையால் நேரிசைவெண்பாவின் இனம்.*

*எ-டு : 'உற்ற படையினார் பெற்ற பகையினார் - புறாவே!*
*பெற்ற முடையார் பெருஞ்சிறப் பாண்டகை - புறாவே!*
*மற்றை யவர்கள் மனையிற் களிப்பதோ - புறாவே!'*

இஃது அடிதோறும் பொருள் முடிதலின் அடிமறி மண்டில வெளிவிருத்தம். இது மூன்றடியா னமைந்தது.

*'சேயரி நாட்டமும் செவ்வாயும் அல்குலுமோ - அம்மானாய்!*
*ஆய் மலரும் தொண்டையும் ஆழியந் திண்டேரும் - அம்மானாய்!*
*மாயிருந் தானை மயிடன் தலையின்மேல் - அம்மானாய்!*
*பாயின சீறடிப் பாவை பகவதிக்கே - அம்மானாய்!'*

இஃது அடிதோறும் பொருள் முடியாது தொடர்ந்து வந்தமையின் நிலை வெளிவிருத்தம். இது நான்கடியான் அமைந்தது. (யா. க. 68 உரை)

**வெண்பாவில் ஆசிரிய அடி --**

வெண்பாவினுள் ஆசிரியஅடி முழுதும் தன் தளையொடு வாராது; கலிக்கும் பரிபாடற்கும் உறுப்பாய் வரும் வெண்பாக் களில் சிறிது வரும். வெண்பாக்களில் ஆசிரியத்தளை வரின், அவை வெண்பா ஆகாது வெள்ளைக் கொச்சகமாகிவிடும். (தொ. செய். 62 நச்.)

**வெண்பாவில் பிறதளை --**

வெண்பாவினுள், மூவசைச்சீரின் ஒரு கூறாகிய காய்ச்சீர் இறுதி நேர் வரும் சீர் முதலசையோடு ஒன்றி வரும் வெண்சீர் வெண்டளையும், ஈரசைச் சீராகிய இயற்சீர் வருஞ்சீர் முதலசையொடு மாமுன் நிரையும் விளமுன் நேருமாக விகற்பித்து வரும் இயற்சீர் வெண்டளையும் அன்றிப் பிற தளைகள் வருதல் கூடாது. வரின், வெண்பா என்ற பெயரே சிதைந்துவிடும்.

'கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்' என்ற வெண்பா அடியுள் 'கோவின்மையோ' என நான்கசைச் சீர் வருதலும், அது கொண்டு தளைகோடலும் தவறு என்று நீக்கப்படும். வேற்றுத்தளை விரவிய வெண்பா சான்றோர் செய்யுளுள் யாண்டும் காணப்பெறாமையின் வெண்பாவுள் பிறதளை விரவுதல் கூடாது என்பது. கொச்சக வெண்பாக் களில் பிறதளை விரவி வருதல் காணப்படும்.(யா. க. 22 உரை)

**வெண்பாவில் முச்சீரடி நாற்சீரடி --**

வெண்பாவின் இறுதியடி முச்சீர்த்தாய் வரும். அவற்றுள் மூன்றாம் சீர் இயலசை உரியசைச் சீர்களாகிய நேர் - நிரை - நேர்பு - நிரைபு - இவற்றுள் ஒன்றாகவே இருக்கும்.

வெண்பாவின் ஏனைய அடிகள் நாற்சீரடிகளே.

சிறுபான்மை ஈற்றடி நாற்சீரான் வருதலும், சிறுபான்மை முதலடி இடையடிகளும் முச்சீரான் வருதலும் ஒரோவழிக் காணப்படும்.

எ-டு : *'அறையருவி யாடாள் தினைப்புனமும் காவாள்*
*பொறையுயர் தண்சிலம்பின் பூந்தழையும் கொள்ளாள்*
*உறைகவுள் வேழமொன் றுண்டென்றாள் அன்னை*
*மறையறநீர் வாழிய மணிநெடுங் குன்று.'*

இது வெண்பாவின் ஈற்றடி நாற்சீரான் வந்தது.

*'நாளுமொன் றீயாப் பகலும்*
*பகாஅஅ நண்புடைக் கேளிர்ப் பிரித்தலும்*
*தகாஅன் இவனென்னும் சொல்லுமிம் மூன்றும்*
*வகாஅ தொழிக எமக்கு'*

இது வெண்பாவின் முதலடி முச்சீரான் வந்தது.

*'அட்டாலும் பால்சுவையிற் குன்றா(து) அளவளாய்*
*நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்.' (மூதுரை)*

இது வெண்பாவின் இடையடி முச்சீரான் வந்தது. இங்ஙனம் வெண்பாவின் முதலிலும் இடையிலும் முச்சீரடி வரும் செய்யுள்களைப் பிற்காலத்தார் ஆரிடச் செய்யுள் என்று கூறி வழுவமைத்தல் வேண்டா. (தொ. செய். 72 நச்.)

**வெண்பாவில் மோனை விகற்பங்கள் –**

இணைமோனை : *'**வே**ண்டுதல் **வே**ண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு' (கு. 4)*

பொழிப்பு மோனை : *'**த**ம்மை இகழ்ந்தமை **தா**ம்பொறுப்ப தன்றியுமற்(று)'* நாலடி. *58)*

*'**பு**ல்லி விடாஅப் **பு**லவியுள் தோன்றுமென்' (கு. 1324)*

ஒரூஉ மோனை : *'**கு**ற்றமே காக்க பொருளாக; **கு**ற்றமே (கு. 434)*

கூழை மோனை : *'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்' (கு. 350)*

*'இனியர் இவரெமக்(கு) இன்னம்யாம் என்று' (கு. 790)*

மேற்கதுவாய்மோனை : *'**அ**ழிவந்த செய்யினும் **அ**ன்பறார் **அ**ன்பின்' (கு. 807)*

கீழ்க்கதுவாய் மோனை : *'அற்றால் **அ**ளவறிந் துண்க **அ**ஃதுடம்பு' (கு. 944)*

முற்றுமோனை : '**க**ற்க **க**சடறக் **க**ற்பவை **க**ற்றபின்' (கு. 391)

(தொ. செய். 92 நச்.)

**வெண்பாவிற்கு நூற்றெண்பத்தோரடிகள் உரியவாதல் –**

வெண்பாஅடிகள் 7 எழுத்திலிருந்து 14 எழுத்து முடிய உயரும்.

7 எழுத்தடி 14 எழுத்து முடிய உயர்ந்தால் வரும் வெண்பாஅடிகள் - 8

8 எழுத்தடி 14 எழுத்து முடிய உயர்ந்தால் வரும் வெண்பாஅடிகள் - 7

9 எழுத்தடி 14 எழுத்து முடிய உயர்ந்தால் வரும் வெண்பாஅடிகள் - 6

10 எழுத்தடி 14 எழுத்து முடிய உயர்ந்தால் வரும் வெண்பாஅடிகள் - 5

1. நுந்தை, வண்டு, ஞாயிறு, போதுபூ, போரேறு என்னும் இவ்வைந்து சீரும் (முதற்சீராக நிற்பின்) 8 அடிபெறுவன (5 x 8) 40 ஆம்.

2. தேமா, மின்னு, வரகு, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய் என்னும் இப்பதினொருசீரும் (முதற்சீராக நிற்பின்) 7 அடி பெறுவன (11 x 7 =) 77 ஆம்.

3. புளிமா, அரவு, கணவிரி, காருருமு, பெருவேணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய் என்னும் இவ்வொன் பது சீரும் (முதற்சீராக நிற்பின்) 6 அடி பெறுவன ( 9 x 6 = ) 54 ஆம்.

4. நனிமுழவு, புலிவருவாய் என்னும் இவ்விரண்டுசீரும் (முதற்சீராக நிற்பின்) 5 அடி பெறுவன (2 x 5 = ) 10 ஆம்.

7 முதல் 14 எழுத்து முடிய உயரும் 8 வெண்பா அடிகள் வருமாறு.

நுந்தை வரகு வரகு வரகு - 7 எழுத்துக்களானாகிய அடி.

நுந்தை வரகு வரகு கடியாறு - 8 எழுத்துக்களானாகிய அடி.

நுந்தை வரகு வரகு கணவிரி - 9 எழுத்துக்களானாகிய அடி.

நுந்தை வரகு புளிமா கணவிரி - 10 எழுத்துக்களானாகிய அடி.

நுந்தை புளிமா புளிமா கணவிரி - 11 எழுத்துக்களானாகிய அடி.

*நுந்தை புளிமா கணவிரி காருருமு - 12 எழுத்துக்களானாகிய அடி.*

*நுந்தை கணவிரி காருருமு காருருமு- 13 எழுத்துக்களானாகிய அடி.*

*நுந்தை நனிமுழவு காருருமு காருருமு - 14 எழுத்துக்களானாகிய அடி.*

'வண்டு' என முதற்சீர் குற்றுகர ஈறாக நிற்பினும் இது பொருந்தும். இனி, 'ஞாயிறு' முதற்சீராக நிற்ப வருமாறு :

*ஞாயிறு வண்டு வரகு வரகு - 7 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு வண்டு வரகு கடியாறு - 8 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு வண்டு வரகு கணவிரி - 9 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு வண்டு புளிமா கணவிரி - 10 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு வண்டு கணவிரி காருருமு - 11 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு தேமா கணவிரி காருருமு - 12 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு தேமா புலிவருவாய் காருருமு - 13 எழுத்துக்களானாகிய அடி.*

*ஞாயிறு காருருமு மாவருவாய் காருருமு - 14 எழுத்துக் களானாகிய அடி.*

போதுபூ, போரேறு எனுமிவை முதற்சீராக நிற்பினும் இது பொருந்தும்.

இவ்வாற்றான் வரும் வெண்பா அடிகள் 5 x 8 = 40 ஆம்.

2. 8 முதல் 14 எழுத்து முடிய உயரும் 7 வெண்பா அடிகள் வருமாறு :

*தேமா வரகு வரகு வரகு - 8 எழுத்துக்களானாகிய அடி.*

*தேமா வரகு வரகு கடியாறு - 9 எழுத்துக்களானாகிய அடி.*

*தேமா வரகு வரகு கணவிரி- 10 எழுத்துக்களானாகிய அடி.*

*தேமா வரகு புளிமா கணவிரி - 11 எழுத்துக்களானாகிய அடி.*

*தேமா புளிமா புளிமா கணவிரி - 12 எழுத்துக்களானாகிய அடி.*

*தேமா புளிமா கணவிரி காருருமு - 13 எழுத்துக்களானாகிய அடி.*

தேமா நனிமுழவு காருருமு பாதிரி - 14 எழுத்துக்களானாகிய அடி.

மின்னு, வரகு எனுமிவை முதற்சீராக நிற்பினும் இது பொருந்தும்.

வலியது வண்டு வரகு வரகு - 8 எழுத்துக்களானாகிய அடி.

வலியது வண்டு வரகு வலியது - 9 எழுத்துக்களானாகிய அடி.

வலியது வண்டு வலியது பாதிரி - 10 எழுத்துக்களானாகிய அடி.

வலியது வண்டு வலியது காருருமு - 11 எழுத்துக்களானாகிய அடி.

வலியது வண்டு கணவிரி காருருமு - 12 எழுத்துக்களானாகிய அடி.

வலியது தேமா கணவிரி காருருமு - 13 எழுத்துக்களானாகிய அடி.

வலியது காருருமு காருருமு பாதிரி - 14 எழுத்துக்களானாகியஅடி.

ஏனையவற்றையும் ஏற்குமாறு இவ்வாறொட்டவே, இவ்வாற் றான் வரும் வெண்பா அடிகள் 11 x 7= 77 ஆகும்.

3) 9 முதல் 14 எழுத்து முடிய உயரும் 6 வெண்பாக்கள் வருமாறு:

புளிமா வரகு வரகு வரகு - 9 எழுத்துக்களாலாகிய அடி.

புளிமா வரகு வரகு கடியாறு - 10 எழுத்துக்களானாகிய அடி.

புளிமா வரகு புளிமா கடியாறு - 11எழுத்துக்களானாகிய அடி.

புளிமா வரகு புளிமா கணவிரி - 12 எழுத்துக்களானாகிய அடி.

புளிமா புளிமா புளிமா கணவிரி- 13 எழுத்துக்களானாகிய அடி.

புளிமா புலிவருவாய் காருருமு தேமா - 14 எழுத்துக்களானாகிய அடி.

'அரவு' என முதற்சீர் நிற்பினும் இது பொருந்தும்.

கணவிரி வண்டு வரகு வரகு - 9 எழுத்துக்களானாகிய அடி.

கணவிரி வண்டு வரகு கடியாறு - 10 எழுத்துக்களானாகிய அடி.

கணவிரி வண்டு புளிமா கடியாறு - 11 எழுத்துக்களானாகிய அடி.

கணவிரி வண்டு புளிமா கணவிரி - 12 எழுத்துக்களானாகிய அடி

*கணவிரி தேமா வரகு கணவிரி - 13 எழுத்துக்களானாகிய அடி.*

*கணவிரி காருருமு காருருமு தேமா - 14 எழுத்துக்களானாகிய அடி.*

*ஏனையவற்னையும் ஏற்குமாறு ஓட்டவே, வரும் வெண்பா அடிகள் 9 x 6 = 54 ஆகும்.*

*4) 10 முதல் 14 எழுத்து முடிய உயரும் 5 வெண்பா அடிகள் வருமாறு:*

*நனிமுழவு வண்டு வரகு வரகு - 10 எழுத்துக்களானாகிய அடி.*

*நனிமுழவு வண்டு வரகு கடியாறு - 11 எழுத்துக்களானாகிய அடி.*

*நனிமுழவு வண்டு வரகு கணவிரி - 12 எழுத்துக்களானாகிய அடி.*

*நனிமுழவு காருருமு வண்டு புளிமா - 13 எழுத்துக்களானாகிய அடி.*

*நனிமுழவு காருருமு பாதிரி தேமா - 14 எழுத்துக்களானாகிய அடி.*

*புலிவருவாய் என முதற்சீர் நிற்பினும் இது பொருந்தும். இவ்வாற்றான் வரும் வெண்பா அடிகள் 2 x 5 = 10 ஆம்.*

*ஆகவே, வெண்பாவிற்குரிய அடிகள் 40 + 77 + 54 + 10 = 181 ஆமாறு அறியப்படும்.*

*இவற்றுள் 7 எழுத்துக்களானாகிய அடி (5) தன்னொடு தன்னைத் தொடுக்குமிடத்தே தளை வழுவுதலின், அது நீக்கிக் கொள்ளப்படும். பிறவும் இவ்வாறே தளை வழுவாது தொடுக்கப்படும். (தொ. செய். 50 பேரா.)*

*இனி **நச்சினார்க்கினியர் உரையுள்** கண்டவாறு:*

*வெண்பாவிற்கு இயற்சீர் 19; வெண்சீர் 4; அசைச்சீர் 4; ஆக, சீர்கள் 27. வெண்பா அடிகள் 7 முதல் 14 எழுத்து முடிய உயரும். அவ்வாறு உயர்கையில் 8 வகை அடியாம். 14 எழுத்தளவின் மிக உயரின் அவ்வடி செப்பலோசை சிதையும் ஆதலின், அது கட்டளைவெண்பாஅடிக்கு ஆகாது.*

*ஆகவே, 7 எழுத்துஅடி முதல் 10 எழுத்து அடி முடிய நின்ற நான்கடிகளும், 14 எழுத்தளவாக ஏறியக்கால் வரும் அடி களின் கூடுதல் முறையே 8, 7, 6, 5 என 26 ஆம். அடிதோறு முள்ள*

*நாற்சீர்களான் உறழ்ந்தால் பெறும் கூடுதல் 26 x 4 = 104. முற்றியலுகரம் காரணமாக இருநிலைமைப்பட்ட இயற்சீர் 9, அசைச்சீர் 2 என இந்த 11 சீர்களையும், 8 முதல் 14 எழுத்து வரை உயரும்போது கிட்டும் 7 அடிகளோடும் உறழ வரும் வெண்பா அடிகள் 11 x 7 = 77 ஆம். ஆகவே, 104 + 77 = 181 வெண்பா அடிகள் என்றவாறு. ( 7எழுத்தாலாகிய அடி தன்னொடு தன்னைத் தொடுக்குமிடத்தே தளை வழுவுதலின், நீக்கப்பட்டது. அவ்வாறே தளை வழுப்படும் அடிகளும் நீக்கப்படும்.) (தொ. செய். 50)*

**வெண்பாவிற்குரிய சீர்கள் –**

*வெண்பாவிற்கு இருவகை இயற்சீர் பத்தும், வெண்சீர் நான்கும், அசைச்சீர் இரண்டும் எனப் பதினாறு சீர்களும் அடி உறழும் சீர்களாம். (தொ. செய். 28 நச்.)*

**வெண்பாவிற்குரிய நிலம் –**

*வெண்சீர் முதற்சீராக நிற்ப, வெண்சீரே அடியிலுள்ள ஏனைய மூன்று சீர்களாக வந்து ஒன்றிய வெண்சீர் வெண் டளை துள்ளலோசைக்கும் ஒப்ப உரியதாகலின் அத்தகைய வெண்டளையும் இயற்சீர் ஒன்றிய ஆசிரியத் தளையும் நீக்கி, இயற்சீர் ஒன்றாத இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் இயற்சீரொடு (தேமா, கூவிளம்) தட்ட வெண்சீர் வெண்டளையும் கொண்டு இயங்கும் கட்டளை வெண்பாவிற்குச் சிந்தடி மூன்றும் அளவடி ஐந்தும் ஆகிய 7 முதல் 14 எழுத்து முடிய உள்ள எட்டு நிலங்களும் உரியனவாம்.*

எ-டு : *'நின்று நினைந்து நெடிது பெயர்ந்து'* - ஏழ் எழுத்தடி

*இதன்கண், அசைச்சீர் நான்கும் இயற்சீராய் நின்றன. நேர்பு, நிரைபு, நிரைபு, நிரைபு என்ற நான்கும் நேர் நேர், நிரைநேர், நிரைநேர், நிரைநேர் எனச் சீர்நிலை எய்தின.*

*'கற்றவரைச் சேர்வர் கலைநிறையும் காட்சியார்'* - 14 எழுத்தடி. 8 முதல் 13 எழுத்து முடிய இடைப்பட்ட அடிகளும் கொள்ளப்படும்.

*கட்டளைவெண்பாவின் ஈற்றடி 7 முதல் 9 எழுத்து அள வினதாதல் வேண்டும்.*

*'வானவரும் நான்முகனும் வாசவனு மாமுனிவர்'*

*இது 16 எழுத்துடைய சீர்வகை அடிவெண்பாவாம்.*

*பின்னுள்ளோர் கூறும் ஏந்திசைச் செப்பலடி எழுத்து மிகுதற்கும் உரித்தாதலின் கட்டளைவெண்பாவிற்கு ஏலாது.*

*ஏனைய ஒழுகிசைச் செப்பலும் தூங்கிசைச் செப்பலும் 14 எழுத்தின் இகந்து வாராமையின் கட்டளைவெண்பா அடிக்கு ஏற்கும். (தொ. செய். 58 நச்)*

**வெண்பாவின் அளவு –**

*குறுவெண்பாட்டு - 2 அடி, 3 அடி யுடையது*

*அளவடிவெண்பா - 4 முதல் 6 அடிகாறும் நடப்பது.*

*நெடுவெண் பாட்டு - 7 முதல் 12 அடிகாறும் நடப்பது.*

*இவற்றுள், குறள்வெண்பாவாகிய ஈரடி வெண்பாவும், 4 அடி அளவியல்வெண்பாவுமே பெரும்பான்மைய.*

*(தொ. செய். 158 நச்.)*

*யா.க. 58 உரை : குறள்வெண்பாவினை ஓரடி முக்கால் எனவும், சிந்தியல்வெண்பாவினை ஈரடிமுக்கால் எனவும், நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடி முக்கால் எனவும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்கால் எனவும், பஃறொடை வெண்பாவினைப் பலவடிமுக்கால் எனவும் ஒருசார் ஆசிரியர் வழங்குவர்.*

**வெண்பாவின் இறுதிச்சீர்கள் சிறப்புடையனவும் சிறப்பல்லனவும்–**

*வெண்பாவின் இறுதிச்சீர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நான்கு ஓரசைச் சீர்களுள் ஒன்றாக அமையும்.*

எ-டு : *'கையொத்து நேர்கூப்பு க' (பு.வெ.மா. கடவுள்.) - நேர்*
*'நற்றாள் தொழாஅ ரெனின்' (கு. 2) - நிரை*
*'சாந்துணையும் கல்லாத வாறு' (கு. 397) - நேர்பு*
*'பற்றுக பற்று விடற்கு' (கு. 350) நிரைபு*

*இவற்றுள் ஈற்றுச்சீர் நிரையசையாகவோ நிரைபசையாகவே வரின், ஈற்றயல் சீர் தேமா, புளிமா என்ற நேர்நேர் நிரைநேர் இவற்றுள் ஒன்றாகவே இருத்தல் வேண்டும் என்பது.*

*நேரும் நேர்புமாக இற்ற சீர்கள் கருவிளம் கூவிளம் என்ற நிரைநிரை நேர்நிரை ஆகிய ஈற்றயல் சீர்களோடு இணைந்து தளை கொள்ளும். சிறுபான்மை வெண்சீர்களும் ஈற்றயற் சீர்களாக வரும்.*

*முச்சீரடியின் முதற்சீர்க்குத் தளையினை ஆசிரியர் கூறவில்லை. ஏனெனின், முச்சீரடியின் முதற்சீரும் இரண்டாம் சீரும் தளைவகையானும் வரலாம்; தளைவகையின்றியும் வரலாம்.*

எ-டு : *'கோட்டுமண் கொள்ளா முலை* (முத்தொள்) } *தளைவகை*
*காய்சினவேற் கோதை களிறு'* (முத்தொள்) } *யான் வந்தன*

*'உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்*
*செறாஅய் வாழியென் நெஞ்சு.'* (கு. 1200)
*'செறாஅய் வாழியென்' - நேரொன்றாசிரியத்தளை.*

*'கலாஅற் கிளிகடியும் கானக நாட*
*இலாஅர்க் கில்லை தமர்.'* (நாலடி. 283)

'இலாஅர்க் கில்லை' - நேரொன்றாசிரியத்தளை.

இவை தளைவகை யின்றி வந்தன. (பேரா.)

(இவற்றை 'செறாஅஅய்' 'இலாஅஅர்க்' என நான்கு மாத்திரையாக்கித் தளைவகை பிழையாமல் வந்ததாகவே கொள்வர். தொ. செய். 73, 74, 75 நச்., 74 பேரா.)

இனி, யா. க. 57 கூறுவன வருமாறு :

வெண்பாவின் ஈற்றுச்சீர் நேரசையாயின் அதன் வாய்பாடு நாள். இந்நேரசை பெரும்பாலும் தனி நெட்டெழுத்தாக வருவதே சிறப்பு; குற்றெழுத்தாக வருவது சிறப்பின்று. நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒற்றடுத்தும் வரும்.

எ-டு : *'தாவாத மாதவா நீ'*
*'வாலெயி றூறிய நீர்'* (கு. 1121) இவை சிறப்புடையன
*'கையொத்து நேர்கூப்பு க'* (பு.வெ.மா. கடவுள்.)
*'கருமமே கட்டளைக் கல்'* (கு. 505) இவை சிறப்பில்லன.

வெண்பாவின் ஈற்றுச்சீர் நிரையசையாயின் குறிலிணையும் குறிலிணை ஒற்றும் வருதலே சிறப்பு; குறில் நெடிலும் குறில் நெடிலொற்றும் வருதல் சிறப்பின்று.

எ-டு : *'நினைப்பானை நீங்கும் திரு'* (கு. 519
*'நற்றாள் தொழாஅ ரெனின்'* (கு. 2) இவை சிறப்புடையன.
*'வேம்போஎன் வாயின் வினா'*
*'சொல்லாத சொல்லப் பெறார்'* இவை சிறப்பில.

ஈரசைச் சீர்களாகிய தேமா புளிமா ஆகிய காசு பிறப்பு என்ற வாய்பாட்டான் அமையும் ஈறுகள் முற்றியலுகர ஈற்றனவாக வருதல் சிறப்பின்று.

எ-டு : *'சாந்துணையும் கல்லாத வாறு'* (கு. 397) இவை சிறப்புடையன;
*'ஆக்கம் எவனோ உயிர்க்கு'* (கு. 31) குற்றுகர ஈற்றன.
*'புனைமலர்த்தா ரகலம் புல்லு'* இவை சிறப்பில்லன;
*'உள்ளத் தனைய துயர்வு'* (கு. 595) முற்றுகர ஈற்றன.

**வெண்பாவின் ஈற்றடி –**

வெண்பா ஈற்றடி சிந்தடியாம். அதன் இறுதிச்சீர் ஈரசைச் சீராகவோ அசைச்சீராகவோ வரும்.

*ஈற்றுச்சீர் அசைச்சீராக அமையுமிடத்தே, தனிக்குறிலினாகிய நேரசையும் நெட்டெழுத்தைக் கொண்ட நிரையசையும் வருதல் சிறப்பின்று. நேர் நேர், நிரை நேர் என்ற இயற்சீர்களே இறுதிச்சீராக வருதற்குரியன. அவையும் உகர ஈறாக அன்றி வாரா. அவற்றுள் குற்றியலுகர ஈறாய் வருதல் சிறப்புடைத்து; முற்றியலுகர ஈறு சிறப்பின்று. ஈற்றுச்சீர் இயற்சீராயின் உகர ஈறாகவே அமைதலின் தேமா புளிமா என்ற வாய்பாடுகளை நீக்கிக் காசு பிறப்பு என்ற வாய்பாடுகளே கொள்ளப்படும்.*

*நத்தத்தர், நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீர்க்கு மாவாழ்சுரம் புலிவாழ் சுரம் என்ற வாய்பாடுகள் இருப்பவும் ஒரு பய னோக்கித் தூஉமணி கெழுஉமணி என்ற வாய்பாடுகளையும் கொண்டார். அவர் போலவே, இந்நூலாசிரியரும், தேமா புளிமா என்ற வாய்பாடுகள் இருப்பவும், வெண்பாவின் ஈற்றுச்சீர்க்கு உகர ஈற்றவாகிய காசு பிறப்பு என்ற வாய்பாடு களையும் கொண்டார். (யா. க. 57 உரை)*

**வெண்பாவின் ஒன்பது வகை –**

*குறள், இருகுறள் நேரிசை, இருகுறள் ஆசிடை நேரிசை, ஆசிடை ஒரு விகற்ப இருவிகற்ப நேரிசை, இன்னிசை, நேரிசைச் சிந்தியல், இன்னிசைச் சிந்தியல், பஃறொடை, கலி என்பன. (சாமி. 156)*

**வெண்பாவின் பேரளவிற்கு எல்லை –**

*வெண்பாவின் பேரளவிற்கு எல்லை 7 அடிகளாம். 12 அடி பேரெல்லை என்பர் உரையாசிரியன்மார். 8 அடி முதலாகப் பயின்று வருவன கொச்சக வெண்பாக்களாக உள்ளமையா னும், 10 அடி முதலாகக் கலிவெண்பா வருதலானும், அங்கதப் பாட்டினை இவ்வெண்பா அளவோடு ஆசிரியர் மாட் டெறிந்து கூறுதலானும் ஏழடி என்றலே ஏற்புடைத்தாம்.*

*(தொ. செய். 157 ச. பால.)*

**வெண்பாவின் பொதுஇலக்கணம் –**

*செப்பலோசைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனைய அடிகள் நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளை தட்டு வேற்றுத்தளை விரவாது, ஈற்றடியின் இறுதிச்சீர் காசு பிறப்பு தோள் (நாள்) வளை (மலர்) என்ற வாய்பாட்டான் இறுவது; குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒற்றும் ஆய்தமும் அல்லாத எழுத்து ஏழுமுதலாகப் பதினாறின்காறும் உயர்ந்த பத்து நிலமும் பெற்ற நாற்சீரடிகளை முன்னடிகளாகக் கொண்டு, ஐந்தெழுத்துமுதல் பத்தெழுத்தின்காறும் உயர்ந்த ஆறு*

*நிலமும் பெற்ற முச்சீரடியை ஈற்றடியாகக் கொண்டு வருவது. (யா. க. 58 உரை)*

**வெண்பாவின் பொதுவகை நூற்றிருபது –**

*குறள், சிந்து, நேரிசை, இன்னிசை, பஃறொடை என வெண்பாவின் தொகை ஐந்து. இனக்குறள்வெண்பா, விகற்பக் குறள் வெண்பா, நேரிசைச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, ஒரு விகற்ப நேரிசைவெண்பா, இருவிகற்ப நேரிசை வெண்பா, ஒரு விகற்ப இன்னிசைவெண்பா, பல விகற்ப இன்னிசைவெண்பா, ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா, ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா என விகற்பிக்கப்* **பத்து வகையாம்**. *இவற்றை வெண்சீர் வெண்டளை யான் வருவன இயற்சீர் வெண்டளை வருவன என விகற்பிக்க* **இருபது வகைப்படும்.** *சிறப்புடைய வெண்சீர் வெண்டளை, சிறப்பில்லாத வெண்சீர்வெண்டளை, சிறப்புடைய இயற்சீர் வெண்டளை, சிறப்பில்லாத இயற்சீர் வெண்டளை என விகற்பிக்க,* **நாற்பது ஆம்**. *இவற்றை ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என்ற மூவசைச் செப்ப லோசையோடும் உறழ, விரி 120 ஆம் மற்றும் பலவகையானும் விகற்பிக்கப் பலவாம். (யா. வி. பக். 251)*

**வெண்பாவின் மூவகை ஓசை பற்றி ஒருசாரார் கூற்று –**

*செப்பல், வெண்கூ, அகவல் என்னும் மூவோசை உடைத்து வெண்பா.*

*1) செப்பல் வெண்பா என்பது எழுசீரால் நடப்பது.*

எ-டு : *‘சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்*
*காக்க மெவனோ உயிர்க்கு.’* (கு. 31)

*2) வெண்கூ வெண்பா என்பது நேரிசை வெண்பா இனவெழுத்து மிக்கு நடப்பது.*

எ-டு : *‘தண்டடைந்த திண்டோளாய்! தாங்கலாம் தன்மைத்தோ*
*கண்டடைவார் தம்மைக் கனற்றுமா - வண்டடைய*
*நாணீலம் நாறுந்தார் நன்னன் கலைவாய*
*வாணீலக் கண்ணார் வடிவு.’*

*வெண்சீர் மிக்கு வருதலின் இவ்வெண்பா எழுத்து மிக்கு நடப்பதாயிற்று.*

*3) இனி, அகவல் வெண்பாவாவது இன்னிசை வெண்பா.*

எ-டு : *‘வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்*
*வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்*
*வைகலும் வைகல்தம் வாணாள்மேல் வைகுதல்*
*வைகலை வைத்துணரா தார்.’* (நாலடி. 39) (யா. வி. பக். 228, 229)

**வெண்பாவின் வகை –**

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று வெண்பா ஐந்து வகைப்படும். 'வெண்பாவின் அளவு' காண்க.

செப்பலோசையிற் சிறிது சிதைந்த பஃறொடை வெண்பா வினைக் கலிவெண்பாவாகவும், அல்லாத வெண்பாக்களது சிதைவினை ஒருபுடை ஒப்புமை நோக்கித் தத்தம் இனமாக வும் கொண்டு வழங்குவர். (யா. க. 58 உரை)

**வெள்ளடி –**

வெண்பாவிற்குரிய அடி. அவை அளவடியும் சிந்தடியுமாம். (தொ. செய். 62, 153 நச்.)

**வெள்ளை விருத்தம் –**

'வெண்பா விருத்தம்' காண்க.

**வெள்ளொத்தாழிசை –**

சிந்தியல் வெண்பா ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவன; வெண்பாவின் இனமாகிய தாழிசை வகைகளுள் ஒன்று. (யா. க. 66)

எ-டு : *'அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே*
*கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்*
*வம்பே இறந்து விடல்.*

*'வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே!*
*நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்*
*வீணா இறந்து விடல்.*

*'கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே!*
*ஆளாக ஆண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்*
*வாளா இறந்து விடல்'* (சி. செ. கோ. 34)

**வெள்ளோசை –**

வெண்பாவிற்குரிய செப்பலோசை; இது வெண்டளையால் நிகழ்வது.

**வெளி –**

வெண்பா (இலக். அக.)

**வெளிப்படை –**

அறம் முதலாய உறுதிப்பொருள் நான்கனிடத்தும், கைக்கிளை முதலான அகத்திணை ஏழும் வெட்சி முதலான புறத்திணை

ஏழும் என்னும் இப்பொருட்பாகுபாட்டுக்கு இயைய, அறவுரை அறிவுரை வாழ்த்துரை வசவுரை விருப் புரை வெறுப்புரை என்னும் அறுவகைப்படவரும் முறையான கருத்துக்களை வழங்குகையில், அவற்றின் பொருள் தேர்ந் துணர வேண்டுவ தின்றிக் கேட்ட மாத்திரையானே புலப் படுதல் வெளிப்படைச் செய்யுள் எனப்படும்.(தென். இயற். 43)

**வெளி விருத்தம் –**

'வெண்பா விருத்தம்' என்பதன் பிறிதொரு பெயர்; அது காண்க.

**வெறுத்திசைப்பு –**

ஓசைக்குற்றம் மூன்றனுள் ஒன்று. (ஏனையன : அறுத்திசைப்பு, அகன்றிசைப்பு என்பன); செவிக்கு இன்னாதாக இசைத்தல்.

எ-டு : *'சிறுநன்றி இன்றிவர்க்கியாம் செய்தக்கால் நாளை*
*பெறுநன்றி பின்னும் பெரிது.'*

இதன்கண், 'இன்றிவர்க்கியாம்' என்னும் சீர்க்கண் குற்றிய லிகரம் வந்து வெட்டென்று இன்னாங்கு இசைத்தமை வெறுத்திசைப்பாம். (யா. வி. பக். 425)

**'வேம்பும் கடுவும் போல' –**

முற்பருவத்துக் கைத்தும் துவர்த்தும் (-கடுத்தும்), பிற்பரு வத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும் போல; வேந்தற்குப் பாதுகாப்புத் தரும் அறிவுடையோர் சொற்களுக்கு உவமை.
(தொ. செய். 112)

**வேற்றொலி வெண்டுறை –**

முன் சில அடிகள் ஓரோசையாகவும், ஏனைய அடிகள் வேறோர் ஓசையாகவும் வரும் வெண்பா இனமாகிய வெண்டுறை.

எ-டு : *'முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகும் ஏவல்செய்ய*
*முறைசெய் கோமான்*

*வழங்குதிறல் வாள்மாறன் மாச்செழியன் தாக்கரிய*
*வைவேல் பாடிக்*
*கலங்கிநின் றாரெலாம் கருதலா காவணம்*
*இலங்குவா ளிரண்டினால் இருகைவீ சிப்பெயர்ந்(து)*
*அலங்கல்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்*
*புலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்*
*விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே.'*

*இஃது ஏழடியாய், முன்னிரண்டடியும் அறுசீராய் ஓரோசையால் வந்து, பின் ஐந்தடியும் நாற்சீராய் வேறோர் ஓசையால் வந்தமையால் வேற்றொலி வெண்டுறை.* *(யா. க. 67)*

**வைப்பு –**

*தரவு தாழிசைகளின் பொருள்களைக் கொண்டு தொகுத்து வைத்தலின், சுரிதகம் 'வைப்பு' எனப்பட்டது.*

*(தொ. செய். 136 நச்.)*

❖❖❖❖

# விருத்தம், வண்ணம்

# அ

**அசுவகதி விருத்தம் –**

*இஃது அடிக்குப் பதினாறு எழுத்துக்கள் கொண்ட வட மொழி விருத்தம். இதன் அமைப்பு, முதற்கண் குருவான கணம் ஐந்து வந்து ஈற்றில் ஒருகுரு வருதல்; மாத்திரைகள் 22 கொண்டது ஓரடி. (இந்த இலக்கணம் 'கொட்டுவ' என்ற பாடலில் ஒற்றுநீக்கிக் காண முற்றிலும் பொருந்தி நிற்கிறது.)*

*அ) முதல் நான்கு சீர்கள் குற்றெழுத்தீற்று 4 மாத்திரைக் கூவிளச்சீர்கள், 5 ஆம் சீர் 6 மாத்திரை கொண்ட தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய் இவற்றில் ஒன்று என்றமைந்த 5 சீரடி நான்கான் ஆயது.*

எ-டு : *'கொட்டுவ ரக்கரை யார்ப்பது தக்கைகு றுந்தாளன*
*விட்டுவ(ர்) பூதங்க லப்பில ரின்புக ழென்புலவின்*
*மட்டுவ ருந்தழ(ல்) சூடுவ(ர்) மத்தமு மேந்துவர்வான்*
*தொட்டுவ ருங்கொடி தோணிபு ரத்துறை சுந்தரரே'* (தே.1:117-5)
(வி. பா. பக். 55)

*விட்டுவ***ர்***, ருந்தழ***ல்***, சூடுவ***ர்** *- இம்மெய்கள் குறிலையடுத்து வரினும், குறிலை நெடில் ஆக்கா; 'பூதங்க' என்பதிலும் ஙகரஒற்று தனக்கு முன்னுள்ள எழுத்தை நெடிலாக்காது.*

*ஆ) இதே வகைப் பாவில் 5 ஆம் சீர் தேமாங்காயாகவே 6 மாத்திரை பெற்று 4 அடியிலும் வருமாறு அமைவது.*

எ-டு : *'கன்மிசை மஞ்ஞையி ருந்துக லாபம்வி ரித்தாட*
*வின்மணி சிந்தரு வித்திர டாழ்ந்துவி ழுந்தோற்ற*
*முன்னிய சேடன மஞ்ஞையை யஞ்சிமு ரன்றொரல்லை*
*தன்னுல கெய்துவ தன்மைத ருங்கயி லாயத்தில்'*

*இஃது ஓரெழுத்துக் குறையினும், மாத்திரை 22 பெற்றது ஒக்கும்.*

*(இ) புளிமா, கூவிளம், கூவிளம், கூவிளம் மாங்காய் அல்லது மாங்கனி அல்லது கூவிளங்காய் என அமைந்த 5 சீரடி நான்கான் அமைவது. முதற்சீர் 5 மாத்திரை, இறுதிச்சீர் 6 மாத்திரை, ஏனைய சீர்கள் 4 மாத்திரை.*

எ-டு : *'இலங்கைத் தலைவனை ஏந்திற் றிறுத்த திரலையின்னாள்*
*கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது*
*கலங்கிளர் மொந்தையி னாடுவர் கொட்டுவர் காட்டகத்துச்*
*சலங்கிளர் வாழ்வயற் சண்பையுள் மேவிய தத்துவரே'*
(தே 1 : 117 -9)

**அதிஉத்தம் –**

*சந்தம் எழுத்து வகையால் இருபத்தாறு பேதப்படுவன வற்றுள் அதியுத்தமும் ஒன்று.*

*'போதி, யாதி, பாத, மோது' என்றாற்போல வருவது இச்சந்தம். ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்யாவது அடியொன்றற்கு இரண்டெழுத்துப் பெறும் இச்சந்தம்.*
*(வீ. சோ. 139 உரை)*

**அதிகரணீ விருத்தம் –**

*அ) மூன்று புளிமாங்கனியும் ஒரு புளிமாவும் பெற்று அமையும் அடி நான்காகி வரும் விருத்த வகை இது. (வி. பா. 24 பக். 49)*

எ-டு : *'மயிலாலுவ குயில்கூவுவ வரிவண்டிசை முரல்வ;*
*மயில்பூவைகள் கிளியோடிசை பலவாதுகள் புரிவ;*
*அயில்வாள்விழி மடவாரென அலர்பூங்கொடி அசைவ;*
*வெயிலாதவர் புறமேகுற விரிபூஞ்சினை மிடைவ'* (விநாயக.)

*ஆ) மூன்று புளிமாங்கனிகளுக்கு ஈடாக முதலில் தேமாங்கனி அடுத்து இருபுளிமாங்கனிகளும் இறுதியில் புளிமாவும் அமையும் அடி நான்காகி வருவதும் அது.*

எ-டு : *'பூணித்திவை உரைசெய்தனை அதனாலுரை பொதுவே*
*பாணித்தது பிறிதென்சில பகர்கின்றது பழியால்*
*நாணித்தலை யிடுகின்றிலென் நனிவந்துல கெவையுங்*
*காணக்கடி தெதிர்குத்துதி யென்றான்வினை கடியான்'* கம்பரா. 7188

*இ) ஈற்றுச்சீர் புளிமாவுக்கு ஈடாகத் தேமா வர, மூன்று கருவிளங்கனிகளும் ஒரு தேமாவும் அமைந்த அடி நான்காகி வருவதும் அது*

எ-டு : *'எழுதுருவின எழுதளிரன இணரணிவன இரதம்*
*இழுதுருவின கொழுமலரிடை யெழில்பொழிவன மதுகம்*
*கழுதுருவின கஞலிலையன கழிமடலின கைதை*
*பொழுதுருவின அணிபொழிலின பொழிதளிரன புன்னை'*
*(பின்னீரடிகளிலும் ஈற்றுச்சீர் தேமா என நின்றது.) சூளா.433*

**அதிகிருதி –**

*எழுத்து வகையான் இருபத்தாறு பேதமாகிய சந்தங்களுள் அதிகிருதி என்பதும் ஒன்று.*

எ-டு : *'தளையவி ரும்புது நறைவிரி யும்பொழில் தடமலி துறைமாடே*
*வளைமொழி நித்தில மளநில வைத்தரு மயிலையி லெழுகாரே*
*யளவிய ழற்கலி மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா*
*விளையம டக்கொடி யிடரொழி யப்புனை மலரித ழருளாயே'*

கருவிளம் கூவிளம் கருவிளம் கூவிளம் கருவிளம் புளி மாங்காய் - என இவ்வாய்பாட்டால் அறுசீர்அடி நான்காய் வரும் விருத்தத்துள் இச்சந்தம் வருமாறு காண்க. ஒற்றெ ழுத்தை நீக்கி உயிரும் உயிர்மெய்யுமாக அடிக்கு எழுத்து 22 எனக் கொள்ளப்படும். (வீ. சோ. 139 உரை)

**அதிசக்குவரி –**

எழுத்துவகையால் இருபத்தாறு பேதப்படும் சந்தங்களுள் ஒன்று இது. புளிமா புளிமா தேமா தேமா தேமா புளிமா என்னும் வாய்பாட்டால் அறுசீர்அடி முதலாவதும் நான்கா வதும் நிகழ, இடையிரண்டடிகளும் புளிமா புளிமா தேமா புளிமா தேமா தேமா என்னும் வாய்பாட்டால் நிகழும் ஆசிரிய விருத்தத்துள் இச் சந்தம் பயிலும். ஒற்றெழுத்து நீங்கலாக உயிரும் உயிர்மெய்யும் ஓரடிக்கு எழுத்து 15 எனக் கொள்க.

எ-டு : *'அருண கிரண மேபோ லங்க ராகங் குலவும்*
*தருண கலவி மாரன் தயங்கு சிந்தை யென்னோய்*
*தெருண முழைய தென்றா லதுவோ சேலாங் கண்ணார்*
*கருணை சிறிது பெய்யுங் காலை யுண்டே லினிதாம்.'*

(வீ. சோ. 139 உரை)

**அதிசயதி –**

எழுத்துவகையால் இருபத்தாறு பேதம் ஆம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று. ஐஞ்சீர்களை அடிதோறும் உடைய கலிநிலைத்துறை. (நெடிலடி விருத்தம்)முதலாம் நான்காம் அடிகள் கருவிளம் கூவிளம் தேமா தேமா தேமா என நிகழ, இடையீரடிகளும் கருவிளம் தேமா புளிமா தேமா தேமா என நிகழ்வதன்கண் இச்சந்தம் பயிலும். ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாக ஓரடிக்கு எழுத்து 13 என்க.

எ-டு : *'பரிசில வெம்மொடு போது மம்பு மென்றாங்*
*கரிசில வேந்தி யகன்று நீண்ட கண்மேற்*
*குரிசிலை யன்று கனற்றி வெந்த காமன்*
*கருசிலை போற்புரு வத்தாள் காட்சி மிக்காள்'*

(வீ. சோ. 139 உரை)

**அதிதிருதி –**

எழுத்துவகையான் இருபத்தாறுபேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று. எழுசீர் விருத்தத்துள் பயின்றுவருவது :

ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாக ஓரடிக்கு எழுத்து 19 வரப்பெறுவது

எ-டு : *'பாரா வார மருங்கு லாவு மொலியி னோடு பரவைகொண்டே*
*சாரா வார மளைந்து தங்குந் தொன்னுமர் தெள்ளு புகார்மன்னவர்*
*வீரா வார மணிந்த வாழி வலவர் மென்பூங் கரும்பினறுங்*
*காரா வார மருள ராய கவின்பூ மலரொண் சூடாமணி'*

அடிதோறும் முதற்சீர் நான்கும் தேமா தேமா புளிமா தேமா என நிகழ, ஐந்தாம்சீர் புளிமா அன்றித் தேமாவாக நிகழ, ஆறாம் சீரும் அவ்வாறே நிகழ, ஏழாம் சீர் காய்ச்சீராகவோ கனிச்சீராகவோ நிகழும் இவ்விருத்தயாப்பில் இச்சந்தம் பயிலுமாறு. (வீ. சோ. 139 உரை)

**அதியாடி –**

எழுத்துவகையான் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று. மாச்சீரால் இயன்ற எழுசீர் விருத்த யாப்புள் இச்சந்தம் பயிலும்; விளச்சீர் சிறுபான்மை விரவினும் இழுக்காது.

எ-டு : *'தேனார் பொழுதிற் றிருந்தா தேநீ சிந்தைகொண் டேவே றூரிற்*
*போனார் தேரூர் சுவடு புதையல் வாழிபொங் கோத வேலை*
*வானூர் மாவும் கிரியு முதலா வாரல் கொடுவாய் மேவிக்*
*கானார் சோலைத் தருவி லுலாவுங் காவல் யாவ ருளரே'*

இதன்கண், முன்னீரடிகளில் ஐந்தாம்சீர் கூவிளம் என வந்தவாறு காண்க. ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாக ஓரடிக்கு எழுத்து 17 எனக் கொள்க. (வீ. சோ. 139 உரை)

**அதியுத்தம் –**

'அதிஉத்தம்' காண்க. (வீ. சோ. 139 உரை)

**அபிகிருதி –**

எழுத்து வகையால் 26 பேதமாம் எனப்பட்ட சந்தத்துள் ஒன்றாம். அடிதோறும் 25 எழுத்துக்கள் ஒற்று நீக்கி எண்ணப் படுமாறு காண்க.

எ-டு : *'அங்குலிய மொன்றுபுன லாழ்தரு கிணற்றில்விழ*
*அந்தமுனி தேடுமினெனாப்*
*புங்கமொடு புங்கமுற எய்தவன் எடுத்தமை*
*புகன்றருகு நின்றவரைநீர்*
*இங்கித னிலைத்தொகைகள் யாவுமுரு வப்பகழி*
*ஏவுமினெ னாமுன்விசயன்*
*துங்கவில் வளைத்தொரு கணத்தினில் வடத்திலை*
*துளைத்தனனி லக்கில் தொடையால்.'* (வில்லி. வாரணா. 51)

இவ்வாறு காய்ச்சீரும் விளச்சீரும் சிறுபான்மை கனிச்சீரும் அறுசீரடியுள் விரவுமாறு நாலடியால் நிகழும் விருத்த யாப்பினுள் இச்சந்தம் பயிலுமாறு காண்க.(வீ. சோ. 139 உரை)

**அரைச்சந்தம் –**

தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய, தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா என்ற பதினாறன்மேல் ன - னா என்ற உயிர்மெய் வரினும், இவ்வுயிர் மெய்யோடு த் - ம் - என்ற ஒற்று வரினும், த் - ம் - என்பன அப்பதினாறு ஒலிகளுடன் தனித்து வரினும் அரைச் சந்தமாம்.

தத்த என்பது - தத்தன, தத்தனா, தத்தனாத், தத்தனத், தத்தனம் தத்தனாம், தத்தத், தத்தம் - எனவும்

தாத்த என்பது - தாத்தன, தாத்தனா, தாத்தனத், தாத்தனாத், தாத்தனம், தாத்தனாம், தாத்தத், தாத்தம் எனவும் அரைச் சந்தமாகி வரும். ஏனைய ஓசைகளோடும் ஒட்டிக்கொள்க.

(செய்யு. பக். 36)

**அளவடி விருத்தம் –**

நான்கடியும் எழுத்தொத்து அலகு நிலை ஒவ்வாது வருவனவும், எழுத்தும் அலகும் தம்முள் இயையாது வருவனவும் ஆகிய இருவகை விருத்தமும்.

எ-டு : *'கொள்ளுங் கூற்றி னினைந்துணர் வுசிறி*
*துள்ள நிற்க வொழிந்திடு மாறுபோல்*
*வள்ளல் தரள வனவ லையுளக்*
*கள்வ ரைவரு மென்றே கரந்திட்டார்.'*

இது நான்கு அடியும் தம்மில் எழுத்து ஒத்து, அலகு ஒவ்வாது வந்தது.

எ-டு : *'சொற்றவா வளவி னுளவா வெனுந்தடத்*
*திற்றவா யில்லதெஞ் ஞான்று முள்ளது*
*சொற்றவாண் மனத்தினா லுறுவிப் பின்னரே*
*மற்றவா னோக்கினான் மடங்கல் மொய்ம்பினான்.'*

இது நான்கடியும் தம்மில் எழுத்தும் அலகும் ஒவ்வாது வந்தது. (வீ. சோ. 139 உரை)

**அளவழிச் சந்தப் பையுள் –**

அளவழிச் சந்தச் செய்யுளில் நான்கு அடியும் சீரான் ஒத்து, ஒவ்வோரடியும் வெவ்வேறு எழுத்து எண்ணிக்கை பெற்று வருவது. (அளவு + அழி = அளவழி)

எ-டு : *‘என்னிது விளைந்த வாறித் தூதுவர் யாவ ரென்று*
*கன்னவில் வயிரத் திண்டோட் கடல்வண்ணன் வினவி யாரும்*
*சொன்னவின் றுரைக்க மாட்டார் துட்சென்று துளங்க ஆங்கோர்*
*கொன்னவில் பூதம் போலும் குறள்மகள் இதனைச் சொன்னாள்.’*
(சூளா. 679)

*இது முதலடி 15 எழுத்தாய், இரண்டாமடி 17 எழுத்தாய், பின்னிரண்டு அடிகளும் 16 எழுத்தாய் வந்தமையால் அளவழிச் சந்தப் பையுள் ஆயிற்று.*

*(எழுத்தெண்ணிக்கையில் புள்ளியெழுத்து விலக்குண்ணும்.)*

*(யா. வி. பக். 518)*

**அளவழிச் சந்தம் --**

*நாலெழுத்து முதலாக 26 எழுத்தின்காறும் உயர்ந்த 23 அடியானும் வரும் நாலடிப்பாடல் அடிகளின் எழுத்து ஒத்தும் ஒவ்வாதும் அலகு ஒவ்வாதும் வருவது.*

எ-டு : *‘பொங்கு சாமரை தாம்வீசச்*
*சிங்க பீடம் அமர்ந்தவெங்*
*கொங்கு சேர்குளிர் பூம்பிண்டிச்*
*செங்க ணானடி சேர்மினே’*

*இவ்வஞ்சி விருத்தம் அடிதோறும் எழுத்தெண்ணிகையான் (8) ஒத்து, அலகு ஒவ்வாது வந்த அளவழிச் சந்தம்.*

எ-டு : *‘அருங்கயம் விசும்பிற் பார்க்கும் அணிச்சிறு சிரலை அஞ்சி*
*இருங்கயம் துறந்து திங்கள் இடங்கொண்டு கிடந்த நீலம்*
*நெருங்கிய மணிவிற் காப்ப நீண்டுலாய்ப் பிறழ்வ செங்கேழ்க்*
*கருங்கயல் அல்ல கண்ணே எனக்கரி போக்கி னாரே’* (சீவக. 626)

*இஃது எழுத்து ஒவ்வாதது.*

**அளவழிச் சந்த வகைகள் --**

*நிசாத்து, விராட்டு, புரிக்கு, சுராட்டு, யவமத்திமம் (தோரையிடைச் செய்யுள்), பிபீலிகா மத்திமம் (எறும்பிடைச் செய்யுள்), பாதிச் சமச்செய்யுள், அளவழிப் பையுட் சந்தம் என வடநூல்வழித் தமிழாசிரியர் அளவழிச் சந்தவகைகள் வகுத்துக் கூறுப.* *(யா. வி. பக். 513, 514)*

**அளவழித் தாண்டகம் --**

*27 எழுத்து முதலாக உயர்ந்த அடியினவாய் எழுத்தும் குருலகுவும் ஒவ்வாது வருவன அளவழித் தாண்டகமாம்.* **‘மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரும் நாண,** *(சூளா. 1904) - எனத் தொடங்கும் எண்சீர் விருத்தத்துள், முதலடி 30, இரண்டாமடி 28, மூன்றாமடி 29, நான்காமடி 28 என*

அடிதோறும் எழுத்து ஒவ்வாதும் குருலகுவும் ஒவ்வாதும் வந்தமை காண்க. (யா. வி.பக். 485)

**அளவழிப் பையுட் சந்தம் –**

நான்கடிகளும் சீரான் ஒத்து எழுத்துக்களான் வேறுபட்டு வரும் சந்தப்பாடல்.

> 'ஆதியான் அருளாழி தாங்கினான் ஆயிரவெங் கதிரோன் நாணும்
> சோதியான் சுரர்வணங்கும் திருவடியான் சுடுநீற்றான் நனையப்பட்ட
> காதியான் அருளிய கதிர்முடி கவித்தாண்டான் மருகன் கண்டாய்
> ஓதியான் உரைப்பினும் இவன்வலிக்கு நிகராவார் உளரோவேந்தர்'
> (சூளா. 250)

இது முதலடி 19 எழுத்தாயும், இரண்டாமடி 22 எழுத்தாயும், மூன்றாமடி 20 எழுத்தாயும், நான்காமடி 21 எழுத்தாயும் வந்தமையால் அளவழிப் பையுட் சந்தம். (யா. வி. பக். 517)

(அளவழிச் சந்தப் பையுட்கும் அளவழிப் பையுட் சந்தத்திற் கும் இடையே வேறுபாடு அடிகளின் எழுத்தெண்ணிக்கை குறைவு மிகுதியாக அமைதலில் கிடப்பதுபோலும்)

**அளவியல் சந்தம் –**

நாலெழுத்து முதலாக 26 எழுத்தின்காறும் உயர்ந்த 23 அடியானும் வரும் நாலடிப்பாடல் குருவும் இலகுவும் ஒத்து வருவது.

4 எழுத்தடி அளவியற்சந்தம் - 'ஆதி நாதர்'

5 எழுத்தடி அளவியற்சந்தம் - 'பந்தம் நீக்குறில்'

6 எழுத்தடி அளவியற்சந்தம் - 'திரித்து வெந்துயர்'

7 எழுத்தடி அளவியற்சந்தம் - 'பாடு வண்டு பாண்செயும்'

8 எழுத்தடி அளவியற்சந்தம் - 'முரன்று சென்று வண்டினம்'

9 எழுத்தடி அளவியற்சந்தம் - 'வினையைத் தான்மிடைந் தோட்டிநீர்'

10 எழுத்தடி அளவியற்சந்தம் - 'கருதிற் கவினார் கயனாட்டத்'

11 எழுத்தடி அளவியற்சந்தம் - 'ஆதி யானற வாழியினானலர்'

12 எழுத்தடி அளவியற்சந்தம் - 'குரவு தான்வரி கொங்கொடு'

13 எழுத்தடி அளவியற்சந்தம் - 'கலையெலா முதற்கணே'

14 எழுத்தடி அளவியற்சந்தம் - 'குரவக் கோலக் கோங்கணி'

15 எழுத்தடி அளவியற்சந்தம் - 'யதிகணம் இருநிலம்'

16 எழுத்தடி அளவியற்சந்தம் - 'மாவரு கானல் வரையதர்ப்'

*17 எழுத்தடி அளவியற்சந்தம் - 'செருவினை வைவேல்'*

*18 எழுத்தடி அளவியற்சந்தம் - 'பிணியார் பிறவிக் கடலுட்'*

*19 எழுத்தடி அளவியற்சந்தம் - 'அன்னங் கண்டர விந்த'*

*20 எழுத்தடி அளவியற்சந்தம் - 'அருவிப் பலவரைகாள்'*

*21 எழுத்தடி அளவியற்சந்தம் - 'பின்தாழும் பீலி கோலிப்'*

*22 எழுத்தடி அளவியற்சந்தம் - 'அருமாலைத் தாதலர நின்றமர் குழுவினோ டாயிரச் செங்கணானும்'*

*23 எழுத்தடி அளவியற்சந்தம் - 'சோதிமண்டலம் தோன்றுவ துளதேல் சொரியு மாமலர்த் தூமழை யுளதேல்'*

*24 எழுத்தடி அளவியற்சந்தம் - 'விலங்கு நீண்முடி யிலங்க மீமிசை விரிந்த மாதவி புரிந்த நீள்கொடி'*

*25 எழுத்தடி அளவியற்சந்தம் - 'திருகிய புரிகுழல் அரிவைய ரவரொடு திகழொளி இமையவரும்'*

*26 எழுத்தடி அளவியற்சந்தம் - 'கரிமருவு கடிமதிலி னிடுகொடிகள் திசைதடவு கடுமை யினவாய்.'* (யா. க. 95 உரை பக். 477 - 482)

**அளவியல் தாண்டகம் –**

*27 எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தின் அடியினவாய் எழுத்தும் குருலகுவும் ஒத்து வருவன அளவியல் தாண்டக மாம்.*

எ-டு : *'வானிலவி முகிலார்ப்ப மருவி மாண்பால்'*

*எனத் தொடங்கும் எண்சீர்விருத்தம் (யா. வி.பக். 483) 27 எழுத்தடி அளவியல் தாண்டகம். (யா. வி. பக். 476)*

**அறுசீர்ச் சந்த விருத்தம் –**

*1) மூன்று மாத்திரையுடைய அறுசீரும் ஈற்றில் ஒரு நெட்டெழுத்தும் பெற்ற அறுசீரடி நான்கால் அமைவது.*

எ-டு : *'மரண சோக நரக வாதை பிணிம யக்கினோ*
*டரண மான விருளெ லாம கன்ற நீரராம்*
*கரண நான்கு புலன்க ளோடு மனது கைப்படிற்*
*சரண டைந்து ளாரு முத்தி சார்ப திண்ணமே'* (நல்லா. பாரதம்)

*2) நீண்ட புளிமாச்சீர் ஆறும் ஈற்றில் ஒருநெட்டெழுத்தும் பெற்ற அறுசீரடி நான்கான் அமைவது.*

எ-டு : *'அதிர்பொற் கழலான் விழுதிண் கிரியா லதிசூ ரன்மான்தேர்*
*பிதிர்பட் டிடலும் புவிமேற் படர்தல் பிழையா மெனவுன்னா*
*உதயக் கிரிபோற் கனகத் தியலும் ஒருதேர் மிசைநீலக்*
*கதிருற் றெனவே கடிதிற் பாய்ந்தான் காலன் மிடறீர்ப்பான்.'*
(கந்தபு. இரண்டா. 57)

*3)* குற்றுயிர் ஈற்றினுடைய ஆறு கூவிளச்சீரொடு நெட்டெழுத்து ஈற்றில் பெற்ற அறுசீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'மீட்டுமி ரும்படை மேவநெ டுங்கணை விட்டுவி யன்வழியில்*
*மாட்டிவ ழக்கம றுத்துல கெங்கும லிந்தவு டற்குறையின்*
*ஈட்டம றிந்துக னன்றுவி ழிப்பவெ ரிந்தவு டற்றொகுதி*
*ஓட்டறு சோரிவ றந்தது சூரனொ ருத்தனு நின்றனனே.'* (தணிகைப்.)

*4)* நான்கு மாத்திரை விளச்சீரும் மாச்சீரும் கடையில் ஒரு காய்ச்சீரும் அமையும் அறுசீரடி நான்கான் அமைவது.

**விளச்சீர் –**

*'இறைவனெ ழிற்கதிர் மணிகள முத்திய தவிசினி ருத்தலுமே*
*நெறுநெறெ னக்கொடு நிலவரை யிற்புக நெடியவ னப்பொழுதே*
*மறலியெ னத்தகு நிருபனி யற்றிய விரகைம னத்துணரா*
*முறுகுசி னத்துட னடிகள் பிலத்துற முடிக்கக னத்துறவே'*

**மாச்சீர் –**

எ-டு : 'மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும் வானோர் பெருமானார்
*நஞ்சைக் கண்டத் தடக்கும் மதுவும் நன்மைப் பொருள்போலும்*
*வெஞ்சொற் பேசும் வேடர் மடவார் இதணம் மதுவேறி*
*அஞ்சொற் கிளிகள் ளாயோ வென்னும் அண்ணா மலையாரே'*
(தே. I 69-2) (I 60 -2)

*5)* ஐந்து மாத்திரை யுடைய விளங்காய்ச்சீர் ஐந்தும் நெடிலடுத்த ஈற்று விளங்கனிச் சீருமாகிய அறுசீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'வாவியொரு தேரைவடி வாளிபொழி யக்கனகன் வார்குருதி சோரவுடலின்*
*மேவினன்எ டுத்திரதம் விண்ணிடையு கைத்தனன்வி ளங்குதிற னீலனவுணன்*
*தாவியொரு தேர்புகவ ரக்கடிதெ ழுந்துதட மார்பிறவெ ருக்கிவரதன்*
*பாவிநில னிற்படமி தித்தனனு ருட்டுபுப ழங்கண்மிகு வித்தனனரோ'* (தணிகைப். சீபரி. 381)

*6)* ஐந்து மாத்திரை யுடைய குறில் ஈற்று மாங்காய்ச்சீர் ஐந்தும் இறுதிச்சீராகிய ஆறு அல்லது ஏழு மாத்திரையுடைய கனிச்சீரும் சேர்ந்த அறுசீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'எண்ணாம லேமுன்பு கடலுண்ட தேபோல வெனதூனு முண்டகொடியோன்*
*உண்ணாடு முயிர்கொண்டு வலிகொண்டு குறிதான வுதரங்கி ழித்துவருவன்*
*அண்ணாவில் வலனேயெ னக்கூறி யேதம்பி யரிபோல்மு ழங்கியிடலும்*

*மண்ணாடர் புகழ்கும்ப முனிதீயர் செய்திட்ட மாயந்தெரிந்*
*துவெகுள்வான்.'* (கந்தபு. வில்வ. பட. 30)

7) ஒற்றடுத்த குறில் அல்லது நெடிலை ஈற்றினுடைய ஐந்து விளச்சீரும் இறுதி விளங்காய்ச்சீரும் கொண்ட அறுசீரடி நான்காள் அமைவது. நேரசையில் தொடங்குவது :

எ-டு : *'ஓதவார் கடலகத் துற்றவா ரமிழ்தெனா வோதினார் புலவர் மற்றுந்*
*தீதிலாத் தீங்கனிச் சுவையெனப் பாலெனத் தேமொழிக் குவமைசொன்னார்*
*ஏதமே புலனுறா வழிநினைப் பாலவை யின்பமே நல்கிலாவால்*
*யாதெனக் கூறுகே னின்மொழிப் பண்பைநா னேந்திழைப் பொற்கொடிக்கே'*

(புலவர்மற்றுந் - இந்நாலசைச்சீர் கருவிளங்காய்ச்சீர்க்கு ஒப்பாம்.)

நிரையசையில் தொடங்குவது

எ-டு : *'அரம்பையு ருப்பசி மேனகை முதலிய வரிமதர் விழிமடவார்*
*நிரம்பிய காமந லங்கனி யவிநய நெறிமுறை கரமசையப்*
*பரம்புமி டற்றிசை விம்மிட விழியிணை புடைபெயர் பயில்வினொடும்*
*வரம்பெறு மற்புத மின்னவிர் கொடியென மகிழ்நட மெதிர்புரிய'*
(காஞ்சிபு. திருநெறி. 190)

8) நெடிலேனும் மெய்யேனும் இறுதியடையப் பெற்ற விளச்சீர்கள் - மூன்று குற்றெழுத்தாய் முடிந்த விளங்காய்ச் சீர்கள் - குறிலீற்று மாங்காய்ச் சீர்கள் - ஆகிய ஐந்து மாத் திரைச் சீர்கள் முதலைந்து சீர்களாய் நிற்க, இறுதிச்சீர் ஒன்றும் ஏழு மாத்திரை அளவுடைய மெய்யெழுத்து நடுவே மிகுந்த விளங்காய்ச்சீரோ- மூன்று குறில் நடுவே பெற்ற விளங்கனிச்சீரோ - மாங்கனிச்சீரோ - வரும் அறுசீரடி நான்காள் அமைவது. (இலக்கணம் எடுத்துக் காட்டுள் பொருந்து மாறில்லை.)

எ-டு : *'சிலைக்குருவி றற்குருகு லக்குமர ருக்குவரு சிரமநிலை காண்மினெனவே*
*அலைக்கிலைநி லாவெழுச ரிற்புதல்வ னுக்குநல் லறக்கடவு ளுக்குமுறையா*
*னிலைப்படுவி லாசமணி யணிதிகழ ரங்குமிசை நிகழ்பலிகொ டுத்தரியுடன்*
*கலைப்புரவி யூர்திருவை யுந்தொழுது புக்கனன கத்துணர்வு மிக்ககலையோன்'* (நல்லா. வாரணா. 66)

*(இரண்டாமடி 4, 5ஆம் சீர்கள் 'னுக்குநல அறக்கடவு' என இருத்தல் வேண்டும்.)*

*9)* முதற்சீர் குற்றுயிரீற்றுத் தேமா, இரண்டாவது நெடில் ஒன்றும் குறில் மூன்றும் இணைந்த கூவிளங்காய், மூன்றாவதும் நான்காவதும் குறில் ஈற்றுக் கூவிளம், ஐந்தாவது தேமா, ஆறாவது புளிமாங்காய் - என அமையும் அறுசீரடி நான்கான் அமைவது.

எ-டு : *தோடு டையசெவி யன்விடை யேறியொர் தூவெண் மதிசூடிக்*
*காடு டையசுட லைப்பொடி பூசியெ னுள்ளங் கவர்கள்வன்*
*ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த*
*பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.* (தே I-1-1)

*8* ஆம் வகை அறுசீர் விருத்தம் இரட்டியது -

எ-டு : *'பண்ணேனு னக்கான பூசையொரு வடிவிலே பாவித்தி றைஞ்சவாங்கே*
*பார்க்கின்ற மலரூடு நீயேயி ருத்தியப் பனிமலரெ டுக்கமனமும்*
*நண்ணேன லாமலிரு கைதான்கு விக்கவெனி னாணுமென் னுளநிற்றிநீ*
*நான்கும்பி டும்போத ரைக்கும்பி டாதலா னான்பூசை செய்யல்முறையோ*
*விண்ணேவி ணாதியாம் பூதமே நாதமே வேதமே வேதாந்தமே*
*மேதக்க வேள்வியே கேள்வியாம் பூமிக்குள் வித்தேயவ் வித்தின்முளையே*
*கண்ணேக ருத்தேயெ னெண்ணேயெ ழுத்தேக திக்கான மோனவடிவே*
*கருதரிய சிற்சபையி லானந்த நர்த்தமிடு கருணாக ரக்கடவுளே'*
(தாயுமானவர் பாடல்)

இவ்யாப்பிற் சிறிது திரிந்தது 'ஏடாயிரங் கோடி' என்னும் அந்தகக்கவி வீரராகவர் விடுத்த சீட்டுக்கவியும் கொள்ளப் படும்.

*4* ஆம் வகை அறுசீர் விருத்தம் இரட்டியது

எ-டு : *காரென வாருயிர் மீதரு ளேபொழி கண்ணனை விண்ணவனைக்*
*கந்தனை எந்தையை வந்தனை யன்பர்க டும்பகை கொன்றவனைச்*
*சீர்சம ராபுரி யாளனை மாளுறு தேவர்ம ளாளனையோர்*
*சின்மய ரூபனை நன்மையெ லாமுறு சேயினை யருள்புரிக*
*ஓர்வரி தாமுயிர் யாவையு நேர்வினை யொத்தும லப்பகை போய்*
*ஒண்சுக மேவிட வைந்தொழி றந்திடு முத்தம சிற்பரமாய்ச்*

*சேருரு வாயரு வாயிரு வகையுஞ் செறிபொரு ளாய் நிறைவாய்ச்*
*செம்முக மைந்தொடு செம்மையி னின்றருள் செய்தச*
*தாசிவமே!* (திருப்போரூர் சந்நிதிமுறை காப்பு.2)

10) நான்கு மாத்திரை மாச்சீர் ஆறுகொண்ட அறுசீரடி நான்கான் வருவது.

எ-டு : *'பிறியார் பிரிவே தென்னும் பெரியோய் தகவே யென்னும்*
*நெறியோ அடியேம் நிலைநீ நினையா நினைவே தென்னும்*
*வறியோர் தனமே யென்னும் தமியேன் வலியே என்னும்*
*அறிவோ வினையோ வென்னும் அரசர்க் கரசே என்னும்'*
(கம்பரா. 1635)

**அறுபத்துநாலடிச் சிந்து –**

64 என்ற அடிவரையறையுடைய தாளத்தொடு பாடப்படும் இசைப்பாட்டு.

**அனுட்டுப்பு –**

சந்தம் எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப் பட்டவற்றுள் 'அனுட்டுப்பு' ஒன்று; அடிதோறும் இஃது எட்டு எழுத்துப் பெறுவது.

எ-டு : *'அணிதங்கு போதி வாமன்*
*பணிதங்கு பாத மல்லாற்*
*றுணிபொன் றிலாத தேவர்*
*மணிதங்கு பாத மேவார்'*

எழுத்தெண்ணுமிடத்துப் புள்ளியெழுத்தும் ஆய்தமும் விலக்குண்ணும். (வீ. சோ. 139 உரை)

## ஆ

**ஆகிருதி –**

(வீ. சோ. 139) உரையில் மூலத்தில் அதிகிருதி என்றிருக்கிறது. ஆகிருதி என்பதே பொருந்தும்.)

1) உருவம்

2) அடிதோறும் ஒற்று நீங்கிய உயிரும் உயிர்மெய்யுமாகிய 22 எழுத்துக் கொண்ட நான்கடியை யுடைய சந்தம். கருவிளம் - கூவிளம் - கருவிளம் - கூவிளம் - கருவிளம் - புளிமாங்காய் என அடிதோறும் நிகழ்வது.

எ-டு : *'தளையவி ருட்புது நறைவிரி யும்பொழில் தடமலி துறைமாடே*
*வளைமொழி நித்தில மனநில வைத்தரு மயிலையி லெழுகாரே!*

*அளவிய ழற்கலி மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா!*
*விளையம டக்கொடி யிடரொழி யப்புனை மலரித ழருளாயே'*

இவ்வறுசீர் விருத்தத்துள் அடிதோறும் ஒற்று ஒழிய 22 எழுத்து வருதல் ஆகிருதி என்ற சந்தமாம்.(வீ. சோ. 139 உரை)

**ஆடி –**

எழுத்து வகையால் இருப்பத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தத்துள் ஒன்று. அடிதோறும் பதினாறெழுத்தாக, கூவிளம் தேமா கருவிளம் புளிமா புளிமாங்காய் எனவரும் நெடிலடி முதலடியும் ஈற்றடியுமாக, நடுவடியிரண்டும் கூவிளம் தேமா கருவிளம் தேமா கருவிளங்காய் என நிகழும் செய்யுட்கண் இச்சந்தம் பயிலும்.

எ-டு : *'தேனுட னாடுஞ் சிலைபொழி மலினச் செயலாட*
*ஆனுட னாடுங் கவிரித ழாயத் தயில்விழியென்*
*மானுட னாடும் மயிலன சாயல் மதர்விழியார்*
*வானுட னாடும் மதிதரு துனிநோய் மதியாரோ'*(வீ. சோ. 139 உரை)

**ஆரியை விருத்தம் –**

ஆரியா விருத்தம் எனப்படும் ஆரியையும், வைதாளீயம் எனப்படும் வைதாளியையும் மாத்திரைக் கணங்களால் அமையும் விருத்தங்கள். (வீ. சோ. 139 உரை)

ஆரியைக்கு இலக்கணம் வருமாறு :

ஆரியைக்கண் பாதம் நான்கெனக் கொள்வோரும், "பாதங்கள் இல்லை; இரண்டு பாகங்களான முன் அரை (பூர்வார்த்தம்) பின் அரை (உத்தரார்த்தம்) என இவையே உள" என்பாரும் என வடமொழியாப்பு நூலார் இருதிறத்தர். தமிழில் வீரசோழிய உரை இரண்டு பாகமெனக் கொண்டே இலக்கணம் கூறும்.

மாத்திரை 4 கொண்ட 7 கணங்களும் இறுதியில் ஒரு குருவும் கொண்டு 30 மாத்திரைகளில் அமைந்த இரு பாகங்களைப் பெற்று வருவது ஆரியை எனப்படும். இவற்றுள் ஒற்றைப் படையான 1, 3, 5, 7 என்ற கணங்கள் நடுவில் குருஉடைய 'ஜகணம்' ஆதல் கூடாது. ஆறாவது கணம் நான்கும் லகுவான கணமோ, இடைக்குருவான ஜகணமோ ஆகலாம். பின் அரையில், அஃதாவது இரண்டாம் பாகத்தில் ஒரே லகுவுடைய கணமாயிருத்தலும் கூடும்.

வீரசோழிய உரை கூறும் ஆரியை மூன்றுவகையெனத் தெளியலாம்.

*1. மாத்திரைக் கணங்கள் ஏழும் ஈற்றில் ஒரு குருவும் பெற்று, இரண்டா மடியில், ஆறாவது கணம் ஒரு தனி லகு மாத்திரமே வந்த ஆரியை.*

எ-டு : *'அம்பொற் கயிலைக் கிறைவா*
*ஆகம் பெறாத நோதக வதனாலே*
*வெம்பித் திரிமதி மேவும்*
*பார்வதி யாளா விகாவா யால்.'*

*முதற்பகுதியில் ஆறாவது கணம் நான்கு லகுக்களால் வந்த ஆரியை.*

எ-டு : *'இசைமிகு மொழியா ரனையே*
*அசைவுறு மனமொழி மதுமொழி யாரனையே*
*நசைவுற நீபே துறலே*
*பசையொடு சேருக வாழிய பேதுறலே'*

*3. இரண்டாம் பாதியில் ஆறாவதுகணம் இடைக்குருவான ஜகணமாய் வரும் ஆரியை.*

எ-டு : *'அனுபம பண்டித சோழ*
*மனுவவ னாகுல மொழிவள வாவருளே*
*எனவரு வரதா மிகவே*
*அனவர தமுமுனது தோகை பேதுறுமால்'*

*செய்யுளில் நிறுத்துமிடமே பாதமெனக் கொள்ளும் வகையில், மேலே காட்டப்பெற்ற மூன்று ஆரியை விருத்தச் செய்யுளுள்ளும், முதற்பாதமும் மூன்றாம் பாதமும் 12 மாத்திரையில் நின்று இறுவதையும், இரண்டாம் பாதமும் நான்காம்பாதமும் நந்நாள் கோணமாய் இறுதி இருபெற்று இறுவதையும் காணலாம்.*

*இனி இந்த ஆரிய விருத்தம் இன்னும் வேறுபல வகையானும் வருவதுண்டு. (வீ. சோ. 139 உரை)*

**ஆனந்தக் களிப்பு –**

*இது பல்லவியும் சரணம் பலவும் உடையது. பல்லவி, எதுகை ஒத்து அளவு ஒவ்வா ஈரடிகளான் ஆனது. முதலடி முச்சீரும் தனிச் சொல்லும் பெற, இரண்டாமடி நாற்சீராகி ஓசை நீள்கிறது.*

*பல்லவியும் முதற் சரணமும் ஒரே எதுகையாயின், பல்லவி யின் வடிவம் இரட்டித்துச் சரணத்தில் முச்சீர் நாற்சீர் இரட்டையாக அமைகிறது. சரணங்கள் சிந்துக்குரிய தொடை அமைதி பெற்றுப் பல்லவியினின்று சிறிது மாறுபடுகின்றன. கடுவெளிச்சித்தரது ஆனந்தக்களிப்பு 34 சரணம் உடையது.*

பட்டினத்தாரின் முதல்வன் முறையீடு, பல்லவிப் பகுதியையும் வெண்டளை பெற்ற 72 கண்ணிகளையும் உடையது. நான்கு கண்ணிக்கு ஒருமுறை பல்லவிப் பகுதி பாடப்பெறல் வேண்டும்.

கடுவெளிச்சித்தரது ஆனந்தக்களிப்புத் தனிப்பட்ட யாப் புடையது; பல்லவி அமைப்புடைய பகுதியும் 34 சரணமும் கொண்டு இயல்வது; பல்லவி எதுகையுடைய அளவொத்து வாராத ஈரடியால் ஆனது; முதலடி முச்சீரும் தனிச்சொல் லும் பெற, இரண்டாமடி நாற்சீர் பெற்று ஓசை நீளுகிறது. பல்லவியும் முதற்சரணமும் ஒத்த எதுகை யுடையன. பல்லவி யின் வடிவம் இரட்டித்து முச்சீர்இரட்டை நாற்சீரிரட்டை யாகச் சரணம் அமைகிறது. சிந்துக் குரிய தொடைஅமைதி பெற்றவை சரணங்கள். அவை பல்லவியின் சிறிது வேறுபடு கின்றன. சரணங்கள்தோறும் பல்லவி பாடப்பெற வேண்டி யுள்ளது. (இலக்கணத். முன் பக். 101, 102)

## இ

**இசை அளவுபா -**

இசைப்பா - இசையுடன் சேர்ந்த பாக்களில் ஒருவகை. (சிலப். 6 : 35 உரை)

**இசைத்தமிழ்ப்பா வகை -**

இசை துணையாக இயலால் சிறந்து வருவன இசைத்தமிழ்ப் பாவகையாம் பரிபாடல், வரிப்பாட்டு, பண்ணத்தி, குரவை, அம்மானை, குறத்திப்பாட்டு, ஊசல், பாவை, கோத்தும்பி, உழத்தி, பூவல்லி, தெள்ளேணம், உந்தி, சாழல், புலம்பல், தாழிசை, வண்ணம், தாண்டகம், மங்கலம், ஓடம், தாலாட்டு, ஏசல், ஒப்பாரி, வள்ளை, ஏற்றம், வில்லு, கிளிகடி, குயில், ஆனந்தக்களிப்பு - என்பனவும், அன்ன பிறவும் இசைத்தமிழ்ப் பாவின்பாற்படும்.

தாள மாத்திரையோடு பொருந்தும் பலவகைக் கண்ணிகள், சிந்து, தென்பாங்கு, கும்மி, தேவாரம் என்பனவும் அன்ன. பிறவும் இசையும் இயலுமாகிய இரண்டும் சமமாக இசைக்கும் தன்மையுடையன. (தென். இசைப். 6,7)

**இசை நுவல் மரபின் இயன்ற பாடல் -**

‘இசைப்பா’ காண்க.

**இசைப்பா (1) –**

*இசையொடு சேர்ந்த பாக்களில் ஒருவகை.(சிலப். 6: 38 உரை)*

*(2) நாற்பெரும்பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இசையுள் அடங்கப் பாடப்படும் பாடலாகிய செந்துறைப் பாடல். (யா.வி.பக். 579) இசைப்பாப் பத்துவகைப்படும் : அவையாவன- (1) செந்துறை, (2) வெண்டுறை, (3) பெருந் தேவபாணி, (4) சிறுதேவபாணி, (5) முத்தகம், (6) பெரு வண்ணம், (7) ஆற்றுவரி, (8) கானல்வரி, (9) வரிமுரண், (10) தலைபோகு மண்டிலம் என்பன.*

*(சிலப். 6: 38 அடியார்க். உரை)*

**இசைப்பாட்டின் பெயர் –**

*பாணி, வரி, பண், இசை, கானம், கொளை, பாண், கீதம், கந்தருவம், கேயம், காமரம் என்பன. (திவா. பக். 235)*

**இசைப்பாட்டு –**

*பண்ணும் திறமுமான இராகங்களும் இராக வகைகளும் பொருந்தி, குழலுடனும் யாழுடனும் இசைந்து, தாள வகைகளுடனும் முழவுடனும் சேர்ந்து இசைப்பதாய், பொரு ளாழம் கொண்ட சொற்கள் புணரப் பாடுவது. இதைக் 'கீதவுரு' என்றும் சொல்லுவதுண்டு.*

*கீர்த்தனம் (கீர்த்தனை) எனப்படுவதும் இதனுடன் அடங்கும் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பவற்றைப் பெற்றுத் தாளமும் முறையும் வழுவாமல், இராகதாளம் சேர்ந்து, இசை வல்லுநரால் செய்யப்படும் பாட்டே கீர்த்தனமாவது. அநுபல்லவியின்றி வரும் கீர்த்தனமும் உண்டு. வரிப்பாட்டு என்பதும் இசைப்பாட்டின் வகையே (சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்பி என்பனவும் இசைப் பாட்டுக்களே) (நாடக. 71-75)*

**இடையாகு சந்தம் –**

*பாடலின் நான்கடியும் ஓர் எழுத்து மிக்கும் குறைந்தும் வருவன இடையாகு சந்தமாம். (யா. வி. பக். 522)*

**இரட்டை விருத்தம் –**

*பதினொரு சீர்க்கு மேற்பட்ட சீரான் வரும் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். (வீ. சோ. 109 உரை)*

**இரதோத்தத விருத்தம் –**

*இரதோத்தம் என்று விருத்தப் பாவியலில் சொல்லப் பட்டிருப்பினும், 'இரதோத்ததம்' என்பதே சொல். இவ்வட*

மொழி விருத்தம் 11 எழுத்தே பெறுவது. 1, 3, 7, 9, 11 என்ற இடங்களில் நெட்டெழுத்தும் மற்ற இடங்களில் குற்றெழுத்தும் கொண்டியல்வது. அடிக்கு எழுத்தெண்ணுங்கால் ஒற்றெழுத்து நீக்கப்படும். (வி. பா. பக். 48)

'காவி யோவிழி கலாஞ்செய் வேலெனா
மேவி யேஎனை விராவி வீடவே
ஓவி லாதுற உணாவின் றூனையே
காவி யேஉயிர் கடாவப் போதர்வேன்' (புனையப்பட்டது)

இடைச்சுர மருங்கில் செலவழுங்கி மீண்டவன் தலைவியை நோக்கிக் கூறுவதாக அமைந்த இவ்விருத்தத்தில் மேற் சொன்ன இலக்கணம் முற்றும் அமைந்துளது. (இது புலனெறி வழக்கிற்கு மாறுபட்டது;)

**'காவி யாம்விழி கலாஞ்செய் வேல்களே**
மேவி யேநகில் விழூஉமுள் நீர்மையே
கோவை வாயிதழ் கொளூஉமெல் லாவியே
பாவை தூநகைப் படூஉமென் சீலமே' (இதுவுமது)

தன்னைத் தலைவி வருத்தியதாகத் தலைவன் தோழிக்குக் கூறுவதாக வரும் இப்பாடற்கண், மேற்கூறிய இலக்கணம் அமைந்துள்ளமையால் இஃது இரதோத்தத விருத்தமாகக் கொள்க. எழுத்தெண்ணுகின்றுழி அளபெடை யெழுத்தும் அலகுபெறாமையால் எண்ணப்படாது எனக் கொள்க. (வி. பா. பக். 48)

**இரு துள்ளல் கொண்ட கலையால் வந்த வண்ணம் –**

'தந்தனதத் தானத் தனதாந்த தாந்தனா' என்னும் ஓசையால் வரும் எண்சீர்க் கழிநெடிலடி விருத்தத்துள் இவ்வண்ணம் நிகழும்.

**இலகுவும் குருவும் ஆமாறு –**

நெட்டெழுத்தும், நெடில் ஒற்றும் குறில் ஒற்றும் குரு என்பர். அஃது இரண்டு அலகுடைத்தாகி இளம்பிறை போன்ற குறியினைப் பெறும். குற்றெழுத்து இலகுவாம். அஃது ஓரலகு உடைத்தாய், நேரே கீழ்நோக்கி வலிக்கப்பட்ட ஒரு கீற்றினைப் பெறும்; ஈற்றின்கண் நின்றபோது குரு ஆதலும் ஒருகால் உண்டு.

வடமொழி யாப்பிலக்கணம், விருத்தங்களுக்கு எழுத்துக் களையும் மாத்திரைகளையும் கணக்கிடும் வகையால் கூறும் அடிப்படைகள் இலகுவும் குருவும் ஆகும்.

*சிவ என்பது இரண்டு இலகு : ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை பெறும். இதன் குறி I என்பது.*

*தா என்பது ஒரு குரு; இரண்டு மாத்திரையுடையது இதன் குறி '◡' என்பது. தார் என்பதும் ஒருகுரு; இரண்டே மாத்திரை. இதன் குறியும் '◡' என்பதே. கண் என்பதும் ஒருகுரு; மாத்திரை இரண்டு. இதன் குறியும் '◡' என்பதே.*

*(வீ. சோ. 132)*

## உ

**உடற் கூற்று வண்ணம் –**

*பட்டினத்தார் பாடியது. இவ்வண்ணம் ஒவ்வொரு கலையும் நான்கு குழிப்பும் ஒரு தொங்கலுமாக அமைந்துள்ளது. முதற் கலையும் மூன்றாங்கலையும் எதுகையும், முதலாவதும் இரண்டாவதும், இரண்டாவதும் மூன்றாவதும் மோனையும் பெறுகின்றன. தாயுமானவர் பாடும் வண்ணங்களிலும் இவ்வமைப்பைக் காணலாம். (இலக்கணத். முன். பக். 102)*

**உத்தம் –**

*எழுத்துவகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று; ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய் யாவது ஓரடிக்கு ஒரெழுத்தாய் வருவது.*

*'கார், நேர், வார், யார்' என வரும். (வீ. சோ. 139 உரை)*

**உற்கிருதி –**

*எழுத்துவகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங் களுள் ஒன்று. ஒற்றொழித்து உயிரும் உயிர் மெய்யுமாக அடி ஒன்றற்கு 26 எழுத்துக்களாக வரும். நிரை முதலாகத் தொடங்கும் ஐஞ்சீர்க் கலிநிலைத்துறையுள் இச்சந்தம் பயில்வது. அடி தோறும் முதல் நான்கு சீர்களும் கருவிளங்கா யாக ஐந்தாம்சீர் கருவிளங் கனியாக வரும்.*

எ-டு : *'தொழுவடிய ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய துணைவனெனலா*
*மெழுமிரவி கிரணநிக ரிலகுதுகில் புனைதருசெ யிறைவரிடமாங்*
*குழுவுமறை யவருமுனி வரருமரி பிரமருர கவனுமெவருந்*
*தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தெழு துடிதபுரமே'*

(வீ. சோ. 139 உரை)

'உற்கிருதி' என்னும் இருபத்தாறாம் சந்தத்தின் நில அளவை அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதின் காதமும், நூற்றொரு கோலும், ஒருமுழமும், ஏழ்விரலும் எனக் கொள்க.

(யா. வி. பக். 51)

**உறழ்ச்சி –**

பிரத்தாரம்

அனைத்தும் குருவாய் அமைந்த அடி ஒன்றில் (1 முதல் 26 எழுத்து வரை பெற்றவற்றுள் எந்த விருத்தத்தினுடைய தாயினும்) முதலாவது குருவின் கீழே இலகு எனக் குறித்துக் கொண்டால், முதல்வகை கிடைக்கும். இது போலவே, அடுத்த வகையை முதலாவது குருவாகவே அமைய இரண் டாவதை இலகுவெனக் குறித்துக் கொண்டால் இரண்டாம் வகை கிடைக்கும். இது போலவே, அனைத்தும் இலகுவே கொண்ட அடியிலும் செய்க. உதாரணமாக அடிக்கு நான்கெழுத்துக்கள் கொண்ட ஒரு விருத்தம் பிரத்தாரம் செய்யும்போது 16 வகையாக உறழ்ச்சி பெறுவது காண்க. குரு என்பதை 'கு' என்ற எழுத்தாலும், இலகு என்பதை 'ல' என்ற எழுத்தாலும் குறிப்பர்.

| | |
|---|---|
| 1. கு கு கு கு | 9 ல ல ல ல |
| 2. ல கு கு கு | 10. கு ல ல ல |
| 3. கு ல கு கு | 11. ல கு ல ல |
| 4. ல ல கு கு | 12. கு கு ல ல |
| 5. கு கு ல கு | 13. ல ல கு ல |
| 6. ல கு ல கு | 14. கு ல கு ல |
| 7. கு ல ல கு | 15. ல கு கு ல |
| 8. ல ல ல கு | 16. கு கு கு ல |

இவற்றுள் முதலெட்டும் அனைத்தும் குருவான அடியின் பிரத்தாரம்; பின்னெட்டும் அனைத்து லகுவான அடியின் பிரத்தாரம்.

இது நிலை (- பிரதிட்டை) என்ற பெயரைக் கொண்ட, ஓரடிக்கு நான்கு எழுத்துக்கள் கொண்ட விருத்தத்தின் பிரத்தாரம்.

இவ்வாறு ஐந்து எழுத்துக்களைக் கொண்ட விருத்தங்களைப் பிரத்தாரம் செய்தால், முப்பத்திரண்டு வகை வரும். இதுபோலவே 26 எழுத்துக்கள் வரை கொண்ட அடிகளைக் கொண்ட விருத்தங்களைப் பிரத்தாரம் செய்தால், ஒன்றொன்

றினும் அடுத்ததற்கு இருமடங்கு வகைகள் வரும். ஆறெழுத்திற்கு 64; ஏழு எழுத்திற்கு 128. இவ்வாறே இறுதிவரை செய்து கொள்க. (வீ. சோ. 133)

## ஊ

**ஊசல் வரி** –

ஊஞ்சற்பாட்டு. சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையுள் ஊசல்வரியாகச் சேரமன்னனைப் புகழ்ந்து மூன்று பாடல்கள் 'ஆடாமோ ஊசல்' என முடிவனவாக உள்ளன.

இப்பாடல்கள் மூன்றும் வெண்டளையான் அமைந்தவை. நாற்சீரடி ஐந்து கொண்டு அமையும் இம்மூன்று பாடல்களும் ஈற்றடியிலும் ஈற்றயலடியிலும் 'ஆடாமோ ஊசல்' என்று முடிகின்றன. வரி எனவே, இவை இசைப்பாடல்களாம்.

**ஊசற்சீர்** –

அஃதாவது ஊசல் வரி. 'நாம்பாடும் சேயுயர் ஊசற்சீர்.'

(கலி. 131 : 23, 24)

## எ

**எண்கலை விருத்தம்** –

குழிப்பு ஒன்றும், ஒருசிறு தொங்கல் துள்ளலும் சேர்ந்தது ஒரு கலை. இவ்வாறு எட்டுக் கலைகள் அமைந்த விருத்தம் எண்கலை விருத்தமாம்.

தந்த தானன தனதன தனதன - தனதானா -

அடி - 1 *கஞ்ச மாமலர் மனையென வளர்தனி*
*அஞ்ச வாகன முதுகினில் வரும்விதி*
*கன்றி யேபல உடலினி லலைதர - விதியாதே*
*கங்கு லேயெனும் நிறமுறு பகடதில்*
*வெம்பு தூதுவர் செறிதர அன்றுமிழ்*
*கண்க ளானவை சினமிக நமனிவ - ணெதிராதே*

அடி - 2 *அஞ்சு வாள்விழி அரிவையர் படையொடு*
*தென்ற லேறியொர் கணமதில் எணிலவர்*
*அம்பி னாலடர் சமர்புரி தரமதன் - அடையாதே*
*பந்த வானுறை அரியயர் பலர்தினம்*
*நின்று தேடிட வழிபடும் இருமுனி*
*அன்று காணுற அருளிய திருவடி - தருவாயே,*

அடி - 3 *செஞ்சொ லார்தரு கவுணிய மதலையை*
*எங்கள் தேசிக மணியென அருள்பரை*
*சிங்க வாகினி பகவதி திரிபுரை - மணவாளா!*
*செங்கை வேல்கொடு கரிமுகன் அரிமுகன்*
*மிண்டு சூருயிர் கடல்வரை அடுமுயர்*
*செந்தில் மேவிய சரவண குகன்வரும் - விழியானே!*

அடி - 4 *மஞ்சு மாமதி வரநதி நகுதலை*
*கொன்றை தாதகி அறுகணை அவைபுனை*
*மங்க ளாகரம் இலகிய சடைமிசை - யுடையானே!*
*வண்கொள் மாமறை உயிர்நிகர் பசுநிரை*
*கொம்பு மேவிடும் வரமதை உதவிட*
*வந்து மாதையில் வதிதரும் அழகிய - பெருமாளே!*

இப்பாடலில் நான்கடிகளுக்கு எட்டுக்கலைகள் வந்துள்ளன. இவ்வண்ணம் மிக்கு வருங்கால் அடிக்கு நான்கு கலையாகவும், எட்டுக் கலையாகவும் பதினாறு கலையாகவும் நீண்டு வருதலும் உண்டு. இவை 'வண்ணத்தியல்பு' என்ற முருகதாச சுவாமிகளது நூலில் காணப்படும்.

**எண்சீர்ச் சந்தவிருத்தம் -**

குறிலீற்று விளச்சீர், தேமா-2, புளிமாங்காய், தேமா, புளிமாங்காய், தேமா, புளிமா எனவரும் எண்சீரடி நான்காகி வருவது.

எ-டு : *'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தென்*
*உளமேபு குந்த அதனால்'*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி*
*சனிபாம்பி ரண்டு முடனே*
*ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல*
*அடியார வர்க்கு மிகவே.* (தே. I 85-1)

நாற்சீர்ச் சந்தக் கலிவிருத்தங்கள் இரட்டித்து எண்சீர்ச் சந்த விருத்தம் ஆதலும் உண்டு. (வி. பா. பக். 73)

**எண்வகைச் சந்தங்கள் -**

1. தத்த, தத்தா (2) தாத்த தாத்தா (3) தந்த தந்தா (4) தாந்த தாந்தா (5) தன, தனா (6) தான, தானா (7) தன்ன, தன்னா (8) தய்ய தய்யா என இவை. (வண்ணத்.)

**எழுசீர்ச் சுகந்தி விருத்தம் -**

குறில் ஈற்றுத் தேமாச்சீர் ஏழனோடு இறுதியில் (பெரும்பாலும்) நெட்டெழுத்துப் பெறும் அடிநான்கான் ஆயது (வி. பா. பக். 68)

நேரசையில் தொடங்குவது :

எ-டு : *'மட்ட விழ்ந்த தாரி னானிம் மாந கர்க்கு ளாயிரர்*
*தொட்டெ டுக்க லாவு லம்மொர் தோளி லேந்தி யாடினான்*
*ஒட்டி நாக மோரி ரண்டெ டுக்க லாத கல்லினை*
*இட்ட லர்ந்த போது போல ஏந்த லேந்தி நீக்கினான்'* (சீவக. 690)

நிரையசையில் தொடங்குவது.

எ-டு : *'உறங்கு கின்ற கும்ப கன்ன உங்கள் மாய வாழ்வெலாம்*
*இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்*
*கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே*
*உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்.'* (கம்பரா. 7316)

**எறும்பிடைச் செய்யுள் –**

அளவழிச் சந்தச் செய்யுளுள் நான்கடியும் சீரான் ஒத்து முதலடியும் முடிவடியும் எழுத்தெண்ணிக்கையான் ஒத்து. இடையிரண்டடி எழுத்தெண்ணிக்கை வேறுபட்டுக் குறைந்து வருவது.

*மணிமலர்ந் துமிழ்தரும் ஒளியும் சந்தனத் (14)*
*துணிமலர்ந் துமிழ்தரும் தண்மைத் தோற்றமும் (13)*
*அணிமலர் நாற்றமும் என்ன அன்னவாய் (12)*
*அணிவரு சிவகதி அடைவ தின்பமே. (14)* (சூளாமணி. 2075)

அளவழிப் பையுட் சந்தத்துள் ஒருவகை இது.

*(யா. வி. பக். 517, 518)*

## ஏ

**ஏக, த்வி, ஆதி, லகுக்கிரியா –**

ஓர்இலகு உடையன, இரண்டு இலகுஉடையன ஒருகுரு உடையன, இரண்டுகுரு உடையன என்றிவ்வாறு 26 எழுத்துக்கள் கொண்ட சந்தங்கள் அனைத்திற்கும் அமைத்துக் காட்டித் தொகை கூறல் முறை.

ஒரு சந்தத்திலுள்ள எழுத்துக்களைக் கீழிருந்து மேல் நோக்கி ஒன்றுகூட்டி, 1 என்று எண்களைக் குறித்துக்கொண்டு, பின்னும் அந்த ஒன்றில் தொடங்கி இடமிருந்து வலமாகவும் அவ்வாறே குறித்தல் வேண்டும். பிறகு இரண்டாவது வரிசையாகக் கீழ் இருந்துமேல், ஈற்றயல் தவிர்த்த எண்களைக் கூட்டி எழுதிக் குறித்தல் வேண்டும். எத்தனை எழுத்துக்கள் உளவோ அத்தனையும் இவ்வாறு குறித்து முடியும்வரைச் செய்தல் வேண்டும். அங்ஙனம் குறித்தால் இறுதியில் நிற்கும்


எண்களால் அந்தந்தச் சந்தத்திலுள்ள, எழுத்துக்களில் எத்தனை இலகு எத்தனை குரு என்ற தொகை வரும்.

அடி ஒவ்வொன்றிலும் நான்கு எழுத்துக்களைக் கொண்ட சந்தத்தில் வரும் விருத்தங்கள் பதினாறு; அவற்றுள் மேலே கூறிய வகையில் இலகு குரு அமைப்பினைக் கீழே காணும் படவிளக்கத்தால் அறிக.

(ல என்பது இலகு; கு என்பது குரு ) (வீ.சோ. 137 உரை)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கு | கு | கு | கு | 9. | ல | ல | ல | ல |
| 2 | ல | கு | கு | கு | 10 | கு | ல | ல | ல |
| 3 | கு | ல | கு | கு | 11 | ல | கு | ல | ல |
| 4 | ல | ல | கு | கு | 12 | கு | கு | ல | ல |
| 5 | கு | கு | ல | கு | 13 | ல | ல | கு | ல |
| 6 | ல | கு | ல | கு | 14 | கு | ல | கு | ல |
| 7 | கு | ல | ல | கு | 15 | ல | கு | கு | ல |
| 8 | ல | ல | ல | கு | 16 | கு | கு | கு | ல |

இப்பதினாறிலும் அவ்வமைப்புக் காண்க.




யாவும் குரு (ஓரடி)
குரு 1 லகு 3 (4 அடிகள்)
2 குரு 2 லகு (6 அடிகள்)
1 குரு 3 லகு (4 அடிகள்)
யாவும் லகு (ஓரடி)

## ஒ

**ஒன்பதுவகை இசைப்பா –**

சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்பனவாம் ஒன்பதுவகை இசைப்பாக்கள். (பொ.நிக. 773)

## ஓ

**ஓர் இலகு முதலாக உடைய விருத்தங்களை அறிதல் –**

இன்ன சந்தத்தினையுடைய ஓர் இலகுடைய விருத்தம் எத்தனை? இரண்டு இலகுடைய விருத்தம் எத்தனை? மூன்றி

*லகுடைய விருத்தம் எத்தனை? என்று இப்படி ஏற வினவினால், சந்தத்தில் எழுத்துக்களை வீடு வகுத்து இரண்டு மூன்று நான்கு ஐந்து எனக் கீழ்நின்று மேல் மேல் நிறுத்திப் பின்னையும் இடம் நின்று வலம் நோக்கி முன் வைத்த திரள்களே ஈறாக்கி இரண்டின் வீடு இசையவிட்டுப் பின்பு ஒவ்வொரு பந்தியினும் ஒருவீடு குறைய வகுத்து வீடுதோறும் அதன் அயல் வீட்டிலக்கங்களைத் தொகுத்து வைத்து மேல் நின்று கீழ்நோக்கி எண்ண ஓரிலகு முதலாக உடைய விருத்தங்களாம். அவையெல்லாம் கூட்டி முழுக்குரு இலகுவை இடத் தொகையாம். (வீ. சோ. 137 உரை)*

*'ஏக, த்வி, ஆதி லகுக் கிரியா' காண்க.*

**ஓரொற்று வாரம் –**

*தாளத்தில் ஒரு மாத்திரை பெற்று வரும் இசைச்செய்யுள்.*

*(சிலப். 3 : 136 உரை)* (L)

## க

**கலவைச் சந்தக் கலித்துறை –**

*அ) தேமா புளிமா கலந்து முதல் நான்கு சீர்கள் அமைய, ஐந்தாம்சீர் மாங்காய் அல்லது கருவிளமாக அமைந்த ஐஞ்சீரடி நான்கான் அமைவது. (வி. பா. பக். 57)*

எ-டு : *'கையால் தொழுதே தலைசாய்த் துள்ளங் கசிவார்கள்*
*மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்*
*நெய்யா டுதலஞ் சடையார் நிலாவு மூர்போலும்*
*பைவாய் நாகங் கோடல் லீனும் பாசூரே'* (தே. II 60-3)

*ஆ) முதல் சீரும் மூன்றாம் சீரும் மூன்று மாத்திரை மாச்சீர், இரண்டும் நான்கும் நான்கு மாத்திரையுடைய கூவிளம், ஐந்தாவது ஐந்து மாத்திரையுடைய நீண்ட கூவிளம் என்றமைந்த ஐஞ்சீரடி நான்கானாய கலவைச் சந்தக் கலித்துறையும் உண்டு.*

எ-டு : *'முதலு மூன்றது மாவி னத்தொரு மூன்றெழுத்*
*துதவு சீரதி ரண்டு நான்கொரு நான்கெழுத்*
*துதவு கூவிள மைந்தி லோங்கிய கூவிளம்*
*மதிநு தற்கலை யல்குல் மாந்தளிர் மேனியே'-*

*என்னும் விருத்தப்பாவியற் காரிகை கொள்க.*

இ) மூன்று குற்றெழுத்தை இறுதியிலுடைய ஐந்து மாத்திரையவாய ஐந்து காய்ச்சீரும் இறுதியில் ஒரு நெட்டெழுத்துமுடைய ஐஞ்சீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'கற்பொலிசு ரத்தினெரி கானினிடை மாநடம தாடிமடவார்*
*இற்பலிகொ ளப்புகுது மெந்தைபெரு மானதிட மென்பர்புவிமேல்*
*மற்பொலிக லிக்கடன்ம லைக்குவடெ னத்திரைகொ ழித்தமணியை*
*விற்பொலிநு தற்கொடியி டைக்கணிகை மார்கவரு வேதவனமே'*
(தே. III 76-1)

*'தந்தைமன முந்துதுயர் நந்தஇருள் வந்தவிறல் நந்தன்மதலை*
*எந்தையிவ னென்றமரர் கந்தமலர் கொண்டுதொழ நின்றநகர்தான்*
*மந்தமுழ வோசைமழை யாகவெழு கார்மயில்க ளாடுபொழில்சூழ்*
*நந்திபணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே'.*
(பெரியதி. 5-10-7)

இப்பாடல்கள் இறுதிச்சீர் நெடில் ஒன்று சேர்வதால் நான்கசைப் பூச்சீர்கள் ஆகின்றன.

ஈ) நீண்ட உயிருடைய விளச்சீர் நான்கு, இறுதியில் காய்ச்சீர் ஒன்று என்றமைந்த ஐஞ்சீரடி நான்கான் அமைவது.

எ-டு : *வளங்கிளர் மதியமும் பொன்மலர்க் கொன்றையும் வாளரவும்*
*களங்கொளச் சடையிடை வைத்தவெங் கண்ணுதற் கபாலியார்தாம்*
*துளங்கு நூல் மார்பினர் அரிவையோ டொருபகல் லமர்ந்தபிரான்*
*விளங்குநீர்த் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே"*
(தே. III 90-5)

நீண்ட உயிருடைய விளச்சீர் ஐந்து மாத்திரையவாயின. காய்ச்சீர்கள் எட்டு மாத்திரை அளவு நீள்வன.

உ) ஐந்து மாத்திரைக் காய்ச்சீரானும் முதல் நான்கு சீர்கள் அமைய, ஐந்தாம்சீர் ஏழு மாத்திரைக் காய்ச்சீரானும் கனிச்சீரானும் அமையும் ஐஞ்சீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'மாடகமு றுக்கியிசை பாடுமுனி நீடுபிணி மாற்றுமுறைமை*
*நாடியுரை செய்தலும கிழ்ந்துகழன் மன்னவன யந்துபணியா*
*கூடியநல் லன்பினது கூறுவன ருந்தவக தம்பநகரில்*
*பீடுறவி ருந்தபெரு மானையெவர் பூசனைகள் பேணினர்களே'.*
(விநாயக. இந்திரன் படலம் - 1)

ஊ) முதற்சீரும் கடைச்சீரும் தேமாங்காயும் புளிமாவும்; மூன்றாம் சீர் புளிமாங்காய்; இரண்டாம் நான்காம் சீர்கள் தேமா - என அமையும் ஐஞ்சீரடி நான்கான் அமைவது. ஈற்றுப் புளிமாவிற்கு ஈடாக மாத்திரை மாறாத தேமாவும் தேமாங்காயும் வருதல் அமையும்.

எ-டு : *'தேரோடு சென்ற அசுரன்ம கன்சே ணின் மீண்டு*
*பாரோடு சேர்வான் வருகின்ற பரிசு நோக்கின்*
*காரோடு வானந் தவறுற்று ழிக்கா மர்தாருத்*
*தூரோடு சாய்ந்து மறிக்கின்ற தோர்தோற் றமொக்கும்'*
(கந்த. முதல் நாட். 206) (வி. பா. பக். 56-60)

இவை ஆறுமே பழக்கத்தில் மிக்குவரும் சந்தக் கலித்துறை களாம்.

எ) சந்தக் கலித்துறையில் ஏழு மாத்திரை அமையும் ஐந்தாம் சீராக விளங்காய்ச் சீர் வருதலும் உண்டு.

எ-டு : *'பொய்யுரைத் துலகினில் சினவினார் குலமறப் பொருதுதன்வேல்*
*நெய்யுரைத் துறையினிட் டறம்வளர்த் தொருவனாய்*
*நெறியினின்றான்*
*மையுரைத் துலவுகண் மனைவிபால் வரமளித் தவைமறாதே*
*மெய்யுரைத் துயிர்கொடுத் தமரரும் பெறுகிலா வீடுபெற்றான்'.*
(கம்பரா. 6154) (வி. பா.பக். 80)

ஏ) புளிமா, தேமா, கூவிளம், தேமா புளிமாங்காய் என அமையும் ஐஞ்சீரடி நான்கான் அமைவது.

எ-டு : *'மலையே போல்வான் மால்கட லொப்பான் மறமுற்றிக்*
*கொலையே யொப்பான் கூற்றெறி கர்ப்பான் கொடுமைக்கோர்*
*நிலையே போல்வான் நீர்மையி லாதான் நிமிர்திங்கட்*
*கலையே போலும் காலவெ யிற்றான் கனல்கண்ணான்'.*
(கம்பரா. 4595) வி. பா. பக். 80

**கலிச்சந்த விருத்தம் –**

தமிழில் சந்தப்பாக்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள சந்தக் குழிப்பை அடியொற்றிப் பாடுதலை விடுத்து, வடமொழி மரபையொட்டி மாத்திரையைக் கணக்கிட்டு அடிதோறும் அடிதோறும் இவ்வளவு மாத்திரை வருதல் வேண்டும் என்ற முறைக்கு ஒப்பப் பாடப்படும் கலிவிருத்தப் பாடல்கள். சந்தமாவது மாத்திரையளவால் அமைவது ஆதலின், அம்மாத்திரைத் தொகைகள் ஒழுங்காகவும் அடுக்காகவும் ஒருமுறையைப் பின்பற்றி நிற்றல் செவிக்கு முறையான இன்பம் தரும் என்ற கருத்தில் அமைந்தவை இவை.

இத்தகைய விருத்தங்களில் குறில் ஒரு மாத்திரை, குற்றொற்று இரண்டு மாத்திரை, நெடிலும் நெட்டொற்றும் இரண்டு மாத்திரை, அடியின் இறுதியில் வரும் குறில் இரண்டு மாத்திரை என்று அளவு கணக்கிடப்படும். இரண்டு சமமான அரையடிகள் சேர்ந்து ஒரு முழு அடி ஆகும்போது, முதல்

அரையடியின் இறுதியில் குறில் இருந்தாலும் அதுவும் இரண்டு மாத்திரை பெறும்.

மனோரமா, தோடகம் முதலான அதன் வகைகளைத் தனித் தனியே காண்க (வி.பா. பக். 35-38)

**கவிராசவிராசித விருத்தம் –**

கருவிளஞ்சீர் முன்வரப் பின் கூவிளஞ்சீர்கள் வர ஏழு சீர்களான் அமையும் அடிகள் நான்கான் அமைவது; அடிதோறும் ஈற்றுச்சீர் கூவிளங்காய் ஆம்.

எ-டு :

*'கொடிகளி டைக்குயில் கூவுமி டம்மயி*
*லாலுமி டம்மழு வாளுடைய*
*கடிகொள்பு னற்சடை கொண்டநு தற்கறை*
*கண்டனி டம்பிறைத் துண்டமுடிச்*
*செடிகொள்வி னைப்பகை தீருமி டந்திரு*
*வாகுமி டந்திரு மார்பகலத்*
*தடிகளி டம்மழல் வண்ணனி டங்கலிக்*
*கச்சிய னேகதங் காவதமே'* (தே. ஏஐஐ 10-3)

இதன்கண், இரண்டா மூன்றாமடி முதற்சீர்கள் 'கருவிளம்' என்பதற்கு ஈடாகப் 'புளிமாங்காய்' என வந்தன. (வி. பா. பக். 69)

**காந்தி (1) –**

நான்கு மாத்திரைச் சீர்கள் நான்காகி நேரசையில் தொடங் கும் வெண்டளை யாப்பிற்றாய சந்த விருத்தம்; கலிச்சந்த விருத்தம்.

எ-டு : *'வெய்தா கியகா னிடைமே வருநீ*
*ரைதா தலினோ அயலொன் றுளதோ*
*நொய்தாய் வரவே கமுநொய் திலனால்*
*எய்தா தொழியா னிதுவென் னைகொலாம்'* (கம்பரா. 3603)

அப்பர் அருளிய 'விடந்தீர்த்த பதிகம்' இத்தகையதே (இரண்டாம் பாசுரம் தவிரக் கொள்க) (தே. IV 18)

**காயத்திரி –**

நான்கடிகட்குமாக இருபத்துநான்கு உயிரெழுத்துக்க ளுடைய சந்தம்; அடிதோறும் அவ்வாறு உயிரெழுத்தாக வருவது.

எ-டு : *'கருவி வானமே*
*வருவர் மாதிரம்*
*பொருவி லாமிதே*
*பருவ மாவதே'* (வீ.சோ. 139 உரை.)

**கிருதி (1) –**

எழுத்துவகையால் இருபத்தாறுபேதமாம் எனப்பட்ட சந்தங் களுள் ஒன்று. ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்யாவது பாதம் ஒன்றற்கு இருபது எழுத்துப் பெற்று வருவது.

எ-டு : *'ஒருவேனின் றுயிரன்ன தோகையுரை யுள்ளங்கிழித் தூடுபோம்*
*செருவேறின் றசோகதரு வின்செழுந் தாதுதிரப் போதுகொண்டு*
*பொருவேறின் றான்கொடிய வேனிலான் மதுவுணவுங்*
*கொண்டானன்னோ,*
*வருவேனென் றார்பிரிந்த வஞ்சருரை யிற்கொடிது வாணிலாவும்."*
(வீ. சோ. 139 உரை)

**குருவும் லகுவும் –**

தனிநெட்டெழுத்தும் ஒற்றடுத்த நெட்டெழுத்தும், ஒற்றடுத்த குற்றெழுத்தும் 'குரு'. இஃது ஈரலகு பெறும். இது டகர வடிவிற்று.

தனிக்குற்றெழுத்து 'லகு'. இதற்கு ஓர் அலகு. இது ரகர வடிவிற்று. அடியிறுதிக்கண் வரும் தனிக்குறில் ஒருகால் கூறுமாற்றான் குருவாக ஒலிக்கப்பட்டு ஈரலகும் பெறும்.
(யா. க. 95. உரை)

**கேடு அல்லது நட்டம் –**

உறழ்ச்சி என்னும் பிரத்தாரத்தால் விருத்தங்களின் தொகையை அறியலாகும். ஆயின், இன்ன விருத்தத்தில் இத்தனை யாவது எண்ணுடையது எவ்வகையில் லகு குருக்களின் அமைப்பைப் பெற்றிருக்கும் என்று அறிவதற்கான உபாயமே இத்தெளிவு. நட்டம் என்பதற்கு அறியப்படாதது என்றே பொருள் கொள்ளல் வேண்டும். விருத்தத்தின் எழுத்துக் களின் எண் மிகுந்து கொண்டே (இருபத்தாறு வரை) போகுங்கால். விருத்தங்களின் மொத்தத்தொகை ஆயிரம் பல்லாயிரமாகப் பல்கிப் பெருகுதலின், அவற்றுள் ஒன்றின் (-எளிதில் அறியப்படாத ஒன்றின்) நட்டம் ஆனதின் குரு லகு அமைப்பை அறிவதற்கு எளிய வழி கூறும் தெளிவு இது.

எடுத்துக்காட்டாக, பிரத்தாரத்தில் காட்டிய நான்கெழுத்துக் களைக் கொண்ட அடிகளால் அமையும் விருத்தவகை பதினாறில், இத்தனையாவது விருத்தம் இன்னவகையில் குருலகு எழுத்துக்களைப் பெற்றிருக்கும் என்பதை இந்நட்டம் (-கேடு) என்னும் தெளிவால் அறியும் முறையைக் காண்போம்.

இரண்டாவது எழுத்துக் காண, விருத்தத்தின் எண்ணைப் பாதியாக்கவும், எண் விஷமமானால் ஒன்றனைச் சேர்த்துப் பாதியாக்கவும் வேண்டும்.

*1, 3, 5, 7, 9 போன்ற ஒற்றைப்படை எண்கள் விஷமஎண்கள். இவை வியமன் என்றும் வியனிலை என்றும் கூறப்படும் 2, 4, 6, 8, 10 போன்ற இரட்டைப்படை எண்கள் சம எண்கள்; இவை சமநிலை என்று கூறப்படும்.*

*பின்வரும் முறையில் எழுத்துக்களைப் பகிர்ந்தும் கூட்டியும் செய்தபின் வரும் எண் விஷமமானால் குருவையும், சமமானால் இலகுவையும் இட்டுக் கொள்ளல் வேண்டும்.*

*இனி நான்கெழுத்தடிகளைக் கொண்ட விருத்தங்களில் பதினோராவது விருத்தத்தின் எழுத்தமைப்பு எங்ஙனம் என்றறிய, நட்டம் என்ற தெளிவு முறையைக் காட்டுவோம். (இது குரு லகு குரு லகு என்ற அமைப்புக் கொண்டது.)*

*அ) 11 என்பது விஷம எண்; ஆதலின் முதலில் குரு எழுத்து.*

*ஆ) அதனுடன் ஒன்று கூட்டினால் 11 + 1 = 12.*

*இது சமாண்; ஆகவே இரண்டாம் எழுத்து வரு. இந்த 12-ஐப் பாதியாக்கினால் வருவது 6; (இ) அதனைப் பாதியாக்கினால் வருவது 3. இது விஷமம். ஆகவே மூன்றா மெழுத்து குரு. (ஈ) மூன்றோடு ஒன்று சேர்த்தால் 4; அதன் பாதி 2. இது சமம். ஆகவே நான்காவது எழுத்து இலகு.*

*இனிச் சமமான ஒன்றைப் பற்றி அறிய எடுத்துக்காட்டு:*

*அடிக்கு நான்கெழுத்துக்கள் கொண்ட விருத்தங்களில் பன்னிரண்டாவது எங்ஙனம் அமையுமெனில், காண்போம். (லகு லகு குரு லகு என்பது இதன் அமைப்பு)*

*12 என்பது சமம்; ஆகவே முதலில் லகு. அதன் பாதியும் (6) சமம்; ஆகவே இரண்டாவதும் லகு. ஆறன் பாதி 3; இது விஷமம்; ஆகவே மூன்றாவது குரு. 3+1=4; இதன் பாதி 2; இது சமம். ஆகவே நான்காவது லகு.*

*இவ்வாறே, அனைத்து விருத்தங்களையும் அறியலாகும்.*

*(வீ. சோ. 135)*

## ச

**சக்குவரி –**

*ஒற்று ஒழித்து அடியொன்றற்குப் பதினான்கு எழுத்துக்கள் கொண்ட நாலடி விருத்தம்.*

*எ-டு : 'சந்த நீழ லுலாவித் தண்ணென் றமருந் தெண்ணீர்*
*சிந்து துவலை வீசித் தெண்ணி லாவூ டுலாவு*

*மந்த வலைய மேன வல்லி தகர வாசந்*
*தந்த பொழுது வாழ்வார் தமைவைத் தேகு நண்பர்'*
(வீ. சோ. 139 உரை)

**சகதி –**

ஒற்றொழித்துப் பாதம் ஒன்றுக்குப் பன்னிரண்டு எழுத்தாய்த் தமிழில் வழங்கும் வடமொழி விருத்தம்.

எ-டு :

*'உருண்ட தேர்மேற் செலவுந்த னுள்ளமாம்*
*மருண்ட தேர்மிசை மாதர்கண் மீட்சியுங்*
*கருண்ட வாளுடைக் காளன் ஒருவனே*
*இருண்ட தேர்மிசை யெவ்வா றியங்கினான்'* (வீ. சோ. 139 உரை)

**சங்கியானம் –**

ஸங்கியானம்; 26 எழுத்தளவும் உள்ள சந்தங்களில் வரும் விருத்தங்களின் மொத்தத் தொகை.

நான்கு எழுத்துக்கள் கொண்ட சந்தத்தில் லகு, குரு அமைப்பால் 1 6 வகையென்று, ஏக த்வி ஆதி லகுக் கிரியை என்னும் தெளிவில் அறியப்படும். ('ஏகத்வி ஆதிலகுக் கிரியா' காண்க) அதே தொகைதான் நான்கெழுத்துச் சந்தத்தில் வரும் விருத்தங்களின் தொகையும் ஆம். அடுத்து, ஐந்தெழுத்துக்கள் கொண்ட சந்தத்தில் நான்கெழுத்துச் சந்தத் தொகையின் இருமடங்காகிய 32 விருத்தங்கள்; ஆறு எழுத்துக்கொண்ட சந்தத்தில் முன்னதினும் இருமடங்கு எனவே, 64 விருத் தங்கள்; ஏழெழுத்துச் சந்தத்தில் 128; எட்டெழுத்துச் சந்தத் தில் 256; இவ்வாறே 26 எழுத்துக்கள் கொண்ட சந்தத்தில் வரும் விருத்தங்களின் தொகை 6, 71, 08, 864 ஆம்.

*(வீ. சோ. 138 உரை)*

**சங்கிருதி –**

ஒற்று ஒழித்து ஓரடிக்கு 24 எழுத்துக் கொண்டதாய்த் தமிழில் வழங்கும் வடமொழிச் சந்தம்.

எ-டு : *'உடைய தானவ ருடைய வென்றவ உடைய தாணம சரண மாகுமே.'*

இது சங்கிருதி அமைந்த நாலடி விருத்தத்துள் ஓரடி. நாலடி யுமமைந்த விருத்தம் வருமாறு :-

*அண்டர் குலபதி யாம்விடை வாகன*
*னம்பொ னடிமலர் நாறிடு சேகர*
*னெண்டி சையுமனு நீதிசெய் கோலின*
*னெங்கு மொருகுடை யாலிடு நீழலன்*

*மண்டு கிரணசி காமணி மௌலியன்*
*வண்டு மதுநுகர் தாதகி மாலையன்*
*மிண்டு முதுபுலி யேறுப தாகையன்*
*வென்றி வளவனை யார்நிக ராவரே?* (வீ. சோ. 139 உரை)

**சந்த அடி** –

*நாலெழுத்து முதலாக இருபத்தாறு எழுத்தின்காறும் உயர்ந்த, தம்முள் ஒத்த, அடியான் இயன்ற விருத்தம் அள வியற் சந்தமாம். அவ்விருத்தத்தின் அடி சந்த அடி என்றவாறு. (யா. வி. பக். 476)*

**சந்தக் கலித்துறை** –

*சிந்தாமணி சூளாமணி குண்டலகேசி நீலகேசி அமிர்தபதி என்ற இவற்றின் முதற்பாட்டு வண்ணத்தான் வருவனவற்றில் நேரசை முதலாய் வரின் ஓரடிக்கு எழுத்து 14, நிரையசை முதலாய் வரின் ஓரடிக்கு எழுத்து 15. இவை சந்தக் கலித்துறை யாம்.*

*'மூவா முதலா உலகம்மொரு மூன்று மேத்தத்*
*தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி*
*ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வன் என்ப*
*தேவாதி தேவன் அவன்சேவடி சேர்து மன்றே'* (சீவக. கடவுள்.)

*'மதியம் கெடுத்த வயமீனெனத் தம்பி மாழாந்*
*துதிதற் குரியாள் பணியாலுடன் ஆய வாறும்*
*நிதியின் னெறியின் அவன்தோழர் நிரந்த வாறும்*
*பதியின் அகன்று பயந்தாளைப் பணிந்த வாறும்'.* (சீவக. பதிகம். 28)

*இவை முறையே ஓரடிக்கு எழுத்துப் பதினான்கும் பதினைந் தும் பெற்று வந்தன. (மூன்றாம் சீர் புளிமாங்கனியாக வருதல் குறித்துணரத் தகும். இரண்டாம் பாடல் ஈற்றடிகளில் அச்சீர்கள் மாங்காய் வாய்பாடாக வருதலின் ஓரெழுத்துக் குன்றிவருதல் காண்க.) (யா. வி. பக். 520, 521)*

**சந்தக் கலி விருத்தம்** –

நேரசை முதலாகத் தொடங்குமடி பதினோரெழுத்தும், நிரையசை முதலாகத் தொடங்குமடி பன்னீரெழுத்தும் கொண்டு வரும் கலிவிருத்தம் சந்தக்கலி விருத்தமாம்.

*'முன்றி லெங்கு முருகயர் பாணியும்*
*சென்று வீழரு வித்திர ளோசையும்*
*வென்றி வேழ முழக்கொடு கூடிவான்*
*ஒன்றி நின்றதி ரும்மொரு பாலெலாம்'* (சூளா. 13)

*'அணங்க னாரன ஆடல் முழவமும்*
*கணங்கொள் வாரணக் கம்பலைச் செல்வமும்*
*மணங்கொள் வார்முர சும்வயல் ஓதையும்*
*இணங்கி எங்கும் இருக்குமோர் மாடெலாம்'.* (சூளா. 15) (யா.வி. பக். 520)

இவை முறையே அடி நேரசையிலும் நிரையசையிலும் தொடங்கி அடிக்கு பதினோரெழுத்தும் பன்னீரெழுத்தும் பெற்று வந்தன.

தமிழில் யாப்பில் கூறப்படும் தேமா புளிமா முதலிய சீர்களால் அமைக்கப்பட்டு மாத்திரை எண்ணிக்கைக்கும் பெரும்பான்மையும் ஒத்து வரும் கலிப்பாக்கள் சந்தக் கலி விருத்தமாம். இவை வடமொழி விருத்தங்களோடு ஒருபுடை ஒத்து வருதலு முண்டு. (வி. பா. சந்தவிருத்தம் 5)

I அ) நான்கு மாத்திரையுடைய தேமா புளிமாச் சீர்களால் ஆக்கப்பட்ட நாற்சீரடி நான்கு கொண்டு வருவது :

எ-டு : *'நீரும் மலரும் நிலவும் சடைமேல்*
*ஊரும் மரவம் முடையா னிடமாம்*
*வாரும் மருவி மணிபொன் கொழித்துச்*
*சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே'* (தே. VII . 93-1)

'கொழித்துச்' என்றசீர் 5 மாத்திரை; ஏனைய 4 மாத்திரை; யாவும் மாச்சீர்களே.

ஆ) இக்கலி விருத்தம் இரட்டித்து எண்சீர் நாலடியாய் வருவதுண்டு. அதுபோது இஃது எண்சீர் ஆசிரிய விருத்த மாகும்.

II அ. நான்கு மாத்திரையுடைய புளிமாச்சீர் நான்கு கொண்ட நான்கு அடிகளான் அமைவது; அடியிறுதி நெட்டெழுத் தாவது

எ-டு : *'வடிவே லதிகன் படைமா ளவரைக்*
*கடிசூ ழரணக் கணவாய் நிரவிக்*
*கொடிமா மதினீ டுகுறும் பொறையூர்*
*முடிநே ரியனார் படைமுற் றியதே'.* (பெரியபு. 41 : 27)

(மாத்திரை கொண்டு நோக்கக் குற்றொற்று நெட்டெழுத்துப் போல்வதாம்)

ஆ. நான்கு மாத்திரையுடைய புளிமாச்சீர் மூன்றும் இறுதிச் சீராகிய புளிமாங்காய் ஒன்றும் அமைந்த அடி நான்காய் வருவது.

எ-டு :*'பலவும் பயனுள் ளனபற் றுமொழிந்தோம்*
*சுலவும் மயில்கா முறுபே டையொடாடிக்*

*குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டந்*
*நிலவும் பெருமா னடிநித் தநினைந்தே'* (தே. I 31-6)

'பொழில்சூழ்ந்' என்பது நீங்கலாக நாலடியிலும் முதல் மூன்று சீர்களும் 4 மாத்திரை அளவின. அது சிறுபான்மைத்தாக 5 மாத்திரை கொண்டது.

இ) இவ்வகையில் அடிதோறும் முதற்சீர் நேரசையில் தொடங்குவது.

எ-டு : *'சூலப் படையான் விடையான் திருநீற்றான்*
*காலன் தனையா ருயிர்வவ் வியகாலன்*
*கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டத்*
*தேலங் கமழ்புன் சடையெந் தைபிரானே'* (தே.I 31-3)

ருயிர்வவ் - பொழில்சூழ்ந் - கமழ்புன் - நீங்கலான முதல் மூன்று சீர்களும் நாலடியிலும் 4 மாத்திரை அளவின. இவை மூன்றும் சிறுபான்மையவாக 5 மாத்திரை பெற்றன.

**சந்தக்குழிப்பு –**

சந்தச் செய்யுளின் ஓசை வாய்பாடு. சந்தங்களில் சிலபல சேர்ந்து ஒரு துள்ளலாம்; துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பாம். 'சந்தப்பா' காண்க.

எ-டு : தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானந்த தனதானா

என்னும் வாய்பாட்டால் வரும் சந்தக்குழிப்பு :

*பாவையரை யேவிரும்பி நாளுமவ ரோடுறைந்து*
*பாழுமன மேமெலிந்து - நலியாதே*
*பூவலய மேலனந்த லோபிகளை யேபுகழ்ந்து*
*போதவறி வேயிழந்து - மெலியாதே*
*நாவலர்க ளோடுகந்து பூதிமணி யேயணிந்து*
*ஞானசிவ யோகமென்று - புரிவோனே*
*ஆவலுடன் மாமுகுந்த னோடுமய னார்வணங்கும்*
*ஆதிபுரி வாழவந்த - பெருமாளே!*

'நலியாதே' போன்ற தனிச்சொற்கள் சந்தப்பாக்களில் 'தொங்கல்' எனப்படும்.

**சந்தங்கள் பதினாறு –**

(1) தத்த (2) தாத்த (3) தந்த (4) தாந்த (5) தன (6) தான (7) தன்ன (8) தய்ய என்பன எட்டும் இவற்றின் ஈற்றின் நீட்டமான (1) தத்தா (2) தாத்தா (3) தந்தா (4) தாந்தா (5) தனா (6) தானா (7) தன்னா (8) தய்யா என்பன எட்டும் ஆகப் பதினாறாம்.

(வண்ணத். 4)

**சந்தங்களின் துள்ளல் –**

*சிலவகைச் சந்தங்களைப் புணர்ப்பது ஒரு துள்ளல்.*
*(வண்ணத். 85)*

**சந்தங்களின் கலை –**

*மூன்று சந்தக் குழிப்புக்களின் பின்னர், ஒரு தொங்கல், ஒரு தாழிசை, ஒரு துள்ளல் இவற்றைப் பாடுதல் ஒரு கலை என்று கூறப்படும். (வண்ணத். 87)*

*இருதுள்ளல் கொண்ட கலையால் வந்த வண்ணம்.*

*மின்னலையொத் தேயுற் றிருக்கின்ற வாழ்விலே*
*வெம்மையுறத் தான்மிக் கிளைப்புண் டிராமலே*
*யின்னலறுத் தேசிற் சுகத்தின்கண் மேவுமா*
*என்னையெடுத் தாணற் றமிழ்ச்சந்த மோதுவேன்*
*வன்னமலர்ச் சோலைத் திருச்செந்தில் நாயகா!*
*வண்ணமிசைப் பாரைப் புரக்குந்த யாபரா!*
*தென்னணிவெற் பானுக் குவப்பொன்று தேசிகா!*
*சென்னைநகர்க் கோயில் திருத்தண்ட பாணியே!* (வண்ணத். 87)

**சந்தங்களின் தொகை –**

*1. தத்த, தத்தா, 2) தாத்த, தாத்தா, 3) தந்த, தாந்தா, 4) தாந்த, தாந்தா, 5) தன, தனா, 6) தான, தானா, 7) தன்ன, தன்னா, 8) தய்ய, தய்யா என எட்டு. (வண்ணத். 4)*

**சந்தங்களின் தொடர்ச்சி இயல்பு –**

*குறில் நெடில் இவற்றின் சந்தம் 'தனா'; குறில் நெடில் ஒற்று வரின் இத் 'தனா' என்னும் சந்தத்தைத் 'தனான்' என்னும் சந்தம் போல மனத்திற்கொண்டு கணக்கிடுக.*

*எ-டு : கடாம், வரால் (வண்ணத். 83)*

**சந்தங்களின் மதிப்பியல்பு –**

*வன்மை, மென்மை, இடைமை என்னும் மூவின மெய்களுள் ளும் சந்தியில் ஏற்படும் தோன்றல் திரிதல் கெடுதல்களை உட் கொண்டு அச்சந்திக்கு ஏற்பச் சந்த வாய்பாடு கொள்ளுதல்.*
*(வண்ணத். 84)*

**சந்தங்களின் விகாரம் –**

*மெலித்தலால் தய்யச் சந்தம் 'தன்ன' எனவும், அது 'தன' எனவும் ஆகும்.*

*எ-டு :*

*நெய்நி - தய்ய; நெய்ந்நி - தன்ன*
*வர்ம - தய்ய; வர்ம்ம - தன்ன*

*தொய்வு - தய்ய, தன; செய்கை - தய்ய, தன*
*சண்மு - தன்ன, தன; மன்வில் - தன்ன, தன (வண்ணத். 82)*

**சந்தங்களுக்கு உறழ்ச்சி முதலிய ஆறு தெளிவுகள் –**

*அளவியற் சந்தங்களின் பெருக்கத் தொகையும் பரப்பும் தெளிதற்குத் துணையாகின்றமையின் இவை 'தெளிவு' எனப் பட்டன. அவை ஆறாவன : 1) உறழ்ச்சி (பிரத்தாரம்), 2) கேடு (நட்டம்), 3) உத்திட்டம் (இது நித்திட்டம் எனவும்படும்), 4) ஓர் இலகு உடையன, இரண்டு இலகு உடையன, ஒரு குரு உடையன, இரண்டு குரு உடையன என்றிவ்வாறு சந்தங்கள் அனைத்திற்கும் அமைத்துக்காட்டி (26 எழுத்துக்கள் கொண்டதாக)த் தொகை கூறுதல். (இது வடமொழியில் 'ஏக த்வி ஆதி லகுக்கிரியா' எனப்படும். வடநூல் மரபில் 'ல' எனும் எழுத்து இலகுவையும் 'கு' எனும் எழுத்து குருவையும் குறிக்கும்), (5) 26 எழுத்தளவும் உள்ள சந்தங்களின் விரிவினைக் காட்டி இத்தனை என்று கூறும் விருத்தத் தொகை (ஸங்கியானம்), 6) நில அளவு (இச் சந்தங்கள் அனைத்தையும் குறித்த அளவுடன் நிலத்தில் வரைந்து பார்க்குங்கால், ஒவ்வொன்றும் இத்தனை நிலப்பரப்பினைக் கொள்ளும் என்ற அளவு) என்பன. (வீ. சோ. 133 உரை)*

**சந்தங்களைப் பிரத்தரித்துக் காட்டுதல் –**

*பிரத்தாரம் செய்தலாவது உறழ்ச்சி செய்தல்.*

*அனைத்தும் குருவாய் அமைந்த அடியொன்றில் (1 முதல் 26 எழுத்து வரை பெற்றுள்ள எவ்விருத்ததினுடையதாயினும்) குருவின் கீழே இலகு எனக் குறித்துக் கொண்டால் முதல் வகை கிடைக்கும்.*

*இதுபோலவே அடுத்த வகையை முதலாவது குருவாகவே அமைய இரண்டாவதை இலகு எனக் குறித்துக்கொண்டால், இரண்டாம் வகை கிடைக்கும். இதுபோலவே, அனைத்தும் இலகுவே கொண்ட அடியிலும் செய்க.*

*உதாரணமாக, அடிக்கு நான்கு எழுத்துக் கொண்ட ஒரு விருத்தம் பிரத்தாரம் செய்யும்போது 16 வகையாக உறழ்ச்சி பெறுவது காண்க. குரு என்பதைக் 'கு' என்னும் எழுத்தாலும், இலகு என்பதை 'ல' என்னும் எழுத்தாலும் குறிப்பது மரபு.*

1. கு கு கு கு
2. ல கு கு கு
3. கு ல கு கு

4. ல ல கு கு
5. கு கு ல கு
6. ல கு ல கு
7. கு ல ல கு
8. ல ல ல கு

இவை எட்டும் அனைத்தும் குருவான அடியின் பிரத்தாரம்.

9. ல ல ல ல
10. கு ல ல ல
11. ல கு ல ல
12. கு கு ல ல
13. ல கு ல ல
14. கு ல கு ல
15. ல கு கு ல
16. கு கு கு ல

இவையெட்டும் அனைத்தும் இலகுவான அடியின் பிரித்தாரம்.

இது நிலை (பிரதிட்டை) என்னும் பெயரைக் கொண்ட ஓரடிக்கு நான்கு எழுத்துக்கொண்ட விருத்தத்தின் பிரத்தாரம்.

இவ்வாறு ஐந்து எழுத்தடி விருத்தங்களைப் பிரத்தாரம் செய்தால், 32 வகைப்படும். இதுபோலவே 26 எழுத்து வரையுடைய அடிகளைக் கொண்ட விருத்தங்களை பிரத்தாரம் செய்தால், ஒன்று ஒன்றைவிட அடுத்ததற்கு இருமடங்கு வகைகள் வரும்; ஆறு எழுத்திற்கு 64; ஏழ் எழுத்திற்கு 128, அவ்வாறே இறுதிவரை செய்து காண். (வீ. சோ. 134 உரை)

**சந்தத் தாண்டகம் –**

சந்தஅடி பலவாயும், தாண்டகஅடி சிலவாயும் வருவன வற்றைச் சந்தத் தாண்டகம் என்பர் ஒரு சாரார்.

சந்தஅடி சிலவாயும், தாண்டகஅடி பலவாயும் ஓசைகொண்டு வருவனவற்றைத் ‘தாண்டகச் சந்தம்’ என்பர்.

எ-டு :

‘அங்குயிலின் அவிரொளியால் அருண மாகி
அணியாழி மரகதத்தால் பசுமை கூர்ந்து
மங்கலம் சேர் நூபுரத்தால் அரவம் செய்யும்
மலரடியை மடவன்ன மழலை ஓவாச்

*செங்கமல வனமென்று திகைத்த போழ்தில்*
*தேமொழியால் தெருட்டுதியோ செலவி னாலோ?*
*தொங்கலம்பூங் கருங்கூந்தல் சுடிகை நெற்றிச்*
*சுந்தரி! நிற் பணிவார்க்கென் துணிவு தானே!"*

ஒரு சாரார், சந்தஅடி பலவாய் வருவனவற்றைச் 'சந்தத் தாண்டகம்' எனவும், தாண்டகஅடி பலவாய் வருவன வற்றைத் 'தாண்டகச் சந்தம்' எனவும், இருவகை அடியும் ஒத்து வருவனவற்றைச் 'சமசந்தத் தாண்டகம்' எனவும் வழங்குவர். (யா. வி. பக். 486)

**சந்தத்தில் ஆய்தம் –**

சந்தத்தில் ஆய்தம் இடையின ஒற்றுடன் உறழும். (எ-டு. 'அஃதே; எய்தா') (வண்ணத். 3)

**சந்தத்தில் ஐ ஔ –**

ஐயும் ஔவும் ஈற்றில் குறளாயும், இடையிலும் முதலிலும் அய், அவ் எனக் குறில் அடுத்த ஒற்றாயும் நெட்டெழுத்தின் தன்மை யாண்டும் பெறாது சந்தத்தில் கணக்கிடப்படும்.

(வண்ணத். 2)

**சந்தத்தில் மெலித்தல் இயல்பு –**

தன்னவும் தய்யவும் ஆகிய சொற்களில் ஒற்றின்பின் வரும் உயிர்மெய் வேறாயின், சந்தி வேற்றுமையால் 'தன' என்னும் சந்தம் ஆகும்.

எண்ண என்பது எண எனவும், சொன்ன என்பது சொன எனவும், செய்ய என்பது செய எனவும், கொள்ள என்பது கொள எனவும் வரின், தன்ன, தய்ய என்ற சந்தங்கள் 'தன' என்ற சந்தமாகும். (வண்ணத். 82)

**சந்தத்தின் தொகை, அளவு முதலியன –**

அத்துவயோகம் என்னும் நில அளவு.

விருத்தங்களைத் தரையில் பிரத்தாரம் செய்து வரைவதால் நிறையும் நிலத்தின் அளவு. எல்லாவகைச் சந்தங்களிலும் அமையும். பல்லாயிரக்கணக்கான விருத்தங்களையும் விரற்கிடை போன்ற அளவுகள் வைத்து வரைவதால் அதன் பரப்பு இவ்வளவு என்று கூறும் அளவு எனும் தெளிவு பிரத்தியயம் ஆம்.

இவ்விருத்தங்கள் சமம், விஷமம், அர்த்தசமம் என்னும் முறையில் பார்க்கும்போது கோடிக்கணக்கில் விரியும். இவற்றைத் தரையில் ஓரெழுத்திற்கு ஓரங்குலம் இடைவெளி

விட்டு வரைந்துபார்க்க அவை அடையும் பரப்பின் அளவைப் பற்றிய இத்தெளிவில், ஒன்றையோ இரண்டையோ விடுவ தும் அல்லது கூட்டிக் கொள்வதும் போன்ற மாறுபட்ட கருத்துக்கள் வடமொழி நூல்களில் காணப்படுகின்றன. தமிழ்மரபிற்கேற்ப இது வீரசோழியத்திலும் யாப்பருங்கல விருத்தியிலும் கணக்கிட்டுக் கூறப்படுகிறது. விரற்கிடை களைக் கூட்டிச் சாண் முழம் கோல் கூப்பீடு காதம் என்னும் நிலஅளவுகளும் கூறப்பட்டு. 26 எழுத்துள்ள 'உற்கிருதி' என்னும் சந்தத்திற்கு 699 காதமும் 101 கோலும் 1 முழமும் 7 விரலும் என்று நிலஅளவைத் தொகையும் கொடுக்கப்பட் டுள்ளது. இதன் விரிவினை யா.வி. பக். 501-512 வரை காண்க.

சமம் - நான்கு அடிகளும் எழுத்தும் அலகும் ஒத்துவரும் விருத்தம். வியமம் (விஷமம்) - நான்கு அடிகளும் தம்முள் ஒவ்வாது வரும் விருத்தம்.

பாதிச் சமம் - (அர்த்தசமம்) முதலாம் அடியும் மூன்றாமடியும் ஒருவகையிலும், இரண்டாமடியும் நான்காம் அடியும் வேறு வகையிலும் வரும் விருத்தம். (வீ. சோ. 139)

**சந்தத்தின் தொகை அறியும் விதம் –**

நான்கு எழுத்துக்கள் கொண்ட சந்தத்தில் லகு, குரு அமைப்பால் 16 வகை என்று, 'ஏகத்வி ஆதி லகுக்கிரியா' என்ற தெளிவால் அறியப்படும் (அத்தலைப்புள் காண்க) அத் தொகையேதான் நான்கு எழுத்துச் சந்தத்தில் வரும் விருத்தத்தின் தொகையும் ஆம். அடுத்த ஐந்து எழுத்துக் கொண்ட சந்தத்தில், நான்கு எழுத்துக் கொண்ட சந்தத் தொகையின் இருமடங்கு ஆகிய 32 விருத்தங்கள். ஆறு எழுத்துக் கொண்ட சந்தத்தில், முன்னதினும் இருமடங்கு எனவே 64 விருத்தங்கள்; ஏழு எழுத்து 128; எட்டெழுத்து 256; இவ்வாறே 26 எழுத்துக் கொண்ட சந்தத்தில் வரும். விருத் தங்களின் தொகை 6,71,08,864 (ஆறு கோடியே எழுபத்தொரு நூறாயிரத்து எண்ணாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு) (வீ. சோ. 138 உரை)

விருத்தங்களின் தொகை 6, 71, 08, 864 என்பது.

**சந்த தாண்டகங்களில் எழுத்து எண்ணல் –**

சந்தம், தாண்டகம் இவற்றுள் எழுத்து எண்ணும்வழிக் குற்றுகரம், குற்றிகரம் இவற்றையும் எழுத்தாகவே கொண்டு கணக்கிடல் வேண்டும். (யா. வி. பக். 486)

**சந்தப்பா –**

*தாளஅறுதிக் கேற்ப ஓசையைக் கொண்டு அமைக்கப்படும் பாக்கள். இவற்றின் வகைகளை வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்னும் நால்வகைப் பாக்களின் தாழிசை துறை விருத்தம் என்னும் இனங்களின் அமைப்புக்களில் காணலாம். விருத்தங்களிலேயே இவை மிகுதியும் பயிலும். சந்தக்குழிப் பினை ஆதாரமாகக் கொண்டு வருவன சந்தப்பா எனலாம்; வண்ணப்பாவும் அது.*

*சந்தங்களில் சிலபல சேர்ந்து ஒரு துள்ளலாம். துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பாம்; குழிப்பு ஒன்றும் ஒருசிறு தொங்கல் துள்ளலும் சேர்ந்து ஒரு கலையாம். கலை எட்டுக் கொண்டது வண்ணமாம். சந்தங்கள் 'தத்த' முதலாகப் பதினாறு ஆகும்.*

**சந்தப்பாச் சீர்களிடை வழுவமைதி –**

*1. தேமா புளிமா புளிமாங்கனி, தேமா, தேமா என்ற 5 சீரடியுடைய நான்கடிப் பாடல் பின்வருமாறு:*

எ-டு : *'கால்வா னகத்தே குடைவெய்யவன் காய்க டுங்கட்*
*கோல்மாய் கதிர்புல் லுளைகொல்சினக் கோள ரிம்மா*
*மேல்பால் மலையிற் புகவீங்கிருள் வேறி ருந்த*
*மால்யானை யீட்ட மெனவந்து பரந்த தன்றே'* (கம்பரா. 882)

*'நொய்தாங் குழவி யெனக்கொள்சில நோன்மை நாடின்*
*வெய்தா மவுணக் குழுவோரினும் வெய்யன் யாரும்*
*எய்தாத மாய முளனாலிவன் றன்னை வெம்போர்*
*செய்தாடல் கொள்வ மிவனென்றுதெ ரிந்து சூழ்ந்தார்'*
(கந்தபு. I 14-42)

*'மால்யானை யீட்டம்', தேமா முன் நிரை வரவேண்டியவிடத்துத் தேமாங்காய் முன் நேர்வந்து ஓசை கெடாமல் நின்றவாறு.*

'எய்தாத மாயம்', 'செய்தாடல் கொள்வ' என்பனவும் அது.

*முதற்பாடல் நான்காமடியில் புளிமாவும் (பரந்த) தேமாவும் (யீட்ட) இடம் மாறி நின்றவாறு. 'மெனவந்து' என்று புளிமாங்காய் வந்தது.*

*2. ஒரு சீராகவே தேமாவோ புளிமாவோ வரலாம் என்ற இடங்களில் புளிமாச்சீரின் முதல் எழுத்தைப் பிரித்து முன் சீருடன் கூட்டி அதனைத் தேமாவாகச் செய்வது கூடாது.*

*'சென்று கருத்தை யின்றே தேரினை வருதி என்றான்'* என்பதனைச்

*'சென்றுக ருத்தை யின்றே தேரினை வருதி என்றான்'* எனப் பிரித்துப் புணர்ப்பது கூடாது.

3. ஆயினும், மொழிகளின்வழியேதான் சீர்கள் செல்ல வேண்டும் என்னும் வரையறையின்மையின், மொழி முதலி லுள்ள எழுத்து முதற்சீர் இறுதியிலும், மொழிக் கடையி லுள்ள எழுத்து அடுத்த சீர் முதலிலும் சேர்ந்து வகையுளி யாகி ஓசைநயம் கருதி ஒலிக்கப்படலாம்.

எ-டு : *'இறந்தனர்பி றந்தபயன் எய்தினர்கொ லென்கோ*
*மறந்தனர நிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ'* (கம்பரா. 5291)

எனவும்,

எ-டு : *'என்றென் றுயிர்விம் மியிருந் தழிவாள்*
*மின்றுன் னுமருங் குவிளங் கிழையாள்'* (கம்ப. 5237)

எனவும் வருவன காண்க.

4. மெய்யொலியைச் சந்தப்பாக்களில் தேவைப்பட்டபோது கொண்டு மற்றைய இடங்களில் நீக்கி விடலாம்.

எ-டு : *'**நீண்**டவிழி நேரிழைதன் மின்னினிற மெல்லாம்*
*பூ**ண்**டதொளிர் பொன்னனைய பொம்மனிற மெய்யே*
*ஆ**ண்**டகைதன் மோதிரம டுத்தபொரு ளெல்லாம்*
*தீ**ண்**டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ'(கம்ப. 5295)*

இவ்வொற்றுக்கள் நீக்கப்பட்டால்தான் இப்பாடல் வனமயூர விருத்த விதிக்குப் பொருந்தும். (முதற்சீர்களிற் காணப்படும் ணகர ஒற்று)

5. ஒரு மாத்திரை மிக்கோ குறைந்தோ வருவதால் ஒரு விருத்தத்தின் பெயர் மாறிவிடாது.

எ-டு : *'இனமுற என்ன வுள்ள கரத்தி லொன்ற தெனலாலி தென்ன தெனலால்*
*மனமுநீ யல்ல வென்ற வதனாலு முந்து மதியல்ல வந்த வகையே'.*

'இனமுற' என்பதனை அடுத்த 'மனமுநீ' என்பது ஒரு மாத்திரை மிக்கதேனும் எண்சீர்க் சந்தவிருத்த இலக்கணத்தில் திரியாது.

எ-டு : *'செய்தா யேனும் தீவினை யோடும் பழியல்லால்*
*எய்தா தெய்தா தெய்தினி ராமன் னுலகீன்றான்.*
*வைதா லன்ன வாளிகள் கொண்டுன் வழியோடும்*
*கொய்தா னன்றே கொற்றமு டித்துன் குழுவெல்லாம்'.*
(கம்பரா. 3249)

இப்பாடலில் மூன்றாமடியின் இரண்டாஞ்சீர் ஏனை அடிகளின் இரண்டாம்சீர் போல 4 மாத்திரையாகாமல் 3 மாத்திரையாகக் குறைந்து நின்றதேனும் அஃது ஒன்றுபற்றி இம் மத்தமயூர விருத்தம் தவறு என்று கோடல் கூடாது.

*6. மாத்திரையே கணக்கிடப்படும் சந்தவிருத்தங்களில் நேரசைச் சீருக்கு அதே மாத்திரையுடைய நிரையசைச் சீரும், நிரையசைச் சீருக்கு அதே மாத்திரையுடைய நேரசைச்சீரும் மற்ற சீர்களுக்கு அவ்வளவே மாத்திரையுடைய வேறுசீர் களும் சிறுபான்மை கொள்ளப்படலாம்.*

எ-டு : *'மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்*
*எண்ணுளா ரியலுளார் இசையுளார் திசையுளார்*
*கண்ணுளா ராயினார் பகையுளார் கழிநெடும்*
*புண்ணுளா ராருயிர்க் கமுதமே போலுளார்'.* (கம்பரா. 3788)

*இப்பாடலடிகளில் 2, 3, 4 ஆம் சீர்கள் நேருக்கு ஒப்பாக நிரையில் தொடங்கினும் 5 மாத்திரை என்னும் அளவினை மாறாமையின் ஏற்றுக் கொள்ளப்படும்.*

**சந்தப்பாட்டு –**

*நான்கு முதல் 26 எழுத்து வரையுள்ள அடிகள் நான்கு கொண்ட பாவகை. சந்தவிருத்தமும் சந்தப்பாட்டு எனப்படும். (திவா. பக். 233).*

**சந்தப் பிறழ்ச்சி இயல்பு –**

*குறிலுடன் இடையினத்தொற்றும் மெல்லினத்து உயிர்மெய் யெழுத்தும் ஒன்றினும், அவற்றொடு மீண்டும் மெல்லொற் றோ இடையொற்றோ வந்து அடுப்பினும் தன்ன என்ற சந்தமும் தய்ய என்ற சந்தமும் ஆகிய இரண்டும் ஏற்கும்.*

*எ-டு : பொய்மை, வர்மம்*

*குறிலையடுத்து இடையொற்றும் அதனை அடுத்து மெல் லொற்றும் அடுத்து மெல்லின உயிர்மெய்யும், அடுத்து இறுதியில் மெல்லொற்றோ வல்லொற்றோ வரினும் தன்ன, தய்ய என்ற இரண்டு சந்தத்திற்கும் பொருந்தும்.*

*எ-டு : மெய்ம் மெய். (வண்ணத். 80, 81)*

**சந்தம் –**

*1) செய்யுளின் வண்ணம் 2) வேதத்தில் வரும் யாப்பிலக் கணத்தைக் கூறும் வேதாங்க நூல்; 'கற்பங்கை சந்தங்கால்' (மணி. 27 : 100) 3) கவிதை (சூடா XI- பக். 35) 4) சந்தப்பாட்டு; 4 எழுத்து முதலாக 26 எழுத்தின் காறும் உயர்ந்த 23 அடியானும் வந்து அடியும் எழுத்தலகும் ஒத்தும் ஒவ்வாதும் வருவன.(யா. வி. பக். 477 - 482)*

*எ-டு :*

*தத்த - பத்தி, ஒற்று, சிட்டன், நெய்த்து, மெய்ச்சொல், கர்த்தன்.*

*தாத்த - காற்று, பாட்டர், கூத்தன், பார்ப்பு, தூர்த்தன், தாழ்த்தல்.*

*தந்த - மஞ்சு, கொண்கர், கந்தன், மொய்ம்பு, மொய்ம்பர், மொய்ம்பன்.*

*தாந்த - வேந்து, வேந்தர், பாங்கன், பாய்ந்து, சார்ங்கர், சார்ங்கம்*

*தன - குரு, தவர், சுதன்*

*தான - காது, சூதர், பாதம், கேள்வி, சார்கண், கூர்முள், மான்மி, தேன்வி, மாண்மன், கூன்வில், மான்மர், மாண்வின்.*

*தன்ன - கண்ணி, மென்வி, அண்ணன், பொன்வில், முன்னர், மென்வென்.*

*தய்ய - வள்ளி, செய்தி, வள்ளல், செய்தல், மெய்யன், செய்கண்.*

*தத்தா - அத்தா, அற்றார், தொட்டான், பொய்க்கோ, நெய்க்கோல், மெய்க்கோன்.*

*தாத்தா - சாத்தா, ஆற்றார், மாற்றான், வேய்ப்பூ, வாய்த்தோர், சீர்க்கோன்.*

*தந்தா - அந்தோ, தங்கார், வந்தேன், மொய்ம்பா, மொய்ம் போர், மொய்ம்போன்.*

*தாந்தா - சேந்தா, வாங்கார், நான்றான், நேர்ந்தோ, சார்ந்தோர், மாய்ந்தான்.*

*தனா - குசா, சிறார், கவான்.*

*தானா - தாதா, போகார், மேவான், ஓர்பூ, கூர்வேல், சேர்மான், கேண்மோ, ஆன்வா, ஆண்மான், கூன்வாள், வான்மேல், தேன்வீண்.*

*தன்னா - அண்ணா, மன்வா, முன்னோன், அன்னோர், பொன்வேல், தண்வான்.*

*தய்யா - மெய்யே, நொய்தோ, தள்ளார், செய்தார், வல்லோன், ஒல்கேன்.*

*(வண்ணத். 12, 23, 32, 42, 50, 60, 70, 76; 17, 27, 37, 47, 53, 67, 73, 79.)*

**சந்தம் தாண்டகம் பற்றிய பிறர்கருத்து –**

காக்கைபாடினியாரும் பாட்டியலுடையாரும் வாய்ப்பிய முடையாரும் சந்தம், தாண்டகம் இவற்றை இனத்தின்பாற் படுத்து வழங்குவர். தொல்காப்பியனார் முதலியோர் இவற்

றையும் பாவினங்களையும் கொச்சகக்கலிப்பாற்படுத்து வழங்குவர்.

வடமொழிவழித் தமிழாசிரியர்கள் "ஒருபுடை ஒப்புமை நோக்கி இனம் எனப்படா; மூவகைப்பட்ட விருத்தங்களுள் ளும் (ஆசிரியம், கலி, வஞ்சி) சந்த தாண்டகங்களுள்ளுமே எல்லாப் பாவினங்களும் அடங்கும்" என்பர்.(யா. வி. பக். 487)

**சந்த விருத்தம் –**

எழுத்து வகையானும் அசைவகையானும் ஓசை இயைபு காரணமாகச் சந்தம் என்னும் பெயர் பொருந்திச் சமமான ஒருவிசுற்பத்து நான்கடிகளையுடையது சந்தவிருத்தம்.
(தொ. வி. 249)

**சந்த விருத்த வகைகள் –**

ஓசை இயைபு காரணமாகச் சந்தம் என்னும் பெயரடை கொண்டு எழுத்துவகையானும் அசைவகையானும் இயையும் யாப்புவகை, சந்த விருத்தம் ஆகும். ஆகவே, இஃது எழுத்துச் சந்தவிருத்தம், அசைச் சந்தவிருத்தம் என இருவகைப்படும். வடமொழியில் அட்சரகணம், மாத்ராகணம் என அமைந்த பகுப்புப் போன்றது இது. (புதுவை நடராசனார் நூற்செய்தி)
(தொ. வி. 249)

**சம்பகமாலா சந்த விருத்தம் –**

நான்கு அடிகளிலும் 2, 3, 7, 8 ஆகிய இடங்களில் குற்றெழுத்து வருமாறு அமைக்கப்படும் விருத்தம்.

'எ**றிசு**ற விளை**யவ** ரேந்து பூங்கொடி
ம**றிதி**ரை வரை**புரை** மாட மாக்கலம்
பெ**றவ**ருந் **திரு**வனா ரமுதம் பேரொளி
**அறை**கடல் **வளந**க ராய தொப்பவே. (சீவக. 1446)

**சம்மதம் – சந்த விருத்தம் –**

அ) 1, 3 - குற்றெழுத்து ஈற்றுமாச்சீர், 2,4 - விளச்சீர் கொண்ட அடி நான்காய் அமைவது.

எ-டு : 'துலாம ணிந்தவர் சூளி கைத்தலைத்
துலாமி வர்ந்தெழும் சோம திக்கினன்
நிலாவி ரும்பொருள் நிறைந்த தாமென
நிலாவு மத்தலை யிவர்ந்து நிற்குமே'. (தணிகைபு.)

ஆ) இதே அமைப்பில் 1 மாச்சீர், 2, 4 விளச்சீர், 3 முழுதும் புளிமாச்சீர் என்ற அமைப்பைக் கொண்ட நான்கடியாய் வருவது.

*எ-டு :'எழுது குங்குமத் திருவி னேந்துகோ*
*டுழுத மார்பினா னுருகி யுள்ளுறத்*
*தழுவி நிற்றலுந் தாழ்ந்து தாளுறத்*
*தொழுத மாருதிக் கினைய சொல்லுவான்'* (கம்பரா. 8811)

(வி. பா. படலம் 7 : 11. பக். 43, படலம் 9; பக். 82)

**சமசந்தத் தாண்டகம் –**

*சந்த அடியும் தாண்டக அடியும் சமமாக வருவனவற்றைச் சமசந்தத் தாண்டகம் என்ப ஒரு சாரார். (யா. வி. பக். 486)*

**சமபாத விருத்தம் –**

*இசைப்பா வகை.*

*சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்பன இசைப்பாக்கள் என்பார் பஞ்சமரபுடைய அறிவனார். (சிலப். 6 : 35 அடியார்க்.)*

**சமம் (2) –**

*ஓரடிபோல் நான்கடியும் எழுத்தும் அலகும் ஒத்த விருத்தம். (வீ. சோ. 139 உரை)*

**சமயதி –**

*எல்லா அடிகளும் ஒத்த அளவினவாய் வரும் இசைப்பாட்டு வகை.* (L)

**சமவிருத்தம் –**

*அளவழிச் சந்தங்களுள் முதலடியும் மூன்றாமடியும் எழுத்து மிக்கு இரண்டாமடியும் ஈற்றடியும் எழுத்துக் குறைந்து நாலடியும் சீர் ஒத்துவருவது.*

*'அடிமிசை அரசர்கள் வணங்க ஆண்டவன்*
*பொடிமிசை யப்புறம் புரள இப்புறம்*
*இடிமுர சதிர்தரவொர் இளவல் தன்னொடும்*
*கடிமணம் புகுமிவள் கற்பின் நீர்மையே'.* (சூளா. 2091)

*இதன் முதலடியும் மூன்றாமடியும் 14 எழுத்து வந்தன. ஏனைய இரண்டடியும் 13 எழுத்து வந்தன. (யா. வி. பக். 516)*

**சமானம் –**

*குருவும் லகுவும் வரிசையாகப் புணர்ந்து முழுதும் வரும் பாடலும், முற்றக் குருவேயாயும் முற்ற இலகுவேயாயும் வரும் பாடலும் ஆம்.*

எ-டு : *'போது விண்ட புண்ட ரீக*
*மாத ரோடு வைக வேண்டின்*
*ஆதி நாதர் ஆய்ந்த நூலின்*
*நீதி ஓதி நின்மின் நீடு'*

*முதலடி குருவும் லகுவும் வரிசையாகப் புணர்ந்து முழுதும் வந்தது.*

எ-டு : *'காரார் தோகைக் கண்ணார் சாயல்*
*தேரார் அல்குல் தேனார் தீஞ்சொல்*
*போரார் வேற்கட் பொன்னே இன்னே*
*வாரார் அல்லர் போனார் தாமே'*

*இது முற்றக் குருவே வந்தது.*

எ-டு : *'முருகு விரிகமலம்*
*மருவு சினவரன*
*திருவ டிகடொழுமின்*
*அருகு மலமகல'*

*- முற்றவும் இலகுவே வந்தது.* *(யா.வி. பக். 523, 524)*

**சாத்துவி விருத்தம் –**

*கூவிளச்சீர் முன்னும் கருவிளைச்சீர் பின்னுமாக எழுசீர் வந்து செய்யுள் இறுதியில் நெட்டெழுத்துப் பெறும் அடிகளை நான்காக உடைய விருத்தம்.*

எ-டு : *'போனதும் வருவதும் கருதுதல் தவிர்ந்துகொள்*
*புசிப்பினுள் கிடைத்ததை மாந்தி*
*மேனியில் உடுத்துடை அருந்துதல் இரண்டையும்*
*விருப்புடன் அளித்திடின் ஏற்று*
*நானெனத் தவநெறி தனிநடந் துளக்கடி*
*நணுகிய துறவிகள் நாணும்*
*வானவர்க் சரசென வருமொரு மழவனை*
*வணங்கடி யவர்க்கிலை மாலே'* (வி. பா. 10ஆம் படலம் 2)

**சாதி (1) –**

*மாராச்சை, மிச்சாகிருதி முதலியன.* *(யா. வி. பக். 486)*

*ஆரியை, வைதாளியை எனச்சாதி இரண்டாம்*
*(வீ.சோ. 139 உரை)*

*சாதியாவது ஈண்டுச் செய்யுள் பற்றிய சாதி.*

**சாதி விருத்தமும், அதன் வகையும் –**

*சாதிவிருத்தமாவது மாத்திரையாலும் எழுத்தாலும் வகை தெளியப்படும் விருத்தம்; ஆரியை எனவும், வைதாளியை எனவும் சாதி விருத்தம் இரண்டு வகைத்தாம்.*
*(வீ. சோ. 139 உரை)*

**சிந்து –**

*ஈரடி அளவொத்து அமைவது சிந்து (பஞ்ச மரபு). இவ் வடிகளுக்கிடையே தனிச்சீர் அமைவது ஒருவகை. ஒவ்வோர் அடியும் இருபகுப்புற்று இடையே தனிச்சீர் பெறுதலும் உண்டு. முதற்பகுப்புக்கும் இரண்டாம் பகுப்புக்கும் இடையே சிறு ஓசை நிறுத்தம் நிகழ்கிறது. தனிச்சீரால் நிகழ்கின்ற ஓசை நீட்சி சிந்தின் தனிச்சிறப்பு. முன்னிலைப்படுத்தும் நிலையிலும் தொடர்ச்சிதரும் நிலையிலும் பொருள் பொருத்தத்துடன் இத்தனிச்சொல் அமைகிறது.*

*ஈரடி அல்லது இருபகுதி அளவொத்து வருதல் சிறிதே மாறுபட்டு ஓசை சிந்தி நிற்றல் இங்கு அமைகிறது. இவ் வோசை சிந்துதலிலும் நிலைத்த அமைப்புண்டு. இவ்வியல் புகளே இலக்கணமாக இப்பா இப்பெயர் பெற்றது.*

*பிறிதொருவகைச் சிந்து அளவொத்த ஈரடிகள் இவ்விரண் டாய்த் துண்டுபட்டு அவற்றிடையே தனிச்சீர் உடைத்தாய் நாற்சீர் இரட்டை என்ற பெயருடன் அமைவது. ஒவ்வோ ரடிப் பகுதியும் நாற்சீர் பெறுவது இது. இவற்றின்கண் அடிகளின் ஈற்றில் வரும் இருசீரும் இயைபாக அமைகின்றன.*

*அடிப்பகுதிகள் முச்சீர் பெறுவது முச்சீரிரட்டை, இருசீர் பெறுவது இருசீரிரட்டை. (சிந்துப் பாடல்களின் சொற்கள் மிருதங்கத் தாளத்தை ஒட்டி அமைக்கப்பட்டவை; அசைசீர் வரையறைகொண்டு அமைக்கப்பட்டன அல்ல.)*

*(இலக்கணத். முன். பக். 99, 100)*

*சிந்தடி 'சிந்து' எனவும்படும். (யா. கா. 12)*

**சிந்துப்பாட்டு (1) –**

*ஆறு முதலிய பல சீர்களால் வரும் இரண்டடிகள் தனிச் சொல் இடையே வரத்தொடுப்பதும், ஈரடிகளின் பின்னர், இரு சீர் முதலாகப் பல சீர்கள் முடுகியல் சந்தத்தொடு வந்து இயையுமாறு தொடுப்பதும்,*

*மோனை எதுகை முதலான தொடை நயம்பட, பலவகைத் தாளக் கொட்டொடு பல அடியாலே தனிச்சொல் இடையே வரத்தொடுப்பதும் என இவை சிந்துப்பாட்டாம். இச்சிந்துப் பாடல் காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து - என இருவகைப் படும். (இப்பெயர்கள் காரணம் பற்றியவை). அடிதோறும் சீர்ஒத்து வருவன சமனிலைச் சிந்தாம்; சீர் ஒவ்வாது வருவன வியனிலைச் சிந்தாம். (தென். இசைப். 35)*

**சிந்துப்பாடல் –**

*தமிழ்ப்பாக்கள் இயற்பா, இசைப்பா என இருவகைப்படுவன. இசைப்பாக்களில், பண்ணுடன் கூடியவையும், பண்ணுடனும் தாளத்துடனும் கூடியவையும் என இருவகையுள. பண்ணுடனும் தாளத்துடனும் கூடிய இசைப் பாக்களை வண்ணப்பா, சந்தப்பா, சிந்துப்பா, உருப்படி என நான்காகப் பாகுபடுத்தலாம். இவற்றுள், வண்ணப்பாக்கள் சந்தக்குழிப்புக்களையும், சந்தப்பாக்கள் சந்தமாத்திரைகளையும், சிந்துப்பா உருப்படி என்னும் இருவகையும் - தாளநடைகளையும் - அடிப்படையாகக் கொண்டுள்ளன. எழுத்துக்களின் ஒலியளவு நீளல் குறுகல்களில் ஓர் ஒழுங்குமுறையையும், மோனை எதுகை என்னும் தொடைகளோடு இயைபுத் தொடையையும், சிறுபான்மை எடுப்பு முடிப்பு உறுப்புக்களையும், மிகுதியான தனிச்சொற்களையும் பெற்று வரும் தனித்தன்மையுடையன சிந்துப் பாடல்கள். இத்தனித்தன்மைகளால் மற்ற இசைப் பாடல்களினின்று இவை வேறுபட்டு நிற்கின்றன.*

*மிகவும் குறுகிய ஒன்றே முக்கால் அடியையுடைய குறளினும் சற்று நெடியதாய் அளவொத்து இரண்டடியாக நிகழும் பாடல் சிந்து எனப்பட்டது. அசையும் சீரும் தனிச்சொல்லும் முடுகியலும் அடியும் சிந்துப்பாடலில் (இயற்பாவிற்கு அமைந்த யாப்பிலக்கண முறையில் காணாமல்) புதுமுறையில் அறியப்படும். குறிலசையும் நெடிலசையுமென அசை இருவகைத்து. குறிலசை தனிக்குறிலாக நிகழும். குறிலொற்று, நெடில், நெடிலொற்று என இம் முத்திறமாக நெடிலசை நிகழும். தாள அடிப்படையில் சீர்கள் அமைகின்றன. அவை தகிட, தகதிமி, தகதகிட, தகிடதகதிமி - என முறையே மூன்றும் நான்கும் ஐந்தும் ஏழுமாகிய அசைகளால் அமை வன. சிந்துப்பாவில் வரும் தனிச்சொல் அடியில் நிகழும் சீராக வரும்; அடிக்குப் புறம்பாக வாராது. முடுகியலின் சீரமைப்புச் சந்தப்பாடலின் இலக்கணம் பெறும். நான்கு முடுகியல்சீர்கள் ஓரடியில் இடம்பெறும். விரைவு நடையில் வருமவை ஓரசைக்கு இரண்டுயிராக நடப்பதுண்டு. சிந்துப்பா அடிகள் தாள அடிப்படையுடையன. 8, 12, 20, 24 சீர்களையுடைய கழிநெடிலடிகளே சிந்துப்பாடலில் பயின்று வரக் காணலாம். (ஒற்றைப்பட அவை நிலைத்தலில்லை); எத்தனை சீராலும் அடி நடக்கலாம். நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, வழிநடைச் சிந்து, வளையல் சிந்து, தங்கச் சிந்து முதலாகச் சிந்து எனப் பெயரிய இசைப்பாடல்கள் பலவுன.*

*(சிந். யாப். 9.1, 2, 6)*

**சிரக்விணீ விருத்தம் –**

*வடமொழி விருத்த விசேடம்; அடிக்கு 12 எழுத்துக்களை யுடையது; இடையில் இலகு பெறும் கணங்கள் 4 வருவது; அவற்றை மாத்திரைஅளவுகொண்டு கணக்கிட்டால், அடிக்கு 20 மாத்திரை என ஆம். முதலாவது எடுத்துக்காட் டில் எழுத்தளவிலும் மாத்திரை அளவிலும் வடமொழி விருத்தத்தின் இலக்கணம் முற்றும் அமைந்துள்ளது. இரண் டாவதன்கண் எழுத்தளவு மாறுபடினும் மாத்திரையளவு பொருந்தும். ஒருபுடை ஒப்புமையான் அதுவும் இவ்வகை விருத்தமே என்ப.*

*எ-டு :*

அ) *கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்*
*வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்*
*தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை*
*தேனலைக் கும்வயல் தென்குடித் திட்டையே'.* (தே. III 35-7)

*இஃது ஐந்து மாத்திரைக் கூவிளச்சீரினால் அமையும் நாற்சீரடி நான்கினையுடையது.*

ஆ) *'மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்*
*எண்ணுளார் இயலுளார் இசையுளார் திசையுளார்*
*கண்ணுளார் ஆயினார் பகையுளார் கழிநெடும்*
*புண்ணுளார் ஆருயிர்க் கமுதமே போலுளார்'.* (கம்பரா. 3788)

*இஃது ஐந்து மாத்திரைக் கூவிளத்திற்குரிய இடத்தே சில விடத்துக் கருவிளம் அமையும் நாற்சீரடி நான்குடையது.*

*(வி. பா. ஏழாம்பட லம். 23)*

**சுத்த விராட்டுச் சந்த விருத்தம் –**

*அடிக்குப் பத்து எழுத்துக்கொண்ட வடமொழி விருத்தம். இதன் அமைப்பு : (1) முற்றிலும் குருவான கணம், (2) ஈற்றில் குருவரு கணம், (3) இடையில் குருபெற்ற கணம் ஈற்றில் குரு வருதல் - என மூவகைத்து. கீழ்வரும் நேரசையில் தொடங்கும் உதாரணத்துள் இந்த அமைப்பு முற்றிலும் உள்ளது; நிரையசையில் தொடங்குவதில் பொருந்தவில்லை.*

*ஒவ்வோரடியிலும் ஒற்றெழுத்து நீக்கிக் கணக்கிடப்படும். ஒவ்வோரடியிலும் 4, 5, 7, 9ஆம் எழுத்துக்கள் குறிலாகவும் ஏனைய இடங்களில் நெடிலாகவும் அமைந்த நான்கடி களையுடைய பாடல்.*

*அ) நேரசையில் தொடங்குவது*

*'சங்கா ரத்தணி தாங்கு கொங்கையாள்*
*சங்கா ரத்தணி தந்த செங்கையாள்*
*உங்கா ரத்தினு ரத்த ஆடையாள்*
*உங்கா ரத்தினு ரப்பு மோதையாள்'* (கந்தபு. IV 8-95)

*ஆ) நிரையசையில் தொடங்குவது*

*'கடற்சுற வுயரிய காளை மன்னவன்*
*அடற்கரும் பகைகெடுத் தகன்ற நீணில*
*மடத்தகை யவளொடும் வதுவை நாட்டிநாம்*
*கொடுக்குவ மெனத்தெய்வ மகளிர் கூறினார்'* (சீவக. 1173)

*'கா' என்பது நீங்கலாக ஏனைய ஒத்தவாறு காண்க.*
*(வி. பா. பக். 44)*

**சுராட்டு –**

*அளவழிச் சந்தங்களுள் சீர்ஒத்து ஓரடியில் ஈர் எழுத்து மிக்கு வருவது.*

எ-டு : *'கலைபயில் அல்குலார் காமர் மஞ்ஞைபோன்*
*றுலவுவர் மெல்லவே ஒண்பொன் மாநகர்;*
*அலர்மலி வீதிகள் ஆறு போன்றுள;*
*மலையென நிவந்துள மதலை மாடமே'.*

*முதன் மூன்றடிகளுள் 12 எழுத்து வர, ஈற்றடி 14 எழுத்து வந்தவாறு.* *(யா. வி. பக். 515)*

**சுவாகதச் சந்த விருத்தம் –**

*இஃது அடிக்குப் பதினோர் எழுத்துக்கள் வரும் வடமொழி விருத்தம். இதன் அமைப்பு 1) இடையில் இலகு வந்த கணம், 2) முற்றும் இலகுவான கணம், 3) முதலிற் குருக்கணம் ஈற்றில் இரு குருக்கள் என வருவது. இவ்வமைப்பு உதாரணத்தில் முற்றும் உள்ளது.*

*அ) குற்றெழுத்தீற்று மாச்சீர் ஒன்று, மூன்று குற்றெழுத்துக் காய்ச்சீர் ஒன்று, கூவிளம் தேமா - என்ற இவை முறையே அமைந்த அடி நான்காகி வருவது. இரண்டாமடியிலும் நான்காமடியிலும் வந்த 2ஆம் சீர்களின் இறுதியில் உள்ள ஒற்றெழுத்துக்களை நீக்கியே அமைப்புக் காண்டல் வேண்டும்.*

எ-டு : *'ஊரு லாவுபலி கொண்டுல கேத்த*
*நீரு லாவுநிமிர் புன்சடை அண்ணல்*
*சீரு லாவுமறை யோர்நறை யூரில்*
*சேரும் சித்திசுரம் சென்றடை நெஞ்சே'.*

(தே. I 29-1) (வி.பா.பக். 47, 48)

ஆ) மேற்கண்ட கலிவிருத்தம் இரட்டித்து எண்சீர்க் கழிநெடி லடி ஆசிரிய விருத்தமாகவும் அமையும். கீழ்வரும் பாடலில் எட்டு அரையடிகளில் மூன்று நீங்கலாக ஏனைய வற்றில் இரண்டாம் சீரில் மூன்று குற்றெழுத்துக்கள் இறுதி யில் இணைந்து வந்தவாறு காணப்படும்.

எ-டு : *'வேட்ட நல்வரம ளித்துவி டுக்கும்*
*வீறி லார்கள்பலர் விண்ணவர் மாட்டும்*
*வேட்ட நல்வரம னைத்தும்வ ழங்கல்*
*வேட்ட மாத்திரைவி ளைப்பவர் சில்லோர்*
*வேட்ட நல்வரம ளித்ததன் மேலும்*
*வேறு நல்வரம்வி னாவிய ளிப்ப*
*வேட்ட வண்ணங்கரு ணைத்திற நோக்கி*
*விம்மி தப்புணரி விம்முமு ளத்தான்'*

(தணிகைப். பிரமன். 97) (வி. பா. பக். 78)

**சேணீ விருத்தம் –**

இது வடமொழியில் சிரேணி அல்லது சியேனி என்ற பெயருடையது; அடிக்குப் பதினோர் எழுத்துடையது.

1. இடை இலகு, 2. இடைக்குரு, 3. இடைஇலகு என வருவது முதலில் மூன்று மாத்திரைத் தேமாச்சீர் நான்கும், ஈற்றில் ஐந்தெழுத்துத் தேமாங்காய்ச்சீர் ஒன்றும் புணரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டது இவ்விருத்தம். இத்தகைய பாக்கள் வடமொழியிலேயே உள. இது

எ-டு : *'கண்டு சென்று நின்று காலை மீக்கொண்டு*
*பண்டு நல்ல ஆசி மாற்ற மாண்போடு*
*மண்டு போல விண்ட பான்மை உட்கொண்டு*
*கொண்ட நல்ல இன்பு கூட ஏருற்றான்'.*

எனவரும். இதன்கண் மேற்கூறிய வடமொழியிலக்கணம் முழுதும் பொருந்தியுள்ளது. (வி. பா. பக். 52)

# த

**'தத்த' எனும் சந்தம் –**

1. இடையில் வல்லின ஒற்று, இரு மருங்கும் உயிர்மெய்க் குறில் ஒன்றி வருதல். எ-டு. பத்தி
2. முதலில் குறிலடுத்து வல்லொற்று, அடுத்து உயிர்மெய்க் குறில் அடுத்து மெல்லொற்றோ இடையொற்றோ வரல். எ-டு : சிட்டன், ஒற்றர்.

3. முதலில் குறிலடுத்து இடையொற்று, அடுத்து வல் லொற்று, இறுதியில் உயிர்மெய்க் குறில் வருதல். எ-டு : நெய்த்து.

4. முதலில் குறிலடுத்து இடையின ஒற்று, அடுத்து வல்லொற்று, அடுத்து உயிர்மெய், அடுத்து மெல்லின ஒற்றோ இடையின ஒற்றோ வருதல். எ-டு : கர்த்தன், மெய்ச்சொல்.

இவ்வாறாகத் 'தத்த' எனும் சந்தம் நால்வகைத்து.

(வண்ணத். 28-32)

**தத்தா எனும் சந்தம் –**

1. முதலில் குறில், அடுத்து வல்லொற்று, அடுத்து வல் லினத்து உயிர்மெய் நெடில் அமைவது. எ-டு : அத்தா.
2. முதலில் குறிலெழுத்து எழுத்து வல்லொற்று அடுத்து வல்லின உயிர்மெய் நெடில், ஈற்றில் மெல்லின ஒற்றோ இடையின ஒற்றோ தொடர அமைவது எ-டு : தொட்டான், கற்றார்.
3. முதலில் குறில், அடுத்து இடையின ஒற்று வல்லின ஒற்றுக்கள், அடுத்து வல்லின உயிர்மெய் நெடில் தொடர அமைவது. எ-டு : பொய்க்கோ.
4. முதலில் ஒரு குறில், அடுத்து முறையே இடையின ஒற்று வல்லின ஒற்று, வல்லின உயிர்மெய் நெடில், இறுதியில் இடையின ஒற்றோ மெல்லின ஒற்றோ அமைவது. எ-டு : நெய்க்கோல் - மெய்க்கோன்.

இவை நான்கும் 'தத்தாச்' சந்த வகைகளாம். (வண்ணத். 13-17)

**தந்த எனும் சந்தம் –**

1. குறில், மெல்லொற்று, வல்லின உயிர்மெய்க்குறில் என வருவது எ-டு : மஞ்சு.
2. குறில், மெல்லொற்று வல்லின உயிர்மெய்க்குறில் மெல்ஒற்றோ இடையொற்றோ ஒன்று என வருவது.

   எ-டு : கந்தன், கொண்கர்.
3. குறில், இடையொற்று, மெல்லொற்று, வல்லினத்துயிர் மெய்க் குறில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என வருவது. எ-டு : மொய்ம்பு; மொய்ம்பன்; மொய்ம்பர்.

இவை நான்கும் 'தந்த'ச் சந்த வகைகளாம். (வண்ணத். 28-32).

**தந்தா எனும் சந்தம் –**

1. குறில், மெல்லொற்று, வல்லினத்து உயிர்மெய் நெடில் என வருவது. எ-டு : அந்தோ.
2. குறில், மெல்லொற்று, வல்லின உயிர்மெய் நெடில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என வருதல். எ-டு : வந்தேன், தங்கார்.
3. குறில், இடையொற்று, மெல்ஒற்று, வல்லின உயிர்மெய் நெடில் என வருவது எ-டு : மொய்ம்பா.
4. குறில் இடையொற்று மெல்லொற்று வல்லின உயிர்மெய் நெடில், ஈற்றில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என வருவது. எ-டு : மொய்ம்போன், மொய்ம்போர்.

இவை நான்கும் தந்தாச் சந்த வகைகளாம். (வண்ணத் 33-37)

**தமிழில் பயின்றுவரும் கலிச்சந்த விருத்தம் –**

அ) 1, 3, 7, 11, 15ஆம் இடங்களிலுள்ள உயிர் நெடிலாய், மற்றவை குறிலாய் வரும் அடி நான்கினையுடையது.

எ-டு : *‘**ஒன்**றோ **டொ**ன்றுமுனை **யோ**டுமுனை **யுற்**றுறவிழும்*
*__ஒன்__றோ __டொ__ன்றுபினை __யோ__டலினச் __சோ__டுபுதையும்*
*__ஒன்__றோ __டொ__ன்றுதுணி __பட்__டிடவொ __டிக்__குமுடனே*
*__ஒன்__றோ __டொ__ன்றிறகு __கவ்__வுமெதி __ரோ__டுகணையே’*

(நல்லா. பதினேழாம். 358)

குற்றொற்றை 2 மாத்திரையளவான் நெடில்போலக் கணக்கிடுக.

ஆ) 1, 3ஆம் சீர்கள் 4 மாத்திரைக் கூவிளம், 2,4 ஆம் சீர்கள் 6 மாத்திரைக் கூவிளங்காய் அமைந்த அடி நான்காகி வரும்.

எ-டு : *‘கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த*
*வம்பனை எவ்வுயிர்க்கும் வைப்பினை ஒப்பமராச்*
*செம்பொனை நன்மணியைத் தென்திரு வாரூர்ப்புக்*
*கென்பொனை என்மணியை என்றுகொ லெய்துவதே’*

(தே. VII 83-7)

இ) இக்கலிவிருத்தம் இரட்டித்து எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்த மாகவும் வரும்.

எ-டு : *‘தொண்டர டித்தொழலும் சோதியி ளம்பிறையும்*
*சூதள மென்முலையாள் பாகமு மாகிவரும்*
*புண்டரி கப்பரிசா மேனியும் வானவர்கள்*
*பூசலி டக்கடனஞ் சுண்டக றுத்தமருங்*

*கொண்டலெ னத்திகழும் கண்டமு மெண்டோளுங்*
*கோலந றுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்*
*கண்டுதொ ழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்*
*கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே'.* (தே. VII 84-1)

மாத்திரையே கணக்கிடுவதால் நேரசைச் சீருக்கு அதே மாத்திரையுடைய நிரையசைச் சீரும், நிரையசைக்கு அதே மாத்திரையுடைய நேரசைச் சீரும் மற்றசீர்களுக்கு அதே மாத்திரையுடைய வேறுசீர்களும் கொள்ளப்படலாம்.

ஈ) முதல் சீர் தேமாங்கனி ஏனைய மூன்றும் புளிமாங்கனி என அமைந்த நாற்சீரடி நான்கான் அமைவது.

*'நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின்*
*குறிகொண்டுவன்*
*சீர்கொண்டுவந் தனைசெய்துனைச் செறிவார்களென்*
*பெறுவார்களோ*
*போர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர்களா*
*லருள்கொண்டிலன்*
*கார்கொண்டுகண் டருள்சோதியே நாராயணா நாராயணா.'*
(வி. பா. பக். 51, 78, 84)

**தமிழில் பயின்றுவரும் சந்தக் கலிவிருத்தம் –**

இது வனமயூர விருத்தம் போலக் குறிலீற்றுத் தேமாங்காய்ச் சீர் வருவது. முதலில் குறிலீற்றுத் தேமாங்காய், அடுத்துக் குறிலீற்று விளங்காய், அடுத்துக் குறிலீற்றுத் தேமாங்காய் அடுத்துத் தேமா என அமைந்த நாற்சீரடி நான்காய் வருவது.

எ-டு : *'வெங்கார்நி றப்புணரி வேறேயு மொன்றைப்*
*பொங்கார்க லிப்புனல்த ரப்பொலிவ தேபோல்*
*இங்கார்க டத்திரென வென்னாவெ ழுந்தாள்*
*அங்கார தாரைபெரி தாலால மன்னாள்.'* (கம்பரா. 4815)

2) தேமா ஒன்று கூவிளம் மூன்று என்றமையும் நாற்சீரடி நான்கான் வருவது.

எ-டு : *'வாழி சானகி வாழியி ராகவன்*
*வாழி நான்மறை வாழிய ரந்தணர்*
*வாழி நல்லற மென்றுற வாழ்த்தினான்*
*ஊழி தோறும் புதிதுறு சீர்த்தியான்'.* (கம்பரா. 5168)

ஈற்றடியில் 'தோறும்' தேமாவாயினும், 'புதிதுறு' கருவிள மாயினும் ஓசை கெடாமையின் கொள்ளத் தக்கனவே.
*(வி. பா. 46, 87)*

**'தய்ய' எனும் சந்தம்**

1. *குறில், இடையொற்று, இறுதியில் இடையின உயிர்மெய்க் குறிலோ வல்லின உயிர்மெய்க்குறிலோ ஒன்று வர அமைவது. எ-டு : வள்ளி, செய்தி*
2. *குறில், இடையொற்று அடுத்து இடையின உயிர்மெய்க் குறில் அல்லது வல்லின உயிர்மெய்க்குறில், இறுதியில் இடையொற்றோ மெல்லொற்றோ ஒன்றுவர அமைவது. எ-டு : வள்ளல், செய்தல் : மெய்யன், செய்கண்.*

*(வண்ணத் 74 - 76)*

*இவ்வாறு 'தய்ய'ச் சந்தம் இருவகைத்தாம்.*

**'தய்யா' எனும் சந்தம் –**

1. *குறில், இடையொற்று, இறுதியில் இடையின உயிர்மெய் நெடில் அல்லது வல்லின உயிர்மெய் நெடில் வர அமைவது. எ-டு : மெய்யே, நொய்தோ*
2. *குறில், இடையொற்று, அடுத்து இடையின உயிர்மெய் நெடில் அல்லது வல்லின உயிர்மெய் நெடில் இறுதியில் இடையின ஒற்றோ மெல்லின ஒற்றோ ஒன்றுவர அமைவது. எ-டு : தள்ளார், செய்தார்; வல்லோய், ஒல்கேன்.*

*(வண்ணத் 77 - 79)*

*இவ்வாறு 'தய்யா'ச் சந்தம் இருவகைத்தாம்.*

**தலையாகு சந்தம் –**

*நான்கடியும் ஒத்து வருவன.*

எ-டு : *'போது விண்ட புண்ட ரீக*
*மாத ரோடு வைக வேண்டின்*
*ஆதி நாதர் ஆய்ந்த நூலின்*
*நீதி யோதி நின்மி னீடு'.* (யா. வி. பக். 522)

*(எழுத்து எண்ணுமிடத்தே ஒற்று நீக்கிக் கணக்கிடப்படும்.)*

**'தன்ன' என்னும் சந்தம் –**

1. *குறில், மெல்லொற்று, இறுதியில் மெல்லின உயிர்மெய் அல்லது இடையின உயிர்மெய் வருவது.*

   *எ-டு : கண்ணி, மென்வி.*
2. *குறில், மெல்லொற்று, அடுத்து மெல்லின உயிர்மெய்க் குறில் அல்லது இடையின உயிர்மெய்க் குறில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என அமைவது*

   *எ- டு: மண்ணன், பொன்வில், முன்னர், எண்வென்.*

*இவ்வாறு தன்னச் சந்தம் இருவகைத்து. (வண்ணத். 67-70)*

**'தன்னா' என்னும் சந்தம் –**

1. குற்றெழுத்து, மெல்லொற்று, மெல்லின உயிர்மெய் நெடில் அல்லது இடையின உயிர்மெய் நெடிலால் அமைவது. எ-டு : அண்ணா, மன்வா
2. குற்றெழுத்து, மெல்லொற்று, அடுத்து மெல்லின உயிர் மெய் நெடில் அல்லது இடையின உயிர்மெய் நெடில், ஈற்றில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என அமைவது.

எ-டு : முன்னோன், மன்னோர், பொன்வேல், தண்வான், இவ்வாறு தன்னாச் சந்தம் இருவகைத்து.

(வண்ணத். 71-73)

**தன என்னும் சந்தம் –**

1. இரு குறில் இணைந்து வருவது. எ-டு : குரு.
2. குறில் இரண்டு, இறுதியில் மெல்லொற்றோ இடை ஒற்றோ இவை கூடி வருவது. எ-டு: கதன், தவர்.

இவை யிரண்டும் தனச் சந்தத்தின் வகைகளாம். (வண்ணத். 48 - 50)

**'தனா' எனும் சந்தம் –**

1. குறிலும் நெடிலும் கூடிவருவது. எ-டு : குகா.
2. குறிலும் நெடிலும் மெல்லொற்றோ இடையொற்றோ இணைந்து வருவது. எ-டு : கவான், சிறார். (வண்ணத். 51, 53) இவை இரண்டும் தனாச் சந்த வகைகளாம்.

**தாண்டக அடி –**

இருபத்தாறுக்கு மேற்பட்ட எழுத்துக்களான் இயன்றஅடி

(யா. வி. பக். 476)

**தாண்டகச் சந்தம் –**

'சந்தத் தாண்டகம்' காண்க.

சந்தஅடி பலவாயும் தாண்டக அடி சிலவாயும் வருவன வற்றைச் 'சந்தத் தாண்டகம்' என்ப, ஒருசாரார் ; தாண்டக அடி பலவாயும் சந்தஅடி சிலவாயும் வருவனவற்றைத் 'தாண்டகச் சந்தம்' என்ப, ஒருசாரார் (யா. வி. பக். 485)

**தாண்டகம் –**

இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தின் அடி யினவாய், எழுத்தும் குரு லகுவும் ஒத்தும் ஒவ்வாதும் வருவன

*தாண்டகமாகும். எழுத்தும் குரு லகுவும் ஒத்து வருவன அளவியல் தாண்டகம் ; ஒவ்வாது வருவன அளவழித் தாண்டகம் ஆம் என்பது. (யா. வி. பக். 476)*

*எ-டு : 27 எழுத்தடி அளவியல் தாண்டகம் : 'வானிலவி முகிலார்ப்ப'*

*37 எழுத்தடி அளவியல் தாண்டகம் : 'கருநிறப் பொறிமுக'*

*43 எழுத்தடி அளவியல் தாண்டக ம் : 'அனவரதம் அமரர்'*

*47 எழுத்தடி அளவியல் தாண்டகம் : அல்லற் கோடை'*

*அளவழித் தாண்டகம் : 'மூவடிவி னாலிரண்டு'*

*(இவை பாடல் தொடக்கம்.) (யா. வி. பக். 483 - 485)*

**'தாத்த' எனும் சந்தம் –**

1. *நெடில், வல்லொற்று, இறுதியில் உயிர்மெய்க்குறில் என்பன. எ-டு : காற்று.*
2. *நெடில், வல்லொற்று, வல்லின உயிர்மெய்க்குறில், மெல்லொற்று அல்லது இடையொற்று என்பன. எ-டு : கூத்தன், பாட்டர்.*
3. *நெடில், இடையினமெய், வல்லொற்று, இறுதியில் உயிர்மெய்க் குறில் என்பன. எ-டு : பார்ப்பு.*
4. *நெடில், இடையினமெய், வல்லினமெய், வல்லின உயிர் மெய்க்குறில், இறுதியில் மெல்லொற்று அல்லது இடை யொற்று என்பன. எ-டு : தூர்த்தன், காழ்த்தல் (வண்ணத். 18-22)*

*இந்நான்கும் தாத்தச் சந்த வகைகளாம்.*

**'தாத்தா' எனும் சந்தம் –**

1. *நெடில், வல்லொற்று, வல்லின உயிர்மெய் நெடில் என்பன. எ-டு : சாத்தா*
2. *நெடில், வல்லொற்று, வல்லின உயிர்மெய் நெடில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என்பன. எ-டு : மாற்றான், ஆற்றார்.*
3. *நெடில், இடையினமெய், வல்லொற்று, இறுதியில் வல்லின உயிர்மெய் நெடில் என்பன. எ-டு : வேய்ப்பூ*

4. நெடில், இடையினமெய், வல்லொற்று, உயிர்மெய் நெடில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என்பன. *(வண்ணத். 23-27)*

*எ-டு : சீர்க்கோன், வாய்த்தோர்,*

*இந்நான்கும் தாத்தாச் சந்த வகைகளாம்.*

**'தாந்த' எனும் சந்தம் –**

1. நெடில், மெல்லொற்று, இறுதியில் வல்லின உயிர்மெய்க் குறில் என்பன. எ-டு : வேந்து.
2. நெடில், மெல்லொற்று, வல்லின உயிர்மெய்க்குறில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என்பன. எ-டு : பாங்கன், வேந்தர்.
3. நெடில், இடையொற்று, மெல்லொற்று, வல்லின உயிர் மெய்க்குறில் என்பன. எ-டு : பாய்ந்து.
4. நெடில், இடையொற்று, மெல்லொற்று, வல்லின உயிர் மெய்க்குறில், இறுதியில் மெல்லொற்றோ இடையொற்றோ ஒன்று என்பன. எ-டு : சார்ங்கம், சார்ங்கர்.

*இவை நான்கும் தாந்தச் சந்தத்தின் வகைகளாம்.*
*(வண்ணத். 38-42)*

**தாந்தா எனும் சந்தம் –**

*கீழ்க்காணும் நால்வகையான எழுத்து அமைப்பால் ஆகிய சொற்கள் பயில வருவது தாந்தா எனும் சந்தமாம்.*

1. ஒரு நெட்டெழுத்தும், அடுத்து மெல்லின ஒற்றும், அடுத்து வல்லினநெடில் உயிர்மெய்யுமாக வருவது. எ-டு : சேந்தா
2. அம்மூன்றனையும் அடுத்து மெல்லினமோ இடையின மோ ஆகிய மெய்யெழுத்து வருவது. எ-டு : நான்றான், வாங்கார்
3. ஒரு நெட்டெழுத்து, ஓர் இடையினமெய், ஒரு மெல்லின மெய் என இவற்றையடுத்து வல்லின நெடில் உயிர்மெய் வருவது. எ-டு : நேர்ந்தோ
4. அந்நான்கெழுத்தினையும் அடுத்து ஒரு மெல்லின மெய் யோ இடையின மெய்யோ வருவது. எ-டு : மாய்ந்தான், சார்ந்தோர் *(வண்ணத். 43 - 47)*

**'தான' எனும் சந்தம் –**

1. நெடிலும் குறிலும் இணைந்து வருவது. எ-டு : காது.
2. நெடிலும் குறிலும் மெல்லொற்றோ இடையொற்றோ அடுத்து வருவது. எ-டு: பாதம், சூதர்.

*3. நெடிலும் இடையின மெய்யும் இறுதியில் குறிலும் இணைந்து வருவது. எ-டு: கேள்வி.*

*4. நெடிலும் இடையின ஒற்றும் குறிலும் இறுதியில் மெல் லொற்றோ இடையொற்றோ ஒன்றும் இணைந்து வருவது. எ-டு : சார்கண், கூர்முள்.*

*5. நெடில், மெல்லொற்று, இறுதியில், மெல்லின உயிர் மெய்க் குறிலோ, இடையின உயிர்மெய்க் குறிலோ ஒன்று என்னும் இவை இணைந்து வருவது. எ-டு : மான்மி, தேன்வி.*

*6. நெடில், மெல்லின மெய், மெல்லின உயிர்மெய் அல்லது இடையின உயிர்மெய், இறுதியில் மெல்லொற்று அல்லது இடையொற்று என்னும் இவை இணைந்து வருவது. எ-டு : மாண்மன், கூன்வில், மான்மர், மாண்வின்.*

*இவையாறும் தானசச் சந்தத்தின் வகைகளாம்.*

*(வண்ணத். 54-60)*

**'தானா' எனும் சந்தம் –**

*1. இரண்டு நெடில்கள் இணைந்து வருவது. எ-டு: தாதா*

*2. இரண்டு நெடில்கள் இணைந்து, இறுதியில் மெல்லின ஒற்றோ இடையின ஒற்றோ ஒன்று பெற்று வருவது. எ-டு: மேவான், போகார்.*

*3. நெடில், இடையே இடையொற்று, இறுதியில் ஒரு நெடில் என்று வருவது. எ-டு: மோர்பூ.*

*4. நெடில், இடையின ஒற்று, நெடில், இறுதியில் மெல் லொற்றோ இடையொற்றோ ஒன்று என்று வருவது. எ-டு: சேர்மான், கூர்வேல்.*

*5. நெடில், மெல்லொற்று, இறுதியில் மெல்லின உயிர் மெய்நெடில் அல்லது இடையின உயிர்மெய் நெடில் என்று வருவது. எ-டு: கேண்மோ, மான்வா*

*6. நெடில், மெல்லொற்று, அடுத்து மெல்லின உயிர்மெய். நெடில் அல்லது இடையின உயிர்மெய்நெடில், இறுதியில் மெல்லொற்று அல்லது இடையொற்று என்று வருவது. எ-டு: மாண்மான், வான்மேல், தேன்வீண், கூன்வாள்' இவையாறும் தானாச் சந்தத்தின் வகைகளாம்.*

*(வண்ணத். 61-67)*

**திருதி –**

எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள், அடிதோறும் பதினெட்டு எழுத்தாக வரும் விருத்தம் இது. இவ்வாறு எழுத்து எண்ணுகின்றுழி ஒற்றும் ஆய்தமும் கணக்கிடல்பெறா.

எ-டு : *'கூரெயிற்றி னேர்தோற்ற முகைவென்று சீர்கொண்டு கொல்லை முல்லை*
*நேரிடைக்கு முன்தோற்ற பகைகொண்டு வந்துத னீல மேவுங்*
*காரளக்கு நாளென்று கடனீந்து வார்சொன்ன கால மன்றாற்*
*பேரமர்க் கற்றமன மேகுகின்ற வாறென்னை பேதை மாதர்.'*
(வீ. சோ. 139)

**தொங்கல் –**

சந்தப்பாக்களில் தனிச்சொற்களாக அடிதோறும் முடிவன தொங்கல் எனப்படும்.

எ-டு : 'வண்ணக் கழிநெடில் விருத்தம் - எழுசீர்' காண்க. அடிதோறும் ஏழாம் சீராக வருவன 'தொங்கல்' ஆம்.

**தோடகம் –**

இஃது அடிக்குப் பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்ட வடமொழி விருத்தம். இதன் அமைப்பு, ஈற்றில் குருஎழுத்தைக் கொண்ட கணங்கள் நான்கு வருதல். கீழ்க்காணும் விருத்தத்தில், முதலடி மூன்றாம் சீர், ஈற்றடி இரண்டாம் சீர் - இவை தவிர மற்றவகையில், மாத்திரை அளவிலும், எழுத்துக்களின் எண்ணிக்கையிலும், வடமொழியிலக்கணம் முற்றும் பொருந்துகிறது. இது நான்கு மாத்திரைச் சீர்கள் நான்கான் ஆயது; நிரையசையில் தொடங்குவது; பெரும்பாலும் வெண்டளையே வருவது.

எ-டு : *'கமையா ளொடுமென் னுயிர்கா வலினின்*
*றிமையா தவனித் துணைதாழ் வுறுமோ*
*சுமையா வுலகூ டுழறொல் வினையேன்*
*அமையா துகொல்வாழ் வறியே னெனுமால்.'* (கம்புரா. 3616)

'னுயிர்கா' 'துகொல்வாழ்' இரண்டும் என்ற ஒன்றும் நீங்கலாக ஏனைய சீர்கள்யாவும் நான்கு மாத்திரையன. வி.பா. ஏழாம் படலம் - 4

இது தோதக விருத்தம் போல்வது.

**தோதக விருத்தம் போல்வது –**

*1. நான்கு மாத்திரை கொண்ட குற்றுயிரீற்ற கூவிளச்சீர் மூன்று, அடுத்து நான்கு மாத்திரைத் தேமாச்சீர் ஒன்று, கொண்ட அடி நான்கான் அமைவது.*

எ-டு : *'எண்ணியி ருந்துகி டந்துந டந்தும்*
*அண்ணலெ னாநினை வார்வினை தீர்ப்பார்*
*பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்*
*புண்ணிய னாருறை பூவண மீதோ.* (தே. 7 : 11-2)

*2. நான்கு மாத்திரைச்சீர்கள் நான்கனுள் முதலாவதும் நான் காவதும் தேமா ஆக, ஏனைய கூவிளமாக அமைந்த அடிநான் கான் அமைவது.*

எ-டு : *'எந்தாய் பண்டொரி டங்கர்வி ழுங்க(ம்)*
*முந்தாய் நின்றமு தற்பொரு ளேயென்*
*றுந்தாய் தந்தையி னத்தவ னோத(வ்)*
*வந்தா னென்றன்ம னத்தின னென்றான்.'* (கம்பரா. 6281)

*3. நான்கு மாத்திரைச் சீர்கள் நான்கனுள் இரண்டாம் மூன்றாம் சீர்கள் கருவிளம், நான்காம் சீர் புளிமா, முதற்சீர் கூவிளம் என்றமைந்த அடி நான்கான் அமைவது.*

எ-டு : *'தூணுடை நிரைபுரை கரமவை தொறுமக்*
*கோணுடை மலைநிகர் சிலையிடைக் குறையச்*
*சேணுடை நிகர்கணை சிதறின னுணர்வோ*
*டூணுடை யுயிர்தொறு முறையுறு மொருவன்.'* (கம்பரா. 9787)

*4. நான்குமாத்திரைச் சீர்கள் நான்கனுள் முதலாவதும் மூன்றா வதும் கூவிளம் ஆக, ஏனைய இரண்டும் புளிமா என்றமைந்த அடிநான்கான் வருவது.*

எ-டு : *'குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்*
*பஞ்சினை யணிவார் பால்வளை தெரிவார்*
*அஞ்சன மெனவா ளம்புக ளிடையே*
*நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்.'* (கம்பரா. 1558)

*5. முதலாம் மூன்றாம் சீர்கள் நான்கு மாத்திரையுடைய கூவிளம், இரண்டாம் நான்காம் சீர்கள் ஆறுமாத்திரையுடைய நடுவில் நெட்டெழுத்து மிகாத கூவிளங்காய் என்றமைந்த அடி நான்காய் வருவது.*

எ-டு : *'கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த*
*வம்பனை எவ்வுயிர்க்கும் வைப்பினை யொப்பமராச்*
*செம்பொனை நன்மணியைத் தென்திரு வாரூர்புக்*
*கென்பொனை யென்மணியை யென்றுகொ லெய்துவதே.'*
(தே. 7 : 83-7)

*6. இவ்வமைப்பில் இரண்டாம் நான்காம் சீர்கள் கூவிளங் காய்க்கு மாறாக புளிமாங்காய் வர அமைந்த அடி நான்காய் நிகழ்வது.*

எ-டு : *'ஏந்திள முலையாளே எழுதரு மெழிலாளே*
*காந்தளின் முகைகண்ணிற் கண்டொரு களிமஞ்ஞை*
*பாந்தளி தெனவுன்னிக் கவ்விய படிபாராய்*
*தீந்தள வுகள்செய்யும் சிறுகுறு நகைகாணாய்* (கம்பரா. 2007)

*'காந்தளின்'-5 மாத்திரை; ஏனைய கூவிளங்கள் 4 மாத்திரை. 'வுகள்செய்யும்'-7 மாத்திரை; ஏனைய புளிமாங்காய் 6 மாத்திரை. (வி.பா. ஏழாம்படலம். பக். 41, 81, 82, 51.)*

# ந

**நடைச்சவலைப் பாதச் சமவிருத்தம் –**

*தம்மில் ஒத்த அடி நான்காய் வரும் செய்யுள் விருத்தமாம். முடிவு இரண்டடி மிக்கும் முதல் இரண்டடி நைந்தும், முடிவு இரண்டடி குன்றி முதல் இரண்டடி மிக்கும், இடையிடை அஃகியும் மிக்கும் வரினும் நடைச்சவலைப் பாதச் சம விருத்தம் என்பாருமுளர். நான்கடியின் மிக்க அடிகளால் வரும் சவலைப் போலியுள் இது நிகழும். (வீ. சோ. 130 உரை)*

**நவநந்தினி விருத்தம் –**

*முதல் மூன்றும் காய்ச்சீர், இறுதி தேமாச்சீர் என அமைந்த அடி நான்கான் ஆவது. (வி. பா. ஏழாம்படலம் 14)*

*நேர் அசையில் தொடங்கும் காய்ச்சீர்:*

*தேசுற்ற மாடமுறை சீப்பவரு காலோன்*
*வாசப்பு னற்கலவை வார்புணரி கொண்கன்*
*வீசப்பு லார்த்தியிட விண்படரும் வெய்யோன்*
*ஆசுற்ற தானவர மர்ந்தினிதி ருந்தான்.* (கந்தபு. III நகர்புகு. 48)

*நிரை அசையில் தொடங்கும் காய்ச்சீர்:*

*மிடற்றகுவர் சூழ்வரலும் வீரனெழுந் தன்னோர்*
*முடிச்சிகையொ ராயிரமு மொய்ம்பினொடு கையால்*
*பிடித்தவுணர் மன்னனமர் பேரவைநி லத்தின்*
*அடித்தனனொ டிப்பிலவ ராவிமுழு துண்டான்.*
(கந்தபு. III அவைபுகு. 156)

**நளினீ விருத்தம் –**

*இஃது அடிக்குப் பதினைந்து எழுத்துக்கள் கொண்ட வடமொழி விருத்தம்.*

இதன் அமைப்பு இறுதி இலகுவான கணங்கள் ஐந்து வருதல். மாத்திரைக் கணக்கில் அடிக்கு இருபது மாத்திரை. பின் வரும் எடுத்துக்காட்டுக்களில் முதலாவது இருபது மாத்திரை அளவில் அமைகிறது; இரண்டாவதில் மாத்திரை மிக்குளது.

1) 4 மாத்திரைச்சீர் ஐந்து புணர்ந்த அடிநான்காய் வருவது. நான்கு மாத்திரை மாச்சீர் அவை.

எ-டு : *அம்மா ணகருக் கரச னரசர்(க்) கரசன்*
*செம்மாண் டனிக்கோ லுலகே ழினுஞ்செ லநின்றா*
*னிம்மாண் கதைக்கோ ரிறையா யவிரா மனென்னு*
*மொய்ம்மாண் கழலோற் றருநல் லறமூர்த் தியன்னான்.*(கம்பரா. 168)

2) 4 கூவிளஞ்சீர்கள் நான்கு மாத்திரை அளவினவாக, இறுதிச்சீர் ஆறுமாத்திரைத் தேமாங்காய்ச்சீராக அமைந்த அடி நான்கான் வருவது.

எ-டு : *ஓர்பக னீர்நிறை பூந்தட மொன்றுறு பூக்கொய்வான்*
*சீர்தரு திண்கரி சேறலு மங்கொரு வன்மீன (ம்)*
*நீரிடை நின்றுவெ குண்டடி பற்றிநி மிர்ந்தீர்ப்பக்*
*காரொலி காட்டிய கன்கரை யீர்த்தது காய்வேழம்.*
(காஞ்சிப்புண்ணிய. 10) (வி.பா.8 ஆம் படலம்)

**நன்னிலை –**

சந்தம் எழுத்து வகையால் இருபத்தாறு எனப்பட்ட பேதங்களுள் ஒன்று. ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்யாவது பாதம் ஒன்றற்கு ஐந்தெழுத்தாக வரும் நாலடிப் பாட்டுள் நிகழ்வது.

*'மன்ன னேரியன்*
*சென்னி மானதன்*
*கன்னி காவலன்*
*பொன்னி நாயகன்.'* (வீ. சோ. 139 உரை)

**நிசாத்து –**

அளவழிச் சந்தங்களுள் சீர் ஒத்து ஓரடியில் ஓரெழுத்துக் குறைந்து வருவது.

எ-டு : *பங்கயங் காடுகொண் டலர்ந்த பாங்கெலாம்* (12)
*செங்கய லினநிரை திளைக்கும் செல்வமும்* (13)
*மங்கையர் முகத்தன மதர்த்த வாளரி* (13)
*அங்கயற் பிறழ்ச்சியு மமுத நீரவே.* (13) (யா. வி. பக். 514)

**நிலை (1) –**

*எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தம்; ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்யாவது அடி ஒன்றற்கு நாலெழுத்தாய் வருவது.*

எ-டு : *'போதி நீழற்*
*சோதி பாதங்*
*காத லானின்*
*றோத னன்றே'* (வீ. சோ. 139 உரை)

**நெட்டிசை –**

*விருத்தமாகிய பாவினத்தில் பயிலும் நெடிய சந்தம்.* (W) (L)

## ப

**பகுதி –**

*'பிருஹதி' என்ப வடநூலார். எழுத்துவகை 26 பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று; ஒற்றொழித்து, உயிரும் உயிர்மெய்யும் அடி ஒன்றற்கு ஒன்பதெழுத்தாய் வருவது.*

*எ-டு : இளையார் கனிவா யெனவே*
*விளையா மதுவே தருநோய்*
*தளர்வார் நிறைநேர் கவரு*
*ளுளவே லளியே யுரையாய்.* (வீ. சோ. 139 உரை)

**பந்தி –**

*எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று. ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாக ஓரடிக்குப் பத்து எழுத்து வருவது.*

எ-டு : *குறியா ரெனவே புனலின்மீ*
*துறுதா மரைமே லுறைவார்தாம்*
*நெறியார் சடையாய் நினபாத*
*மறிவா ரினியா ரறிவாரே.* (வீ.சோ. 139 உரை)

**பாதிச் சமச் செய்யுள் –**

*அளவழிச் சந்தங்களுள் நான்கடியும் சீர் ஒத்து முதலிரண் டடியும் எழுத்து மிக்குக் கடையிரண்டடியும் எழுத்துக் குறைந்து வருவதாம்.*

எ-டு : *'மடப்பிடியை மதவேழம்*
*தடக்கையால் வெயில்மறைக்கும்*

*இடைச்சுரம் இறந்தோர்க்கே*
*நடக்குமென் மனனேகாண்'*

இவ்வஞ்சித் தாழிசையுள் முதலிரண்டடியும் 9 எழுத்து; கடையிரண்டும் 8 எழுத்து. *(யா. வி. பக். 516)*

**பாதிச் சமப்பையுட் சந்தம் –**

அளவழிச் சந்தச் செய்யுளுள் நான்கடியும் சீரான் ஒத்து முதலடியெழுத்தும் மூன்றாமடி எழுத்தும் எண்ணிக்கை வேறாய் இரண்டாமடி நான்காமடி எழுத்து எண்ணிக்கை ஒத்து வருவது.

எ-டு : *'செஞ்சுடர்க் கடவுள் திண்டேர் இவுளிகால் திவள ஊன்றும்*
*மஞ்சுடை மதர்வை நெற்றி வானுழு வாயில் மாடத்*
*தஞ்சுடர் இஞ்சி ஆங்கோர் அகழணிந் தலர்ந்த தோற்றம்*
*வெஞ்சுடர் விரியும் முந்நீர் வேதிகை மீதிட் டன்றே.'* (சூளா. 38)

இதன்கண் முதலடி எழுத்து 17; மூன்றாமடி எழுத்து 16; இரண்டாமடி நான்காமடி எழுத்து 15 என அமைந்துள்ள வாறு. *(யா. வி. பக் 518)*

**பாதிச்சம விருத்தம் –**

முதலடியும் மூன்றாமடியும் எழுத்துக் குறைந்தும் ஏனை இரண்டடியும் எழுத்து மிக்கும் நான்கடியும் சீர் ஒத்து வந்த அளவழிச் சந்தப் பாடல்.

எ-டு : *'மெய்யறி விலாமை யென்னும் வித்தினிற் பிறந்து வெய்ய*
*கையறு வினைகள் கைபோய்க் கடுந்துயர் விளைத்த போழ்தின்*
*மையற வுழந்து வாடும் வாழுயிர்ப் பிறவி மாலை*
*நெய்யற நிழற்றும் வேலோய் நினைத்தனை நினைக்க என்றான்'*
(சூளா. 198)

இதன்கண், முதலடி மூன்றாமடி எழுத்து 16; இரண்டாமடி நான்காமடி எழுத்து 17 என அமைந்துள்ளவாறு.
*(யா. வி. பக். 517)*

**பிபீலிகா மத்திமம் (1) –**

முதலடியும் ஈற்றடியும் எழுத்து மிக்கு, நடு இரண்டடியும் எழுத்துக் குறைந்து நாலடியும் சீரொத்து வரும் செய்யுள்.

எ-டு : *'பரவு பொழுதெல்லாம் பன்மணிப்பூட் டோவா*
*வரவும் இனிக்காணும் வண்ணநாம் பெற்றேம்*
*விரவு மலர்ப்பிண்டி விண்ணோர் பெருமான்*
*இரவும் பகலும்வந் தென்தலைமே லானே'*

இதன்கண் முதலடியும் ஈற்றடியும் 13 எழுத்துப் பெற்றுவர, நடு இரண்டடியும் 12 எழுத்துப் பெற்று வந்தவாறு. இஃது எறும்பின் உடலின் இடைப்பகுதிபோல இடையடிகள் இரண்டும் எழுத்துக் குறைந்து சுருங்கிவருவதால், தமிழில் 'எறும்பிடைச் சந்தச் செய்யுள்' என்று இதனை மொழி பெயர்த்துக் கூறுவர். (யா. வி. பக். 515)

**பிபீலிகா மத்திமம் (2) –**

எறும்பின் உடலிடை போல இடைப்பகுதி சுருங்கிவரும் பாடல்; 'எறும்பிடைச் சந்தச் செய்யுள்' என (யா.வி.உரை) குறிக்கும் பாடல் (பக். 518), அளவழிச் சந்தச் செய்யுளெனவும் வழங்கும். அளவழிச்சந்தச் செய்யுளுள் நான்கடியும் சீரான் ஒத்து, முதலடியும் முடிவடியும் எழுத்தெண்ணிக்கையில் ஒத்து, இடையிரண்டடியும் ஓரோரெழுத்து முறையே எண்ணிக்கை குறைய நிகழ்வது இது; மேலைப் பிபீலிகா மத்திமத்தின் (1) சிறிதே வேறுபட்டது. (வீ.சோ. 139 உரை)

எ-டு : *மணிமலர்ந் துமிழ்தரும் ஒளியும் சந்தனத்*
*துணிமலர்ந் துமிழ்தரும் தண்மைத் தோற்றமும்*
*அணிமலர் நாற்றமும் என்ன அன்னவால்*
*அணிவரு சிவகதி அடைவ தின்பமே'.* (சூளா. 2075)

இதன்கண், முதலடியும் ஈற்றடியும் எழுத்து 14; இரண்டாமடி எழுத்து 13; மூன்றாமடி எழுத்து 12 - என வந்தவாறு.

**பிரகிருதி –**

எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று; ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாக ஓரடிக்கு 21 எழுத்தாக வரும் நாலடிச் செய்யுள்.

எ-டு : *'கந்தாரம் பாடியாடும் கான்மதுக ரமும் கன்னிகா ரமும்செருந்தும்*
*கொந்தாரும் குரவமும்கான் மலிதருங் கோகிலமும் தாதுகோதும்*
*சந்தாரங் கோவையா ரமுந்தருணன் தடகடஞ்சா*
*ரணங்கெள்ளிப்பார்*
*வந்தார்தம் தேர்மிசையால் வரவுதனை அறிகுதிவண் தோகை*
*நல்லாய்.'* (வீ.சோ. 139 உரை)

**பிரத்தரித்தல் –**

பிரத்தாரஞ் செய்தல். (L)

**பிரத்தாரம் –**

கட்டளையடியிற் பல்வேறு வகையாக வரக்கூடும் அசை களையெல்லாம் மொத்தக் கணக்கிடுகை(யா. வி. பக். 503. ) (L)

**பிரத்தியயம் –**

தெளிவு; உறழ்ச்சி, கேடு, உத்திட்டம், இலகு குருச் செய்கை, விருத்தத் தொகை, நில அளவு என்பன ஆறும் தெளிவுகளாம். (வீ. சோ. 133)

'பிரத்தாரம் முதலாகிய ஆறு பிரத்தியயமும்'(யா. வி. பக். 502)

**பிரமாணம் –**

லகுவும் குருவும் புணர்ந்து முறையே வரும் பாடல்.

எ-டு : *'கயற்க ருங்க ணந்நலார்*
*முயக்க நீக்கி மொய்ம்மலர்*
*புயற்பு ரிந்த புண்ணியர்க்*
*கியற்று மின்க ளீரமே.'* (யா. வி. பக். 524)

**புரிக்கு –**

அளவழிச்சந்தங்களில், சீர் ஒத்து ஓரடியில் ஒரெழுத்து மிக்கு வருவதாம்.

எ-டு : *'பேடையை இரும்போத்துத்* (7)
*தோகையால் வெயில் மறைக்கும்* (8)
*காடகம் இறந்தார்க்கே* (7)
*ஓடுமென் மனனே காண்'* (7)

இவ்வஞ்சித்துறை இரணடாமடி ஒரெழுத்து மிக்குச் சீர் ஒத்துவந்தவாறு. (யா. வி. பக். 514, 515)

**பெண்கலை –**

வண்ணப்பாவின் பின் பகுதி.

## ம

**மணிமாலை விருத்தம் (1) –**

எழுசீர்ச் சந்த விருத்தம்; 1, 3, 5ஆம் சீர்கள் குறிலீற்றுப் புளிமாங்காய், 2, 4, 6ஆம் சீர்கள் குறிலீற்றுத் தேமா; 7ஆம் சீர் புளிமா என்றமைந்த எழுசீரடி நான்கான் நிகழ்வது.

அ) நேரசையில் தொடங்குவது :

எ-டு : *'இத்தன்மை யெய்தும் அளவின்க ணின்ற இமையோர்க ளஞ்சி இதுபோய்*
*எத்தன்மை யெய்தி முடியுங்கொ லென்று குலைகின்ற எல்லை இதன்வாய்*

*அத்தன்மை கண்டு புடைநின்ற அண்ணல் கலுழந்த னன்பின்*
*மிகையால்*
*சித்தங்க லங்கு மிதுதீர மெள்ள இருளூடு வந்து தெரிவான்!'*

(கம்பரா. 8244)

(வீ. பா. பக். 81)

ஆ) நிரையசையில் தொடங்குவது :

எ-டு : *துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன் நடமன்னு துன்னுசுடரோன்*
*ஒளிமண்டி யும்பர் உலகங்க டந்த உமைபங்க னெங்க ளரனூர்*
*களிமண்டு சோலை கழனிக்க லந்த கமலங்கள் தங்கு மதுவின்*
*தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடு திருமுல்லை வாயி லிதுவே.*

(தே. II 88-1)

(வி. பா. பக். 70)

இ) புளிமாவும் கருவிளமும் மும்முறை அடுக்கிவர இறுதியில் நீண்ட கருவிளம் (அல்லது புளிமாங்காய்) வரும் எழுசீரடிகள் நான்கான் நிகழ்வது :

எ-டு : *'இனியின் றொழிமினிவ் வெறியு மறியடு தொழிலு மிகுகுர*
*வையுமெலாம்*
*நனிசிந் தையினிவள் மிகவன் புறுவதொர் நசையுண் டதுநரை*
*முதுபெண்டீர்*
*புனிதன் புகலிய ரதிபன் புனைதமிழ் விரகன் புயமுறு மரவிந்தம்*
*பனிமென் குழலியை அணிமின் துயரொடு மயலும் கெடுவது*
*சரதம்மே'.*

(ஆளுடை : திருக். 22)

ஈ) இத்தகைய பாடலில் இறுதிச்சீர் தேமா ஆவது.

எ-டு : *'சயமி குத்தகு கரைமு ருக்கிய தமிழ்ப யிற்றிய நாவன்*
*வியலி யற்றிரு மருக லிற்கொடு விடம ழித்தருள் கீதன்*
*கயலு டைப்புனல் வயல்வ ளந்தரு கழும லப்பதி நாதன்*
*இயலு டைக்கழ றொழநி னைப்பவ ரிருவி னைத்துயர் போமே!'*

(ஆளுடை. திருக் பக். 72)

2) தேமா, கூவிளங்காய், தேமா, கூவிளங்காய், தேமா கூவிளங்காய், கூவிளம் எனவரும் எழுசீரடி நான்கான் நிகழ்வது.

எ-டு : *நீல நின்றதொரு நீல மால்வரைநெ டுந்த டக்கையினி டந்துநேர்*
*மேலெ ழுந்தரிவி சும்பு செல்வதொரு வெம்மையொடு வரவீசலும்*
*சூல மந்தகனெ றிந்த தன்னதுது ணிந்து சிந்தவிடை சொல்லுறும்*
*கால மொன்றுமறி யாம லம்புகொடு கல்லி னானெடிய வில்லினான்.*

(வி.பா. ப. 84)

**மணிமாலை விருத்தம் (2) –**

*அடிக்குப் பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்ட வடமொழி விருத்தம்.*

*இதன் அமைப்பு : 1, இறுதிக்கண் இலகுவான கணம், 2. முதற்கண் இலகுவான கணம், 3. இறுதிக்கண் இலகுவான கணம், 4. முதற்கண் இலகுவான கணம் வருதல்; எடுத்துக்காட்டுச் செய்யுளில் சில எழுத்துக்கள் நெட்டோசை பெறுதலால் இலக்கணம் பொருந்தும்.*

*3, 4, 9, 10ஆம் உயிர் குறிலாக நிற்கும் அடிகள் நான்கனை உடையது இது.*

எ-டு : *'அங்கோல் வளைமங்கை காண அனலேந்தி*
*கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக*
*வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்*
*நங்கோ நமையாள்வான் நல்ல நகரானே!'* (தே. I 85 – 7)

*முதலடியில், மங்கை, காண - என்ற சீர்களின் ஈற்றெழுத்தும், இரண்டாம் அடியில், சூடி, காக - என்ற சீர்களின் ஈற்றெழுத்தும், மூன்றாமடியில், 'மாக' - என்ற சீரின் ஈற்றெழுத்தும் நெட்டோசை பெறும்.* *(வி. பா. பக். 50)*

**மணிரங்கம் –**

*இது வடமொழி விருத்தங்களுள் ஒன்று. இதன் அமைப்பு : முதலில் குருவும் இடையில் இலகுவும் ஈற்றில் குருவும் கொண்ட ஒரு கணமும், அடுத்து, முதற்கண் இலகுவும் இடைக்கண் குருவும் இறுதிக்கண் குருவும் கொண்ட கணமும், அடுத்தும் அதே கணமும், இறுதியில் ஒரு குருவும் நிற்பது.*

எ-டு : *'வீரத் திண்டிறல் மார்பினில் வெண்கோ*
*டாரக் குத்திய மூந்திட நாகம்*
*வாரத் தன்குலை வாழை மடற்சூழ்*
*ஈரத் தண்டென இற்றன வெல்லாம்'* (கம்பரா. 6285) (வி. பா. பக். 42)

**மத்த கோகில விருத்தம் –**

*அடிக்குப் பன்னிரண்டு எழுத்துக்கள் பெற்று வரும் வடமொழி விருத்தம். இதன் அமைப்பு : 1. முற்றிலும் இலகு கணம், 2. முதற்கண் குரு பெற்ற கணம், 3. இடையில் குரு வரும் கணம், 4. இடையில் இலகு பெற்ற கணம் என வருதல். இது 'பிரியம்வதா' எனவும்படும்.*

*எழுசீர் மத்தகோகில விருத்தம் : குறிலீற்றுத் தேமா கூவிளம் ஆகியவை மும்முறை அடுக்கி வரப்பெற்று, இறுதியில்*

நெடிலீற்றுக் கூவிளம் அமையப் பெறுவதாகிய அடி நான்கனையுடையது.

அ) நேரசையில் தொடங்குவது :

எ-டு : *'வாயி டைம்மறை யோதி மங்கையர் வந்தி டப்பலி கொண்டு போய்*
*மேயி டம்மெரி கானி டைப்புரி நாட கம்மினி தாடினான்*
*பேயொ டுங்குடி வாழ்வி னான்பிர மாபு ரத்துறை பிஞ்ஞகன்*
*தாயி டைப்பொருள் தந்தை யாகுமென் றோது வார்க்கருள் தன்மையே'*

(தே. III 37 -5 ) (வி.பா. பக். 71)

ஆ) நிரையசையில் தொடங்குவது :

எ-டு : *மறைது ளங்கினும் மதிது ளங்கினும் வானு மாழ்கடல் வையமும்*
*நிறைது ளங்கினும் நிலைது ளங்கினு நிலைமை நின்வயி னிற்குமோ*
*பிறைது ளங்கிய வனைய பேரெயி றுடைய பேதையர் பெருமை - நி ன் ,*
*குறைது ளங்குறு புருவ வெஞ்சிலை யிடைது ளங்குற இசையுமோ!*

(கம்பரா. 4213) (வி. பா. பக். 80)

இ) எழுசீர் மத்தகோகில விருத்தம் ஒருசீர் குறைந்து, தேமா கூவிளம் - தேமா - கூவிளம் - தேமா - நெடிலீற்றுக் கூவிளங் காய் - என்ற அறுசீரடி நான்கான் அமைவது :

எ-டு : *'திங்க ளைத்தலை யாக மன்னவர் செப்பு மாமரவோர்*
*தங்க ளிற்பகை யாகி வானவர் தான வர்க்கெதிரா*
*யெங்க ளுக்கெழு பார டங்கலு மென்று போர்புரியும்*
*வெங்க ளத்தினி யற்கை யெங்கண்வி யந்து கூறுவதே'*

(நல்லாப். கன்ன. 49) (வி. பா. பக். 71)

**மத்த மயூர விருத்தம் –**

அடிக்குப் பதின்மூன்று எழுத்துக்கள் கொண்ட வடமொழி விருத்தம். இதன் அமைப்பு : 1. முற்றிலும் குருவான கணம், 2. இறுதி இலகுவான கணம், 3. முதற்கண் இலகுக் கணம், 4. ஈற்றில் குருக்கணம், அடுத்து ஒரு குரு வருதல், அடிக்கு இருபத்திரண்டு மாத்திரைகள், முதல் நான்கெழுத்தில் ஒரு நிறுத்தம், பின்னர் அடியிறுதியில் நிறுத்தம் என அமையும். பின்வரும் செய்யுளில் கண அமைப்பு இல்லை; ஆயினும் மாத்திரையளவும் நிறுத்தமும் முற்றிலும் பொருந்துகின்றன.

அ) தேமா தேமா கூவிளம் தேமா புளிமாங்காய் - என வரும் ஐஞ்சீரடி நான்காக அமைவது. தேமா கூவிளம் என்பன நான்கு மாத்திரை அளவின. புளிமாங்காய் ஆறு மாத்திரை அளவிற்று.

எ-டு : *'காறோய் மேனிக் கண்டகர் கண்டப் படுகாலை*
*ஆறோ வென்ன விண்படர் செஞ்சோ ரியதாகி*
*வேறோர் நின்ற வெண்மணி செங்கேழ் நிறம்விம்மி*
*மாறோர் வெய்யோன் மண்டில மொக்கின் றதுகாணீர்'*
(கம்பரா. 9601)

*படுகாலை, ரியதாகி - ஈற்று நின்ற குறில் இரண்டு மாத்திரை அளவின.*

*ஆ) புளிமா தேமா தேமா தேமா புளிமாங்காய் என அமைந்த ஐஞ்சீரடி நான்காகி வருவது. மாச்சீர் நான்கு மாத்திரை; காய்ச்சீர் ஆறு மாத்திரை.*

எ-டு : *'மழுவின் கூர்வாய் வன்பலி டுக்கின் வயவீரர்*
*குழுவின் கொண்டந் நாடிதொ டக்கப் பொறிகூட்டித்*
*தழுவிக் கொள்ளக் கள்ளம னப்பே யவைதம்மை*
*நழுவிச் செல்லு மியல்பின காண்மின் நமரங்காள்'*

*22 மாத்திரை என்ற அளவில் பொருந்தும். (கம்பரா. 9592)*

*இ) கூவிளம் தேமா கூவிளம் தேமா புளிமாங்காய் என அமைந்த ஐஞ்சீரடி நான்காகி வருவது. மாவும் விளமும் நான்கு மாத்திரை; காய்ச்சீர் ஆறுமாத்திரை.*

எ-டு : *'மந்தர மன்னன் திண்புயன் வைவேல் மதிமன்னன்*
*இந்திர துய்மன் னென்பவ னுலகீ ரேழுந்தன்*
*சிந்தையி னுஞ்சந் தம்பெற வேசெங் கோலோச்சிக்*
*கந்தர வாகன் தன்புவி கண்டான் கடைநாளில்'*

*இதுவும் மாத்திரை அளவில் பொருந்துவதே.*

*(நல்லாப்.) (வி.பா.பக். 54)*

**மத்திமம் (1) –**

*எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று; ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய் யாவது ஓரடிக்கு மூன்றாக வருவது.*

எ-டு : *'வேரம் போய்*
*மாரன் சீர்*
*சேருங் கால்*
*நேர்வன் யான்'*

*(அடிதோறும் இரண்டாம்சீர் நேரசைச் சீராம்.)*

*(வீ. சோ. 139 உரை)*

**மதனார்த்தை விருத்தம் –**

*குற்றெழுத் தீற்றுத் தேமாங்கனிச்சீர் மூன்றினோடு, இரண்டு நெட்டெழுத்தானாகிய தேமாச்சீர் கொண்ட அடிநான்கான் அமைவது.*

எ-டு : *'ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்*
*மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்*
*ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்*
*வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே'* (தே. I - 11-2)
(வி. பா. பக். 48)

**மயூர இயல் வெண்பா –**

ஈற்றடி எழுத்து மிக்கு ஏனையடி எழுத்துக் குறைந்து தம்முள் ஒவ்வாது வரும் வெண்பா. (எழுத்தெண்ணுகையில் புள்ளி யெழுத்து விலக்கப்படும்.)

எ-டு : *'குருந்து குளிர்ந்து மயங்கு குவட்டு* (8)
*மருந்து கொணர்ந்து மகிழ்ந்து நமது* (8)
*பெரும்பிணியை நீக்குவதாம் பீடு.'* (10) (யா. வி. பக். 499)

**மனோரமா –**

*அடிக்குப் பத்தெழுத்துக்கள் கொண்ட வடமொழி விருத்தம்; இதன் அமைப்பு; 1) முற்றிலும் இலகுவான கணம், 2) இடைக்கண் இலகு பெற்ற கணம், 3) இடையியல் குரு பெற்ற கணம், 4) ஈற்றில் ஒரு குரு வருதல் என்பன. எழுத்துக்களின் எண்ணிக்கையிலும் மாத்திரை எண்ணிக்கையிலும் கீழே காட்டப்படினும், கணங்கள் அவ்வாறு அமைந்தில.*

எ-டு : *'வாம தேவன் என்று மாமுனி*
*காம ரன்னை கருவு வைகுநாள்*
*பேமு றுக்கு பிறவி யஞ்சினான்*
*ஏமு றாமை யிதுநி னைக்குமால்.'*

*மா முனி - னி 'னீ' என ஒலித்து இரண்டு மாத்திரை பெறும். இப் பாடலடிகளில், முதல் மூன்று சீர்களும் மும்மூன்று மாத்திரை, இறுதிச்சீர்கள் ஐந்து மாத்திரை அளவினவாதல் காணப்படும்.*

*(இறுதிச் சீர்கள் கூவிளச்சீர் ஆகும்; நெடிலும் குறிலும் மாறி மாறி வந்து இறுதியில் நெட்டெழுத்தால் முடியும்.*

*(வி. பா. பக். 36)*

**மாங்காய்ச் சீர்ச் சந்த விருத்தம் –**

*ஐந்து மாங்காய்ச்சீர் பெற்ற அடி நான்கான் அமைவது; இறுதியில் நெட்டெழுத் தொன்று மிகுவது.*

*எ-டு : 'பூபால ரவையத்து முற்பூசை பெறுவார்பு றங்கானில்வாழ்*
*கோபால ரோவென்று ருத்தங்க திர்த்துக்கொ தித்தோதினான்*
*காபாலி முனியாத வெங்காம னிகரான கவினெய்தியேழ்*
*தீபால டங்காத புகழ்வீர கயமன்ன சிசுபாலனே'* (2:1: 116)

*ஐந்தாம்சீர் தண்பூவாகவும் வரலாம்; முதலடியிற் காண்க.*
*(வி. பா. பக். 56)*

**மாராச்சை –**

*வடமொழிச் செய்யுள் வகைகளுள் ஒன்று. இது மாத்ராகணம் பற்றி அமைவது என்பர் ஒரு சாரார். (யா. வி. பக். 456)*

**மானினீ விருத்தம் –**

ஏழு கூவிளச்சீர்கள் அழகாகப் புணர இறுதியில் நெடிலைக் கொள்ளும் அடி நான்காய் அமைவது. வரும் காரிகையே இதற்கு எடுத்துக்காட்டாம்.

எ-டு : *கூவிள மேழுகு லாவநெ டிற்கடை கொள்வது மானனி நேரசைசே*
*ராவிள மாதிந டப்பது போர்கவி ராசவி ராசித மென்றனரால்*
*கூவிள மேகரு வார்விள மேயிவை கூடுவ சாத்துவி காசுலவும்*
*பூவிள மென்முலை யாமமு தாரிரு பொற்குட மேந்துபொ*
*லங்குழையே.*
(வி. பா.பக். 69)

**மிச்சா கிருதி –**

*வடமொழிச் செய்யுள் வகைகளுள் ஒன்று; மாராச்சை போல மாத்ராகணம் பற்றி இதுவும் அமையும் என்பர் ஒருசாரார்.*
*(யா. வி. பக். 486)*

**மைகாச மானம் –**

*இது 'சமானம்' என்றே இருத்தல் வேண்டும்; 'மைகா' பிழைபடச் சேர்ந்துள்ளது.*

*நான்கடியும் முற்றக் குருவே வரினும், முற்ற இலகுவே வரினும், குருவும் இலகுமாய் முற்ற மாறி வரினும் 'சமானம்' ஆம்.( வீ . சோ. பக். 193).*

## ய

**யவமத்திமம் –**

*அளவழிச் சந்தங்களுள், நாலடியும் சீர்ஒத்து முதலடியும் நான்காமடியும் எழுத்துக் குறைந்து நடு இரண்டடியும் எழுத்து மிக்கு வருவதொரு வகை.*

எ-டு : *'மல்லல்மா மழையார்ப்பக்*
*கொல்லைவாய்க் குருந்திளகின*
*முல்லைவாய் முறுவலித்தன*
*செல்வர்தேர் வரவுண்டாம்.*

*இவ்வஞ்சித்துறை, முதலடியும் நான்காமடியும் 7 எழுத் துக்கள் வர, இடையிரண்டடியும் 9 எழுத்துக்களாக மிக்கு வந்து, நாலடியும் சீரொத்து வந்தவாறு.*

*(யா. வி. 95 உரை. பக். 515)*

**யவமத்தியயதி –**

*'யவ மத்திமம்' எனப்பட்ட அளவழிச் சந்தவகை அதுகாண்க.*

*(யா. வி. பக். 515 அடிக்குறிப்பு)*

## வ

**வகுப்பு –**

*சந்த ஓசை; வண்ணமாகப் பாடுவது.*

**வடமொழிச்சந்தம் –**

*வடமொழியமைப்பில், சந்தமாவது, அடிதோறும் ஓரெ ழுத்து முதல் இருபத்தாறு வரை அமைந்து அடிநான்காக இசைக்கும். எழுத்து எண்ணுழி, ஒற்றும் ஆய்தமும் எண்ணப் பெறா. உத்தம், அதியுத்தம் முதலாக உத்கிருதி ஈறாக, எழுத் தளவையினாலே சந்தம் பெயர் பெறும். (தென். இயற். 68)*

**வடமொழித் தண்டகம் –**

*துண்டம் எனப்படும் சீர்களது தொகுதி நான்கு, எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு என இரட்டி வரும் முறையால் நான்கடியான் அமைவது தண்டகமாம். (அத்துண்டங்கள் மிகினும் குறையினும் தண்டகப் போலியாம்.) துண்டம் அடிதோறும் சம அளவிற்றாதல் வேண்டும்; பிழைப்பின் அது போலியாம் என்க. (தென். இயற். 70)*

**வடமொழியில் சந்தம் பற்றிய கணம் –**

*வடமொழி விருத்தங்கள் இலகு, குரு என்பன பற்றி அட்சர கணம் எனவும், மாத்திரையைக் கணக்கிட்டு மாத்ராகணம் எனவும் அமைக்கப்படுவன. அவ்விருத்தங்களில் பலவகை யுண்டு. தமிழில் சீர் அமைப்பது போல அங்குக் கணங்கள் என்று வகுப்பட்டுள்ளன. விருத்தங்களுக்கு எழுத்து, மாத்திரை இவற்றைப் பற்றி யமைந்த பெயரேயன்றித் தமிழில் பாவினத் தொடர்பாக அமைந்த ஆசிரிய விருத்தம், கலி நிலைத்துறை, கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் என்பன போன்ற பெயர்கள் வடமொழியில் இல்லை.*

விருத்தப்பாவியல் ஆசிரியர் வடமொழி மாத்திரையையும் அட்சரங்களையும் ஒருபுடை கணக்கிட்டுத் தமிழிலுள்ள ஆசிரிய கலி வஞ்சி விருத்தங்களில் ஒப்பனவற்றிற்கு அவ்வட மொழிப் பெயர்களை அமைத்துள்ளார். வடமொழி விருத்த இலக்கணம் முழுமையும் அப்பெயரிடப்பட்ட தமிழிலுள்ள விருத்தங்களில் இருக்கும் என்று எதிர்பாராது ஒருபுடை ஒப்புமையே கோடல் வேண்டும்.

வடமொழியிலுள்ள மாத்ரா, கணம் என்ற பாகுபாட்டைத் தமிழில் சீர்களிடைக் காண விரும்புகிறார், விருத்தப்பா ஆசிரியர். அட்சரம்பற்றி வடமொழியில் எட்டுக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

முதற்கண் குரு, இடைக்கண் குரு, கடைக்கண் குரு; முதற்கண் இலகு, இடைக்கண் இலகு, கடைக்கண் இலகு; முற்றும் குரு, முற்றும் இலகு; என எண்கணங்கள் அமையும்.

1. முதற்கண் குரு - '◡' கணம் - **மா** தவ, **மன்**வை.
2. இடைக்கண் குரு - 'ஜ' கணம் - ப**தா**தி, சு**கந்**தி.
3. கடைக்கண் குரு - 'ஸ' கணம் - இது**வோ**, வரு**வோன்**.
4. முதற்கண் இலகு - 'ய' கணம் - **க**ணேசா, **உ**வந்தே, **உ**வந்தும்.
5. இடைக்கண் இலகு 'ர' கணம் - ஈ**ச**னே, தூ**ய**வன்.
6. கடைக்கண்இலகு 'த' கணம் - வாரா**த** வந்தீ**க** வந்தைக்**க**.
7. முழுதும் குரு. 'ம' கணம் - **மாயோனே**, **வந்தானே, வந்தன்றே, யாதானும்.**
8. முழுதும் இலகு - 'ந' கணம் - **அதல.**

இலகு - ஒரு மாத்திரைக் குறில் - அ; இதன் வடிவு 'I' என்பது.

குரு - இரண்டு மாத்திரை நெடில், நெடிலொற்று, இரண்டு மாத்திரை பெறும் குற்றொற்று - ஆ, ஆல், கல்.

நெடிலுக்கும், நெட்டொற்றுக்கும் இருமாத்திரையே. குருவின் வடிவு '◡' என்பது.

**வடமொழியில் சீர் –**

வடமொழியில் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சீர்களைக் கணம் என்பர். எழுத்து இலகு என்றும், குரு என்றும் இருவகைப்படும். மூன்று எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு கணமாகும். இலகுவும் குருவுமான எழுத்துக்களை மாறிமாறி அமைக்குங்கால், எட்டுக் கணங்கள் அமையும். அவை ஒவ்வொன்றையும் குறிக்கத் தனித்தனிப் பெயர் உண்டு.

*‘வடமொழியில் சந்தம் பற்றிய கணம்’ பிற்பகுதி காண்க.*

*இலகுவை ‘மால்’ (-திருமால்) என்றும், குருவை ‘ஈசன்’ என்றும் பெயரிட்டு வழங்குப. இவ்வெட்டுக் கணங்கட்கும் பின் வருமாறு வேறு பெயரும் கூறுப.*

1. *முதற்கண் குரு, பின் இரண்டும் இலகு - மதி (‘ப’ கணம்)*
2. *முதற்கண் இலகு, பின் இரண்டும் குரு - நீர் (‘ய’ கணம்)*
3. *முதற்கண் இலகு, இடையே குரு, ஈற்றில் இலகு - இரவி (‘ஜ’ கணம்)*
4. *முதற்கண் குரு, இடையே இலகு, ஈற்றில் குரு - கனல் (‘ர’ கணம்)*
5. *முதற்கண் இலகு, இடையே இலகு, ஈற்றில் குரு - காற்று (‘ஸ’ கணம்)*
6. *முதற்கண் குரு, இடையே குரு, ஈற்றில் இலகு - ஆகாயம் (‘த’ கணம்)*
7. *மூன்றும் குரு - நிலம் (‘ம’ கணம்)*
8. *மூன்றும் இலகு - இயமானன் (‘ந’ கணம்)*

**வடமொழி விருத்தம் -**

*நான்கடி அளவொத்து நடப்பது விருத்தமாம்; எழுத்தும் சீரும் மிகுந்தாலும் குறைந்தாலும் விருத்தப்போலியாம் என்ப வடநூலார். (தென். இயற். 69)*

**வண்ண அளவடி -**

*நாற்சீரடி ‘தானத்-தானன - தானத் - தானன என்ற சந்தம்பட நிகழ்வது’*

எ-டு : *‘தேனைப் போல்கவி மாலைச் சீரியர்*
*வானைச் சீயென வாழ்விட் டாள்பவள்*
*மானைச் சீறுகண் மாதர்க் கோரிறை*
*யானைக் காவுடை யானிற் பாதியே.’* (செய்யு. செய்.)

**வண்ண இயல்பு -**

*வண்ணமாவது சந்தம். தத்த, தத்தா; தாத்த, தாத்தா; தந்த, தந்தா; தாந்த, தாந்தா; தன, தனா; தான, தானா; தன்ன, தன்னா, தய்ய, தய்யா - எனப் பலவகைப்பட்ட சந்தங்களது இயல்பு. இதனைக் கூறும் நூல் வண்ணத்தியல்பு. அது காண்க.*

**வண்ணக் கழிநெடிலடி -**

*இஃது அறுசீர், எழுசீர் முதலாகப் பலவாம். 1) ‘தனதன - தனதன - தய்யன - தய்யன - தனதன - தனதனனா’ என அறுசீர்க்*

*கழிநெடிலடி வரும்; 2) 'தானதன - தானதந்த - தானதன - தானதந்த - தானதன - தானதந்த - தனதானா' என எழுசீர்க்கழி நெடிலடி வரும்.*

எ-டு : *'முதலிடை கடையன இல்லவர் உள்ளவர் முழுவதும்*
*நிறைபவராம்*
*இதமுறு மிசைவளர் தய்யலை மெய்யினில் இயலுடன்*
*அணைபவராம்*
*நுதலினில் ஒருசுதன் இவ்வுல குய்வகை நொடியினில்*
*அருள்பவராம்*
*விதபிர மபுரியின் நல்லவர் நள்ளிட விழைவுடன் உறைபவரே'*

*'பாவையரை யேவிரும்பி நாளுமவ ரோடுறைந்து பாழுமன*
*மேமெலிந்து - நலியாதே*
*பூவலய மேலனந்த லோபிகளை யேபுகழ்ந்து போதவறி*
*வேயிகழ்ந்து - மெலியாதே*
*நாவலர்க ளோடுகந்து பூதிமணி யேயணிந்து ஞானசிவ*
*யோகமென்று - புரிவேனோ*
*ஆவலுடன் மாமுகுந்த னோடுமய னார்வணங்கும் ஆதிபுரி*
*வாழவந்த -பெருமானே.'*

*(இதன்கண், 'நலியாதே' போன்ற தனிச் சொற்கள் சந்தப் பாக்களில் 'தொங்கல்' எனப்படும்.)*

**வண்ணக் குழிப்பு –**

*வண்ணச் செய்யுளின் சந்த வாய்பாடு.*

**வண்ணக் குறளடி –**

*'தானா - தனதன' என்ற சந்தத்தோடு வரும் இருசீரடி.*

எ-டு : *'பாணார் மொழிநிறை*
*சோணா சலரடி*
*பேணா தவனுறும்*
*மாணா நரகமே.'* (செய்யு. செய்.)

**வண்ணக்குனிப்பு –**

*வண்ணக்குழிப்பு; அது காண்க.*

**வண்ணங்களை அறியாதாரின் புலமை யியல்பு –**

*வண்ணங்களின் இயல்பினை அறியாதாரது தமிழ்ப்புலமை மனுமுதலிய (அரசியல்) நீதிநூல்களைக் கல்லாத அரசர்தம் கோலினையும், சத்தியம் பயிலாதாரது தவத்தினையும் போலும். எவ்வகைப் புலமைத்திறம் பெற்றோரேனும், வண்ணம் கூறும் வலிமையிலராயின், கற்றாரவை நடுவண் கள்வரைப் போலத் தடுமாறும் நிலையினராவர். (வண்ணத். 95, 96)*

**வண்ணச் சிந்தடி –**

*'தனன - தானன - தந்தனா' என வரும் சந்தத்தால் இயன்ற முச்சீரடி.*

எ-டு : *'நரக வாதையில் வன்பிறார்*
*தரணி மீதொரு கொன்பெறார்*
*சுரரு லோகமு மின்புறார்*
*அருணை நாயகர் அன்புறார்!'* (செய்யு. செய்)

**வண்ணத் தரு –**

*ஒருவகைப் பாடல் (யாழ். அக.)*

**வண்ணத்தியல்பு –**

*சென்ற நுற்றாண்டினராம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்ட சந்தங்களைப் பற்றிய இலக்கணநூல். இதன்கண் 100 நூற்பாக்கள் உள. பொதுப்பாயிரம், நூல் மாட்சி, நூல் பிறப்பிடம், காலம் முதலியன என இவை பற்றிப் பத்துப் பாக்கள் உள (100 நீங்கலாக). தொகையிலக்கணம் வகை யிலக்கணம் என 7 நூற்பாக்கள் அமைந்துள. தத்தச் சந்தம் முதலாகத் தய்யாச் சந்தம் ஈறாகச் சந்தங்கள் 72 நூற் பாக்களில் சொல்லப்படுவன. பிறழச்சியியல்பு, மெலித்தல் இயல்பு, தொடர்ச்சியியல்பு, மதிப்பியல்பு, புணர்ச்சியியல்பு, சிறப்பியல்பு, தழூஉம் இயல்பு, புலமையியல்பு என்பன பற்றி எஞ்சிய 21 நூற்பாக்கள் விளக்குகின்றன. இயம்பாதன பிறவும் மேலோர் நூல் நெறியாற் கொள்க என இறுதி வெண்பாப் புறனடையொன்று அமைக்கிறது.*

**வண்ணத்தில் எளியன, வலியன –**

*'தன','தான'- இவ்விரண்டு வண்ணமும் எளிதினும் எளியன;*
*'தத்த', 'தந்த' - இவ்விரண்டும் எளியன.*

*'தாத்த', 'தாந்த' - இவ்விரண்டும் வலியன;*

*'தய்ய,' 'தன்ன' - இவ்விரண்டும் வலிதினும் வலியன.*

*(அறுவகை. வண்ண இயல்பு 16)*

**வண்ணத்தில் சந்தி –**

*ஒரே வகையினவாகிய இரண்டு வண்ணம் ஒன்றோடொன்று இசைவுறும் இடம் சந்தியாம்.*

*எ-டு : தத்த + தத்த = தத்தத்த; தன்ன + தன்ன = தன்தன்ன.*

*(அறுவகை. வண்ணஇயல்பு. 10)*

**வண்ணத்திற்கு ஆகாதன –**

*கொடுந்தமிழ்ப்புணர்ச்சி அருகியே வரல் வேண்டும்; சந்தக் குழிப்புக் குளறிடல் கூடாது; பெரும்பாலும் அளபெடை வருதலும் ஆகாது. வடமொழி மரூஉச் சொற்கள் புகலாகாது. (அறுவகை. வண்ணஇயல்பு 19, 20, 21)*

**வண்ணத்தின் சிறப்பியல்பு –**

*சந்தக்குழிப்பில் மோனை அமைந்திருத்தல் வேண்டும். இருகலைகள் சேர்ந்து ஒரு நீண்ட அடியாகும். அவை ஒரே மோனை உடைய வாதல் வேண்டும். எதுகை நான்காகும். வண்ணப்பா இரண்டாகப் பகுக்கப்படும். வண்ணப்பாவின் நான்கடிகளும் இரு பகுப்பாக வரு மெனவே, முதலிரண்டடி ஒரு பகுப்பு. அவ்விரண்டடிகளுக்கு நான்கு கலைகள். அவற்றுள் மூன்று கலையால் தலைவன் புகழ் கூறி, அடுத்த கலையால் அவன் மலை நாடு இவற்றின் அழகைக் கூறி, மூன்று நான்காம் அடிகளாகிய நான்கு கலைகளால் கவிதான் சொல்லக் கருதும் அகப்பொருள் புறப்பொருள் துறைச் செய்திகளைக் குறிப்பிடுவது வண்ணப்பாவின் வழக்காகும்.*

*தொங்கலும் தாழிசையும் எண்வகைத் துள்ளலும் கவி கூறும் அகப்பொருள் புறப்பொருள் துறைகளுக்கு உபகாரமாக வாராவிடினும், தமிழ்ப்புலவர் அவற்றை நீக்காது கொள்வர். தம்முடைய வேட்கையையும் தன்மையையும் தாம் விரும்பும் தெய்வத்தின் சிறப்பையும் செந்தமிழ்க்கு அழகு தரும் வண்ணப்பாவினால் குறிப்பிடுவது நன்மக்கள் மரபே.*

*எல்லாப் பாக்களையும் பாவினங்களையும் வண்ணத்தொடு கூடிய துறைச் செய்திகள் உடையனவாக அமைப்பதும் சான்றோர் வழக்கே. (வண்ணத். 89 - 94)*

**வண்ணத்தின் தொடர்ச்சி இயல்பு –**

*இரண்டு சந்தங்கள் கூடி ஒன்றாதல்; தத்தன, தந்தத்த, தனத்தா போல்வன. (அறுவகை. வண்ணஇயல்பு 13)*

**வண்ணத்தின் நாற்குலம் –**

*'தத்த' சந்தம் அந்தணர் குலத்தது; 'தன்ன' சந்தம் அரசர் குலத்தது; 'தய்ய' சந்தம் வணிகர் குலத்தது; 'தன' சந்தம் வேளாளர் குலத்தது. (அறுவகை.வண்ணஇயல்பு. 2)*

**வண்ணத்தின் நீள்வன நீளாதன –**

*தத்த - தாத்த; தந்த - தாந்த; தன - தான - இவை நீள்வன.*

*தன்ன, தய்ய - இவை நீளாதன.(அறுவகை. வண்ணஇயல்பு 14)*

**வண்ணத்தின் பால் பாகுபாடு –**

*தத்த, தந்த, தாத்த, தாந்த - இவை ஆண்பாலாம்; தன்ன, தய்ய, தன, தான - இவை பெண்பாலாம்; தன, தய்ய, தன்ன - இவை பிறழ்வன எல்லாம் அலிப்பாலாம்.*

*(அறுவகை. வண்ணஇயல்பு 4 - 6)*

**வண்ணநெடிலடி –**

*'தனதத்தத் - தனதத்தத் - தனதத்தத் - தனதத்தத் - தனதானா' என்ற சந்தப்பட நிகழும் ஐஞ்சீரடி.*

எ-டு : *'பொலிவற்றுத் தினமற்பக் கலைகற்றுத் தெருளற்றுப் பொருள்மாலே*
*சொலிவைத்துப் புகழ்கெட்டுப் புவனத்திற் றளர்வுற்றுச் சுழலாமே*
*புலியக்கத் ததனைச்சுற் றரைபொறப்பத் திருவொற்றிப் புணர்வார்பால்*
*ஒலிமுற்றுத் துதிசொற்றுக் கதிபெற்றுப் பயன்மிக்குற் றுயர்வாயே.'*

(செய்யு. செய்.)

**வண்ணப்பா –**

*மூன்று சந்தக் குழிப்புக்களின் பின்னர் ஒருதொங்கல், ஒரு தாழிசை, ஒரு துள்ளல். இவற்றைப்பாடுதல் ஒரு கலை எனப் படும். இவ்வாறு எட்டுக்கலைகள் சேர்ந்தது ஒருவண்ணப்பா (சந்தங்களில் சில பல சேர்ந்து ஒரு துள்ளலாம்; துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பாம்.) (வண்ணத்து. 85 - 88)*

*சந்தக்குழிப்பு சிறிதும் தவறாமல் பாடப்படும் இசைப்பாடல் வல்லினமும், மெல்லினமும் இடையினமும் ஆகிய எழுத்துக் களைக் கொண்டு, ஓரின எழுத்து உள்ள இடத்தில் மற்றோர் இன எழுத்துச் செல்லாமல் அமையப் பெற்று, குறில் வந்த இடத்தில் குறிலும் நெடில் வந்த இடத்தில் நெடிலுமே பொருந்தப் பெற்று இயலும். 4 அல்லது 8 கலைகளைக் கொண்டது ஓரடி. நான்கடியும் ஒரொலியை உடைத்தாய் வரும் சந்தப்பாடல் வண்ணப்பா ஆகும்.*

*சந்தங்களில் சில சேர்ந்தது ஒரு துள்ளல் (தந்தன, தந்தன); துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பு (தந்தன - தந்தன, தந்தன - தந்தன, தந்தன - தந்தன); ஒரு குழிப்பும் ஒரு சிறு தொங்கல்துள்ளலும் ஒரு கலை. (தந்தன-தந்தன, தந்தன - தந்தன, தந்தன - தந்தன, தனதான) தொங்கல்துள்ளல் முன் வந்த துள்ளல்களினும் ஓசையில் வேறுபட்டிருக்கும். இத்த கைய கலைகள் 4 அல்லது 8 கொண்ட அடி நான்காய் வருவது வண்ணப்பா.*

*இத்தகைய வண்ணப்பாக்கள் ஒலிஅந்தாதி, கலிஅந்தாதி என்ற பிரபந்தங்களில் வரும். (பன். பாட். 267, 265)*

**வண்ணம் (1) –**

*ஒரு பாவின்கண் நிகழும் ஓசைவிகற்பம். (தொ. செய். 1 நச்.)*

*வண்ணம் - ஓசைநடை. இயற்றமிழுள் அமையும் ஓசை நடையை வண்ணம் என்றல் மரபு.*

*இவ்வண்ணங்கள், எழுத்துப் பற்றியும் தொடை பற்றியும் இசைபற்றியும் சொல்பற்றியும் வருதலின், சொற் சீரடி முதலாக எழுசீரடியளவும் எல்லா அடிக்கண்ணும் கொள்ளப்பெறும். நாற்சீரடிக்கண் வருவன சிறப்புடையன வாம். தொடைபற்றி வரும் வண்ணம் நாற்சீரடிக்கண்ணேயே கொள்ளப்படும். (தொ. செய். 211, 212 ச. பால.)*

**வண்ணம் (2) –**

*தலைவனுக்கு நான்கு கலைகளும் எடுத்துக்கொண்ட பொருளுக்கு நான்கு கலைகளும்ஆகச் சந்தங்கள் அமைத்துத் துள்ளலும் தொங்கலும் மும்மூன்றாக அமைய எட்டுக்கலை களால் பாடுவது வண்ணம். (சாமி. 172)*

**வரிதகம் –**

*முப்பத்திரண்டடியான் வரும் இசைப்பாட்டு.*
*(சிலப். 3 : 13 அடியார்க்)*

**வழிமொழி (2) –**

*ஒரு வகைச் சந்தப்பாட்டு -*

*எ-டு : சம்பந்தர் அருளிய மூன்றாம் திருமுறை 67ஆம் பதிகம்.*

*‘சுரருலகு நரர்கள்பயில் தரணிதல முரணழிய அரணமதில்முப்*
*புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்*
*வரமருள வரன்முறையின் நிரைநிறைகொள் வருசுருதி*
*சிரவுரையினால்*
*பிரமனுயர் அரனெழில்கொள் சரணஇணை பரவவளர் -*
*பிரமபுரமே’*

*இப்பதிக முதற்பாசுரத்தின்கண், வழியெதுகை நான்கடியி லும் எல்லாச்சீர்களிலும் வந்தவாறு. ‘வழிமொழித்திரு விராகம்’ என்று ஞானசம்பந்தர் அருளிய பதிகப்பாடல் இது. இதனைப் பதிகம் முழுதும் காணலாம்.*

**வள்ளை –**

*மகளிர் நெற்குற்றும்போது தலைவனைப் புகழ்ந்து பாடும் பாட்டு. சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையுள் வரும் ‘வள்ளைப் பாட்டு’க் காண்க.*

**வனப்பு (2) –**

*திருட்டுபு என்னும் சந்தம்; உயிரும் உயிர்மெய்யுமாக அடிதோறும் 11 எழுத்து வருவது.*

எ-டு : *'பற்றொன் றோவில ராகி யொழுகுதல்*
*அற்றன் றேலறி விற்றெளிந் தாற்றுதல்*
*எற்றொன் றானு மிலர்தாம் பிரிவரே*
*மற்றொன் றென்னை மயக்குவ தேகொலோ'* (வீ. சோ. 139 உரை.)

**வனப்பு வண்ணம் –**

*இசைவகைகளுள் ஒன்று. (பெரியபு. ஆனாயர். 28)*

**வனமயூர விருத்தம் –**

*இஃது அடிக்குப் பதினான்கு எழுத்துக்கள் கொண்ட வட மொழி விருத்தம். இதன் அமைப்பு முதற்குருக்கணம் இடைக் குருக்கணம் கடைக்குருக்கணம் முற்றும் இலகுவான கணம், ஈற்றில் இரண்டு குருக்கள் வருதல். இதன் எடுத்துக்காட்டாக வருவனவற்றில் நேரசையால் தொடங்குவதன்கண் அப் பொருத்தம் இல்லை. இவ்விருத்தம் 'இந்துவதனா விருத்தம்' எனவும் படும். ஈற்றயலெழுத்து இலகு ஆவதே இந்துவதனா' என்பர் ஒருசாரார்.*

எ-டு : *'சொன்றிமலை துய்த்துமுத ரத்தெழுசு டுந்தீ*
*யன்றைவட வைக்கனலெ னப்பெரித லைப்பக்*
*குன்றினைநி கர்த்திடுகு றட்டனுவ ருந்தா*
*நின்றுசிவ னைப்பரவி நேர்படவு ரைக்கும்.'*
(ஆறழைத்த திருவிளை. 1)

*இது நேரசையால் தொடங்குவது (வி. பா. பக். 44)*

**வஸ்து நிர்த்தேசம் –**

*காப்புச் செய்யுளின்றியே பொருளைச் சொல்லலுறும் நெறி*

*எ-டு : குமாரசம்பவம் மங்களச் செய்யுளின்றியே இமயமலை வருணனையொடு தொடங்குவது.*

**வாரம்பாடுதல் –**

*பின்பாட்டுப் பாடுதல். 'வாரம் பாடுந் தோரிய மடந்தையும்'*
*(சிலப். 14 : 155)*

**விதிருதி –**

*எழுத்துவகையால் இருபத்தாறு பேதமாம் எனப்பட்ட சந்தங்களுள் ஒன்று; ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்*

*யாவது ஓரடிக்கு 23 எழுத்து வரப் பாடும் பாடற்கண் இது காணப்படும். 'விக்கிருதி' என்றலும் அமையும்.*

*(வீ. சோ. 139 உரை)*

எ-டு : *'வன்போர்புரி வெங்கணை யங்கர்பிரான்*
*மறனாலுயர் பேரற னார்குமரன்*
*தன்போலவி ளங்கின னாதலினென்*
*தனுவுங்குனி யாதுச ரங்கள்செலா*
*அன்போடிய துள்ளமெ னக்கினிமேல்*
*அவனோடமர் செய்தலு மிங்கரிதால்*
*வென்போகுவ னென்றலு மேயிறைவன்*
*விசையோடிர தத்தினை மீளவிடா'* (வில்லி. 17ஆம் போர்ச். 204)

**வித்யுந்மாலா –**

*நாற்சீரடி நான்காய் நிகழும் சந்த விருத்தம். இஃது அடிக்கு எட்டு எழுத்துக்கள் கொண்ட வடமொழிவிருத்தம். இதன் அமைப்பு' நான்கடிகளிலும் தொடர்ந்து (8 x 4=) 32 எழுத்துக் களும் உட்பட வந்து, தேமா தேமா தேமா தேமா என்ற வாய்பாட்டான் நிகழ்வது.*

எ-டு : *'வீயா வாமா மாவா யாவீ*
*யாவா யாரா ராயா வாயா*
*வாயா டேமா மாடே யாவா*
*மாரா மாதோ தோமா ராமா'* (காஞ்சிப். சுரேசப். 20)

(வி. பா. பக்.4)

**விதானம் –**

*இரண்டு குருவும் இரண்டு லகுவுமாய் முறையானே வரினும், இரண்டு இலகுவும் இரண்டு குருவுமாய் முறையானே வரினும் விதானம் எனப்படும்.*

எ-டு : *'துங்கக் கனகச் சோதி வளாகத் (துங், கக்; க, ன, கச்; சோ, திவ; ளா, கத்;)*
*தங்கப் பெருநூல் ஆதியை ஆளும்*
*செங்கட் சினவேள் சேவடி சேர்வார்*
*தங்கட் கமரும் தண்கடல் நாடே'*

*இப்பாடல், இரண்டு குருவும் இரண்டு இலகுவுமாய் முறையானே வந்தது.*

*'பொருளாளிற் புகழாமென் (பொ, ரு; ளா, ளிற்; பு, க; ழா, மென்)*
*றருளாளர்க் குரையாயுந்*
*திருமார்பிற் சினனேயொன்*
*றருளாய்நின் அடியேற்கே'*

*இப்பாடல், இரண்டு இலகுவும் இரண்டு குருவுமாய் முறை யானே வந்தது. இவ்வாறு கூறுதல் வடநூல்வழித் தமிழா சிரியர் ஒரு சாரார் கருத்து. (யா. வி. பக். 524)*

*விதானம் - ஒரு பண் (யாழ். அக.)*

**வியமம் –**

*விஷமம்; சமமில்லாதது. ஓரடியும் எழுத்தும் எழுத்தலகும் ஒவ்வாமல் வரக்கூடிய விருத்தம் வியமம் எனப்படும். ஏனை யன சமம், பாதிச்சமம் என இரண்டாம். (வீ. சோ. 139 உரை)*

**வியம விருத்தம் –**

*'வியமம்' காண்க. நான்கடியும் தம்மில் எழுத்தும் எழுத்தல கும் ஒவ்வாது வரும் விருத்தம்.*

எ-டு : *'கொற்றவா வளவி னுளவா வெனுந்தடத்* (13)
*திற்றவா யில்லதெஞ் ஞான்று முள்ளது* (11)
*சொற்றவாள் மனத்தினா லுருவிப் பின்னரே* (13)
*மற்றவா னோக்கினான் மடங்கல் மொய்ம்பினான்.'* (12)

*இவ்வடிகளுள் முறையே எழுத்துக்கள் 13, 11, 13, 12 என ஒவ்வாது வந்தவாறும், முதற்சீர்கள் நீங்கலாக ஏனைய சீர்கள் அலகு ஒவ்வாமையும் காணப்படும். (வீ. சோ. 139 உரை)*

**விராட்டு –**

*அளவழிச் சந்தங்களில் சீர் ஒத்து ஓரடியில் ஈரெழுத்துக் குறைந்து வருவதாம்.*

எ-டு : *'கொல்லைக் கொன்றைக் கொழுநன் தன்னை*
*மல்லற் பொழில்வாய் மணியோர் முறுவல்*
*முல்லைக் குறமா மடவாள் முறுகப்*
*புல்லிக் குளிரப் பொழியாய் புயலே.'*

*இதன்கண், முதலடியில் 9 எழுத்தும், ஏனைய அடிகளில் 11 எழுத்தும் வந்தவாறு. (யா. வி. பக். 513, 514)*

**விருத்தமும் தண்டகமும் ஆமாறு –**

*வடமொழி மரபில் விருத்தமும் தண்டகமும் அமையும் வகை கூறப்படுகிறது. நான்கடிகள் கொண்டதே விருத்தம். வட மொழியில் அடி 'பாதம்' எனப்படும். அளவு ஒத்து வரும் விருத்தங்களை, அடி ஒன்றுக்கு ஓர் எழுத்து முதல் இருபத்தாறு எழுத்துக்கள் வரை கொண்டனவாகக் கூறுவர். ஓர் எழுத்து இரண்டெழுத்து மூன்றெழுத்துக்களைப் பெற்ற அடிகளுக்கு ஓசை உண்டாகாது என்று கூறி, நான்கெழுத்து முதல் இருபத்தாறு எழுத்து வரை கொண்ட நான்கடிகளைப்*

பெற்று வருவதே விருத்தம் என்பாருமுளர். இருபத்தாறு எழுத்துக்கு மேற்பட்டன எல்லாம் விருத்தம் ஆகா; விருத்தப் போலியே யாம். இது வடநூல் மரபு. தமிழில் முப்பத்து மூன்று வரை வரும். அடி இரட்டித்த விருத்தங்களில் அவ்வெண் ணிக்கையின் மேலும் வரும்.

தண்டகம் நான்கு கட்டளை முதலாக வரும். *(வீ. சோ. 134)*

**வைதாளியை (விருத்தம்) –**

*வடமொழியில் இது வைதாளீயம் எனப்படும். இதன் அமைப்பு: முதலடியும் மூன்றாமடியும் முதற்கண் ஆறு மாத்திரையும், பின் இடையில் இலகு பெற்ற ஒரு மாத்திரைக் கணமும், பின் ஓர் இலகுவும் குருவுமாகக் கொண்டு நடக்கும். இரண்டாமடியும் நான்காமடியும் முதற்கண் எட்டு மாத்திரை யும், பின் இடையில் இலகு பெற்ற ஒரு மாத்திரைக் கணமும், பின் ஓர்இலகுவும் குருவும் பெற்று நடக்கும். ஆகவே, இந்த வைதாளியை என்னும் சந்தத்தில், முதலாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் 14 மாத்திரைகளும், இரண்டாம் அடி யிலும் நான்காம் அடியிலும் 16 மாத்திரைகளும் இருக்கும் என்பது போதரும். மேலும் ஓர் அமைப்பு முறை வடமொழி யாப்பு நூலில் கூறப்படுகிறது. அஃதாவது இரண்டாம் அடியிலும் நான்காம் அடியிலும் அமையும் 8 மாத்திரைகள் முற்றிலும் இலகுவான நான்கெழுத்துக்களைக் கொண்டன வாகவோ, இரண்டு குருக்களால் ஆனவையாகவோ இருத் தல் கூடாது என்பது. இவ்விலக்கணமும் கீழே காட்டப்படும் வீரசோழிய உரை உதாரணச் செய்யுட்களில் அமைந்துள் ளது.*

எ-டு : *‘கருவே யேறூர்வ னாளிலே*
*வருவே னென்றே போந்த மன்னவன்*
*திருவே றாய்த்தூர வெய்தினார்*
*மருவா ரெனினென் னின்னு யிர்நிலா.’*
*(கருவேயே றூர்வனா ளிலே*
*வருவேனென்றே போந்த மன் னவன்*
*திரு வே றாய்த் தூர வெய் தினார்*
*மருவாரெனினென் இன்னுயிர் நி லா)*

வேறொருவகை :

*‘கொன்றைப் புதுவேரி கொண்டிதோ*
*மன்றற் றண்ணிள வாடை வந்ததால்*
*ஒன்றிப் பலகோப முள்ளினான்*
*வென்றிக் கார்முக வேந்து மாரவேள்.’*

*(கொன்றைப் புது வேரிகொண் டிதோ*
*மன் றற்றண்ணிள வாடைவந் த தால்*
*ஒன்றிப்பல கோபமுள் ளினான்*
*வென்றிக் கார்முக வேந்துமா ரவேள்)*

மற்றொருவகை :

*'கானத்தண் கொன்றை மாலைதா*
*மானத்தின்றென் கொம்பு வாடுமால்*
*ஊனத்திங் கட்கு மாறுகொல்*
*நானித்தாற் றிலனாரி பாகனே.'*
*(கானத்தண் கொன்றைமா லைதா*
*மானத்தின்றென் கொம்புவா டுமால்*
*வானத்திங் கட்குமா று கொல்*
*நானித்தாற்றில னாரிபா கனே.)*

அடைப்புக் குறியுள் குறிப்பிட்டவாறு சீர்பிரித்துக் கொள்க. பிறவாறு வருவனவும் கண்டுகொள்க. *(வீ.சோ.பக். 192, 193)*

❖❖❖❖

## குறிப்புக்கள்

## குறிப்புக்கள்

## குறிப்புக்கள்